

கல்கி
தீபாவளி மலர்
KALKI
DEEPAVALI MALAR
1965




SISTA'S KMS 330.

தாய் நாட்டின் பாதுகாப்புக்கு








தரத்திற்கும் உறுதிக்கும் நிகரற்றது
ஹத்திபாயின்
தராசு மார்க்
ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பாத்திரங்கள்
நீடித்து உழைப்பவை
ஜொலிப்புடன் திகழ்பவை
'ஸ்டீல்' என்றதும்
நினைவுக்கு வரும்
ஒரே பெயர் ஹத்திபாய்
ஹத்திபாய் துள்சிதாஸ் & சன்ஸ்
122, கன்ஸராசால், - பம்பாய்-2.




உங்கள் டிரக்கில்




குட்இயர் 3T கார்டு டயர்களைப் பொருத்துங்கள்




வெடிக்குமோ என்கிற கவலை இருக்காது



காரணம், எ∴கைவிட உறுதியானது 3T கார்டு




உங்கள் லாபம் பெருகுவதைக் காணுங்கள்



ஒவ்வொரு தினுசான வேலைக்கும் பிரத்தியேக குட்இயர் 3T கார்டு டயர் உண்டு


விரைவில் வருகிறது
திரைவானில் உதய சூரியன்
"மனிதன் தெய்வமுமல்ல மிருகமுமல்ல
நல்வழி காட்டினால் தெய்வமாகிறான்
தீயவழி காட்டினால் மிருகமாகிறான்"
எம்.ஜி.ஆர்.
அளிக்கும்
சத்யா மூவீஸ்
நான் ஆணையிட்டால்
இசை·M.S.விஸ்வநாதன் · ஒளிப்பதிவு·சுந்தரம்
வசனம்·வித்வான் லட்சுமணன் · நா.பாண்டுரங்கன் M.A.
ஸ்டுடியோ·சத்யா
திரைக்கதை, தயாரிப்பு
R.M.வீரப்பன்
டைரக்ஷன்·சாணக்யா
ELEGANT



கோயமுத்தூர் ஜில்லாவிற்கு அதிகாரம் பெற்ற விற்பனையாளர்கள்

கவுண்டர் & கம்பெனி

9/69, ஜெயில் ரோடு, கோயமுத்தூர்

தந்தி: "கவுண்டர்கோ" போன்: 3377 (3 லைன்கள்) த. பை: 512

நீலகிரி ஜில்லாவிற்கு உப-விநியோகஸ்தர்கள்

என். மகாலிங்கம் & கம்பெனி

TMB சர்வீஸ் சென்டர், குன்னூர் ரோடு, உதகமண்டலம்

தந்தி: "எனெம்கோ" போன்: 461 (2 லைன்கள்) த. பெ. எண். 21

கிளைகள்: கோயமுத்தூர், பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை

மற்றும் ராயல் என்பீல்டு மோட்டார் சைக்கிள்கள் மூன்று சக்கர வண்டிகள்
பெண்டாபுலஸ் ஸ்கூட்டர்கள் விற்பனையாளர்கள்

கண்ணனூர், கோழிக்கோடு, பாலக்காடு ஜில்லாக்களுக்கு

சக்தி ஆட்டோமொபைல்ஸ்

ஜெயில் ரோடு, கோழிக்கோடு - 2


தந்தி: "சக்தி ஆட்டோ" போன்: 3612 த. பெ. எண்: 9

சர்வீஸ் சென்டர் & ஒர்க்ஷாப்: மீன் சந்தை, கோழிக்கோடு - 3 போன்: 3831



அன்பும் இன்பமும் பிரகாசிக்கும் உங்கள் குடும்பத்திற்கு
நியூட்ரீன் ஸ்தாபனத்தின் தீபாவளி வாழ்த்துக்கள்
Nutrine
பிரசித்திபெற்ற நியூட்ரீன் டாபிகள்,
ஸ்வீட்ஸ்கள் தயார் செய்யும்
நியூட்ரீன் கன்பெக்ஷனரி கம்பெனி பிரைவேட் லிட்.
சித்தூர், ஆந்திரா
EP.NC.I


தீபாவளி வாழ்த்துக்கள்
STANDARD herald Mark-II
ஸ்டாண்டர்ட் ஹெரால்ட் மார்க்-II
STANDARD
விநியோகஸ்தர்கள்:
யூனியன் கம்பெனி (மோட்டார்ஸ்) பிரைவேட் லிமிடெட்
சென்னை—உதகை
யூனிகான் (பெங்களூர்) பிரைவேட் லிமிடெட், பெங்களூர்


ALIND CABLES FOR LIGHT AND POWER











ALIND ALL-WEATHER and
ALIND ENDUR-AL
Weather-proof wires

ALIND KER-AL-LITE and
ALIND AL-VINYL
Indoor power and light wiring

ALIND SOLIDAL
Underground
aluminium power cable



ALIND
where forward thinking
is a force of habit

THE ALUMINIUM INDUSTRIES LTD.
India's largest manufacturers of aluminium conductors and accessories
Registered Office : Kundara (Kerala)
Plants : Kundara • Hirakud • Hyderabad
Managing Agents :
SESHASAYEE BROS. (TRAV.) PRIVATE LIMITED




. . . . தீபாவளி பரிசு . . . .
சென்னை · காஸினோ · பிராட்வே · உமா மற்றும் தென்னுடெங்கும்
நாகிரெட்டி - சக்ரபாணி
அளிக்கும்
விஜயா
கம்பைன்ஸ் புரொடக்ஷன்ஸ்
எங்க வீட்டுப் பெண்
ELEGANT









மேன்மையான தயாரிப்பு - நாள்பட உழைக்கும் - விலையிலும் சிக்கனமானது! டுவின் டஸ்கர் பாப்ளின் பார்வைக்குப் பகட்டானது - உழைப்பில் நீடித்தது. எவ்வளவு சலவை செய்தாலும் அதன் நெசவின் நேர்த்தியை இழக்காதது.

டுவின் டஸ்கர் பாப்ளின் இரண்டு வகைகளில் கிடைக்கிறது.

மதுரை மில்ஸ் கம்பெனி லிமிடெட், மதுரை


உயர்ந்த ரக நூல்களுக்கு உலகப் பிரசித்தி பெற்றது

மானேஜிங் ஏஜண்டுகள் : ஏ. & எப். ஹார்வி லிமிடெட்





பாப்ளின் - டிரில் - கேம்பிரிக்


மதுரையைச் சேர்ந்த ஹார்வீஸ்



தர்மத்தின்
வெற்றியே
தீபாவளி
அன்றும் இன்றும் என்றுமே
அறம் நிலைத்த நாட்டினில்
அறமே வெல்லும் என்பதை
அறிந்த மக்கள் நாமன்றோ
ஆதிசேடன் அரவணைக்கத்
துயிலும் அந்த ஆழியான்
அகந்தை மிக்க அசுரனும்
நரகனை அழித்தனன்.
அதர்மம் வீழ்ந்து அறம் உயர்ந்த
புனிதநாளாம் இன்றுபோல்
அருள் சுரக்க அமைதி ஓங்கி
அன்பினோடு உலகெலாம்
வாழி என்று வாழ்த்தி நாமும்
மங்கள நீராடுவோம்.
இந்தியன் பாங்க் லிட்.
சென்னை-1
ELEGANT


every sprinkle
caresses your skin with
soothing comfort...
...keeps you fresh and fragrant all day
Cuticura Talcum Powder does much more than keep you cool and fresh all through the day. Mildly medicated Cuticura prevents prickly heat that's harmful to your skin, absorbs odour-forming perspiration and actually beautifies your complexion.
And its delicately-blended perfume lingers long to keep you fragrantly refreshed.
There's comfort for baby too—Cuticura is kind to baby's tender skin... leaves it soft and soothed.
Buy a tin of Cuticura today.
Cuticura
TALCUM POWDER
Cuticura THE ALL-PURPOSE TALCUM FOR ALL THE FAMILY









இளமையிற் கல்

சமையல் பயிலும் சிறுமி, அவளே வருங்காலக் குடும்பத் தலைவி. கற்றுக்கொடுங்களேன் ஒரு நாள். எவ்வளவு விரைவில் கற்றுக்கொடுக்கிறீர்களோ அவ்வளவுக்கு அவ்வளவு மேல்.

உங்கள் குழந்தைகளுக்கு நீங்கள் இப்போதே கற்றுக்கொடுக்க வேண்டிய மற்றொரு பாடம், பற்களையும் ஈறுகளையும் ஒழுங்கு தவறாமல் பராமரிப்பதே. பற்சிதைவும் ஈறு நோய்களும் வராமல் பாதுகாத்த உங்கள் உதவிக்காகப் பிற்காலத்திலே நன்றி செலுத்துவார்கள் அவர்கள்.

போர்ஹான்ஸ் பற்பசைகொண்டு பற்களையும் ஈறுகளையும் பாதுகாத்துக்கொள்ள இன்றே பழக்குங்கள் உங்கள் செல்வங்களை. அது ஒரு பல் வைத்தியரின் தயாரிப்பாகும்; ஈறுகளின் நலனுக்காக டாக்டர் போர்ஹான்ஸ் தயாரித்த விசேஷத் துவர் மருந்துகள் அடங்கிய பற்பசை உலகில் இதுவொன்றே. தவறாமல் உபயோகித்துவந்தால் பனிச்சென்ற வெண் பற்களையும் பாங்கான உறுதிவாய்ந்த ஈறுகளையும் பெற்று விளங்குவது திண்ணம்.

"CARE OF THE TEETH AND GUMS" என்ற சிறிய வண்ணப் புத்தகத்தை இலவசமாகப் பெற, தபால் செலவுக்காக 10 பைசா தபால் வில்லைகளை இணைத்து எழுதவும்: மானேர்ஸ் டென்ட்டல் அட்வைசரி ப்யூரோ, தபால் பை நம்பர். 10031, பம்பாய்.



COUPON

Please send me a copy of the booklet
"CARE OF THE TEETH AND GUMS"

Name ....

Address ....

....



Madras Office :

Post Box No. 1397

35-37, Thambu Chetty Street

MADRAS-1

Phone : 24696

THE

KADRI MILLS (CBE) LTD.

ODDARPALAYAM

ONDIPUDUR P.O. :: COIMBATORE

o●o

QUALITY COTTON SPINNERS

FOR

Remarkable Strength and
Uniform Quality

Always insist on

KADRI YARNS

(Our yarn is in great demand by
Handloom, Power Loom and Hosiery Weavers)

o●o

Counts Spun :

Cotton Yarn : NF 17s to NF 84s

COMBED and CARDED IN HANKS
and ON CONES

Staple Fibre Yarn :

NF 17s to NF 34s, NF 2/34s and NF 2/50s

o●o

Managing Agents :

V. RAMASWAMY NAIDU & CO.

Managing Partner :

V. RAMASWAMY NAIDU

Telegrams : "KADRIMILLS" Coimbatore

Telephone : 5496

o●o

Sales Depots at :

MADRAS and COIMBATORE



ராம்தீர்த் பிரஹமி ஆயில்



ஸ்பெஷல் நெ. 1 (ரிஜிஸ்டர்டு)

சிறந்த சக்திவாய்ந்த ஆயுர்வேத மூலிகைகளினால் தயாரிக்கப்பட்டு பல்லாண்டு களாகப் புகழ்பெற்ற ராம்தீர்த் பிரஹமி தைலம், கூந்தல் செழுமையாக வளர உதவுகிறது. நல்ல ஞாபக சக்தியை அளிக்கிறது. ஆழ்ந்த நித்திரையைக் கொடுக்கிறது. தேய்த்துக் குளிப்பதால் சருமம் மிருதுவாக ஆகிறது.

ராம்தீர்த் பிரஹமி ஆயில் எங்கும் கிடைக்கும்

"உமேஷ் யோக தர்ஷன்" (முதல் பாகம்)


ஆங்கிலம், ஹிந்தி, குஜராத்தி, மராத்தி ஆகிய நான்கு மொழிகளில் கிடைக்கும்
ஸ்ரீ யோகிராஜ் உமேஷ் சந்தர்ஜீ அவர்களால் எழுதப்பட்டது.

யோகத்தின் உண்மையான பொருளைக் கூறும் இந்த அற்புதமான ஆராய்ச்சி நூல் நரம்பு மண்டலத்தையும் ஜீரணம், சுவாசம், கழிவு முதலியவற்றின் தொடர்புள்ள அமைப்புகளையும் எப்படி அடக்கி ஆள்வது என்பதை விளக்குகிறது. எல்லா இல்லங்களிலும், வைத்தியசாலைகளிலும், நூலகங்களிலும் சிறப்பானதோர் இடம்பெறத் தகுதிபெற்ற நூல் இது. விலை ரூ. 15/- தபால் செலவு ரூ. 2/- தனி. வி.பி.பி. கிடையாது.

SHRI RAMTIRTH YOGASHRAM

Phone: 62899 **DADAR** (Central Railway) **BOMBAY-14** *Grams:* PRANAYAM, Dadar

சென்னை டெப்போ: 25, நைனியப்ப நாயக்கன் தெரு, சென்னை-3



எங்கள் அபிமானிகளுக்கும்
ஆதரவாளர்களுக்கும்
மனமார்ந்த

தீபாவளி வாழ்த்துக்கள்!

குடிசைத் தொழில் முறையில் நடக்கும் எங்கள் தொழிற்சாலை நாளுக்கு நாள் நன்கு அபிவிருத்தி அடைந்து வருவதுடன், நல்ல தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களைக் கொண்டு நாள் ஒன்றுக்குச் சராசரி 5 டன் வீதம் தயாரிக்கிறோம்.

தினசரி லட்சக்கணக்கான மக்கள் எங்களது சோப்பை உபயோகித்து வருகிறார்கள்

தயாரிப்பவர்: N. S. பண்டரியா பிள்ளை
பவர் லைட் சோப் பாக்டரி - கும்பகோணம்

எங்கள் தீபாவளி மங்கள
வாழ்த்துக்கள்!

FOR PENS YOU VALUE



USE
Bril
INKS

Manufactured by:
INDUSTRIAL RESEARCH CORPORATION
Madras-41 & Bangalore-3

பிரில்

- சுலபமாக எழுதக்கூடிய
- பேனாவிற்குக் கெடுதி விளைவிக்காத

பவுண்டன் பேனா இங்க்


○●○

இண்டஸ்ட்ரியல் ரிஸர்ச்
கார்ப்பொரேஷன்

சென்னை - 41 பெங்களூர் - 3


தீபாவளி வாழ்த்துக்கள்

GRADE I LATHES



Manufacturers:
MADRAS MACHINETOOL MFRS. LIMITED,
COIMBATORE-5
Sold by:
Armstrong Smith Ltd.

P.B. 185	P.B. 670	P.B. 787	P.B. 1618
Bombay	Delhi	Calcutta	Madras.




RDS. MMM. 589


அப்பாவின் சூட்டுகள்
டிரவுசர்கள்....என்றாலே
எனக்கு அதிகப் பிரியம்
TERENE
Castle Mills
AVAILABLE IN BOMBAY FROM
CASTLE MILLS' RETAIL SHOP
23 B, Sir P.M. Road
Beauforts
Vir Nariman Road
Eros Cinema · Churchgate





Add efficiency and grace to your home with time and labour saving Bajaj Household Appliances. Elegantly styled, and guaranteed to last, here is a complete range to suit every pocket.
bajaj electricals limited
LIFE'S WORTH LIVING WITH bajaj APPLIANCES


தீபாவளி வாழ்த்துக்கள்!
இந்தத் தீபாவளி புத்தாண்டு
நமது வாடிக்கையாளர்கள்
ஆதரவாளர்கள் யாவருக்கும்
நலன்களும் இன்பங்களும்
பயப்பதாக !
கிர்லோஸ்கர் பிரதர்ஸ் லிட்.
கிர்லோஸ்கர்வாடி (சாங்கிலி ஜில்லா) இந்தியா



தந்தி: "MYDEENCO"
போன்: 41
அன்பர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும்
எமது மனமார்ந்த தீபாவளி நல்வாழ்த்துக்கள்
மைதீன்
புகையிலை
மைதீன்
ஸ்பெஷல்
E.S.மைதீன் & CO
தயாரிப்பாளர்: E.S. மைதீன் & கோ. கும்பகோணம்.



PCF
பாலக்காடு
சிட் பண்ட்ஸ்
(பி) லிமிடெட்
Regd Office: 5 காஞ்ஜுராவ் நாயுடு தெரு
தி. நகர், சென்னை - 17
சென்னைக் கிளைகள்:
ஜார்ஜ் டவுன், அய்யனாவரம்.
வெளியூர்க் கிளைகள்:
பாலக்காடு, பம்பாய், ஹைதராபாத்
செகண்டராபாத், கோயமுத்தூர்
எமது 'பிக் செட்
டிபாசிட்டுகளுக்கான'
வட்டி விகிதங்கள்:
12லிருந்து 23 மாதங்கள் வரை 7%
24லிருந்து 35 மாதங்கள் வரை 7½%
36லிருந்து 47 மாதங்கள் வரை 8%
48லிருந்து 59 மாதங்கள் வரை 8½%
60 மாதங்களும் அதற்கு மேலும்
9%
தரப்படுகிறது.
மற்றும் கவர்ச்சிகரமான
வட்டியுடன் "ரெக்கரிங்
டிபாசிட்டுகளும்" ஏற்றுக்
கொள்ளப்படும்.
ஏ. எஸ். பி. அய்யர்
மானேஜிங் டைரக்டர்.
PURNIMA

தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

எங்கள் 24 வருட அனுபவம்
நாணயமும் மங்காது திகழும்
புத்தம் புதிய தயாரிப்புகள்!

* பிரபா அலங்கார்
* ரூபதர்ஷினி
* ராணி புத்லி
* சரண மாலா புடவைகள்

கீதாஞ்சலி பாவாடைகள்
நர்த்தக ரஞ்சன் சோளிகள்

நவீன வர்ணங்கள்

கஸ்தூரி கனக நீலா
கற்பகம் கோல்ட் பிரவுன்
சில்க்ஸ்மில் ஜவுளிகள்

KARANA CLOTH PALACE

போன்: 2881 தந்தி: கரண

கரண ஜவுளி மாளிகை

ராஜ வீதி - கோயமுத்தூர்

Deepavali Greetings

from

SHAMA ENGINE VALVES LTD.

Managing Agents

B. K. KHANNA & CO. PVT. LTD.
14-F, CONNAUGHT PLACE, NEW DELHI-1

the makers of
world famous

BLW-SHAMA VALVES

for internal Combustion Engines

Distributors:

for automotive applications:

M/s. MODERN AUTOMOBILES
4/17-A, MOUNT ROAD - - MADRAS

M/s. V. T. C. AUTOMOBILES
41, GENERAL PATTERS ROAD
MOUNT ROAD - - - MADRAS

Territory:

(Madras, Mysore, Kerala, Andhra and Pondicherry)


for Agricultural / Industrial applications:

M/s. DEELIPKUMAR & CO.
32/33, LINGHI CHETTY STREET, MADRAS-1

Territory: (MADRAS and KERALA)



பதட்டத்தின் அறிகுறியே இல்லே இப்பொழுது!
வலிதான் எங்கள் பிரச்சினே...உங்களுக்கு நாங்கள் உதவக்கூடிய விதம் இதுதான்!
ASPRO
'ஆஸ்ப்ரோ'
வலியை வெளியே இழுத்துவிடுகிறது!

A.G. 14-65 TAM


மங்களகரமான தீபாவளி வாழ்த்துக்கள்!
காஸ்
ஜனதா
தீப்டி
ஸ்டவ்
தீப்டி
லாந்தர்கள்
எனமல்
பாத்திரங்கள்
ஆண்டுக்கு ஒரு முறை
வரும் நன்னாள்.
குதூகலமான நேரம்.
கங்கா ஸ்நானம்
முடித்துக் கோடியுடுத்தி
கடவுளையும் பெற்றோர்
களையும் வணங்கிக்
கோலாகலமாக
மகிழும் வேளை.
மத்தாப்பும் பட்டாசு
மாகச் சிறுவர்களும்,
பெரியவர்களும்
களிக்கும் நாள்.
எங்கும் குதூகலம்,
மகிழ்ச்சி. இந்தப் புனித
நாளில், உங்கள்
ஆனந்தம் மேன்மேலும்
பெருகவேண்டும் என்று
எங்களுடைய
நண்பர்களுக்கும்
ஆதரவாளர்களுக்கும்
எமது மனமார்ந்த
வாழ்த்துக்களைக்
கூறுகிறோம்.
தி ஓரியண்டல் மெட்டல்
இண்டஸ்ட்ரீஸ் (பி) லிட்.
77, பௌபஜார் தெரு
கல்கத்தா - 12
KALPANA

கல்கி தீபாவளி மலர் 1965

பொருளடக்கம்



ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள்	படம்: எஸ். சீதாராமன்	
ஆசியுரை	காஞ்சி காமகோடி பீடாதிபதிகள்	
செட்டியாரின் கனவு	சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்	25
தெய்வத் தமிழ்	சோமு ...	26
மகாத்மா காந்தி	ராஷ்டிரபதி ராதாகிருஷ்ணன் ...	27
இளைஞர்களுக்குச் சமய போதனை	கனம் எம். பக்தவத்சலம் ...	31
பாரத வீரரைக் கும்பிடுவோம்!	கொத்தமங்கலம் சுப்பு ...	33
பெரியவாள் பெருமை	அண்ணங்கராச்சாரியார் ...	34
கள்ளருக்கும் கருணை	திருமுருக கிருபானந்தவாரியார் ...	36
அன்புக்கு ஓர் ஆன்மா	ரா. கணபதி ...	39
தெய்வத் திருநகர் திருஆனைக்கா	(மூவர்ணச் சித்திரம்) விஜு ...	43
நடனயோகம்	பெ. தூரன் ...	49
தருமத்தின் குரல்	கி. வா. ஜகந்நாதன் ...	50
அம்மா	எச். வி. ஆர். ஐயங்கார் ...	57
மானுடம் வென்றதம்மா	கே. எஸ். ஸ்ரீநிவாசன் ...	63
மாலை நேரமும் சோலை வளமும்	(மூவர்ணப் படம்) ரமணி ...	66 அ
அருங்கலை கண்ட ஆன்மிக சமயம்	டாக்டர் அமிய சக்கரவர்த்தி ...	69
மறைந்த நாகரிகங்கள்	(மூவர்ணப் படம்) விஜு ...	81
கொடிகள் படர்கின்றன	ஸ்ரீ வேணுகோபாலன் ...	85
தீபாவளி பலமொழிகள்	(நகைச்சுவைப் படம்) உமாபதி ...	94
சிர்பூர் சிற்பங்கள்	அரவரசன் ...	96
ஸ்ரீ காமகோடி பீடம்	என். ராமேசன், ஐ.ஏ.எஸ். ...	100 அ
உபதேசக் கதைகள்	(இரு வர்ணப் படம்) கல்பனா ...	102
அன்பாலே, மின்மினி	(கவிதைகள்) தமிழ்முடி, தமிழழகன் ...	109
கண் திறந்தவள்	அகிலன் ...	110
கனாக் கண்டேன் தோழி நான்!	(மூவர்ணப் படம்) ராஜம் ...	119
வாழ்க்கை	ஏ. எஸ். ராகவன் ...	123
வெற்றியின் வேர்	எஸ். லட்சுமி சுப்பிரமணியம் ...	129
வெட்டு ஒன்று—குதிரைக்கொம்பு	(மூவர்ண நகைச்சுவைப் படம்) சாமா...	138 அ
மாப்பிள்ளை விஜயம்	எஸ். பத்மாவதி ...	139
கனவுக்குப்பின்	கு. வேங்கடரமணி ...	141
ஹாஸ்ய வெடிகள்	சுதர்சன் ...	151
சிரிக்காதே சிற்றம்பலம்	டி. என். சுகிசுப்பிரமணியன் ...	153
புது நாடு கண்ட தீரர்	(இரு வர்ணப் படம்) விஜயன் ...	159
சக்கர வழிபாடு	வி. கோபாலன் ...	165
ஒன்றுபட்டே வென்றோம்	மதி ...	171
மலர்ச்சி	பி. வி. ஆர். ...	174
விளக்கேற்றி வைத்தவள்	(மூவர்ணப் படம்) அஜீஸ் ஆலாமி ...	182 அ
ஆன்மச் சுடர்	என். எஸ். சிதம்பரம் ...	185
பாளையக்காரர்கள்	பிலோ இருதயநாத் ...	188
கோட்டான்கள் சேட்டை	சுரபி ...	195
யானையின் மந்திர விளக்கு	ராஜி ...	196
சிரித்து விளையாடு பாப்பா	சாமா ...	200
உறவு	ராஜம் கிருஷ்ணன் ...	202
காரணம்?	திருலோக சீதாராம் ...	205
இலக்கியத்தில் ஹாஸ்யம்	(இரு வர்ணப் படம்) சாமி, நடராஜன் ...	210
தொண்டைமண்டலமும்...	எஸ். சிவபாதசுந்தரம் ...	217
கச்சேரி	தி. ஜானகிராமன் ...	221
முறுக்கும் முழுமும், கர்ணமகராசன்	(ஹாஸ்யம்) உமாபதி, செல்லம் ...	226 அ
ஆத்ம நிவேதனம்	லோமான் ...	227
இந்தியக் கலை	கி. சந்திரசேகரன் ...	231
விளம்பர யுகம்—சினிமா பாணி	(ஹாஸ்யம்) சாமா ...	234
கவிஞர் தரும் காட்சி	(மூவர்ணப் படம்) விஜயா, கல்பனா ...	238
அப்பாவி	ஆர்வி ...	242
வடதுருவப் பெருவெளியிலே	பி. ஸ்ரீ. ...	248 அ
மோக வதை	ஜெகசிற்பியன் ...	250
ஈ. எச். 106	பரதன் ...	259



செட்டியாரின் கனவு



ராமசேஷ செட்டியார் வீட்டில் நவராத்திரி கொலு மண்டபம் விமரிசையாக அமைக்கப்பட்டுக் குடும்பம் முழுதும் ரொம்பக் குதூகலமாகப் பத்து நாட்களும் திருவிழா நடத்தி வந்தார்கள். அவருக்கு ஒரு குறைவுமில்லை; பாக்கியசாலி. மகிழ்ச்சியுடன் நன்றாகச் செலவு செய்து நவராத்திரி பூஜை நடத்தினார்.

தசமியன்று, கொலு வைத்திருந்த இடத்துக்கு அடுத்த வராந்தாவில் கயிற்றுக் கட்டிலில் இரவு படுத்துத் தூங்கினார். நடு ராத்திரியில் தூக்கம் கொஞ்சம் கலைந்து படுக்கையில் புரண்டு மறுபடியும் தூங்குவதற்கு முயன்றார். முயன்று கொண்டிருந்த போது ஏதோ, ''மொய்!'' என்று ஒரு சப்தம் கேட்டது.

எங்கிருந்து வருகிறது என்று படுத்தவாக்காக யோசித்துக் கொண்டிருந்தார். அப்போது கொலு மண்டபத்தில் பதுமைகள் வைத்திருந்த இடத்தில் ஏதோ பேச்சு வார்த்தை நடந்தது. கொஞ்சம் பயந்தார், திருடர்களோ என்று. பிறகு பயம் தெளிந்து போய்ப் பேச்சைக் கவனித்தார்.

ஃ ஃ ஃ

"அண்ணா! ராமசந்திரா!''

''என்ன தம்பீ ?''

''உன் நண்பன் பத்துத் தலைக்காரன் ஏதோ உன்னோடு பேச வேண்டுமாம். அனுமதிக்கலாமா?''

''அதற்கென்ன ஆட்சேபணை? நம்முடைய விரோதமும் கோபமும் எல்லாம் கழிந்து விட்டனவே !''

இவ்வாறு கண்ணனும் ராமசந்திரனுமாக இருந்த பதுமைகள் பேசிக் கொண்டிருந்ததைச் செட்டியார் கேட்டுப் பிரமித்துப் போனார்.

''என்னுடைய பக்தி பூஜையின் பிரபாவத்தினாலல்லவா இந்தப் பதுமைகள் உயிர் கொண்டு பேசுகின்றன !'' என்று தமக்குள் பெருமைப்பட்டு மகிழ்ச்சி அடைந்தார்.

"தாசரதனே! உன்னைப் பற்றி அநுமான் ரொம்பவும் புகழ்ந்து பேசினானே! சீதைக்காக ஆறாகப் பெருகிற்றாமே உன் கண்ணீர்! கடைசியில் அவளை நீ காட்டுக்கு அனுப்பி விட்டாயாமே! யாரோ மடையன் பேச்சைப் பொறுத்துக்கொள்ள முடியாமல்? இது உண்மையா?'' என்றது தசக்ரீவப் பதுமை.

''உண்மைதான். அதற்காக மிகவும் வருந்துகிறேன் !'' என்றது ராமசந்திரப் பதுமை.

''வருந்தினால் போதுமா? இதற்காக நீ மறுபடியும் பாரத தேசத்தில் அவதரித்துக் கஷ்டப்பட வேண்டும்'' என்றான் ராவணன்.

ஃ ஃ ஃ

"ரொம்ப சரியான சமயத்தில் நல்ல யோசனை சொன்னாய், தசக்ரீவா !'' என்றான் கண்ணன்.

''ஏன் அப்படிச் சொல்கிறாய்?'' என்றான் ராமன்.

''அதோ முனிவரைக் கேள்'' என்றான் கண்ணன்.

முனிவர், நாரதர். அங்கே வீணையோடு இருந்தவர் சிரித்தார்.

''அந்த ரகசியத்தைச் சொன்னால் செட்டியார் ஊரெல்லாம் சொல்லிப் பரப்பி விடுவார். நாம் பேசுவதையெல்லாம் கேட்டுக் கொண்டிருக்கிறார், தெரியவில்லையா?'' என்றார்.


''முதலில் அவரைத் தூங்கச் செய்ய வேண்டும்!'' என்றான் கண்ணன்.

செட்டியாருக்குத் திடீரென்று பெருந் தூக்கம் வந்து விட்டது. ஆழ்ந்த நித்திரையில் அவர் அழுந்தி விட்டார்.

அப்புறம் நடந்த பேச்சு யாருக்கும் தெரியாது.

ஃ ஃ ஃ

'அதருமம் ஓங்கிப் போய் தருமம் அழிந்து போன சமயத்தில் நான் அவதரிப்பேன்' என்று பகவான் சொன்ன மந்திரமாகத்தான் இருக்க வேண்டும் என்று காலையில் செட்டியார் ஊகித்தார். ''பகவான் அவதரித்தாலேதான் நாட்டில் விலைவாசிகளும் வரிகளும் குறையும். சுதந்திர வாழ்க்கை மறுபடியும் எல்லாரும் வாழலாம். வியாபாரம் சீர்ப்படும். தருமம் காக்கப்படும்'' என்று செட்டியார் தம் நண்பர்கள் எல்லாரிடமும் தாம்கண்ட கனவைச் சொன்னார்.





சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்



தெய்வத்தமிழ் - சோமு

நிலவு பொழியும் இரவினிலே
நித்திலப் பொதிகைச் சாரலிலே
குலவும் சண்பக வனத்தூடே
குமரி ஒருத்தி நடந்துசென்றாள்

நடையில் மோகனம் நன்னளினம்
நற்றவ நாணம் நறுஞ்சிலம்
உடையில் பழைமை புதுமையொடு
உறவுகொள் கலையின் ஒய்யாரம்

சிரத்தில் சூளா மணிமுடிச்
சிற்றிடை மணிமே கலைமின்னக்
கரத்தில் வளையா பதியணிந்தாள்
காலிற் சிலம்பின் அதிகாரம்

ஆயிரம் தொகைசேர் வயதுடையாள்
ஆயினும் அன்றலர் தாமரையாள்
டாயிரம் எல்லாம் பரவிடவே
பைந்தமிழ் நடையில் நடந்து சென்றாள்

நறுமணம் வீசும் பொழிலெல்லாம்
நான்கு திசையும் அருள்கமழ
குறுமுனி வாழும் குடிசையிலே
குமரி வந்து குடியிருந்தாள்

கன்னி வந்த கணத்திருந்தே!
கானும் மலையும் களிகூர்ந்த
மின்னும் இடியும் அருவியுமே
மெல்லிசை பாடத் தொடங்கினவே

நதிகள் பாடி நடந்தனவே
நந்த வனங்கள் பேசினவே
மதியும் வானும் புள்ளுமெல்லாம்
மந்திரச் சொல்லே ஒலித்தனவே

வேதம் நாலும் இசைத்தனவே
வேதியர் கரங்கள் குவித்தனரே
நாதம் கீதம் இணைந்துருகி
நற்றமிழ் எங்கும் மணத்ததம்மா!

மலையும் காற்றும் நாடெல்லாம்
மங்கலத் தமிழ்மணம் கமழ்ந்திடவும்
மலைமகள் மருவிய சிவனுரும்
மகிழ்வொடு திருமணக் காட்சிதந்தார்!

காந்தி மகாத்மா

ராஷ்டிரபதி
டாக்டர் ராதாகிருஷ்ணன்

தருமத்துக்காகப் போராடி வீர மரணம் எய்திய பாரத
சேனா வீரர்களின் தியாகம் நமது நினைவில்
தீபமாகச் சுடர்விடும் இத் தீபாவளியின் போது.
போர் — சமாதானம், ஹிம்சை — அஹிம்சை,
விரோதம் — சகோதரத்துவம் இவை குறித்த
முரணான எண்ணங்களும் மனத்தே எழுகின்றன.
காந்தியடிகளைப் பற்றி பாரதத்தின் முதல்
பிரஜை எழுதும் இக் கட்டுரை
முரண்பாடுகளைக் களைந்து தெளிவு தருகிறது.

— ஆசிரியர்

1969-ம் ஆண்டு அக்டோபர் இரண்டாம் தேதியன்று காந்திஜியின் நூறாவது ஜயந்தித் திருநாள் நிகழும். உலகம் முழுவதிலுமுள்ள மக்கள் யாவரும் இந்த நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவதில் ஆர்வமும் ஆவலும் காட்டி வருகின்றனர். நாம் எவ்வளவுதான் கொண்டாடினாலும் அது நம் நாட்டுக்கும் உலகுக்கும் பற்பல இனங்களில் ஒப்பற்ற சேவை புரிந்த ஒருவரிடம் நமக்குள்ள நன்றியைத் தெரிவிக்கும் ஒரு சிறிய அடையாளமேயாகும்.

காந்திஜி ஒரு மாபெரும் தேசியத் தலைவர்; அடிமைப்பட்டிருந்தோருக்கு விமோசனம் அளித்தவர்; அன்பு வழியைப் போதித்த ஆசாரியர்; தாம் மிகுந்த ஈடுபாட்டுடன் செய்ய நினைத்த சாதனைகளை அவ்வாறே செய்து காட்டும் வாய்ப்புப் பெற்றிருந்த தலைசிறந்த தர்மசீலர்; உலகுக்கு வழிகாட்டிய உத்தம குரவர்களிடையே இடம் பெற்றவர்; இப்படி ஒரு மானுடர் இவ்வுலகில் சஞ்சரித்தார் என்று அறிந்து வருங்கால மக்கள் வியப்புறும் வண்ணம் வாழ்ந்து காட்டியவர். மக்கள் மனத்தில் அவரது வாழ்க்கையே ஒரு தத்துவமாகப் பதிந்துவிட்டது. அம்மகானின் வாழ்வு மானுட சமுதாயத்தின் எதிர்கால நல்வாழ்வு பற்றி நன்னம்பிக்கையூட்டி, மக்களை ஊக்கும் மகத்தான சக்தியாகி விட்டது. மனித வாழ்வின் மகிமை பற்றி நாம் எண்ணுவதற்கெல்லாம் அவர் ஓர் உருவகம். காந்திஜி சரித்திரத்தின் ஓர் அங்கமாகி விட்டவர். மனித குலத்தின் சத்திய உணர்வுக்கு உரித்தான சாசுவத புருஷர் அவர்.

திட்டவட்டமாக வரையறை செய்த எந்த ஒரு சித்தாந்தத்தையும் காந்திஜி அவலம்பிக்கவில்லை. தாம் பிறந்த சூழலிலிருந்து, தமக்கு ஊட்டமளித்த சூழலிலிருந்து சில தத்துவங்களை ஏற்று வாழ்ந்து காட்டியவரே அவர்.

பல்லிப் பெருமையுள்ள நமது புனித மதக் கிரந்தங்களிலின்று தம்மை விசேஷமாகக் கவர்ந்த ஒருசில தத்துவங்களை அவர் எடுத்துக் கொண்டார். மிகவும் புராதனமான உபநிஷதங்களில் ஒன்று

सत्यं वद, धर्मं चर — 'சத்தியமே பேசுக' 'தருமத்தையே பின்பற்றுக' என உபதேசிக்கிறது. இதுதான் காந்திஜியுடைய மதத்தின் சாரமாக அமைந்தது. சத்தியங்கள் யாவும் பழைமையானவை; ஆனால் அவற்றை வாழ்வில் பொருத்திக் காட்டும் உதாரணங்கள் புதுமையானவை. வாழ்க்கையின் சகல அம்சங்களிலும் சத்தியம், அன்பு ஆகிய மகத்தான பழைய தத்துவங்களைப் பொருத்திக் காட்டும் புதுமையே காந்திஜி அனவரதமும் முயன்று வந்த வாழ்முறை.

முப்பது ஆண்டுகளுக்கு முன்பாக நான் காந்திஜியிடம் மூன்று கேள்விகள் கேட்டேன்:

''உங்களுடைய மதம் என்ன?

அதில் நீங்கள் ஈடுபட்டது எப்படி?

சமூக வாழ்க்கையின் மீது தங்கள் சமயம் ஏற்படுத்தும் விளைவுகள் யாவை?''

இவ் வினாக்களுக்கு காந்தியடிகள் சுருக்கமாகவும் மனத்தில் பதியும்படியாகவும் எனக்கு அளித்த





விடை: ''கடவுளே சத்தியம் என்று சொல்வதற்குப் பதிலாகச் சில காலமாக 'சத்தியமே கடவுள்' என்று நான் கூறிவருகிறேன். என்னுடைய ஆண்டவனை சத்தியம் என்ற பதத்தைப் போல் வேறெதுவும் பூரணமாக விளக்கவில்லை. கடவுள் உண்டு என்ற கொள்கையை மறுத்தவர்களை நாம் அறிவோம்; ஆனால் சத்தியத்தை மறுத்த எவரையுமே நாம் கண்டதில்லை'' என்றார்.

'சத்திய ஸ்வரூபன்' என்றும், 'சத்திய நாராயணன்' என்றும் கூறப்படும் ஆண்டவனின் செழுஞ்சாறுன சத்திய இயல்பைத்தான் காந்திஜி வலியுறுத்தினார். முண்டக உபநிஷதம் பின்வருமாறு கூறுகிறது:

सत्यमेव जयते नानृतं सत्येन पन्था विततो देवयानः।
येनाक्रमन्त्यृषयो ह्याप्तकामा यत्र तत् सत्यस्य परमं निधानम्॥

''சத்தியம் ஒன்றே வெல்லும்; பொய் ஒரு காலும் வெற்றி பெறாது. தேவர்களின் நிலைக்கு அழைத்துச் செல்லும் பாதை சத்தியத்தாலேயே அமைக்கப்பட்டிருக்கிறது. ஆசைகளின் நிறைவைப் பெற்றுவிட்ட ரிஷிகளும் இந்த சத்திய மார்க்கத்தையே பின்பற்றிச் சென்று சத்தியத்தின் உயர்ந்த இல்லத்தை எய்துகிறார்கள்.''

இயேசு நாதரும் 'நீவிர் சத்தியத்தை அறியக் கடவீர்; சத்தியம் உமக்கு விடுவிக்கும்' என்றார்.

(ஜான் 8.32)

அறிவில் பிறந்த சிந்தனையால் ஆன்மிக சத்தியங்களைக் குறித்து ஆழ்ந்து ஆராய்வதன் மூலம் சாதகனுக்கு ஒரு நேரடியான அநுபவத்தை அச்சிந்தனை அளிக்கிறது. அறிவு வழி என்பதே காரண காரியங்களை ஆராயும் பகுத்தறிவுக்கும் அப்பாற்பட்ட ஒரு நிலைக்கு —மானுட ஆன்மாவின் சக்தியும் விஸ்தாரமும் புலனாகிற நிலைக்கு — நம்மை இட்டுச் செல்கிறது. இவ்வாறு தானே சுயமாக ஆன்ம சிந்தனை செய்து அதன்படி ஒழுகுவதற்குச் சங்கற்பம் பூண்டுவிட்ட மனித குலத்தின் மீது 'விதி' முதலிய வேறு எந்தச் சக்தியும் ஆட்சி புரிய முடியாது. ஆன்ம சிந்தனையும், அதன்மீதமைந்த செயலுமே மக்கட் சமுதாயத்தின் உண்மையான 'விதி'. மானுட ஆன்மாவின் சக்தியில் நன்னம்பிக்கை கொண்டுள்ள எவரும் உலகின் எதிர்காலம் நன்கு அமையும் என்பதில் ஐயம் கொள்ள வேண்டியதில்லை.

சத்தியத்தில் நம்பிக்கை கொண்டவன் அகத்துக்கும் புறத்துக்கும் இடையே ஓர் இசைவை உண்டாக்கிக் கொள்கிறான். **वाङ्मनसयोरैकरूप्यं सत्यम्।** சிந்தனையும் சொல்லும் ஒன்றிப் போவதே சத்தியம். இந்தச் சத்திய பூரணத்துக்காகவே காந்திஜி தம் வாழ்வைப் பணயம் வைத்தார். இது அப்பட்டமான பொய்யைச் சொல்லாத நிலை மட்டுமல்ல; எண்ணத்தை இம்மியும் திரிக்காமலும், மிகைப்படுத்தாமலும், மறைமுகமான உட்பொருளைச் சுட்டாமலும் உள்ளது உள்ளபடி உரைக்கும் நேர்மையே சத்தியம். இதுவே உண்மையில் இனிமையான வாக்கு; இதுவே உண்மையில் அன்பு கனிந்த வாக்கு; 'ஹித வசனம்' என்றும் 'பிரிய வசனம்' என்றும் சொல்வது இதைத்தான்.

பிள்ளைப் பேற்று நோவுக்குச் சமமாக ஆன்ம வாழ்விலும் பிரசவ வேதனைப் பட்டாலன்றி இந்தச் சத்திய நிலையைப் பெற முடியாது. மனிதன் என்பவன் தன் இயற்கைப்படி, பிரத்தியட்சமும் ஆதர்சமும் மோதுகிற ஒரு வயலாக இருக்கிறான். **क्षेत्र** (க்ஷேத்திரம்) — 'வயல்' என்று அவனைச் சொல்வது இந்தப் போராட்டத்தைத் தாங்க வேண்டியவனாக அவன் இருப்பதால்தான். 'போராட்டமே நான்' என்று ஹேகல் இதைத்தான் குறிப்பிட்டார். நடைமுறை—இலட்சியம் இரண்டுக்கிடையே அவரவரும் தமக்குள் போராடி, அத்துன்பத்தைத் தாங்குவதே சத்திய ஜீவனத்தைப் பெறுகிற உபாயம். இப் போராட்டத்தில் ரணமான தனது உள்ளத்தை ஒவ்வொரு தனி மனிதனும் சொஸ்தமாக்கிக் கொள்வதே உலகின் பிணிகளைக் குணப்படுத்தும் மருந்து. இதற்கேற்ப, காந்திஜி பிறரைத் திருத்துவதில் தம் சக்தியைப் பிரயோகிக்கு முன்னர் தம்மையே தண்டித்துக் கொண்டு தமது நடத்தையை வெகு கண்டிப்புடன் தூய்மைப்படுத்திக் கொண்டார். தாம் முழுக்க முழுக்கப் பரிசுத்தமாக வாழ்வதாகவோ, தாம் தவறே இழைக்கவொண்ணாத நிலையை அடைந்து விட்டதாகவோ, அவர் ஒருபோதும் பெருமை கோரவில்லை. ''நன்மை — தீமை இரண்டும், பலவீனம் — பலம் இரண்டும், ஹிம்சை — அஹிம்சை இரண்டும் சேர்ந்த ஒரு கலவை நான். எனினும் அஹிம்சையே கலப்பற்றுத் தனித்து விளங்க முடியும் என நம்புபவன்'' என்றாரவர்.

வாழ்வைக் கட்டுக்கோப்புக் கொண்ட ஒரே பூரண வஸ்துவாக அடையப் பெற வேண்டும் என்பதற்காக அவர் தம்மகத்தே ஆழ்ந்த சோதனைகள் செய்து கொண்டார். இந்த நேரடியான சுயச் சோதனையைப் பொருத்தியே அவர் வாழ்வு — விதி — அரசியல் — சமயம் இவை குறித்த பிரத்தியேகமான ஆழ்ந்த கருத்துக்களை உருவாக்கிக் கொண்டார்.

சத்தியம் செயலுருவில் வெளிப்படும்போது, 'அஹிம்சை' எனப்படுகிறது. சத்தியமும் அஹிம்சையும் ஒரே நாணயத்தின் இரு பக்கங்களாகும். எது தலைப்பக்கம் எது மறு பக்கம் என்று நாம் சொல்ல





முடியாது. சொல்லுக்கு நேர் பொருள் கொண்டால் 'அஹிம்ஸை' என்பது நாம் எந்த ஜீவராசிக்கும் துன்பம் அளிக்காமலிருப்பதேயாகும். உலகப் பெருமதங்கள் யாவும் அஹிம்ஸையை அநுஷ்டிக்க வேண்டுமென்று ஆணையிடுகின்றன.

'மஜ்ஜிம நிகாயம்' என்ற புத்த மத நூல், தீமை நேர்ந்தபோதும் அதற்கெதிராகக் கொடுமையைப் பின்பற்றாமலிருக்கும் பாங்கினை அழுத்தமாகக் கூறுகிறது:

"பிட்சுக்களே! கள்வர்களோ வழிப்பறிக்காரர்களோ உங்களுடைய அங்கங்களையும், எலும்புப் பூட்டுக்களையும் ரம்பத்தால் அறுத்தபோதிலும், அப்போது உங்களில் எவரேனும் கோபத்துக்கோ, அச்சுறுத்தலுக்கோ இடம் அளித்தால் அவர்கள் என் உபதேசத்தைப் பின்பற்றுபவர் அல்லர்."

'தம்மபதம்' என்ற பௌத்த கிரந்தம் பின்வருமாறு கூறுகிறது: "சகிப்புத் தன்மையே இல்லாதவனிடமும் எவன் சகிப்புத் தன்மை காட்டுகிறானோ, கடினமானவர்களிடமும் எவன் தண்மையாக நடந்து கொள்கிறானோ, பேராசை பிடித்தவர்களிடையிருப்பினும் எவன் பேராசையிலிருந்து விடுபட்டிருக்கிறானோ அவனையே நான் பிராமணனாகக் கருதுகிறேன்.' 'அருள் இல்லாதவன் எவனோ, ஜீவராசிகளுக்குத் தீங்கு செய்பவன் எவனோ அவனே சமூகப் பிரஷ்டமாக வேண்டிய இழிசாதியன்' என்கிறது ஸுத்த நிபாதம்.

தவறுதலாலோ, அஜாக்கிரதையாலோ கூட நாம் எந்த உயிரினத்துக்கும் தீங்கு ஏற்படுத்தக் கூடாது என்பது ஜைன மத சிந்தனையாளர்கள் வற்புறுத்தும் கொள்கை. 'தீமையாயினும் அதை எதிர்த்துப் போராடாதே' என்கிறது கிறிஸ்தவ வேதம்.

ஹிந்து மதத்தின் அஹிம்ஸைக் கொள்கை இவ்வளவு தீவிரமானதோ கடுமையானதோ இல்லை. உலகத்தில் ஒழுக்கத்தைக் காப்பதற்காகவே கொடுமை இழைக்க நேர்ந்தால், அத்தகைய சில சந்தர்ப்பங்களில் கொடுமையும் அஹிம்ஸையேயாகும் என்று நமது வேதங்களில் கூறப்பட்டுள்ளது. 'தருமத்துக்கும் நியாயத்துக்கும் விரோதமாக பலத்தைப் பிரயோகிப்பதே ஹிம்ஸை. ஆத்திர வசப்பட்டு அதன்மீது பிறருக்குத் தீங்கு செய்வதே ஹிம்ஸை' என்பது ஹிந்து மதக் கருத்து.

பகவத் கீதையைப் பார்ப்போம்: பந்து மித்திரர்களுடன் போரிட்டு அவர்களைக் கொல்வதில் நன்மை எதுவுமில்லை எனக் கூறி அர்ஜுனன் யுத்தம் புரிய மறுக்கிறான். இந்த மிகையான சமாதான நாட்டம் தவறானது எனக் கண்ணன் நிலைநாட்டுகிறான். 'அஹிம்ஸை நிலை நாட்டப் பெறும்போது அங்கு விரோதம் அறவே அழிந்து போகிறது' என்கிறது யோக சாஸ்திரம். சகோதர பாவத்துடன் நாம் ஒருவரை யொருவர் நேசிப்பதே அஹிம்ஸை. இதில் தீமையை அன்பால் எதிர்ப்பதும், தீமையைப் பலத்தால் எதிர்ப்பதும் அடங்கும். அன்பும், பலப் பிரயோகமும் எப்போதுமே முரணானவையல்ல. காந்திஜி கூறுகிறார்: "போரிடுவதில் இரு விதங்கள் உண்டு. எந்த ஆபத்து நேர்ந்தாலும் பாதகமில்லை என்று கருதி எவ்விதத் தற்காப்பும் செய்து கொள்ளாமல் தன் இடத்தே நிற்பது மிகவும் சிறந்த, சக்தி வாய்ந்த முறை. அடுத்தபடியாகச் சிறந்த வழி — முதல் வழியைப் போலவே போற்றுதலுக்குரிய வழி — என்னவெனில் தற்காப்புக்கு மட்டுமே ஆயுதங்களைச் சத்தியமாகப் பிரயோகித்து, எத்தகைய பேரிடர் நேர்ந்தாலும் உயிரைத் திருணமாகக் கருதிப் போர் புரிவதாகும்." சமாதானப் பணிக்குப் பூர்வாங்கமாகவே பலப் பிரயோகம் செய்ய நேர்வதும் உண்டு.

'உள்ளத்தில் இம்மியும் களங்கமற்றிருக்கும் நிலையே அஹிம்ஸை. உயிர் வாழும் எதனிடமும் தீய எண்ணத்தை அறவே ஒழிப்பதே பூரணமான அஹிம்ஸை......அதுவே பரிசுத்தமான அன்பு' என்று காந்திஜி கூறுகிறார்.

'யங் இந்தியா'வில் காந்திஜி பின்வருமாறு எழுதினார்:

"இறுதியில் ஒரு செயல் ஹிம்ஸையா, அஹிம்ஸையா என்பதற்கும் பரீட்சை அதன் நோக்கத்தைப் பொறுத்ததேயாகும்."

வெறுப்புணர்ச்சி நமது சிந்தனையைச் சிதறடிக்கிறது. மானுட ஒருமை உணர்வுக்கு அது உலை வைக்கிறது. வெறுப்புக்கு இடமளித்தவன் தன் இலட்சியத்துக்காக மனச்சாட்சியைப் பலிகொடுக்கிறான். வெறுப்பு அறவே நீங்கிய கனிந்த அன்பையே பெருமனத்தவர் பின்பற்றுகிறார்கள்; பேசவொண்ணாத பலகோடி உயிர்களின் துயரச் சுமையை அந்த மகான்கள் மௌனமாகத் தாங்கி அன்பு எனும் சிலுவையில் அறையுண்டிருக்கிறார்கள். இழிந்த மக்களுக்காகவும், தங்களையே இழந்த மக்களுக்காகவும், நீசர்களுக்காகவும் பெருமனத்தவர்கள் இருளிலும், துயப்பாட்டிலும் உழைத்துத் தங்கள் உயிரையே அளிக்கிறார்கள்.

அஹிம்ஸை என்பது அனைவரின் க்ஷேமத்துக்காகவும் பாடுபடுமாறு நம்மைக் கோருகிறது. அனைவரும் க்ஷேமம் பெறுவதே சர்வோதயம். தனி மனிதர்கள் பெறுகிற நிறைவின் இறுதி மதிப்பு அதனால் அனைவரும் பெறுகிற நிறைவான சர்வோதயமேயாம்.

"இந்திய சுதந்திரத்துக்காகவே நான் உயிர் வாழ்கிறேன்; அதற்காகவே நான் உயிரை விடவும் செய்வேன். ஏனெனில், இது சத்தியத்தின் ஓர் அங்க





மாகும்'' என்றார் காந்திஜி. தமது மக்கள் வறுமையாலும், பிணியாலும், தாழ்வு மனப்பான்மையாலும் துயருற்று நின்றபோது அவர்களுக்காகப் போராடி வறுமை, மூடநம்பிக்கை, பத்தாம் பசலித்தனம் இவற்றை அழிப்பதே தமது கடமை என்று காந்திஜி கருதினார். அவர் தமது மக்களது தனிப்பெரும் தலைவரானது பணபலத்தாலோ அதிகார பலத்தாலோ அல்ல. கலப்பற்ற உத்தம குணத்தாலேயே அவர் தலைமை எய்தினார். வாழ்வில் அவர் கடைப்பிடித்த கடுமையான நெறிகளும், பரம்பொருளிடத்தில் அவர் கொண்டிருந்த ஈடுபாடுமே சுதந்திரப் போராட்டத்தின் போது அவருக்குப் பொதுமக்களின் ஆதரவைப் பெற்றுத் தந்தன. சுதந்திரத்தின் உள்ளுறையும் சம தரும நெறியைக் காந்திஜி புரிந்து கொண்டிருந்தார். ''எத்தகைய உயர்ந்த ஸ்தானத்தில் ஒருவன் இருப்பினும் சரி, பல்லாயிரம் மக்களுக்கு உரித்தான சொத்தையும், சுயமரியாதையையும் ஒருவன் தனது கைக்குள் அடக்கிக் கொள்ளும் நிலை நீடிக்குமாயின் அதுவரையில் இந்தியாவுக்குச் சுதந்திரம் கிடைத்ததாக ஆகாது. இம்முறை செயற்கையானது, இயற்கைக்கு விரோதமானது, அநாகரிகமானது. இதன் அழிவே சுயராஜ்யத்தின் அத்தியாவசியமான பூர்வாங்கமாகும்'' என்று அவர் கூறினார்.

பழமையுடன் அடியோடு முறித்துக் கொள்ள வேண்டுமென அவர் எண்ணவிடினும், ஆக்க ரீதியில் புதுத் திசையில் திரும்ப வேண்டும் என விரும்பினார். தீண்டாமை ஒரு சாபக்கேடு என்று கண்டனம் செய்தார். தீண்டாதாரை 'ஹரிஜனங்கள்' எனப் பெயரிட்டழைத்தார். ''ஹிந்து மதம் வாழ வேண்டுமாயின் ஒவ்வொரு ஹிந்துவின் இதயத்திலிருந்தும் தீண்டாமை என்ற எண்ணத்தின் இறுதிச் சாயைகளைக்கூடக் களைந்தாக வேண்டும். ஆண்டவனின் முன்பு மக்கள் அனைவரும் சமமே'' என்று அவர் கூறினார்.

தற்போது நமது சமுதாய வாழ்வில் சம பங்குபெற ஒவ்வொரு தனி மனிதனுக்கும் பூரண உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. வோட்டளிக்கவும், உத்தியோகம் பெறவும், பொதுவான வழிபாட்டு நிலையங்களிலும் பள்ளிகளிலும் வைத்தியசாலைகளிலும் பிரவேசிப்பதற்கும் அனைவருக்கும் உரிமை உண்டு. கற்று வளர்ச்சி பெறவும், தன் பௌதிக, மானஸிக, ஆன்மிகத்திறமைகளை விருத்தி செய்து கொள்ளவும் ஒவ்வொருவருக்கும் வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. சட்டம் இவற்றையெல்லாம் வலியுறுத்துகிறது; எனினும் சட்டத்துக்கும் சாதனைக்குமிடையே ஒரு பெரும் பிளவு இருந்துதான் வருகிறது.

தன்னுடைய தேசமே உயர்ந்தவற்றுள் எல்லாம் உயர்ந்தது; அதற்காக எதையும் செய்யலாம் என்று எண்ணி 'தேச பக்தி' புரிவதும் ஒரு வகை வறட்டுப் பெருமைதான். பிறருக்குத் தீங்கின்றித் தன் குடும்பம், ஊர், மொழி இவற்றிடம் பற்றுக் கொள்வது போற்றுதலுக்குரியதே. ஆயினும் ஆக்கிரமிப்பு மனப்பான்மை கொண்ட தேசிய உணர்ச்சி, அது எந்த உருவில் வெளிப்பட்டாலும், அருவருக்கத் தக்கதே. ''சுதேசப் பற்று என்பதும் மானிட சமுதாயத்தினிடம் அன்பு பாராட்டுவதும் நமக்கு ஒன்றே'' என்றார் காந்திஜி. உலக சகோதரத்துவமே நம் இலட்சியம். மனித குலத்தின் தார்மீக ஒருமைப்பாட்டின் மீதே அந்த இலட்சியம் எழும்ப வேண்டும். உலகம் வெறுப்புணர்ச்சிகளுக்கிடையே சித்திரவதையாகி வருகிறது. துவேஷப் பிரசாரத்தால் பயன் ஏற்படாது. இருளை இருளால் நீக்க முடியாது. 'அஹிம்சையே நாகரிக இனத்தின் விதிமுறை; ஹிம்சை என்பது காட்டுமிராண்டியின் விதிமுறை' என்பதை நாமும் காந்திஜியுடன் உய்த்துணர வேண்டும். அஹிம்சை என்பதை உபாயமாக மட்டுமின்றி இலட்சியமாகவும் அநுஷ்டித்தவர் காந்திஜி.

சமீபகாலமாக அணு விஞ்ஞானத்தில் ஏற்பட்டுள்ள புத்தறிவு காரணமாகவும், அணு ஆயுதப் போர் ஏற்பட்டால் அதன் விளைவாக சர்வ நாசம் ஏற்படும் என்று அறியக் கிடப்பதாலும், உலக யுத்தம் அடியோடு தவிர்க்க வேண்டியது அத்தியாவசியமாகிவிட்டது. உலக யுத்தம் ஏற்பட்டால் மனித குலம் முழுவதுமே வாழ்வு, சாவு இவற்றில் ஒன்றைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டியிருக்கும். இவ்வாறு நேராமல் மனித குலத்தைக் காக்க வேண்டுமாயின் ஆன்மிக சாம்ராஜ்யத்தில் பிரவேசித்தாலே தீர்வு காண முடியும். அதற்கு அனைவரும் முயல வேண்டும்.

நமது நாகரிக வாழ்வு உச்சநிலையை அடையவில்லை. மானுட வரலாற்றின் தொடக்கப் பருவத்தில்தான் நாம் இன்னமும் இருக்கிறோம்; குழப்பங்களிடையே தடுமாறி வருகிறோம். சோதனை, தப்பிதம், தடுமாற்றம் இவற்றின் மூலமே மனித குலம் வளருகிறது. இது சரித்திரம் காட்டும் ஒரு புதிரான உண்மை. நாம் பாதி மிருகமாகவும், பாதி தெய்விகமாகவும் இருக்கிறோம். மனிதனின் தெய்விகத்தை காந்திஜி நமக்குப் புலப்படுத்தினார். முன்பு யுத்தம் ஒன்றாலேயே விளைவித்திருக்கக் கூடிய சமூக, பொருளாதார மாற்றங்களை அஹிம்சை முறையால் உண்டாக்க முடியும் என்பதை நாம் காந்தி மகானின் மூலமாகக் கண்டுள்ளோம்.

இன்றைய நிலையில் காந்திஜியின் உபதேச சாரத்தை நமது மக்களுக்கும், உலக மக்கள் அனைவருக்கும் நாம் வழங்க வேண்டியது அவசியம். காந்திஜியின் நூற்றாண்டு விழா அளிக்கும் வாய்ப்பினை நாம் இந்த நன்னோக்கத்துக்குப் பயன் செய்து கொள்வோம்!



இளைஞர்களுக்குச் சமய போதனை

முதன் மந்திரி கனம் எம். பக்தவத்ஸலம்

கல்வி வளர்ந்து வருகிறது. கற்கும் பிராயமுள்ள குழந்தைகள் சகலமான பேருக்கும் படிப்பு வசதி அளிக்கும் லட்சிய எல்லையை நாம் நெருங்கிக் கொண்டிருக்கிறோம். இதையொட்டி, கல்வித் தரம் உயரவேண்டும், விஞ்ஞான அறிவு வளர வேண்டும் என்பதிலும் கவனம் செலுத்தப்பட்டு அவ்விஷயமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மாணவர்களிடையே ஜனநாயகப் பண்புகளும், ஒழுங்குமுறைப் பயிற்சிகளும் வளர்க்கப்பட்டு வருகின்றன. இளைஞர்களுக்கு, படிப்போடு சமய போதனை அவசியமா? பள்ளிப் படிப்பில் ஓர் அம்சமாகச் சமய நெறிக் கல்வி அளிக்க இயலுமா என்னும் விஷயங்கள் மட்டும் முடிவான வடிவம் பெறாமல், சிந்தனை அளவிலும், சொல்லளவிலும் நிற்கின்றன.

இளைஞர்களுக்குச் சமய அறிவு அவசியமா என்பதில் கருத்து வேற்றுமைக்கு இடம் இல்லை. மனிதன் பெற்ற பேறுகளில் மிகச் சிறந்த ஒரு பேறு சமய அறிவு. அண்ட சராசரம் அனைத்தையும் ஓர் ஒழுங்கில் வைத்து, சகலமானவற்றையும் இயக்கும் ஒரு மகா சக்தியை உணர்ந்து, அந்தப் பேரருளை வழிபட மனிதன் வகுத்துக்கொண்ட மார்க்கத்துக்குப் பெயர்தான் சமயம். மனித இனம் அறிவுத் திறம் பெறத் தொடங்கிய காலத்திலிருந்தே சமயமும் உடன் வளர்ந்து வந்தது. மனிதனின் வளர்ச்சிக்கு ஒரு சின்னமாகச் சமயம் விளங்குகிறது. சமயம் என்பது ஒரு நெறி, வாழ்க்கையைச் செம்மைப்படுத்தும் ஓர் ஒழுங்குமுறை. ''நல்லார்க்கு நல்ல தெய்வம் நடுவான தெய்வம்'' என்பது இந்தச் செந்நெறியின் சாரம்.

நன்மையை வளர்ப்பதோடு தீமையைத் தடுப்பதிலும் வழிகாட்டிச் செல்கிறது, சமயம். மனம் கோணல் வழியில் செல்லும்போதுதான் எல்லாக் குழப்பங்களும் ஏற்படுகின்றன. உள்ளம், பேச்சு, செயல், விருப்பம் ஆகியவைகளை உயர்ந்த நோக்கத்தில் ஒருமுகப்படுத்தி வாழ்க்கையை அமைத்துக் கொள்வதன் மூலம் மனத்தைச் செம்மைப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று சமய நெறி வலியுறுத்துகிறது. இதை இலக்கணச் சூத்திரம் போல் சொல்லாமல் வாழ்க்கை நெறியாகப் போதிக்கிறது சமயம்.

பாரத நாடு பன்னெடுங் காலமாகவே சமய நெறியில் சிறந்த நாடு. இங்கு சமய அறிவு தனி ஒரு கல்வியாக அல்லாமல் மக்களின் எல்லா அலுவல்களோடும் நித்திய வாழ்க்கையோடும் பின்னிப் பிணைந்திருந்தது. சிற்பக் கலைஞர்களின் தலைசிறந்த படைப்பாக அவர்கள் சமைத்த கோயில்கள், சிற்பங்கள் விளங்கின. தச்சுத் தொழில் செய்வோரின் தொழில் திறனைக் காட்டும் வகையில் அவர்கள் செய்த தேர்கள் விளங்கின. இசைவாணர்கள், பெரும்பாலும் இறைவனைப் போற்றவே தங்கள் இசைக் கலையையும் அறிவையும் பயன்படுத்தினார்கள். பெண்கள் பூக் கொய்வதிலிருந்து திருமண நலங்கு வரை பல்வேறு நலன்களும் சமயச் சார்பான பாடல்களோடு சோபிதம் பெற்றன. கதைகள், காலட்சேபங்கள், கிராமக் கூத்துக்கள் எல்லாம் நீதிக் கதைகளையும், சமய நெறிகளையுமே அடிப்படையாகக் கொண்டிருந்தன. மக்கள் மனம் மேலான எண்ணங்களில் நிற்கவும், அன்பு, அறம், பணிவு ஆகிய பண்புகளைக் கைக்கொள்ளவும் அந்தச் சூழ்நிலையும், வாழ்க்கை முறையும் பேருதவியாக அமைந்தன.

காலம் மாறியது. மேற்கத்திய நாகரிகம் வந்தது. அதே நேரத்தில் இங்கு வறுமை அதிகரித்தது. தேவைகள் பெருகின. பொருளும், வசதியும், தேவைப் பூர்த்தியும்தான் முக்கியம் என்ற எண்ணம் வலுத்தது. இந்தப் போக்கு சிக்கலைத் தீர்ப்பதற்குப் பதிலாகப் புதிய சிக்கல்களை உண்டாக்கியது. தேவையைப் பூர்த்தி செய்யச் செய்ய அதன் தாகம் வளர்ந்தது. நெருப்பை அணைக்க நெய்யை ஊற்றிய கதையாயிற்று. தேவைப் பூர்த்தியின் எல்லையைக் காண முயன்ற மேல்நாட்டு நாகரிகம், விரக்தியைத்தான் கண்டது. மனத் தீயை அணைக்க எந்த சாதனமும் கிடைக்கவில்லை. பாரத தேசம் மேல்நாட்டு நாகரிகத்தில் தவிப்பைக் கண்ணாரக் கண்டு வருகிறது. பொரு



னும் வசதியும் மட்டும் சௌக்கியத்தைத் தந்து விடுவதில்லை என்று உணர்ந்து வருகிறது.

மக்களின் வாழ்க்கையை வளப்படுத்திக்கொள்வதற்காக விஞ்ஞானம் வேண்டும். ஆனால் விஞ்ஞானத்தைப் பற்றிக் கொண்டு, நமது இயற்கை மெய்ஞ்ஞானத்தை விட்டுவிடலாகாது. ஒன்றை இழந்து மற்றொன்றைப் பெறுவது ''வாது போச்சு கத்தி வந்தது'' என்ற கதையாய் விடும். நமக்கு விஞ்ஞானம் வேண்டும். அத்துடன் மெய்ஞ்ஞானம் தொடர்ந்து இருந்து வரவேண்டும். இந்த மெய்ஞ்ஞான உணர்வைத் தருவதுதான் சமய அறிவு. மெய்ஞ்ஞானம் கொண்டு, நாம் நமது தேவைகளுக்கு ஒரு வரம்பு கட்டிக் கொள்ள வேண்டும். மனத்தை ஒரு பக்குவ நிலைக்குக் கொண்டு வரவேண்டும்.

இன்றைய இளைஞர்களுக்குச் சமயச் சார்பான சூழ்நிலைகள் இல்லை. சமூகத்திலும், கல்வி நிறுவனங்களிலும், அரசியல், சமூகம், பொது அறிவு விஷயங்களே முக்கியத்துவம் வகிக்கின்றன. நம் நாடு பல்வேறு மதப் பிரிவினர்களைக் கொண்டது. நமது அரசாங்கம் மதச்சார்பற்ற அரசாங்கம். எனவே பள்ளிகளில் பாடத் திட்டத்தில் தனிப்பட்ட சமயங்கள் குறித்துப் போதிக்க வாய்ப்பில்லை. எல்லா மதங்களும் ஏற்கும் பொது நெறிகளைப் போதிக்கலாம். அடிப்படையான அறங்கள், ஒழுங்கு முறைகள், நீதிகள் பற்றிப் புகட்டலாம். பொதுக் கல்விப் பள்ளிகளில் அவ்வளவுதான் செய்யலாம்.

ஆனால் இடையூறுகள் இருக்கின்றன என்பதற்காக மனம் சோர்ந்து போய்விட வேண்டியதில்லை. இவ்வளவு பிரதிகூலங்களுக்கிடையிலும் முயன்றால், இளைஞர்களுக்குச் சமயக் கல்வியில் போதனையும் பயிற்சியும் நல்ல முறையில் அளிக்க முடியும். இதற்காக நாம் பொதுக் கல்வியையும் சமயக் கல்வியையும் ஒன்றாக இணைத்துப் பார்க்காமல் வேறுபடுத்திக் கொள்ள வேண்டும். சமயக் கல்விக்கென்றே மடங்கள் தேவஸ்தானங்கள் மற்றும் இதர அறநிலையங்கள் தனிப் பள்ளிகளை நடத்தலாம். பொதுக் கல்வி அறிவு ஆகியவைகளுக்கேற்ப அதில் பாடத் திட்டங்களை அமைத்துக் கொள்ளலாம். காலை, மாலை நேரங்களில் இதற்கெனத் தனி வகுப்புகள் நடத்தலாம். மாணவர்களின் விடுமுறைக் காலங்களில் குறுகிய காலப் பயிற்சி வகுப்புகள் நடத்தலாம். அற நிலையங்களும், தர்ம சிந்தையுள்ள பெரியவர்களும் இதில் ஆர்வம் காட்டி முயற்சி எடுப்பார்களானால், சமூகத்துக்குப் பெரும் நன்மை தரும் பணியை ஆரம்பித்து வைத்ததாக ஆகும். முதலில் சிறு அளவில் இந்தப் பணியைத் தொடங்கினாலும் போகப் போகச் சேவையை விரிவுபடுத்திக் கொள்ள முடியும்.

மனித மனம் புனிதமான உணர்வுகளின் உறைவிடம். இந்த உணர்வுகளுக்கு அரணாக நிற்பது சமயம். சமய நெறியை நல்ல முறையில் பேணி வளர்க்கச் சான்றோர் அனைவரும் முன்வர வேண்டியது அவசியமாகும்.



பாரத வீரரைக் கும்பிடுவோம்

கொத்தமங்கலம் சுப்பு





விசுவாசம் காட்டுற தீவாளி - இந்த
விசுவாவசு ஆண்டுத் தீவாளி
புஸ்வாணம் வெடிக்கிற தீவாளி - பாரதப்
பூமி புகழ் பெற்ற தீவாளி

வேட்டியும் சேலை விலை கேட்டால் - நெஞ்சு
வெடிக்குதடி வாங்க முடியவில்லே
நாட்டிலிருந்த நிலை பார்த்தால் - இது
நாம் செய்த புண்ணியம் தான் மச்சான்

எண்ணெயைத் தேச்சு முழுகுறப்போ - உந்தன்
கண்ணுலே கண்ணீரு வந்தது ஏன்
எண்ணெய் கரிக்கல்லே மச்சானே. வீரரை
எண்ணினேன் கண்ணீரு வந்ததுங்க

மருந்து ஊறிய நேரத்துலே - உன்
மார்பு வலிக்க இருமியதேன்
எங்கிருக்கோ மச்சான் எங்க அண்ணன் - அதை
எண்ணிப் புரையேறித் துடிச்சிப் புட்டேன்

பலகாரம் ஏண்டி இனிக்கவில்லே - சீனி
பத்தாக்குறையான காரணமா?
வீரம் இனிக்குற நேரத்திலே - நெய்யில்
வெந்தது ஒன்னும் இனிக்காது.

பட்டாசு மத்தாப்பு வேண்டாமுன்னு - சின்னப்
பையன் என்னுத்துக்குச் சொன்னாண்டி
படைக் களத்துக்கவன் போகணுமாம் - எதிரிப்
படைமேல் டமார் வேட்டுப் போடணுமாம்.

சாமியைக் கும்பிட விளக்கேத்தி நீ
சன்னதம் கொண்டு நின்னது ஏன்
பூமியைக் காக்க உயிர் கொடுத்த - வீரப்
புண்ணிய வான்களை எண்ணி நின்னேன்

(இருவரும்)

வீடும் விளக்குமாய் ஆக்கிவைத்த - நமது
வீரர்கள் வாழவே கும்பிடுவோம்
நாடு முச்சூடும் கொண்டாடினாலும் - பட்ட
பாடுக்கு ஈடாக ஆகாது

படுகளத்தில் கீதை சொன்ன சாமி - திவ்ய
பாதார விந்தத்தில் கும்பிடுவோம்
படுகள மானாலும் தர்மம் தவறாத
பாரத வீரரைக் கும்பிடுவோம்.



சாமா



பெரியவாள் பெருமை

பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியார்

'பெரியவாள்' என்கிற சொல் இலக்கணப்படி சுத்த மானதன்று; பெரியவர் என்றோ, பெரியவர்கள் என்றோ எழுத வேண்டும். ஆயினும் ''எப்பொருளெச் சொலினெவ்வா றுயர்ந்தோர், செப்பினரப் படி செப்புதல் மரபே'' என நன்னூலாசிரியர் கூறியிருத்தலால் 'பெரியவாள்' என்றே உலகம் வழங்குவதைக் கொள்வது பொருத்தமுடைத்தே. பெரியார்களை உலகம் வழங்க வேண்டுமிடத்து, கனவான்கள், மகான்கள், மேலையார், ஆசிரியர், ஆசாரியர், குரவர் மேன்மையாளர், உயர்திருவாளர் என்றிங்ஙனே பல சொற்களையிட்டு வழங்குவதுண்டு; எனினும் நமது காஞ்சி காமகோடி பீடத்து ஸ்வாமிகளைத் தமிழுலகம் முழுவதும் பெரியவாள் என்றே ஒருமிடறாக வழங்குவதை எங்கும் காண நின்றோம். 'பெருமை தங்கியவர்' என்றே பொருளென்பதை அறியாதாரில்லை. பெருமையென்பது பொது மொழியே யன்றிச் சிறப்புமொழியன்று. எதனாற் பெருமையென்று கேள்வி வந்தே தீரும். அறிவினாற் பெருமை, குலத்தாற் பெருமை, தனத்தாற் பெருமை, கொடையினாற் பெருமை, குணத்தாற் பெருமை, கல்வியாற்பெருமை, கேள்வியாற்பெருமை, ஒழுக்கத்தாற்பெருமை, பிராயத்தாற் பெருமை என்றிப்படி பலவற்றாலும் பெருமையை விடையிறுக்க நேரும். இப் பெருமைகளெல்லாம் ஒன்று சேர்ந்து ஒரு நபரிடத்தே காணப்பெறுவது அரிது, அரிது, மிகவு மரிது. இவற்றுள் ஒன்றிரண்டினால் பெருமை பெற்றவர்களைப் பெரியவாள் என்று உலகம் வழங்கத் துணியாது. நம் காமகோடி பீடத்து ஸ்வாமிகள் திறத்துக் கீழ்க்குறித்த பெருமைகளெல்லாம் ஒன்று சேர்ந்து நறுமணம் பெறுவது பற்றியே இவர்களை மட்டும் பெரியவாளென்று உலகம் வழங்க முன்வந்தது.

இப்பெரியவாள் சென்ற சிலவாண்டுகளாக வெளி ஸஞ்சாரங்கள் வைத்துக் கொண்டிருந்தாலும் இடையிற் பலவாண்டுகள் காஞ்சீபுரியிலேயே, அதிலும் சின்னகாஞ்சீபுரியிலேயே, அதிலும் என்னுடைய இல்லத்திற்கு மிக அருகிலேயே ஆஸ்தானம் அமர்ந்திருந்ததனால் அடிக்கடி நெருங்கிப் பழகும் பாக்கியம் பெற்ற யான் மேலே குறித்த பெருமைகளையெல்லாம் கண்கூடாகக் கண்டு களிக்கப் பெற்றவனாதலின் 'பெரியவாள் பெருமை' என்று மகுடமிட்டெழுத எனக்கே பரிபூரண உரிமையுண்டென்று செருக்குக் கொள்ளுகிறேன். எனது அநுபவத்துக்கிணங்க அப்பெருமைகளை விளக்குகிறேன்.

1. **ஞானப் பெருமை:** கல்விப் பெருமையும் கேள்விப் பெருமையும் இந்த ஞானப் பெருமையொன்றில் அடங்கும். கல்வி கற்காமல் கேள்விகளை மட்டுங் கொண்டே சிலர் ஞானிகளாய் விட்டோமென்று நினைப்பதுண்டு; வேறு சிலர் கல்விகளை மட்டுங் கற்று எங்குங் காது கொடாமலிருந்து தங்களை மாஞானிகளாக நினைப்பதுமுண்டு. இராமாயணத்தில் இராகவனைப் புகழ்ந்து பேசுங் குடிமக்கள் ''ஸம்யக் வித்யாவ்ரத ஸ்நாதோ யதாவத் ஸாங்க வேதவித்'' என்று மனவோடு நில்லாது ''பஹுச்ருதாநாம் வ்ருத்தாநாம் ப்ராஹ்மணாநாமுபாஸிதா'' என்றுங் கூறியிருப்பது குறிக்கொள்ளத் தக்கது. பலரிடத்தில் பலபடியாகப் பல தத்துவங்களைப் பலகால் கேட்டவர்கள் 'பஹுச்ருத'ரெனப்படுவர். அன்னவர்களோடு கலந்து பழகுவதும் பல கலைகளையும் பயில்வதுமே போதுபோக்காகக் கொண்டவர்களே ஞானிகளென்றும் மாஞானிகளென்றும் கூறப்படு

வார்கள். நமது காமகோடிப் பெரியவாளோடு பத்தெட்டு நிமிடங்கள் பேசினாலும் இவர்களது கல்வியறிவும் கேள்வியறிவும் மிக மிக அதிசயிக்கத்தக்கதாக விளங்கும்.

இராகவன் அனுமனை முந்துற முன்னங் கண்டு பேசியபோது இளையோனான இலக்குமனிடம் கூறுகின்றான் –

" இல்லாத வுலகத்தெங்கு மிங்கிவ னிசைகள் கூரக்
கல்லாத கலையும் வேதக் கடலுமே யென்னுங் காட்சி
சொல்லாலே தோன்றிற்றன்றே யார்கொலிச் சொல்லின் வல்லான்
வில்லார்தோ ளிளையவீர! விரிஞ்சனோ விடைவலானோ!"

இராமனோடு அனுமன் பேசினது ஐந்து நிமிடங்கட்கு மேலிராது. அவ்வளவிலேயே 'இவன் கல்லாத கலையுமில்லை, இவன் ஓதாத வேதங்களு மில்லை' என்றுதான் அறுதியிட்டுச் சொல்லும்படியாயிற்று. காமகோடி பெரியவாளைப் பற்றியும் இங்ஙனமே சொல்லத் துணிவதுண்டு. ஞானக் கடல், கல்விக் கடல், கேள்விக் கடல் என்றால் மிகையாகாது.


2. **குலப் பெருமை:** குலத்தாற் பெருமையைப் பற்றிச் சொல்லவும் வேணுமோ? பரம வைதிக ஸந்தானத்தில் தோன்றியவர்கள். இவர்கள் ரிக்வேத சாகையில் தோன்றினவர்களாயிருந்தாலும் சைவசாகைகளிலும் அந்வயம் பெற்றவர்களென்றே மதிக்கப்படுவார்கள். யாருக்குமே உயர் குடிப் பிறப்பு விளங்குவது ஒழுக்கத்தினால். இப்பெரியவாளுடைய ஒழுக்கம் (ஆசார சீலம்) நிகரற்றது. சாஸ்திரங்களில் ஆசாரங்களுக்கு முக்கிய கற்பமென்றும் கௌண கற்பமென்றும் இரண்டுண்டு. ஆபத் காலங்களிற் செய்யும் முறை கௌண கற்பமெனப்படும்; பலருடைய அநுட்டானங்களை நாம் ஊன்றிக் காணும்போது நிச்சயம் ஆபத் கற்பமாகவே காணப்படும். உண்மையில் பெரியவாளிடத்தில் அஃது ஒரு நாளும் கிடையாது. 'செய்வன திருந்தச் செய்' என்னும் கோட்பாட்டை இயற்கையாக உடையவர். ஆக, குலத்திற்கேற்ற ஒழுக்கமும், ஒழுக்கத்தைக் கொண்டு அறுதியிடக்கூடிய குலப்பெருமையும் வாய்ந்தது இவர்களிடத்தே.

3. **தனப் பெருமையும் கொடைப் பெருமையும்:** அநாதி பரம்பரையாய் நிகழும் மிகச் சிறந்த மடங்களிலே தனப் பெருமையைப் பற்றிப் பேசப் புகுவது பேதைமையாகும். இப்பெரியவாளுடைய கொடைப் பெருமையைக் காணும்போது, 'கோமகேச்வரர்களே இவர்கள்' என்று நிலைவிடலாயிருக்கும். ஸத்பாத்திரங்களிலே] தாமாகக் கொடுப்பது, இரப்பவர்களுக்குக் கொடுப்பது என்று தானம் இருவகைப்படும். இரப்பவர்களுக்குக் கொடுப்பதைப் பற்றி நான் விசேஷமாகத் தெரிந்து கொள்ள நேர்ந்ததில்லை. வித்வான்களும் வைதிகர்களும் பெரியவாளுடைய கடாக்ஷத்திற்கு இலக்காகி மகா தனிகர்களாய் விளங்குகின்றார்களென்பதைப் பல இடங்களில் கண்டிருக்கிறேன். எத்தனை கலைகளுண்டோ அத்தனை கலைகளிலும் பரீக்ஷைகள் வைத்துப் பரிசளிக்கும் பெற்றி மற்றையோர்க்கு நெஞ்சாலும் நினைப்பரிதாம் என்னத் தகுமத்தனை. அது தன்னிலும் எவ்விதமான பேதத்தையும் கணியாமல் வித்யா பக்ஷபாதம் (கல்வியன்பு) ஒன்றையே கொண்டு பெரியவாள் காட்டியருளும் ஔதாரியம் அதிசயோக்தி யென்னும் அலங்காரத்திற்கு (உயர்வு நவிற்சியணிக்கு) வெகு தூரத்தில் உள்ளது. ஸ்மார்த்தர், வைஷ்ணவர், மாத்வர், சைவர் என்றுற்போலுள்ள வேற்றுமைகளில் ஒன்றிலும் கண்ணோட்டமின்றிக்கே ஸம நிலையில் ஆதரிக்கும் அதிசயம் அற்புதம் என்றே சொல்லத் தக்கது. இங்ஙனமே வேறு எந்த மடாதிபதியும் செய்யக் கண்டிலோமே! அந்தணர்கள் வேத மார்க்க ப்ரதிஷ்டாபநாசாரியர்களென்று விருது வஹிப்பது இப்பெரியவாளின் பெரு முயற்சியினாலென்னத்தட்டில்லை. 'நாவசைந்தால் நாடசையும்' என்பதை இங்கே காண்கிறோம். கட்டளைக்குக் காத்திருக்கும் பெரியார்களுக்கு இப்பெரியவாளிடும் கட்டளை வேதத்தை வளர்க்கவும் வைதிகர்களை ஆதரிக்கவுமே.

4. **குணத்தாற் பெருமை** என்பது பற்றிப் பேச வேண்டில் என்ன பேசுவதென்று தோன்றவில்லை. பெரியவாளிடத்துக் குணப் பெருமையை அநுபவியாத மக்கள் இந்தியாவில் இல்லை என்றே சபதமிட்டுச் சொல்லுவேன். மேன்மை எளிமை என்னும் இருகுணங்களும் ஒருங்கே விளங்குவது பகவானிடத்தில்தான் என்று சொல்லுவார்கள் பெரியோர். இதுவே உண்மையெனின், அப்பகவான்தான் இப்பெரியவாள், இப்பெரியவாள்தான் அப்பகவான் என்று முடிக்க வேண்டுவது தவிர வேறில்லை.



கள்ளருக்கும் கருணை



"**யா**ர் பெரியவர்?''

கல்வியில் சிறந்தவர் பெரியவரன்று; குலத்தாலும், பதவியாலும், உயரத்தாலும், பரும னாலும், பிற நலத்தாலும் பெரியவர்களும் பெரிய வர்கள் அல்லர்.

பிறரைத் தாமாக நேசித்து, பிறரிடம் அன்பு செய்கின்றவரே பெரியவர் ஆவார்:

தன்னலம் பேணுகின்றவன் சிறியவன்.
பிறர் நலம் பேணுகின்றவன் பெரியவன்.

கருணை நிறைந்த பெரியவர்கள் பிறரைத் தாமாக எண்ணி, பிறர்மீது கருணை மழை பொழி வார்கள். நம்மினும் எளியவரிடம் நாம் கருணை காட்டினால் கடவுள் நம்மிடம் கருணை காட்டுவார்.

உயிர்கள் படுகின்ற துன்பங்களைக் கண்டு இரங்க வேண்டும். அத்துன்பங்களைக் களைய முயலு தல் வேண்டும். மருத்துவ மனையில் சென்று பிணி யாளர்களுக்காகப் பிரார்த்தனை செய்ய வேண்டும். பிணியாளர்களுக்கு அருட்பிரசாதம் வழங்குதல் வேண்டும். புலை கொலை தவிர்க்கும் புனித நெறியை மனித சமுதாயத்திலே பரப்புதல் வேண்டும்.

கருணையே வடிவாய் பிறர்களுக் கடுத்த
கடுந்துயர் அச்சமா தியளைத்
தருணாநின் னருளால் தவிர்த்தவர்க் கின்பந்
தரவும்வன் புலைகொலை யிரண்டும்
ஒருவிய நெறியில் உலகெலாம் நடக்க
உருத்தவும் அம்பலந் தனிலே
மருவிய புகழை வழுத்தவும் நின்னை
வாழ்த்தவும் இச்சைகாண் எந்தாய்

என்கின்றார் வடலூர் வள்ளல் பெருமானார்.

இவ்வாறு எல்லா உயிர்களிடத்தும் கருணை செய்வது ஒரு படி. அதற்கு மேல் ஒரு படி இருக் கின்றது. அப் படி எப்படி? பகைவனுக்கும் கருணை செய்வதுதான் அம் மேலான பண்பு.

முதல் நாள் போரில் இராவணன் தோல்வி யுற்று நின்றான். அவனுடைய படை அழிந்தது. பூச்சக்கரக் குடை அழிந்தது. மார்பிலே இருந்த பூந்தொடை அழிந்தது. வீர நடையழிந்தது. இருபது கரங்களும் ஆலமரத்தில் விழுது இறங்கியது போல் தொங்க, தலை குனிந்து, நாணத்துடன் நின்றான்.

இராமச்சந்திர மூர்த்தி அவன் தலைகளை ஒரே கணையால் பனம் பழம்போல் அறுத்து உருட்டி யிருப்பார். கருணை வள்ளலாகிய காகுத்தன் அவ் வாறு செய்யவில்லை. மனைவியைக் கவர்ந்த மகா பாதகன் என்று அவன் மீது சீறி விழவில்லை.

ஆளையா வுனக்கமைந் தனமாருதம் அறைந்த
பூளையாயின; கண்டனை; இன்றுபோய் போர்க்கு
நாளைவா என நல்கினன்; நாகிளங் கமுகின்
வாளை தாவுறு கோசல நாடுடை வள்ளல்.

''இராவணா! இன்று போய்ப் போர்க்கு நாளை வா!'' என்று கருணையுடன் கனிவாய் மலர்ந்து கூறிய இராமமூர்த்தியின் கருணையை அளக்கவல்லார் யார்?

கொல்ல வந்த அரவினங்களைச் சிவபெருமான் கொல்லாது, கருணை செய்து, அவைகளை அன்புடன் அணிகலன்களாக அணிந்து கொண்டருளினார்.

'கயிலாய மலையைப் பேர்த்துக் கடலில் எறி வேன்' என்று வீம்பு கூறிய தசக்கிரீவன் மலையை எடுத் துத் தோளில் வைத்து அசைத்தான். அவனை நக நுனியினால் அடர்த்து, அவன் பாடல் கேட்டு வாளும் வாழ்நாளும் வழங்கியருளினார் சிவபெருமான்.

பாண்டவர்கள் கானகத்தில் போனகந் துறந்து துன்புற்றிருந்தார்கள். துரியோதனன் முதலியோர் அவர்களை அவமானம் செய்யும் பொருட்டுப் பெண் களுடன் ஆடை அணிகலன்களால் அலங்கரித்துக் கொண்டு சென்று, பாண்டவர்களுக்கு முன் உண்டு உவந்து உலாவினார்கள். இவர்கள் கண்டும் காணாத வர்களைப் போல் இருந்தார்கள். சித்திரசேனன் என்ற கந்தர்வன் துரியோதனாதியரைப் பெண்களுடன் பிணைத்துக் கட்டி ஈர்த்துக் கொண்டு சென்றான்.

இதனை யறிந்த தருமர் கண்ணீர் சொரிந்தார். நம்மை அவமதிக்க வந்தவன் அவமானமடையட்டும் என்று அவர் கருதினாரில்லை. கருணையால் கவன்றார்: பீமார்ச்சுனர்களை யனுப்பித் துரியோதனாதியரைச் சிறை மீட்டு வந்து பகைவர்களாகிய அவர்களுக்கு ஆடைகளும் அணிகளும் வழங்கியருளினார். தீமை செய்தார்க்கும் நன்மை புரியும் பெற்றியுடையோரே மனிதர்களில் தெய்வம். அதனால்தான் எங்கும் தரும ராஜனுக்கு ஆலயம் எடுத்து அஞ்சலி செய்கிறார்கள்.

வசவேசர் என்பவர் வீர சைவ மடாதிபதி.

வீர சைவர் என்பவர் சிவலிங்கத்தைக் கழுத்தில் தரித்திருப்பவர்கள். அங்கம் வேறு லிங்கம் வேறு ஆகக் கூடாது என்பது வீரசைவ விதி. உறுதியான சிவபக்தி யுள்ளவர்கள். இறுதிவரை ஆண்களும் பெண்களும் சிவலிங்க பூஜை புரிவார்கள்.

வசவேசர் வீர சைவர்கட்கெல்லாம் குருநாதர். பரம கருணாமூர்த்தி. கருணை நிறைந்த உள்ளம் படைத்தவர். அவர் தம் உயிர் போல் மன்னுயிரை நேசிக்கும் தயாநிதி. எல்லாவுயிர்களும் ஈசன் ஆல யங்கள் எனக் கருதும் பரம ஞானி.

ஒரு நாள் மடாலயத்தில் குருபூசை விழா. ஆயிரக்கணக்கான அன்பர்கள் உண்ண உணவு ஆயத்தம் செய்யப் பெற்றது. வருகின்ற வீர சைவ அதிதிகளுக்குப் பந்தி வைத்து வழங்கப் பெறுகிறது.

அங்கு இரு கள்ளர்கள் வந்தார்கள். அவர்க ளுக்குக் கடும் பசி; காதை அடைத்தது. வயிறு முதுகுடன் ஒட்டியது. கண் பஞ்சடைந்தது.' உள்ளம் உணர்வு உயிர் எல்லாம் வாடின. தொழு நோய் முதலிய எல்லா நோய்களையும் பல காலம் தாங்கிக் கொள்ளலாம். பசி நோயை மட்டும் சில மணி நேரம்கூடத் தாங்கிக் கொள்ள முடியாது. மானங் குலம் கல்வி முதலிய குணங்கள் பத்தும் பசி வந்தால் நடந்து கூடப் போகாது. பறந்து போகும்.

திருமுருக கிருபானந்தவாரியார்

பசியினால் வாடி வருந்திய அக்கள்வர்கள் மடத்தின் வாயிலில் வந்தனர். உள்ளே நெய்யில் தாளிதம் செய்கின்ற வாசனை கம்மென்று மூக்கைத் துளைக்கின்றது. இவர்கள் நாவில் நீர் சொட்டுகின்றது. சிவலிங்க தாரணம் செய்தவர்கள் மட்டும் அந்த மடாலயத்துக்குள் நுழையலாம் என்ற கட்டுப்பாடு இருந்தது.

சிவலிங்கதாரணம் இல்லாத அக்கள்வர்கள் எப்படி மடத்திலே நுழைய முடியும்? ஏங்கினார்கள். யோசித்தார்கள். ஒரு முடிவுக்கு வந்தார்கள்.

காய்கறி அரிந்த குப்பை மடத்துக்கு முன் குவிந்திருந்தது. அக் குப்பையில் கிடந்த இரு கத்தரிப் பிஞ்சுகளைக் கள்ளர் இருவரும் எடுத்தார்கள். இரு கந்தல் துணியிலே சுற்றிக் கழுத்தில் சிவலிங்கம் போல் கட்டித் தொங்கவிட்டுக் கொண்டார்கள்.

மெல்ல வீர சைவர்களுடன் உள்ளே நுழைந்தார்கள். அடியார்கள் அமர்ந்திருக்கும் பந்தியில் அமர்ந்து கொண்டார்கள்.

போஜன காலத்தில் நிகழ விருக்கும் சடங்குகளை அவர்கள் அறிய மாட்டார்கள். இலைகளில் அறுசுவை உண்டிகள் படைக்கப் பெற்றன.

இறுதியில் மடாதிபதியான வசவேசர் கர்ப்பூரம் ஏற்றிய தட்டை ஏந்தி வந்தார். அடியாரை அரனாராகக் கருதி வழிபடுகின்ற வழக்கம் உடைய அவர் ஆராதனை புரிந்து கொண்டு வந்தார். அருகில் ஒருவர் தண்ணீர் வார்த்துக் கொண்டு வந்தார். பந்தியில் உள்ள ஒவ்வொருவரும் கழுத்தில் இருக்கின்ற சிவலிங்கத்தை எடுத்து அன்னத்துக்கு முன் காட்டி, அன்னத்தைச் சிவலிங்கத்துக்கு நிவேதனம் செய்தார்கள். இதுவே வீரசைவரின் போஜனபத்ததி.

பந்தியின் இடையில் அமர்ந்துள்ள கள்ளர்கள் இதனைக் கண்டார்கள். இவ்விஷயம் அவர்களுக்கு முன்னரே தெரியாது. என் செய்வார்கள்? அவர்கள் தமது கழுத்தில் தொங்கும் கத்தரிப் பிஞ்சை எடுத்துக் கர்ப்பூர தீபத்தில் காட்ட முடியுமா? இது வஞ்சகச் செயல் என்பதை அருகில் உள்ளவர்கள் அறிந்தால் என்னதான் செய்வரோ? இலையை விட்டே விரட்டி 'விடுவரோ? வில்லங்கத்தில் மாட்டிக் கொண்ட கள்ளரிருவரும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டு இஞ்சி தின்ற மர்க்கடம் போல் மிரள மிரள விழித்தார்கள். உள்ளத்திலே உள்ள கள்ளம் முகத்தில் வழிந்தது.

ஆராதனை செய்து கொண்டு வரும் வசவேசர் இதனை உணர்ந்து கொண்டார். கருணை நிறைந்த அவரது திருவுள்ளம் உருகியது. கண்ணீர் பெருகியது.

'அந்தோ பாவம்! பசி என்பது எல்லோருக்கும் உரியதுதானே? அரசனுக்கும் பசி உண்டு; ஆண்டிக்கும் பசியுண்டு. கண் இல்லாதவன் இருக்கின்றான்; காதில்லாதவன் இருக்கின்றான்; மூக்கில்லாதவன் இருக்கின்றான்; வாயில்லாதவன் இருக்கின்றான்; கையில்லாதவன் இருக்கின்றான்; காலில்லாதவன் இருக்கின்றான். வயிறில்லாதவன் ஐந்து கண்டங்களிலும் இல்லையே. வயிறு சகல உயிர்களுக்கும் இருக்கிறது. வயிற்றுப் பசி எல்லோருக்கும் உண்டு. உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோராவார். இவர்கள் பசியின் கொடுமையால் மாறு வேடம் புனைந்து வந்திருக்கின்றார்கள். இதனை மற்றவர்கள் அறிந்தால் செற்றமுடன் சிறி அன்பின்றி என்பை முறித்து விடுவார்கள்' என்று வஞ்சகர்பாலும் நெஞ்சமுருகினார் வசவேசர்.

''ஏ! சந்திர மௌளீசனே! அந்தி வண்ணனே! அருட்பெருங் கடலே! கருணை வடிவாய அருணசடாதரனே! அடியேன் உனது திருவடி மலரை இடையறாது நினைந்து தொண்டு செய்வது உண்மையாயின் இக்கள்ளரின் கழுத்தில் நீ வந்து எழுந்தருள வேண்டும்!'' என்று துதிசெய்து, தியானஞ் செய்தார்.

தியானித்தபின் கள்வரைநோக்கி ''அடிகளாரே! கழுத்தில் உள்ள சிவலிங்கத்தை எடுங்கள்! எடுத்து நிவேதனஞ் செய்யுங்கள்!'' என்றார். அவர்கள் ''இல்லை, இல்லை'' என்று கூறி மிரள விழித்தார்கள்.

வசவேசர், ''நீங்கள் உத்தமமான அடியார்கள். சிவலிங்கத்தை எடுங்கள்'' என்று கூறி வற்புறுத்தினார். அவரது வாக்கின் சத்திய கம்பீரத்தை நம்பி அவர்கள் கழுத்தில் உள்ளதை அவிழ்த்தார்கள்.

என்னே அதிசயம்! கத்தரிக்காய் சிவலிங்கமாக மாறி யிருந்தது! அன்பு செய்த இரசவாதம் அது! கள்ளர்கள் இதனைக் கண்டு, உள்ளம் உவந்து, வியப்படைந்தார்கள். கண்ணீர் சிந்தினார்கள். வசவேசர் தம்பால் காட்டிய கருணையைக் கருதி உருகினார்கள். அவருடைய அடிமலர் மீது விழுந்து தொழுதார்கள்; அழுதார்கள். தமது குற்றத்தை நினைந்து வருந்தினார்கள்; திருந்தினார்கள். அது தொடங்கி மடத்துச் சீடர் ஆனார்கள்.

வெள்ளவேணிப் பெருந்தகைக்கு
    யாக்செய்யடிமை மெய்யாறுல்
கள்ளவேடம் புனைந்திருந்த
    கள்வரெல்லாம் களங்கமறும்
உள்ளமோடு மெய்யடிய ராக
    உள்ளத்துள் ளமருள்
வள்ளலாகும் வசவேசன்
    மலர்த்தாள் தலையால்வணங்குவாம்.




CAUVERY
புனித ஸ்நானம் செய்து புத்தாடை உடுத்தியிருக்கும் இந்நன்னாளில் எமது
தீபாவளி
வாழ்த்துக்கள்!
மேட்டூர் கெமிகல் & இண்டஸ்டரியல் கார்ப்பொரேஷன் லிமிடெட்
மேட்டூர் அணை R. S.
சேலம் ஜில்லா
மானேஜிங் ஏஜெண்ட்ஸ்: சேஷசாயி பிரதர்ஸ் பிரைவேட் லிமிடெட்

அன்புக்கு ஓர் ஆன்மா

ரா. கணபதி



ஈசுவரன் தனது மொழியாலும், இரகசியத்தாலும், மௌனத்தாலும் மூன்று விதங்களில் உலகை இரட்சிக்கிறான். உலகுக்கு வெளிப்படத் தெரியுமாறு பெரும் பணி புரியும் மகான்கள் இறைவனது மொழி; அவ்வளவாக வெளி உலகுக்குத் தெரியாமலும், ஸ்தூலமாகக் கணக்கிடும்போது மிகப் பெரிய பணியாகத் தோன்றாமலும் மறைந்திருந்து தொண்டு புரியும் உத்தமர்கள் இறைவனுடைய இரகசியம்; யாருமே அறியாமல், கண்ணுக்குத் தெரியும் விதத்தில் எப்பணியும் புரியாமலே எங்கோ பரம சாந்தமாக வாழும் புனிதர்கள் இறைவனுடைய மௌனம். இம்மூன்று இனத்தவரும் முற்றிலும் தனித்த, மாறுபட்ட 'பிரிவினர் அல்ல. உலகம் முழுதுமறியச் செயலுருவில் ஈசனின் மொழியாகப் பணிபுரியும் ஒரு மகாத்மா அதே போதில் அவனது இரகசியத்தில் துவண்டு மௌனத்தில் இணைந்துக் கொண்டிருக்கக் கூடும். ஒரு வெளின் கண் முன்னே தெரியுமாறு சிறிய — ஆனால் சீரிய — தொண்டு புரிகிற ஓர் 'இரகசியத் தூதரும்' இதே போல் ஒரு கையால் உலகுக்கு எட்டாத மௌன நிலையையும், மறு கையால் உலகனைத்துமனாவும் ஈசனின் மொழியையும் ஸ்பரிசித்துக் கொண்டிருக்கக் கூடும். அநாமதேயமாக ஆத்மானந்தம் ஒன்றிலேயே ரமித்துக் கொண்டிருக்கும் சாந்தர்களோ நாமறியாமலே உலகில் இரகசியத் தொண்டையும், மகத்தான பகிரங்கப் பணிகளையும் இயக்கி வைத்துக் கொண்டிருப்பதும் சாத்தியம். மூன்றும் புஷ்பம்தான். மூன்றுக்குமே வர்ண முண்டு, மணமுண்டு, மென்மையுண்டு. ஆனால் ஒவ்வொன்றில் ஒவ்வொர் அம்சம் எடுப்பாக வெளி உலகுக்குப் பிரகாசிக்கும்

இம்முவகையில் இறைவனின் இரகசியத் தூதராக இவ்வுலகுக்கு வந்து நீண்ட நெடுங்காலம் பணிபுரிந்து சமீபத்தில் மறைந்தவர் ஆல்பர்ட் ஷ்வைட்ஸர். வெளிப் பிரபஞ்சத்துக்கு மறைந்திருந்து அவர் சேவை செய்தார். ஸ்தூலமாகப் பார்க்கப்போனால் பிரம்மாண்டமாக எதையோ செய்தார் என்று சொல்லிவிட முடியாது. எனினும் அவர் ஒரு செயலுமில்லாத மௌனத்தையும் தீண்டியவர் — உலகையெல்லாம் செயலில் ஈடுபடுத்தும் ஈசனின் சர்வ வியாபகமான மொழியையும் புலப்படுத்தியவர்.

ஷ்வைட்ஸர் என்ற அந்த இரகசியத்தைப் பற்றி எழுதவே கூச்சமாக இருக்கிறது. மெல்லிய இறகு கொண்ட நம்மை பக்ஷியைப் பிடிக்க எவ்வளவு தயக்கமாக இருக்குமோ அவ்வளவு தயக்கமாக இருக்கிறது. நாட்டிய நடிகை மீது ஜாஜ்வல்யமான விளக்கைத் திருப்பும்போது அவளுக்கு வேர்த்துக் கொட்டுவது போல, ஷ்வைட்ஸரைப் பிராபல்யப் படுத்தி எழுதுவதும் அவருக்கு இம்சையாக இருக்குமோ என்று அச்சமாக இருக்கிறது. ஆனாலும் நாட்டிய மாது ஒளி வெள்ளத்தைப் பொருட்படுத்தாமல் தன் கலையில் ஒன்றி விருப்பது போல் ஷ்வைட்ஸரும் பிராபல்யத்தினால் தீண்டப் படாமல் தம் இரகசியப் பெருமையைக் காத்துக்கொள்வார் என்ற நம்பிக்கையும் எழுகிறது.

பிரான்ஸின் நளின மோகனப் பண்பும் ஜெர்மனியின் கம்பீர நாகரிகமும் இணைந்த ஒரு பகுதியில் ரைன் நதியின் இனிமையும், ஆல்ப்ஸ் மலைத் தொடரின் பெருமையும் சேர்ந்த குன்ஸ்பாக் கிராமத்தில் 1875ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் பிறந்தார் ஆல்பர்ட் ஷ்வைட்ஸர். இரு நாகரிகங்களின் உயர் பண்புகளும் அவரது உள்ளத்தில் இயல்பாக ஊறின. அதோடு பாதிரியாராக இருந்த தமது தந்தையிடமிருந்தும், அவரது அன்புக்குகந்த மனைவியிடமிருந்தும் சமயம், சங்கீதம், சாந்தி இவற்றைப் பரம்பரைச் சொத்தாகப் பெற்றார். குன்ஸ்பாக் கிராமத்தில் இரு நாட்டுப் பண்புகள் ஒன்றாக இணைந்தாற் போலவே கத்தோலிக்கர் பிராடெஸ்டென்ட் இரு வகுப்பாரும் ஒரே ஆலயத்தில் வழிபாடு செய்வர். யூதர் இனத்தைச் சேர்ந்தவர்கள் அங்கு வியாபாரத்துக்கு வருவார்கள். இதைக் காணக் காண மனித இனத்தின் ஒற்றுமை குழந்தை ஷ்வைட்ஸரின் மனத்தில் ஏதோ ஒரு விதத்தில் பதிந்தது. வெறும் காலுடனும், வெற்றுடம்புடனும் பள்ளிக்கு வரும் சக மாணவர்களைக் காணும்போது ஷ்வைட்ஸரின் ஒற்றுமை உணர்வு அன்பாக, அநுதாபமாக, அபிமானமாக நெகிழ்ந்தது. அன்பு என்கிற உணர்வுக்கு மனித குலத்தைக் கொண்டு மட்டும் எல்லைகட்ட முடியுமா என்ன? ஷ்வைட்ஸரின் அன்பு விஸ்தாரம் பெற்றுக் கொண்டே வந்தது. தான் நேரில் காணுதவர்களும், எத்தனையோ நூற்றாண்டுகளுக்குமுன் வாழ்ந்த பைபிளின் 'புதிய ஏற்பாட்டில்' கதையோடு கதையாகக் கரைந்துபோனவர்களுமான தொழுநோய்க்காரர்களுக்காகக் குழந்தை ஷ்வைட்ஸரின் இளம் இதயம் தொழுது அழுதது. கவண் எறிந்து பட்சிகளை அடிக்கும் விளையாட்டைக் காணும்போது அந்தப் பட்சியோடு பட்சியாக ஷ்வைட்ஸரும் அடியுண்டான். ஷ்வைட்ஸர் பாக்கியசாலி! அவனது இதயத்துக்குள் ஈசுவரன் தனது படைப்புகளிலெல்லாம் தலைசிறந்த தயை என்கிற நிதியை வைத்து அனுப்பிவிட்டான். பிறரது துயரத்தைக் காணும்போதெல்லாம் அதைத் துடைக்க ஏதேனும் செய்தேயாக வேண்டும் என்ற நமைச்சல் ஷ்வைட்ஸருக்கு உண்டாயிற்று. 'தங்களது தனி வாழ்வில் துயரம் காணாத எவரும் பிறரது துயரைத் துடைக்கப் பொறுப்பேற்றேயாகவேண்டும்' என்பது அவனது தாரக மந்திரமாயிற்று.

ஷ்வைட்ஸர் இசைப் பயிற்சி பெற்றார். பாக் (Bach) என்ற பிரபல ஜெர்மானிய சங்கீத நிபுணரின் இசை நுட்பங்களையெல்லாம் தமதாக்கிக் கொண்டார். தத்துவ சாஸ்திரங்களை நிறையப் பயின்றார். சர்வ கலாசாலையில் கலை, சயன்ஸ் இரண்டும் கற்றுத் தேர்ந்தார் — முக்கியமாக மருத்துவத்தில் நல்ல திறன் பெற்றார். இந்தப் படிப்பும் பரீட்சையும் ஒருபுறமிருக்க உள்ளுக்குள்ளே இன்னொரு படிப்பும் பரீட்சையும் குமுறிக் கொண்டிருந்தன. இயேசுநாதன்தான் இந்த ஆன்மப் பள்ளியின் ஆசிரியன். மிகக் கண்டிப்பான ஆசாரியன்!

"அந்நியனாக, அநாமதேயனாக அவன் நம்மிடம் வருகிறான். முன்பு ஏரிக் கரையில் தன்னை இன்னாரென்று அறியாதவர்களிடம் சென்றது போலவே இன்றும் நம்மருகே வருகிறான். அதே வார்த்தைகளைத்தான் இன்றும் சொல்கிறான்: 'நீ என் பின்னால் வா' என்கிறான். நம் காலத்தில் அவன் செய்ய வேண்டியுள்ள பணிகளில் நம்மைப் புகுத்துகிறான். கட்டளையிடுகிறான். அறிவாளிகளோ, அறிவிலாத எளியவரோ யாராயினும் சரி, அவனுக்கு யார் கீழ்ப்படிகிறார்களோ அவர்களுக்குத் தான் இன்னார் என்பதை மலர்த்திக் காட்டுகிறான். அவனோடு சேர்ந்து வாழும்போது அநுபவிக்கின்ற சாந்தமும் செயலும், போராட்டமும் துன்பமும், மற்றும் எல்லா உணர்வுகளும் அவனை யார் என்று காட்டிக் கொடுக்கின்றன. ஆயினும், அவன் யார் என்பது வெளியிட முடியாத ரகசியம்" என்று பிற்காலத்தில் எழுதிய ஷ்வைட்ஸர், சிலுவையில் அறையுண்ட செம்மலின் அழைப்பைக் கேட்டார். அவனது கட்டளைக்குக் கீழ்ப்படிய மனமார விரும்பினார். ஆனால் எப்படி, எப்போது, எங்கே?

வினாக்களை எழுப்பிய சக்தியே விடைகளையும் அனுப்பி வைத்தது. பாதிரியாகவோ, தத்துவப் பேராசிரியராகவோ, இசை வல்லுநராகவோ, வைத்திய நிபுணராகவோ ஐரோப்பாவில் பெயரும் புகழும் எடுத்திருக்கக் கூடிய முப்பத்தெட்டு

பிராயத்து ஷ்வைட்ஸரின் அந்தரங்கத்தில் நாகரிகம் தீண்டாத இருள் கண்டமாகிய ஆப்பிரிக்காவின் வன வனாந்தரங்களின் நிழல்கள் விழுந்தன. 'எப்படி, எங்கே, எப்போது' என்ற வினாக்களுக்கு விடைகளும் எழுந்தன. 'இயேசு நாதரின் ஆணையாகிய அன்புப் பணியை ஆப்பிரிக்காவின் அடர்ந்த கானகங்களில்தான் புரிய வேண்டும்; மருத்துவ சேவை மூலம் அங்கு வாழும் மக்களின் துன்பத்தைத் தீர்க்க வேண்டும்; இப்போதே தொண்டைத் தொடங்க வேண்டியதுதான்' என்று ஷ்வைட்ஸரின் அக உணர்வு அவரை உந்தித் தள்ளிற்று.

சங்கீத வல்லுநராகவோ, தத்துவப் பேராசிரியராகவோ அமோகப் பெரு வாழ்வு எய்துவதை விட இருட் கண்டத்தில் இறைவனின் இரகசியமாகப் பணி புரிவதுதான் பிறவி எடுத்த தன் பயன் என்று உணர்ந்தார் ஷ்வைட்ஸர். அதாவது உண்மையான சங்கீதத்தை, உண்மையான தத்துவத்தை உணர்ந்தார். சேவை மூலமே ஆன்ம ஸ்வரங்களையும், தத்துவ சத்தியங்களையும் வெளிப்படுத்திக்கொள்ள முற்பட்டார்.

1913ம் ஆண்டில் தமது திவ்விய இரகசிய சேவையைச் செயலாக்கத் தொடங்கினர். அடையாளம் கூறவொண்ணாமல் பல்லாயிரம் காவதங்களுக்கு அப்பால் கடலில் உருவான புயற் சூல் எங்கெங்கோ சஞ்சரித்து நமது மேற்குத் தொடர்ச்சி மலையில் மழையாக துளித்துக் காவிரியாகப் பாய்ந்து தமிழ் மக்களுக்கு உணவு படைப்பது ஏன்? இதற்கு விடை கூற முடியுமாயின், ஷ்வைட்ஸர் ஏன் காடும், மலையும், காட்டாறும், காட்டுக் குடிகளும் வாழ்ந்த ஆப்பிரிக்காவில் லாம்பரீன் என்ற இடத்துக்கு எங்கிருந்தோ வந்து சேர்ந்து அதைத் தம் பிறந்த வீடாகச் செய்து கொண்டு சேவை செய்தார் என்பதற்கும் விடை கூறலாம். தில்லை ஈசனின் திருச் சந்நிதானத்துக்குத்தான் 'வருகலாமோ?' என்று நந்தன் குழைந்து குழைந்து பாடும் பாடலொன்று உண்டு. இந்தப் பாட்டை ஸ்ரீ கோபால கிருஷ்ண பாரதியார் உலகு அறிந்த பைரவியிலோ, முகாரியிலோ அமைக்காமல், அபூர்வமான மாஞ்சி ராகத்தில் ஏன் அமைத்திருக்க வேண்டும்? உலகத்துக்கு அதிகம் தெரியாத அந்த 'மாஞ்சி'யில் ஏதோ ஒன்று இருக்க வேண்டும்; அதில்தான் நந்தன் குழைய முடியும்; அப்படிக் குழைந்தால்தான் அவன் திருச் சந்நிதானத்தை அடைய முடியும் போலும்! ஆப்பிரிக்காவில் யாரும் அறியாத லாம்பரீன்தான் ஷ்வைட்ஸரைத் திவ்விய தரிசனத்துக்கு அழைத்துச் செல்லும் பண்ணாக அமைந்தது.

ஆப்பிரிக்க மக்களுக்கு வைத்தியராகவும், அன்புப் போதகராகவும் ஷ்வைட்ஸர் ஆற்றிய இரகசியப் பணி ஓர் இதிகாசமாகும். இருளில் நம் கண்ணுக்குக் கருமையுடன் கருமையாக ஒருமித்துவிடும் தருவில் ஆயிரமாயிரம் பட்சிகள் அமைதியுடன் வாழ்வது போல், உலகறியாத இருட் கண்டத்தில் நூற்றுக் கணக்கான காட்டுக் குடிகளுக்கு நிழல் தந்து இரகசியமாகக் காத்தது ஷ்வைட்ஸரின் மருத்துவ மனை. அவர்களை அவர் அநாகரிகவாசிகளாக எண்ணவில்லை. தமது நாகரிகத்தில் அவர்களும் 'ஒருமைப்பாடு' பெறவேண்டுமென முயலவில்லை. 'மனித வாழ்வு மதிக்கத் தக்க ஒன்று' என்ற மந்திரத்தை — Reverence for life என்ற மந்திர வாசகத்தை — அவர் கண்டார். காட்டுக் குடியின் வாழ்விலும் மறைந்திருந்த மகிமைக்கு மதிப்புச் செலுத்தினர். வெற்று ஒற்றுமைக் கோஷங்களை விடுத்தார். பொழிந்தார் அன்பை! தானாகப் பிறந்தது ஒற்றுமையும்!

லாம்பரீனில் இன்று நூற்றுக் கணக்கானவர் சிகிச்சை பெறும் பெரிய — ஆனால் எளிய — வைத்தியசாலையை அமைக்க ஷ்வைட்ஸர் எப்பாடு பட்டிருப்பார் என்பதை கற்பனையின் மூலம் தான் அறிய முடியும். அதிலுள்ள ஒவ்வொரு கல்லையும், கட்டையையும், மருந்துப் புட்டியையும் கொண்டு வர அவருக்கு இருந்த ஒரே தெம்புகோல் அன்புதான். ஆனால் இந்த ஒரே தெம்புகோல் ஒரு பிரபஞ்சத்தைக்கூட அசைத்துவிடும் என்று மகான்கள் சொல்கிறார்கள்.

இறைவன் கவியைத் தனியாகத் தோற்றுவித்துவிடுவதில்லை. அதைத் தாங்கக் கிளையையும், காத்து மறைக்க இலைகளையும் சிருஷ்டி செய்கிறான். மனித குலத்துக்கு வரப்பிரசாதமான மகா புருஷர்களின் பணியை நிறைவேற்றுவதற்கென்றே கிளையாகவும், இலையாகவும் சிலர் பிறக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் லாம்பரீனை வந்தடைந்தார்கள். ஒருசில வைத்தியர்களும், நர்ஸுகளும் ஷ்வைட்ஸரின் தலைமையில் பணி புரிய, தான் உயிர்விடும் வரையில் அவரை நிழலாகத் தொடர்ந்த மனைவி உதவி புரிய, ஆயிரமாயிரம் ஆப்பிரிக்க மக்கள் அங்கு உடலுக்கும் உள்ளத்துக்கும் மருத்துவம் செய்து கொண்டனர்.

லாம்பரீன் வைத்தியசாலை கரடுமுரடாக அமைந்திருப்பதாகவும், அங்கு அபிவிருத்திக்கு மிகவும் இடமுண்டு என்றும் விமரிசித்தவர்கள் பலர். ஆனால் கவிஞரான ஷ்வைட்ஸர், ஒருகாலும் எதிலுமே எய்த முடியாத பூரணத்துவத்தைவிட அம்முழுமையை எப்போதும் நினைப்பூட்டும் குறைபாடுகளைச் சிறந்தனவாகக் கருதினர். 'பூரணமாக முதிர்ந்து மலர்ந்து விட்டால் அப்புறம் வாடவேண்டியதுதானே? மலராத மொட்டுக்கு உள்ளே சூழ்ந்திருக்கும் மாய மந்திர மொழி நினைவூட்டும் சத்திய அநுபவத்தை இழக்க வேண்டியதுதானே?' என்றார். ஏதோ பழங்கால மோஸ்தரில் அவர் அமைத்த வைத்தியசாலையையும், அவரது பண்டைக்கால எளிய போக்கையும் கண்டு, 'இவர் காலத்துக்கு ஒவ்வாதவர்' என்று சிலர் பரிகசித்தார்கள். இதை எண்ணுகையில், பழமையே உருவான ஒரு சூழலில், புதுமையின் பகட்டுக்களை வேண்டுமென்றே தள்ளிவிட்டுக் 'காலத்துக்கு ஒவ்வாமல்' நம் தமிழ் நாட்டில் வாழும் ஒரு தவ முனிவரின் நினைவுதான் வருகிறது. இவர்கள் காலத்துக்கு ஒவ்வாமலிருக்கலாம்; ஆனால் காலம் இவர்களுக்கு ஒவ்வி விடுகிறதே! இவர்கள் ஞாலம் தெரியாமல் வாழ விரும்பலாம்; ஆனால் ஞாலம் இவர்களைத் தானாகத் தெரிந்து கொள்கிறதே!

ஷ்வைட்ஸரையும் உலகம் தெரிந்து கொண்டது. நோபல் பரிசு தந்தது. 'நீங்கள் சர்வ தேசப் பிரஜை' என்றது. 'அடாடா, அப்படியெல்லாம் சொல்லாதீர்கள். எனக்குள் என் மதத்தைப் புரிந்துகொள்ள முயலும் தனியாள்தான் நான்' என்றார் எளிய ஷ்வைட்ஸர். அவர் எழுதிய புத்தகமொன்றின் அட்டையில் அவரை உலகின் மிகப் பெரும் மனிதர் என்று குறிப்பிட்டதாக அறிந்தவுடன், அந்த அட்டையைக் கிழித்தெறிந்துவிட்டு வேறு அட்டை போட்டால்தான் புத்தகத்தை வெளியிடலாம் என்றார். 'ஏதோ மோகன்தாஸ் காந்தி, ஐன்ஸ்டைன் இவர்களைப் பார்த்து நானும் வாழ முயலுகிறேன். அவ்வளவுதான்' என்றார். இந்துவாயினும் காந்திஜி ஒரு கிறிஸ்தவப் பெரியார் என்று ஷ்வைட்ஸர் கூறினர் எனில் நாமோ, ஷ்வைட்ஸர் கிறிஸ்துவராயினும் சமய பேதங் கடந்த வேதாந்த முனிவர் என்று கூறலாம். முனிவர்கள் எப்படி 'ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி' என்றே கூறி வந்தனரோ அவ்வாறே உலக சாந்திக்காக உழைத்தார் ஷ்வைட்ஸர். அந்தச் சாந்தமே சோகமாகவும், சோகமே கோபமாகவும் மாறியதுண்டு. மனிதனின் துன்பத்தைக் கண்டு துடித்த இவர் மனிதனைத் துன்பப்படுத்தவே உருவாக்கப்பட்ட அணு ஆயுதங்களைக் கண்டு கொதித்தார். 'ஆப்பிரிக்க நாய்கள் இரவில் குரைப்பது போல் ஒவ்வொருவரும் அணு ஆயுத சோதனையையும், அணு ஆயுதப் போரையும் எதிர்த்துக் குரைக்க வேண்டும். ஆனால், ஐயோ, பத்திரிகைகள் பேசாமல் இருக்கின்றன; தேவாலயங்கள் பேசாமலிருக்கின்றன; பேச முடிந்தவர்களெல்லாம் கத்தவேண்டிய சமயமாயிற்றே இது! சவுக்கடி பட்ட நாய் கத்துவதில்லையா?' என்று புலம்பினர்.

இவரது உள்ளியல்பான சாந்தத்துக்கும், அதன் புற விளக்கமான புலம்பலுக்கும் கீழ் நகைச்சுவையும் ஓர் ஊற்றாக ஓடிக் கொண்டிருந்தது. சிரிக்கப் பேசி மகிழ்வித்தார். ஐன்ஸ்டைனுக்கும் அவருக்கும் மனப்பாங்கில் எவ்வளவு மாறுபாடு உண்டோ, அவ்வளவுக்கு உருவத் தோற்றத்தில் ஒற்றுமை உண்டு. இதைப் பற்றி அவர் அடிக்கடி ஹாஸ்யம் செய்வார். இவரை ஐன்ஸ்டைன் என்றெண்ணிய இரு குழந்தைகள், "ஐன்ஸ்டைன் மாமா, கையெழுத்துப் போட்டுத் தாருங்கள்" என்று கேட்டன. குழந்தைகளை ஏமாற்ற விரும்பாத ஷ்வைட்ஸர், 'ஆல்பர்ட் ஐன்ஸ்டைன்: ஆல்பர்ட் ஷ்வைட்ஸர் எழுதியது' என்று ஏதோ பெரிய புத்தகத் தலைப்புப் போல் கையெழுத்துப் போட்டுக் கொடுத்தார்.

உண்மையில் ஐன்ஸ்டைனும், ஷ்வைட்ஸரும், உலக முழுவதன் மீதும் அன்பு பொழிகிற அனைவரும் ஒருவரேதான். 'மனித வாழ்வு மதிக்கத்தக்கது' என்ற மகா சாஸனத்துக்கு இறைவன் முத்திரையிடும்போது இவர்களைத் தனது பல்வேறு கையொப்பங்களாகச் சான்று வைக்கிறான். என்றும் மறையாத கையெழுத்து அது.


தொண்ணூறு வருஷங்கள் தொண்டாற்றிய ஷ்வைட்ஸர் என்ற உருவம் மறைந்தாலும், அந்த உருவத்துக்குள் அகப்படாத தொன்றுதொட்ட இரகசிய அன்பு என்றென்றும் மறையாது. 'அன்பைப் புரிந்து கொண்டவன் தன்னுடைய வாழ்வு நிலையற்றதாகவும், அதே சமயத்தில் சாசுவதமாகவும் இருப்பது எப்படி என்பதைப் புரிந்து கொள்கிறான்' என்று ஷ்வைட்ஸர் கூறினர். அன்பைப் புரிந்து கொண்ட அவர் நிலையற்ற வாழ்வை முடித்து நிரந்தர வாழ்வில் புகுந்து விட்டார்!


WHEN YOU SETTLE FOR COMFORT
Dunlopillo COMFORTS MOST
You only need to feel it. Then you fall for it. Because Dunlopillo is soft and resilient — nothing but millions of interlinked cells providing comfort so soothing, so very satisfying.
Dunlopillo mattresses, pillows, cushions and many more items are available in every size and shape to suit requirements in the home and industry. Get incomparable comfort. Get Dunlopillo. Your nearest stockist welcomes your enquiry.


திவ்யத்தலம் திரு ஆனைக்கா-1
கல்கி தீபாவளி மலர் - 1965


திவ்வியத்தலம் திரு ஆனைக்கா-2


திவ்வியத்தலம் திரு ஆனைக்கா-3
கல்கி தீபாவளி மலர்-1965


திவ்யத்தலம் திரு ஆனைக்கா - 4
கல்கி தீபாவளி மலர் - 1965

A GIFT FOR YOUR SON...?

WHAT COULD BE BETTER THAN THE

WOLF CUBMASTER!



He'll value it more than anything else for it's an ideal *hobby*-tool. With so many odd jobs in the house—furniture-making... repairs... he'll be a 'do-it-yourself' expert with the WOLF Cubmaster!

The Cubmaster with its various attachments can be used for sanding, polishing, buffing, grinding, sawing, and for numerous other jobs.

ILLUSTRATED LITERATURE AVAILABLE ON REQUEST

After-sales service guaranteed through a network of highly efficient service-stations.

WOLF ELECTRIC TOOLS


RALLIS INDIA LIMITED

P.O. Box 166, Bombay 1. P.O. Box 198, Calcutta
P.O. Box 153, (G.P.O.) Madras. P.O. Box 714, New Delhi

BI-BW-59

நடன யோகம்

பெ. தூரன்



"இன்றே எனக்குநல் நாளம்மா - நீயும்
ஏன் முகம்வாடித் துடிக்கிறாய்?
நன்றே நான் நாட்டியம் ஆடுவேன் - மன்னன்
நாணிட மெய்க்கலை காட்டுவேன்

புத்த மகான்மொழி தள்ளியே - நானும்
பொன்னுடல் விற்றிட வேண்டுமாம்
எத்தனை சூழ்ச்சிகள் அம்மம்மா! - இன்றும்
இப்பழியும் எனைத் தீண்டுமோ?

ஐயன் சிலைமுன்னர் ஆடினால் - கொள்கை
அத்தனை யும்பறந் தோடுமாம்
பையக் கரந்தொடல் கூடுமாம் - இந்தப்
பார்த்திபன் காணும் கனவிதே

நாட்டியம் ஆடுதல் என்தொழில் - எனில்
நல்லறம் கைவிட வேணுமோ?
காட்டுவேன் என்திறன் யாவையும் - மேலும்
காட்டுவேன் என்மனத் திண்மையும்"

என்று மொழிந்தனள் ஸ்ரீமதி - அன்னை
இன்மலர்ப் பாதம்கண் ஒற்றினள்:
என்றும் அறியாத வண்ணமாய் - யாரும்
ஏங்கி வியர்த்திடும் வண்ணமாய்

ஒப்பனை செய்துகொண் டேஅவள் - மன்றில்
உள்ளவர் நோக்கி மயங்கிட
தப்பிய புன்மதி கொண்டவன் - அசாத
சத்துரு காணவே வந்தனள்.

ஐயன் சிலையங்கு மண்ணிலே - மன்னன்
அரியணை மேலுயர் பீடத்தில்:
பொய்ம்மனம் கொண்ட களிப்புடன் - அவன்
புன்னகை செய்தங் கமர்ந்தனன்.

ஆடினள் நாட்டியம் அன்றுதான் - யாரும்
ஆஹாவெனச் சிலை ஆகவே
ஆடினள் ஆடினள் யோகமாம் - சாந்தி
ஐம்பொறி தன்னிலும் பொங்கவே

காணரும் காட்சியைக் கண்டனர் - மங்கை
கால்சிலம்பைத் தெறித் தாடினள்
பூணும் நகைத்திரள் ஒவ்வொன்றும் - அவள்
போக்கியே மன்னன்முன் வீசினள்

நடனக் கலைவழு வாமலே - மெல்ல
நல்லணி யாவையும் சிந்தினள்
முடிவின் பொருள்உண ராமலே - மன்னன்
மூடக் கரந்தட்டி வாழ்த்தினன்!

ஐயன் சிலைமுன்பு நின்றனள் - கணம்
அஞ்சலி ஹஸ்தம் குவித்தனள்
செய்த பொய்க் கோலம் பொறுக்கவே-கண்
சிந்தும்முத் தாரமும் சூட்டினள் [ணில்

சரிகைப்பட் டாடை சரிந்தது - உள்ளே
தவத்தின் மெய்க்கோலம் தெரிந்தது
வெறுவிக் கடித்துச் சினந்தனன் - சிரம்
வெட்டித் துணிக்கப் பணித்தனன் —

உள்ளொளி தன்னிற் கலந்தனள் - உடல்
உற்றிடும் துன்பம்வென் றாடினள்
துள்ளி எழுந்தாற் சோதியில் - அவள்
தோய்ந்தனள் நித்தியம் எய்தியே.

குறிப்பு: ஸ்ரீமதி என்பவள் அழகும் கலையும் ஒருங்கே வாய்க்கப் பெற்ற ஓர் இளநங்கை. இழிந்த இச்சைகளுக்கு அடிமையான அஜாத சத்துரு என்ற அரசன் அவளை ஒரு நாடகக் கணிகைதானே என்று அலட்சியமாக எண்ணியிருந்தான். அவனுடைய சபையிலே ஸ்ரீமதி தனது உயிரையே தியாகம் செய்து தன் தூய வாழ்க்கையை நிலைநாட்டிய சம்பவத்தை இந்தப் பாடல் குறிப்பிடுகிறது.

சாந்தத்தின் குரல்

கி.வா. ஜகந்நாதன்

காவியங்களில் வரும் பாத்திரங்களை இனம் கண்டு கொள்ள அவர்களுடைய வாய்மொழிகளும் செயல்களும் உதவுகின்றன. இன்ன பாத்திரம் இன்ன குணமுடையது என்பதை அந்த மொழிகளும் செயல்களும் நன்கு புலப்படுத்தும். பெருங் கவிஞர்களுடைய படைப்பில் ஒரு பாத்திரத்துக்கும் மற்றொரு பாத்திரத்துக்கும் உள்ள வேறுபாட்டைத் தெள்ளத் தெளிய அறியும்படி அவற்றின் கூற்றுக்களும் செயல்களும் அமைந்திருக்கும்.

வில்லிபுத்தூர் ஆழ்வார் பாரதத்தில் பலபல பாத்திரங்கள் வருகின்றன. சாந்தமே உருவாகிய தரும புத்திரரும், வீரமே திருவாக விளங்கும் அருச்சுனனும், கொடுமையின் வடிவமாகிய துரியோதனனும், வஞ்சகத்தின் அவதாரமாகிய சகுனியும், கொடைக்கெனவே பிறந்த கர்ணனும் வருகிறார்கள். அவரவர்களுடைய பேச்சும் செயலும் அடையாளக் குறியிட்டாற் போல் அமைந்து நம் அகக் கண்ணில் அவர்களைத் தோற்றுவிக்கின்றன. தரும புத்திரருடைய பேச்சில் அவருடைய ஒப்புயர்வற்ற சாந்தம் சுருதி போடுவதைக் காணலாம்.



பஞ்ச பாண்டவர்கள் பன்னிரண்டு ஆண்டுகள் காட்டில் வாழ்ந்துவிட்டு, மேலும் ஓராண்டு மறைவாக விராடன் நகரில் இருந்தார்கள். பதின்மூன்று ஆண்டுகள் முடிந்தவுடன் அவர்கள் வெளிப்பட்டார்கள்; முன்னும் செய்து கொண்ட ஒப்பந்தப்படி. இப்போது துரியோதனன் அவர்களுடைய நிலப் பகுதியைத் தரவேண்டும். இதற்காக ஓரந்தணனைத் தூது விட்டார்கள், பாண்டவர்கள். துரியோதனன் அவர்களுடைய நாட்டைத் தர மறுத்துவிட்டான். அவனுடைய தந்தையாகிய திருதராஷ்டிரன், ''பாண்டவர்களுக்கு எங்கே போனாலும் செல்வாக்கு உண்டு; காட்டிலே பன்னிரண்டு ஆண்டுகள் வாழ்ந்து பழக்கப்பட்டவர்கள். இனியும் அங்கேயே அவர்கள் சுகமாக வாழ்ந்திருக்கலாமே! எதற்காக இந்தத் துஷ்டப் பிள்ளையோடு வாக்குவாதம் செய்ய வேண்டும்?'' என்று சொல்லி அனுப்பினான்.

அதைக் கேட்ட தருமபுத்திரர், தம் பெரிய தந்தை சொல்வது முறைதான் என்று எண்ணினார். ''போர் செய்தால் நம்மை எதிர்த்து வரும் உறவினர்களையும், பெரியவர்களையும் கொன்று வெல்லவேண்டி வரும். அவர்களை அழித்துவிட்டு எஞ்சியிருக்கும் சுடுகாட்டையா ஆள்வது? பெரிய தந்தை கூறுகிறபடி காடு சென்று வாழ்வதே நலம் என்று தோன்றுகிறது'' என்று மெல்லத் தம் கருத்தைச் சொன்னார்.

''குரவரையும் இளைஞரையும் குலத்துரிய
துணைவரையும் கொன்று போர்வென்று
அரவநெடுங் கடலாடை அவனியெலாம்
தனியாளும் அரசு தன்னின்
கரவுறையும் மனத்தாதை முனிக்குரைத்த
மொழிப்படியே கானந் தோறும்
இரவுபகல் பலமூல சாகம்நுகர்ந்து
உயிர்வாழ்தல் இனிது நன்றே.''

[குரவர் - ஆசிரியர். அரவம் - ஓசை. கரவு - வஞ்சகம்; தாதை - தந்தை; திருதராஷ்டிரன். முனிக்கு - தூது போன அந்தணனுக்கு. பலமூலசாகம் - பழங்களையும் கிழங்குகளையும் தழை முதலிய வற்றையும்.]

பாண்டவருக்குத் துணையாக நின்ற கண்ண பிரான் இதைக் கேட்டான்: ''என்ன வார்த்தை கூறினாய், தருமா! நீங்கள் மறுபடியும் கானகத்துக்கே போய்விட்டால் உலகத்தவர் பழிக்க மாட்டார்களா? அன்று அரசவையில் துச்சாதனன் துரோபதியைத் துகில் உரிந்தபோது உன் தம்பிமாரும் அவளும் வஞ்சினம் கூறினார்களே! அவை என்னாவது? நீ இப்படிப் பேசுவது நியாயமா?'' என்று அவனைக் கேட்டான். தருமர், ''அப்படியானால் இன்னும் ஒருமுறை தூதனுப்பலாம். அப்போதும் அவன் இணங்கா விட்டால் போர் செய்யலாம்'' என்று அரை மனத்தோடு கூறினார். கண்ணனையே தூது போகும்படி வேண்டிக் கொண்டார். அவ்வாறு தருமர் கூறுவதை ஒரு பாடல் தெரிவிக்கிறது.

தரும புத்திரருக்குத் தாம் பிறந்து வளர்ந்த நாடும் நகரும் நினைவுக்கு வருகின்றன. இப்போது அந்த அத்தினபுரத்தில் தனது பாம்புக் கொடியைப் பரக்க விட்டு ஆளுகிறான் துரியோதனன். அவன் நாட்டிய கொடி புதிது. ஆனால் அந்த ஊரோ பழையது; பரம்பரை பரம்பரையாக அவர்களுடைய முன்னோர்

இருந்து அரசாண்டது. இப்போது கண்ணன் பாண்டவர் தூதனாக அந்த ஊருக்குச் செல்ல வேண்டும். ''அந்த ஊருக்குப் போய்த் தூது உரைத்து வா'' என்று தொடங்குகிறார் தருமர்.

''முந்நூர்வெம் பணிக் கொடியோன்
மூதூரில் நடந்து.''

[ஊரில் தோரண வாயிலில் முன்னாலே பறக்கும் கொடிய நாகக் கொடியை உடைய துரியோதனன் இருக்கும் பழைய ஊரில் சென்று.]

''எங்களுக்குரிய நாட்டைத் தந்து விட்டு மறு காரியம் பார்'' என்று உரிமையும் மிடுக்கும் தோன்றக் கேட்பது முறை. ஆனால் தருமர் உள்ளம் சாந்தமுடையது. அதில் சினமே தோன்றாது. எப்படிக் கேட்க வேண்டும், எதைக் கேட்க வேண்டும் என்பதைச் சொல்கிறார். கேள் என்று சொல்லவில்லை. இரவலன் வள்ளலிடம் சென்று இரப்பதுபோல அவனிடம் பேசும்படி சொல்கிறார். அப்படி உவமை கூறாவிட்டாலும் அது தோன்றும்படி சொற்கள் வருகின்றன. தமக்கு உரிய ஒன்றை உரிமையோடு கேட்கும் குரலாக அது இல்லை. ''நீ போய் அவனிடம் வேண்டு'' என்று சொல்கிறார். அதையும் எப்படிச் சொல்கிறார்?

யாரோ ஒரு பெரிய செல்வரை ஓர் ஏழை அண்டுகிறான். அவனுக்கு நூறு ரூபாய் அவசியமாக வேண்டியிருக்கிறது. அவன் செல்வரிடம் போய்த் தனக்கு நூறு ரூபாய் வேண்டும் என்று கேட்கிறான். அவர் மறுக்கிறார். ''ஐயா! தயை செய்து எழுபத்தைந்து ரூபாயாவது தந்து உதவுங்கள்'' என்று வேண்டுகிறான். அதையும் அவர் தர இசையவில்லை. ''கருணையுடைய தலைவரே, அன்புகூர்ந்து ஐம்பதாவது தாருங்கள்'' என்று பணிந்து விண்ணப்பித்துக் கொள்கிறான். அதையும் அவர் கொடுக்க முடியாதென்று சொல்கிறார். மறுபடியும், ''பத்து ரூபாயாவது தரக் கூடாதா?'' என்று கெஞ்சுகிறான்.

அந்த இரவலனைப் போல நடந்துகொள்ள வேண்டும் என்று தோன்றும்படி பேசுகிறார் தருமர். ''நீ அவனிடம் நமக்குரிய பாதி அரசை அளிக்கும்படி வேண்டிக் கொள்; இல்லை என்றால் ஒரு நாட்டையாவது தரும்படி வேண்டு; அதுவும் கொடுக்காவிட்டால் ஆளுக்கு ஓரூராவது இருக்கும்படி ஐந்து ஊர்களையாவது வேண்டு; அவற்றையும் மறுத்தால் கடைசிப் பட்சமாக ஐந்து வீடுகளையாவது வேண்டு'' என்கிறார். அடுத்தடுத்து வேண்டு, வேண்டு என்றே சொல்கிறார்.

''முந்நூர்வெம் பணிக்கொடியோன் மூதூரில்
நடந்து,உழவர் முன்றில் தோறும்
நந்தூரும் புனல்நாட்டின் நிறம்வேண்டு;
நாடொன்றும் நல்கான் ஆகின்
ஐந்தூர்வேண்டு;அவைஇல்எனில் ஐந்நிலம்
வேண்டு''

அந்தக் காலத்தில் தருமபுத்திரர் தம்முடைய நாட்டிலுள்ள குடிமக்கள் யாவரையும் சென்று பார்த்துப் பழகி வந்தவர். மன்னர் குலத்தில் உதித்தவரோடும் பெரியவர்களோடும்



மட்டும் பழகி நகரத்திலேயே தங்கிச் சுக வாழ்வு வாழ்பவர் அல்ல. நாட்டின் மூலைமுடுக்குகளில் சென்று, காடுகரைகளைப் பார்த்து, உழவர்களோடும் தொழிலாளிகளோடும் பேசிப் பழகி இன்புறுபவர்; அவர்களுக்கு இன்பத்தை உண்டாக்குகிறவர். இப்போது அவருக்கு அந்தப் பழைய நினைவு வருகிறது. நாட்டு வளமும் உழவர்களின் இயல்பும் அகக் காட்சியாக விரிகின்றன. நீர்வளத்தினால் சங்குகள் அங்கங்கே உள்ளன. அவை மெல்ல ஊர்ந்து உழவர்களின் வீட்டு முற்றங்களில் உலவுகின்றன. அவற்றை உழவர்கள் ஒன்றும் செய்வதில்லை. அவர்கள் பிற உயிர்களுக்கு ஊறு செய்யாதவர்கள். அதனால்தான் அங்கே தைரியமாக அந்தச் சங்குப் பூச்சிகள் ஊர்கின்றன. நீர்வளமும் உழவர்களுடைய நீர்மை வளமும் நந்துகள் அவர்களுடைய வீட்டு முற்றங்களில் ஊர்வதனால் தெரிய வரும். இப்போது அந்தக் காட்சியை நினைத்துப் பார்க்கிறார்.

"....உழவர் முன்றில் தோறும்
நந்தூரும் புனல்நாட்டின்
திறம்வேண்டு"

[திறம் — பகுதி.]

"எங்களுக்குரிய பாதிப் பகுதியை வேண்டு" என்கிறார். "மாட்டேன் என்றால் ஒரு நாட்டையாவது கேள்; நாடு ஒன்றும் நல்காவிட்டால் ஐந்து ஊர்களை வேண்டு" என்கிறார். பாட்டில், "புனல் நாட்டின் திறம் வேண்டு; நாடு ஒன்றும் நல்கானாயின், ஐந்தூர் வேண்டு" என்று இருக்கிறது. நாடு ஒன்றும் நல்கானாயின், என்பதனால், "பாதி அரசு தராவிட்டாலும் ஒரு நாட்டையாவது வேண்டு; அதுவும் தராவிட்டால்" என்று பொருள் கொள்ள வேண்டும்.

'பெரிய நாட்டுக்கு அரசர்களாக வாழ முடியாவிட்டாலும் ஆளுக்கு ஓர் ஊரையாவது வைத்துக் கொள்ளலாம்; நாட்டையாளும் பேரரசர் என்பது இல்லாவிட்டாலும் ஊரை ஆளும் சிற்றரசர் என்றேனும் வாழலாம்' என்பது தருமர் எண்ணம் போலும்! 'அப்படியும் இணங்கி வராவிட்டால், பிறர் வீட்டில் குடியிருக்கும் தொல்லையின்றி ஆளுக்கு ஒரு வீட்டை உரிமையாக்கிக் கொண்டு வாழவாவது ஐந்து வீடுகளை அளிக்கும்படி வேண்டிக் கொள்' என்று அடுத்தபடி சொல்கிறார். நாட்டின் திறத்திலிருந்து ஒரு நாட்டுக்கு வந்து, ஒரு நாட்டிலிருந்து ஐந்து ஊருக்கு இறங்கி, பின்பு அதிலிருந்து ஐந்து வீட்டுக்கு வந்து நிற்கிறது அவருடைய வேண்டுகோள். பாவம்! ஆசையே அறியாதவர்; சினமே அறியாத செம்மல். 'போர் வரக் கூடாது; எப்படியாவது சமாதானமாக வாழ வேண்டும்' என்பது அவர் குறிக்கோள். அதனால் இறங்கி இறங்கி வந்து பேசுகிறார். அவருடைய சாந்த உள்ளமல்லவா பேசுகிறது?

"நாடொன்றும் நல்கா னாயின்
ஐந்தூர்வேண்டு; அவைஇல்எனின்
ஐந்துஇல்லம்வேண்டு."

'நாட்டின் பகுதியைத் தரமாட்டேன்; ஒரு நாடுகூட ஈயமாட்டேன்; ஐந்து ஊர்களையா கேட்கிறீர்கள்? அவற்றையும் அளிக்க மாட்டேன்; ஐந்து வீடுகள் கூடத் தரமாட்டேன்' என்று துரியோதனன் மறுத்து விட்டால் என்ன செய்வது? 'கடைசியில் ஐந்து வீடுகளும் தரமாட்டேன் என்றால் போர் செய்து வீரம் காட்டி வென்று எங்கள் உரிமையைப் பற்றிக் கொள்வோம்' என்று சொல்ல வேண்டும். அதுதான் முறை. "ஒன்றும் தரமாட்டாயா? உங்கள் குலத்தையே போரில் வேரறுக்கிறேன் பார்" என்று அறைகூவுவதுதான் யுத்த தருமம். ஆனால் பேசுவது சாந்தமூர்த்தியாகிய தருமர் அல்லவா? 'எல்லாவற்றையும் மறுத்தால் போர் செய்து எங்கள் உரிமையைப் பெறுவோம்' என்று சொல்லும்படி கண்ணனுக்குச் சொல்கிறார். ஆனால் அது எப்படி வருகிறது?

ஒரு பையன் தீபாவளிக்கு நிறையப் பட்டாசும் மத்தாப்புக்களும் வாங்குகிறான். அவற்றை அடுப்பு மேட்டில் வைத்துக் காயப் போடுகிறான். கனல் மட்டும் இருக்கும் அடுப்பின்மேல் அது உலர்ந்தால் நன்றாக வெடிக்கும் என்பது அவன் எண்ணம். அவன் அவற்றை வைத்து விட்டுத் தூங்கப் போகிறான். விடியற்காலந்தானே தீபாவளி?

விடியற் காலையில் எழுந்த பாட்டி அடுப்பை மெழுகச் சாணித் தண்ணீருடன் போகிறாள். அவளுக்குக் கண் சரியாகத் தெரியாது. அடுப்பின் மேலுள்ளவற்றை எடுத்துக் கீழே வைக்கும்போது இரண்டு மூன்று பட்டாசுக் கட்டுகள் சாணித் தண்ணீருள்ள சட்டியில் விழுந்து விடுகின்றன. மெழுகின பிறகு சட்டியின் அடியில் இருந்த அவற்றைக் கண்டு துணியால் துடைத்து மற்றவற்றோடு வைத்து விடுகிறாள். நனையாத கட்டுகளோடு நனைந்த மூன்று கட்டுகளும் இருக்கின்றன. இந்தச் செய்தி பையனுக்குத் தெரியாது.

அவன் விடியற்காலையில் எழுந்து தீபாவளி நீராடிக் கோடி உடுத்துக் கொள்கிறான். ஆர்வத்தோடு மத்தாப்பையும் பட்டாசையும் விடத் தொடங்குகிறான். மற்றப் பட்டாசுகள் நன்றாக வெடிக்கின்றன. ஆனால் நனைந்த கட்டிலுள்ள பட்டாசுகள் வெடிக்கவே இல்லை. அந்தப் பட்டாசிலும் நிறைய மருந்திருக்கிறது; திரி இருக்கிறது. ஆனால் அது வெடிக்கவில்லை. தண்ணீரில் நனைந்து விட்டமையால் அது பட்டாசின் உருவத்தைப் பெற்றிருந்தும், தனக்குரிய வெடிக்கும் தன்மையை இழந்து விட்டது.

தருமர் பேச்சு நனைந்த பட்டாசைப் போலத்தான் இருக்கிறது. 'போர் செய்வோம்' என்பதைத்தான் சொல்கிறார். ஆனால் போருக்குரிய உறுதியோ, மிடுக்கோ, வெடிப்பான குரலோ அவர் கூற்றில் இல்லை. சாந்தத்திலே நனைந்து வெடிப்பின்றி வருகிறது.

அவர் என்ன சொல்கிறார்?

'நாட்டையும் ஊரையும் வேண்டு' என்று சொன்னதே சாந்தத்தின் குரல்தான். 'ஒருவன் கொடுக்க மற்றொருவன் பெறும் பொருளாதலால், அவற்றை வேண்டு என்று சொன்னது சரிதான்' என்று நாம் ஒருவாறு சமாதானம் செய்து கொள்ளலாம். அடுத்தபடி போர் செய்வதாகச் சொல்ல வேண்டும். அவர் அதையும் வேண்டும் பொருளாக மாற்றி விடுகிறார்.

"ஐந்தில்லம் வேண்டு; அவை மறுத்தால்
அடுபோர் வேண்டு!"

என்று கண்ணனிடம் சொல்கிறார். நாடு, ஊர், வீடு என்பவற்றை வேண்டுவது போலவே, போரையும் வேண்டு என்று சொல்கிறார். நாட்டையும் ஊரையும், இல்லத்தையும் ஒருவர் வேண்டி மற்றவர் பெறலாம்; அநுபவிக்கலாம். போர் அத்தகையதல்லவே! ஆனால் சாந்தமே வடிவான தருமர் வாக்கில் போரும் இரந்து பெறும் பொருளாகி விடுகிறது. வெடிக்கும் குரலில் சொல்ல வேண்டிய போர் என்னும் சொல் சாந்தம் என்னும் நீரில் நனைந்து துடிப்பும் வெடிப்பும் மாறித் தணிந்த குரலில் வேண்டிக் கொள்ளும் பொருளாக மாறி விடுகிறது. போர் என்ற சொல் இருந்தும் வேண்டு என்ற சொல்லோடு நின்று மிடுக்கே இன்றித் தருமருடைய சாந்தத் திருவுள்ளத்தைப் புலப்படுத்துகிறது. பட்டாசு உருவம் இருந்தும் நீரில் நனைந்து, வெடிக்கும் சக்தியை இழந்ததுபோல் இருக்கிறது

இது. ''அவை மறுத்தால் அடுபோர் வேண்டு'' என்று கடைசியாகத் தருமர் பேசும் பேச்சில் யாதும் கலவாத சாந்தமே குரல் எழுப்புகிறது:

''கண்ணா, நீ இளமைப் பிராயத்திலேயே மிடுக்குடையவனாக நின்றவன். குவலயாபீடம் என்ற யானையின் கொம்பைப் பறித்து விளையாடியவன். யானையின் பல்லைப் பிடித்துப் பதம் பார்த்தவன்: அந்த மிடுக்கை இப்போது காட்ட வேண்டாம்: என்னுடைய பிரதிநிதியாகச் செல்பவனாதலின் நீ தணிந்த ஈர உள்ளத்தோடு வேண்டிக் கொள்ள வேண்டும்'' என்று குறிப்பிக்கிறவரைப் போலக் கண்ணனை,

''சிந்துரத் திலகநுதல் சிந்துரத்தின்
மருப்பொசித்த செங்கண்மாலே''

என்று விளிக்கிறார். அவருடைய நெஞ்சில் கனல் மணக்கவில்லை; கருணை மணக்கிறது: புகை எழவில்லை; புனல் ஊறுகிறது. வீரம் தோன்றவில்லை; ஈரம் தோன்றுகிறது. போர் என்ற நினைவு இல்லை; அமைதி என்ற நினைவே நிற்கிறது. ஆதலால் மற்றவர்க்கெல்லாம் வேண்டு என்ற சொல் ஒருவாறு பொருந்தினாலும், சிறிதும் பொருத்தம் இல்லாத போர் என்ற சொல்லோடும் அது வந்து முந்துகிறது: அதனால் போர் என்ற சொல்லே மிடுக்கிழந்து ஈரமாக நனைந்து சாந்தம் சொட்டச் சொட்ட நிற்கிறது.

''முந்துநூல்வெம் பணிக்கொடியோன் மூதூரில்
நடந்து,உழுவர் முன்றில் தோறும்
நந்துலாவும் புனல்நாட்டின் நிறம் வேண்டு;
நாடொன்றும் நல்கா னாகின்,
ஐந்துஊர்வேண்டு; அவைஇல்லெனின்
ஐந்துஇலம் வேண்டு;
அவைமறுத்தால் அடுபோர் வேண்டு;
சிந்துரத் திலகநுதல் சிந்துரத்தின்
மருப்புஒசித்த செங்கண் மாலே!''

[பணி – பாம்பு. முன்றில் – முற்றம். நந்து–சங்கு. நிறம் – பகுதி: இல்எனின் – இல்லை என்றால். சிந்துரத் திலகம் – சிவந்த பொட்டு. சிந்துரம்–யானை. மருப்பு ஒசித்த – கொம்பை ஒடித்த]

நாடு இழந்து வருந்திப் பகைவனிடம் சினம் மூண்ட ஒருவருடைய பேச்சா இது? இல்லை, இல்லை; தருமரின் பேச்சு; சாந்தத்தின் குரல்!

அட்டைப்பட விளக்கம்

சொக்கநாதன் ஆடிய சொக்கட்டான்



தீபாவளிப் பண்டிகையைக் குறித்து எவ்வளவோ ஐதிகங்களும் பழக்க வழக்கங்களும் நிலவி வருகின்றன. வடநாட்டில், முக்கியமாக குஜராத்தில், தீபாவளியன்று இரவு சொக்கட்டான் ஆடுவது வழக்கம். அன்று ஆட்டத்தில் வெற்றி பெற்றவருக்கு அம்பிகையின் அருள் கிடைக்கும் என்பது நம்பிக்கை. காரணம் இதுதான்:

இப்புனித தினத்தில் கைலாயத்தில் ஈசுவரனும் தேவியும் சொக்கட்டான் ஆடினராம். தேவிதான் வெற்றிமேல் வெற்றி பெற்றாளாம். சுவாமி தமது பூதப் படைகள், நந்தி தேவர், பிறைச் சந்திரன், திருவாபரணங்கள் முதலிய யாவற்றையும் பணயம் வைத்துத் தோற்றாராம். இனித் தம்மையே பணயம் வைத்து ஆட வேண்டியதுதான் என அவர் எண்ணிய தருணத்தில் அன்னை மந்தஹாசம் புரிந்தாள். ஆனால் அவரது சடைக்குள் ஒளிந்து கொண்டு இந்நேரம் வரை அவரால் பணயம் வைக்கப் படாதிருந்த கங்கா தேவிக்கோ ஆத்திரமே ஏற்பட்டு விட்டது. ஐயனது முடியிலிருந்து அருள் பொழிந்து, தானாகவே வெளிப்பட்டுத் தேவிக்குப் பணயமாகிறாள். 'கங்கா ஸ்நானம்' என்று நாம் தீபாவளியன்று கூறுவதும்கூட இந்த ஐதிகத்தில் இழைந்து விடுவதைப் பாருங்கள்.

ஆந்திர தேசத்தவரும், முகலாய மன்னன் ஷாஜஹானின் ஆஸ்தானத்தில் கவியாக இருந்தவருமான ஜகந்நாத பண்டிதர் இயற்றிய வடமொழி சுலோகமொன்று சொக்கநாதனும் சொக்கியம்மையும் ஆடிய சொக்கட்டானாட்டத்தைக் கூறுகிறது. அந்தக் கவிதையையே ஓவியர் மணியம் இங்கு கண்ணுக்கு முன் கொணர்ந்து காட்டியிருக்கிறார்.

அம்மா

இனிய பெயரையுடைய ஹிமவதி, காவிரியில் கலக்கும் ஒரு சிற்றாறு. காவிரியைத் தேடி ஓடும் சுதியில் அது பல இடங்களில் மனமோகன நதியாகப் பாய்கிறது. ஆனால் என்னைப் பொறுத்தமட்டில் அதன் கவர்ச்சிக்கு முக்கியமான காரணம், அம்மா அதன் கரைகளில் பிறந்தாள் என்பதுதான் – நானும் அதே கரைகளில்தான் பிறந்தேன். என் வாழ்க்கையின் மிகப் பழைய நினைவுகளில் ஒன்று அந்த நதியையும் என் அம்மாவையும் இணைக்கும் ஒரு நிகழ்ச்சியாகும்.

அப்போது நான் மூன்றரை வயசுப் பிள்ளை. காலையில் எழுந்து அம்மாவைத் தேடினேன். மங்கள ஸ்நானத்துக்காக நதிக்குப் போயிருக்கிறாள் என்று தெரிந்தது. விசும்பிக் கொண்டே ஆற்றங்கரைக்குப் போனேன். ஆறு சற்றே மடிந்து குதிக்கிற இடத்தில் படித் துறையில் அம்மாவைக் கண்டேன். படித்துறையையோ, நீர்ப் பெருக்கின் மந்த கர்ஜனையையோ, சூரியனின் மங்கலான ஒளி நதியின் மேல் மினுக்கிட்டதையோ, கரையிலிருந்த பெரிய விருட்சங்கள் வீசிய நிழல்களையோ அப்போது நான் குறிப்பாகக் கவனித்தேன் என்று சொல்வதற்கில்லை. ஆனாலும் அம்மாவை ஆற்றங்கரையில் பார்த்த நினைவு என் மனத்தில் இப்போதும் தேங்கியிருக்கிறது. சுமார் அறுபது ஆண்டுகளுக்கு அப்புறம், அதாவது இரண்டாண்டுகளுக்கு முன், நான் இதே ஹொளே நர்ஸிப்பூருக்குச் சென்றிருந்தபோது என் பூர்வ நினைவு எவ்வளவு சரியாயிருக்கிறது என்பதைக் கண்டு ஆச்சரியமடைந்தேன். அதே படிகள், நதியின் அதே மந்த கர்ஜனை, அலைகளின் மேல் சூரியனின் அதே மங்கல் ஒளி, அதே மர நிழல்கள். ஆனால் அம்மா அங்கில்லை. ஏறத்தாழ அறுபதாண்டுகளுக்குப் பிறகும் அம்மா அங்கேயே இருப்பாள் என்று நான் நினைப்பது அச்சமயத்தில் எனக்கு அறிவீனமாகத் தோன்றவில்லை. ஆரஞ்சுச் சிவப்புச் சேலை உடுத்திக் கொண்டு அதே பழைய அம்மா யௌவன ஸ்திரீயாக அங்கே உட்காரக் கண்டிருந்தால் எனக்கு ஆச்சரியமாகவே இருந்திராது. காலத்தில் நான் ரொம்பவும் பின்னுக்குச் சென்று வாழத் தொடங்கி விட்டேன் – இடைக்காலத்தில் நடந்தது அவ்வளவும் அந்த க்ஷணத்தில் மறந்தே போய்விட்டன.

அம்மா எப்போது பிறந்தாள் என்பதற்குத் தெளிவான குறிப்பேதும் கிடையாது. அவளுடைய குழந்தைகளின் வயசை வைத்துக் கணக்கிட்டால் 1880ம் ஆண்டையொட்டி அவள் பிறந்திருக்கக் கூடும். ஹொளே நர்ஸிப்பூரில் அவளுடைய தகப்பனார் முன்னணி வக்கீல். மாசம் இருநூறு ரூபாய்க்குமேல் அவருக்குக் கிடைத்தது என்று சொல்வார்கள். அந்த நாளில் அது குபேர சம்பத்து. பள்ளிக்கூட ஆசிரியர்கள் மாசம் மூன்று ரூபாய் பெற்றுவந்த நாள் அது. குமாஸ்தாக்கள் வேலை தொடங்கும்போது பத்து ரூபாய் சம்பளம் பெற்று ராஜநடை போடுவார்கள். ரூபாய்க்கு இருபத்து நாலு சேர் அரிசி விற்ற காலம் அது. இதற்குச் சரியாகவே எல்லாப் பண்டங்களும் கொள்ளை மலிவாக விற்றன.

எனவே அம்மாவின் குடும்பம் ரொம்பப் பணக்காரக் குடும்பம் எனலாம். தாத்தாவுக்கு ஊர் அருகிலேயே தோப்பு இருந்தது. அங்கே தென்னையும், வாழையும், வெற்றிலையும் தாராளமாகப் பயிர் செய்திருந்தார்கள். ஞாயிற்றுக்கிழமைகளில் குழந்தைகளைத் தோப்புக்கு அழைத்துப் போவார்கள். அங்கே புதிதாகப் பறித்த இளநீரைச் சாப்பிட்டு விட்டுக் குழந்தைகள் குதித்துக் கும்மாளி போடுவார்கள். தாகமெடுத்து, மறுபடியும் இளநீர் கேட்கும் வரையில் கும்மாளம் அடிப்பார்கள்.

அம்மா அசாதாரணமான சௌந்தர்யவதி. இளம் பெண்ணாக இருந்தபோது ரொம்பவும் அழகாக இருந்திருப்பாள். போன நூற்றாண்டு முடிகிற சமயத்தில் – அப்போது அவளுக்குச் சுமார் இருபது பிராயம் இருக்கும் – எடுத்த ஃபோட்டோ ஒன்றுதான் அவளுடைய புகைப் படங்களில் மிகவும் பழையது. அழகிய மெலிந்த உடல், சிரித்த முகம், விசாலமான அகன்ற கண்கள், உள்ளத்தின் சமநிலை – கௌரவம் – திருப்தி இவற்றைப் பிரதிபலிக்கும் தோற்ற அமைப்பு எல்லாவற்றையும் அந்தப்

எச்.வி.ஆர். ஐயங்கார்



படம் காட்டுகிறது. அம்மா ஏராளமாக நகை போட்டுக் கொண்டிருப்பாள். இத்தனை அழகும், நிதான புத்தியும், செல்வச் செழிப்பும் உள்ள அம்மா அசாமானியமான அதிர்ஷ்டம் செய்தவள் என்று ஹொலே நர்ஸிப்பூரில் எல்லோரும் சொல்வார்கள்.

அம்மா பள்ளிக்கூடம், வீடு இரண்டிலுமே முறையாகக் கல்வி கற்றவளல்ல. இருந்தாலும் கன்னடம் படிக்கவும் எழுதவும் அறிந்திருந்தாள். அவளுக்குச் சங்கீதத் திறமை எதுவுமில்லை. சங்கீத சிக்ஷை எதுவும் பெற்றவளில்லை. வாய்ப்பாட்டு, வாத்திய இசை இரண்டுமே அவளுக்குத் தெரியாது. மைசூரிலிருந்து மூன்று இரவு, மாட்டு வண்டிப் பிரயாணம் செய்து அடைய வேண்டிய எட்டாப் பகுதி ஹொலே நர்ஸிப்பூர். அந்த ஊரில் ஒரு பிராமணப் பெண்ணுக்குப் பாட்டுச் சொல்லித் தருவது அவசியமாகவே கருதப்படவில்லை. அவளுக்கு எட்டு வயசானவுடனேயே தாத்தாவும் பாட்டியும் கல்யாணப் பிரச்னையை எடுத்துக் கொண்டுவிட்டார்களாம். பல இடங்களில் வரன் பார்த்து விட்டுக் கடைசியில் அப்பாவைத் தேர்ந்தெடுத்தார்கள். அப்போது அப்பாவுக்கு வயசு பதினாறு. 'ஹைஸ்கூல்' போய்க் கொண்டிருந்தார். ஜாதகம் பார்த்தார்கள். 'அற்புதமாகப் பொருந்தியிருக்கு. நிறைய பிள்ளை-குட்டி பெற்றுக்கொண்டு சந்தோஷமாக இருப்பார்கள்' என்று ஜோஸியர்கள் சொன்னார்கள். அப்புறம் என்ன? கல்யாணம் தடபுடலாக நடந்தேறியது.


சுமார் பதினாறு வயசில் அம்மா ஒரு குடும்ப வாழ்வைத் தொடங்கினாள். அம்மாவை 'அகத்துக்கு அழைப்பதற்கு' சம்பிரதாயப்படி சடங்குகள் செய்தார்கள். அப்போது அம்மாவுக்காக எடுத்த புடவையை நான் பார்த்திருக்கிறேன். அது நீலவர்ண பனாரஸ் பட்டு. அகலமான இதழ்களுடன் பூவும் இலையுமாக மங்கிய தங்க நிறத்தில் ஜரிகை வேலைப்பாடு செய்திருக்கும். தலைப்பு முழுவதும் இதே பூவேலைப்பாட்டின் ஜரிகை மினுமினுக்கும். புடவையின் அகலமான கரையும் மங்கிய தங்க ஜரிகையால் நெய்தது. அம்மா அதை ஒரே ஒரு முறை உடுத்திக் கொண்டதாகத்தான் எனக்கு ஞாபகம். என் முதல் சகோதரியின் விவாகத்தின்போது அம்மா அந்தச் சேலையைத்தான் உடுத்திக்கொண்டிருந்தாள். தன் சாம்பிய நிறத்தை எடுத்துக் காட்டும்படி நெற்றியில் பெரிய குங்குமப் பொட்டுடன், நீலமும் மங்கிய தங்கமும் இழைந்த புடவையைக் கட்டிக் கொண்டிருக்கும்போது ஒல்லியான அம்மா எத்தனை சுந்தரமாக இருந்தாள்! அவளே கல்யாணப் பெண் போலத்தான் இருந்தாள். அந்த ஒரு சமயம் தவிர அம்மா பனாரஸ் பட்டு உடுத்தி நான் பார்த்ததில்லை. அந்தப் புடவை என்ன ஆச்சோ, அதுவும் தெரியவில்லை.

அம்மா புக்ககத்துக்குச் சென்றபோது பிறந்தகத்தினர் அமர்க்களமான முறையில் அவளை அனுப்பி வைத்தனர். ஆனால் சிரிப்புடன் கண்ணீர்த் துளிகளும் கலந்தன. நல்ல எதிர்காலத்துக்கு ஆசி கூறும்போதே அது பனிக்குமா என்ற ஐயமும் எழுந்தது. ஏனென்றால் இதுவரை சிறு பெண்ணாக அம்மா பழக்கப்பட்டுவிட்ட சௌகரியங்களில் ஒரு தசாம்சத்தை ஏற்படுத்தித் தரக்கூட என் அப்பா குடும்பத்துக்கு வசதி இல்லை.


மைசூரின் மேற்குப் பகுதியில் ஷிமோகாவில் டெபுடி கமிஷனர் ஆபீஸில் ஒரு குமாஸ்தாவாக அப்பா வாழ்க்கை தொடங்கினார். அப்போது அவருக்குச் சம்பளம் ரூபாய் பன்னிரண்டு. இருண்டிருந்த ஒரு சிறிய வீட்டில் அப்பாவும் அம்மாவும் குடித்தனம் ஆரம்பித்தார்கள். சிறிது காலத்துக்குப் பின் ஷிமோகாவில் 'பிளேக்' வியாதி பரவியதால் இந்த வீட்டையும் காலி செய்ய வேண்டியதாயிற்று. ஊருக்கு எல்லைப் புறத்தில் கூரை போட்ட ஒரு முகாமுக்கு மாறினார்கள். தண்ணீர் கொண்டு வருவதற்காக அங்கிருந்து அம்மா அரை மைல் போய் வர வேண்டும். பிறந்தகத்தில் ஆடம்பரமாய் வளர்ந்த ஓர் இளம் கொடி தண்ணீர் கொண்டு வருவது, விறகு பிளப்பது முதலிய கடுமையான வேலைகளுடன் மணவாழ்வைத் தொடங்க வேண்டியிருந்தது. ஆனால் அவள் ஒருபோதும் குறைப்பட்டுக் கொள்ளவில்லை. முதல் இரு பிரசவங்களுக்கு அப்புறம் அவள் பிறந்தகம் சென்றதுமில்லை. 'அகத்துக்காரருடன் தான் இனி தன் வாழ்க்கை; அதற்கு என்ன அர்த்தமானாலும் சரி; கஷ்டம், நோவு, கொடிய வறுமை எதுவானாலும் அவருடைய விதியே தன்னுடையதும்' என்று வாழ்ந்தாள். பிளேக் முகாம் கலைக்கப்பட்ட பின், ஊருக்குத் திரும்பினர். ஒரு தொத்து நோயிலிருந்து தப்பியவள் இன்னொன்றுக்கு ஆளானாள். மிகவும் கடுமையான மலேரியா காய்ச்சலில் விழுந்தாள். அப்பாவுக்கும் மலேரியா கண்டது. பிளேக் ஆயினும் மலேரியா ஆயினும், வியாதியாயினும் ஆரோக்கியமாயினும் வாய் திறவாமல் இருவரும் அநுபவித்தார்கள்.

அப்பா பக்தி நிறைந்தவர்; அசாதாரணமான பக்தி உள்ளவர் எனலாம். ஸம்ஸ்கிருதம், தமிழ், கன்னடம் மூன்றும் அப்பாவுக்குத் தெரியும். மும்மொழியிலும் ராமாயண — மகாபாரதங்கள் படித்திருக்கிறார். நூற்றுக் கணக்கான சுலோகங்களும், பாசுரங்களும் அவருக்கு மனப்பாடம். ஆனாலும் அப்பா அகத்துக்குள்ளேயேதான் பூஜையும் பிரார்த்தனையும் செய்வார். அவர் வெளியே ஒரு கோவில் — குளம் என்று போன நாளே கிடையாது. காலையில் அம்மா பூப்பறித்துவிட்டுச் சமையல் வேலையில் ஈடுபட்டிருக்கும்போது அப்பா பூஜையில் இருப்பார். பூஜை முடிவில் அவரது விதியோடு தன் விதியையும் இணைத்துக் கொண்ட அம்மாவும் அவரோடு சேர்ந்து சேவிப்பாள். புஷ்பத்திலும், குங்குமத்திலும், சந்தனத்திலும் புதைந்துள்ள சின்ன மூர்த்திக்கு இருவரும் நமஸ்கரிப்பார்கள்.

அம்மாவின் முதல் குழந்தை பிறந்து சில தினங்களில் — அல்லது சில வாரங்



களில் — மரித்துவிட்டது என்று கேள்விப் பட்டிருக்கிறேன். ஆனால் இது பற்றிச் சரியாக நினைவு ஏதும் இல்லை. எனக்கு விவரம் தெரிந்தபோது யார் பெரிய அண்ணாவோ அவனே மூத்த பிள்ளை என்றுதான் வைத்துக் கொண்டோம். நாங்கள் மொத்தம் எட்டு பேர்—மூன்று பிள்ளைகள், ஐந்து பெண்கள். அந்தக் காலத்தில் அது ஒன்றும் அப்படி மிகப் பெரிய குடும்பம் என்று சொல்வதற்கில்லை. ஆனால் அதுவே எங்க



ளுக்குப் பெரிதாகத்தான் இருந்தது. நாங்கள் நிலை நிலை வளர்ந்து பள்ளிக் கூடம் போகத் தொடங்கிய பின் குடும்ப 'பட்ஜெட்' ரொம்பவும் பிதுங்கி விட்டது.

அம்மா எத்தனையோ ஜதைப் பொன் வளையல்களும், வைரத் தோடு மூக்குப் பொட்டுகளும், இடுப்பைச் சுற்றித் தங்கத்திலேயே ஒட்டியாணமும் போட்டுக்கொண்டு பார்த்திருக்கிறேன். அம்மாவின் அந்த இளம் பிராய உருவத்தை இப்போதும் மனசில் கொண்டு வர முடிகிறது. முக்கியமாக ஒட்டியாணம் நன்றாக நினைவுக்கு வருகிறது. வேலைப்பாடுகள் ஏதுமில்லாமல் நீள நெடுகச் செய்த ஆபரணம் அது. அம்மா இத்தனை நகை போட்டுக் கொண்டிருந்த படியால் நாங்கள் ஏழைகள் என்ற எண்ணமே எனக்கு ஏற்படாதது இயற்கை தானே?

அப்பாவுக்கு பெங்களூருக்கு மாற்றலாயிற்று. அவருடைய பெற்றோர், சகோதரர்கள், ஒரு சகோதரி ஆகியோருடன் அவிபக்த குடும்பமாக வாழ்க்கை தொடங்கினர். சிறிய வீடுதான். அது எவ்வளவு அசௌகரியமாகவும் ஏகாந்தமில்லாமலும் இருந்திருக்க வேண்டுமென்று இப்போதுதான் எனக்குப் புரிகிறது. நுண்ணிய உணர்ச்சி பெற்ற இளம் மனைவியும் தாயுமான அம்மா இந்தச் சூழ்நிலையில் எப்படி இருந்திருப்பாள் என்பது அப்போது எனக்குத் தெரியாது. இருந்தாலும் ஏதோ சில சம்பவங்கள் ஞாபகத்துக்கு வருகின்றன. அப்பா குமுறிப் போயிருப்பார்; அம்மாவின் முகத்தில் அழுத அடையாளங்கள் இருக்கும். அந்நாட்களில் இது என்னை அதிகம் பாதிக்கவில்லை. எங்களுடைய 'குஷி'க்கு அந்த வீட்டில் குறைவில்லை. அப்பாவின் சகோதரர் ஒருவர் விதவிதமாகச் சப்த ஜாலங்கள் செய்வார்—நாய், பூனை, குதிரை, கழுதை இவை போலவே கத்திக் காண்பிப்பார். சிங்கம் மாதிரியும்குரங்கு மாதிரியும்கூடச் சப்தம் எழுப்புவார். எங்களைப் பொறுத்த மட்டில் இந்த வேடிக்கை குறைகளையெல்லாம் நிரப்பியது. அப்பாவின் இன்னொரு சகோதரர் போலீஸில் இருந்தார். தீபாவளிக்கு அவர் கடை நிறையப் பட்டாக கொண்டு வந்து எங்களுக்குக் கொடுப்பார். பம்பரம், கோலி, எல்லாமும் கொடுப்பார். நாங்களும் அண்டைப் புறச் சிறுவர்களும் விளையாடுவோம். இவ்வளவு விளையாட்டு இருக்க, அந்த வீட்டின் அசுத்தத்தைப் பற்றியும், உணவுத் தட்டுப்பாடு பற்றியும், இருள் சூழ்ந்த வாழ்நிலை பற்றியும் நாங்கள் ஏன் கவலைப்படப் போகிறோம்?

இருந்தாலும் எங்கள் கவனத்தையும் கவர்ந்த சம்பவம் ஒரு நாள் நிகழ்ந்தது. என் பெற்றோரும், அவர்களுடைய குழந்தைகளாகிய நாங்கள் மட்டும் அருகிலேயே இன்னொரு வீட்டுக்குக் குடி பெயர்ந்தோம். இவ்வளவு காலமாகக் களையிழந்திருந்த அம்மா அன்று சந்தோஷமாகவும், மலர்ச்சியாகவும் இருந்தாள். எங்கள் ஒவ்வொருவருக்கும் தலா ஒரு தம்ளர் பால் தந்தாள். அதில் சர்க்கரையும், ஓரிரு இழை குங்குமப் பூவும் போட்டிருந்தது. அதிருசியாயிருந்தது. "கஞ்சி தவிர வேறெதுவும் குடிப்பதற்கு நமக்கு வசதியில்லை. ஆனால் சுதந்திரமாக அந்தக் கஞ்சியைக் குடிப்பதுதான் எவ்வளவு திருப்தியாக இருக்கிறது!" என்று அம்மா சொன்னாள்.


ஒன்றாக இருந்த குடும்பத்தில் எத்தனை நெருசல்கள் இருந்தனவோ? 'ஸ்தானம்' பெரியது என்பவர்களிடம் அது காரணமாகவே என்ன விசித்திர மனப்பான்மைகள் இருந்தனவோ? பொறுமையும், அடக்கப்பட்ட ஆத்திரமும், மனக் கசப்பில் பிறந்த கண்ணீரும் எவ்வளவு இருந்தனவோ?

புதிதாக நாங்கள் வந்த வீட்டில் ஒரு கிணறு உண்டு. நாங்கள் எழுந்திருக்கு முன்பே அம்மா வாளி வாளியாகத் தண்ணீர் சேந்தி நிரப்பியிருப்பாள்; வீட்டைப் பெருக்கி மெழுகியிருப்பாள்; காலைப் பூஜைக்காக எல்லாம் தயார் செய்திருப்பாள்; சமையலும் தொடங்கியிருப்பாள். இவையெல்லாம் இயற்கையில் சர்வ சகஜமாக நடப்பவையாகவே எங்களுக்குத் தோன்றிற்று. அம்மா உடம்புக்கு வந்து படுத்ததாக எனக்கு நினைவில்லை. எப்போதாவது அவள் படுத்துத்தானிருக்க வேண்டும். அவளுக்கு அவ்வப்போது வயிற்றுப் போக்கு ஏற்படுவதுண்டு என்று இப்போது தெரிகிறது. ஆனால் அவள் ஒருபோதும் டாக்டரிடம் சென்றதில்லை; தன் வேலையை நிறுத்தியதுமில்லை. அவள் எப்படிக் குடும்பத்தை நிர்வகித்தாள் என்பது இந்தத் தலைமுறைப் பெண்களுக்கு ஒரு புரியாத புதிராகத்தான் இருக்கும்.

ஒரு நாள் அம்மாவின் காதுகளிலிருந்து இரண்டு கமலக் கம்மல்களும் காணமற் போய்விட்டதைக் கவனித்தேன். அதனால் என் மனத்தில் நேரடியாக மாறுபாடு ஏதும் ஏற்படவில்லை. ஆனாலும் அம்மா சோகமாகத் தோன்றியதும், அவருடைய சிவந்த கண்களும் சிந்தாத கண்ணீரும் என் மனத்தைத் தொட்டன. அந்தக் கம்மல்கள் அப்புறம் திரும்பி வரவேயில்லை. லேவாதேவிக்காரரிடம் அவற்றை அடகு வைத்து மீட்கவே இல்லை என்பதைப் பிற்காலத்தில் தெரிந்துகொண்டேன். இப்படியே காலம் போகிற போக்கில் அம்மாவின் மூக்குப் பொட்டுகளும் மறைந்தன. தங்க ஒட்டியாணம் போனதுதான் எல்லாவற்றிலும் பெரிய அதிர்ச்சி. அதன்போது அம்மா ரொம்பவும் கலங்கிவிட்டாள். அப்பா 'உம்'மென்று உற்சாகமிழந்து இருந்தார். ஆயினும் நாங்கள் அவர்களிடையே வாக்குவாதம் எதையும் கேட்கவில்லை.

நகைகள் ஒன்றன் பின் ஒன்றாக மறைந்த சமயங்கள் தவிர, வாழ்க்கை அமைதியாகவே சென்றது. காலைப் பூஜை, கணவனையும் குழந்தைகளையும் கவனித்துக் கொள்வது. இவற்றைச் சுற்றி ஓர் அமைப்பாகக் கட்டிய வாழ்க்கையை அம்மா நிம்மதியாக நடத்தி வந்தாள். அவள் ஒருபோதும் மனமுடைந்து பச்சாதாபம் கொள்ள அவசியமேற்படவில்லை என்றே நம்புகிறேன். இதுவே தன் கருமம் என்று நினைத்து, சாந்தமாகவும், கௌரவமாகவும் அதனை ஏற்றுக் கொண்டாள்.

அப்பா நடுத்தர வயசிலேயே மாண்டு போனார். அப்போது அவருக்குப் பிராயம் நாற்பத்தி மூன்றுதான். எங்கள் குடும்பம் தலை நிமிர்ந்து பார்க்கத் தொடங்கியிருந்த தருணத்தில் அவர் மறைந்தார். பெரிய அண்ணா சர்வ கலாசாலையில் லெக்சரராகச் சம்பாதித்துக்கொண்டே எம். ஏ. பரீட்சைக்குப் படித்து வந்தான். அடுத்தவன் பீ. ஏ. இரண்டாம் வருஷத்தில் இருந்தான். நான் அப்போதுதான் சர்வ கலாசாலையில் அடியெடுத்து வைத்திருந்தேன். இன்னும் சில ஆண்டுகளில் நாங்கள் எல்லோருமே சம்பாதித்துப் பெற்றோருக்குச் சௌகரியம் செய்து தருவோம் —எங்களுக்காக அவர்கள் வருஷக் கணக்கில் உழைத்த உழைப்புக்கும், சிந்திய வியர்வைக்கும் ஏதோ சிறிது பிரதி செய்வோம் — என்கிற நிலைமை அது. ஆனால் வாழ்க்கை என்பது இவ்வளவு கச்சிதமாக அமைவது அபூர்வமல்லவா? வாழ்வில் நாம் எதிர்பார்க்காத திருப்பம்



களும், புரட்டல்களும் இருக்கத்தான் செய்கின்றன. பிள்ளைகளிடமிருந்து— சிறிது உதவி கிடைக்குமென அப்பா எதிர்பார்த்த சமயத்தில் அவர் எங்களிடமிருந்து பறிக்கப்பட்டார். குடும்பத்தை மனத் தளர்ச்சி சூழ்ந்தது.

ஆனாலும் அம்மா எப்படியோ சமாளித்துக் கொண்டாள். அப்பாவின் மரணம் அவளுடைய உள்ளத்தை நொறுக்கிய அடியாக விழுந்த போதிலும் அவள் மனோதிடத்தை இழக்கவில்லை. பெரிய கூட்டுக் குடும்பத்துக்கு உரிய காரியக் கிரமத்தில் ஈடுபட்டு அவள் எவ்வாறோ சாந்தமாகவும் கண்ணியமாகவும் வாழ்க்கையைத் தொடர்ந்தாள். தன் பெண்களுக்கெல்லாம் கலியாணம் செய்து அனுப்பி வைத்தாள். இதற்கு எப்படிச் சமாளித்தாள் என்பது தெரியவில்லை. அவளுடைய வாழ்வாகவே இருந்த ஒரு பந்தம், திடீரென அணையும் தீபம் போல மறைந்த பின்னும் அம்மா குழந்தைகளைப் பார்த்துப் பார்த்து வாழ்க்கைக்கு நோக்கமும் அர்த்தமும் ஏற்படுத்திக் கொண்டாள்.

அப்புறம் ஒரு நாள் அவளுடைய மூத்த பிள்ளையும் போய்விட்டான்! சில ஆண்டுகளாகவே அவன் தீராத நோயாளியாகி விட்டிருந்தான். ஆனால் எந்த நோயினாலும் மங்கச் செய்ய முடியாத உள்ளத்து ஒளி அவனிடம் இருந்தது. சித்திர வதை செய்கிற நோவுக்கு நடுவே அவன் ஹாஸ்யம் செய்து, அம்மாவையும் எங்களையும் சிரிக்க வைப்பான். ஒரு நள்ளிரவில் நான் விழித்துக் கொண்டேன். அண்ணா தன் நெற்றியைச் சுவரில் அழுத்தியபடி நின்று கொண்டிருந்தான். வீங்கிப்போன இதயம் அளித்த சகிக்கவொண்ணாத நோவிலிருந்து சிறிதேனும் நிவாரணம் பெறுவதற்காக அவன் இப்படி நிற்பதுண்டு. வேறெந்த நிலையிலிருந்தாலும் வலி தாங்காது. அம்மா அவன் பக்கத்தில் உட்கார்ந்திருந்தாள். ''இதற்கெல்லாம் என்ன அர்த்தம் என்பதைச் சீக்கிரத்திலேயே தெரிந்துகொண்டு விடுவேன். அப்படித்தான் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன்'' என்று கூறிய அண்ணா தொடர்ந்தான்: ''ஆனாலும் அம்மா, அன்பு நிறைந்த ஆண்டவன் என்னை ஏன் உன்மீது சுமத்தியிருக்கிறான் என்பதுதான் புரியவில்லை. இப்படி வதையாவதற்கு நீ — எத்தனையோ பேர் இருக்க நீ — என்ன செய்தாய்?'' அம்மாவின் கண்களிலிருந்து நீர் வழிந்தது.

நான் விழித்துக் கொண்டதை அவன் கவனித்து விட்டான். உடனே ஏதோ ஹாஸ்யம் செய்தான். என்னருகே வந்து அமர்ந்தான். சிறிது போதில் நான் மீண்டும் தூங்கிப் போனேன்.

அண்ணா மாண்டு போன பிறகு வாழ்க்கைக்கு ஓர் அர்த்தமுமே இல்லாமல் போய் விட்டது. அம்மா துயரத்தையும் வறுமையையும் வருஷக்கணக்காக வாய் திறவாமல் சகித்துக் கொண்டிருந்ததோடு மட்டுமல்ல; சர்வசக்தனான பகவான் விதித்தபடியே தன் வாழ்க்கை நடக்கிறது என்ற அழுத்தமான நம்பிக்கையும் கொண்டிருந்தாள். அப்படிப்பட்டவள் இப்போது வாழ்க்கையில் வெறுமையைத்தான் கண்டாள்; நோகச் செய்கிற ஒரு சூனியத்தைத்தான் கண்டாள். மற்றப் பெண்களும் பிள்ளைகளும் இருக்கவே செய்தனர்; பேரக் குழந்தைகளும் இருந்தனர்; எத்தனையோ பண்டிகைகளும் கலியாணங்களும் வந்து போயின; எங்களால் இப்போது அவளுக்கு எத்தனையோ இகவுலக சௌகரியங்கள் செய்து தர முடிந்தது — சேவகர்கள், மோட்டார் கார்கள் இத்தியாதியுடன் பெரிய மாளிகையில் அவள் வசித்தாள். ஆனால் இதிலெல்லாம் அவள் ஒரு பொருளையும் காணவில்லை. தன்னுடைய அந்தராத்மாவுக்குள்ளேயே அவள் மேன்மேலும் தன்னை இழுத்துக் கொண்டாள்.

1945ம் ஆண்டில் நான் ஏதோ அரசாங்கக் காரியமாக அமெரிக்காவுக்குச் செல்வதாக இருந்தது. நான் அப்போதே தில்லியின் 'ஸீனியர்' அதிகாரிகளில் ஒருவன் என்று சொல்லலாம். என் முக்கியத்துவத்தைப் பற்றி மிகவும் பெரிதாக நினைத்து வந்தேன். அமெரிக்காவில் நான் செய்யவிருந்த பணி மகத்தானதாக எனக்குப் பட்டது. அச்சமயத்தில் அம்மாவிடமிருந்து ஒரு போஸ்ட் கார்ட் வந்தது. அமெரிக்கா போகு முன்பு நான் அவளைப் பார்க்க வேண்டுமென்று கேட்டிருந்தாள். என் வாழ்நாள் முழுவதிலும் அம்மாவே எனக்குக் கைப்பட எழுதிய கடிதம் இது ஒன்றுதான். மற்றப் பிள்ளைகளை அல்லது பெண்களைக் கொண்டே இதுவரை அவள் எனக்கு எழுதி வந்திருக்கிறாள்.

அப்போது என் பணியின் முக்கியத்துவத்தைப் பற்றி நிரம்பிப் போயிருந்தேன் அல்லவா? எனவே, 'அவசர ஜோலிகள் இருக்கின்றன. அவற்றைக் காலம் தாழ்த்துவதற்கில்லை. அமெரிக்காவிலிருந்து திரும்பியபின் உன்னை வந்து பார்க்கிறேன்' என்று அம்மாவுக்கு எழுதினேன்.

நான் வாஷிங்டனைச் சென்றடைந்த அன்றே 'கேபிள்' வந்தது — அம்மா போய் விட்டாள் என்று.

அன்றைய தினமும், அம்மா எழுதிய கடிதமும், இடைக்காலமெல்லாம் அவள் என் மீது பொழிந்திருக்கக்கூடிய அன்பும் என் நெஞ்சில் அழுத்தமான நினைவுகளாக நிற்கின்றன. நான் முன்னேற்றம் கண்ட போதெல்லாம் அவள் எப்படி யெப்படி மகிழ்ந்திருப்பாளோ? எனக்கு ஒரு நோய் நொடி வந்த போதோ, மனத்தளர்ச்சி ஏற்பட்ட போதோ அவள் எப்படி எப்படித் துயர முற்றிருப்பாளோ? இருந்த போதிலும் அவள் உயிர்விடுகிற தருவாயில் என்னை நினைத்திருக்கமாட்டாள் என்பது நிச்சயம். அம்மா பூரண அமைதியுடன், சாந்தியுடன், கம்பீரத்துடன் கண்ணை மூடினாள் என்று சொல்கிறார்கள். உயிர் போவதற்குச் சற்றே முன்னதாக அவள் பார்வை யாரையோ, அல்லது எதையோ தேடியதாம். சுற்று முற்றும் கண்களைச் சுழல விட்டாளாம். ஆயினும் தான் தேடியதை, அல்லது தேடியவரைக் காணாத பாவனையிலேயே உயிர் விட்டாளாம். ஆண்டாண்டுகளுக்கு முன்பு மறைந்த அகத்துக்காரரைத்தான் அவள் தேடினாளா? அல்லது தன் மூத்த மகனையே தேடியிருப்பாள் என்பது அதைவிடச் சரியான அனுமானமாக இருக்கலாம். அவனை அவள் காணவில்லை; நிதானமாக நெடுமூச்செறிந்தாள்; மறைந்து போனாள்.


இந்தத் தீபாவளிக்கு
உங்களை மகிழ்விக்க
மேலும் 3 புதிய மர்பி மாடல்கள்
மாடல் டிஏ 0926
மாடல் டிஏ/டியு 0775
மாடல் டிபி 0816
தேர்ந்தெடுக்க
மேலும் பல மாடல்கள்.
உங்கள் அருகாமையிலுள்ள
மர்பி டீலரைப் பாருங்கள்.
பி.ஆர். பிலிம்ஸ்
'வக்த்' என்னும்
படத்தின் நடிகை
ஷர்மிலா தாகூர்.
murphy radio
Murphy sets the standard

சுடரே...

அருட் பெருஞ் சுடரே

இச் சுடரொளியே உங்கள் வருங்கால இன்ப
வாழ்வுக்குக் குறிசொல்லும் நல்லொளியாய்த்
திகழுவதாக; ஆவல்கள் நிறைவேறி உங்கள்
அகம் மகிழக் காணும்
அருளொளியாய்த் திகழுவதாக!



OT. (Sp.) 24 TM

Greens' Advtg.

மானுடம் வென்றதம்மா

[திருப்பாற்கடலில் ஆதி பரம்பொருளான நாராயணன் லக்ஷ்மியோடு கூட வீற்றிருக்கிறார். சூரியன் உதிக்க இருக்கிறான். தேவர்கள் மாலவனைத் தரிசிக்க வரும் சமயம்.

லக்ஷ்மி: தேவா! இன்று நரகாசுரனை வதம் செய்து பூவுலகுக்கு அருள் தந்த திருநாளாக எங்கும் கொண்டாடுகிறார்கள். நன்மைசெழித்திட, நலம் பொங்கிடத் தாங்கள் மாந்தருக்கருளிய நன்னாள் அல்லவா?

நாராயணன்: என்ன தேவி, ஏதோ பெரிதாகப் பீடிகை போடுகிறாயே!

லக்ஷ்மி: இந்த நன்னாளில் எனக்கு ஒரு விஷயம் நினைவுக்கு வருகிறது. வெகு நாட்களாகத் தங்களைக் கேட்க வேண்டுமென்று...

நாராயணன்: அதென்ன, அப்படி நீ கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயம்?

லக்ஷ்மி: களங்கமற்ற ஜோதி ஸ்வரூபியான தாங்கள் ராமனுகத் தோன்றியபோது வாலியை மறைந்து நின்று கொன்றது ஏன்?

நாராயணன்: களங்கம் நிறைந்த மனித உருவம் எடுத்ததால்தான்.

லக்ஷ்மி: நான்மட்டும் தங்களருகில் இருந்திருந்தால் குற்றத்தை விசாரிக்காமல் முன் பின் அறியாத ஒருவனைக் கொல்ல இடம் தந்திருக்கமாட்டேன். வழக்கம்போல் வாதாடியிருப்பேன்.

நாராயணன்: நீ என்னருகில் இருந்திருந்தால் இந்தப் பேச்சே இருந்திருக்காதே. நான் ஏன் சுக்ரீவனைத் தேடிச் செல்ல வேண்டும்? அவன் உதவியை நாடி அவன் அண்ணனைக் கொல்ல வேண்டும், உலக அபவாதத்துக்கு ஆளாக வேண்டும்?

லக்ஷ்மி: இல்லை, ஒரு பேச்சுக்குச் சொன்னேன். அந்த நிகழ்ச்சி தங்கள் பெருமைக்கே இழுக்குண்டாகும்படியாக அமைந்து விட்டதே!

நாராயணன்: என்ன செய்வது? மனிதப் பிறவி எடுத்ததாலே வந்த வினை அது!

லக்ஷ்மி: அப்படியென்றால்?

நாராயணன்: வேறு எந்த அவதாரத்திலாவது நாம் நமது சக்தியை மறைத்தோமா? அல்லது அதை உணராதது போல் நடந்து கொண்டோமா? இந்த ராமாவதாரத்தில் தானே மானிடராய்த் தோன்றினோம்?

லக்ஷ்மி: ஆமாம்; அதற்காக மனிதரில் மேன்மை இல்லை என்று கூறிவிட முடியுமா? மறைந்திருந்து கொல்வது அதர்மம் என்று அவர்களும் நம்புகிறார்களே!

நாராயணன்: ஆயினும் மனித உள்ளம் புயல் நிறைந்த கடல் போன்றது. மறைந்து கொன்றதை மட்டும் தனித்துப் பார்த்தால் அநீதியென்ற ஒரு முடிவுதான் நிற்கும். வாலியை அம்புகொண்டு வீழ்த்திய நிலையில் என் மனத்தில் எத்தகைய போராட்டம் நடந்துகொண்டிருந்தது தெரியுமா?

லக்ஷ்மி: போராட்டமா?

நாராயணன்: ஆம். மனைவியைப் பிரிந்து, 'அவள் எங்கிருக்கிறாள், உயிருடன் இருக்கிறாளா?' என்று இராப்பகலாய்த் தவித்து நிற்கிற ஒரு நேரம்; தெய்வமே போல் உதவி செய்ய முன் வருகிறான் ஒருவன். காட்டிலே பித்துப் பிடித்தவன்போலத் திரிகின்றவனுக்கு உதவி செய்ய முன்வந்த சுக்ரீவனுக்கு என்ன தான் செய்யக் கூடாது?

அந்தச் சுக்ரீவனும் எப்படிப்பட்டவன்? என்னைப் போலவே நாட்டை



கே. எஸ். ஸ்ரீநிவாஸன்

-ஸாகர்-

இழந்து, மனைவியை இழந்து, ஊருக்கு வெளியே பயந்து ஒளிந்து வாழும் அகதி. இருவரும் ஒருவரோடு ஒருவர் நட்புப் பூண்டு, ஒருவரையொருவர் பார்க்கும்போது நிலைக் கண்ணாடியில் தன் உருவத்தைக் கண்டது போன்ற உணர்ச்சி ஏற்படுவது இயல்புதானே?

லக்ஷ்மி: பிரபோ, மனிதனும் நடிப்பது கடினம்தான். ஆயினும்......

நாராயணன்: சற்றுப் பொறுமையுடன் கேள். சுக்ரீவனைக் கேட்டேன், 'என்ன நடந்தது?' என்று. அவன் தன் கதையைச் சொல்லச் சொல்ல என் கண் முன் தோன்றியதெல்லாம் என் வாழ்க்கைச் சம்பவங்கள்தான். என் கஷ்டங்களை அவன் பேசிக் கொண்டே போனான். வாலியென்பவனை நான் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை. 'என் மனைவியை அபகரித்தான் வாலி' என்று சுக்ரீவன் மீண்டும் மீண்டும் கதறினான். அந்த வாக்கியம் ஒவ்வொரு முறையும் என் ஜானகியைத்தான் எனக்கு நினைவூட்டியது. கைகள் துடித்தன; நெஞ்சில் ஆக்ரோஷம் கிளம்பியது. இந்த அவமானத்தைப் பொறுக்க முடியுமா? ''மனைவியை அபகரித்தவனை இன்றே கொல்லுவேன்'' என்று ஆணையிட்டேன். என் கண் முன் நின்ற எதிரி இராவணன்.

பாவம், சுக்ரீவன் சற்றுத் திடுக்கிட்டான். உண்மையில் வாலியைக் கொல்லும்படி அவன் வேண்டவில்லை. அண்ணனும் தம்பியும் கை கலந்து சண்டையிலிருக்கையில் என் மனத்திலும் ஒரு போர். 'என்ன சொன்னாலும் இவன் என் பகைவனல்லவே?' என்ற எண்ணம் மீண்டும் மீண்டும் என்னைத் தடுத்து வில்லில் கையைத் தளரச் செய்தது. பாணத்தை வீசவில்லை.

லக்ஷ்மி: இடையிடையே தெய்வீகமா?

நாராயணன்: இல்லை தேவி, இல்லை. மனித உள்ளத்தில் மங்கிக் கிடக்கும் உத்தமமான அம்சம் - தர்மத்துக்கு அஞ்சுவது.

லக்ஷ்மி: இரண்டாவது முறை மறுபடியும் ஏன் சுக்ரீவனைத் தூண்டியனுப்பினீர்கள் மல்லுக்கு?

நாராயணன்: 'இன்றே கொல்லுவேன்' என்ற பிரதிக்ஞைதான் அதற்குக் காரணம்.

லக்ஷ்மி: ஆயினும் தர்மமூர்த்தியான...

நாராயணன்: தர்மம்! உயிரினும் அரிய பத்தினியைப் பறி கொடுத்தவனுக்குத் தர்ம நீதி கூறுவது, பிரிவு என்ற அனுபவம் கண்டிராத மக்கள் செய்யும் மடமை. மனைவியை அபகரித்தவன் கண்ணெதிரில் வந்தால் அவனைக் கண்ட துண்டமாய்ச் சிதைக்க வேண்டுமென்றுதான் உள்ளே இருந்து ஆத்திரம் நிறைந்த சக்தி கூறும். அத்தருணம் அறிவுக்கெட்டாத முறையில் நொடிப்பொழுதில் எல்லாம் நடந்து விடும். நியாய விசாரணைக்கு அது சமயமன்று.

லக்ஷ்மி: என்ன உணர்ச்சி வேகம்!

நாராயணன்: ஆம். இதுதான் மனிதத் தன்மை. அம்பு பட்டு விழுந்த வாலிக்கு ஏதோ ஆறுதல் சொன்னேன். ஆனால் அவன் கேட்ட கேள்விக்குப் பதிலில்லை. எவன் மேலோ கரு வைத்து வேறொருவன் மேல் அதைக் காட்டினால் அதற்கு என்ன சமாதானம் சொல்ல இயலும்? என் நிலையை நன்கு உணர்ந்தவன் வாலிதான். 'தேவியைப் பிரிந்த பின்னர் நியங்கிலே போதும் செய்கை' என்று இடித்துக் காட்டினான்.

லக்ஷ்மி: இவ்வளவு மனப்புயலும் என் நினைவினால்தானே? ஏன் புன்னகை? 'ஆம்' என்று வாயால் சொல்லக்கூடாது போலும். அப்படியிருக்க அந்த மண்டோதரி மணாளனைக் கொன்ற வெற்றி நிலையில் என்னையே நிராகரிக்க எப்படி மனம் துணிந்ததோ?

நாராயணன்: மறுபடியும் 'நான், நீ' என்ற நினைவுடன் பேசுகிறாயே தேவி? மனித இயல்புடன் போர்க் களத்தில் நின்ற மனிதனும் என்ன நினைத்துப் பேச. கொடியவனைக் கொன்று தீர்க்க வேண்டி ரத்த வெறி தாக்கி நின்றது. பழிக்குப் பழி வாங்கி, அவமானத்தைப் போக்கத் துடித்தது என் தேகம். வெல்வதற்கரிய வீரன்; அவனை வென்று நிலை புரண்டு ஓடும்படி செய்துவிட்டேன். அந்நிலையில் எனக்கு ஒன்றுமே வேண்டியிருக்கவில்லை. இருதயம் சூன்யமாயிருந்தது. செயற்கரிய செய்து முடித்தால் மனமும் மதியும் இருண்டு நிற்கும்.

உன்னை என்னெதிரில் கொண்டு வந்து அலங்காரக் கோலத்தில் நிறுத்தினர். கண்கள் உன்னைப் பார்த்தன. ஆனால் நான் கண்டது வேறு. ஒன்றன் பின் ஒன்றும் அயோத்தியிலிருந்து வெளியேறிய நாள் முதல் அக்கணம் வரையில் நடந்த நிகழ்ச்சிகள் அனைத்தும் தோன்றின. எத்தனை இன்னல்கள், என்ன அலைச்சல்? கண்ட பேரிடமெல்லாம் என் கதையைக் கூறி, கண்டவரையெல்லாம் உதவி வேண்டி – எத்தனை அவமானம்!

லக்ஷ்மி: விந்தைதான்! அபலையாய் நின்ற பெண்ணை ஒரு துராத்மா வஞ்சனை செய்து தூக்கிச் சென்றானே, அது உங்கள் மனத்தை உறுத்தவில்லையா? மிதிலைக்கு வரு முன்னே அகலிகையிடம் தாங்கள் காட்டிய கருணை என்ன? அதில் ஒரு பங்கு கூடக் கரம் பற்றிய மனைவியிடம் காட்டாதது ஏனோ? விந்தைதான்.

நாராயணன்: கடைசிவரை மனித குணத்தையே கைப்பிடித்தேன், ராமனாய்த் தோன்றி. ஆனால் நீதான் உன் பிரதிக்ஞையை மறந்து சுயசக்தியைக் காட்டி விட்டாய்.

லக்ஷ்மி: பிறர் முன்னிலையில் கணவனின் குற்றச்சாட்டை விடக் கொடியதொன்று உண்டா? ராவணன் கூறிய தினத்தையும் விட அருவருப்பான அந்தப் பேச்சைக் கேட்டுத் தீயில் விழாத மனைவி என்ன பெண்?

நாராயணன்: அதைச் சொல்லவில்லை. மானிட உலகில் பலர் தம் விரதத்தைக் காக்கத் தீக்குளித்து எழுகின்றனர். இன்றும் நடக்கிறது. ஆகையால் நீ செய்த வேள்வி ஒரு விந்தையாகுமோ? ஆனால் லவ குசர்கள் பிறந்த பின் வால்மீகி ஆசிரமத்திலிருந்து வந்து தவ கோலத்தில் என் முன் ராஜ சபையில் நின்ற போது....

லக்ஷ்மி: நன்றாய் யோசித்துப் பாருங்கள். மறுபடி அதே சந்தேகம், அதே வியாகுலம் நிறைந்த முகம். மீண்டும் என்னைச் சான்று கேட்டீர்களல்லவா?

நாராயணன்: ஆம், தேவி, கேட்டேன். வாழ்நாள் முழுதும் நீடித்து நிற்கும் அந்த மனப்பான்மையென்று சொல்லவில்லையா? பக்தி வெள்ளத்தில் மூழ்கடித்தாலும் சந்தேகம் என்னும் மாசு மனித உள்ளத்தில் ஏறிவிட்டால் பின்பு அகலாது. சரி, நான் சான்று கேட்டேன். நீ என்ன செய்தாய்? பூமி வெடிக்கச் செய்து அதனுள் மறைந்து மானிடரெல்லாம் வியக்க மாயமானாய். இது மனித சக்தியா, தேவி?

லக்ஷ்மி: அச்செயலில் தங்களுக்குத் தெய்வ சக்தி தோற்றமளிக்கிறதா, தேவா? இரவு பகல் தவம் கிடக்கும் பெண்ணுக்கு அவள் கணவனே கதி. அவனே தெய்வம். அவனே சந்தேகிப்பவன் போல் வெறித்துப் பார்த்தாலே துடிப்பாள். நெறி தவறியவளெனத் தீர்மானித்துப் பலர் முன்னிலையில் கணவன் விவரித்துப் பேசினால் எந்தப் பெண் பொறுப்பாள்?

இலங்கையில் தீக்குளித்து எழுந்த என்னை ஏந்தியணைத்து, 'இவள் மாசற்றவள், நான் அறிவேன்' என்று உலகறியக் கூறிய தாங்கள் மறுமுறை அயோத்தியில் சான்று கேட்டது மனித குணம். ஆனால் மீண்டும் மீண்டும் சான்று காட்டியே வாழவேண்டிய தாம்பத்ய வாழ்க்கையை விரும்பாதது பெண் குணம்!

நாராயணன்: அப்படி விரும்பாதது சரிதான். ஆனால் பூமி பிளக்கச் செய்தனையே, அதல்லவோ அதிமானுஷ்யம்?

லக்ஷ்மி: நானு பிளக்கச் செய்தேன்? புயல், மனப் போராட்டம், ஆக்ரோஷம் எல்லாம் மனிதனுக்கு மட்டும்தானா? உண்மைக்கொரு சான்று கேட்கும் கணவன் வாய்த்தால் அப்பெண் என்ன செய்வாள்? எவனைத் தெய்வமாய் நினைத்து ஒவ்வொரு கணமும் வாழ்கின்றாளோ, அவனையே சான்று காட்டுவாள். ஆம், அவளுக்கும் அதுதான் சான்று.

நாராயணன்: அதற்காகவா பூமி பிளக்கத் துணிந்தாய்? பிரதிக்ஞையை மறந்து, உறுதி தளர்ந்து சுய சக்தியை யல்லவோ காட்டிவிட்டாய்? தோல்வி தேவி, தோல்வி.

லக்ஷ்மி: தோல்வியா? இதுவே வெற்றி நாராயணா. பூமி பிளந்தது ஏன் என்று என்னையா கேட்கிறீர்கள்? கற்புக்கொரு வலிமையளித்தது யார்?

''கணவன் மேல் எனக்குள்ள அன்பு உண்மையானால், அவனையன்றி ஒருவனைக் கனவிலும் நினைடாதது உண்மையானால், பூமி தேவியே! எனக்குச் சான்று கூறுவாய்'' என்று வாய் விட்டுக் கதறினேன். அந்த ஆணைக்கு எங்கிருந்து வந்தது பலம்? கணவன்மீதிட்ட ஆணை பூமியைப் பிளந்தால் அதில் தெய்வ சக்தி தோற்றுகிறதா? கண்ணகி பிறந்த நாட்டில் இதற்குத் தெய்வீக சக்தி யளித்தது யார் நாராயணா?...... ஏன் மௌனம்? தோல்வி யாருக்கு?


நாராயணன்: ஆம், தேவி. ஆனால் அத் தெய்வீக சக்தியை உணர்ந்துகொள்ளாமலே கடைசிவரை இருந்தேனே ராமனாக, அதுதான் மனித இயற்கை.

லக்ஷ்மி: என்ன நடிப்பு! உண்மையிலேயே மானுடம் வென்றதம்மா! 'கூடநாடக சூத்ரதாரி' என்ற பட்டம் வேறு எங்கோ கிடைத்ததென்று நினைத்தேன். பேஷ்! பிறந்தது முதல் கடைசிவரை மனிதனாகவே நடித்த இந்த விசேஷத்தை மானிடர் அறிவரோ?

நாராயணன்: மனித இயற்கைதான் உனக்குத் தெரியுமே!


செம்பவள இதழழகி! சேல்போன்ற விழிஅழகி!
K·T·R
கோபுர மார்க் பன்னீர்
பொன்னாங்கண்ணித் தைலம்
சந்தன பேஸ் பவுடர்
ஊதுபத்திகள்·ஓமவாட்டர்
K.T.R. வாசனாதி திரவியசாலை
விஜயபுரம் · திருவாரூர் · தமிழ்நாடு
சென்னை நகர பூரண விநியோகஸ்தர்கள்: ஸ்ரீ ரகுநாத் ஏஜன்ஸீஸ்
35, மங்கபதி நாயக்கன் தெரு (போன்: 88223) சிந்தாதிரிப்பேட்டை, சென்னை - 2

'ஸீ பீ'



மிகச் சிறந்த

லிக்விட்

ஸாக்கரின்

இரு துளிகள் மட்டுமே!


அருந்திய பின்பும் கசப்பு கிடையாது

உங்கள் பானத்துக்கு இனிப்பூட்ட இரு துளிகள் 'ஸீ பீ' போதும்-ஆம், இனிப்புக் குவியலான ஸாக்கரினாயிற்றே! மாத்திரை, பவுடர் போலின்றி 'ஸீ பீ' திரவரூபத்திலிருப்பதால் விரைவில், எளிதாகக் கரைகிறது. 'கரையட்டும்' எனக் காத்திருக்கத் தேவையில்லை.

உங்கள் அபிமான ஸாக்கரின் ஒழுகவே முடியாத புதுமாதிரி சீசாவில் தற்போது வருகிறது. கையோடு எடுத்துச் செல்லவும் உபயோகிக்கவும் வாகானது.



கார்ன் பிராடக்ட்ஸ் கோ., (இந்தியா) பிரை. லிட்.,


உலகெங்கும்
ஏற்கப்படுகின்றன!
ஓரியண்ட்
விசிறிகள்
ஓரியண்ட் ஜெனரல் இண்டஸ்ட்ரீஸ் லிட்.
கல்கத்தா - 54

"சுவர்க்கம் என்ற இன்ப உலகம் வெறும் கற்பனையல்ல. அதுவே இறுதியான உண்மை. அதில் எல்லாப் பொருட்களும் பொதிந்துள்ளன. அதனை நோக்கியே யாவும் வளருகின்றன. இந்த இலட்சியத்தில் நான் நம்பிக்கை வைத்துள்ளேன். இச்சுவர்க்க இலட்சியம் இம் மண்ணுலகைச் சூழ்ந்துள்ளது; அதன் உள் ஊறிப் புகுகிறது என்று நம்புகிறேன். சூரிய ஒளியிலும், புவியின் பசுமையிலும், பாய்கின்ற நீர்ப் பெருக்குகளிலும், மானுட முகத்தின் சௌந்தரியத்திலும், மானுடர்களின் அன்புச் செல்வத்திலும் இந்தச் சுவர்க்க தரிசனம் காணக் கிடைக்கிறது என நம்புகிறேன். இந்த மண்ணுலகில் எங்கெங்கிலும் சுவர்க்கத்தின் உயிர் விழித்துக் கொண்டிருக்கிறது; தனது குரலை எங்கெங்கும் பரப்பிக் கொண்டு இருக்கிறது. நாம் அறியாமலே நமது அகச் செவியை அது அடைகிறது. நமது வாழ்வெனும் யாழுக்கு அதுவே சுருதி கூட்டுகிறது. மலர்கள் தமது மணத்தையும், பட்சிகள் தமது கானத்தையும் ஆகாய வீதிக்கு அனுப்புவது போல், நாமும் நமது ஆதரிச ஆசைகளை ஆகாய வீதிக்கு அனுப்ப வேண்டும் என்று சுவர்க்கத்தின் உயிர்ப்பு நம்மை உந்துகிறது."

(தாகுர் : "Thought Relics and Stray Birds")

"வேறேதோ உலகின் சூரியோதயத்தில் நான் உனக்கொரு கீதமிசைப்பேன்: 'பூவுலகின் ஒளியிலும், மனித குலத்தின் அன்பிலும் உன்னை நான் முன்பே கண்டிருக்கிறேன்' என்று கீதமிசைப்பேன்."

(தாகுர் : "Thought Relics and Stray Birds")



அருங்கவி கண்ட ஆன்மிக சமயம்

இன்றைய நிலைமையில் சமயத்துக்கும் சர்வ தேச சமூக வாழ்வுக்குமுள்ள தொடர்பை எண்ணிப் பார்க்கிறோம். பிரார்த்தனை மயமான ஒரு வாழ்வோடு, சுதேசியத்துக்கு மேம்பட்ட சர்வதேச சமுதாயப் பிரஜையின் நிறைவுற்ற பொறுப்புக்களை இணைத்து வாழ்ந்த ஆன்மிக புருஷரைப் பின்பற்றுவது இப்போது பொருத்தமாகும். ரவீந்திர நாத தாகுர் இப்படிப்பட்ட ஒரு வியக்தி. கலைகளுக்கும், இலக்கியத்துக்கும், நவீனக் கல்விக்கும், பற்பல பண்பாடுகளிடையே பாரம்பர நல்லெண்ணம் உண்டாவதற்கும் அவர் புரிந்த பணிக்கு மனித குல ஒருமைப்பாட்டில் அவர் கொண்டிருந்த நம்பிக்கையே உறுதுணையாக இருந்தது.

மனித குலத்தின் ஒருமைப்பாட்டுக்காக ஒரு புது யுகம் உதிக்குமெனத் தாம் கொண்டிருந்த நம்பிக்கையை வெளிப்படுத்த விரும்பிய இந்தக் கவி-ஞானி பெருத்த இடையூறுகளை எதிர்த்து அரை நூற்றாண்டுகளுக்கு மேல் போராட வேண்டியிருந்தது. அவர் உன்னதமான இலக்கியத்தைச் சிருஷ்டி செய்தவர் மட்டுமல்ல. தேசபக்தராகிய அவர் தமது தீர்க்கதரிசனத்தைக் கொண்டு கிராம முன்னேற்றத்துக்கான நடைமுறைத் திட்



டாக்டர் அமிய சக்கரவர்த்தி

டங்களை வகுத்தார். அவரது ஆழ்ந்த சமய திருஷ்டி சமூக நலன்களுக்கு உதவி புரிந்தது. மேற்கு – கிழக்கு இரண்டின் வெவ்வேறான பெருமைகளையும் உலகின் முன்னேற்றத்துக்காகப் புது முறையில் இணைத்து வரவேற்றவர் அவர். இதன் மூலம் இந்தியாவின் புதிய விழிப்புக்கு ஓர் உதாரணமாகத் திகழ்ந்தார். வாழ்நாள் முழுதும் தாகூரின் நண்பராக இருந்த மகாத்மா காந்தி அவரை 'குருதேவர்' என்று அழைத்தார். இந்தியாவிலும் (வெளிநாட்டிலும்கூட) லட்சக் கணக்கானவர்கள் அவரை ஓர் ஆசாரியராகவும் ஆன்மிகத் தலைவராகவும் ஏற்றனர். சமயத்தைக் குறித்துச் சாரமான வாழ்வு வாழ்ந்த அவர் கொண்டிருந்த கருத்துக்களைப் பரிசீலிக்க வேண்டியது இன்றைய சூழ்நிலையில் அவசியமாகும்.

அவர் தம்மைத் தத்துவஞானி என்று சொல்லிக் கொள்ளவில்லை ; கலைஞராக இருப்பதிலேயே திருப்தி கண்டவர் அவர். எனினும் வாழ்க்கையைப் பற்றிய அவரது தத்துவ ரீதியில் அமைந்த சிந்தனைகள் நமது காலத்தின் அடிப்படைப் பிரச்னைகளைத் தொடுகின்றன. இந்தியாவின் புராதன மரபுகளில் அவர் ஆழ வேரோடியிருந்தாரெனினும், மற்ற நாகரிகங்களின் சிறப்புக்களை ஏற்கும் திறன் பெற்றிருந்தார். ஆசியாவிலும், மேல்நாடுகளிலும் சுற்றுப் பிரயாணம் செய்து பல சமயப் பண்பாடுகளுடன் தொடர்பு கொண்டார். மனித குலத்துடைய ஒரு பூரணமான சகாப்தத்தின் சிந்தனைகளுடனும் அபிலாஷைகளுடனும் அவரது வாழ்வு பின்னிப் பிணைந்திருந்தது. உலகப் பொதுத் தத்துவங்களைத் தம்மொருவரின் பண்பு, நமது நாட்டின் தனிப் பண்பு இவற்றுக்கும் பொருத்தி வெளியிட்ட அவர் ஆன்மிகம் நிரம்பிய கலைஞர். தனித்தன்மை பொருந்தியவற்றில் பொதுத் தன்மைகளைக் கண்ட அவரது ஆழ்ந்த அநுபவம் மொழி, நாடு ஆகிய எல்லைகளைத் தாண்டித் தனது பொருளை விளக்கிக் கொண்டது.

மனிதனின் மதம் என்று அவர் கூறியது கட்டுக்கோப்பான ஓர் அமைப்பு. ஆனால் இந்த ஒருமைப்பாட்டுக்குள்ளேயே பெரிதும் மாறுபட்ட அம்சங்கள் அடங்கியிருந்தன. அந்தக் கருத்துக்களில் சிலவற்றை ஆராய்வோம்.

"ஆண்டவன் என்னைக் காண ஆசைப்படுகிறான் — ஆனால் அவனது சேவகனாக அல்ல; அனைவருக்கும் சேவை செய்பவனாகவே."

(தாகூர் – Fireflies)


இருபதாம் நூற்றாண்டின் கவியும், ஞானியுமான தாகூர் மனித சமுதாயத்தைப் பாடியவர். நமது தனி வாழ்வுகள், சமுதாயக் கூட்டு வாழ்வு இரண்டிலும் தூய்மையைக் காப்பதால் பெறக் கூடிய வாழ்வின் பூரணத்துவத்துக்கு தாகூரது கவிதை ஒரு மூர்த்தியாகும். நமது தனி வாழ்வுகளுக்குச் சௌந்தரியமும், சத்தியமும் வழிகாட்டிகளாக அமைவதற்கு அநுமதிப்போமாயின் மனித சமுதாய வாழ்வோடு மகத்தான பிரபஞ்ச வாழ்வின் அழகும் தருமமும் இழைந்து விடும். ஸயன்ஸின் சாதனைகளும், தொழில் நுணுக்க முன்னேற்றமும், கல்வியின் அறிவுப் போக்குகளும் நமது அக வளர்ச்சிக்கும், மனித சமுதாயம் முழுவதன் நலனுக்கும் எவ்வாறு பயனுறும் என்பதிலேயே அவர் கவனத்தைச் செலுத்தினார்.

"மோட்டாரிலும், ஸ்டீமரிலும், ரயிலிலுமாக நான் உலக முழுவதிலும் வேகமாகச் சுற்றுகிறேன். இதில் நான் முக்கியமாகக் கருதுவது எதனை? இதனைவிடப் பெரிய உலகமாகிய கலை, சம்பாஷணை, நூல்கள் ஆகியவற்றில் நான் சஞ்சரிப்பதில் என்ன காண்கிறேன்? இவை மனித வாழ்வை விசாலமாக்குகின்றனவா, குறுக்குகின்றனவா என்பதிலேயே முக்கியமாகக் கவனம் செலுத்துகிறேன். இவை யாவற்றுள்ளும், இவை யாவற்றின் மூலமும், இவை யாவற்றாலும், இவை யாவற்றோடும், இவை யாவற்றின் மீதும், இவை யாவற்றைக் கடந்தும் நான் எப்படி வாழ்வைப் பிணைத்துக் கொள்வது?"

(தாகூரின் ஒரு கடிதம்)

நவீன ஸயன்ஸின் பலாத்கார முன்னேற்றத்துக்கும், தார்மிக – ஆன்மிகத் திருப்திக்குமிடையே ஒரு சமன்பாட்டைக் காண விழைந்தார் தாகூர். மனித வாழ்வின் சாரமான சமயச் சூழ்நிலை எல்லா நாகரிகங்களிலும் உறைந்துள்ள மரபுகள் ஆக்குகின்றன என்று அவர் கருதினார். எனவே மக்கள் அந்த மகத்தான மரபுகள் யாவற்றிலும் பங்கு கொண்டு அனைவருடனும் ஒத்த உணர்ச்சியை வளர்த்துக்கொள்ளவேண்டுமென வலியுறுத்தினார். நமது அன்றாட அநுபவம் என்கிற பொதுஅடிப்படையின் மீதே சமயத்தைச் சமைத்துக் கொள்ள வேண்டும்; ஆண்டவனோடும், அவனது உலகத்தோடும் நம்மை நேரடியாக இணைக்கும் அநுபவங்களின் மூலம் வெளிப்படும் தெய்விக வாழ்வின் சர்வ வியாபக சக்தியை நாம் ஒப்புக் கொள்ள வேண்டும். இயற்கையின் அழகுக்குள் தீர்க்க திருஷ்டி செலுத்தி அதனுடன் உயிர்த் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டு, இயற்கை விதிகளுடன் இயைந்து வாழ்வதே ஆன்மிக வாழ்வுக்கு ஊட்டமளிக்குமென தாகூர் கருதினார். சர்வதேச சகவாழ்வை உயர்த்திக் காட்டும் சங்கீதம், கலை, சடங்கு, சம்பிரதாயம் இவை யாவற்றுக்கும் அவரது மதத்தில் இடமுண்டு. ஆன்மிக வாழ்வின் அடித்தளம் இங்கேயே உள்ளது என அவர் கருதினார். நானாவிதமான மானுடத் தொடர்புகளிலுள்ள ஆனந்தமும் அவர் கூறும் ஆன்ம வாழ்வின் அங்கமாகும். இந்தத் தொடர்புகளின்மூலமே உலகமென்பது அனைவரும் சந்திக்கும் பொதுக்களமாக ஆகும். தெய்விகம் பொருந்திய மனித குலத்தின் பொதுவான ஆலயத்துக்கே மேல்நாடுகளிலிருந்தும், கீழ்நாடுகளிலிருந்தும் மனிதன் மாறுபட்ட காணிக்கைகளைக் கொண்டு வருகிறான்.

அகில உலகுக்கும் பொதுவான ஒரு பரம்பரைச் சொத்து உள்ளது என்ற உண்மையை சமயம் என்கிற அமைப்பு எவ்வாறு ஏற்றுக் கொள்ளும்? நாம் கூடிச் செய்கிற வழிபாடு, தனித்துச் செய்கிற பிரார்த்தனை இவற்றோடு முதிர்ந்த அறிவையும், தூய கவித்துவ மனோதருமத்தையும் இணைப்பது எவ்வாறு? இவற்றையே தாகூர் சிந்தித்தார். யாவும் தழுவும் சமயத்தையே அவர், 'கவியின் மதம்' என்று அழைத்தார். 'மனிதனின் மதம்' என்பது பற்றி அவர் பேசும்போது மாறுபட்ட மதங்களின் அறைகூவல்களை எப்படிச் சமாளிப்பது என்பதை விளக்க எண்ணம் கொள்ளவில்லை. மனிதன் என்கிற உலகப் பொதுவான உறுப்பின் இயல்பு என்னவோ அதைக் கொண்டே 'மனிதனின் மத'த்துக்கு அவர் இலட்சணம் வகுத்தார். 'பொருட்களுடைய உட்தன்மையுள் புகும் திருஷ்டி', முனிவர்கள் — எளிய தூய இதயம் கொண்ட ஆண் பெண்களின் உதார



ணம், ஆன்மிக ஒழுக்கம் என்ற ஒளியில் மலர்ச்சி பெறும் மனிதத் தொடர்புகளின் மாயாத அழகு, கலை இவையும் உண்மையான கல்வியும் சேர்ந்தே தாகூர் கூறிய எளிய மதத்தை, வளருகிற மதத்தை உருவாக்கும்.

சமயத்தைப் பற்றி தாகூர் கொண்டிருந்த தத்துவங்களைப் பிரதிபலிப்பதாகக் கருதப்படும் ''ஸாதனா''விலும் கூடத் தமது சிந்தனைகளைச் சித்தாந்த ரீதியில் வரையறுப்பதை அவர் தவிர்க்கிறார். இந்தியாவின் ஆன்மிகப் பாங்கினைப் பற்றித் தாம் என்ன அறிந்திருந்தாரோ அதனை விளக்கவே முயன்றார். பல்வகைப்பட்ட மத மரபுகளை அரவணைப்பதே இந்தியாவின் ஆன்மப் பாங்கு என அவர் கருதினார். மகத்தான, அன்பு மிகுந்த எந்த ஒரு சமய சகோதரத்துவத்தில் வளர்ந்த மனிதர்களாயினும் அதே போன்ற மற்ற சமயத்தினரிடம் தொடர்பு கொள்வது எளிதே. தெய்வ வழிபாட்டுப் பீடத்தின்முன் மனிதர்கள் சந்திக்கும் போது போட்டியோ, பிரிவினையோ சாத்தியமேயில்லை. ஆனால் மதங்கள் நடைமுறையில் பொதுவான சாசுவத சத்தியங்களைக் குறித்தன மட்டுமல்ல; குறிப்பான சில விசேஷச் சூழ்நிலைகளுக்கும் மதங்களில் இடமுண்டு. ஒரு மதத்தின் உள்ளார்ந்த சத்தியம் மாறாமலே இந்தப் பின்னணி மட்டும் மாறும். ஒரு குறிப்பிட்ட சமூகம் அல்லது ஸ்தாபனத்தால் ஏற்படும் இத்தகைய தடைகளை நீக்கிச் சீர்திருத்த வேண்டும் என்பது தாகூரின் கருத்து.

வாழ்க்கையின் பொருளை நேரடியாக அநுபவிப்பது குறித்து அவர் நிகழ்த்திய பிரசங்கத் தொடர், ''ஸாதனா''. உபநிஷதங்களையும் மற்ற ஹிந்துமத நூல்களையும் அவர் புதிய நோக்கில் விளக்கியுள்ளார். அவற்றை நவயுகத்துடனும், அதன் மாறிக் கொண்டேயுள்ள — ஆயினும் சாசுவதமான — தேவைகளுடனும் பொருத்தியுள்ளார். கிறிஸ்துவ, இஸ்லாமிய, பௌத்தக் கொள்கைகளையும் அவர் ஒத்த மனத்தோடு நோக்கி, விளக்கியுள்ளார்.


''ஸாதனா'' சொற்பொழிவுகளில் தனி மனிதனுக்கும் பிரபஞ்சத்துக்குமுள்ள தொடர்பை முதலில் கூறுகிறார். படிப்படியாக, ஒருவரது ஆன்மா எப்போது தன்னைப் பற்றித் தானே உணர்வு பெறுகிறது என்பதையும், அகங்காரத்தை அது எப்படி எதிர்கொண்டு நன்மைக்கும் தீமைக்கும் நடைபெறும் போராட்டத்தைத் தீர்த்துக் கொள்கிறது என்பதையும், அதன்பின் எவ்வாறு தனதுண்மை உருவை அடையப்பெற்றுத் தடைகளையெல்லாம் நீக்கிக் கொண்டு பூரணத்துவத்தை உய்த்துணருகிறது என்பதையும் விளக்குகிறார். அந்தப் பூரண நிலையில் ஆன்மாவானது அன்பிலும், ஆக்கத்திலும், அழகிலும் தன் முழுமையை அநுபவிக்கிறது. நமது எல்லாச் செயல்களையும் சொற்களையும் சத்தியத்தின் ஒளியால் தீண்டியபோதிலும், சொற்களைக் கடந்து நிற்கும் அனந்த வஸ்துவின் ஆட்சியில் ஐக்கியமுறும் நிலையில் ஆன்மா தன் முழுமையை அநுபவிக்கிறது.

கிழக்கத்திய — மேற்கத்திய நாகரிகங்களின் தோற்றுவாய் குறித்து தாகூர் தமக்கே உரிய விளக்கங்களை அளித்தார். மேற்கிலே கிரீஸில் நகரத்தின் எல்லைகளுக்குள் நாகரிகம் என்பது தோன்றியது; கிழக்கிலோ அதன் நாகரிகம், இயற்கையின் உயிர் தழுவிய சூழலில், மகத்தான விருட்சங்களின் நிழலில் வனங்களிலே தோன்றியது. இதையொட்டி கீழ்நாட்டு மனப்பான்மைக்கும் மேல்நாட்டு மனப்பான்மைக்கும் இடையே பல வித்தியாசங்கள் உள்ளதாக தாகூர் கருதுகிறார். மேல்நாட்டு மனிதன் தன்னிலிருந்து பிரிந்து அந்நியமாக உள்ள உலகின் இரகசியங்களை அறிவதில் அதிக அக்கறை காட்டுகிறான்; கீழ்நாட்டு மனிதனோ உலகம் தனக்கு நெருக்கமாகத் தன் தேவைகளுக்குச் சேவை செய்கிறது என்று காண்கிறபடியால், அதன் தோற்றம் குறித்த அற்புத விதிகளையும் செயல்முறைகளையும் பற்றி அதிகமாக ஈடுபாடு கொண்டிருக்கவில்லை; இயற்கை தாராளமாக அளிக்கும் பரிசுகளை அமைதியுடனும் சாந்தியுடனும் அநுபவிப்பதிலேயே அவன் அதிகம் ஈடுபாடு காட்டுகிறான். அந்நியமாகத் தோன்றும் உலகைத் தன் நோக்கங்களுக்காக அடிபணிய வைக்கவும், வெளி உலகில் ஆக்கிரமிப்பில் சாதனை புரியவும் விரும்புகிறான் மேற்கத்திய மனிதன். உலகையும் அகத்தில் சேர்த்துக் காணும் கிழக்கத்திய மனிதன் அகச் சிந்தனையில் அதிகம் தோய்ந்து அதிலேயே நிறைவு தேடுகிறான்; சிருஷ்டி என்ற விந்தையின் விதிமுறைகளில் ஓரம்சமே துன்பமும் ரோகமும் எனக் கொண்டு அவற்றை ஏற்கிறான். இரு பான்மைகளில் எதையுமே தாகூர் பூரணமாக ஆதரித்துக் கட்சியாடவில்லை. இவ்விரண்டையுமே அவர் சரித்திரக் கண்ணோட்டத்துடன் ஆராய்கிறார்.

பொதுவாகப் பேசுமிடத்து ஸயன்ஸ் ஆராய்ச்சிகளிலும் அதனால் ஏற்படும் பொருளாதார நலன்களிலும் மேல்நாடு அதிகம் உழைத்துள்ளதா? அதேபோல் மேல்நாட்டினால் உத்தமமான ஓர் ஆன்ம—சமய ஸ்தாபகரை அளிக்க முடிந்திருக்கிறதா? கிறிஸ்துவ மதம், ஜுடாயிஸம், பௌத்தம், கன்ஃப்யூஷியஸ் மதம், இஸ்லாம் — இவ்வாறு உலக மதங்களில் பெரும்பாலானவை தமது தோற்றுவாயின்படியும், ஆரம்பகாலச் சரித்திரப்படியும் 'கிழக்கைச் சேர்ந்தவையே' என்கிறார் தாகூர். எனினும் மேற்கத்திய நாகரிகத்தின் இதய ஆழத்தில் சமய உணர்வு இருக்கவே இருக்கிறது என்பது தாகூரின் கருத்து. கிறிஸ்துவ மதத்தின் தூண்டுதலிலேயே மேற்கத்திய நாகரிகம் மலர்ந்ததையும், அங்கு ஏராளமான அர்ச்சிஷ்டர்களும், சமுதாய சேவகர்களும் தோன்றியதையும் தாகூர் அத்தாட்சி காட்டுகிறார்.

கிழக்கு, மேற்கு இரண்டிலுமுள்ள மிகவும் உத்தமமான அம்சங்களை ஒன்று சேர்ப்பதில் தாகூர் தமது ஆழ்ந்த ஈடுபாட்டைக் காட்டுகிறார். இதில் அவரது சிந்தனையின் சில அம்சங்கள் பிரதானமாக முன் நிற்கின்றன; முதலாவதாக, அவர் கடவுள் கொள்கையை ஒரு சத்திய தத்துவமாகப் பிரகடனம் செய்கிறார். கடவுள் என்ற தெய்விக சத்தியம்தான் இயற்கையின் வாழ்வு மனித வாழ்வு இரண்டையும் தாங்குவதும், ஒன்று சேர்த்து ஊடுருவுவதுமாகும் என்கிறார் அவர். மனித வாழ்வில் கட்டுக்கோப்பான ஒருமையும், நோக்கமும் உள்ளன என்று நம்புகிறார். இரண்டாவதாக, உலக வாழ்வில் பௌதிக — தார்மிக நாட்டங்கள் ஒன்றோடொன்று சார்புள்ளவை என்றும், இரண்டையும் ஒன்றாக உள்ளடக்குவதே வாழ்க்கை என்றும் தாகூர் கூறுகிறார். தனித்திருந்தே தியானம் புரிவது அல்லது ஒதுங்கியிருக்கும் சந்நியாசம் இவற்றுக்கு அவர் கட்சி பேசவில்லை. மனித நாகரிகங்கள் யாவற்றையும் சந்திக்கச் செய்யும் உலக நடவடிக்கைக்கும் சமூக இசைவுக்கும் மதம் உதவ வேண்டும் என அவர் கருதினார்.

உத்தமமான சத்தியப் பொருளோடு தொடர்பு கொள்வதிலும், மனித குலத்



துக்குச் சேவை செய்வதிலும், நம்முடைய தொழிலை முறைப்படி செய்வதிலும் வாழ்க்கையின் சாரமான இன்பத்தைக் காண முடியும் என்று தாகூர் ஓதினர். 'ஆண்டவன் எதை அளிக்கிருனே அதைத் திருப்தியுடன் அநுபவிப்பாயாக' என்று பாரதத்தின் புராதனப் பிரமாண நூலிலிருந்து மேற்கோள் காட்டும் தாகூர் ''இவ்வுண்மையின் அநுபவத்தை நாளுக்கு நாள் எளிதில் கைவரப் பெறுவோமாக; சர்வ வியாபகமான ஆனந்தத்தின் சக்தி ஆகாயமளவும் பரந்து நிரம்பியிராவிடில் யாரும் வாழ முடியாது என்பதை உணர்வோமாக'' என்றார்.

அன்பு உணர்வு, சமூக சேவை, ஆன்ம சாக்ஷாத்காரம் என்ற மூன்றையும் தாகூர் உபதேசிக்கிறார். அன்பு உணர்வுடன் சமூக சேவை புரிந்து அதன் மூலம் ஆத்ம சாக்ஷாத்காரம் பெற வேண்டுமென்று அவர் ஓதுகிறார். 'அதிகாரம்' என்பதையே பெரிதாக மதிக்கும் இன்றைய கீழ்நாட்டு – மேல் நாட்டு நாகரிகங்களுக்கு மனிதனின் தெய்விகத் தன்மையை எடுத்தியம்பும் தாகூர் உலகப் பெருமத போதகர்களின் வரிசையில் நிற்கிறார். உலகாயதத்தைப் பெரிதாக மதிக்கும் உலகுக்கு அதன் பலவீனத்தை வலியுறுத்துகிறார். இந்தியாவைப் பொறுத்தமட்டில் 'உன்னுடைய நாட்டமே நமக்கு அதிகமா விருப்பதாக'க் கருதி நம்முடைய இந்தக் குறைபாட்டைச் சரி செய்வதற்காகச் சமூக சேவையை அதிகமாக வலியுறுத்துகிறார். மனித குலம் என்ற ஒன்றேயான ஆதார உண்மைக்குள் இப்போது துண்டித்துப் போயுள்ள கிழக்கையும் மேற்கையும் ஐக்கியமாக்க வேண்டும் என்று கருதி அதற்காகப் பாடுபட்டார். "Creative Unity" என்ற நூலில், ஆதி அந்தமற்ற ஒன்றின் தோற்றமே இந்த உலகம் என்கிறார். சௌந்தரியத்தைச் சிருஷ்டிப்பதே மனிதனின் இலட்சியமாயிருக்க வேண்டும் என்கிறார். மனிதாபிமானம் சிறிதும் இல்லாமல் இயந்திரங்களுடன் மட்டுமே மேற்கு கிழக்கிடம் வருமளவும், மேலை நாட்டினரின் உலகாயத வளர்ச்சி கண்டு கிழக்கு ஆன்மிகத்தை இழந்து பொறுமையுடனும் ஏமாற்றத்துடனும் மேற்கை அணுகுமளவும் இரண்டும் சந்திக்கமாட்டா என்று தாகூர் கருதினர்.

தாகூர் கூறிய சர்வ சமய – சர்வதேச ஒருமைப்பாட்டைச் சமூக வாழ்வுடன் அவர் நன்கு பொருத்தி விரித்து விளக்கும் நூலே ''மனிதனின் மதம்'' ("The Religion of Man") மக்களின் தனித் தன்மையை மதிக்க வேண்டும் என்ற உணர்வு மேல்நாடுகளில் தோன்றியுள்ளது. எனினும் பலாத்காரமாக சுயக் கருத்துக்களை அவரவரும் வலியுறுத்திக் கொள்வதே தனித் தன்மையை மதிப்பதாகும் என்று மேல் நாட்டினர் கருதுகின்றனர். அறநெறி ஒழுக்கத்தின் மூலமும், ஒத்துழைப்பினுலும், ஆன்மாவைப் பண்படுத்திக்கொள்வதாலும் சத்திய வஸ்துவுடன் ஐக்கியமடைய வழிதேடிய கிழக்கு 'பலாத்கார' முறைகளைக் கூறவில்லை. தனித் தன்மையை மதிப்பது—தனிப் போக்குகளைக் கட்டுப்படுத்துவது ஆகிய இவ்விரண்டுக்குமிடையே ஒரு சமன்பாட்டைக் காண வேண்டுமென 'மனிதனின் மத'த்தில் தாகூர் கூறுகிறார்.

மனிதனின் மகத்தான ஆன்மாவுடன் தொடர்பு கொள்ள உதவி புரியும் உள் உறுப்பு ஒன்றுண்டு என்கிறார் தாகூர். இந்த உள் உறுப்பை 'தெய்விக ஞானத்தின் ஊற்றுக் கண்' என்றும் கூறுகிறார். திவ்விய திருஷ்டியும் உள்ளுணர்ச்சியுமே மனிதன் சத்தியத்தைக் கண்டுகொள்வதற்கு வழி செய்திருக்கின்றன என்கிறார். பற்பலவிதமான தொடர்புகளிடையே ஒரு மகத்தான ஐக்கியத்தைக் கொண்டுள்ளதே பிரபஞ்சம் என்பதை மனிதன் அநுபவித்து அறிவது இந்த திவ்விய திருஷ்டியாலும், உள்ளுணர்ச்சியாலுமே என்கிருர். இசைவு பெற்ற மனித ஆன்மா தனது ஆன்மிகத்தால் நாகரிகத்தைக் கட்டுப்படுத்தினலன்றி, வையனால் மிகையாகப் போற்றப்படும் பகுத்தறிவால் மட்டும் ஞானத்தையோ, அடிப்படைச் சத்தியத்தையோ காண முடியாது என்கிறார்.


தாகூர் திரும்பத் திரும்ப 'ஆன்மிக உலகில்' தமக்குள்ள நம்பிக்கையை வெளியிடுகிறார். 'அந்த ஆன்மிக உலகம் இந்த உலகிலிருந்து பிறிதாக வேறெங்கோ இல்லை; இவ்வுலகின் உள்ளார்ந்த சத்தியமாகவே அது உள்ளது' என்கிறார். ஆன்மிகம் - லௌகிகம், கடவுள் உலகம் என்ற பழைய துவந்தங்களைக் கடந்து செல்கிறார் அவர்.

தாகூர் தமது கவிதையில் மனித சங்கல்பத்தின் சுதந்திரத்தை வலியுறுத்துகிறார். மனிதனின் உண்மையான தன்மை பற்றி ''ஸாதனா''வில் பேசும்போது பின்வருமாறு கூறுகிறார்:

''பிரபஞ்சத்தின் பிரபு தனது செம்மாதனத்துடைய நிழலின் கீழ் கொண்டு வராத ஒன்று உண்டு. அதுவே மனிதனின் ஆன்மா. அதை அவன் சுதந்திரமாகவே விட்டுவைத்திருக்கிறான். மனிதன் தனது உடலமைப்பு, மனத்தின் அமைப்பு இவற்றில் இயற்கையோடு தொடர்புறுத்தப்பட்டிருப்பதால் இந்த அம்சங்களில் நாயகனின் ஆணைகளை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். ஆயினும் தன்னுடைய ஆன்மாவுக்குள் அவன் நாயகனை மறுக்கவும் சுதந்திரம் பெற்றிருக்கிறான். அங்கு நம்முடைய ஆண்டவன் அநுமதி கேட்டுக் கொண்டுதான் பிரவேசிக்க வேண்டும். அவன் அங்கு மன்னர் மன்னனாக வரவில்லை; விருந்தாளியாகவே வருகிறான். எனவே அவனே அழைக்கும்வரையில் காத்திருந்துதான் வரவேண்டும். மனித ஆன்மாவிலிருந்து இறைவன் தன் ஆக்ஞைகளைப் பின்வாங்கிக் கொண்டிருப்பது ஏனெனில் அங்கு அவன் நம் அன்பைக் கோரிப் பெற வருகிறான். அதனுடைய வாசலுக்கு வெளியிலேயே அவனது சேனைகளும், இயற்கை விதிகளும் நின்று விடுகின்றன. அவனது அன்பின் தூதனுகிய அழகு ஒன்றே ஆன்மாவின் எல்லைக்குள் பிரவேசிக்க அநுமதி பெறுகிறது.''

பண்பாட்டின் அழியாத தத்துவங்களுடன் இன்றைய சமூக வளர்ச்சிச் சாதனங்களை இணைத்து அதன் மூலம் அன்றாட வாழ்க்கையுடன் மதத்தைப் பொருத்துவதே, கீழ்நாடு, மேல் நாடு இரண்டுக்கும் முக்கியமான பிரச்னை என்று தாகூர் கருதினர். வையனை அடியோடு வெறுக்கும் கீழ் நாடு இன்று இல்லை; லௌதிகத்தில் மட்டுமே கவனம் செலுத்தும் மேல் நாடும் இன்று இல்லை. இல்லாத இவ்விரண்டையுமே அவர் ஒப்புக்கொள்ளவில்லை. ஜனநாயகத்தின் உண்மையான இலட்சியங்களை அடைவதற்காக மனிதன் செய்யும் முயற்சியில் பல நாட்டுப் பண்பாடுகளும் நெருங்கி வருவதை அவர் கண்டார். வெவ்வேறு கலாசார சரிதங்களைக் கொண்ட கிழக்கும் மேற்கும் பரஸ்பரம் கற்க வேண்டும் என்று கருதினர்.

''நம்முடைய தனித் தன்மை வாய்ந்த ஜீவன் என்பது என்ன, அதன் சக்தி என்ன என்பவை பூட்டி வைக்கப்




வாசத்திரு மலராய்
நித்தம் நின்றொளிர . . .
குனேகா
மரிக்கொழுந்து மற்றும்
22 மண மகிழ்வூட்டும்
மணங்கள்
இன்றே மணியார்டர் மூலம்
ரூ. 2/– அனுப்பி 4 ரக
சாம்பிள் பாட்டில்களைப் பெறுங்கள்.
குனேகா
அடையார், மதறாஸ்.20
EP-C-7


நித்தம் ஒரு பொலிவு
நீடித்த மென்மணம்
சித்தம் தெளிவிக்கும்
சிறப்பு தரும்
நீபா
டாய்லெட் பவுடர்
ஹேர் ஆயில்
A. K. S. & கம்பெனி
அடையார், மதறாஸ்-20
NEEPA
TALCUM
POWDER
NEEPA
EP-AKS-5

பட்டிருக்கிறது. ஆதி அந்தமற்ற வஸ்து நம்முள் பிரத்யட்சமாகும்போதுதான் அந்தப் பூட்டு திறக்கிறது என்பதை நாம் அறிய வேண்டும்.'' என்று அவர் ''ஸாதனா''வில் கூறுகிறார்.

1894ம் ஆண்டு ஆகஸ்ட் 10ந் தேதி எழுதிய ஒரு கடிதத்தில் அவர் மாறுபட்ட சங்கீத பத்ததிகள் ஒலி வடிவங்களிலும், அமைப்பிலும் மாறுபட்டிருப்பினும் மனிதனின் விசுவ வியாபகமான ஆன்ம அபிலாஷைகளைப் பிரதிபலிப்பதாகக் கூறுகிறார்.

''பகல் உலகம் ஐரோப்பிய சங்கீதம் போல் எனக்குத் தோன்றுகிறது. அதன் ஒத்திசைகளும், முரண்களும் ஒன்றினுள் மற்றது கரைந்து ஏதோ ஓர் இசையின் மகத்தான முன்னேற்றத்தைக் காட்டுகின்றன. பரிசுத்தமான பந்தமற்ற மாதுரியத்தின் சோக கம்பீர விஸ்தாரமும், உள்ளத்தை ஊடுருவும் நுண்மையும் கொண்ட இந்திய சங்கீதம் இரவுலகைப்போலுள்ளது. இவற்றிடையே அழுத்தமான மாறுபாடுகள் இருப்பினும் இரண்டுமே நம் இதயத்தை ஸ்பரிசிக்கின்றன.

''இந்தியர்களாகிய நாம் இரவின் ஆளுகையில் உள்ளவர்கள். நித்தியமான ஏக வஸ்துவில் மூழ்கியவர்கள் நாம். நம்முடைய பண்களை ஏகாந்தமாகத் தனக்கென்றே பாடிக்கொள்ள வேண்டும். அவை நம்மைத் தினசரி வாழ்விலிருந்து தனிமைக்கு இட்டுச் செல்லுகின்றன. ஐரோப்பிய சங்கீதம் மக்கட் திரளுக்காக ஏற்பட்டது. மனித வாழ்வுக்குப் பொதுவான இன்ப துன்பங்களின் மூலம் அவர்களுக்குத் தீரமும், தோல்வியுறாத் திண்மையும் தந்து வாழ்வின் மேடு பள்ளங்களி லெல்லாம் அவர்களை இசை இட்டுச் செல்கிறது.'' (தாகுர்: "Glimpses of Bengal") ஓராண்டுக்குப்பின் அவர் எழுதுவார்:

''புறத்திலுள்ள சாஸ்திரங்களிலிருந்து மட்டும் வருகிற மதம் நம்முடைய சொந்த மதமாக ஒருபோதும் ஆவதில்லை. சமயத்தைத் தனக்குள்ளேயே அடையப் பெறுவதுதான் மனிதனின் மகத்தான ஜீவியகால சாதனம்... நமக்குள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சிருஷ்டியின் அமைப்பில் உள்ள ஐக்கியத்தை நாம் ஒரு முறை உணர்ந்து விட்டோமாயின் என்றென்றும் தனது பொருளை விளக்கிக் கொண்டிருக்கும் பிரபஞ்சத்துடன் நமது தொடர்பை அறிந்து உணர்வோம். வான மண்டலத்தின் ஒளிக் கோளங்கள் போலவே நாமும் சிருஷ்டிக் கிரமத்தில் இன்னும் உருவாகிக் கொண்டேயிருக்கிறோம் என்பதை உணர்வோம். நமது ஆசைகள், துயரங்கள் எல்லாவற்றுக்கும் இந்த விசுவ வெளியில் இடமுண்டு.''

1924ல் ''என் வாழ்வு'' ("My Life") என்ற தலைப்பில் அவர் சீனாவில் நிகழ்த்திய ஓர் உரையில் கூறுவார்:


''மதப் பிரமாண நூல்களின் 'அதிகார பூர்வமான' ஆளுகையிலிருந்து நான் ஆரம்பத்திலிருந்தே விடுபட்டிருந்தேன். என்னுடைய மதம் அதன் சாராம்சத்தில் ஒரு கவியின் மதம். என்னுடைய சங்கீதத்தின் பிரபோத சக்தி எப்படிக் கண்ணுக்குத் தெரியாமல் சுவடில்லாத கால்வாய்களின் மூலம் வந்து பாய்கின்றதோ அப்படியேதான் என்னுடைய சமயமும் என்னை வந்து நிறைகிறது.''

''தாகுர் சிந்தனைகள்'' ("Thoughts from Tagore" 1929) கீழ்க்கண்ட முக்கியமான வாசகங்களைக் கூறுகிறது:

''மதமென்பது பின்னப்படுத்தக் கூடிய பொருளல்ல. அதை வாராந்தரமாகவோ, தினந்தோறுமோ அளந்து போட முடியாது. மதம் தான் நமது பரிபூரணத் தன்மையின் சத்தியப் பொருள்; அதுவே நாம் ஆதி அந்தமற்ற வஸ்துவுடன் கொண்டுள்ள சொந்தத் தொடர்பின் உணர்வு. அதுவே நமது வாழ்வின் மையமான ஆகர்ஷண ஸ்தானம்.''

மொத்தத்தில் தாகுரின் சமயம் நான்கு முக்கியமான கருத்துக்களைக் கொண்டது. முதலாவதாக, அவர் உள்முக உணர்வானது ஆன்மிக நாட்டத்தை விரிவுபடுத்துமென்கிறார். இரண்டாவதாக, தெய்விக சிருஷ்டியின் கண்ணுக்குத் தெரியும் அம்சமாகிய உலகைத் துறப்பது சத்தியத்தை மறுப்பதாகும் என்கிறார்; மூன்றாவதாக, மனித உலகம் முழுவதற்கும் நமது இதயத்தின் இசைவை விரிவுபடுத்த வேண்டுமென்கிறார்; நான்காவதாக, கிழக்கத்திய மேற்கத்தியப் பண்பாடுகளிலுள்ள மாறுபாடுகள் அவசியமானவை என்றும், அவற்றால்தான் அந்தந்தப் பண்பாடு வளமுற்றது என்றும், இந்த மாறுபாடுகளுக்கு அடியே பொதுவான ஆன்மிக அபிலாஷைகள் கருவாக அமைந்துள்ளன என்றும் கூறுகிறார்.

(By special arrangement with the Author)



* * * *

தாய்மை என்பது உடலோடு சம்பந்தப்பட்டதுதான்; பிள்ளைப்பேறும் அதுவும் ஒன்றோடு ஒன்று சம்பந்தமுள்ளவையே! உலகிலுள்ள பிற பிராணிகளிடமும் இந்த உணர்ச்சியைத்தான் காண்கிறோம். இது உயிர்களுக்கு இயல்பான பண்புதான்; இதில் மனிதப் பிறவிக்கே உரிய தனிக் கடமை ஏதும் இருப்பதாகச் சொல்வதற்கில்லை. ஆனால் ஒரு தாய் பின்னால் தனக்குப் பிறக்கப் போகும் மகனுக்காகத் தவம் கிடந்து, தனக்கு இயல்பான - பெண்களுக்குரிய - உணர்ச்சியைக் கட்டுப்படுத்தி, ஆன்மிகக் கடமையை நிறைவேற்றும்போதுதான் அதற்கு ஒரு மகிமை ஏற்படுகிறது: உண்மையான சிருஷ்டி சக்தியின் இயல்பு இதுதான்.

— தாகுர்

(பாரதநாட்டு மனையறை என்ற கட்டுரையிலிருந்து)

மறைந்த நாகரிகங்கள்

அறிமுகம்

உலகத்தில் எத்தனையோ நாகரிகங்கள் தோன்றி, வளர்ந்து, வாழ்ந்து, மறைந்து போயிருக்கின்றன. இவற்றுள் இங்கு நாம் எகிப்து, அஸ்ஸிரியா, பாரசீகம், கிரீஸ், ரோம், மோஹென்ஜோதாரோ, மெக்ஸிகோ, பெரு ஆகிய எட்டு நாகரிகங்களை மட்டும் எடுத்துக் கொண்டு ஒவ்வொரு நாகரிகத்திலிருந்தும் ஒவ்வோர் அம்சத்தை எடுத்துக் காட்டியிருக்கிறோம்.

எகிப்தும் அஸ்ஸிரியாவும் பாரசீகமும் கிரீஸும் மோஹென்ஜோதாரோவும், கிறிஸ்து சகத்துக்கு அநேக நூற்றாண்டுகளுக்கு முந்தியே மகத்தான சாம்ராஜ்யங்களாக வளமான வாழ்வு நடத்திவிட்டு மறைந்து போயின. உதாரணமாக, எகிப்தின் உன்னத வாழ்வு கி. மு. பத்தாவது நூற்றாண்டுக்கு முந்தியே முடிந்து விட்டது. அஸ்ஸிரியா, கி. மு. ஆறாவது நூற்றாண்டிலேயே அடையாளம் தெரியாமல் போய்விட்டது. பாரசீகத்தின் பெருமையெல்லாம் கி. மு. நான்காவது நூற்றாண்டுக்கு முன்னதாகவே சிறுமையடையத் தொடங்கி விட்டது. இதனால்தான் அதனை மகா அலெக்ஸாந்தர் சுலபமாக வெற்றி கொள்ள முடிந்தது. கிரீஸின் தங்கமான காலம் கி. மு. 431 முதல் 404 ஆம் வருஷம் வரையில் நடைபெற்ற பொலொப்பொனேசியப் போரிலிருந்து மங்க ஆரம்பித்து விட்டது. மோஹென்ஜோதாரோ அல்லது சிந்து நதிக்கரை நாகரிகம் கி. மு. இருபத்தைந்தாவது நூற்றாண்டுக்கு முன்பே பூமியில் அடைக்கலம் புகுந்து விட்டது. ரோம நாகரிகத்தின் பிரகாசமான காலம் கிறிஸ்து சகத்திற்குப் பிறகு ஏறக்குறைய மூன்றாவது நூற்றாண்டோடு முடிந்து விட்டது. மெக்ஸிகோ நாகரிகமும் பெரு நாகரிகமும் கி. பி. பதினாறாவது நூற்றாண்டுவரை தன்னிச்சையாக விளங்கி வந்து பிறகு அழிந்து விட்டன. இந்த இரண்டு நாகரிகங்களும் அழிந்து போனது உலக வரலாற்றில் கறை படிந்த ஒரு படலம். இவை அழிந்தன என்று சொல்வதைக் காட்டிலும் அழிக்கப்பட்டன என்று சொல்வதே பொருந்தும்.

மறைந்துபோன இந்த நாகரிகங்களில் அநேகம், மானிட சமுதாயத்துக்கு எத்தனையோ விதமான நன்கொடைகளை வாரி வழங்கிவிட்டுப் போயிருக்கின்றன. உண்மையில், இப்பொழுது நாம், நாகரிகப் பொருள்களென்றும், நாகரிக நடைமுறைகளென்றும், நாகரிக வசதிகள் என்றும், எவை எவைகளைக் கருதிக் கொண்டிருக்கிறோமோ, எவை எவைகளை அனுபவித்துக் கொண்டு வருகிறோமோ இவையாவும் மறைந்துபோன இந்த நாகரிகங்களிலிருந்து வளர்ந்து வந்தவைகளே.


கி.மு. 4500 வருஷங்களுக்கு முன்பே எகிப்தியர்கள் நாள் கிழமைகளை அறிவிக்கும் காலெண்டர் முறையைக் கண்டுபிடித்து உபயோகப்படுத்தியிருக்கிறார்கள். அரசாங்கத்துக்கு வருமான வரி செலுத்துவதென்பது இப்பொழுது நம்மிலே பலருக்குச் சங்கடமாயிருக்கலாம். ஆனால் எகிப்தியர்கள் கி. மு. 4500 ஆண்டுகளுக்கு முன்பே அரசாங்கத்துக்கு ஒழுங்காக வருமான வரி செலுத்தி வந்திருக்கிறார்கள்.

கி. மு. ஏழாவது நூற்றாண்டில், அஸ்ஸிரியாவை ஆண்ட அஷுர் பானிபால் என்ற அரசன், நினேவே என்ற தலைநகரத்தில் பெரியதொரு நூல் நிலையத்தை நிறுவினான். இதில் முப்பதினாயிரம் பிரதிகள் (களிமண் ஏடுகள்) இருந்தன.

இப்பொழுது அநேக பெரிய நகரங்களில் குளிப்பதற்கும், நீந்துவதற்கும் உபயோகமாக இருக்கக்கூடிய நீர் நிலைகளும், இவைகளைச் சேர்ந்தாற்போல் உடை மாற்றிக்கொள்வதற்கான அறைகளும் அமைக்கப்பட்டிருக்கின்றனவல்லவா, இது போல் மோஹென்ஜோதாரோவில் அமைக்கப்பட்டிருந்தது என்று சொன்னால், சுமார் ஐயாயிரம் வருஷங்களுக்கு முன்பு, இந்த நகரத்து மக்கள் எத்தகைய வாழ்க்கை வசதிகளுடையவர்களாயிருந்தார்களென்பது ஒருவாறு புலனாகும்.

இப்படி ஒவ்வொரு நாகரிகமும் வழங்கியிருக்கிற நன்கொடைகளுக்குப் பட்டியல் கொடுத்துக் கொண்டு போகலாம்.

மறைந்துபோன இந்த நாகரிகங்கள் அளித்திருக்கின்ற நன்கொடைகளுக்காக மானிட சமுதாயம் முழுவதும் இவைகளுக்கு என்றென்றும் நன்றி செலுத்திக் கொண்டிருக்க வேண்டும். இந்த நன்றி தெரிவிக்கின்ற முறையிலேயே இங்கு நமது ஓவியர் திரு வினு தீட்டியுள்ள ஆதாரபூர்வமான, அழகிய இந்த வண்ணப் படங்களை வெளியிட்டிருக்கிறோம். இந்த விளக்கவுரையில் இடம் பெறும் சிறு படங்களில் மறைந்து போன நாகரிகங்களின் அடையாளமாக இன்று எஞ்சி நிற்கும் பொருள்களில் ஓரோர் அம்சத்தையோ அல்லது இன்று அங்கு வாழும் மக்களின் தோற்றத்தையோ காணும் நாம், அடுத்து வரும் வண்ணப் படங்களைப் பார்க்கும் போது அந்தந்த நாகரிகங்கள் தழைத்தோங்கிய மகோன்னத காலங்களுக்கே சென்று விடுகிறோம்.



ரோம்

ரோம நாகரிகம், கிரேக்க நாகரிகத்தின் தொடர்ச்சியே. கிறிஸ்துவுக்குச் சுமார் ஒன்றரை நூற்றாண்டுக்கு முந்தி, கிரீஸ், ரோம ஏகாதிபத்தியத்துக்கு உட்பட்ட ஒரு பகுதியாகிவிட்டது. 'கிரீஸ் ரோமுக்கு வசப்பட்டு விட்டதாயினும், கிரீஸின் நாகரிகத்துக்கும் கலாசாரத்துக்கும் ரோம் வசப்பட்டு விட்டது' என்று ஓர் அறிஞன் கூறியிருக்கிறான். கிரேக்க நாகரிகம் வலிமையும் வனப்பும் பெற்று ரோம நாகரிகமாக வளர்ந்தது என்று சொல்லலாம்.

ரோம நாகரிகம் உலகத்துக்கு அளித்த நன்கொடைகளில் ஒன்று அது தோற்றுவித்த அரசியல் அமைப்பு. இந்த அமைப்பின் மீது அரசாங்க அதிகாரங்கள், ஜனங்களுடைய உரிமைக்கும் நன்மைக்கும் பாதுகாப்பு அளிக்கக் கூடியவகையில் வரையறுக்கப்பட்டிருந்தன. இந்த அரசியல் அமைப்பே பிற்காலத்து அரசியல் அமைப்புகளுக்கு வழிகாட்டியாயிருந்தது. இம்மயமே, ஜனங்களின் சொத்து, சுதந்திரங்களுக்குப் பாதுகாப்

புத் தரக்கூடிய சட்டங்கள் நிர்மாணம் செய்யப்பட்டன. இந்தச் சட்டங்களின் தொகுப்பே பிற்காலத்து ஐரோப்பிய நாடுகளின் சட்டத் தொகுப்புகளுக்கு ஆதாரமாயிருந்தது.

ரோமர்கள் கட்டிடக் கலையில் தேர்ச்சி பெற்றிருந்தனர். நாடக அரங்குகள், கோட்டைகள், நீராடுமிடங்கள், நெடுஞ் சாலைகள், பெரிய பாலங்கள், தோட்டங்களுடன் கூடிய பெரிய மாளிகைகள், அழகான கோயில்கள், இப்படிப் பல வகையான கட்டிடங்கள் எழும்பின. வைத்தியம், யந்திரங்களின் உபயோகம், சுகாதார முறைகள் முதலியவற்றுக்கு ரோம்தான் வழிகாட்டியாக விளங்கியது. கலைகளைப் பற்றியும், விஞ்ஞான ரகசியங்களைப் பற்றியும் சமய உண்மைகளைப் பற்றியும், லத்தீன் மொழியில் பல நூல்கள் வெளியாயின.

கி. மு. 753ம் வருஷம் ரோமாபுரி ஏற்பட்டு, காலக் கிரமத்தில் இத்தாலியையும் சுற்றியுள்ள நாடுகளையும் கவிந்துகொண்டிருந்த ஒரு பெரிய சாம்ராஜ்யமாக — ரோம சாம்ராஜ்யமாக விளங்கியது. இந்த சாம்ராஜ்யத்தின் வாழ்க்கையில், எத்தனையோ போர்கள் நடைபெற்றன. கார்த்தேஜ் சாம்ராஜ்யத்துடன் மூன்று தடவை போர் நடத்தி இறுதியில் வெற்றி கண்டது. இன்னும் இந்தக் காலத்தில் செல்வச் செழுமையும், கலை வளர்ச்சியும் காணப்பட்டன. கி. பி. 305ம் வருஷத்துக்குப் பிறகு இந்த சாம்ராஜ்யத்தின் வலிமை குன்றிவிட்டது. இப்படி வலிமை குன்றியிருந்த காலத்தில், விஸிகோத்தியர், வாண்டலர், பார்கண்டியர், இப்படிப் பலவகை முரட்டு இனத்தினர் படையெடுத்து வந்து உயிர்ச் சேதத்தையும், பொருட் சேதத்தையும் விளைவித்தார்கள். கி. பி. 410ம் வருஷம் விஸிகோத்தியர்களின் தலைவனான அலாரிக் என்பவன் படையெடுத்து வந்து ரோமாபுரியைத் தீயிட்டுக் கொளுத்தியும் சூறையாடியும் ரத்தக்களரியாக்கியும் விட்டுச் சென்றான். இந்தப் பயங்கரக் காட்சியைத்தான் முதல் படத்தில் காண்கிறோம். இதற்குப் பிறகு ரோம சாம்ராஜ்யம் ஒளி குன்றிப் போய் விட்டது.

கிரீஸ்




கிரேக்க நாகரிகத்தைச் சிறந்த முறையில் எடுத்துக் காட்டுவது நான்கு வருஷங்களுக்கு ஒருதரம் நடைபெற்று வந்த ஒலிம்பிய விழா. இதில், ஓட்டம், தாண்டுதல், மல்யுத்தம், குத்துச் சண்டை, ஈட்டி எறிதல் இப்படிப் பல வகை விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும். வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்குவார்கள். இந்த விளையாட்டுப் போட்டி தவிர, கவிஞர்கள் நாடகாசிரியர்கள் இவர்களுடைய இலக்கியப் படைப்புகளின் அரங்கேற்றம் நடைபெறும். இந்த ஒலிம்பிய விழாவைத் தவிர, கிரேக்கர்கள், டெல்பி கோயிலில் குறி கேட்டு அதன்படி தங்கள் நடைமுறைகளை வகுத்துக் கொள்வார்கள். இன்றைக்கும் புராதன கிரேக்கர்களுடைய நாகரிகத்தை அறிமுகப்படுத்துவன, இலியத், ஒடிஸ்ஸி என்ற இரண்டு காவியங்கள். இவற்றை இயற்றியவன் ஹோமர்; பிறவிக் குருடன்; கி.மு. ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்தவன் என்பர்.

இலியத் காவியம் ட்ரோஜன் யுத்தத்தை வர்ணிக்கிறது. அழகில் சிறந்த ஹெலன் என்ற அரசகுமாரியை மெனேலாஸ் என்பவன் விவாகம் செய்து கொள்கிறான். இருவரும் ஸ்பார்ட்டாவில் இன்பமாகக் காலம் கழித்து வருகிறார்கள்.

ஒரு சமயம் ட்ராய் ராஜ்யத்து அரச குமாரனான பாரிஸ் என்பவன் ஸ்பார்ட்டாவுக்கு வருகிறான். மெனேலாஸும் ஹெலனும் இவனை வரவேற்று உபசரிக்கிறார்கள். பாரிஸ், ஹெலனைக் கண்டதும் அவள் மீது மோகம் கொண்டு விடுகிறான். மெனேலாஸ், வெளியே சென்றிருக்கும் சமயம் பார்த்து அவளை, இரட்டைக் குதிரைகள் பூட்டிய ஒரு ரதத்தில் அமர்த்திக் கொண்டு விரைகிறான். இதனை வண்ண ஓவியமாக அடுத்து வரும் பக்கத்தில் காணலாம்.

ஸ்பார்ட்டாவுக்கு வெளியே வந்து சேர்ந்த பாரிஸ், கப்பலேறி ட்ராய் நகரத்துக்குச் சென்று விடுகிறான். மெனேலாஸ், அரண்மனைக்குத் திரும்பி வந்து பார்க்கையில், பாரிஸ் ஹெலனைக் கடத்திக் கொண்டு போன விஷயத்தைத் தெரிந்து கொள்கிறான். இதன் விளைவாக, கிரேக்கர்கள், ட்ராய் மீது யுத்தம் தொடுக்கிறார்கள். ஒன்பது வருஷ காலம் யுத்தம் நடைபெறுகிறது. கடைசியில் கிரேக்கர்களுக்கு வெற்றி கிடைக்கிறது. ட்ராய் அழிந்து போகிறது. இதுவே இலியத் காவியத்தின் சாரம்.

எகிப்து



எகிப்திய நாகரிகத்துக்குச் செழுமை தந்தது நைல் நதி. இந்த நதிப் பெருக்கால் விவசாயத் தொழில் மேன்மையுற்றிருந்தது. மக்கள், வயிற்றுப் பசியை அறியாதவர்களாயிருந்தார்கள். இதனால் புதிய புதிய பொருள்களைக் கண்டு பிடித்தும் அன்றாட வாழ்க்கை செம்மையாக நடைபெறுவதற்கேற்ற சாதனங்களைப் படைத்தும் பயன்படுத்திக் கொள்ள அவகாசம் பெற்றிருந்தார்கள். கலை, இலக்கியம் முதலியன நல்ல முறையில் வளர்ந்தன.

நைல் நதியை விவசாயத்துக்கு மட்டுமல்ல, போக்குவரத்துக்கும் உபயோகப்படுத்தினார்கள். கப்பல்கள் கட்டி ஆற்றிலும் கடலிலும் செலுத்தினார்கள். கடல் வியாபாரத்தின் மூலம் வெளிநாடுகளுடன் உறவு கொண்டார்கள். நாடெங்கிலும் ஒழுங்கான தபால் போக்குவரத்து இருந்தது. சுங்கச் சாவடிகள் பல இருந்தன. லேவாதேவித் தொழில் இணக்கமான முறையில் நடைபெற்று வந்தது. அரசாங்கம், ஜனங்களின் குறை நிறைகளை அவ்வப்பொழுது கவனித்து ஆவன செய்து வந்தது.

அரசன் பேரா என்று அழைக்கப்பட்டான். அவனைக் கடவுள் அம்சமாகவே மக்கள் கருதினார்கள். எல்லா அதிகாரங்களும் அவனிடத்தில் தங்கியிருந்தன என்றாலும், ராஜ்யத்தின் அறிவு சான்ற பெரியோர்களைக் கொண்ட சபை ஒன்றை அமைத்துக் கொண்டு, அதன் கருத்துக்கு மதிப்புக் கொடுத்து நிருவாகத்தை நடத்தினான்.

எகிப்திய நாகரிகத்தை உலகினுக்கு அறிமுகப்படுத்துவது அதன் பிரமிட் கோபுரங்கள். எகிப்திய மன்னர்களின் கல்லறைகள் மீது கட்டப்பெற்ற இவை கோபுரம் மாதிரி உயரமாக உள்ளன. இவற்றின் அடித்தளம் சச்சதுரமாகவோ, முக்கோணமாகவோ, பல கோணங்களாகவோ ஒவ்வொரு விதமாக இருக்கும். ஆனால் மேலே சிகரம் மாதிரி அமைகிற போது முக்கோணமுடையதாகவே இருக்கும். பெரும்பாலான பிரமிட்டுகளின் உட்புறத்தில் அநேக அறைகள் உண்டு. இவற்றில் இறந்து போன மன்னர்களுக்குப் பிடித்தமானதும் அவர்கள் கையாண்டதுமான அநேக பொருள்களைச் சேர்த்து வைப்பார்கள். அந்த மன்னர்களுடைய ஆத்மாவுக்கு இவை பயன்படும் என்பது எகிப்தியர்களுடைய நம்பிக்கை.

இந்தப் பிரமிட்டுகள் கட்டப்பட்ட இடங்களுக்கு அருகில் பாறைகளை அளிக்கக்கூடிய மலைகள் ஏதும் இருக்கவில்லை. எத்தனையோ மைல்களுக்கு அப்பாலிருந்து பாறைகளை வெட்டிச் செதுக்கிக் கப்பலேற்றி நைல் நதி வழியே பிரமிட்டுகள் கட்டக் கொண்டு வந்தார்கள். இந்தக் கடினமான வேலைகளுக்கு அடிமைகளைப் பயன்படுத்தினார்கள். இதையே மூன்றாவது படம் சித்திரிக்கிறது.

பெரு



தென் அமெரிக்காவிலுள்ள பெரு நாட்டை கி. பி. பதினாறாவது நூற்றாண்டில் ஸ்பானிஷ்காரர் ஆக்கிரமித்துக் கொள்வதற்கு முன்பு அது ஒரு சுதந்திர ராஜ்யமாயிருந்தது. அங்கு வசித்து வந்த பூர்வ குடிகளுக்கு இன்காக்கள் என்று பெயர். இதனால் இவர்கள் நாகரிகம் இன்கா நாகரிகம் எனப்பட்டது.

இன்காக்கள் வசித்த பிரதேசத்தின் பெரும் பகுதி மலைப் பிரதேசமாக இருந்தபடியால் இவர்கள் உபயோகித்த கருவிகள் கற்களினால் ஆக்கப்பட்டவையாயிருந்தன. இவர்களுடைய தெய்வம் சூரியன். இந்தத் தெய்வத்துக்குக் கோயில்கள் பல இருந்தன. இவைகளைக் கட்டச் சுமார் நூறு டன் எடையுள்ள பாறுங்கற்களை அளவாகச் செதுக்கியும் அழகு படுத்தியும் உபயோகித்தார்கள். இவ்வளவு பெரிய கற்களை, சாதாரண கயிறுகளைக் கொண்டே கட்டடங்களுக்கு மேலே தூக்கி வைத்தார்கள். தாமிரக் கம்பியில் வைரம் முதலிய சில நவரத்தினங்களைக் கோத்துக் கட்டி, அதனைக் கொண்டு பெரிய பெரிய பாறுங்கற்களைத் துண்டுபடுத்தினார்கள்; தாமிர உளிகளையும் உபயோகித்தார்கள். மற்றும் சூரியனுடைய கோயில்களின் சுவர்கள்மீது தங்கத் தகடுகள் பொருத்தப் பெற்றிருந்தன. இந்தத் தகடுகள் மீது நவரத்தினங்கள் இழைக்கப் பெற்றிருந்தன.

இன்கா ராஜ்யத்தில், தற்காலத்தைப் போல், தபால் போக்குவரத்து இருந்தது. எங்கும் ஒழுங்கான பாதைகள் இருந்தன. ஒரே நாளில் சுமார் 250 மைல் தூரம் வரை பில் செய்திகள் பரவ வசதிகள் இருந்தன. தினந்தோறும் ஜன கணிதம் எடுக்கப்பட்டது.

இன்காக்கள் வண்டி வாகனங்களையோ, எருதுகளையோ, குதிரைகளையோ அறியார்கள். ஒட்டக இனத்தைச் சேர்ந்த லாமா என்ற ஒரு பிராணியையே சுமைகள் தூக்குவதற்குப் பயன்படுத்தினார்கள். எவ்வளவு தொலைவானாலும் நடந்தே சென்றார்கள். அரசர்கள், படை கொண்டு செல்லும் சேனைத் தலைவர்கள் ஆகியோர் மட்டும் பல்லக்குகளில் சென்றார்கள். (படம்) அரசன் தெய்வம் போல் கருதப்பட்டான். தங்கத்தினாலான சிங்காதனத்தில் கொலு வீற்றிருப்பான். ஒரு தரம் அணிந்த ஆடையை மறு தரம் அணிய மாட்டான்.

கி. பி. 1533-ம் வருஷம் ஸ்பெயின் தேசத்துப் பிரதிநிதியாக பிஸ்ஸாரோ என்பவன் இந்த இன்கா ராஜ்யத்தின் மீது படை கொண்டு சென்று இதனை வஞ்சத்தினால் ஆக்கிரமித்துக் கொண்டான்; இன்கா நாகரிகமும் அழிந்துபட்டது.



அஸ்ஸிரியா

கிறிஸ்து சகத்துக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு, டைகிரிஸ் நதிக்கு மேற்குப் பக்கத்தில் உள்ள ஒரு சிறிய பிரதேசம் அஸூர் என்று அழைக்கப்பட்டு வந்தது. இதுவே காலக்கிரமத்தில் அஸ்ஸிரிய சாம்ராஜ்யமாக வளர்ந்து பொலிந்தது. வளர்த்து நிலைப்படுத்தியவன், கி. மு. 1276-ம் வருஷவாக்கில் வாழ்ந்த முதலாவது டிக்லத் பிலேஸர் என்பவன். இவன் வேட்டையாடுவதில் வல்லவன்; மிருகங்களை மட்டுமல்ல; மனிதர்களைக் கூட. தன் வாழ்நாளில் இவன் 920 சிங்கங்களை வேட்டையாடி வீழ்த்தினான். இவ்வண்மே அநேக நகரங்களைச் சூறையாடியும், அநேக மக்களைக் கொன்றும் வந்தான். சூறையாடிய பொருள்களைக் கொண்டு அநேக கோயில்கள் கட்டினான். ஆனால் இவன் கடைசிக் காலத்தில், அடுத்தாற் போலிருந்த பாபிலோனிய ராஜ்யத்தினர் இவன் மீது போர் தொடுத்து வெற்றி கொண்டு, இவன் கட்டிய கோயில்களை நாசமாக்கி விட்டனர்.

இவனுக்குச் சுமார் 570 வருஷங்களுக்குப் பிறகு ஆண்ட சென்னகெரிப் என்ற அரசன் பாபிலோன் மீது படையெடுத்துச் சென்று, அதனைத் தீயிட்டுப் பொசுக்கிப் பழி தீர்த்துக் கொண்டான். பாபிலோனிலிருந்து கொண்டு வந்த பொருள்களைக் கொண்டு, நினேவே என்ற தன் தலைநகரத்தைப் புதிதாக நிர்மாணம் செய்தான்; நகரத்தைப் பலவகையாலும் பந்தோபஸ்து செய்தான். இவனும், கடைசியில், தன் பிள்ளைகளின் கையினாலேயே மாண்டான்.


இவனுடைய பேரனான அஸூர் பானிபால் கி. மு. 669 முதல் 626-ம் வருஷம் வரையில் சுமார் 43 வருஷ காலம் ஆண்டான். இவன் காலத்தில் அஸ்ஸிரிய சாம்ராஜ்யம் உச்ச நிலை எய்தியது. ஆயினும் என்ன? இவன் மரித்த பதினைந்தாவது வருஷத்தில், மீடியா என்ற தேசத்தின் அரசனான ஸையாக் ஸரீஸ் என்பவன் படையெடுத்து வந்து நினேவே நகரத்தை அழித்து, அஸ்ஸிரிய சாம்ராஜ்யத்துக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டான்.

இதுபோன்ற சமயங்களில் எதிரியிடம் கைதாகியோ சரணடைந்தோ துன்பமும் அவமானமும் படுவதைவிடத் தங்களைத் தாங்களே தீக்கிரையாக்கிக் கொள்வது மேல் என்று கருதினர் மகாவீரர்களான அஸ்ஸிரிய மன்னர்கள். அவ்விதம் தனது அந்தப்புர மாதர்கள், அடிமைகள், பெருஞ்சேனைத் தலைவர்களுடன் தீக்குளிக்கும் மன்னனையே அடுத்த படத்தில் காண்கிறோம்.

அஸ்ஸிரிய மன்னர் பலரும் கட்டடக் கலை நிபுணர்களாக இருந்தார்கள். பெரிய பெரிய கட்டடங்களை எழுப்பினார்கள். ஸென்னகெரிப் என்ற அரசன், நினேவே நகரவாசிகளுக்கு, முப்பது மைல் தொலைவிலிருந்து நல்ல குடிதண்ணீர் கிடைக்கும்படி செய்தான். இலக்கிய ரசிகனான அஸூர் பானிபால் என்ற அரசன், பெரிய நூல் நிலையமொன்றை நிறுவினான்.

பொதுவாக அஸ்ஸிரியர்கள் போர்க் குணம் படைத்தவர்கள். புதிய புதிய போர்க் கருவிகளைக் கண்டுபிடித்துப் பயன்படுத்தினார்கள். அஸ்ஸிரிய மன்னர்கள், அவ்வப்பொழுது தாங்கள் கண்ட வெற்றிகளை அழகான பாஷையில் எழுதி வைக்கச் செய்தார்கள். இவையே பிற்காலத்தில் ஒழுங்கான சரித்திர நூல்கள் எழுதப்படுவதற்கு அடிப்படையாயிருந்தன என்று சொல்வதுண்டு.

பாரசீகம்



பாரசீகத்தை ஒரு சாம்ராஜ்யமாக உருவாக்கி வளர்த்தவன் மகா ஸைரஸ் என்ற அரசன். இவன் காலம் கி. மு. 558–530. பாரசீக நாகரிகத்தின் வளர்ப்புத் தந்தை என்று இவனைச் சொல்லலாம்.

இவன் பிறக்கும் போதே அரசனாகப் பிறந்தான் என்று சொல்வதுண்டு. அவ்வளவு எடுப்பான தோற்றம். சத்துருக்களையும் மித்ரர்களாகக் கருதும் மனப்பான்மையுடையவன். ஆனால் தன் ஆதிக்கத்தை விஸ்தரித்துக் கொண்டு போகவேண்டுமென்பதில் பேராசை கொண்டு விட்டான். பேராசை பெரு நஷ்டமாகி விட்டது. ஒரு போரில் கொலையுண்டான்.

ஸைரஸுக்குப் பிறகு ஆண்ட முக்கியமான அரசன் முதலாவது டேரியஸ் என்பவன். இவன் ஆண்ட காலம் கி.மு. 522 முதல் 486-ம் வருஷம் வரை. இவனும் ஆதிக்க ஆசை கொண்டு, கிரீஸின் மீது படையெடுத்துத் தோல்வி கண்டான். இவனுக்குப் பிறகு ஆண்ட முதலாவது ஜெர்க்ஸஸ் மன்னன் இரண்டாவது தடவை கிரீஸின் மீது படையெடுத்துத் தோல்வி கண்டான். இவ்விரண்டு தோல்விகளும் பாரசீக சாம்ராஜ்யத்தின் செல்வாக்கு குறையும்படி செய்து விட்டன.


முதலாவது ஜெர்க்ஸஸ் மன்னனுக்கு இரண்டாவது மனைவியாக வாழ்க்கைப்பட்ட எஸ்தர் என்ற அழகி; யூத இனத்தைச் சேர்ந்தவள். சிறு வயதில் பெற்றோரை இழந்த இவளை, இவளுடைய உறவினனான மொர்தேகாய் என்பவன் எடுத்து வளர்த்து ஜெர்க்ஸஸ் மன்னனுக்கு விவாகம் செய்து கொடுத்தான். ஜெர்க்ஸஸ் மன்னனின் முதல் அமைச்சனாயிருந்தவன் ஹாமன் என்பவன். இவன் யூதர்களுக்குப் பரம விரோதி. மொர்தேகாய், தன்னை லட்சியம் செய்வதில்லை என்பதற்காக அவன் மீது ஆத்திரம் கொண்டிருந்தான். ஒரு சமயம் ஹாமன் தன் பரிவாரத்தோடு வருகையில் மொர்தேகாய் அவனுக்கு மரியாதை செய்ய மறுத்து, கன்னத்தில் கைவைத்துக் கொண்டு அலட்சியமாக அவன் வருகையைப் பார்த்துக் கொண்டிருந்தான். அருகிலுள்ளவர்கள் பிரமித்தார்கள். (படம்) அவனை எப்படியாவது மரணத்துக்குட்

படுத்திவிட வேண்டுமென்றும், அதே சமயத்தில் யூதர்களை அழித்துப்போட வேண்டுமென்றும் ஹாமன் தீர்மானித்து, இதற்கான உத்தரவுகளை ஜெர்க்ஸஸ் மன்னனிடமிருந்து பெற்றுக் கொண்டு விட்டான். ஆனால் கடைசி நேரத்தில் எஸ்தர் தலையிட்டு, ஹாமனின் திட்டம் நிறைவேறாதபடி செய்து விட்டதோடு, அவனை மரணத்துக்குட்படும்படி செய்தாள். எஸ்தர், மொர்தேகாய் இருவருடைய சமாதிகளுக்கு இன்றளவும் பாரசீகத்தில் மரியாதை செலுத்தப்பட்டு வருகிறது.

முதலாவது ஜெர்க்ஸஸுக்குப் பிறகு வந்த மன்னர்கள் சுகபோக வாழ்க்கையில் ஈடுபடத் தொடங்கினார்கள். ஜனங்களுடைய அன்றாட வாழ்க்கையில் எளிமைக்கும் நிதானத்துக்கும் இருந்த மதிப்பு போய் விட்டது; ஆடம்பரம் புகுந்து கொண்டது. மூன்றாவது டேரியஸ் மன்னன் காலத்தில் (கி. மு. 338–330) மகா அலெக்ஸாந்தர் படையெடுத்து வந்து பாரசீக சாம்ராஜ்யத்துக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டான்.

பொதுவாக, பாரசீகர்கள், அழகுக்கும் தூய்மைக்கும் முக்கியத்துவம் கொடுத்தார்கள். தங்களையும் தங்கள் சுற்றுச் சார்புகளையும் அழகாகவும் தூய்மையாகவும் வைத்துக் கொள்வதில் கவனம் செலுத்தினார்கள். இதனால் சிற்பக் கலையும் ஓவியக் கலையும் வளர்ந்தன.

நெடுஞ்சாலைகள் அமைப்பதில் பாரசீகர்கள் வல்லுனர்களாயிருந்தார்கள். குதிரைகள் மூலம் தபால் போக்குவரத்து நடைபெற்றது. கடல் வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் கண்டார்கள். பொதுவாக, பாரசீகத்தின் கலைப் பொருள்கள் பலவற்றை உலகத்துப் பல்வேறு பொருட்காட்சி சாலைகளில் காணலாம்.



மெக்ஸிகோ


தென் அமெரிக்காவில் உள்ள மெக்ஸிகோ நாட்டின் பூர்வ குடிகள் அஜ்டெக் என்ற ஓர் இனத்தினர். இதனால், இவர்களுடைய நாகரிகத்தை அஜ்டெக் நாகரிகம் என்று சரித்திராசிரியர்கள் அழைப்பர். இந்த அஜ்டெக் இனத்தினர் கி. பி. பதினாறாவது நூற்றாண்டு வரை சுதந்திர வாழ்க்கையை நடத்தி வந்தனர். இவர்களுடைய வாழ்க்கையில் எளிமையும் இனிமையும் கலந்திருந்தன.

பொதுவாக அனைவரும் உடல் வலிமை மிக்கவர்கள். போர்க் குணம் படைத்தவர்கள். சக்கரம் பூட்டிய வண்டிகளையோ, ஆடு, பசு, குதிரை ஆகிய பிராணிகளையோ இவர்கள் அறியார்கள். நாய்களை நன்றாகப் போஷித்து, அவைகளைப் பல வேலைகளுக்கும் பயன்படுத்தினார்கள். எவ்வளவு பெரிய சுமைகளையும் தலையிலோ முதுகிலோ சுமந்து கொண்டு தொலைதூரம் செல்லத் தயங்க மாட்டார்கள். பெரும்பாலும் மரத்தினால் தயாரிக்கப்பட்ட கருவிகளையே, விவசாயத்துக்கும் கைத்தொழில்களுக்கும் உபயோகித்தார்கள். கையினால் நூற்று நெய்த ஆடைகளையே உடுத்தினார்கள்.

ஊர் நடுவேயுள்ள மார்க்கெட்டில் பல பொருள்கள் விற்கப்படும். (படம்) பண்ட மாற்று முறையிலேயே வியாபாரம் நடைபெற்றது. பேரம் பண்ணித்தான் எதையும் விற்பார்கள்; வாங்குவார்கள். தங்கம், வெள்ளி, நவரத்தினங்கள் ஆகியவைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட ஆபரணங்களுக்கு நல்ல கிராக்கி இருந்தது.

அஜ்டெக்குகள், சூரியன், வருணன், வாயு, பாம்பு முதலியவைகளைத் தெய்வங்களாகக் கருதி வழிபட்டார்கள். இவைகளைத் திருப்தி செய்ய அவ்வப்பொழுது நரபலி கொடுப்பார்கள். (படம்)

கி. பி. 1519ம் வருஷம், ஸ்பெயின் தேசத்திலிருந்து கோர்ட்டெஸ் என்பவன் ஒரு சிறு படையுடன் மெக்ஸிகோவுக்கு வந்து அப்பொழுது அரசனாயிருந்த மாண்ட்டி ஜூமா என்பவனை வஞ்சகத்தினால் வென்று, அஜ்டெக் ராஜ்யத்தையும் அஜ்டெக் நாகரிகத்தையும் இருந்த இடம் தெரியாமல் அழித்து விட்டான்.



மோஹெஞ்ஜோதாரோ

இன்றைக்குச் சுமார் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, சிந்து நதிக் கரையோரமாக உள்ள நீண்ட பிரதேசத்தில் சிறந்ததொரு நாகரிகம் நிலவியிருந்தது. இதனைச் சிந்து நதிக்கரை நாகரிகமென்பர். இந்த நாகரிகத்தை விளக்கிக் காட்டுகிற முறையில், முந்திய சிந்து மாகாணத்தைச் சேர்ந்த மோஹெஞ்ஜோதாரோ என்ற இடத்திலும் தற்போதைய பஞ்சாப் மாநிலத்தில் உள்ள ஹாரப்பா என்ற இடத்திலும், பூமியின் கீழ் அநேகப் பொருள்கள் கண்டெடுக்கப்பட்டன. இதனால் இந்த நாகரிகத்தை மோஹெஞ்ஜோதாரோ – ஹாரப்பா நாகரிகமென்றும் அழைப்பர்.

மோஹெஞ்ஜோதாரோ நகரத்தில் அகலமும் நீளமுமுள்ள ஒழுங்கான வீதிகள் இருந்தன. இந்த வீதிகளின் இரு மருங்கிலும் இரண்டு அல்லது மூன்று அறைகளுடன் கூடிய சிறிய வீடுகளும், மூன்று அல்லது நான்கு மாடிகளைக் கொண்ட பெரிதும் அழகானதுமான வீடுகளும் ஒன்றோடொன்று நெருங்கினாற்போல் வரிசையாக அமைந்திருந்தன. ஒவ்வொரு வீட்டின் முன்பும், குப்பைக் கூளங்களைக் கொட்டுவதற்கென்று தனித்தனி தொட்டிகளும், வீட்டிலிருந்து வரும் கழிநீரை நகரத்துக்கு அப்பால் கொண்டு சேர்ப்பதற்காக, வீதியின் இரு பக்கங்களில் சாக்கடைகளும் இருந்தன. இவை தவிர, பொது மண்டபங்களும் ஸ்நான விடுதிகளும் ஆங்காங்கு கட்டப்பெற்றிருந்தன. பொதுவாக, மக்களின் சுகாதாரம் பெரிதும் கவனிக்கப்பட்டது.

மோஹெஞ்ஜோதாரோ நகரத்திலிருந்த நீராடும் செயற்கைக் குளங்களுள் ஒன்று 180 அடி நீளமும் 108 அடி அகலமும் கொண்டதாயிருந்தது. பூமிக்கடியில் புதைந்து கிடந்ததால் இன்று பாழ்பட்டிருக்கும் ஒரு நீச்சல் குளம் அந்நாளில் எப்படி இருந்திருக்கும் என்பதைக் காட்டுகிறது கடைசிப் படம். மட்பாண்டம் ஒன்றுக்கு அழகுற வண்ணம் தீட்டிக் கொண்டிருக்கும் ஆதிநாள் மனிதனையும் படத்தில் காணலாம்.

இந்த நாகரிக மக்கள் பொன், வெள்ளி, செம்பு ஆகிய உலோகங்களை அன்றாட உபயோகத்துக்கான கருவிகளுக்கும், ஆபரணங்களுக்கும் பயன்படுத்தினர். பருத்திப் பஞ்சைக் கொண்டு கையால் நூற்று நெய்த ஆடைகளையே உடுத்தினர். கம்பளியும் உபயோகத்திலிருந்தது. இங்கிருந்து அஸ்ஸீரியாவுக்குப் பருத்தி விதைகள் எடுத்துச் செல்லப்பட்டன என்றும், இந்த விதைகளைக் கொண்டே அங்கு பஞ்சு விளைவிக்கப் பட்டதென்றும் தெரிகின்றன. தரை வழியாகவும் கடல் வழியாகவும் வியாபாரப் போக்குவரத்து நடைபெற்றது. மக்கள், அழகான மட்பாண்டங்களைத் தயாரித்து உபயோகித்தனர். இந்த மட்பாண்டங்களில் வண்ண ஓவியங்கள் தீட்டப் பெற்றிருந்தன. ஆண் மக்கள் பலர், தாடி மீசை வைத்துக் கொண்டிருந்ததாகத் தெரிகிறது. பொதுவாக, இந்தச் சிந்து நதிக்கரை நாகரிகம் பொருளாதாரச் செழுமையுடன் கூடியதாக இருந்ததென்றும் சொல்லலாம்.

விளக்கவுரை வழங்கியவர்: வெ. சாமிநாத சர்மா


மறைந்த நாகரிகங்கள்
-அஸிரியா
கல்கி தீபாவளி மலர் - 1965


மறைந்த நாகரிகங்கள் - பெர்ஸியா
கல்கி தீபாவளி மலர் - 1965


மறைந்த நாகரிகங்கள் - மெக்ஸிகோ
கல்கி தீபாவளி மலர் - 1965


மறைந்த நாகரிகங்கள் — இந்தியா





அக்காவின் பார்வை வரவர எனக்குப் பிடிப்பதில்லை. அதன் காரணமும் எனக்குப் பிடிபடுவதில்லை. இருந்தாற் போல் இருந்து அவள் பார்வை சுற்றிப் பறந்து என் மீது வந்து விழுகிறது. ஏதோ இரை கொத்த வரும் பறவை என்னைத் தேடி வருவது போல் நான் நடுங்குகிறேன். என்னை நேர் முகமாய் அவள் தாண்டிச் செல்லும்போது அவள் பார்வையின் உக்கிரத்தைத் தாங்க இயலாது தவிக்கிறேன். பார்வையில் கற்பூரக் கொழுந்து எரிகிறது.

அக்கா ஒரு சாதாரணப் பெண்ணாக இருந்தால் இதைப் பொருட்படுத்தியிருக்க மாட்டேன். அவள் படித்தவள். எம். ஏ. பாஸ் செய்திருக்கிறாள். கொடி போன்று இருப்பாள். நடந்து வருவதிலேயே ஒரு களை, கம்பீரம்! ஆங்கிலம் பேசினால் கடல் மடை திறந்ததுபோல் இருக்கும். இன்றைக் கெல்லாம் கேட்டுக்கொண் டிருக்கலாம். அவளுக்கு முப்பத் தைந்து வயதாகி விட்டது என்று ஒருவரும் சொல்லவே மாட்டார்கள். அவள் சற்றுப் பருமன். அவ்வளவுதான்!

இப்படிப்பட்டவள் மீது எனக்கு எவ்வளவு அன்பு தெரியுமா? ஆனால் அவள்?

உண்மையில் அவள் உறவு முறையில் எனக்கு அக்கா அல்ல. அவளுக்கும் எனக்கும் இருப்பது உறவில் ஒரு சேர்த்தியா என்று கூடத் தெரியாது. அவள் அம்மாவும் என் அம்மாவும் ஏதோ விதத்தில் அக்கா தங்கை ஆக வேண்டுமாம். அது இரண்டு விட்டோ, மூன்று விட்டோ! ஏதோ உறவு அவ்வளவுதான்! அந்த நாளில் குடும்பமெல்லாம் ஆல் போல் தழைத்து ஒரே கிராமத்தில் இருந்ததாம். இப்போது நாங்கள் இருவரும் ஏதோ நிர்ப்பந்தத்தில் கூடியிருக்கிறோம். நிர்ப்பந்தம் என்று சொல்வதற்கில்லை. அக்கா ஐந்தாவது பிரசவத்துக்குக் கிராமம் வர ஆசைப்பட்டாள். முதல் நான்கு பிரசவங்களிலும் குழந்தைகள் தங்கவில்லை. அதனால் ஒரு குறை. ஏதோ கிராமத்துத் தெய்வத்தின் மீது ஒரு நம்பிக்கை! "உன் எல்லை யில் குழந்தை பிறந்து நான் வாழவேண்டும்" என்று பிரார்த் தனை. பிரசவத்துக்கு அதிசயமாகக் கிராமம் தேடி வந்து

சிரித்துக் கொண்டிருப்பவர் முகத்திலகூடச் சிறிது மாற்றம் ஏற்பட்டது. ஏதோ யோசித்து நின்றுவிட்டு, "நீ என்னடி செய்கிறாய்?" என்றார் என்னைப் பார்த்து.

"இந்த வருஷம் எஸ். எஸ். எல். ஸி. போகிறேன்."

"மேற்கொண்டு என்ன செய்யப் போகிறாய்?"

நான் மௌனமாக நின்றேன். சீனு மாமா எல்லோரையும் உற்றுப் பார்த்துக் கொண்டே யிருந்தார். ஒருவரும் பதில் சொல்லவில்லை.

"எஸ். எஸ். எல். ஸி. பாஸ் பண்ணின பிறகு என்கிட்டே அனுப்புங்கோ! ஒரு வருஷம் நம்ம வீட்டிலே இருந்து, ஷார்ட் ஹேண்டு, டைப்ரைட்டிங் பாஸ் பண்ண வைத்து உத்தியோகம் வாங்கிக் கொடுத்து விடுகிறேன்" என்றார்.

அம்மாவுக்கும் அப்பாவுக்கும் மகிழ்ச்சிதான். எப்படியாவது குடும்பத்திலிருந்து என்னைக் கழற்றிவிட்டால் போதுமென் றிருக்கிறார்கள். நான் போனாலும் இன்னும் ஐந்து பெண்கள் வரிசையாக இருக்கின்றனர். சொற்ப வருமானத்தில் எல் லோரையும் எப்படிக் கரை சேர்த்து விடுவது?

நான் பரீட்சை தேறுவதற்கு ஒரு வருடமாகிவிட்டது. அதற்குள் சீனு மாமா தம் வாக்கை மறந்திருப்பாரோ என்று எங்களுக்கெல்லாம் பயம்! ஆனால் நான் தேறிய கொஞ்ச நாட்களுக்கெல்லாம் சீனு மாமா கடிதம் எழுதி விட்டார். எங்களுக்கு மகிழ்ச்சி கரை புரண்டுவிட்டது.

நான் முதன் முதலாகப் பட்டணம் வந்து இறங்கியபோது அக்கா, "அடி சீதாக் குட்டி!" என்று என்னைக் கட்டிக் கொண்டு விட்டாள். என்னுடைய பழைய சமுக்காளப் படுக்கையை எடுத்து, "இதெல்லாம் எதற்கு?" என்று பழங் கடையில் போட்டு விட் டாள். பீரோவிலிருந்து ஒருபுதிய 'பின்னி' 'ரக்'கை எடுத்துக் கொடுத்து விட் டாள். பிறகு என் பெட்டி யைத் திறந்து பார்த்தாள். தோய்த்துத் தோய்த்துத் தொய்ந்து போன என் பாவாடை, தாவணிகளைப் பார்த்துப் புருவத்தை நெரித்தாள். பிறகு சீனு மாமாவிடம் "இதோ பாருங்கோ! நாளைக்கே சீதாவுக்குத் தாவணி பாவாடை 'செட்' நாலு வாங்கணும்! பட்டிக்காட் டிலே இருந்த மாதிரி இவள் இங்கே இருக்கக் கூடாது!" என்றாள்.

அப்படிப்பட்ட அக்கா வுக்கு என்ன நேர்ந்து விட் டது? நான் புரிந்துகொள்ள முடியாமல் தவிக்கிறேன்!

அவர்கள் வீட்டில் என்ன சுதந்திரம்! மாமாவுக்கு இந் தியன் ஆயில் கம்பெனியில் அக்கௌண்ட்ஸ் ஆபீஸராக வேலை. அக்கா, பெண் கல் லூரியில் ஸைகாலஜி லெக்ச ரர். ஒரே ஒரு கைக் குழந்தை! அதைக் கவனித் துக் கொள்ளவும், சமைக் கவும் ஒர் அம்மாள். வீடு

ணாடியை முதன் முதலாக அப்போதுதான் பார்க்கிறேன். அதன் முன் நின்றுகொண்டு என்னைப் பார்த்துக் கொள்வதுகூட ஒரு பொழுது போக்காக அமைகிறது.

விரைவிலேயே என்னை ஓர் இன்ஸ்டிட்யூட்டில் சேர்த்துவிட்டார்கள். அதில் சுருக்கெழுத்து, தட்டெழுத்து, அகௌண்டன்ஸி, கடிதப் போக்குவரத்து எல்லாமே கற்றுக் கொடுக்கிறார்கள். படிப்பு முழு நேரப் படிப்பாக அமைகிறது.

ஒரு நாள் பகலெல்லாம் சூரிய ஒளியே இல்லாமல் மூட்டமாக இருந்தது. சுற்றிலும் ஒரு தண்மை நிறைந்து மனத்துக்கு இதமாயிருக்கிறது.

அக்கா வாங்கிக் கொடுத்த புடவையை நான் உடுத்தியிருக்கிறேன். புடவையை உடுத்திக் கொள்வது இதுதான் முதல் தடவை. உடுத்திய பிறகு கண்ணாடியின் முன் நின்று கொண்டேன். எனக்கே ஆச்சரியம்! ''பழைய சீதா எங்கே?'' என்று கேட்டுக் கொள்கிறேன்.

மெல்லிய பச்சையில் வாங்கியிருந்த அந்தப் புடவை உடலில் அழுந்திப் படிந்திருக்கிறது. உடல் மலர்ந்திருப்பதைக் கண்டு திகைக்கிறேன். கன்னங்களில் இருந்த வாட்டம் மறைந்து இப்போது குமிழாய் வளர்ந்திருப்பது தெரிகிறது. நான் எவ்வளவு பெரியவளாய்த் தென்படுகிறேன்?

இங்கே வந்த பிறகு குடும்பக் கவலைகளை மறந்திருக்கிறேன். அதுதான் முக்கிய காரணமாக இருக்க வேண்டும். எப்போதும் ஒரு மகிழ்ச்சியில் நிறைந்திருக்கிறேன். இந்தப் பெரிய நகரம், அதில் விதம் விதமாய் உடுத்திச் செல்லும் ஆண் பெண்கள், கடைவீதிகள் கடற்கரைச் சாலை யாவுமே என்னுள்ளே ஒருவித இன்பப் பிரமையை எழுப்பி வருகின்றன. அக்கா எனக்கு நல்ல மோஸ்தர்களில் துணிகளை எடுத்துத் தருகிறாள். கொண்டை போடவும், கிரீம் தடவிப் பவுடர் போட்டுக் கொள்ளவும் கற்றுத் தந்திருக்கிறாள். அலங்காரப் பொருள்களை வைத்திருக்கும் சிறிய பெரிய டப்பிகளைக் கண்டே நான் எவ்வளவு சந்தோஷப்பட்டேன்!



''பேஷ்!'' என்று குரல் கேட்டுத் திரும்புகிறேன். மாமா ஹால் வாயில் பக்கம் நிற்கிறார். நான் வெட்கப் பட்டுக் கொள்கிறேன். அவர் மாடிப்படிகளில் ஏற ஆரம்பிக்கிறார்.

''சீதா! ஒரு கூல் டிரிங்கு கொண்டு வாயேன்!'' என்று கூறிக் கொண்டே போகிறார். நான் பிரிஜிடேரை நோக்கி நடக்கிறேன். அதிலிருந்து ஆரஞ்சு ரசத்தை எடுத்துக் கொண்டு போய் அவர் முன் வைக்கிறேன். புடவையை அடிக்கடி சரிசெய்து கொண்டே அவரைப் பார்க்கிறேன். அவர் மெள்ளப் பருகுகிறார். இடையிடையே 'பேஷ், - பேஷ்' என்கிறார். அவர் என்னைப் பார்க்கும் போதெல்லாம் எனக்குச் சிரிப்பு பொங்கி வருகிறது. நான் அலங்கரித்துக் கொண்டிருப்பதை அவர் உற்றுக் கவனிப்பதெல்லாம் எனக்கு வேடிக்கையாக இருக்கிறது. ''உனக்கு எல்லாம் நன்றாகப் பொருந்தி யிருக்கிறது'' என்கிறார் அவர்.

மறு நாள் காலை நான் சுருக்கெழுத்துப் பயிற்சியில் ஈடுபட்டிருக்கிறேன். ''இன்றைக்கு எந்தப் பாடம்?'' என்று கேட்டுக் கொண்டே மாமா உள்ளே வருகிறார். ''டிப்தாங்'' என்கிறேன் நான். அவர் என் அருகில் உட்கார்ந்து கொள்கிறார். '''டிப்தாங்' என்றால் என்ன தெரியுமா?'' என்று அவர் ஆரம்பிக்கிறார். அவர் விளக்கங்கள் எனக்குச் சுலபமாகப் புரிந்து விடுகின்றன. அவர் தினந்தோறும் காலை வேளைகளில் வரத் தொடங்குகிறார். பிறகு இரவு நேரங்களிலும் வருகிறார்.

அன்று இரவு நான் பாடங்களை எழுதிக் கொண்டிருக்கிறேன். சுருக்கெழுத்தில் ஒரு 'ஸ்ட்ரோக்' தப்பிதமாக விழுந்து விட்டது. பின்னாலிருந்து யாரோ என் பென்சிலைச் சட்டென்று பிடுங்குகிறார்கள். நான் திரும்பிப் பார்க்கிறேன். மாமா சிரித்துக் கொண்டே நிற்கிறார். அவருக்கு முன் வரிசை ஓரப் பற்கள் இரண்டு சொத்தைப் பற்கள்! அதை மறைத்துக் கொள்வதற்காக முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொள்கிறார்.

பிறகு அவர் ஸ்டூலை இழுத்துப் போட்டுக் கொண்டு என் அருகில் அமர்கிறார். 'இப்படியல்லவா போட வேண்டும்!' என்று போட்டுக் காண்பிக்கிறார். பாடம் சிறிது நேரம் நடக்கிறது. மாமா இடையிடையே ஏதாவது வேடிக்கைக் கதை சொல்ல ஆரம்பித்து விடுவார். அல்லது கேலியாக எதையாவது கூறிக்கொண்டிருப்பார். அவைகளைக் கேட்கக் கேட்க எனக்குச் சிரிப்புச் சிரிப்பாக வரும்.. அன்று அவர் சொன்ன வேடிக்கைக் கதைக்கு எனக்கு ஒரேயடியாய்ச் சிரிப்பு வருகிறது. அவரும் 'ஹஹ்ஹா' என்று தம் சொத்தைப் பற்களை மறந்து சிரிக்கிறார். சட்டென்று என் கண்கள் வாயில் பக்கம் நோக்குகின்றன. அங்கே அக்கா நின்று கொண்டிருக்கிறாள்.

''இதென்னது? உங்களுக்கு இன்னும் தூங்கலையா? மணி ஒன்பதடிச்சாச்சு! உங்க தூக்கத்தையும் கெடுத்துக் கொண்டு அந்தப் பெண் தூக்கத்தையும் கெடுத்துக் கொண்டு...''

''ட்யூஷன்இதோமுடிஞ்சுபோச்சு!'' என்கிறார் மாமா.

''நல்ல ட்யூஷன். காலை வேளையிலே வைத்துக் கொண்டால் மாத்திரம் போதாதா? ராத்திரி வேறு வேண்டுமா ?''

மாமா அதற்கு மேல் பேசவில்லை. மெள்ள எழுந்து போய் விடுகிறார். அக்கா நிதானமாக உள்ளே நுழைகிறாள். எனக்கு இன்னும் சிரிப்பு உள்ளூறக் குமைந்து கொண்டிருக்கிறது. அக்கா என்னை உற்றுப் பார்த்தவாறு நிற்கிறாள்.

''சீதா! உடுத்திக் கொண்டால் எல்லாவற்றையும் சரியாக உடுத்திக் கொள்ள வேண்டும். அலங்கோலமாக இருக்கக் கூடாது. உட்காருகிறது, எழுந்திருக்கிறது எல்லாவற்றிலுமே ஓர் அமரிக்கை வேண்டும். வீட்டிலே இருந்தாலும் சரி.''

"சரி அக்கா!"

அக்கா போகிறாள். அவள் போன பிறகுதான் என் சிரிப்பு தளர்கிறது. அக்கா கூறியபடி இன்னும் அநேக விஷயங்களில் பக்குவப்பட வேண்டியது தான் என்று நினைக்கிறேன். எனக்கே ஒன்றும் புரியவில்லை. அக்கா கூறியது மாத்திரம் மனத்தில் ஒரு நெருடலாக நின்று விடுகிறது.

அன்று மாலை! வகுப்பிலிருந்து நான் திரும்பிக் கொண்டிருக்கிறேன். வீட்டுக்குப் போக பஸ் ஸ்டாண்டில் வந்து நிற்கிறேன். வெகு நாழிகையாக பஸ்ஸைக் காணவில்லை. நின்று நின்று கால் சலிக்கிறது.

"ஏது போகவே பலமாக இருக்கே!" என்ற குரல் கேட்டுத் திரும்புகிறேன். மாமா ஸ்கூட்டரில் வந்து என் அருகில் நிற்கிறார். நான் சிரிக்கிறேன்.

"வீட்டுக்குத்தானே போகிறாய் சீதா? ஏறிக் கொள்கிறாயா?"

"ஐயோ வேண்டாம்! இதிலே எனக்கு உட்காரத் தெரியாது!"

"அதைப் பற்றி உனக்கென்ன கவலை? நான் பழக்குகிறேன். ஏறிக்கோ! மெட்ராஸுக்கு வந்தால் எல்லாம் கத்துக் கணும் தெரிஞ்சுதா?"

நான் ஏறி உட்காருகிறேன். என் தோழிகளுக்கு 'டாட்டா' கூறுகிறேன். மாமா லாகவமாக ஸ்கூட்டரை ஓட்டுகிறார். ஒவ்வொரு திருப்பத்தின்போதும் என் கண்கள் செருகிக் கொள்கின்றன. 'அம்மோவ்' என்று என்னை அறியாமல் வாய் கூவுகிறது. கண்களை மூடிக் கொண்டால் எங்கேயோ பறப்பதுபோல் இருக்கிறது.

வீட்டு வாசலில் இறங்கியவுடன் என் மேலெல்லாம் உதறலெடுக்கிறது. பிரயாணம் செய்த வேகத்தை இது வரை அநுபவித்திராததால் நெஞ்சு பதற்றமடைகிறது. வீட்டுக்குள் சிரித்துக்கொண்டே போகிறேன். "சீதா, ஒரு கப் டிரிங்க்!" என்று கூறிக் கொண்டே அவர் மாடிக்குப் போகிறார். நான் 'பிரிஜ்'ஜிலிருந்து ஆரஞ்சு ரசத்துடன் மாடிக்குப் போகிறேன். மாமா அதைப் பருகிக் கொண்டே என்னை உற்றுப் பார்க்கிறார். நான் தலை குனிகிறேன். அவர் மெள்ள, "சீதா!" என்கிறார்.

"என்ன?"

அவர் மேலே பேசவில்லை. யோசனையில் ஆழ்ந்து விடுகிறார். பிறகு மீண்டும் "சீதா!" என்கிறார்.

"என்ன?"

"ஒண்ணுமில்லே. நாம்ப ஸ்கூட்டர்லே வந்ததை அக்காகிட்டே சொல்லாதே! அவள் ஒரு கர்நாடகம்! இதெல்லாம் அவளுக்குப் பிடிக்காது. தெரிஞ்சுதா?"

நான் தலையசைக்கிறேன்.

மறுநாள் மாலையிலும் பஸ் ஸ்டாண்டில் நின்றுகொண்டிருக்கிறேன். என்னோடு என் தோழிகளும் நிற்கிறார்கள். சட்டென்று ஒருத்தி, "சீதா, உன் மாமா!" என்கிறாள். நான் தூரத்தில் பார்க்கிறேன். அவர் ஸ்கூட்டரில் வருவது தெரிகிறது. எனக்குச் சந்தோஷம் பொங்குகிறது. மற்றவர்கள் சிரிக்கிறார்கள். அவர்கள் சிரிப்பது ஒரு மாதிரியாக இருக்கிறது.

மாமா என் அருகில் ஸ்கூட்டரைக் கொண்டு வந்து நிறுத்துகிறார். அவர் முகமெல்லாம் மலர்ச்சி! அவரை இன்று பார்ப்பதற்கே புதுமையாக இருக்கிறது. நரைத் தலையெல்லாம் பிசிறு தெரியாமல் வாரியிருக்கிறார். டெரிலின் ஷர்ட் போட்டிருக்கிறார். வழக்கமாக வாயில் அடக்கிக் கொண்டிருக்கும் புகையிலையை இன்று காணவில்லை.

நான் ஏறிக் கொள்கிறேன். ஸ்கூட்டர் பறக்கிறது. சாலையில் நடுநாயகமாகப் போவது எனக்கு எவ்வளவு பிடிக்கிறது?

ஸ்கூட்டர் ஒரு திருப்பத்தில் என்மீது காற்றை வீசியடிக்கிறது.

"இதென்ன மாமா, இங்கே திருப்பி விட்டீர்கள்! வீட்டுக்குப் போகவில்லையா?"

"நீ பேசாமல் வா..."

சிறிது நேரத்தில் ஸ்கூட்டர் பெரிய சாலையில் ஓடுவதைக் காண்கிறேன். இங்கேயெல்லாம் வந்து இயற்கை அழகைக் காண வேண்டுமென்று எத்தனை நாட்கள் கனவு கண்டிருக்கிறேன்? கார்களின் இடைவெளியே மாமா ஸ்கூட்டரை அநுயாசமாக ஓட்டிச் செல்கிறார்.

ஒரு ரெஸ்டாரெண்டுள் நுழைகிறோம். மாடியில் மேஜை, நாற்காலிகள்! அருகே நீச்சல் குளத்தில் நீந்துகிற யௌவனங்கள்! மாமா முந்திரிப் பருப்புக்கும் ஸிப்ஸுக்கும் 'ஆர்டர்' கொடுக்கிறார். என் அருகே நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொள்கிறார்.

"ம்! ஆகட்டும்!" என்கிறார். நான் சிரித்துக் கொண்டே முந்திரியைக் கொரிக்கிறேன். அவர் ஒன்றிரண்டை என் கையிலிருந்து பிடுங்கி விட்டு, சிறு



குழந்தைகளைப் போல் ''ஏமாந்தாயா?'' என்று கேட்கிறார். எனக்கென்னவோ ஒவ்வொன்றுக்கும் சிரிப்புப் பொத்துக் கொண்டு வருகிறது.

''நேற்றைக்கு நீயும் நானும் ஸ்கூட்டரிலே போய் இறங்கின சேதியை உங்க அக்காகிட்டே சமையற்காரி சொல்லி விட்டாள்.''

''அதனாலென்ன?''

''என்னவா? உன் அக்கா ராத்திரி முழுதும் என்னுடன் வாதம் பண்ணிக் கொண்டிருந்தாள் தெரியுமா?''

''ஏன் அப்படிச் செய்கிறாள்?''

''மக்காய் அலங்காரம் பண்ணிக் கொண்டு காலேஜுக்குப் போகிறாளே தவிர மற்றப்படி அவள் வெறும் கட்டுப் பெட்டி! இரண்டுபேர் 'ஜோவியலா' பழகறதை அவள் விரும்ப மாட்டாள். சுத்தக் கர்நாடகம்!''

சட்டென்று சிரிப்பொலி கேட்டுத் திரும்புகிறோம். சற்றுப் புறம்பே உள்ள மேஜையில் ஓர் இளைஞனும் பெண்ணும் சிரித்துக் கொண்டிருக்கிறார்கள். இளைஞன் ஒரு டம்ளரை அந்தப் பெண் வாயருகில் பருகும்படி நீட்டியிருந்தான். அப்போது அந்தக் கிளர்ச்சியில் ஏற்பட்ட சிரிப்புத்தான் அது!

அவர் கண்களைச் சிமிட்டுகிறார். எனக்குச் சிரிப்பு வருகிறது.

டீ அருந்திய பிறகு புறப்படுகிறோம். வீட்டுக்கு இரண்டு பர்லாங் தூரத்திலேயே அவர் என்னை இறக்கி விடுகிறார். ''நீ ஒன்றும் சொல்லிக்காதே! வகுப்பில் லேட்டாகிவிட்டதுன்னு சொல்லு. நான் இன்னும் அரை மணிக்கப்புறம் வந்து சேருகிறேன்'' என்று கூறி அவர் ஸ்கூட்டரில் போய் விடுகிறார்.

அவர் மறைந்த பிறகு நான் மெள்ள நடக்கிறேன். இரண்டு அடிகள்தான் சென்றிருப்பேன். ''சீதா'' என்ற குரல் கேட்டுத் திரும்புகிறேன். எனக்குத் தூக்கி வாரிப் போடுகிறது. என் பின்னால் அக்கா நின்று கொண்டிருக்கிறாள்.

''அக்...கா'' என்று நாக்குழறுகிறேன்.

''ஏன் இங்கே இறக்கி விட்டுப் போனவர், வீட்டு வாசலில் இறக்கிவிட்டுப் போவதுதானே?''

''இல்லையக்கா! அவருக்கு வேறு எங்கேயோ போகணுமாம்!'' நான் குழறுகிறேன். அக்கா என்னையே கூர்ந்து பார்க்கிறாள்.

''உங்களைத் தேடித்தான் புறப்பட்டேன். இப்படித்தானே வரும் வழி! எப்படியும் சந்தித்து விடலாம் என்று வந்தேன்.''

அதற்கு மேல் அவள் பேசவில்லை. வீட்டுக்குப் போகிறோம். அவள் மேலும் பேசாதது எனக்கு என்னவோ போலிருக்கிறது. அக்கா உள்ளே போய் முகத்தைக் கழுவிக்கொண்டு என்னிடம் வருகிறாள்.

''இப்படி உட்கார் சீதா!''

நான் நடுக்கத்தோடு உட்காருகிறேன்.

''உனக்கு ஒரு விதத்திலும் திகில் வேண்டாம் சீதா! நீ சின்னப் பெண்! நீ எல்லாக் காரியங்களையும் நல்லா ஆலோசனை பண்ணிச் செய்யணும்! உறவு முறை, கட்டுப்பாடு, சட்ட திட்டம் இதெல்லாம் மனிதர்களுடைய நன்மைக்குத்தான்! தீமைக்கு இல்லே. இதையெல்லாம் நினைத்துப் பார்த்து உன் பிற்கால வாழ்வை நீ வகுத்துக்கணும், அம்மா! இது என் ஆசை!''

அவள் எழுந்து போய்விடுகிறாள். எனக்குப் பதில் பேசவே விடாதது மனத்தை என்னவோ செய்கிறது. சிறிது நேரம் தவிக்கிறேன். கண்களில் நீர் மல்குகிறது. அதைத் துடைத்தவாறு மாடிக்குப் போகிறேன். யாரோ என்னை உரக்கத் திட்டிவிட்டது போல் மனம் துடிக்கிறது. நான் குற்றமற்றவள் என்று உள்ளம் வாதிக்கிறது.

கட்டிலில் போய் விழுகிறேன். வெகு நேரம் அழுகிறேன். இடையே மாமாவின் ஸ்கூட்டர் சத்தம் கேட்கிறது. சிறிது நேரத்தில் அக்காவும் அவரும் பேசிக் கொள்ளும் சத்தம் கேட்கிறது. அவர்கள் வெகு நாழிகை பேசுகிறார்கள். நான் மெள்ள உறங்கி விடுகிறேன்.

மறுநாளிலிருந்து மாமா எனக்கு ட்யூஷன் சொல்லிக் கொடுக்க வருவதில்லை. எனக்கு இது ஆச்சரியமாக இருக்கிறது. என் முன் எப்போதும் அடிக்கடி தென்படுபவர் இப்போது தென்படுவதில்லை. எங்கேயாவது பார்த்துவிட்டால் முகத்தைத் திருப்பிக்கொண்டு பேசாது போய் விடுகிறார். அவரைப் பார்க்கவே பரிதாபமாக இருக்கிறது.

அன்று நாங்கள் மகாபலிபுரம் போகிறோம். நான், என் வகுப்புச் சிநேகிதிகள் எட்டுப்பேர், என் டீச்சர் ஆகிய சிறிய கோஷ்டி. கல் ரதங்களைப் பார்த்துவிட்டு எல்லோரும் கடற் கரையில் உட்காருகிறோம். மாலை நேரம் ஆகிக் கொண்டிருக்கிறது.

''சீதா உன் மாமா!'' என்று ஒருத்தி கூறவும் திரும்பிப் பார்க்கிறேன். மாமா தூரத்தில் நின்றுகொண்டு பார்ப்பது தெரிகிறது. தோழிகளிடம் 'இதோ வருகிறேன்' என்று கூறித் துள்ளிக் குதித்து ஓடுகிறேன். என்னைக் கண்டதும் மாமாவுக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை.

''உன்னை எப்படியும் இங்கே கண்டு பிடித்து விடவேண்டும் என்று நான் ஆபீஸ் வேலையை அப்படியே போட்டு விட்டு வந்திருக்கிறேன், சீதா!''

நான் அவரை நன்றிப் பெருக்கோடு நோக்கினேன்.

''நாங்கள் மகாபலிபுரம் வந்தது உங்களுக்கு எப்படித் தெரியும் மாமா?''

''நீ காலையில் அக்காவிடம் 'பெர்மிஷன்' கேட்டுக்கொண்டிருந்தது எனக்குத் தெரியும்!''

கார் ஹாரனின் சத்தம் கேட்கிறது. தோழிகள் அனைவரும் புறப்பட்டுவிட்டார்கள். ''அவர்களிடம் சொல்லிவிடு. நாம் ஸ்கூட்டரில் போகலாம்'' என்கிறார் மாமா! நான் டீச்சரிடம் கூறிவிடுகிறேன். அவர்கள் கோஷ்டி போய் விடுகிறது.

நான் மணற் கரையில் குதித்து ஓடுகிறேன். அலை வந்து சமன் செய்த தரையில் தாவி ஓடுகிறேன். ''சீதா!'' என்று கூறிக்கொண்டு மாமாவும் ஓடிவருவது தெரிகிறது. நான் அலைப்பக்கம் செல்லும்போது அவர் சட்டென்று என் கையைப் பிடிக்கிறார். ஒரு கணம் என் உடல் நடுங்குகிறது. அவர் என் கைகளை அழுத்திய வலுவில் கண்ணாடி வளையல்கள் இரண்டு பொடிப் பொடியாகின்றன. என் முகத்தை உற்றுப் பார்த்தவாறே அவர் தம் பிடிப்பைத் தளர்த்திக் கையை எடுத்துவிடுகிறார்.

''ஒன்றுமில்லை; நீ தண்ணீரில் விழுந்து விடுவாயோன்னு பயந்தேன்'' என்கிறார்.

அந்தி நேரத்தில் அங்கிருந்து புறப்படுகிறோம். ஸ்கூட்டர் பறந்து செல்கிறது. மாமா இடையிடையே பாடிக் கொண்டு ஓட்டுகிறார்.

ஊரை நெருங்கும் சமயம்! படரென்று வெடிச் சத்தம். ஸ்கூட்டர் திசை திரும்புகிறது. மாமா சட்டென்று அதை நிறுத்துகிறார். கீழே இறங்குகிறோம். பின் சக்கர டயர் வெடித்திருக்கிறது.

பட்டணத்து எல்லையில் ரிப்பேர் செய்து கொண்டு நாங்கள் வீடு திரும்பும்போது மணி எட்டாகிவிடுகிறது. மாமா என்னைத் தொலைவில் இறக்கி விட்டுவிடுகிறார். நான் தனியாக முதலில் வீட்டுக்குள் நுழைகிறேன். உடம்பெல்லாம் நடுங்குகிறது.

வெளி வராந்தாவில் சற்றுத் தயங்கி நிற்கிறேன். உள்ளே யாரேனும் தென்படுகிறார்களா என்று பார்க்கிறேன். ஹால் நாற்காலியில் அக்காவும் ரங்குவும் பேசிக் கொண்டிருக்கின்றனர். என்னைப் பற்றித்தான் பேசியிருப்பார்களோ? அக்காவுக்கு ரங்கு ஒரு தூரத்து உறவு! வந்து இரண்டு மாதங்களாகின்றன.

மெள்ள உள்ளே நுழைகிறேன். அக்கா என்னை ஏறிட்டுப் பார்க்கிறாள். அந்தப் பார்வையின் சக்தி தாங்காது நான் நடுங்குகிறேன்.

''சீதா, ஏன் லேட்?''

''வழியில் கார் ரிப்பேர் ஆகிவிட்டது. எல்லோருமே இப்போதுதான் வருகிறோம்!''

''கார் ரிப்பேரா?'' அக்கா சிரிக்கிறாள். ''உன் சிநேகிதி மாலதியை நான் வரவழியிலேயே பார்த்து விட்டேன்... அவர்கள் சாயங்காலமே வந்துவிட்டார்கள்!''

நான் தயங்குகிறேன். என் காலின் கீழே பூமி நடுங்கிக் கொண்டிருக்கிறது. மிரள மிரள விழிக்கிறேன்.

''நீ வேறு காரணம் ஒன்றும் சொல்ல வேண்டாம். ஒரே ஒரு வேண்டுகோள்! நீ தினமும் எப்படியாவது ஐந்து மணிக்குள் வீட்டில் இருக்க வேண்டும். அக்காவின் வேண்டுகோளை நிறைவேற்றுவாயல்லவா?''


எனக்கு நீர் மல்குகிறது. 'ஆகட்டும்' என்று தலையசைக்கிறேன். பிறகு நகர்ந்து விடுகிறேன். நெஞ்சில் வேதனை நிறைந்து விடுகிறது. அறைக்கு வருகிறேன். ''வேண்டுகோளா இது? கட்டளைதானே?'' என்று மனம் குமுறுகிறது. வேறு ஒருவர் வீட்டில் இப்படி அடிமையாய் இருக்க வேண்டியிருக்கிறதே என்று உள்ளம் நோகிறது.

அன்று சனிக் கிழமை. மாலையில் கடைசி வகுப்புக் கிடையாது. நான் வீட்டுக்குத் திரும்பி வந்து கொண்டிருக்கிறேன். ஜோரென்று மழைத் தூறல் வேகமாகத் தெளிக்கிறது. நான் பஸ் ஸ்டாப் அருகில் ஒதுங்குகிறேன்.


''என்ன யோசனை பலமாக இருக்கிறதே!'' என்று குரல் கேட்டுத் திரும்புகிறேன். மாமா ஸ்கூட்டரை நிறுத்தி விட்டு என் அருகில் வருகிறார்.

''வருகிறாயா, ஸ்கூட்டரிலேயே போகலாம்!''

நான் தயங்குகிறேன்.


YOU ARE
NOW
LOOKING AT
THE RESULT OF
25 YEARS OF RESEARCH....
For 25 years Bentex have tested and re-tested their straps to ensure that they meet the most rigid international standards.
Next time you buy a watch strap make sure it carries the Bentex trade mark—your guarantee of superlative quality.
Bentex
STRAPS · BRACELETS · WATCHES
ASK FOR THE BENTEX CATALOGUE - AVAILABLE AT ALL WATCH DEALERS.


அய்யனார் காபி
காலைச்செய்தி!
கவலைதருவதாக இருந்தாலும்
என்ன? அய்யனார் காபியின்
நறுமணம் ஒன்று போதுமே
புத்துணர்ச்சி பெற
அய்யனார் காபி & டீ கம்பெனி தூத்துக்குடி



"தூறல் பலத்துவிடப் போகிறது. எவ்வளவு நாழிகை நிற்கப் போகிறாய்? இலேசுத் தூறல் இருக்கும்போதே போய் விடலாம்."

நான் 'சரி' என்று தலையசைக்கிறேன். பிறகு பின்பக்கத்தில் ஏறி உட்காருகிறேன். ஸ்கூட்டர் புறப்படுகிறது. சிறிது நேரத்திலேயே தூறலும் நின்று விடுகிறது. முகத்தை இடது கையால் துடைத்துக் கொண்டு பார்க்கிறேன். அவர் சாலையை மாற்றி வேறு பக்கம் திருப்புவதைக் கண்டதும் "மாமா!" என்று கூவுகிறேன்.

"நீ பயப்படாதே சீதா! இன்னிக்கு எப்படியும் நம்ம இரண்டு பேரும் சினிமா போகணும்! அக்கா எப்படித் திட்டினாலும் பரவாயில்லே!"

"நிறுத்துங்கள்மாமா, நிறுத்துங்கள்!" நான் கூவுகிறேன்.

அவர் தயக்கத்தோடு 'பிரேக்' போடுகிறார். நான் உடனே கீழே குதிக்கிறேன். "என்னை மன்னியுங்கள் மாமா! அக்காவுக்கு நான் மானசீகமாக ஒரு வாக்குக் கொடுத்திருக்கிறேன்."

"மானசீகமாவது, ஞானசீகமாவது? என்ன உளறுகிறாய்?"

"இல்லே மாமா, இதிலிருந்து நான் பிறழ்வதற்கில்லே!"

நான் வேகமாக நடக்கிறேன். மாமா சிறிது நேரம் நிற்கிறார். பிறகு ஸ்கூட்டரில் என்னைத் தாண்டி வேகமாகப் போய் விடுகிறார். நான் அந்தச் சாலையை விட்டு இன்னும் திரும்பவில்லை. காலடி ஓசை கேட்டுப் பின்னால் பார்க்கிறேன். அருகில் ரங்குவைக் கண்டதும் எனக்குத் தூக்கி வாரிப் போடுகிறது.

அவன் என்னிடம் பேச முயல்வது போல் நிற்கிறான். எனக்கு ஆத்திரம் மூண்டு வருகிறது. "என்ன?" என்று விழி விழித்துக் கேட்கிறேன்.

அவன் தயங்குகிறான். "சொல்கிறேன் என்று தவறுதலாக நினைத்துக்கொள்ளாதீர்கள்!" அவன் நாக்குழறுகிறது.

"சொல்லுங்கள்!"

"நீங்கள் இப்படிச் செய்யலாமா?"

"எப்படிச் செய்கிறேன்?"

"அக்காவுக்குப்பிடித்தமில்லாததை."

"என்ன செய்துவிட்டேன்?"

"இப்படி ஸ்கூட்டரில் அவரோடு ஊர் சுற்றலாமா?"

"மிஸ்டர்! நாக்கை அடக்கிப் பேச வேண்டும்! யார் ஊர் சுற்றினார்கள்?"

"என் கண்களால் பார்த்தேன், சொல்கிறேன்!"

"நீங்கள் பார்த்தால் அது நிஜமாகி விடுமா?"

"மன்னிக்கவும்; என் பார்வையை நான் நம்புகிறேன்."

எனக்குக் கோபம் மூள்கிறது. அவனைச் சீற்றத்தோடு பார்க்கிறேன். "நான் என்ன செய்தால் உங்களுக்கு என்ன? அது என் பாடு! நீங்கள் யார் என்னை நிழல் போல் தொடர்வதற்கு?"

"நான் உங்களைத் தொடரவில்லை.. என் நண்பனைப் பார்த்துவிட்டுத் திரும்புகிறேன். உங்களைச் சந்தித்தேன். அவ்வளவுதான்!"

"எல்லாம் தெரியும்! நிறுத்திக்கொள்ளுங்கள்! நீங்களும் அக்காவை அண்டிப் பிழைக்க வந்தவர்தான். நான் உங்களை விடத் தாழ்ந்தவளில்லை. நீங்கள் என்னைக் கண்காணிக்க வேண்டியதில்லை."



"தீபாவளிக்கு வந்த மாப்பிள்ளை ஸ்கூட்டர் வாங்கிக் கொடுத்தால் வீட்டை நோக்கித் திரும்பிடுவார்னு நினைச்சேன். ஒரு மாசமா இங்கேயே சுத்திண்டிருக்கார்!"

அவன் தயங்குவது தெரிகிறது. அவன் கண்கள் சிறிது மங்குகின்றன. என்னைச் சற்று அச்சத்தோடு பார்க்கிறான். "நான் அண்டிப் பிழைக்க வந்தவன்தான். ஆனால் ஒன்று! எனக்கு மானம் இருக்கிறது!" அவன் படபடப்போடு பேசிவிட்டுத் தலை குனிந்தவாறு போய் விடுகிறான்.

என் மனம் வெகு நேரம் கொதிக்கிறது. வீட்டை நோக்கி நடக்கிறேன். நினைவில் அழல் எரிகிறது. அக்காவிடம் எல்லாவற்றையும் சொல்லி விடுவானோ என்று தோன்றுகிறது. சொல்லட்டுமே, நான் இன்றைக்கே, இந்தக் கணமே இந்த வீட்டை விட்டுப் போகத் தயார்!

அறைக்கு வந்த பிறகும் என் மனம் அடங்குவதில்லை. அங்கும் இங்கும் உலாவுகிறேன். "எனக்கு மானமிருக்கிறது!" என்று அவன் கூறிய சொல் என்னை அரித்து விடுகிறது. அப்படியென்றால் எனக்கு?

இரவாகிறது. அக்கா வீட்டுக்கு வந்தாகிவிட்டது. எல்லாவற்றையும் கேட்டுவிட்டு எப்போது என் அறைக்கு வருவாள் என்று காத்திருக்கிறேன். அக்கா வரவில்லை. ரங்கு அவளிடம் கூறவில்லை!

மறு நாள் விடுமுறை நாள். எல்லோரும் வீட்டில் இருக்கிறார்கள். அக்கா தன் சிநேகிதி வீட்டுக்குப் போகத் தயார் செய்து கொண்டிருக்கிறாள். ரேடியோ மெதுவாக ஒலித்துக் கொண்டிருக்கிறது.

ரங்கு தன் அறையை விட்டு வெளி வருவது தெரிகிறது. நேரே அக்காவை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறான். பிறகு அக்காள் பேச்சு கேட்கிறது.

"நான் ஊருக்குப் போகப் போகிறேன், அக்கா!"

"ஊருக்கா? அங்கே போய் என்னடா செய்யப் போறே?"

"இங்கே இருக்க மனசுக்குப் பிடிக்கலே, அக்கா!"

"பிடிக்கலேயா? உனக்கென்ன குறை? பேசாமல் இருந்திண்டிரு! மனசு எல்லாம் சரியாகப் போய் விடும்!"

அக்கா குடையை விரித்துக் கொண்டு வெளியே போகிறாள். ரங்கு திரும்பி வருகிறான்.

எனக்கு மனம் அடித்துக் கொள்கிறது. எந்த நிமிடமும் என்னைப் பற்றிச் சொல்லி விடுவானோ என்று தோன்றுகிறது. சொன்னால் சொல்லிக் கொள்ளட்டும். இங்கே யார் பயப்படப் போகிறார்கள்!

நான் அறையை விட்டு வருகிறேன். வராந்தாவைத் தாண்டி வெளி வாயில் பக்கம் போகிறேன். சற்று நேரம் நின்று தெருவைப் பார்க்கிறேன். பிறகு உள்ளே நுழையும்போது மெள்ளச் சன்னல் வழியாக அவன் அறைக்குள் பார்க்கிறேன். என் மனம் துணுக்குறுகிறது. உள்ளே பெட்டி படுக்கையைக் கட்டித் தயாராக வைத்திருக்கிறது. அவன் துண்டால் தன் முகத்தை மூடிக் கொண்டு விசித்துக் கொண்டிருக்கிறான். எனக்கு ஒன்றும் தோன்றவில்லை. அறைக்குத் திரும்பி வந்து விடுகிறேன்....

மனம் ஏனோ குமைகிறது. என் பேச்சு அவன் மனத்தைப் பாதிப்பானேன்? நான் என்ன சொல்லி விட்டேன்? நான் சொன்னதில் என்ன குற்றம் இருக்கிறது?

இரண்டு நாட்கள் செல்கின்றன. அன்று மாலை திரும்பிக் கொண்டிருக்கிறேன். சாலைத் திருப்பத்தை அடைந்ததும் ரங்கு முன்னால் செல்வதைக் காண்கிறேன். நான் சற்று யோசிக்கிறேன்.

பிறகு விறு விறென்று நடந்து அவனைப் பிடித்து விடுகிறேன். என்னைக் கண்டதும் அவன் திகைக்கிறான்.

"நான் கூறியது உங்கள் மனத்தைத் துன்புறுத்தி இருந்தால் மன்னித்து விடுங்கள்! என்றால் நீங்கள் இந்த வீட்டை விட்டுப் போக வேண்டாம்!" என்கிறேன்.

அவன் விழித்தவாறு நிற்கிறான். பிறகு, "நீங்கள் ஒன்றும் காரணமில்லே. நானே இரண்டு மாதங்களாகப் போக வேண்டும் என்றுதான் சொல்லிக்கொண்டிருக்கிறேன். அக்காதான் என்னைத் தடுத்து நிறுத்தியிருக்கிறாள். இதை நீங்க தெரிந்துகொள்ளுங்கள்" என்றான்.

நான் அவனை ஏறிட்டுப் பார்க்கிறேன். "அன்று நான் திரும்பி வரும் போது தூறல்! பஸ் கிடைக்கவில்லை. அதனால் தான் மாமா ஸ்கூட்டரில் ஏறினேன். அவர் வண்டியை வீட்டுக்கு விடுவதை விட்டு வேறு திசை திருப்புவதைக் கண்டுதான், நான் அவரை நிறுத்திக் கீழே இறங்கி விட்டேன். இதை நீங்கள் தெரிந்து கொள்ளுங்கள்."

இருவரும் மௌனமாகிறோம். வீட்டை நோக்கி மெள்ள நடக்கிறோம். அவன் கால்கள் நொண்டுவதை நான் இப்போதுதான் கவனிக்கிறேன்.

"காலிலே என்ன?"

"கல் தடுக்கி விட்டது. இப்போது சீழ் கொண்டிருக்கிறது."

ரங்குவுக்கு முன்னால் நடந்துகொண்டிருந்தவள் சிறிது தூரம் சென்றதும் திரும்பிப் பார்க்கிறேன். அவன் இ

போதும் தலை குனிந்து கொண்டிருப்பது என் மனத்தை என்னவோ செய்கிறது.

இரவுகள் நகர்கின்றன. என் படிப்புத்தான் என்னைக் கவர்கிறது. இடையிடையே நினைவுகள் அப்பால் செல்கின்றன. ரங்குவின் கவிழ்ந்த முகம் எனக்குத் தெரிகிறது. அதில் கண்கள் நீரால் மல்கி நிற்பது தெரிகிறது. என் மனத்தில் இதை நினைத்ததும் இப்போது இரக்கம் சுரந்து விடுகிறது! அவனும் நம்மைப் போல் தானே? அவனுக்கும் மனம் என்று ஒன்று இருக்கத்தானே செய்கிறது? இரவுகளில் நான் படித்து விட்டு உறங்க வெகு நாழியாகிவிடுகிறது. விளக்கை அணைத்ததும் அவன் அறையை ஒரு முறை கண்ணோட்டம் விடுகிறேன். என் மனத்தில் ஒருவித நிம்மதி நிறைகிறது.

எனக்கே வியப்பாக இருக்கிறது. முன்பு போல் மாமாவின் உருவம் என் கண் முன் தோன்றுவதில்லை. அவர் மாடி மறைவில் ஒருவரிடமும் கலக்காமல் ஒதுங்கியிருப்பது போல் அவரது நினைவுகளும் என் மனத்தில் ஒதுங்கி இருக்கின்றன.

அன்று வரும்போது அவன் வராந்தாவில் நிற்கிறான். நான் சிரித்துக் கொண்டே, "கால் குணமாகி விட்டதா?" என்று கேட்கிறேன். "குணமாகி விட்டது!" என்று அவன் தலையசைக்கிறான். அவன் பார்வையில் மலர்ச்சியில்லை. நான் அறைக்கு வருகிறேன். இவன் இரண்டு வார்த்தை என்னிடம் பேசக் கூடாதா என்று எனக்குத் தோன்றுகிறது. யோசிக்க யோசிக்க அது ஒரு குறையாக எனக்குப் படுகிறது. அந்தக் குறை என் மனத்துள் எழுப்பும் சூன்யம் பெரிதாகத் தெரிகிறது. ஒரு வேளை என்னை அவமானப்படுத்துகிறானோ? நெஞ்சம் குமுறுகிறது. அழுகையும் வந்து விடுகிறது. முடிவு காணாமல் விக்கி அழுகிறேன். இடையிடையே இவன் உருவம் கண் முன் ஏன் வருகிறது என்று வினவிக் கொள்கிறேன். முன்பு அந்த உருவத்தையே எவ்வளவு வெறுத்தேன். இப்போது.....? அவன் உருவத்தில் என்ன கவர்ச்சி வந்து விட்டது? எனக்கே புரியவில்லை. நினைக்க நினைக்க மேலும் அழுகைதான் கூடுகிறது.

என் பரீட்சைகள் முடிந்து விட்டன. அன்று இன்ஸ்டிட்யூட்டில் மாலையில் ஒரு விடைபெறுப்பு விழா ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

மாலையில்தான் விழா! மாலை நெருங்க நெருங்க என் தவிப்பு அதிகமாகிறது. ரங்குவையும் அழைத்துச் செல்ல வேண்டும் என்று மனம் சொல்லிக் கொண்டேயிருக்கிறது. புறப்படுமுன் அவன் அறைப் பக்கம் மெள்ளச் செல்கிறேன். சன்னல் வழியாக எட்டிப் பார்க்கிறேன். அவன் புத்தகத்தில் ஆழ்ந்திருப்பதைக் கண்டதும் இலேசாகக் கனைக்கிறேன். அவன் நிமிர்கிறான். பிறகு சன்னலருகே வருகிறான்.

"ஒன்றுமில்லை. எங்கள் இன்ஸ்டிட்யூட்டில் விடைபெறுப்பு விழா நடக்கிறது. நீங்களும் வருகிறீர்களா?"

"எப்போது?"

"இப்போதுதான். வருகிறீர்களா?"

"மன்னிக்கவும்! உங்களோடு நான் வருவதற்கில்லை!"

என் மனத்தில் அடி விழுகிறது. நான் நகர்ந்து தெரு வாயிற் பக்கம் வருகிறேன். கால்கள் தரையில் பாவுவதில்லை. பூமி நகர்ந்து போவதுபோல் தோன்றுகிறது. கண்களில் அழுகை பீறிட்டு வருகிறது. "நான் என்ன அவ்வளவு கேவலமா? என்னுடன் வர அவருக்கு ஏன் பிடிக்கவில்லை?"

கண்களைத் துடைத்துக் கொள்கிறேன். மெள்ள நடந்து தெருவைக் கடக்கிறேன். பஸ் ஸ்டாண்டு வரையில் வந்து விட்டேன். இப்போது அழுகை குமுறி வருகிறது. எங்கேயாவது போய் நன்கு அழ வேண்டும் போல் தோன்றுகிறது. விழாவில் என்னால் கலந்து கொள்ள முடியாது என்று தெரிந்து விடுகிறது. வீடு திரும்பவும் விருப்பமில்லை. எங்கே போவது? பஸ் ஸ்டாண்டிலேயே சற்று விசிக்கிறேன்.

நெஞ்சின் விக்கலை அடக்கிக் கொள்கிறேன். கடற்கரை பஸ் தென்பட்டதும் உடன் ஏறி விடுகிறேன்.

கடற்கரையை அடையும்போது, பொழுது சாய்ந்திருக்கிறது. மணற்கரையில் கூட்டத்தை விட்டுத் தனித்து நடக்கிறேன். கடல் ஓரமாய்க் கீழே உட்கார்ந்ததும் 'பக்'கென்று அழுகை பொங்கி வருகிறது. அழுது தீர்க்கிறேன்.

மீண்டும் தலை நிமிரும்போது இருட்டியிருக்கிறது. நினைவில் இன்னும் வேதனை கொந்தளிக்கிறது. அழுதழுது கண்கள் வறண்டு விட்டன. மனத்தில் ஏதோ ஒரு தீர்மானம். இவன் இப்படிக் கூறினதாலா நாம் இப்படித் துக்கப்பட வேண்டும்? சற்று அலட்சியத்தோடு அப்படி நினைக்கிறேனே ஒழிய மறு கணம் அவன் ஏன் அப்படிச் சொன்னான் என்ற துக்கமே மீண்டும் வருகிறது.

கைகளைக் கழுவி முகத்தைத் துடைத்துக் கொள்வதற்காகத் தண்ணீர்ப் பக்கம் போகிறேன். அலைகள் என் கால்களைக் கழுவுகின்றன. மேலும் இரண்டடிகள் உள்ளே நடக்கிறேன். சட்டென்று என் கைகளை யாரோ பிடிக்கிறார்கள். திரும்பிப் பார்க்கிறேன். என் உள்ளம் பொங்கி எழுகிறது. அங்கே அவர்தான் நின்று கொண்டிருக்கிறார்! ரங்குதான்!

"இதென்ன பைத்தியம்? என்ன செய்கை செய்யத் துணிகிறீர்கள்? உயிரை விட்டு விடுவதுதான் உங்களுக்கு ஒரு வழியாகத் தென்பட்டதா?"

நான் திகைக்கிறேன். "நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?"

"நான் உங்களை அப்படி என்ன சொல்லி விட்டேன்? நீங்கள் ஏன் உயிர் விடத் துணிகிறீர்கள்?"

எனக்கு விஷயம் புரிந்து விட்டது. அலைகள் பக்கம் செல்வதை அவர் நான் உயிர் துறக்கப் போவதாக எண்ணிவிட்டார். என்னைக் காப்பாற்றவே கையைப் பிடித்து இழுத்திருக்கிறார். என் மீது இவருக்கு எவ்வளவு கரிசனம்?

நான் மணலுக்குத் திரும்புகிறேன். என்னால் தாங்க முடியவில்லை. சட்டென்று விசிக்க ஆரம்பித்து விடுகிறேன். அவர் என் அருகில் அமர்கிறார். கண்களைத் துடைத்து விடுகிறார். என் அழுகை அடங்க நேரம் பிடிக்கிறது.

"சாயங்காலம் நீங்கள் எவ்வளவு வெறுப்போடு பதில் கூறினீர்கள்?"

"அதற்குத்தான் பிராயச்சித்தம் செய்து விட்டேனே. நீ ஒரு மாதிரி முகத்தை வைத்துக் கொண்டு போனதைப் பார்த்ததும் பயந்து விட்டேன். பிறர் வீட்டில் அண்டி வாழ்பவர்களுக்கு ஒரு தனி ரோசம் உண்டு! உனக்கும் சரிதான்! எனக்கும் சரிதான்! அந்த ரோசத்தில் நீ என்ன செய்து கொள்வாயோ என்று பயந்து பஸ் ஸ்டாண்டுக்கு வந்தேன். நீ கடற்கரை பஸ்ஸில் ஏறினதைக் கண்டதும் எனக்கு உதறலெடுத்து விட்டது. உடனே மறு பஸ் பிடித்து இங்கே வந்து தேடினேன். நல்லவேளை......."

எனக்குச் சிரிப்பு வருகிறது. அப்படியே மௌனமாக அமர்ந்திருக்கிறோம். நட்சத்திரங்கள் பொரிந்திருக்கின்றன. என் கையில் அவர் பற்றிய இடம் குளுமையாய் இருக்கிறது. முன்பு ஒரு தரம் மாமா பற்றியதும் நினைவு வருகிறது. அதற்கு இதற்கும் எவ்வளவு வித்தியாசம்? மாமா என் மகிழ்ச்சிக்காக வேண்டி வாங்கிக் கொடுத்ததெல்லாம் நினைவுக்கு வருகிறது. ஆனால் இன்று அதைவிடப் பன்மடங்கு மகிழ்ச்சி, இதோ இவர் சாதாரணமாகத் திரும்பிப் பார்க்கும் ஒரு சிறு பார்வையிலேயே எப்படி ஏற்பட்டு விடுகிறது?

நினைக்கும்போதே என்னை உலுக்கியெடுக்கிறது. மாமாவோடு பழகுவதில் எத்துணை தூரம் விகல்பத்தின் ஓரத்தில் இருந்தேன் என்பது இப்போது பளிச்சிட்டு விடுகிறது. ஓர் அடி அந்தப் பக்கமோ இந்தப் பக்கமோ எடுத்து வைத்திருந்தால்..... உடம்பு சிலிர்த்து விடுகிறது. எனக்கு ஏன் இந்த உணர்வு அப்போது இல்லாமற் போய் விட்டது?

இரவு நேரம் கழித்து வீட்டுக்குத் திரும்புகிறோம். அக்கா எங்களை ஆச்சரியத்தோடு பார்க்கிறாள். "இவர்களுடைய விழாவுக்குப் போய்விட்டு வருகிறோம்!" என்கிறார் ரங்கு.

"நீ மட்டுந்தான் அவள் விழாவில் கலந்துகொள்ள வேணுமா? எங்களைக் கூப்பிட்டிருக்கக் கூடாதா? உனக்கு மட்டுந்தான் அவள் மீது அக்கறையா?"

நான் அக்காவைப் பார்க்கிறேன். எனக்கு மெய் சிலிர்க்கிறது. அக்காவின் கைகளைப் பிடித்துக் கொள்கிறேன். அப்படியே அழுது விடுகிறேன். இடையிடையே, "எனக்கு இப்போது எல்லாம் புரிகிறதக்கா! எல்லாம் புரிகிறது!" என்கிறேன். அக்கா என் தலையை மெள்ள நிமிர்த்துகிறாள்..... "அக்கா! என்னை மன்னித்து விடு" என்று குமுறுகிறேன்.

"இதென்ன அசடு. இவ்வளவு அழுகை! எதற்கு மன்னிப்பு? இயற்கையின் சுபாவத்தைப்போய்க் குற்றம் கண்டு பிடிக்க முடியுமா? இளங் கொடிகள் படர்கின்றன. படர்வது அவற்றின் சுபாவம். நல்ல கொம்பு கிடைத்தாலும் சரி. கரையான் அரித்த கொம்பு கிடைத்தாலும் சரி; அவை படர்ந்து விடுகின்றன. அவை படர்வதற்கு நல்ல ஆதாரத்தைத் தேர்ந்தெடுத்துக் கொடுப்பது சுற்றியுள்ளவர்களின் கடமை! அவ்வளவுதான்....... டேய், ரங்கா! நீ எங்கே போய் விட்டாய்? இந்தா இங்கே வா! உன்னைத்தான் ஆதாரமாய் நினைத்திருக்கிறேன்......."

நான் அக்காவை நிமிர்ந்து பார்க்கிறேன். இப்போது அக்காவின் பார்வை எனக்கு ரொம்ப ரொம்ப.......



தையலார் சொல் கேட்டு
மையல் கொள்ளாதே!



பட்சணம் வரும் பின்னே
பைரவன் கதறல் முன்னே!


தீபாவளி



பொல்லாத வானரங்களிடையே சல்லாபிக்க முடியுமா?



கிழவர் வாய் திறந்தால்
இளமை பறி போகும்!



எண்ணெய் தேய்த்துக்கொள்ளவா
வந்தான், எமகாதகன்!



பெண்ணிடம் பித்தன்
என்னிடம் பேயன்!



கடலில் மூழ்கினால் தான்
கங்கா ஸ்நானம் ஆகும்!



நரகாசுரன்
வரம் கேட்க...
மாப்பிள்ளை
கொண்டாடினார்!
மாமனார்
திண்டாடினார்!!
பட்சணத்தைக்
கொண்டா
என்றேன்;
மாப்பிள்ளை
தட்சிணாமூர்த்தியைக்
காணோம்!
பலே மொழிகள்!
சூரணை
கெட்டவனுக்குச்
சூட்டுப்
போட்டுச்
சொல்!
மாப்பிள்ளை கடுகத்தனை
மோதிரம் சுமப்பதற்கு
மாமனார் கைலாய மலை
அளவு கடனைச் சுமக்க
வேண்டும்!
கையிலே மோதிரம் போடு என்றார்;
கழுத்திலே கையைப் போட்டார்!
பஞ்சாங்கம் பார்த்தாலும்
வந்த சனியன் போகுமா?
1965
போடா, போடா! உங்களை இல்லை மாப்பிள்ளை!
பிச்சைக்காரனை!
வருகையில் சோட(ா)சோபசாரம்
போகையில் போடா போபசாரம்

சிர்பூர் சிற்பங்கள்

அரவரசன்

கால வெள்ளத்தை எதிர்த்து நின்று கலையின் பெருமையைக் கவினுற விளக்கும் செல்வங்களான சிற்பச் சிலைகள் நம் பாரத நாட்டின் பழம் பெருமையைப் பகர்வனவாகும். மத்தியப் பிரதேசத்தின் அடர்ந்த காடுகளுக்கு இடையே மேற்படி பெருமையின் உறைவிடமாக உள்ள சிர்பூர் சிற்பங்களின் சிறப்பை விளக்குவது இந்தக் கட்டுரை.



அக்காலத்தில் ஸ்ரீபூர் என்று வழங்கிய சிர்பூர், ராய்கேடா என்ற ஏரிக்கும் மஹாநதிக்குமிடையே அமைந்துள்ளது. ஏழாவது நூற்றாண்டில் இந்தியாவுக்கு வருகை தந்த சீன யாத்திரீகர் யுவான் சுவாங் இந்த நகரையும் கண்டு சென்றதாகத் தெரிகிறது. ஆண்டு தோறும் தைப்பூசத்தில் நடைபெறும் திருவிழாவுக்கு ஆயிரக்கணக்கில் மக்கள் இங்கு கூடி மஹாநதியில் நீராடுகின்றனர்.

சிர்பூரின் பழங்கால நிலையை அறிய இதுகாறும் எவ்விதமான ஆதாரமும் கிட்டவில்லை. ஆனால் சாரங்கர்ஹ் என்ற இடத்திலிருந்து கிட்டிய இரு செப்பேடுகள், சரப்பூர் என்ற பெயர் கொண்ட இந்த இடத்தைத் தலைநகராகக் கொண்டு சோம வம்ச மன்னர்கள் ஆண்டதாகக் கூறுகின்றன. எட்டாம் நூற்றாண்டிலிருந்துதான் இந்நகரைப் பற்றிய விரிவான செய்திகள் நமக்குக் கிடைக்கின்றன. அப்போதும் சிர்பூர் என்ற பெயரோடுதான் இந்நகர் விளங்கியதாகவும், சோம வம்சத்து முக்கிய அரசனான பாலார்ஜுனன் அல்லது மகாசிவ குப்தன் காலத்தில்தான் இந்த நகரின் கீர்த்தி குன்றிலிட்ட விளக்கென ஒளிர்ந்ததென்றும் பல ஏடுகள் கூறுகின்றன.

கண்ணையும் கருத்தையும் கவரும் கோயில்கள் சிர்பூரில் இல்லையெனினும், அந்நகரத்துச் சிற்பிகள் கடைந்தெடுத்த கணக்கற்ற கற்சிலைகள் நம் கவனத்தைக் கவருகின்றன. இங்குள்ள லக்ஷ்மணன் கோயில் சுடுசெங்கற்களால் கட்டப்பட்டிருந்தும், காலத் தாக்குதலை எதிர்த்து இன்னும் உறுதி கொண்டதாக விளங்குகிறது. எட்டாம் நூற்றாண்டில் தோன்றிய இந்தச் செவ்வண்ணக் கோயிலைத் துப்புரவு செய்த போது 73 சிலைகள் கிடைத்தனவாம். மூலஸ்தானத்தை அலங்கரிக்கும் அரவிந்தன் சிலையில் அங்கத்துக்கு அங்கம் அழகு மிளிருகிறது. மகாநதிக் கரையில் கந்தேஷ்வர் ஆலயம் உள்ளது. இக்கோயிலும் சுடு செங்கற்களால் ஆனது. மூலஸ்தானத்தில் புத்தர் சிலைகள் இரண்டு உள்ளன. மகாசிவகுப்தன் திட்டமிட்டிருந்த விஹாரத்தில் பிரதிஷ்டை செய்யப்படவிருந்த இவ்விரு சிலைகளும் எவ்வாறு இங்கு குடிகொண்டன என்பது தெரியவில்லை. சந்நிதியின் முகப்பில் கருட வாகனத்தில் காட்சி அளிக்கும் கேசவனையும், வராக அவதாரத்தையும் அவசியம் காண வேண்டும். வடஇந்தியக் கோயில்களில் காண்பதற்கு அரியதான கூத்தபிரானையும், மஹிஷாசுரமர்த்தனியையும் புறச் சுவர்களில் பார்க்கலாம். 1954ம் ஆண்டு லக்ஷ்மண் கோயிலை அடுத்து இருந்த பெரும் மண் மேட்டை இடித்தபோது








சிவன் கோயில் ஒன்று தென்பட்டது. அக்கோயிலின் முன் யக்ஞ சாலை உள்ளது. மூலவரான சிவலிங்கத்தோடு, மகிஷாசுரமர்த்தனி, துவாரபாலகர்கள்—பாலிகைகள் முதலிய சிற்பங்களை இங்கு காணலாம்.

நடனச் சிறப்பை நமக்குத் தெரிவிக்கும் வகையில் மகா கோசலத்தின் சிற்பிகள் படைத்த சிற்பங்கள் சிர்பூரில் இருப்பதோடு, அத்தேசத்தில் கட்டடக் கலையில் கரைகண்ட கலைஞர்களின் கைத்திறனை விளக்க ஒரு பௌத்த மடாலயமும் அங்கு உள்ளது. புகுவழி, சபா மண்டபம், பிரார்த்தனை மண்டபம், தங்கும் விடுதி, மேன் மாடம் முதலிய பிரிவுகளை இம்மடத்தில் காணலாம். பிரார்த்தனை மண்டபத்தில் கருணைக் கடலான புத்த பெருமானைத் தரிசனம் செய்கிறோம். ஆறரை அடி உயரமுள்ள இச்சிலை இங்குள்ள மற்ற உருவங்களை விடப்பெரிது. அகத்திலும் புறத்திலும் ஆட்சி புரியும் ஆசை, மமதை என்ற இரு சிங்கங்களை அடக்கி, காருண்யம் என்ற பீடத்தை அவைகள் மீதேற்றி, புத்த பகவான் இம்மையிலேயே பெற்ற பேரின்பத்தை இவ்வையகம் பெறவேண்டும் என்ற தத்துவத்தின் அடிப்படையில் அமைந்த இவ்வுருவின் அங்க லக்ஷணங்கள் காண்போர் உள்ளத்தைக் கவருகின்றன. பத்மாசனத்தில் யோக முத்திரையோடு விளங்கும் புத்த பிரானின் முப்புறங்களிலும் இருந்ததாகக் கூறப்படும் சேவகர்களின் உருவங்களில், இன்று ஒரே உருவம் தான் எஞ்சியுள்ளது.





அவரது வலப்புறத்தில் கங்கை காட்சியளிக்கிறாள். இடப்புறத்தில் யமுனையின் உருவம் இருந்ததாக ஊகிக்கப்படுகிறது.

மடத்தை யொட்டி இருபத்து நான்கு அறைகள் ஒரே வரிசையில் காணப்படுகின்றன. இவ்வறைகளில் விளக்கு மாடங்களும், அலமாரிகளும் உள்ளன. மடத்தின் அன்றாட அலுவல்களுக்கு வேண்டிய சாமான்களைப் பாதுகாக்க நியமிக்கப்பட்டவரின் முதல் அறைக்குப் பக்கத்து அறையில்தான் சாமான்கள் சேமித்து வைக்கப்பட்டதாகக் கூறும் இரண்டாவது



அறை அமைந்துள்ளது. இரண்டாவது அறைக்கு முதல் அறையின் வழியாகத்தான் போக வேண்டும். இவ்விடுதியின் வராந்தாவில் உள்ள கல்தூண்களில் இம்மடாலயத்தைப் பற்றிய விவரங்கள் வடமொழியில் குறிக்கப்பட்டுள்ளன. இம்மடம் மகாசிவகுப்தன் காலத்தில் கட்டப்பட்டதாகவும், மடாதிபதி ஆனந்த பிரபா பிக்ஷு என்பதாகவும், இம்



மடத்தில் வசித்து வந்த பிக்ஷுக்களுக்கும், சிர்பூரைத் தரிசிக்க வரும் பௌத்த சந்நியாசிகளுக்கும் குறைவற்ற உணவிந்து, அவர்களுக்குப் பலவித வசதிகளை இம்மடம் அளித்து வந்ததையும் இந்தத் தூண்கள் அறிவிக்கின்றன.

பாழடைந்த இம்மடம் முதலில், கண்டு பிடிக்கப்பட்ட போது விதம் விதமான பொருள்கள் சுமார் ஐயாயிரம் கிடைத்தனவாம். இம்மடம் அழிந்து போன பின்பும் இவ்வளவு சாமான்கள் கவனிப்பாரற்று விடப்பட்டிருப்பதிலிருந்து, அக்காலத்தில் எவ்வளவு வளமுடையதாக இந்த மடம் விளங்கி யிருந்திருக்க வேண்டும் என்பதை ஒருவாறு ஊகிக்கலாம். கத்திகள், உரைகள், பலவித குறடுகள் முதலிய பொற்கொல்லரது ஆயுதங்கள் ஓர் அறையிலிருந்து கிடைத்தன. மாவரைக்கும் யந்திரங்கள், அம்மிகள், உரல்கள், அரிவாள், கோடரி, கதவுகளில் பூட்டும் பலரகத் தாழ்ப்பாள்கள், கதவுக் கீல்கள், கொக்கிகள், சங்கிலிகள், இரும்பு மணி முதலிய வைகளோடு பல விக்கிரகங்களும் கண்டெடுக்கப்பட்டன. அவைகளில் முக்கியமானது புத்தரின் தங்க விக்கிரகமாகும். ஒளி வீசும் நயனங்களை வெள்ளித் தகட்டாலும், சிவந்த உதடுகளைத் தாமிரத் தகட்டாலும் பொருத்தப்பட்ட இந்தத் தங்க விக்கிரகத்தோடு ஏனைய விக்கிரகங்களையும் ஆராய்ந்தால், வார்ப்பு விக்கிரகங்களைச் சமைத்த வல்லுநர்களும் சிர்பூரில் மலிந்திருந்தனரென அறியலாம். சாஞ்சி, நாளந்தா முதலிய இடங்களிலிருந்து கண்டெடுக்கப்பட்டது போன்ற ஸ்பிரிங் பூட்டுகளும் இம்மடத்தில் கிடைத்தன. சபா மண்டபத்திலும், புரு மண்டபத்திலும் குபேரனது உருவத்தைக் காணலாம்.

சிர்பூரில் பார்க்கும் இடங்களிலெல்லாம், பள்ளம் தோண்டும் இடங்களிலெல்லாம் சிலைகள் தென்படுவதுபோல், சிறுசிறு குளங்களும், அதன் மூலைகளில் சிறிய கோயில்களும் காணக் கிடக்கின்றன. இத்தகைய சிறு கோயில்கள் நான்கு சதுர மைல் விஸ்தீரணத்தில் பல ஆயிரக்கணக்கில் இருந்திருக்க வேண்டும் என்று சிலர் மதிப்பிட்டிருக்கின்றனர். இந்நகரை ஆண்ட அரசர்கள் சிறு கோயில்கள் கட்டியே தங்கள் கலையார்வத்தைக் காட்டி வந்தனர் போலும்.





ஆஹா... கோலினஸ்
Kolynos
கோலினஸின் சுவை:
வாயில் புத்துணர்ச்சியூட்டும் இனிய சுவை.
கோலினஸின் நுரை:
துலக்குவதை எளிதாக்கும், பூரணமாகத் தூய்மைப்படுத்தும்.
கோலினஸ் கொடுக்கும் அந்த
இனிய சுவாசத்தை நீங்கள் விரும்புவீர்கள்,
மற்றவர்களும் விரும்புவார்கள்.
புதியது-தூயது...
அந்த ஐந்தாவது மங்கைக்கு ஒரு அருமையான யோசனை: கோலினஸ் உபயோகித்து மற்றவர்களைப்போல் புன்னகை புரியுங்கள். கோலினஸ் டெண்டல் கிரீம் மூலம் உங்கள் பற்களை நாள்தோறும் காலையிலும் இரவிலும் துலக்குங்கள். மற்றவர்கள் மத்தியில் நம்பிக்கையோடும் மகிழ்ச்சியோடும் உலவ உதவுவது கோலினஸ்.
களிப்பில் மலரும் புன்னகை...அது கோலினஸ் தரும் புன்னகை
பதிவு செய்யப்பட்ட உபயோகிப்போர்: ஜெப்ரி மானேர்ஸ் அண்ட் கம்பெனி லிமிடெட்.
ASP/GM/K-10A TAM

ஸ்ரீ காமகோடி பீடம் (சில முக்கிய குறிப்புகள்)

என்.ராமேசன், ஐ.ஏ.எஸ்.



[காஞ்சிபுரத்தில் ஸ்ரீ ஆதி சங்கரர் காமகோடி பீடாதிபதிகளாக விளங்கி அருளாட்சி புரிந்த ஸ்ரீ சாரதா மடத்தின் 62-ம் ஆசார்ய ஸ்வாமிகள் பதினெட்டாம் நூற்றாண்டில் கும்பகோணத்துக்கு எழுந்தருளினார் என்பதையும், அதிலிருந்து மடத்தின் அலுவல்கள் காஞ்சியிலிருந்து கும்பகோணத்துக்கு மாறியபடியால் 'கும்பகோணம் மடம்' என்ற பொது வழக்கு ஏற்பட்டதையும், எனினும் சாஸனங்களும் குறிப்புக்களும் கும்பகோணத்தில் வசித்து வந்த ஆசாரியர்களை ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் என்றே கூறி வந்ததையும் இக் கட்டுரையின் மூலம் ஆதாரபூர்வமான சான்றுகளுடன் அழுத்தந்திருத்தமாக அறிகிறோம்.
— ஆசிரியர்]

गुरुर्नाम्ना महिम्ना च शंकरो यो विराजते।
तदीयाङ्घ्रिगलद्रेणुकणायास्तु नमो मम ॥
(जगद्गुरु श्री चन्द्रशेखरेन्द्रस्वामिनः)

பெயரால் சங்கரராகி, நன்மையே செய்வது என்ற பெருமையாலும் எவர் சங்கரராகவே விளங்குகிறாரோ அவரது பாததூளிக்கு என் நமஸ்காரங்கள்.

(ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள்)

तच्छङ्करांशः श्रीचन्द्रशेखरो यो विराजते।
तस्मै सद्गुरवे भूयाद् यतीन्द्राय नमो मम ॥
(स्वकृतम्)

அப்பேர்ப்பட்ட ஆதிசங்கரரின் அம்சாவதாரமாகப் பிரகாசித்துக் கொண்டிருக்கும் துறவி வேந்தரான ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகர ஸ்வாமிகளுக்கு என் நமஸ்காரங்கள். (கட்டுரையாசிரியர் ஆக்கம்)

ஜகத் குருவான ஆதிசங்கரர் ஏழு மோக்ஷபுரிகளில் ஒன்றான ஸ்ரீ காஞ்சிபுரத்தில் ஸர்வக்ஞ பீடாரோஹணம் செய்து, ஸ்ரீசாரதா மடத்தை ஏற்படுத்தித் தமது பிரிய சிஷ்யராகிய ஸுரேச்வராசாரியரை அத்வைதப் பிரசாரத்தின் மூலஸ்தானமாகிய ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தில் ஸ்தாபித்து வேதாந்தத்தைப் பரப்பி வருமாறு ஆக்ஞையிட்டு, ஸ்ரீ காஞ்சியிலேயே ஸித்தியடைந்த விஷயம் அனைவரும் அறிந்ததே. மாதவீய சங்கர விஜயம், வியாஸாசலீய சங்கர விஜயம் முதலிய கிரந்தங்களுக்கு மூலமாக விளங்குவதும், ஆதி சங்கரருடைய சம காலத்தவராகிய ஆனந்தகிரி என்ற சிஷ்யரால் எழுதப்பட்டதுமான சங்கர விஜயத்தில் இந்த விஷயம் பின்வருமாறு ஸ்பஷ்டமாக வி

तदीयाङ्घ्रिगलद्रेणुकणायास्तु नमो मम ॥
(जगद्गुरु श्री चन्द्रशेखरेन्द्रस्वामिनः)

பெயரால் சங்கரராகி, நன்மையே செய்வது என்ற பெருமையாலும் எவர் சங்கரராகவே விளங்குகிறாரோ அவரது பாததூளிக்கு என் நமஸ்காரங்கள்.

(ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள்)

तच्छङ्करांशः श्रीचन्द्रशेखरो यो विराजते।
तस्मै सद्गुरवे भूयाद् यतीन्द्राय नमो मम ॥
(स्वकृतम्)

அப்பேர்ப்பட்ட ஆதிசங்கரரின் அம்சாவதாரமாகப் பிரகாசித்துக் கொண்டிருக்கும் துறவி வேந்தரான ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகர ஸ்வாமிகளுக்கு என் நமஸ்காரங்கள். (கட்டுரையாசிரியர் ஆக்கம்)

ஜகத் குருவான ஆதிசங்கரர் ஏழு மோக்ஷபுரிகளில் ஒன்றான ஸ்ரீ காஞ்சிபுரத்தில் ஸர்வக்ஞ பீடாரோஹணம் செய்து, ஸ்ரீசாரதா மடத்தை ஏற்படுத்தித் தமது பிரிய சிஷ்யராகிய ஸுரேச்வராசாரியரை அத்வைதப் பிரசாரத்தின் மூலஸ்தானமாகிய ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தில் ஸ்தாபித்து வேதாந்தத்தைப் பரப்பி வருமாறு ஆக்ஞையிட்டு, ஸ்ரீ காஞ்சியிலேயே ஸித்தியடைந்த விஷயம் அனைவரும் அறிந்ததே. மாதவீய சங்கர விஜயம், வியாஸாசலீய சங்கர விஜயம் முதலிய கிரந்தங்களுக்கு மூலமாக விளங்குவதும், ஆதி சங்கரருடைய சம காலத்தவராகிய ஆனந்தகிரி என்ற சிஷ்யரால் எழுதப்பட்டதுமான சங்கர விஜயத்தில் இந்த விஷயம் பின்வருமாறு
ஸ்பஷ்டமாக விளக்கப்பட்டிருக்கிறது :

"तत्रैव निजवासयोग्यं मठमपि परिकल्प्य तत्र निजसिद्धान्तपद्धतिं प्रकाशयितुं





1. புதுக்கோட்டை ஸ்ரீ விஜயரகுநாத தொண்டைமானின் அரசாணையின் இ. பி. 1690ம் வருஷத்திய செப்பேட்டின் தோற்றம்.
2. கர்நாடக நவாபின் 'ருஜுநாமா பர்வானா'வின் தோற்றம் (1792).

பக்தி புரியத் தெரிந்த பாக்யசாலிகள், நடமாடும் தெய்வமாகிய ஸ்ரீ காமகோடி பீடத்தின் இன்றைய ஆசாரியராகிய ஸ்ரீ சந்திர சேகரேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளைத் தரிசனம் செய்யும்போதே 'இவர் ஆதிசங்கரரின் அவதாரம்தான்; ஆதி சங்கரரின் பரம்பரையில் நமக்காகவே தோன்றி யிருக்கும் முனிவர்' என்று வெள்ளிடை மலையாக விளங்கிக் கொள்வர். எனினும் பீடத்தின் தொன்மைப் பெருமையை நிலைநிறுத்த ஆனித்தர மான அத்தாட்சிகளும் நிறைய உள்ளன. இவற்றில் சிலவற்றை இங்கு காணலாம்.

ஆதி சங்கரரின் பரம்பரையில் வந்த காமகோடி பீடத்து ஆசாரிய பரம்பரையின் சரித்திரம் பல பெரியவர்களால் எழுதப் பட்டிருக்கிறது. இவைகளில் முக்கியமானது ஸ்ரீ காமகோடி பீடத்தின் 56வது ஆசாரியராக இருந்த ஸர்வக்ஞ சதாசிவ போதேந்திரரால் எழுதப்பட்ட 'புண்ய ச்லோக மஞ்சரி' ஆகும். இந்த ஆசாரியர்கள் கி. பி. 1539ல் ஸித்தி யடைந் தார்கள். இதற்குப் பிறகு ஸ்ரீ காமகோடி பீடத்தின் 57வது ஆசாரிய ராகிய ஸ்ரீ பரம சிவேந்திர ஸரஸ்வதி அவர்களின் சிஷ்யராகிய சித்த புருஷர் ஸ்ரீ சதாசிவப் பிரம்மேந்திராள் எழுதிய 'குரு ரத்ன மாலா' என்ற புத்தகம் ஸ்ரீ காமகோடி ஆசாரியர்களின் பரம்பரையைக் கூறுகிறது. இந்த 'குரு ரத்னமாலா' வுக்கு ஸ்ரீ காமகோடி பீடத்தின் 60வது ஆசாரியரின் சிஷ்யரான ஆத்ம போதர் 'ஸுஷமா' என்ற வியாக்யானம் செய்திருக்கிறார். இந்த ஆத்ம போதரே மேற்கூறிய 'புண்ய ச்லோக மஞ்சரி'க்கு 'புண்ணிய ச்லோக மஞ்சரி பரிசிஷ்டம்' என்ற விரிவுரையும் எழுதி, அந்த பரிசிஷ்டத்துக்குப் 'பரிசிஷ்டம்' என்ற பெயரில், ஸ்ரீமடத்தின் 56 முதல் 60வது வரையான ஆசாரியர்களைப் பற்றிய குறிப்பையும் அநுபந்த மாக எழுதியிருக்கிறார். இந்தப் புத்தகங்களிலிருந்தும், ஸ்ரீமடத்தின் ரிகார்டு களிலிருந்தும் சென்ற நானூறு வருஷங்களாக ஸ்ரீ காஞ்சி காம கோடி பீடத்திலிருந்த ஆசாரியர்களைப் பற்றிய விவரம் தெரிய வருகிறது.*

(குறிப்பு: கீழே உள்ள பட்டியலில் ஒரே பெயருடைய பல ஆசார்யர் களைத் தெளிவுபடுத்த மகாதேவர் (3) சந்திர சேகரர் (4) என்பதுபோல் நக வளைவுகளுக்குள் இலக்கம் காட்டப்பட்டிருக்கிறது.)

மேற்கண்ட ஆசாரிய பரம்பரைக்குச் சரித்திர பூர்வமாக அநேக சான்றுகள் பல கிரந்தங்களிலும் ஸ்ரீ மடத்திலுள்ள செப்பேடு சாஸனங் களிலும் இதர ரிகார்டுகளிலும் இருக்கின்றன.

ஒன்பது நூற்றாண்டுகளுக்கு முன்பே 1111ம் ஆண்டு ஜூலை 17ந் தேதி விஜயகண்ட கோபாலன் என்ற தெலுங்குச் சோழ அரசன் 'அம்பிகா புரம்' என்ற கிராமத்தை ஸ்ரீ காஞ்சி காமகோடி ஆசாரியருக்குத் தான மாகக் கொடுத்தது பற்றிய செப்பேட்டைக் குறித்து 1961ம் வருஷத்திய கல்கி தீபாவளி மலரில் 'காலத்தை வென்ற காமகோடி' என்ற கட்டுரை யில் விளக்கமாக எழுதியிருக்கிறேன். இது போன்றே அநேக சான்றுகள் ஸ்ரீமடத்தில் இருக்கின்றன.

இச் செப்பேடுகளிலிருந்து விஜயநகரப் பேரரசரான உலகப் பிரசித்தி பெற்ற ஸ்ரீ கிருஷ்ண தேவராயர், மகாதேவஸரஸ்வதியின் சிஷ்யரான சந்திர சூடருக்குக் கி. பி. 1522ம் ஆண்டில் 'பொடலூர்', 'காட்டுப்பட்டு' என்ற கிராமங்களையும், பிறகு கி. பி. 1528ம் ஆண்டில் சதாசிவ போதருக்கு 'உதயம்பாக்கம்' என்ற கிராமத்தையும் தானம் கொடுத்த தாகத் தெரிகிறது. இப் பக்கத்தில் அடியிற் கண்டுள்ள பட்டியலில் இவர்கள் பெயரும், வருஷமும் இருப்பதற்கு இசைவாகவே செப்பேடு களிலும் காணப்படுவது குறிப்பிட வேண்டிய அம்சம்.

ஆதி சங்கரரிலிருந்து வரிசைக்கிரமம்	ஆசார்யர்களின் பெயர்கள்	பீடத்தில் இருந்த வருஷங்கள்	ஸித்திபெற்ற நாள்: வருஷம்	மாதம்	பக்ஷம், திதி		இங்கிலீஷ் வருஷம்
55	சந்திரசூடர் (2)	17	ஸ்வபானு	பால்குனம்	சுக்லபக்ஷம்	11	கி.பி. 1524
56	ஸர்வக்ஞ சதாசிவ போதர்	15	விளம்பி	சைத்ரம்	சுக்லபக்ஷம்	8	கி.பி. 1539
57	பரமசிவேந்திரர் (2)	47	பார்த்திப	சிராவணம்	சுக்லபக்ஷம்	10	கி.பி. 1586
58	ஆத்மபோதர்	52	சுக்ல	ஆச்வினம்	கிருஷ்ணபக்ஷம்	8	கி.பி. 1638
59	பகவந்நாம போதர்	54	பிரஜோத்பத்தி	பாத்ரபதம்	பௌர்ணமி		கி.பி. 1692
60	அத்வைதாத்மப் பிரகாசர்	12	ஸ்வபானு	சைத்ரம்	சுக்லபக்ஷம்	2	கி.பி. 1704
61	மகாதேவர் (3)	42	குரோதன	ஜ்யேஷ்டம்	சுக்லபக்ஷம்	9	கி.பி. 1746
62	சந்திரசேகரர் (4)	37	சுபகிருது	கார்த்திகம்	கிருஷ்ணபக்ஷம்	2	கி.பி. 1783
63	மகாதேவர் (4)	31	ஸ்ரீமுக	ஆஷாடம்	சுக்லபக்ஷம்	12	கி.பி. 1814
64	சந்திரசேகரர் (5)	37	சாதாரண	கார்த்திகம்	கிருஷ்ணபக்ஷம்	2	கி.பி. 1851
65	மகாதேவர் (5)	39	விரோதி	பால்குனம்	அமாவாஸ்யை		கி.பி. 1890
66	சந்திரசேகரர் (6)	17	பராபவ	மாகம்	கிருஷ்ணபக்ஷம்	8	கி.பி. 1907
67	மகாதேவர் (6)	8 நாள்	பராபவ	பால்குனம்	சுக்லபக்ஷம்	1	கி.பி. 1907
68	1907லிருந்து ஜகத் குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் ஐம்பத்தெட்டாண்டுகளாகப் பீடத்தை அலங்கரித்து வருகிறார்கள்						




சென்ற முந்நூறு வருஷங்களாக ஸ்ரீமடத்தின் சரித்திரம் எவ்வாறு அமைந்தது எனப் பரிசீலனை செய்வதன் பொருட்டு ஸ்ரீமடத்தில் இருக்கும் ரிகார்டுகளைப் பார்க்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அவை நூற்றுக் கணக்கானவை. இந்த ரிகார்டுகள், 'Contemporary Records' என்று கூறப்படும் சமீப கால ரிகார்டுகளின் வகையைச் சேரும். இவை கையெழுத்தில் இருக்கின்றன. இவற்றைத் தொகுத்து ஸ்ரீமடத்தின் சரித்திரத்தைத் தெளிவுபடுத்துவதே ஆராய்ச்சியின் நோக்கம். இவ்வாறு மூன்று நான்கு தலைமுறைகளுக்கு முன்பு இருந்த நமது சமீபகால முன்னோர்களின் பண்பாட்டைப் பற்றி ஆராய்ச்சி செய்வது இப்பொழுது மேலை நாடுகளில் பிரபலமாகிக் கொண்டு வருகிறது. ஸ்ரீமடத்தின் ஒவ்வொரு பத்து அல்லது இருபது வருஷ சரித்திரமே ஓர் ஆராய்ச்சியாளரின் குறிக்கோளுக்குப் போதிய விவரங்கள் அளிக்கக் கூடும். அவ்வளவு ரிகார்டுகள் ஸ்ரீமடத்தில் இருக்கின்றன. ஆயினும் இங்கே கடந்த முந்நூறு வருஷங்களில் மிகவும் ரஸமான பத்து ரிகார்டுகளைப் பற்றியே எழுதுகிறேன்.

நம் நாட்டில் சிருங்கேரி, காஞ்சீபுரம், திருவாவடுதுறை, அஹோபிலம், முதலிய சமய சம்பந்தமான மடங்களின் சரித்திரத்தைப் பற்றி ஒழுங்காகவும் உண்மையாகவும் ஆராய்ச்சி செய்யத் தகுந்த மாணவர்கள் முன்வராதது வருந்தத்தக்க விஷயம். தேச சரித்திரத்தில் அரசியல் மாத்திரமே அல்லாது சமயம், பொருளாதாரம், கலை, காவியம் முதலிய துறைகளிலும் ஆராய்ச்சியாளர்கள் கவனம் செலுத்த வேண்டியது அவசியம். இவ்விஷயத்தில் மாணவர்களின் உற்சாகத்தைத் தூண்டிவிடுவதே என் குறிக்கோள்.


இந்த ரிகார்டுகளைப் பரிசீலனை செய்ய உதவியாக இருந்த என் நண்பர்கள் எல்லோருக்கும் என் நன்றி உரித்தாகும்.

இனி ரிகார்டுகளைப் பார்ப்போம்.


(1) முதலாவது ரிகார்டு ஹிஜ்ரி வருஷம் 1088 ஷவ்வல் முதல் தேதி கொடுக்கப்பட்ட பர்மான். இது பக்த ராமதாஸின் சரித்திரத்தில் பிரசித்தி பெற்ற கோல்கொண்டா நவாப் தானாஷா அவர்கள் காலத்தைச் சேர்ந்தது. இந்த பர்மானை **மாட. பாஜோஜி. மஜூம்தார்** என்பவர் **லிங்கோஜி** லங்கரசு என்பவரின் தூண்டுதலால் கொடுத்திருக்கிறார். இந்த லிங்கோஜி அந்த டிவிஷனைச் சேர்ந்த **தரப்தார்** என்ற ரெவின்யூ அதிகாரி என்றும் தெரிகிறது. இந்த பர்மானில் ஸ்ரீகாஞ்சீசாரதா மடத்தின் அதிபரான ஸ்வாமி பரமஹம்ஸ பரிவ்ராஜகாசாரிய ஸ்ரீ சங்கராசாரியருக்கு ஸ்வாமி சந்திரமௌளீச்வரரின் நித்ய பூஜைக்காகவும் பிராம்மண ஸந்தர்ப்பணத்துக்காகவும் செங்கல்பட்டு சீமையில் உள்ள **மேஜுபாக** என்ற கிராமத்தின் வருஷவரியிலிருந்து 115 வராகன்கள் கொடுக்கும்படி உத்தரவாகியிருக்கிறது. இந்த பர்மான் தெலுங்கு லிபியில் இருக்கிறது. இதன் மொழி ஸம்ஸ்கிருதம், தெலுங்கு, பேர்ஷியன் ஆகியவை. இம்மாதிரி பல பாஷைகளில் எழுதப்பட்ட தானாஷாவின் இதர பர்மான்கள் ஹைதராபாத் ரிகார்டு ஆபீஸில் இருக்கின்றன. இதில் கண்டிருக்கிற பர்மான் **ஜுஹானே** மாடா அப்டாபே **இர்தேபா** வாஜீபுல் **இட்டேபா** என்ற பிருதுகள் இதர பர்மான்களிலும் இருக்கின்றன. இதில் கண்டிருக்கிற ஹிஜ்ரி வருஷம் தேதி இங்கிலீஷ் வருஷம் தேதி கி. பி. 1677 நவம்பர் 17க்குச் சரியாக இருப்பதாக என்னால் கணக்கிடப்பட்டு என் நண்பர் டாக்டர் ஆர். சுப்பிரமணியம் எம்.ஏ.,பி.எச்டி. (Superintendent of Archaeology, Baroda) அவர்களாலும் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. இதில் கண்டிருக்கிற 'மேஜுபாக' என்ற கிராமம் செங்கல்பட்டு ஜில்லாவில் இப்போதும் உள்ள தென் மேல்பாக்கம் என்ற கிராமமே. பிறமதத்தைச் சேர்ந்தவர்களும் ஸ்ரீமடத்தை எப்படிக் கௌரவித்தார்கள் என்பது இந்த பர்மானிலிருந்து விளங்குகிறது. **1677ம் வருஷத்திலும் ஸ்ரீமடத்தை காஞ்சி சாரதா மடம் என்றுதான் குறிப்பிட்டு வந்தார்கள்** என்பதும் தெளிவாகிறது. அப்போது பீடாதிபதியாக இருந்தவர் 59வது ஆசாரியரான பகவந்நாம போதர்.



(2) இரண்டாவது ரிகார்டு மதுரை நாயக வம்சத்துக்கு ஆதீனமான விஜயரங்க சொக்கநாதனால் கொடுக்கப்பட்டதான சாஸனம். இது சக வருஷம் 1632, விக்ருதி கார்த்திகை, சுக்ல பக்ஷ 15, திங்கள் கிழமை ரோஹிணி நக்ஷத்திரம் கூடிய தேதியில் கொடுக்கப்பட்டது. இதில் திருவானைக்காவில் ஜம்புகேச்வரஸ்வாமி கோயிலிலிருந்து கஜாரண்ய க்ஷேத்திரத்தில் பொன்வாசி கொண்டான் தெருவில் இருக்கும் மடத்துக்கு தினம் 4 படி அரிசியும், இரண்டு தளிகை அன்னமும், 2 தோசையும், 2 அதிரசமும், ஒரு வடையும், தீபத்துக்கு முக்கால் படி எண்ணெயும், காவேரி நதியின் இருகரையில் உள்ள ஒவ்வொரு ''சேய்'' நிலத்துக்கும் ஒரு 'தூம்' நெல்லும், கஜத்திலிருந்து தினமும் ஒரு வராகன் பணமும் கொடுக்கும்படி கண்டிருக்கிறது. அதோடு அன்னதானக் கட்டளைக்காக, மகேந்திரமங்கலம், அரியூர், அரியமங்கலம் முதலிய கிராமங்களிலிருந்து பூதான சாஸனமும் கண்டிருக்கிறது.



1. மதுரை நாயக அரசன் ஸ்ரீ விஜயரங்க சொக்கநாதன் அளித்த தான சாஸனத்தின் தோற்றம். (1710)
2. ஸ்ரீ மடத்தின் கந்தாயபிரயாண விவரம். (1839)
3. கோல்கொண்டா நவாப் தானாஷாவின் காலத்துச் செப்பேட்டின் தோற்றம். (1677)


Extract from the Proceedings of the Sudder Udalut under date the 11th September 1848.

Read Special Appeal Petition presented on the 1st July 1848 by [illegible] Srinivasarow Vakeel on behalf of Sastha Iyengar of Zillah Trichinopoly praying for the admission of a Special Appeal from the Decree of the Acting Civil Judge of Trichinopoly in Appeal No. 109 of 1846.

(Here enter Sp. Ap. Pet. No. 1184 of 1848.)

The Original Suit No. 95 of 1844 was instituted by the Special Appellant against the 16 Defendants with a view to establish his right to the privilege of [illegible] the [illegible] of the Sree Ranganada Swamy [illegible] Idol of the Jambukeswaram [illegible].

2 The Principal Sudder Ameen rejected the claim of the plaintiff, and the Decree of that officer was confirmed by the Acting Civil Judge in Appeal, on the ground that the Plaintiff (Sp. Appellant) had totally failed to prove his sole right to repeat the [illegible] words of the Idol, to the exclusion of all others.

3 The Special Appellant now impugns the justice of those decrees, but the Court of Sudder Udalut having carefully considered his objections urged against them, are of opinion that no good or legal grounds exist which would justify the admission of a Special Appeal in this case.

4 Both the Lower Courts, after a full consideration of all that the Petitioner had to adduce in support of his alleged right

1st Sheet.

right to be the sole individual entitled to perform certain acts in reference to the [illegible] of the Idol in question, pronounced such plea not established. To admit therefore Special Appeal would be to reconsider the facts of [illegible] and would be opposed to Act III of 1843, and the Petitioner's prayer for the same cannot be complied with.

5 Ordered that Extract from these proceedings be given to the Petitioner's Vakeel on his application.

(True Extract)

[illegible]
Regr. to the [illegible]

ஸ்ரீ சிருங்கேரி மடத்தின் அப்பீல் தள்ளுபடியான கோர்ட்டுத் தீர்ப்பின் ஒரு தோற்றம். (1848)

இதில் கண்டிருக்கிற தேதி 1710 நவம்பர் 14ந் தேதி என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அந்த வருஷ கார்த்திகை பௌர்ணமி திதி, திங்கட்கிழமையும் ரோஹிணி நட்சத்திரமும் கூடியது என்றும் தெரிகிறது. இந்த தானசாஸனத்தின் இரண்டாவது மூன்றாவது வரிகளில்,

"श्रीमत्परमहंसपरिव्राजकाचार्य श्री
कांचीपुरस्थित श्रीमच्छंकरभगवत्पादाचार्यस्वामुलवारिकि"

அதாவது, 'ஸ்ரீ காஞ்சி நகரில் இருக்கும் ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஸ்ரீமத் சங்கரபகவத்பாதாசார்ய ஸ்வாமிகளுக்கு' என்றும் 14வது வரியில்.........

"लोकगुरुस्वामुलेन श्रीमच्छङ्कराचार्य स्वामुलवारिकि"

அதாவது, 'லோக குரு ஸ்வாமியான ஸ்ரீசங்கராசார்ய ஸ்வாமிக்கு' என்றும் தெளிவாகக் கண்டிருக்கிறது.

இதிலிருந்து பதினேழாவது பதினெட்டாவது நூற்றாண்டுகளிலும் ஸ்ரீ காஞ்சிபுரியிலிருக்கும் ஸ்ரீசங்கராசாரியர் என்று தான் ஸ்ரீ ஆசார்யாள் நூலங்களால் அழைக்கப்பட்டு வந்தார் என்று விளங்கும். இந்த தானத்தின் பொழுது பீடத்திலிருந்தவர் 61வது ஆசாரியரான மகாதேவர்.

(3) மூன்றாவது ரிக்கார்டு, செங்கமை ராஜாவான விஜயரகுநாத பெரிய உடையாத் தேவர் அவர்களால் கொடுக்கப்பட்ட கிராம பூதான சாஸனம். இது தமிழில் இருக்கிறது. இதில் பின்வருமாறு கண்டிருக்கிறது:

சாலிவாஹன சகாப்தா 1705, கலியப்தா 4884, இதுக்குமேல் சோபகிருது ௵ ஆவணி மாசம் 28உ சுக்லபக்ஷமும் பௌமவாஸரமும் பௌர்ணமாவாஸையும், பூரட்டாதி நட்சத்திரமும் தூதிநாம யோகம் வணிகரணமும் சோமோபராக புண்ணிய காலத்தில் ஸ்ரீகாஞ்சீபுரம் திவ்யக்ஷேத்திரத்திலிருக்கும் ஸ்ரீ காமகோடி பீட ஸிம்ஹாசனாதிபதியாகிய ஸ்ரீமத் ஸ்ரீ மகா பகவத்பாதாசார்ய ஸ்வாமியவாளுடைய மடத்துக்கு திரிபுர சுந்தரி ஸமேத ஸ்ரீ சந்திரமௌளீச்வர ஆராதனம் ஸ்வாமி பூஜா நிமித்தமும் பிராம்மண போஜனங்களுக்குத் தாராதத்த பூர்வமாக....

இந்தச் சாஸனத்தில் ஸ்ரீமடத்துக்குப் புலவச்சேரி என்ற கிராமம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கிராமம் இப்போதும் ஸ்ரீமடத்தின் பரிபாலனத்திலேயே உள்ளது.

இதில் கண்டிருக்கும் தேதி கணக்குப்படி 1783 செப்டம்பர் 10ம் தேதி ஆகும். அது சாஸனத்தில் கண்டுள்ளபடியே ஒரு புதன்கிழமை (பௌம வாஸரம்). அன்று பௌர்ணமி திதி. அந்தத் திதியில் சாஸனத்தில் கண்டபடி சந்திர கிரஹணமும் (சோமோபராக புண்ய காலம்) நிகழ்ந்ததாகத் தெரிகிறது.

குரு பரம்பரைப்படி அப்போது ஸ்ரீமடத்திலிருந்த ஆசாரியர் 63வது பீடாதிபதியான ஸ்ரீ மகாதேவர்-4. இந்த சாஸனத்திலும் "ஸ்ரீ காஞ்சீபுரம் திவ்யக்ஷேத்திரத்திலிருக்கும் ஸ்ரீ காமகோடிபீட ஸிம்ஹாசனாதிபதியாகிய ஸ்ரீமத் ஸ்ரீமகா பகவத்பாதாசார்ய ஸ்வாமி யவாளுடைய மடத்துக்கு......" என்று வெகு ஸ்பஷ்டமாகக் கண்டிருக்கிறது. இந்த ஆசாரியர் 1783ம் ஆண்டு ஜனவரி 20ந் தேதி பீடத்தில் அமர்ந்தார். ஆகையால் இவருடைய பீடாதிபத்திய முதல் வருஷத்தில் கொடுக்கப்பட்ட சாஸனம் இது.

(4) நான்காவது ரிகார்டு ஆர்க்காடு நவாபினுடைய ஸ்ரீ ஆசார்யாளின் யாத்திரைக்காக 'போலிகாரர்' முதலியவர்களுக்கு எச்சரிக்கையாகக் கொடுக்கப்பட்ட "ரஹதாரி" பர்மான். இது பின்வருமாறு இருக்கிறது.†

முத்திரை:

ஷா ஆலம் பாதுஷா காஜி வ
வாஹிப் வைபோ கலம்
முல்க் பஹதூர் ஜாபர் ஜங்
ஆஸிபுத்தௌலா அன்வருத்தீன் கான்
வாலாஜா அமீர். ஏ. ஆர்க்காட்

பா இல்மே போலிகாரன் வ ரஹதாரன் வ சௌகிதாரன் வ முஸ்தாஜிஜானேஹாருக் வ ஷைரே. ஆங்கே சங்கராசாரி காமகோடி மஹாந்த பராஜே திருப்பதி ப கிஷ்ஜு ப ராமேச்வர் ஜுந்த.....

† இதில் இருக்கும் பெர்ஷியன் மொழியைச் சில வருடங்களுக்கு முன் என்னுடைய துணை டைரக்டராக இருந்து, இப்போது ஆந்திரப் பிரதேசத்துப் புதைபொருள் டைரக்டராக உள்ள நண்பர் ஸ்ரீ மகம்மத் அப்துல் வஹீத்கான் அவர்கள் மொழிபெயர்த்தார்கள். அவருக்கு என் நன்றி.

அதாவது 'காமகோடி சங்கராசாரி மஹந்த் அவர்கள் திருப்பதி, கிருஷ்ணா, ராமேச்வரம் போகும்போது அவருக்குச் சகல சௌகரியங்களும் செய்து தர வேண்டும்' என்று இது கட்டளையிடுகிறது. இதையே தெலுங்கு லிபியிலும் ''காமகோடி பீடம் சங்கராசார்யலு வாரு'' என்று ஸ்பஷ்டமாக பரமானிலேயே எழுதியிருக்கிறது.

இதன் தேதி பெர்ஷியன் மொழியிலும் தெலுங்கிலும், ஹிஜ்ரி 1207 ரபியுல்ஸானி மாதம் 24ம் தேதி என்று கண்டிருக்கிறது. இது 1792 டிஸம்பர் 28ம் தேதி ஆகும்.

இந்த ரிகார்டிலிருந்து பதினெட்டாம் நூற்றாண்டு இறுதியிலும் ஸ்ரீ ஆசார்யாளை 'ஸ்ரீ காமகோடி பீடாதிபதி சங்கராசாரியர்' என்றே அழைத்து வந்ததாகத் தெரிகிறது. குரு பரம்பரையிலிருந்து, அப்போது இருந்தவர் 63 வது ஆசாரியர்களான மகாதேவர் (4) என்று அறியலாம்.

(5) மேற் கூறிய 63வது ஆசாரியராகிய ஸ்ரீ மகாதேவர் அவர்களின் சிலை ஒன்று கும்பகோணம் ஸ்ரீ ஆதி கும்பேச்வர ஸ்வாமி ஆலயத்தில் இருக்கிறது. இந்த ஸ்வாமிகளால் ஸ்ரீ ஆதி கும்பேச்வரர் ஸ்வாமி கோவிலிலுள்ள ஸோமாஸ்கந்தஉத்ஸவமூர்த்திக்குஅர்த்த மண்டபம், மஹாமண்டபம், கர்ப்ப கிருஹம் இவை கட்டப்பட்டதைத் தெரிவிக்கும் கல்வெட்டு மேற்படி கோயிலின் ஸோமாஸ்கந்த மண்டபத்தின் ஒரு சுவரில் இருக்கிறது. அதில் தெலுங்கு லிபியில் :

ஆசாரிய
ஸ்வாமிஜு
ஸ்ரீகாஞ்சி
பீடாபிஷி
க்தஸ்ரீம
ஹாதேவேந்
தி :

என்பதாக 'ஸ்ரீ காஞ்சி பீடாதிபதி' என்பதைக் குறிப்பிட்டுக் கூறியிருக்கிறது. வேறு ஒரு கல்வெட்டில் கிரந்த லிபியில்,

'..........கும்பேசவர ஸ்வாமி ஸோமாஸ்கந்த மூர்த்திகி, கர்ப்ப கிருஹம், அர்த்த மண்டபம், மஹா மண்டபம்.... ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடாதிப..ஸ்ரீமஹாதேவேந்திரபதி..'

என்று கூறப்பட்டுள்ளது. 'ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி' என்று இங்கும் வியக்தமாகக் காண்கிறது. இந்த ஆசார்யர் இருந்த காலம் 1783 முதல் 1814 வரை. ஆகையால் பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் **கும்பகோணத்தில் கட்டப்பட்ட கோயிலிலேயே ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி** என்றே வர்ணிக்கப்பட்டிருப்பதைக் கவனிக்க வேண்டும்.

(6) இதே 63வது ஆசார்யாளுக்குத் தர்மத்தில் பேர் போன பச்சையப்ப முதலியாரின் மனைவி ஐதலம்மாள் திருவிடைமருதூரில் மனைதானம் செய்ததை மற்றொரு ரிகார்டு கூறுகிறது:

'ஸ்வஸ்தி ஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1725 கல்யப்த 4904.... காவேரி யாற்றுக்குத் தெற்கு ஸ்ரீ கும்பகோணம் ஸ்வஸ்தி ஸ்ரீமத்ஸகல பூமண்டலலங்கார காஞ்சி திவ்ய க்ஷேத்ரே ஸ்ரீ சாரதாமட ஸுஸ்திதானாம்..... ஸ்ரீமத் சங்கர பகவத் பாதாசாரியாளும் அதிஷ்டானே... ஸ்ரீமத் சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி ஸம்யமேந்திராளும் அந்தேவாஸிவர்ய ஸ்ரீமத் மகாதேவேந்திர ஸரஸ்வதி சம்பூஜித ஸ்ரீமத் சந்திர மௌளீச்வர ஸ்வாமி பூஜைக்கு. காஞ்சிபுரத்திலிருக்கும் பச்சையப்ப முதலியார் அகம்படையாள் ஐதலம்மாள் மனை தான சாஸனம் பண்ணிக் கொடுத்த படி......'

இதில் ஸ்ரீ காஞ்சி பீடாதிபதியின் ஸகல விருதுகளையும் மாற்றாமல் குறிப்பிட்டு அவர்கள் கும்பகோணத்தில் இருந்த விவரமும் தெரிவிக்கப்படுகிறது. இது கி. பி. 1803ல் எழுதப்பட்டது.


(7) கி. பி. 1808-ம் ஆண்டில் தஞ்சையை ஆண்டு வந்த சத்ரபதி மகாராஜா சரபோஜி இதே 63வது ஆசாரியர்களைத் தஞ்சைக்கு விஜயம் செய்யுமாறு கோரி அனுப்பிய விக்ஞாபனம் ஒன்று இருக்கிறது. இது அழகான ஸம்ஸ்கிருதத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இதில் ஆசார்யர்களை 'ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யவர்ய ஸ்ரீமத் சங்கர பகவத் பாதாசார்யாளும் அதிஷ்டான ஸிம்ஹாஸனே அபிஷிக்த ஸ்ரீமத் சந்திர சேகரேந்திர ஸரஸ்வதி ஸம்யமீந்த்ராளும் அந்தே வாஸிவர்ய ஸ்ரீமத் மகா தேவேந்திர ஸரஸ்வதி ஸ்ரீ பாதாளும் ஸகல ஜகத்குருணாம்'' என்று. அதாவது, ஆதிசங்கரருடைய அதிஷ்டான பீடத்தில் இருப்பவர் என்று வர்ணித்திருக்கிறது.

(8) இதற்கு அடுத்த ரிகார்டு மிகவும் ரஸமானது. 63ம் ஆசாரியருக்குப்பின் 64ம் ஆசாரியராக பீடாதிபத்யம் பெற்ற ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் 1814 – 1851 வரையில் பீடத்திலிருந்தார்கள். இவர்கள் காலத்தில் காஞ்சி காமாட்சி கோயிலின் கும்பாபிஷேகம் நடைபெற்றது. இது 1839 ஏப்ரல் முதல் ஜூலை வரையில் நடந்தது. இதை விவரிக்கும் கல்வெட்டு ஸ்ரீ காஞ்சி காமாட்சி கோயிலில் இருக்கிறது. இது தெலுங்கு பாஷையில் பின்வருமாறு காணப்படுகிறது:

'ஸ்வஸ்தி ஸ்ரீ விஜயாப்யுத, சாலி வாகன சகாப்தா 1761 (கி.பி. 1839) விகாரி நாம ஸம்வத்ஸர.... ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதுலைன ஸ்ரீ சந்திர சேகர ஸ்வாமுலவாரு கும்பகோண முனுச்சி காஞ்சிகி வச்சி...'

கும்பாபிஷேகத்துக்காக ஸ்ரீ ஆசார்யாள் கும்பகோணத்திலிருந்து காஞ்சிக்குப் புறப்பட்டு வந்ததை இது குறிக்கிறது. இப் பிரயாணத்தின்போது, பிரதிதினமும் அவர்களது பயண விவரங்கள் கொண்ட நாட்குறிப்பு ஸ்ரீமடத்தில் இருக்கிறது. இந்தப் பிரயாணக் குறிப்பு படிப்பதற்கு ரொம்ப ரஸமாக இருக்கிறது. உதாரணமாகப் பறங்கிப் பேட்டைக்கு வரும் போது கப்பலில் குண்டும் வேட்டும் போட்டு ஆசாரியருக்கு மரியாதை செய்ததாகத் தெரிகிறது. இந்த நாட்குறிப்பு அந்த நாளில் வழங்கிய பேச்சுத் தமிழிலேயே எழுதப்பட்டிருக்கிறது. அதிலிருந்து பின் வரும் பகுதியைக் கொடுத்திருக்கிறேன்:


'ஸ்ரீ பகவத்பாதாள் இருக்கிற பெட்டத்துக்குச் சமீபத்தில் கிழே கட்



1858ம் வருஷத்து ஆங்கிலத் தளபதியினுடைய கடிதத்தின் தோற்றம்.


★

தஞ்சை அரசர் சரபோஜியின் அழைப்புக் கடிதத்தின் ஒரு பக்கத் தோற்றம். (1808)





ஆதி கும்பேஸ்வரஸ்வாமி கோயிலில் உள்ள கல்வெட்டுக்கள். (63வது ஆசாரியரின் காலம்)



கார்த்து ஜபம் பண்ணிக் கொண்டிருக்கும் போது டெ கோயில் பிராகாரம் கொண்டு வந்து வைத்தார்....... சகல சன்னதத்துடனே திருவீதி பிரதக்ஷிணமாய் ராஜ வீதி யோடே வந்து **கெங்கை கொண்டான் மண்டபத்துக்கு சமீபத்திலிருக்கும் ஸ்ரீ சுவாமியவாள் சொந்த மடத்தில்** விஜயம் பண்ணினார். அன்னிய தினம் டெ தாஜுகா தாசில்தார் ஸ்ரீநிவாச ராயர் பிக்ஷை பண்ணி வைச்சார்....'

இதில் 1839ம் ஆண்டு ஸ்ரீ காஞ்சியில் ஸ்ரீமடத்தின் இடம் ஸ்பஷ்டமாகக் காட்டப்பட்டிருக்கிறது. **இன்றும் கங்கை கொண்டான் மண்டபத்துக்கு எதிரே தான் ஸ்ரீமடம் விளங்குகிறது.**

(ஸ்ரீமடம் கங்கைகொண்டான் மண்டபத்துக்கு எதிராக இருப்பதற்கு அறுநூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட ஒரு கல்வெட்டிலும் அத்தாட்சி இருக்கிறது. சென்னை Oriental Manuscript Library வெளியிட்ட "South Indian Temple Inscriptions" Vol. I, நெம்பர் 454ல், ஏகாம்பர நாதர் கோயில் சபாபதி மண்டபம் கிழக்குச் சுவரில் சாக 1288, பராபவ வருஷம் ஸிம்ம மாசம் சுக்ல அஷ்டமி வெள்ளிக் கிழமை அநுராதா நக்ஷத்திரம் கூடிய தினத்தில் வீர பொக்கண்ண உடையார் புத்திரரான வீரகம்பண்ண உடையார் கொடுத்த சாஸனமொன்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தத் தேதி கி. பி. 1366 ஆகஸ்டு 14க்குச் சரியாக இருக்கிறது. இதில் பின்வருமாறு கண்டுள்ளது:

"கெங்கை கொண்டா மண்டபத்துக்கு முன்னண்டை திருவீதியில் மேலச்செருவில் மியர் வாசலில்"

சாஸனத்தின் முதற் பகுதியிலிருந்து "மியர் வாசல்" என்பது "திருக்காம கோட்ட உடையநாச்சியா"ருக்கு உடைத்தானது என்று தெரிகிறது. திருவீதியான ராஜ வீதியின் மேலைப் பக்கம் கங்கை கொண்ட மண்டபத்துக்கு எதிராக இருப்பது இன்றும் ஸ்ரீமடம் தான். ஆகையால் அறு நூற்றாண்டுகளாகவே ஸ்ரீ மடத்தின் இடம் இன்று இருப்பதுதான் எனக் கொள்ள முடியும். ஆதிசங்கரர் நாள் முதலாக அங்கு இருப்பது நம் ஸ்ரீமடம் என்று கணிப்பதும் பொருத்தமே.

இன்றைய காஞ்சிபுரம் டவுன் பிளானில் ஸ்ரீமடம் இருக்கும் இடம் ஸர்வே நம்பர் 2378, 2379, 2380 முதலியவை. சென்னை சர்க்கார் இனாம் கமிஷனர் இனாம் டைட்டில் நம்பர் 2216ல் இந்தப் பூமிக்கு இனாம் டைட்டில் கொடுத்திருக்கிறார். 1802 ரிஜிஸ்தரில் 14ம் பக்தியில் இந்தப் பூமி ஸ்ரீ சங்கராசாரிய மடத்தைச் சேர்ந்தது என்று இந்த ரிகார்டின் மூலம் தெரிய வருகிறது. அந்தக் காலத்திலேயே இதைக் கொடுத்தவர்கள் யார், எப்போது என்று தெரியவில்லை என்றும் அநேக வருஷங்களாக ஸ்ரீமடத்தின் சொத்தாக இருப்பதால் ஸ்ரீமடத்துக்கே மஞ்சூர் செய்திருப்பதாவும் தெரிகிறது.)

(9) அடுத்த முக்கியமான ரிகார்டு ஒரு கோர்ட்டு வழக்கு. இது 64ம் ஆசார்யர்களின் காலத்தைச் சேர்ந்தது. 1844ம் ஆண்டு திருச்சி ஜில்லா ஸதர்அமீன் கோர்ட்டில் ஸ்ரீ சிருங்கேரிமடம் விசாரணை கர்த்தர், அகிலாண்டேசுவரிக்குத் தாடங்கப் பிரதிஷ்டை செய்யும் உரிமை ஸ்ரீ சிருங்கேரி மடத்துக்கே உண்டு என்று ஸ்ரீ காஞ்சி மடத்தை பிரதிவாதியாக்கி வழக்குத் தொடுத்தார். வழக்கில் வாதியின் பிராதும் (Plaint) பிரதிவாதியின் விடையும் (Answer) இதற்கு வாதியின் மறு பிராதும் (Reply) இதை யொட்டிப் பிரதிவாதியளித்த விளக்கமும் (Rejoinder) அநேக விஷயங்களைத் தெளிவுற விளக்குகின்றன. கோர்ட்டார் தமது தீர்ப்பில், சிருங்கேரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ரிகார்டுகள் நிரூபிக்கப்படவில்லை என்றும் சாட்சியங்கள் ஒன்றுக்கு ஒன்று முரண்பாடாக இருக்கின்றன என்றும் கூறி, பிரதிவாதியான ஸ்ரீமடத்துக்குச் செலவு உள்பட வாதி அளிக்கவேண்டும் என்று வழக்கைத் தள்ளுபடி செய்தனர். இந்த வழக்கு O.S. 95-1844 என்ற எண்ணுடையது. இதற்கு மேல் அப்பீல் No. 109/1846லும் விசேஷ விக்ஞாபனம் Special Appeal Petition No. 106/1848 லும் மேல் கோர்ட்டுகளுக்கு சிருங்கேரி மடத்தினர் வழக்கைத் தொடர்ந்தபோதிலும் கீழ்க் கோர்ட்டின் தீர்ப்பையே மேல் கோர்ட்டுகளும் ஸ்திரப்படுத்தின. இரண்டு அப்பீல்களும் வாதி, பிரதிவாதிக்குச் செலவு தர வேண்டுமென்ற தீர்ப்புடன் தள்ளப்பட்டன. இன்றைக்கு 120 வருஷங்கள் முன்பு ஸ்ரீமடம் விஷயத்தைப் பற்றித் தெரிய வேண்டுமானால் இந்த ஒரு ரிகார்டே போதும்!

இந்த வழக்கில் ஒரு முக்கியமான குறிப்பு இருக்கிறது. வாதியின் ரிப்ளைக்குப் பிரதிவாதியான ஸ்ரீமடத்தின் ரிஜாயிண்டரில் 20வது பாராவில் பின்வருமாறு காணப்படுகிறது.

> 'காஞ்சிபுரத்தில் காமகோடி பீடமும் அவடத்தில் ஸிஷியாளை வைத்ததும் நிஜமானால் முதல் பிரதிவாதி அவர்கள் அவடத்தில் தானே இருக்க வேண்டியது போலவும் கும்பகோணத்தில் வந்திருக்கிற காரணம் ஆன்சரில் சொல்லவில்லை என்றும் (வாதி) ரிப்ளை 20வது காலத்தில் சொல்லுகிறான். காமகோடி பீடாதிபதி அவர்களே அவ்விடத்திலேயே இருக்க வேணுமென்றும் மற்றப் பிரதேசங்களில் இருக்கிறது கூடாதென்றும் எந்த கிரந்தங்களிலும் சொல்லியிருக்கவுமில்லை. காஞ்சிபுரத்திலிருக்கிற மடத்தில் முதல் பிரதிவாதியவர்களுடைய ஸிஷியாளும் காரியஸ்தாளும் இருந்து சர்வக்ஞபீடத்துக்கு பூஜை முதலானதுகள் நடப்பிவித்துக் கொண்டு வருகிறதும் தவிர காவேரி தீரத்தில் வசிக்க வேணுமென்று முதல் பிரதிவாதியவர்களுடைய பரமகுரு சுவாமியவன் அபிப்பிராயப்பட்டு ஸரபோஜி மகாராஜா சாரியாரால் பூஜித்து வந்த யோகலிங்க மென்கிற சந்திரமௌளீசுவர சுவாமியுடன் கும்பகோணத்திலிருந்த மடத்துக்கு வந்து வாசம் செய்தவர்களுக்கு அந்தப் பிரதேசத்தில் இருக்கிற ராஜாக்கள் முதலான ஸிஷியாக்களால் பூஜிக்கப்பட்டு அநேக வருமானங்களுக்கு இடமும் அவடத்திலும், சில தடவை காஞ்சிபுரத்திலும் வாசம் செய்து வருகிறதைக் குறித்து வாதி சொல்கிற ஆக்ஷேபமும் உபயோகமற்றது...'


'அந்த அதிகரித்த வெண்மை எங்கிருந்து வருகிறது?'
Tinopal

சுமார் 120 வருஷங்களுக்கு முன்பு நடந்த ஒரு கோர்ட்டு வழக்கின் ரிகார்டுகள் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் கும்பகோணத்துக்கு ஏன் போயிற்று என்ற கேள்விக்கு ஆணித்தரமாகப் பதிலளிக்கிறது.

இந்த ரிகார்டின் காலம் 64ம் ஆசாரியர்களான ஸ்ரீ சந்திரசேகரர்–5 அவர்களின் காலத்தைச் சேர்ந்தது. இவர் 1814லிருந்து 1851வரை பீடத்தில் இருந்தார். இவரது பரமகுரு 62ம் ஆசாரியரான சந்திர சேகரர் – 4. இவர் 1746 முதல் 1783வரை பீடத்தில் இருந்தார். இவரைத்தான் மேற்படி ரிகார்டு 'முதல் பிரதிவாதியவர்களுடைய பரமகுரு சுவாமியவன்' என்கிறது. இவர்தான் காவேரி தீர வாசத்துக்காகக் காஞ்சியிலிருந்து கும்பகோணம் போயிருக்கிறார். இவர் கி. பி. 1783 ஜனவரியில் கும்பகோணத்திலேயே சித்தி அடைந்தார். இளையாத்தங்குடியில் சித்திபெற்ற ஆசாரியரை 'இளையாத்தங்குடி சுவாமிகள்' என்றும், கலவையில் சித்திபெற்ற ஆசாரியரை 'கலவை சுவாமிகள்' என்றும் வழக்கத்தில் சொல்லுவது போல கும்பகோணத்தில் சித்தி அடைந்த 62வது ஆசாரியரைக் 'கும்பகோணம் சுவாமிகள்' என்று நடைமுறையில் கூறி வந்தார்கள். இவருக்குப் பின்னால் 1783 ஜனவரியில் பீடாரோஹணம் செய்தவர் 63வது ஆசாரியர் ஸ்ரீ மகாதேவர் 4. இவர் பீடத்துக்கு வந்த பின் 7, 8 மாதங்களில் காஞ்சியில் மடம் இருந்ததாகப் புலவச்சேரி சாஸனத்தில் தெரிவதால் இந்த சுவாமிகள் பீடாரோஹணம் ஆகிய பின் காஞ்சிக்கு மறுபடியும் வந்திருக்க வேண்டும் என்று ஊகிக்கலாம். தஞ்சையை ஆண்ட பிரதாபசிம்மன் காலத்தில் ஸ்ரீமடம் தஞ்சாவூர் போனதாகக் கர்ண பரம்பரையாகச் சொல்வார்கள். இந்த அரசன் காலம்:1740-63. இதுவும் ரிகார்டுகளில் இருக்கும் தகவல்களும் ஒத்துப் போயிருக்கின்றன. 63வது ஆசாரியர் கும்பகோணத்திலேயே பிறந்து அங்கேயே சித்தியையும் அடைந்தார். இதனாலும் இந்த மகானைத் தஞ்சை ஜில்லா அரசர்களும் மக்களும் கௌரவித்ததினாலும் ஸ்ரீ மடத்தின் முக்கிய காரியங்கள் கும்பகோணத்துக்குப் போயின. ஆயினும் ஸ்ரீ காஞ்சியில் ஸ்ரீ மடம் அன்றும் இன்றும் என்றும் மங்காமலேயே இருந்து வந்திருக்கிறது; இருக்கவும் போகிறது.

1792-ம் ஆண்டு ஈஸ்ட் இந்தியா கம்பெனி கொடுத்த ஒரு பர்மானில் சுவாமிகள் கும்பகோணத்திலிருந்துவருவதாகக் காணப்படுகிறது. ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்துக்கும் கும்பகோணத்துக்கும் உள்ள சம்பந்தத்தைக் குறிக்கும் முதல் ரிகார்டு இதுதான். இதற்குப் பின் இருக்கும் ரிகார்டுகளில்தான் கும்பகோணத்தின் பெயர் இருக்கிறது. ஆனால் இவற்றிலும் சுவாமிகளை 'ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி' என்றே சொல்லியிருக்கிறார்கள்.

கர்ணபரம்பரைகூறும் தஞ்சை மன்னர் பிரதாப சிம்மனின் பெயரிலேயே கி. பி. 1748ம் ஆண்டில் வெளியிடப்பட்ட ஓர் உத்தரவு உள்ளது. ஹேமந்த மோடி லிபியிலுள்ள இவ்வுத்தரவு சென்னை Central Record Office C–37/38-43 இலக்கமிட்ட தஸ்தாவேஜியாக உள்ளது.

இந்த உத்தரவில் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளுக்கு இன்றளவும் உள்ள பிருதாவளிகள் அவ்வளவும் கூறப்பட்டுள்ளன. காஞ்சி திவ்விய க்ஷேத்ரே சாரதா மட ஸ்திதானாம் .... ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஸ்ரீமத் பூஜ்ய சங்கர பகவத் பாதாசார்யாணாம் அதிஷ்டானே ஸிம்ஹாஸனே அபிஷிக்தானாம் ஸ்ரீ சந்திர சேகர ஸரஸ்வதீனாம் என்ற வாக்கியங்கள் இதில் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. அதாவது ஆதிசங்கரர் காஞ்சியில் நிறுவிய சாரதா மடத்து அதிபர்களாகிய ஸ்வாமிகளே தஞ்சை சீமைக்கு வந்துள்ளார் என்பது ஐயந்திரிபறக் காணக் கிடக்கிறது. பிரதாப சிம்ம மன்னர் தமது ராஜதானிக்கு வந்துள்ள ஸ்வாமிகளுக்குப் பிரஜைகள் யாவரும் எவ்விதம் மரியாதை செலுத்த வேண்டுமென்பதை இவ்வுத்தரவில் கூறுகிறார்.

ஸ்ரீ மடம் கும்பகோணம் போயிற்று என்றால், ஏதோ சர்க்கார் ஆபீஸை ஓர் ஊரில் மூடி வேறோர் ஊரில் திறப்பதுபோல் எண்ணக் கூடாது. ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்துக்குச் சொந்தமான மடங்கள், காஞ்சிபுரம், திருவானைக்கா, திருவிடை மருதூர், கும்பகோணம், திருவொற்றியூர் முதலிய அநேக இடங்களில் இருக்கின்றன. இவை தவிர ஆசாரியர்கள் எப்போதும் சுற்றுப் பிரயாணங்களிலேயே இருப்பார்கள். அவர்கள் இருக்கும் இடத்தில்தான் யோக லிங்கமான ஸ்ரீ சந்திரமௌளீச்வரருக்குப் பூஜை நடக்கும். அவர்கள் இருக்கும் கிராமந்தான் அன்றைய ஸ்ரீ மடத்தின் ஸ்தானம். நமது ஆசாரியரே பீடாரோஹணம் செய்த புதிதில் மஹேந்திர மங்கலத்தில் மூன்று வருஷங்களும் சமீபத்தில் இளையாத்தங்குடியில் மூன்று வருஷங்களும் தங்கியிருந்தார்கள். இதனால் மடம் இடம் மாற்றப்பட்டது என்று எண்ணுவது தவறு. ராமன் இருக்கும் இடம் அயோத்தி என்பது போல, ஸ்ரீ ஆசாரியர்கள் இருக்கும் இடம்தான் ஸ்ரீ மடம் எனினும், எப்போதும் ஓர் அயோத்தி உள்ளது போல் காஞ்சி என்ற மூலஸ்தானமும் உண்டு.

கும்பகோணத்துக்கு வந்த 62வது பீடாதிபதிகளையும், அவரை அடுத்த ஆசாரியரையும் அப்போது இருந்த தஞ்சை மன்னர்கள் ஆச்ரயித்துத் தங்களுக்குப் பெருமை தேடிக் கொண்டார்கள். நீர்வளமும், நிலவளமும் உள்ள தஞ்சை திருச்சி மாவட்டவாசிகள் ஸ்ரீமடத்துக்குச் சகல சௌகரியங்களும் செய்து தந்தனர். இக் காரணங்களால் ஸ்ரீ மடம் சம்பந்தப்பட்ட வரை கும்பகோணத்துக்கு முக்கியத்துவம் அதிகமாக ஏற்பட்டது. எனினும் சுவாமிகளை ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி என்றே அழைத்து வந்தார்கள் என்றும், ஸ்ரீ மடத்தை ஸ்ரீ சாரதா மடம் என்றே கூறி வந்தார்கள் என்றும் ரிகார்டுகள் மூலம் ஐயமற அறிகிறோம்.

10. இந்த ரிகார்டு 1858 செப்டம்பர் 18ம் தேதியன்று கும்பகோணத்தைச் சேர்ந்த ஆங்கிலப் படைத் தலைவன் (Officer Commanding) எழுதியது. இதில், சிப்பாய்கள் ஸ்ரீமடத்தின் வழியாகப் போகக் கூடாது என்று அப்படைத் தலைவன் உத்தரவு பிறப்பித்திருக்கிறான். ஸ்ரீமடத்தின் 17ம் தேதி கடிதத்தின் மீது விசாரணை செய்து இந்த முடிவுக்கு வந்ததாகவும் அப்படைத் தலைவன் எழுதியிருக்கிறான். இக் கடிதத்தின் விலாசம் வருமாறு :

Soobhier the agent of Sree Sun
Karachariar the Priest of
Sree Conjee Commacote
Peetam at Cusbah
of Combaconam

இந்த ரிகார்டிலும், கும்பகோணத்திலிருக்கும் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி என்று குறித்திருப்பதைக் கவனிக்க வேண்டும். இதில் காணும் 'ஸ்பெல்லிங்' விசித்திரம் கர்னல் ஆர்மின் புத்தகத்தைப் படித்தவர்களுக்கு விளங்கும்.

64வது ஆசாரியருக்குப் பிறகு பட்டத்துக்கு வந்த ஆசாரியர்கள் சமீப காலத்தவரானதால் இக்காலத்து ரிகார்டுகளைப் பற்றி நான் இங்கு எழுதவில்லை.

ஐதிகம், கர்ண பரம்பரை, சரித்திரச் சான்று யாவற்றின் மூலமும் ஆதிசங்கரர் அமைத்ததாக உறுதி செய்யப்படும் ஸ்ரீ காஞ்சி ஸ்ரீமடத்தில் ஆதிசங்கரரின் அவதாரமான நம் ஜகத்குரு இன்று ஆசாரியராக இருந்து கொண்டிருக்கிறார். இந்தப் புனிதமான தீபாவளித் திருநாளில் அந்த மகானை நினைப்பதே கங்கா ஸ்நானத்துக்குச் சமானம். அவரை நாளும் ஸ்மரித்து உங்களுக்கும் நினைவூட்டுவிட்டுக் கீழ்க்கண்ட சுலோகத்தை அவரையும், அவர் சார்ந்த குரு பரம்பரையையும் வகித்து வருகிற பெருமை உடைய ஸ்ரீ காஞ்சிக்கு அஞ்சலிகளுடன் சமர்ப்பிக்கிறேன்.

काञ्चि ! त्वं मुक्तिशक्तिः त्वयि भुवनगुरुः शङ्कराचार्य आद्यः
पीठं सर्वज्ञमेत्य स्वमठमरचयत् प्राप सिद्धिं च भव्याम् ।
तस्याविच्छिन्नधारागुरुवरकलितं कामकोट्याख्यपीठम्
स्वाङ्के त्वां लालयन्ती शतशतशरदः मुक्तिदात्री नमामि ॥

(स्वकृतम्)

ஹே காஞ்சியே! நீ முக்திக்கு இருப்பிடமாக இருக்கிறாய். உன்னிடத்தே சகல லோகங்களுக்கும் ஜகத்குருவான ஆதிசங்கராசாரியர் ஸர்வக்ஞ பீடமேறித் தமக்கென மடம் அமைத்துக்கொண்டு அங்கேயே மங்களகரமான ஸித்தியையும் எய்தினார். அவரிலிருந்து தோன்றிய முறிவற்ற குரு பரம்பரையை 'காமகோடி பீடம்' என்று பெயர் பெற்ற பீடமாகப் பல நூற்றாண்டுகளாக உன் மடியில் தாலாட்டி வருகிறாய். இத்தகைய மகிமை பொருந்திய உன்னைப் போற்றி வணங்குகிறேன். (கட்டுரையாசிரியர் ஆக்கம்)


எங்கும் திருவிழாவின்
கோலாகலம்...
கண்ணைபபறிக்கும்
வண்ண ஜாலங்கள்..
ஒளி சிதறும் தீபங்களின்
வரிசைகள்...களிக்கும்
சிரிப்பின் ஆரவாரம்...
வானத்தில் வண்ண ஜாலம்!
வானவீதியில் உல்லாச
பவனி வரும் எங்கள்
போயிங் விமானங்கள்
உங்களுக்கு தீபாவளி
நல்வாழ்த்துக்களை
நல்குகின்றன!
ஏயர்-இந்தியா
பி.ஓ.ஏ.ஸி. மற்றும் கன்டாஸுடன் சேர்ந்து செயலாற்றுகிறது



உபதேசக் கதைகள்

ஏழைக்கு இரங்கும் பெருமான்

இயேசு பெருமானைப் பரிசேயரில் ஒருவன் தன்னோடு உணவு உட்கொள்ள வேண்டுமென்று வருந்தி அழைத்தான். ஏழைக்கு இரங்கும் பெருமான் உடனே அவன் விருப்பத்தை நிறைவேற்ற வந்தார். அந்த ஊரிலேயே பல பாவங்களில் அழுந்திய பெண்மணி அந்தப் பரிசேயன் வீட்டினுக்கு வந்து இயேசு பெருமானைத் தரிசிக்க வந்தாள். அவள் தன் கையில் ஒரு வெள்ளைக்கல் பரணியில் பரிமள தைலம் கொண்டு வந்து, அவர் பாதத்தருகே பின்னாக நின்று அழுது, அவருடைய பாதங்களைத் தன் கண்ணீரால் நனைத்து, பின் பாதங்களைத் தன் தலைமயிரினால் துடைத்து, அவர் பாதங்களை முத்தமிட்டுப் பரிமளத்தைப் பூசினாள். ஏசுபெருமானுக்கு இந்தப் பாவப் பெண்ணைப் பற்றித் தெரியாமலா இருக்கும் என்று ஐயப்பட்டான் பரிசேயன். தீர்க்கதரிசியான இயேசுவோ அவன் ஐயத்தை உணர்ந்து அதனைத் தீர்க்க எண்ணி ஒரு கதையைக் கூறினார். "ஒருவனிடம் இருவர் கடன்பட்டிருந்தார்கள். ஒருவன் ஐந்நூறு தினாரியும், மற்றவன் ஐம்பது தினாரியும் கொடுக்க வேண்டியிருந்தது. கடனைத் தீர்க்க வழியில்லாத அவர்கள் இருவரையும் அவன் மன்னித்து விட்டான். இவர்களில் எவன் அவனிடம் அதிக அன்பாயிருப்பான்?" என்று பரிசேயனிடம் கேட்டார் ஏசுபெருமான். "எவனுக்கு அதிகப் பொருள் கடன் கொடுத்தானோ, அவன்தான்!" என்றான் பரிசேயன். 'பெரும் பாவங்களை எண்ணிக் கண்ணீர் விட்டு உண்மையான மனமாற்றம் கொண்ட இவள் மன்னிப்புக்குப் பாத்திரமானவள்' என்று கூறி அந்தப் பெண்மணிக்கு ஏழைக்கு இரங்கும் பெருமான் அருள் செய்து அனுப்பினார்.

தருணம் வந்தது!

ஆசார்ய உபகுப்தரைச் சுற்றி அப்பப்பா! என்ன கூட்டம்! என்ன கூட்டம்! அவர் துறவியே ஆனாலும் முகத்தில் சுடர்விடும் தேஜஸை என்னவென்பது! பார்ப்பவர்கள் எல்லோரும் பார்த்துக் கொண்டே யிருக்க வேண்டும் என்று ஆசைப்படும் முகம்!

ஆரணங்கு வாசவதத்தையே அவர் மீது மனத்தைப் பறி கொடுத்து விட்டாள்! இளமை சொரிந்த தன் உடலுக்கு ஆடை அணிகளாலும் வாசனைத் திரவியங்களாலும் அலங்காரங்கள் பல புரிந்து கொண்டு, கரங்களிலே பல்வகைப்பழங்களை எடுத்துக் கொண்டு, அவரைக் காணவும் புறப்பட்டு விட்டாள்! பார்வையையே பேச்சாக்கித் தன் இல்லத்துக்கு ஏகுமாறும் வேண்டினாள்!

"அம்மா வாசவதத்தை! உன் அழைப்புக்கு நன்றி. கட்டாயம் வருகிறேன். ஆனால் எனக்குச் சிறிது அவகாசம் கொடு. நானே ஒருநாள் உன் வீடு தேடி வந்து சேருகிறேன்!" என்று அவளது அழைப்பை ஏற்றார் உபகுப்தர்.

வாசவதத்தைக்கு ஒரே மகிழ்ச்சி! வீடு திரும்பியவள் வழிமேல் விழி வைத்தவண்ணம் உபகுப்தரின் வரவை எதிர் நோக்கினாள். ஒரே சிந்தனை அவளுக்கு. உலகை மறந்தாள்; உபகுப்தரை நினைந்தாள்.

நரை, திரை, மூப்பு எல்லாம் அவளை எப்பொழுது ஆட்கொண்டன என்று அவளுக்குத் தெரியாது. காலனும்கூட அவளை அழைத்துச் செல்ல வந்து விட்டான்! இன்னும் உபகுப்தர் வரவில்லையே! சொன்ன சொல் தவறுவாரா அவர்?

அவள் இப்படி நினைத்திருக்கும்பொழுது உபகுப்தர் வந்தார். கண் கலங்கி மெய் மறந்த அவள், "வந்து விட்டீர்களா, சுவாமி? எனது இந்தப் பூவுடல் வாடி வதங்கியபின் வந்திருக்கிறீர்களே, இதனால் உங்களுக்கு ஏதும் பயன் இல்லையே! இந்த உடல் இன்னும் எத்தனை நேரத்துக்கு நிலைத்திருக்கப் போகிறதோ?" என்று மருகினாள்.

'உபகுப்தர் அவள் வார்த்தைகளைச் செவி மடுக்கவில்லை. அவள் உடல் உபாதையினால் வருந்தாமல் இருக்க அவளுக்குப் பணிவிடை புரிவதில் ஈடுபட்டு விட்டார். "நான் உரிய காலத்தில்தான் வந்திருக்கிறேன், வாசவதத்தா! நீ நிம்மதியாக இரு!" என்றார்.

அவளது ஆத்மா அவரது உபதேசத்தைக் கேட்டு நிம்மதியை நாடிப் பிரிந்தது.

காவல் முதல்வன்

நபிகள்நாயகம் ஒரு சமயம் தனியாகப் போய்க் கொண்டிருக்கும்போது யூத வீரனொருவன் அவரைத் தாக்குவதற்கு வாளை உருவிக் கொண்டு ஓடி வந்தான். பெருமானார் கலங்கவில்லை. அஞ்சாநெஞ்சத் துடன் நிமிர்ந்து நின்ற அவரைக் கண்டு திகைத்த யூதன், 'உமக்கு அச்சமே கிடையாதா? இப்போது நான் உம்மைக் கொல்லப் போகிறேன். உம்மைக் காப்பது யார்?' என்று கேட்டான். பெருமானார், 'என்ன கேள்வி கேட்டாய்? ஆண்டவன் காப்பாற்றுவான்' என்றார் இடி முழக்கக் குரலில். நபிகளின் நம்பிக்கையைக் கண்டதும் யூதனின் கை வாள் தடுமாறிக் கீழே விழுந்தது. அப்போது பெருமானார் சரேலென்று அந்த வாளை எடுத்துக் கொண்டு, "இப்போது நான் உன்னைக் கொல்லப் போகிறேன். உன்னை யார் காப்பாற்றுவார்கள்?" என்று கேட்டார். உடனே யூதன் வெலவெலத்துப் போய் "ஐயோ, என்னைக் கொல்லாதீர்கள். உங்களை விட்டால் என்னைக் காப்பாற்ற யாருமில்லை" என்று கதறினான். அப்போது பெருமானார் புன்முறுவலுடன், "அன்பனே, உன்னையும் அந்த ஆண்டவனே காப்பாற்றுவான். நம்பிக்கைதான் வேண்டும்" என்றார். யூதன் மனம் மாறி அதுமுதல் இறைவனிடம் பக்தி செலுத்தலானான்.

மாயை மயங்கியது!

தேவரிஷி நாரதருக்கு ஒரு சந்தேகம், நம்மைப்போன்ற மகரிஷிகளையும் இந்த மாயை ஆட்டிப் படைக்குமா என்று!

கண்ணனது கண்டத்தில் சிரிப்பு எக்காளமிட்டது. "நாரதரே! எனக்கு மிகவும் தாகமாயிருக்கிறது. பக்கத்துக் கிணற்றுச் சென்று பருகச் சிறிது தண்ணீர் எடுத்து வருவீர்களா?" என்று கேட்டார். "இதோ எடுத்து வருகிறேன், பரந்தாமா!" என்று கிணற்றை நோக்கிச் சென்றார் நாரதர்.

அங்கே எழிற்கொடியாள் ஒருத்தி மலர் பறித்து நின்றாள்; மலரோடு நாரதரது மனத்தையும் பறித்து விட்டாள். நெருங்கிய நாரதர் காதல் கனிமொழிகள் பல பேசி அவளைத் தம் இல்லக் கிழத்தியாகவே ஆக்கிக் கொண்டு விட்டார். அது மட்டுமா? அங்கேயே ஒரு குடில் சமைத்துக் குடித்தனமும் நடத்தத் தொடங்கி விட்டார். அப்புறம் என்ன? அவர் நடத்திய குடித்தனம் குடும்பப் பெருக்கத்துக்குக் காரணமாகியது. மழலைச் செல்வத்திலே மனத்தைப் பறிகொடுத்த நாரதர், 'என்னவோ பேரின்பம் பேரின்பம் என்று பிதற்றுகிறார்களே. இந்த இன்பத்தைவிட அந்தப் பேரின்பம் எப்படி உயர்ந்ததாக இருக்க முடியும்?' என்று எண்ணினார்.


கரம் பற்றியவளின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து அவள் களிப்பையே தமது இலட்சியமாகக் கொண்டு கிணற்று நீர் எடுத்து வரச் சென்றவருக்குக் கண்ணன் தாகத்துக்குத் தண்ணீர் கேட்டதே மறந்து விட்டது. நீர்க் குடத்துடன் தம் குடிலை நோக்கித் திரும்பிக் கொண்டிருந்தவர் கண்ட காட்சி!

'ஐயோ!' என்று அலறி விட்டார். 'இப்படிக் குடியும் குடித்தனமுமாக, என்பாட்டுக்கு இருந்தேனே! என் வாழ்க்கை உனக்குப் பொறுக்கவில்லையா கடவுளே! இப்படி என் குடிலுக்குத் தீயிட்டுக் குழந்தை குட்டிகளுடன் குடும்பத்தையே பொசுக்கி விட்டாயே, பாழும் கடவுளே!' என்று திட்டிக் கொண்டே கண்ணனின் காலடிகளில் விழுந்தார். தண்ணீர் கொண்டு வருவதற்குப் பதில் கண்ணீரைப் பெருக்கினார்.


"நாரதரே! தாகத்துக்குத் தண்ணீர் கேட்டேனே! கொண்டு வரக் காணோமே! இப்படி அலறிப் புடைத்துக் கொண்டு வருகிறீரே, என்ன விஷயம்?" என்றார் கண்ணன்.

கைகளைப் பிசைந்து கண்களைத் துடைத்துக் கொண்ட நாரதர் திக்பிரமை பிடித்தவர் போல் நின்றார். "எத்தனை பெரிய மகரிஷிகளையும் இந்த மாயை ஆட்டிப் படைக்கும் என்பதை இப்பொழுதாவது உணர்ந்தீரா?" என்று பகவான் கண்ணன் கேட்ட பின்தான் நாரதருக்குத் தம் சுய உணர்வு வந்தது. தண்ணீர் எடுத்து வரத் திரும்பவும் ஓடினார்.

ஓவியர் கல்பனாவின் கைவண்ணத்திலே உபதேசக் கதைகள் வண்ணக் களஞ்சியமாக உருப்பெற்று விட்டன.


உபதேசக் கதை.1.


உபதேசக் கதை .2.


உபதேசக் கதை.3.


உபதேசக் கதை.4.



மின்மினி

தமிழ்மகன்

சின்னச் சின்ன மின்மினி,—நீ
செல்வ தெங்கு கண்மணி?

கண்ணில் கண்ணில் ஆடுறாய்;—அக்
கண்ம றைந்தும் ஓடுறாய்!—சி.

சின்னச் சின்ன மின்மினி,—நீ
செல்வ தெங்கு கண்மணி?

கன்னங் கருக்கல் வேளையில்—உலைக்
கனற் பொறிபோல் பாய்கிறாய்;

தென்னங் குருத்துப் பாளையில்—ஒளித்
தேன்பூ வாகச் சாய்கிறாய்!—சி.

சின்னச் சின்ன மின்மினி,—நீ
செல்வ தெங்கு கண்மணி?

பண்ணின் இனிய பாடலில்—சுவை
பதுங்கும் சொல்போல் ஒளிகிறாய்;

பெண்ணின் இனிய ஊடலில்—அவள்
பேசா நயம்போல் மிளிர்கிறாய்?—சி.

சின்னச் சின்ன மின்மினி,—நீ
செல்வ தெங்கு கண்மணி?

அந்திப் பட்டின் ஆடையில்—பொன்னின்
அழகுப் பொட்டாய் மேவுறாய்;

சிந்துப் பட்டுத் தேடையில்—அதே
சிறகு கொண்டும் தாவுறாய்!—சி.

சின்னச் சின்ன மின்மினி,—நீ
செல்வ தெங்கு கண்மணி?

பூமி இருளின் போர்வையில்—முனைப்
புதுமின் மீனாய்த் திரிகிறாய்;

ஆம்:இங் கேழை வேர்வையில்—உயிர்
அரும்பு மொட்டாய் விரிகிறாய்!—சி.

சின்னச் சின்ன மின்மினி,—நீ
செல்வ தெங்கு கண்மணி?

புன்மை எண்ணப் புகையிலும்—ஒப்
புதுமை தோன்றும் என்னவோ?

பன்மை நண்ணும் பகையிலும்—தெய்வப்
பாசம் தோன்றி மின்னவோ?—சி.

சின்னச் சின்ன மின்மினி,—நீ
செல்வ தெங்கு கண்மணி?

சின்னச் சின்ன மின்மினி,—நீ
செல்வ தெங்கு கண்மணி?

என்னை யும்கொண் டோடுவாய்;—மன
இருளிற் கோலம் போடுவாய்!—சி.

சின்னச் சின்ன மின்மினி,—நீ
செல்வ தெங்கு கண்மணி?

அன்பாலே!

தமிழ்முடி

நிலத்தை மேலும் வெட்டிவெட்டி
நீண்ட ஆழம் தோண்டுதல்
நிலத்தை வாட்டித் துன்பம்செய்யும்
நினைப்பி னாலே அல்லவே!

மண்ணுக் குள்ளே மறைந்திருக்கும்
மழையின் அமுத நீரினை
உண்ணும் நீராய் உலகினுக்கே
ஊட்ட வேண்டும் என்பதால்!

வீணை தன்னை மீட்டிமீட்டி
மேலும் மேலும் இயக்குதல்
வீணைக் கம்பி தனையறுக்கும்
வெறுப்பி னாலே அல்லவே!


வீணைக் குள்ளே அடங்கியுள்ள
வித்தை யான இசையினைக்
காணு மாறு புவியினுக்குக்
காட்ட வேண்டும் என்பதால்!

கருங்கல் மலையை உளியினாலே
கல்லிக் கல்லிச் செதுக்குதல்
கருங்கல் மலையைச் சிதறவைக்கும்
கருத்தி னாலே அல்லவே!

மலையின் உள்ளே உருவில்லாமல்
கருவி ருக்கும் அற்புதக்
கலைகள் என்னும் குழந்தைப்பேற்றைக்
காட்ட வேண்டும் என்பதால்!

அன்பே! உன்னை இடித்துக்கூறி
அனுதி னம்நான் வருவது
துன்பத் தாலே உனைவருத்தும்
எண்ணத் தாலே அல்லவே!

உன்னுள் ளத்தே உறைந்துவிட்ட
உயர்ந்த அன்பு கவிதையை
என்னு ளம்போல் பெருகச்செய்ய
வேண்டும் என்ப தாலேயே!



கண் திறந்தவன்

அகிலன்



தஞ்சை நகர அரண்மனையின் அந்தப்புரக் கலைக் கூடத்தின் ஓர் ஓரத்தில் சிற்பிகளின் தலைவன் தில்லைக்கூத்தன் அடக்க ஒடுக்கத்தோடு நின்றுகொண்டிருந்தான். வயது முப்பதுக்குள்தான் இருக்கும்; என்றாலும் அவன் வடிக்கும் வீரனின் சிலையை ஒத்திருந்தான். அவனுக்கு அருகில் ஆசனத்தில் வீற்றிருந்தார் அரசர் ரகுநாத நாயக்கர். முதிர்ந்த வயதிலும் மிடுக்கோடு காணப்பட்டார் அவர். அவர்களுக்கு எதிரில் சரிகைக் கரையிட்ட மேக வண்ணப் பட்டுத் திரையொன்று தொங்கியது.

'கலீர் கலீர்' என்று சதங்கை ஒலித்தது. மின் வெட்டிக் காரிருள் கிழித்ததுபோல், திரைக்குள்ளிருந்து வெளியில் வந்தாள் அரசவைக் கணிகை திருலோக சுந்தரி. இவள்தான் திருலோகசுந்தரியா? எவ்வளவு பொருத்தமான பெயர்!

அவள் பெயரைத்தான் பலர் கேட்டிருக்கிறார்கள்; அவளது நடனத்தின் புகழையும் பேரழகின் பெருமையையும் பலர் பேசியிருக்கிறார்கள். ஆனால் குடிமக்களில் பலர் அவளை நேரில் கண்டதில்லை. அவள் நடனத்தைக் காணும் பெரு வாய்ப்பும் அவர்களுக்குக் கிட்டியதில்லை.

அவள் வெளியில் வருவதே அபூர்வம். அப்படியே வந்தாலும் திரை தொங்கும் சிவிகையில்தான் வருவாள். அரசகுலத்தைச் சேர்ந்தவர்கள், மந்திரி பிரதானிகள், தளவாய்கள் முதலியோரே அவளைக் கண்டிருக்கிறார்கள்; அவளோடு பழகியிருக்கிறார்கள்.

முதல் முறையாக அவளைக் கண்ட தில்லைக்கூத்தன், 'இவள்தான் திருலோகசுந்தரியா?' என்று தன்னைத் தானே மீண்டும் வியப்போடு கேட்டுக்கொண்டான்.

அவள் நடனமாடினாள். அவளது கண் வீச்சில், கரங்களின் துடிப்பில், கால்களின் துள்ளலில், அங்க அசைவுகளில் மனோபாவம் மலர்ச்சியுற்று அபிநயங்களாக மணம் வீசியது. ரசானுபவத்தின் கலைத் தேன் உண்டு கிறங்கி நின்றான் நுண்ணுணர்வுக் கலைஞன்.

கூத்தனுடைய விழிச் சுடர் மின்னலைக் கொண்டே அவன் எத்தகைய ஆழமான ரசிகத் தன்மை கொண்டவன் என்பதைத் திருலோகசுந்தரியும் உணர்ந்துகொண்டாள். அவன் எந்த ஒரு விநாடிப் பொழுதுக்காக — ஒரே ஒரு விநாடிப் பொழுதுக்காக — கண்ணிமைக்க மறந்துக் காத்திருக்கிறான் என்பதும் அவளுக்கு விளங்கிவிட்டது.

எல்லையற்ற ஆனந்தப் பூரிப்பு ஏற்பட்டது அவளுக்கு.

அவனுடைய கற்பனைக்கு விழிப்பூட்டும் கண நேரக் கலை வீச்சு மின்னல், ஆடும் ஆட்டத்துக்கிடையே அவனை உலுக்கி எடுக்கும் அந்த விநாடி நேரத்து மனோபாவம், தோன்றியவுடன் மறையக் கூடியதானாலும் அதற்குள் ஒரு கற்பனை வித்தைத் தூவிவிடும் அந்த ஒரு சாயல்...

ஆம், அதற்காகவேதான் அவன் காத்திருக்கிறான்.

'ஆனந்தத்தின் எல்லையை எட்டிப் பிடிக்க ஒரு சாயல் வேண்டுமா?' என்று அவனைக் கேட்பவள் போல் புன்முறுவல் செய்துவிட்டு, 'இதோ பார்!' என்பவள்போல் விண்ணில் பறக்கும் பறவையாகத் தாவினாள்..... காற்றில் தாவித் தேமிசைக்கும் வானம்பாடியா அவள்?

''ஆஹா!'' என்று தன்னை மறந்து கூவிவிட்டான் கலைஞன். மறுகணமே அவனுடைய ஆட்டமும் நின்றது.

''போதும்!'' என்றான் கனவிலிருந்து விழித்துக் கொண்ட சிற்பி.

''நவரசங்களில் எந்த உணர்ச்சியைப் பிரதிபலிப்பதுபோல் சிற்பம் அமைக்கப் போகிறாய்?'' என்று கேட்டார் அரசர்.

''ஆனந்த மஹோதயம் !''

''ஆம், அதுதான் ஏற்றது.''

''ஆனந்தமே வாழ்க்கையின் லட்சியம்; அதுவே கலைகளின் லட்சியம். அதை அடையச் செய்யும் முயற்சியிலேயே நவரசங்களில் மற்ற ரச உணர்ச்சிகள் குறுக்கிடுகின்றன. ஆகவே அந்த முழு முதல் உணர்ச்சி கொண்ட சிற்பமாக இது இருக்கட்டுமென்று நினைத்தேன்'' என்றான் சிற்பி.

''ஆனந்தக் கூத்தனுடைய பெயரைக் கொண்டவரல்லவா இவர்?'' என்று முதன் முதலாய்த் தன் பவள வாய் திறந்து முத்துப் பல் வரிசை தெரியச் சிரித்தாள் திருலோகசுந்தரி.

சிற்பி திடுக்கிட்டான். அவளுக்கு எப்படி அவன் பெயர் தெரிந்தது?

''நடனக் கலையிலும் உனக்குப் பயிற்சி உண்டா ?'' என்று கேட்டார் அரசர்.

''ஓவியம், காவியம், கூத்து முதலிய எல்லாக் கலைகளையுமே சிறிதளவு ரசித்துப் பழகியிருக்கிறேன். கல்லில் இயல், இசை, கூத்து, கடவுள் எல்லாமே வார்த்தெடுக்க வேண்டிய பணி என் பணி. அதனால் கற்றுக் கொண்டிருக்கிறேன்.''

திருலோகசுந்தரி அப்போது சட்டென்று தன் தலையை உயர்த்தி ஒரு கணம் அவனை உற்று நோக்கினாள். அடுத்த கணம் அவள் தலை கவிழ்ந்தது. அவள் முகத்தில் நாணம் படர்ந்தது. அந்த நாணம் அபிநயத்தில் பிறந்த நாணமில்லை; இயல்பாகவே உயிர் மூச்சிலிருந்து கனிந்த ஒன்று. அதையும் சிற்பி கண்டு கொண்டான்.

''விரைவில் சிற்பத்தை முடித்துவிடு; தேவையானால் மீண்டும் திருலோக சுந்தரியை நீ காண்பதற்கு ஏற்பாடு செய்கிறேன்.''

''சித்தம், அரசே!''




கரம் கூப்பி வணங்கிவிட்டு விடைபெற்றுக் கொண்டான் கூத்தன். அவன் செல்வதைப் பார்த்துக் கொண்டே சிலையாக நின்றாள் திருலோக சுந்தரி.

அந்த முதல் சந்திப்பிலேயே சிற்பியின் உள்ளமாகிய திரைச் சீலையில் அவள் எத்தனையோ நடனத் தோற்றங்களில் உயிர்ச் சித்திரமாகப் பதிந்துவிட்டாள். சிற்பம் வடிப்பதற்கென்று அவளை அடுத்த முறை காண வேண்டிய அவசியம் அவனுக்கு ஏற்படவில்லை.

திருலோகசுந்தரியின் வாளிப்பான உடல் வண்ணம், வண்ணத்துக்கேற்ற உயரம், காண்போரைக் கவர்ந்து இழுக்கும் முக வசீகரம், அவளது மேனியின் மென்மை, குழைவு, நெளிவு இவ் வளவையும் அவன் கல்லில் இழைக்கத் தொடங்கினான்.

அவனாகச் சிலை வடித்தான் என்று கூறுவதைவிட, திருலோகசுந்தரியே அவன் உள்ளத்திலிருந்து கொண்டு, அவன் விரல்களில் நடனமாடித் தன் சிலையைத் தானே உருவாக்கிக் கொண்டாள் என்றுதான் கூற வேண்டும்.

கலைக் கூடத்துக்குச் சிலை வந்தது. ரகுநாத நாயக்கர் பிரமித்துப் போனார். திருலோகசுந்தரி கண்ணிமைக்க மறந்தாள். அந்தப்புரத்துப் பெண்டிர் மெய்ம் மறந்து நின்றனர்.



சிற்பி அப்போது அங்கு இல்லை. அவன் வேலை முடிந்து விட்டதால் இனி அவன் அங்கு வர முடியாது. அந்தப்புரத்துக்கு வந்து போகும் உரிமை திருலோகசுந்தரிக்கு மட்டுமே இருந்தது. அவள் கணிகை யென்றாலும் இளவரசிகளைவிடச் செருக்கோடு வாழ்ந்தவள்.

அரசவைக்குத் தில்லைக் கூத்தனை வரவழைத்து அவனுக்குப் பொன்னும் பொருளும் ஏராளமாக வாரி வழங்கினார் அரசர். அந்தப் பரிசுப் பொருட்களை ஒரு பேழையில் வைத்து, அவனை அரண்மனை ரதத்தில் ஏற்றி அவன் வீட்டுக்குத் திருப்பி அனுப்பினார்.

தொழிலாளர் வாழ்ந்த பகுதியில் இருந்தது அவனுடைய கூரை வீடு. அவனுடைய தமக்கையும், தமக்கையின் கணவனும் அங்கு குடியிருந்தார்கள். தில்லைக் கூத்தனும் அங்குதான் தங்கியிருந்தான். திருமணத்தைப் பற்றிய நினைவே இல்லாதபடி, எந்த வேளையிலும் உளியும் கல்லுமே உலகமாகச் சிற்பங்களோடு பழகிக் கொண்டிருந்தவன் அவன்.

அவன் தமக்கையும் தமக்கை கணவனும் பேழையில் இருந்த பொருள்களைக் கண்டு வியந்து கொண்டிருந்தார்கள். பொன் வராகன்கள் நிறைந்த ஒரு பட்டுப் பை முடிக்க, இரத்தினக் கம்பளம் ஒன்று, நவரத்தினங்கள் பதித்த இரு பொற் காப்புகள். இவ்வளவையும் பெற்று வந்த சிற்பி அவற்றைக் கண்டு சிறிதுகூட மகிழ்ச்சி அடையவில்லை; ஏக்கம் பிடித்தவன் போல் காணப்பட்டான்.

சிற்பத்தை முடிக்கும் வரையிலும் திருலோக சுந்தரி அவனோடு ஒன்றியிருந்தது போலவும், அவளுக்கும் அவனுக்கும் நெருங்கிய பிணைப்பு இருந்தது போலவும் தோன்றியது. ஆனால், கனவுபோல் எல்லாமே மாயமாய் மறைந்து விட்டன. அவளைத் தான் இனி காண முடியாதென்றாலும், அவன் சிற்பத்தைக் கூட இனி அவளும் காண முடியாது. அதைக் காண அந்தப்புரத்துக்குள் நுழைந்தால், அவன் கழுத்தின் மீது தலை நிற்காது. அதைச் சீவி எறிந்து விடுவார்கள் காவல் வீரர்கள்.

'திருலோக சுந்தரி!' — அவன் நீண்ட பெருமூச்சு விட்டான். இத்தனை நாட்களாக அவன் உள்ளத்தில் பொங்கி வழிந்த ஆனந்தம் இப்போது திடீரென்று வறண்டு போய் விட்டது. சோர்வு, களைப்பு, சலிப்பு, விரக்தி அவனுக்கு.

மந்திரிப் பிரதானிகளோ, தளவாய்களோ, படைத் தலைவர்களோ தாம் அவளைக் காண முடியும்; அவளோடு பழக முடியும். சிற்பி ஒருவன் அவளை மனத்தில் நினைப்பது தெரிந்தாலே, அவர்கள் அவனை உயிரோடு விட்டு வைக்க மாட்டார்கள்.

அரண்மனைக்குச் செல்வதற்காக அவன் அணிந்து கொண்டிருந்த புத்தாடைகளை வெறுப்போடு களைந்தெறியப் போனான். அப்போது அவன் வீட்டு வாசலுக்கு ஒரு சிவிகை வந்து நின்றது. பணியாட்களில் ஒருவன் வந்து தில்லைக்கூத்தனிடம் ஓர் ஓலையை நீட்டினான். திருலோகசுந்தரி அனுப்பியிருந்த ஓலை அது. அவளுடைய பல்லக்கில் தன்னை உடனடியாக வந்து காணுமாறு அவள் அழைத்திருந்தாள்.

பாலைவனமாக வெந்து கருகிய அவன் மனத்தில் திடீரென்று சோலைவனமொன்று பூத்துக் குலுங்கியது. அரை நாழிகைப் பொழுதுக்குள் தான் எப்படியெல்லாம் அழகுபடுத்திக் கொள்ள முடியுமோ, அப்படியெல்லாம் அழகுபடுத்திக்கொண்டு கிளம்பினான். புறப்படும்போது மறவாமல் தனக்குக் கிடைத்த பரிசுப் பேழையையும் உடன் எடுத்துக்கொண்டான்.

திருலோக சுந்தரியின் மாளிகையின் சுற்றுச் சுவருக்குள் நுழைந்தது பல்லக்கு. அதன் உள் வாயில் முகப்பில் அவன் வரவை எதிர்நோக்கிக் காத்திருந்தாள் அவள். அழகுக் கலையில் அவளுக்கு இருந்த திறனை அவள் ஆடை அணிகள் எடுத்துக்காட்டின. கச்சணிந்த நடனத் தோற்றத்திலிருந்ததை விட அவள் இப்போது பூரணப் பொலிவோடு விளங்கினாள்.

அவளுடைய மாளிகைக்குள் நுழைந்த பிறகுதான் அவள் காலடியில் வீழ்ந்து கிடந்த செல்வச் செருக்கைச் சிற்பியால் உணர முடிந்தது. திரும்பிய பக்கமெல்லாம் பொன்னும் மணிகளும் இழைத்த ஆசனங்கள்; சரிகைப் பட்டுக்களில் பூவேலைகள் செய்யப் பெற்ற திரைச் சீலைகள்; கைகட்டி வாய் புதைத்து நிற்கும் பணியாட்கள்.

மாளிகைக்குள் அகில், சந்தனம், மல்லிகை, முல்லை முதலியவற்றின் நறுமணம் இழைந்து கொண்டிருந்தது. அவளுடைய மாளிகை ஒரு சின்னஞ்சிறு அரண்மனையேதான்.

தோட்டத்தை அடுத்திருந்த பின்புறக் கூடத்துக்கு அவனை அழைத்துச் சென்று ஆசனத்தில் இருக்கச் செய்தாள். தானும் அருகில் அமர்ந்தாள். புன்னகை தவழ அவனை உற்றுப் பார்த்தாள். அவன் கரத்திலிருந்த பேழையையும் அவள் கண்கள் கவனித்தன.

"சிற்பக் கலையில் இப்படி ஓர் அற்புதம் செய்வீர்கள் என்று நான் நம்பவில்லை" என்றாள்.

''அற்புதம் என்னிடமில்லை; அது உன்னிடமிருந்து எனக்குக் கிடைத்தது'' என்றான். பிறகு, எப்படித் தன் பேழையை அவளிடம் கொடுப்பது என்று தெரியாமல் தயங்கி விட்டு, '' அரசர் எனக்குக் கொடுத்த பரிசை அதற்கு உரிய இடத்தில் சேர்ப்பிக்க வந்திருக்கிறேன்'' என்று அவளிடம் கொடுக்கப் போனான்.


'கலீர்' என்று சிரித்து விட்டாள் அவள். ''நீங்கள் கலைஞராக நடந்து கொள்வீர்கள் என்று நினைத்தேன். ஆனால் பிரபுக்களைப் போலவே பழகு கிறீர்கள்.''

''நான் பிரபுவாக முடியாது; இந்தப் பிறவியில் அது முடியாது'' என்று சிறிது கலக்கத்தோடு கூறினான் அவன்.

''அதற்காக நீங்கள் வருத்தப்பட வேண்டாம். எந்தப் பிரபுவையுமே நான் இது வரையில் விருந்துக்கு அழைத்ததில்லை'' என்றாள் திருலோக சுந்தரி முறுவலோடு.

அங்கு அவனுக்கு அறுசுவை விருந்து கிடைத்தது. திருலோகசுந்தரியே தாம் பூலத்தை மடித்துக் கொடுத்தாள். பிறகு அவன் கொண்டு வந்த பேழையைத் திறந்து, அதிலிருந்த பொற்காப்புக்களை எடுத்துத் தானே தன் கரங்களால் அவ னுக்கு அணிவித்தாள். சில்லைக்கூத்த னுக்கு எல்லாமே ஒரு கனவுலகத்தில் நடப்பதுபோல் தோன்றியது. அவ ளுடைய மென்கரத்தின் ஸ்பரிசம் பட்ட வுடன் மெய்சிலிர்த்தது அவனுக்கு.

பல்லைக் காண்பித்ததற்குக் . . . .



. . . கைமேல் பலன் !

''உங்களிடம் ஓர் உதவி கோரியே உங்களை இங்கு அழைத்திருக்கிறேன் '' என்று பேச்சை ஆரம்பித்தவள், ''இப் போது நான் இருக்கும் தோற்றம் உங் களுக்குப் பிடித்திருக்கிறதா?'' என்று கேட்டாள்.

அவன் உற்று நோக்கினான்.

''உங்களுடைய கலைக் கண்கள் என்ன சொல்கின்றன ?''

''அழகுத் தெய்வமே இந்தக் கலை ஞனுக்குக் காட்சி கொடுத்திருக்கிறது !'' என்று தனக்குத் தோன்றியதை அப் படியே கூறினான் கூத்தன்.

அவள் திடீரென்று நீண்ட பெருமூச்சு விட்டாள். அவள் முகத்தில் மெல்லிய துயரத்தின் சாயல் படிந்தது.

''சிற்பியாரே! நீங்கள் காணும் இந்த அழகையே நானும் தெய்வமாக வணங்குகிறேன். ஆனால் வெகு விரைவில் இது சீரழிந்து சின்னாபின்னமாகப் போகி றது என்பது எனக்கு மட்டுமே தெரியும். நம்முடைய மந்திரி பிரதானிகளும், தளவாய்களும் பகைவர்களின் கோட்டை யைக் கைப்பற்றிச் சீரழிப்பதில் வல்ல வர்கள் என்பது உலகமறிந்த செய்தி. ஆனால் அதற்கு மேலும் ஒரு விஷயம் நான் சொல்லுகிறேன். நான் பாது காத்து வரும் இந்த அழகென்னும் கோட் டையை நிர்மூலமாக்குவதிலும் அவர்கள் வல்லவர்கள். கோட்டை விழுந்துகொண் டிருக்கிறது. - இது நிர்மூலமாவதற்குள் இதைப் போல் ஒன்றை உங்கள் சிற்பத் தில் செய்து கொடுங்கள்.''

சிற்பியின் விழிகளில் கண்ணீர் திரண்டது.

''நீங்கள் வடிக்கப் போகும் சிலையைக் கண்டு நான் ஆறுதல் பெறுவேன். நீங்கள் உருவாக்கும் திருலோகசுந்தரி என்னை விடப் பாக்கியம் செய்தவளாக இருப் பாள். அவளுக்குச் சோர்வு, தளர்ச்சி, நோய், முதுமை, சீரழிவு எதுவுமே இருக்காது.''

''கட்டாயம் வடித்துத் தருகிறேன். உனக்காக எதையுமே செய்யச் சித்த மாக இருப்பவன் நான். ஆனால் இந்த வேலையோ என்னுடைய ஆத்மாவுக்கு இன்பம் தருவது.''

''கூடிய வரையில் மற்றவர்களுக்குத் தெரியாமல் இருக்க வேண்டும் என்று பார்க்கிறேன். பின்புறத்திலுள்ள இந்தக் கூடத்துக்கு யாரும் வருவதில்லை. இங் கேயே செய்யலாம்.''

எடுத்து வந்த பேழையுடன் அவனைத் திருப்பி அனுப்பினாள் திருலோகசுந்தரி. பிரபுக்களும் பெறாத பேற்றைத் தான் பெற்றதாகப் பெருமையில் மூழ்கியிருந் தான் சிற்பி.

திருலோகசுந்தரியின் மாளிகைக்குள் மற்றொரு திருலோகசுந்தரி உயிர் பெற் றெழத் தொடங்கி விட்டாள். சில்லைக் கூத்தனுக்கு அங்கே ஒரு சிற்றரசனுக் குரிய உபசாரங்களைவிட அதிகமாகவே நடந்தன. பணிப் பெண்களைக்கூட அவ னுக்குப் பணி செய்யவிடாமல் ஒவ் வொன்றையும் தானே கவனித்தாள். தன்னை மறந்து வேலையில் ஈடுபட்டிருப்ப வனை உண்ணச் சொல்வது, அவனுக்குத் தாம்பூலம் மடித்துக் கொடுப்பது, ஓய்வு கொள்ளச் சொல்லி அவனோடு அள வளாவுவது முதலியவற்றில் அவள் தனி யானதோர் ஆனந்தம் கண்டாள்.

ஒரு நாள் வேலையில் அவன் மூழ்கி யிருந்த போது, மயிற்பீலியால் அவள் வீசிக் கொண்டிருந்ததை அவன் கவனிக்க வில்லை. கவனித்தவுடன் பரபரப்புடன் எழுந்து அதைப் பற்றினான்.

''வேண்டாம், சுந்தரி! இந்த ஏழைக் கலைஞனை இப்படியெல்லாம் பேண வேண் டாம். நீ வீசுவதை நிறுத்தினால்தான் நான் சிற்றுளியை எடுப்பேன்.''

அவள் சிரித்துக் கொண்டே ''நீங்கள் போது உங்கள் வேலையைக் கவனி யுங்கள் ; இதில் எனக்கொன்றும் சிரம மில்லை; இதுவே என் வேலை!'' என்றாள்.

தோற்றங்கள் கொடுப்பதற்காக அவ் வப்போது அவனை வந்து அருகில் அமர்ந் திருக்கச் செய்வான் சில்லைக்கூத்தன். சமயங்களில் தன்னையே மறந்து அவளைப் பார்த்துக் கொண்டே அவன் இருந்து விடுவதுண்டு. அவனைப் பித்தனாக மாற்றி வரும் உள்ளுணர்ச்சி அப்போதெல்லாம் திருலோகசுந்தரியை என்னவோ செய்யும்.

பகல் நேரங்களில் மட்டுமே அவன் அங்கு சிலை வடிப்பதற்கு அனுமதிக்கப்பட் டான். இந்த ஒரு விஷயத்தில் மட்டும் அவள் அன்பு நிறைந்த கண்டிப்புக் காட் டினாள். தவிரவும், சில வேளைகளில், யாரேனும் அவளைத் தேடி வந்திருப்பது தெரிந்தால் பரபரப்போடு அவள் எழுந்து முகப்புக்கு ஓடுவாள். இந்தச் செயல்கள் மட்டிலும் அவனுக்குப் பிடிப்பதில்லை. செல்லம் கொடுத்து வளர்க்கும் சிறு குழந்தைகள் சிணுங்குவதைப் போன்று அப்போது அவன் மனம் பிடிவாதம் செய்யும்.

சிற்பம் விரைவில் முடிந்துவிடும்போல் தோன்றியது. அதுதான் அவனுக்குப் பிடிக்கவில்லை. அவளுக்கும் அவனுக்கும் இடையிலிருந்த ஒரே பிணைப்பு அந்தச் சிற்பம் ஒன்றுதான். அது முடிந்துவிட் டால் பிறகு அவனுக்கு அங்கென்ன வேலை? வாழ்நாள் முழுதும் அதை முடிக்காமலே இருக்க முடியுமானால்....

தன் மனத்தின் வலிமையனைத்தும் சேர்த்துப் பிடித்துக் கொண்டு ஒரே ஒரு முடிவுக்கு வந்தான் சிற்பி. எப்படியும் அவளிடம் நேரடியாகப் பேச வேண்டும் என்ற துடிப்பு அவனை உந்தித் தள்ளியது.

ஆயிற்று; சிற்பத்துக்குக் கண் திறந்து விட வேண்டியதுதான். அரை நாள் வேலையே எஞ்சியிருந்தது.

''நாளைக்கு முடிந்துவிடும் போல் இருக் கிறதே!'' என்று கூறினாள் சுந்தரி.

அவனை ஏறிட்டுப் பார்த்துவிட்டு, ''நாளைக்கு என்றே ஒன்று வராமலிருந் தால் நல்லதென்று நினைக்கிறேன்; அது பற்றித்தான் இன்றைக்கே, இப்போதே, உன்னிடம் பேச வேண்டும் என்று தோன்றுகிறது'' என்றான்.

அவள் புரிந்து கொண்டாள்; ஆனால் புரிந்து கொண்டதாக அவனிடம் காட்டிக் கொள்ளவில்லை. ''நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?''

''இதுவரையிலும் எனக்குக் கிடைக் காத பெரும் பரிசை இதற்கு நான் எதிர் பார்க்கிறேன். இனி என்றுமே யாராலும் கொடுக்க முடியாத பெரும் பரிசு அது. அதை நீதான் கொடுக்க முடியும்.''

அவள் மௌனம் சாதித்தாள்.

''உன்னையே நீ எனக்குத் தர வேண் டும்....''

அவனுடைய மௌனம் அப்போதும் கலையவில்லை.

"திருலோகசுந்தரி!......."

"அதைவிட உயர்ந்ததாக, அதைவிடச் சிறந்ததாக, வேறு எதையாவது கேளுங்கள். தயைசெய்து.... தயைசெய்து..... என்னை மட்டும் மறந்து விடுங்கள்."

"உன்னை என்னால் மறக்கவும் முடியாது; உன்னைவிடச் சிறந்தது எனக்கு இந்த உலகத்தில் வேறொன்றும் இல்லை."

"நீங்கள் என்னை மன்னிக்கத்தான் வேண்டும்" என்று சிறிது கண்டிப்போடு கூறினாள் திருலோக சுந்தரி.

ஊமைக் கோபத்துடன் குமுறினான் தில்லைக்கூத்தன். அவளுடைய நெஞ்சத்தில் அவன் வேண்டுமென்றே அன்புத் தீயை வளர்த்துவிட்டு இப்போது சாகசம் செய்வதாகக் குற்றம் சாட்டினான். தன்னை அவள் அலட்சியம் செய்வதாகவும் அவமதிப்பதாகவும் தூற்றினான்.

சிறிதுகூட ஆத்திரப்படாமல், "சிற்பம் வடிப்பது உங்கள் தொழில்; சாகசம் செய்வது என் தொழில்!" என்று கூறிச் சிரிக்க முயன்றாள் அவள்.

"நான் உன்னைத் தேடி வரும் பிரபுக்களில் ஒருவனாக இருந்தால் நீ இப்படிப் பேச மாட்டாய்."

"ஆமாம்; உண்மைதான். எனக்குப் பிரபுக்கள் வேறு, நீங்கள் வேறுதான்."

"என்ன சொன்னாய்?" என்று கத்தினான் கூத்தன்.

"நாளைக்கு வாருங்கள்; அமைதியாகப் பேசுவோம்!"

"வருகிறேன்!" என்று சொல்லி விட்டுச் சிவிகையில் ஏறாமல் வேகமாக நடந்தான் சிற்பி.


மறு நாள் வந்தது. அவன் வரவில்லை. சிவிகை அவனைச் சுமக்காமலே திரும்பி வந்தது. முதல் மாலையில் அவன் வழக்கம் போல் வீட்டுக்குத் திரும்பவில்லையாம். அவன் தமக்கையும், தமக்கையின் கணவனும் பதறித் துடித்தார்கள். அவர்களுக்குத் தேவையான பொன்னும் பொருளும் அனுப்பிவிட்டு, அவனைத் தேடுவதற்கு ஆட்களை அனுப்பி வைத்தாள் திருலோகசுந்தரி. அவனை எங்குமே காண முடியவில்லை.

நாட்கள் சென்றன. கண் இறவாச் சிலையின் முன்பு அமர்ந்து கொண்டு, கண்களைப் பறி கொடுத்தவள் போல் அவள் கதறலானாள். மாதங்களும் சென்றன. அவன் திரும்பி வரவில்லை. ஆனால் அவள் எந்தக் கொடுமையை நினைத்து அஞ்சிக் கொண்டிருந்தாளோ, அவை அவள்மீது படையெடுக்கத் தொடங்கின.

முகத்திலே சுருக்கங்கள் தோன்றின; கண்கள் பள்ளத்திலே ஆழ்ந்தன; அவற்றைச் சுற்றிக் கருவளையங்கள் படிந்தன. அவளுடைய பிரதிபிம்பமே அவளைக் கண்டு எள்ளிநகையாடுவது போல் அவளுக்குப் பிரமை ஏற்பட்டது.

தளர்ச்சி, தடுமாற்றம், சோர்வு, களைப்பு, பசியின்மை, உறக்கமின்மை.... நோய்களும் முதுமையும் அவள் அழகின் மீது வஞ்சம் தீர்த்துக் கொள்ளத் துணிந்து விட்டன போலும்!

காலம் எவ்வளவு கொடுமை நிறைந்தது என்பதை அவள் காணத் தொடங்கி விட்டாள். அவளுடைய காலடியில் பொன்னும் மணியுமாகக் குவித்துவிட்டு,



தாயார்: ஏ, கமலம்! நீ என்ன அறுபது நாழியும் ஆம்பிள்ளைப் பிள்ளைகள் மாதிரி கண்ணாடி முன்னாலேயே நின்றுகொண்டு ஸ்நோ பூசிக்கொள்கிறதும் பௌடர் பூசிக்கொள்கிறதுமாக இருந்திண்டிருக்கியே, வெட்கமாக இல்லை?

அவளது கண நேரக் கண் வீச்சுக்காகத் தவம் கிடந்தவர்கள் எங்கு சென்றார்களோ தெரியவில்லை. வீராதி வீரர்களும் சூராதி சூரர்களும் பெருவணிகப் பிரபுக்களும் அவளைக் கண்டு அஞ்சத் தலைப்பட்டார்கள். அதுவரையில் அவளுக்கொரு நிம்மதிதான்.


ஆனால், அவன் எங்கே? அந்த ஒரே ஒருவன் மட்டும் எங்கே?

மறு நாள் அவன் வருவான், அவளிடம் மனம் திறந்து பேசலாம் என்று அன்றைக்கு நம்பிக் கொண்டிருந்தவள் அவள். ஆனால் அவனோ, 'நாளைக்கு' என்று ஒன்று வராமலே இருந்தால் தேவலாம்' என்று சொல்லி விட்டு, அதன்படியே அந்த மறுநாள் வராமலே போய் விட்டான்.

அவன் வராமலிருந்ததுகூட ஒருவகையில் நல்லதுதான் என்று அவளுக்குத் தோன்றியது. அவன் வந்தால் அவளால் அவனை அடையாளம்கூடக் கண்டு கொள்ள முடியாது. அன்று அவன் கேட்ட அதே பரிசை இனிக் கனவிலும் கேட்கத் துணிய மாட்டான். ஆனாலும் அவள் மனம் கேட்கவில்லை. அவனைத் தான் சாவதற்கு முன்பு ஒரே ஒரு முறை பார்க்கத் துடித்தாள். அவள் மரணத்தின் போது கண்ணீர் வடிக்கக் கூடிய ஒரே ஒரு ஆண் மகன் இருப்பானென்றால் அவன் தில்லைக்கூத்தன்தான்.

தஞ்சை நகரத்தை அடுத்த சிற்றூரில் ஒரு கோவில் எழும்புவதாகவும் அங்கே பல சிற்பிகள் வேலை செய்வதாகவும் திருலோகசுந்தரிக்குச் செய்தி வந்தது. எழுந்து நடமாடவும் திராணியற்ற நிலையில் கிடந்த அவள் தன் சிவிகையில் எப்படியோ சாய்ந்து கொண்டு புறப்பட்டாள். நகரத்தின் எல்லையைத் தாண்டி அவள் சிவிகை சென்றது.

மாலை நேரமானதால் வேலையை முடித்துவிட்டு வந்த தொழிலாளர்களின் கூட்டம் பாதையோரங்களில்



இருந்த மதுச்சாலைகளில் கூடியிருந்தது. உரத்த குரல்களில் அவர்கள் ஏதேதோ பேசிக் கொண்டார்கள்; சிரித்துக்கொண்டார்கள்; அடித்துக் கொண்டு உருண்டார்கள். மதுச் சாலைகளிலிருந்து புறப்பட்ட நாற்றம் திருலோகசுந்தரியின் குடலைப் புரட்டியது. அவர்களுடைய ஏச்சுக்களும் பேச்சுக்களும் அவள் செவிகளில் நாராசமாக ஒலித்தன; கண்களை உறுத்தும் அந்தக் காட்சிகளை அவளால் காணாமலும் இருக்க முடியவில்லை.

கூட்டத்தின் இடையிலிருந்த ஒருவன் திருலோகசுந்தரியின் சிவிகையை உற்றுக் கவனித்தான். பரட்டைத் தலையில் ஒரு கந்தலைச் சுற்றிக் கொண்டு, இடுப்பில் ஒரு கந்தலைச் சுற்றிக் கொண்டு, எலும்புக் கூடு உயிர் பெற்று வந்ததைப் போன்ற நிலையில் இருந்தான்.

திடீரென்று வெறி பிடித்தவன்போல் அவன் பல்லக்கைத் துரத்துபவன்போல்-ஓடி வரத் தொடங்கினான். சிவிகை தூக்கிகளும் அச்சத்தோடு வேகமாக விரைந்தார்கள். வந்தவனை உற்றுக் கவனித்தாள் திருலோகசுந்தரி. "நிறுத்துங்கள்! நிறுத்துங்கள்!" என்று கூச்சலிட்டாள். அதற்குள் ஓடி வந்து கொண்டிருந்தவன் வழியில் கல் தடுக்கித் தரையில் தடாரென்று குப்புற விழுந்தான். விழுந்தவன் எழுந்திருக்கவில்லை; அவனால் எழுந்திருக்க முடியவில்லை. சிவிகையிலிருந்து குதித்தாள் திருலோக சுந்தரி. எப்படித் தான் அவளுக்கு அவ்வளவு உடல் வலிமை ஏற்பட்டதோ, தெரியவில்லை. ஓடிச் சென்று அவன் முகத்தைத் திருப்பிப் பார்த்தாள். குபீரென்று அவள் நெஞ்சு பற்றி எரிவது போலிருந்தது. அவன் தில்லைக்கூத்தன்!

அவனைத் தூக்கிச் சிவிகையில் கிடத்திக் கொண்டு அவளும் உடன் அமர்ந்தாள். தண்ணீரைக் கண்டு பல நாட்களான அவன் உடலைக் கண்ணீரால் கழுவினாள். அவன் சுயநினைவின்றி உளறினான்.

சுயநினைவு தில்லைக்கூத்தனுக்கு வந்த போது அவன் அவளுடைய மாளிகையில் கட்டிலில் கிடப்பதை உணர்ந்தான். அவளையே நெடுநேரம் உற்றுப் பார்த்தான்.

"பிரபுக்கள் வேறு நான் வேறுதான்; என்ன இருந்தாலும் நான் பிரபுவாக மாட்டேன்!" என்று நாத் தழுதழுக்கக் கூறினான் அவன். கூரிய வேலைப் பாய்ந்தன அவன் சொற்கள்.

"நீங்கள் என்னைப் புரிந்துகொள்ளவே இல்லை" என்று தேம்பினாள் திருலோகசுந்தரி; "அவர்கள் பிரபுக்கள்; நீங்கள் மட்டுமே என் தெய்வம்: நான் உங்களைக் கண்டதிலிருந்து உங்களை என் இதயத்தில் வைத்துப் பூசித்துவந்தேன்."

"பிறகு ஏன் மறுத்தாய்?"

"இந்த அரளிப்பூவால் தெய்வத்துக்கு அர்ச்சனை செய்ய வேண்டாம் என்றுதான் மறுத்தேன். மணமில்லாத என் அழகு போன போக்கைப் பார்த்தீர்களா? நான் வாடிப் போகும் நிலையிலிருந்த அரளிப் பூ; அழிந்து கொண்டிருந்தவள்; உங்களையும் அழிவிலிருந்து தடுக்கவே நான் அன்று மறுத்தேன்."

நெடுநேரம் அவன் மௌனமாக இருந்தான். அவளை உற்றுப் பார்த்துக் கொண்டேயிருந்தான். பிறகு மெதுவாகப் பேசினான்.

"திருலோகசுந்தரி! நீ உன்னை அரளிப்பூவென்று சொல்கிறாய்; அப்படியே வைத்துக் கொண்டாலும் அதையும் கடவுள்தான் படைக்கிறான். நான் கடவுளையே கல்லில் படைக்கும் சிற்பி. கடவுளாக உருவாவதற்கு முன்பு கல்லில் இருக்கும் அவன் என்ன பாடுபடுகிறான் தெரியுமா? மனிதர்கள் தங்கள் அழுக்குப் படிந்த பாதங்களைப் பதித்து அவன் மீது நடந்து திரிகிறார்கள். பறவைகள் எச்சமிடுகின்றன. சேறும் சகதியும் அழுக்கும் தான் அப்போது அவனுக்கு அபிஷேகம். அந்த நிலையிலிருந்துதான் நான் அவனைக் கொண்டு வருகிறேன். கடவுள் எங்கே இருக்கிறான், தெரியுமா? மனிதர்கள் அவனிடம் செலுத்தும் அன்பில், நம்பிக்கையில், பக்தியில் இருக்கிறான்....."

திருலோகசுந்தரி சிலையானாள். அவன் தொடர்ந்து பேசினான்.

"நம்பிக்கையவர்களின் நோய் தீர்ப்பவன் அவன்; உன்னிடமும் என்னிடமும் கூட அவன் இருக்கிறான். இல்லாவிட்டால் மதுவிலேயே மரணத்தை விரும்பிய என்னை இங்கு இழுத்து வருவானா?"

"நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?"

"அன்று சொன்னதையே இன்றும் சொல்கிறேன்."

நடுநடுங்கினாள் திருலோகசுந்தரி. "என்னை நன்றாக உற்றுப் பாருங்கள். நான் பழைய திருலோகசுந்தரியல்ல. கண்டவர்கள் அருவருக்கும் நிலையில்......."

அவன் சிரித்தான். "நான் மட்டும் எப்படி இருக்கிறேன்? ஒன்றாகச் சேர்ந்து மடிவோமே!"

"உங்கள் சித்தம்! உங்கள் சித்தம்!" என்று அவன் கால்களில் தன் தலையைப் புதைத்துக் கொண்டு விம்மினாள் திருலோகசுந்தரி.

அதிசயம் நடந்தது அங்கே....

திருலோகசுந்தரியின் முகத்தில் புதுக் களை துலங்கத் தொடங்கியது. கருக்கல்கள் ஒவ்வொன்றாக மறைந்தன. கண்களில் புத்தொளி பொங்கியது. கன்னங்கள் மாம்பழ நிறம் பெற்றன. இதழ்கள் ரோஜாவின் பொலிவைப் பெற்றன. இளமையும், வலிமையும் குடிகொண்டு முன்னிலும் பேரழகியாக அவள் திகழ்ந்தாள்.

அற்புதம் நடந்தது அங்கே.....

எலும்புக்கூடாக அங்கே வந்தவன் இரும்பு மனிதனாக மாறிக் கொண்டு வந்தான். திருலோக சுந்தரிக்குச் சிலை வடிக்கத் தெரிந்திருந்தால் அவனைக் கொண்டே அவள் ஒரு மதனின் சிலையை வடித்திருப்பாள்.

இந்த அதிசயச் செய்தி நகரத்துக் குள்ளேயும் பரவியது. கேட்ட பிறகும் அமைதி கொள்வார்களா பிரபுக்கள்? படையெடுக்கத் தலைப்பட்டார்கள்; முற்றுகையிடத் தொடங்கினார்கள் – ஓங்கிக் கதவை அடைத்தாள் திருலோக சுந்தரி.

சிற்பி மெல்லத் தான் வடித்த சிலையிடம் சென்று அதன் கண்களைத் திறந்து விட்டான். "சுந்தரி! உன் கண்களைத் திறந்து பார், நீ இப்போது இந்தச் சிலையைவிட அழகாய் இருக்கிறாய்!" என்றான்.

"சிலையின் கண்களைத் திறந்தது இருக்கட்டும்; என் கண்களையே திறந்து விட்டீர்களே!"

அப்போது பணிப் பெண்களில் ஒருத்தி ஓடோடியும் வந்து ஒரு பயங்கரமான செய்தியைக் கூறினாள். பிரபுக்களில் சிலர் வஞ்சம் தீர்க்கத் துணிந்து விட்டார்களாம். சிற்பியின் தலையைக் கொய்து விடுவதென்று தீர்மானித்துவிட்டார்களாம். அன்றைக்கு இரவே அவர்கள் வரக் கூடும் என்றாள் பணிப் பெண்.

அவள் கூறியதைப் போலவே கூர் வாளைத் தீட்டிக் கொண்டு அன்றிரவு சிலர் வெறியோடு மாளிகைக்குள் புகுந்தார்கள். அவர்களை வரவேற்பதற்கு அங்கு திருலோகசுந்தரியின் சிலை மட்டுமே காத்திருந்தது.

தன் கண்களைத் திறந்தவனின் கரத்தை இறுகப் பற்றிக் கொண்டு, அவள் அப்போது நெடுந்தொலைவில் நடந்து கொண்டிருந்தாள்.

அனஸின்

ஜலதோஷம் மற்றும் ஜுரத்திற்கு சிறந்தது



அனஸின் வலியைப் போக்குகிறது-ஜுரத்தைத் தணிக்கிறது. நரம்புகளைச் சமனப்படுத்துகிறது. மேலும், சோர்வைப் போக்குகிறது.

அனஸின் ஒரு டாக்டரின் அபாயமற்ற குறிப்பைப் போன்றதாகும். அதில் வைத்திய முறைப்படி அங்கீகரிக்கப்பட்ட பொருள்கள் கலந்திருப்பதால் துரிதமாகவும், பூரணமாகவும், தலைவலி, ஜலதோஷம், ஜுரம், பல்வலி மற்றும் தசைவலி முதலியவைகளிலிருந்து நிவாரணம் அளிக்கிறது.



அனஸின் சிறந்தது ஏனெனில் அது நான்கு வழிகளில் வேலை செய்கிறது.

TAM



Registered User: GEOFFREY-MANNERS & CO. LTD



கல்கி தீபாவளி மலர்.19


கல்கி தீபாவளி மலர். 1965
S. RAJAM


WATCH FOR THIS OUTSTANDING ATTRACTION
FROM PARAMOUNT!
DWARFING THE MIGHTIEST!
TOWERING OVER THE GREATEST!
The supreme spectacle that had to come thundering out of the most thrilling continent!
Joseph E. Levine presents
ZULU
Stanley Baker - Cy Endfield Production
TECHNICOLOR®
TECHNIRAMA®
These are the days and nights of fury and honor and courage and cowardice that an entire century of empire-making and film-making can never surpass!
Stanley Baker · Jack Hawkins · Ulla Jacobsson · James Booth · Michael Caine
Richard Burton
THEATRE
(FOR UNRESTRICTED EXHIBITION)


எங்களது அபிமானிகளுக்கும்
வாடிக்கையாளர்களுக்கும்
மனமார்ந்த
தீபாவளி வாழ்த்துக்கள்!
Kalighat
பல்பொடிகளில்
பெங்கால்
காலிகாட்
உயர்ந்தது
தாம்பூலத்திற்கு
ரின்டான்
சிறந்தது
RINTAN
THAMBOOL PILLS
UNIVERSAL CHEMICAL INDUSTRIES
UNIVERSAL CHEMICAL INDUSTRIES
MADRAS-1.



வாழ்க்கை

ஏ.எஸ்.ராகவன்

அந்த வீட்டின் பின்பகுதியில் ஏதோ ஓர் அறையில் சாமா குடியிருப்பது மட்டும் தெரியுமே தவிர நான் அந்தப் பகுதியையோ அவன் வசித்த அறையையோ பார்த்ததில்லை.

இத்தனைக்கும் அதே தெருவில் இரண்டு வீடுகள் தள்ளித்தான் நானும் குடியிருந்தேன். இரண்டு பேருக்கும் ஒரே அலுவலகத்தில் வேலை.

வாசற்புறமிருந்தே, 'டே சாமா! ஆபீசுக்கு நேரமாகி விட்டது... போகலாமா?' என்று குரல் கொடுத்துவிட்டு, சாவதானமாகக் கொட்டைப் பாக்கை வெட்ட ஆரம்பித்தேனானால், ஓர் ஆவர்த்தனம் வெற்றிலை, பாக்கு, புகையிலை போட்டு முடிப்பதற்குள் அவன் வந்து நிற்பான். பிறகு இருவரும் நடக்க ஆரம்பிப்போம்.

இரண்டு வருடங்களாக இதே நியமம். எனக்கும் அந்த வீட்டுக்குள் புகுந்து பார்க்கத் தோன்றியதில்லை. அவனும், 'உள்ளே வாயேன்' என்று என்னை அழைத்ததில்லை.

வீடு பழங்கால மெத்தைக் கட்டடம். முன்பகுதியில் கூடம்வரை நல்ல வெளிச்சமும் காற்றோட்டமும் தென்படும். அதன் பின்னுள்ள இருபது அடிப் பகுதியில் மருந்துக்குக்கூட அவை தென்படா. இருண்ட அந்தப் பகுதிக்குள் சாமா எங்கே குடியிருந்தானோ, எப்படித்தான் சமையல் செய்து சாப்பிடுவானோ, போதாத குறைக்கு அலுவலகத்தி லிருந்து மூட்டை கட்டிக் கொண்டு வரும் தஸ்தாவேஜுகளைப் பார்ப்பானோ, நான் அறியேன்.

அந்தப் பகுதியில் அவன் மட்டும் இல்லையாம். இன்னும் மூன்று குடித்தனங்கள் இருந்தனவாம்.

சமீபத்தில் இரண்டு நாட்களாக அலுவலகத்தில் கசமுசவென்று பேச்சு அடிபட்டு நேற்று மாலையில்தான் விஷயம் என் காதுக்கு எட்டியது.

சாமாவைப் பார்த்தேன். பரம சாதுவாகக் கூட்டிக் கழித்து ஒரு 'ஸ்டேட்மெண்டி'ல் புதைந்திருந்தான் அவன். சே! சாமாவாவது இப்படி யெல்லாம் கன்னாபின்னாவென்று நடப்பதாவது! நம்ப முடியவில்லையே!

"நான் சொன்னால் நம்ப மாட்டாய். ஊரிலே இந்த விஷயம் அம்பலமாகிவிட்டது..... சந்தேகமிருந்தால் வாசுதேவராவைக் கேட்டுப் பார்" என்றார் அடைக்கலம்.

வாசுதேவராவ் 'சூள்' கொட்டினார். புரந்தரதாசரின் கீர்த்தனையில் ஏதோ ஓர் அடியைச் சொல்லி விட்டு என்னை அனுதாபத்தோடு பார்த்தவாறே, "உனக்குத் தெரியல்லேன்னு நம்ப முடியல்லியே, சீனு?..... நிப்பத்து நாள் முந்தாநிலே நான் கேள்விப்பட்டது" என்றார். இருபது நாட்களுக்கு முன்னதாகவே அவர் கேள்விப்பட்டாராம் அதை.

"சாமா, புறப்படுவோமா?" என்று கேட்டேன்.

"கணக்கு உதைக்கிறதுடா, சீனு.... நீ போ... நான் இதைக் கவனித்துவிட்டு வருகிறேன்" என்றான் சாமா.

எனக்கு நெஞ்சில் ஏதோ உதைக்கிற மாதிரி இருந்தது. மனித பலவீனம் பற்றித் தெரியும் எனக்கு. ஆனால் சாமாவுக்கும் அப்படி ஒரு பலவீனம் வந்ததே, அதுதான் விந்தையாக இருந்தது.

"உங்கள் அழகான சிநேகிதர் வீட்டுக்கு இனிமேல் நீங்கள் போக வேண்டாம்" என்றாள் என் மனைவி, நான் நுழைந்ததும் நுழையாததுமாக.

"ஏன்?" என்று கேட்டேன்.

"வேண்டாம் என்றால் வேண்டாம்.."

"விஷயத்தைச் சொல்லேன்."

"நான் சொல்லித்தான் தெரிய வேண்டுமோ?"

"இதோ பார், அலமு.... இன்றைக்குத்தான் அரையும் குறையுமா ஏதோ கேள்விப்பட்டேன்..... ஆனால் சாமா அப்படிப்பட்டவனு என்று....."

"போதுமே.... ஏன் அவர் மட்டும் மனிதர் இல்லையோ?"

"அவன் மனிதன் இல்லேடி.... ரொம்ப ஒசந்தவன்....."

"அவர் ஒசந்தவரா யிருக்கலாம். அவ மோசமானவள்."

"எவள்?"

"ஒன்றுமே தெரியாதவர்மாதிரி இது என்ன கேள்வி! தயவுசெய்து நீங்க போகாதேங்கோ."

நான் ஒன்றும் சொல்லவில்லை. பின் கட்டுக்குப் போய்க் கைகால் கழுவிக் கொண்டு வந்தேன். அவள் — இத்தனைக்கும் காரணமான அந்த அவள் — யார்? சாமாவின் வைராக்கிய நெஞ்சுக்குள் பாசம் என்கிற துருப்பிடித்த பழைய ஆணியை எப்படிச் செலுத்த முடிந்தது அவளால்? மனைவியை இழந்து அதன்பின் கர்மயோகியாக வாழ்ந்த என் அருமை நண்பன் இந்த அவதூறு என்னும் வலைக்குள் எவ்வாறு விழுந்தான்?

"அவளைப் பார்க்கணும்னு உங்களுக்கும் ஆசையாக இருக்காக்கும்!" அலமு முகம் சுளித்தாள்.


"வைத்தியமே! சாமாவுக்கு இப்படி ஆகிவிட்டதே என்றுதான் வருத்தமாக இருக்கிறது எனக்கு....மற்றப்படி எந்த மூரைக்கட்டையையும் நான் பார்க்கத் தயாராயில்லை. உனக்குத் தெரியுமே, அவன் மனைவி பாகி இருந்தபோது அவன் எப்படி இருந்தான்! சபலப்படுகிறவனடி அவன்?.... இதிலே ஏதோ சூது இருக்கு. நான் நம்பத் தயாராயில்லே."

அலமுவின் சுளித்த முகம் நிமிர்ந்தது. ஒருகணம் அவளுடைய கண்களில் மின்னலின் துள்ளல் தெறித்து ஓடியது. பாகியைப் பற்றிய நினைவும், அவள் இருந்த போது சாமா வாழ்ந்த வாழ்க்கையும் நினைவில் புரண்டனவோ என்னவோ! வான்தவத்தில் எப்படிப்பட்ட அந்நியோன்னியம்! ஒரு நாள் தவறாமல் ஜோடியாக இருவரும் புறப்பட்டுக் காவேரிக் கரை, கோயில், சினிமா—எதை விட்டு வைத்தார்கள்? இத்தனைக்கும் பாகி அழகானவள் என்று சொல்ல முடியாது. சாமா மட்டும் மன்மதனா? ஆனால் இந்த அழகு, கவர்ச்சி என்பதெல்லாம் அவரவர் பார்வையைப் பொறுத்தவை தாமே? அழகின் கவர்ச்சி ஒரு ரகம். அன்பின் கவர்ச்சி தனி ரகம். இல்லையா?

அப்போது சாமா மாதுளங்கொல்லைத் தெருவில் குடியிருந்தான். தனி வீடு. பெரிய வீடு. நல்ல காற்றோட்டமும் வெளிச்சமும் உள்ள வீடு. எங்களைக்கூட ஒரு தடவை வரவழைத்து, கேசரி, பஜ்ஜி, காப்பி கொடுத்து உபசரித்திருக்கிறான்.

அவள் போனதும்தான் இந்த வீட்டுக்கு வந்தான். இருளுக்குள் புதைந்து போன அவன் வாழ்க்கை இனி வெளிச்சத்துக்கு வராது என்று எண்ணியிருந்தேன். ஆனால் அம்பலத்துக்கு வந்து விட்டதே!

"அதோ.... அதோ பாருங்கள்.... அவன்தான் அந்த மேனுமிஞுக்கி!"



என்று கத்தினன் அழகு வாசற்புறம் சுட்டிக்காட்டி.

நான் அயர்ந்து விட்டேன். அவள் குனிந்த தலை நிமிராமல் விடுவிடு வென்று போய்க் கொண்டிருந்தாள். ஆனால் என்ன அழகு, என்ன அழகு?

''ஹாம்......'' பெருமூச்சு விட்டேன்.

'பார்த்தேளா?'

''உம்......''

''இப்போ சொல்லுங்கோ.''

''என்னத்தைச் சொல்றது?ஒன்று மட்டும் நிச்சயம். இந்தப் பெண்ணோட அழகு இருக்கே, இது நல்ல பாம்போட அழகு மாதிரி. கெட்டியாய்ப் பிடிச்ச நிறுத்தி வைக்கிற ரகம்.... ஆமாம்..... இவள் யாரு?''

''பார்த்தாலே தெரியல்லியா?''

''எனக்குத் தெரியல்லே, அழகு!''

அவன் என் அருகில் வந்தான். இந்த விஷயத்தில் நான் 'அசடு' என்பது அவனுக்குத் தெரியும். அப்படி என்னை அசடாக வைத்திருப்பது தன் சாமர்த்தியம் என்பது அவன் கருத்தாக இருக்கலாம். இருந்து விட்டுப் போகட்டும். என் உலகில் அலமுவைத் தவிர எந்தப் பெண்ணுக்கும் இடமில்லை. முழுமையான அன்பு இல்லாத இடத்தில் தானே கோட்டையிலும் பிளவு விழுகிறது !

''அவள் பெயர் மீனு.... எங்கோ வடக்கே வாழ்க்கைப் பட்டாளாம்.....புருஷன்காரன் துரத்தி அடித்துவிட்டான். டீச்சருக்குப் படிச்சிருக்காளாம். அப்பாவும் இவளுமா உங்க சிநேகிதர் குடியிருக்கிறரே, அந்தப் போர்ஷனுக்குப் பக்கத்துப் போர்ஷனிலே குடி வந்தா.....அப்பா இப்போத்தான் சமீபத்திலே காலமாயிட்டார்'' என்றான் அழகு.

''ஓஹோ.... ஒரு மாசத்துக்கு முன்னாலே, நான் கூடக் கிராமத்துக்குப் போய் விட்டுத் திரும்பி வந்தேனே, அன்றைக்கா ?''

''ஆமாம்.....அதுக்கப்புறம்தான் இந்த இடைசலெல்லாம்.... இப்போ போர்ஷன் வேறே, வேறே இல்லையாம்... உங்க அழகான சிநேகிதரும் இவளும் ஒரே அறையிலேயேதான் இருக்காளாம்.''

''அழகு!''

''அடியம்மா, உங்க சிநேகிதரைச் சொன்னால் கோபம் வர்றதாக்கும்!''

அழகு போய் விட்டான்.

நான் தெருவையே பார்த்தேன். சற்று முன் மீனு நடந்து சென்றதனாலோ என்னவோ, அந்தத் தெருப் புழுதியில் வைரம் பளிச்சிடுவது போலிருந்தது....ஏனென்று சொல்லத் தெரியவில்லை. எனக்கு அவளைப் பார்க்கப் பரிதாபமாகத்தான் இருந்தது. ஒரு பெண், அதுவும் அழகி, தனியே வாழ்கிற போராட்டம் ஊரார் கண்களில் இப்படி விழ வேண்டுமா! கோதண்டராம அய்யரின் மனைவிக்கு வயது ஐம்பதுக்குப் பக்கமாக ஆகியும் இன்னமும் நைலானும் நைலெக்ஸுமாக அலங்காரம் செய்து கொண்டு, கடைப் பூவைத் தலையில் வைத்துக் கொண்டு, முகமெல்லாம் வெள்ளை மாவை அப்பிக் கொண்டு போகிறாள். மீனுவோ ஓர் அலங்காரமும் இல்லாமல் குனிந்த தலை நிமிராமல் போவது பொறுக்கவில்லையே, இவர்களுக்கு !

துண்டை எடுத்துப் போட்டுக்கொண்டு புறப்பட்டு விட்டேன். சாமாவைப் பார்த்து இது பற்றிப் பேசாவிட்டால் எனக்குத் தலை வெடித்து விடும் போலிருந்தது.

கூடத்தைத் தாண்டியதும் இருளில் வழி தெரியவில்லை. கலங்கரை விளக்கம் போல ஓர் அறைக்குள் சிம்னி விளக்கு குமுறிற்று. அதைப் பற்றிக் கொண்டு நடந்தவாறே, ''சாமா!'' என்று கூப்பிட்டேன்.

''யாரு?'' கேட்டது அவள்தான். அழகில் ஊறிய குரலைத் தவிர வேறு எதற்கும் அத்தனை இனிமை இருக்க முடியாது !

''சாமா இல்லையா?''

''இருக்கார்.... உட்காருங்கோ.''

பலகையைப் போட்டாள் அவள்.

நான் தயங்கினேன். என் தயக்கத்தைப் புரிந்து கொண்டு சரேலென்று அவள் வெளியேறினாள் அறையை விட்டு.

''யாருடா, சீனுவா?..... என்னடா இது. திடீரென்று வந்து நிற்கிறாய்?'' தண்ணீர்க் குடத்தை இறக்கி வைத்தவாறே கேட்டான் சாமா. பட்டையாக விபூதி துலங்கிற்று மேனியில்.

''சும்மாத்தான் வந்தேன்.''

''உட்காரேன்.....''

''பரவாயில்லே.''

வெளியே நிழலாக நின்ற மீனு கூடத்தை நோக்கி நகர்வது தெரிந்தது. அந்த இருளில் இப்போது எனக்குக்கூடக் கண் பழகிவிட்டது. தீபச் சுடர் ஒன்று நகர்வது போலிருந்தது. அவள் நடையைப் பார்த்தான்.

''காப்பி போடுகிறேன்.... சாப்பிட்டு விட்டுப் போகலாம்டா, சீனு..... இன்றைக்கு ஆபீசில் அடைக்கலமும் வாசுதேவராவும் ரொம்பவும் கலாட்டா செய்து விட்டார்கள் போயேன்.''

எனக்குச் சுருக்கென் றிருந்தது. அவன் முகத்தையே பார்த்தேன். சாமாவிடமே போட்டு உடைத்து விட்டார்களா, என்ன !

''இத்தனை வருஷம் ஸர்வீஸ் ஆகியும் இன்னமும் டெபிட், கிரெடிட் தெரியாமல் இதைத் தூக்கி அதிலே போட்டு, அதைத் தூக்கி இதிலே போட்டு என் பிராணனை வாங்குகிறார்கள்....ஸ்டேட்மெண்டு தயாரிப்பதற்குள் போதும், போதும் என்றாகி விட்டதுடா....''

இதுதானா விஷயம்?

'ஸ்டவ்' அடுப்பு புஸ்ஸென்று சீறத் தொடங்கி விட்டது. சாமா சிரித்தான்.

''சமையலெல்லாம் நானேதான்.... உனக்குத் தெரியுமே, மீனுவும் இங்கேதான் இருக்கிறாள் என்னோடு..... அவளுடைய வாழ்க்கை ரொம்பவும் சோகம்டா, சீனு..... சொர்ண விக்கிரகமாட்டம் என்னமா இருக்கிறாள், பார்த்தாயா?'' என்றான்.

''உம்....'' என்றேன்.

''பார்க்கப் போனால் நானும் அவளும் ஒரு விதத்திலே ஒரே ரத்தத்தைச் சேர்ந்தவர்கள்தான். இல்லியா? தனியாக இருந்து அவள் ஏன் கஷ்டப்படணும் ? வாடகை வேறே எட்டு ரூபாய் கொடுத்துண்டு, சமையல் செய்து சாப்பிட்டுண்டு ஏன் திண்டாடணும்?..... இங்கேயே என்னோட இருந்துடேன்..... சீனு, நான் செய்தது சரிதானேடா ?''

என்ன சொல்வேன்? இரண்டு குழந்தைகளின் களங்கமற்ற இதயங்கள் அந்த இருண்ட அறைக்குள் பாசத்தோடு கண்ணீர் வடிப்பதைத் தவிர எந்தப் பாவத்தையும் என்னால் கற்பனைசெய்ய முடியவில்லை.

காப்பி மணத்தது. அலமுகூட அவ்வளவு நன்றாகக் காப்பி தயாரித்ததில்லை.

''மீனு, வாயேன்..... ஒரு வாய் காப்பி சாப்பிடு..... அட, ஏன் வெட்கப்படறே?.... நம்ம சீனு தான் வந்திருக்கான்...... அசல் மனுஷனில்லே.... வா.....'' சாமா குரலை நீட்டினான்.

இருள் விலகுவது போலவும், அழகு கட்டியம் கூறுவது போலவும் மீனு வருவது தெரிந்தது. எங்கோ வனத்தில் ஓர் ஆசிரமத்தில் இருப்பதாக ஒருகணம் கற்பனை ஓடிற்று எனக்கு. அந்தக் கணத்துக்குள் அவளைச் சகுந்தலையாக மாற்றி, அவளை மறந்து உல்லங்கனம் செய்துவிட்ட அந்தத் துஷ்யந்தனைச் சபித்தும் முடித்தேன்.

''பார்டா, மீனுவை!.... இவ ஏன் கஷ்டப்படணும்? நான் இருக்கிற வரையிலே அவளைக் கஷ்டப்பட விடமாட்டேன்'' என்றான் சாமா, ஏதோ ஆவேசம் வந்தவனைப்போல்.

நான் தலையை நிமிர்த்தவில்லை. அவளுடைய பாதம்தான் என் கண்ணில் பட்டது. மஞ்சள் மஞ்சேரென்று தந்தக் கொழுமையும் வழவழப்புமாக, மெட்டி துலங்க, அளவான விரல்களோடு அந்தப் பாதம்! அதைத் தொட்டு அருந்ததி பார்த்தவனுக்கு, அதன் பெருமை விளங்காமற் போனது பரிதாபம்தான் !

''நான் வரேன், சாமா!'' எழுந்துவிட்டேன்.

''அடேடே, புறப்பட்டுட்டியா ?.... எங்கேயோ திடீர்னு வந்தே, திடீர்னு புறப்படறே ?''

''ஏன் வரப்படாதா?''

''வந்தது சரிதான்டா.....அதுக்குள்ளே புறப்படறியே!''

''வேலை இருக்கு.''

''சரி. உன் இஷ்டம்..... அடைக்கலத்துக்கும், வாசுதேவராவுக்கும் கொஞ்சம் சொல்லி வை.''

''ஆகட்டும்.''

அலமு வாசலிலேயே நின்றுகொண்டு நான் அந்த வீட்டிலிருந்து வருவதைப் பார்த்து விட்டாள்.

அவளுடைய முகம் எப்படி மாறியிருந்தது என்பதை கவனித்துக் கொள்ளுங்களேன்.

''நீ நினைச்ச மாதிரி இல்லேடி..... அது பவித்திரமான அன்பு....ஓர் ஆணும் பெண்ணும் தனியா இருந்தா அதைப் பெரிசுபடுத்தற சுபாவம் சாமானிய ஜனங்களோட அற்ப புத்திக்குச் சரிதான்...... ஆனா நான் அப்படி நினைக்கவில்லே'' என்றேன்.

அவளு முகவாய்க்கட்டையைத் தோளில் இடித்து எனக்கு அழகு காட்டியவாறே, ''இதை ஆராயறதுக்குப் போனீர்களோ? உங்களாலே கண்டு பிடிக்க முடியாது. இதை யெல்லாம்'' என்றாள்.

விஷயம் அத்துடன் நின்று விட்டது. என்னைப் பொறுத்தவரை. ஆனால் அந்தத் தெருவின் கீழைக் கோடியிலிருந்து மேலைக் கோடி வரை இருந்த தும்பது வீடுகளில் வாசல் திண்ணைகளிலும் கூடங்களிலும் புறக் கடைப்புறங்களிலும் அது ஆராயப்பட்டு நிற்காமல், அடுத்த வாரத்துக்குள் விபரீத எல்லையையே எட்டிவிட்டது.

அடைக்கலம்தான் காண்பித்தார், என்னிடம் முதன் முதலாக. நான் கண்ணைத் தேய்த்துக் கொண்டு பார்த்தேன். பொய் யில்லே. சமூகத்தின் இந்தமாதிரி அவலங்களைச் சந்திக்கு இழுத்து, பெருத்த சமூக சேவை செய்யும் ஒரு பத்திரிகையில் சாமாவின் காதல் லீலைகள் அச்சாகியிருந்தன. அவளுடைய கணவனின் பெயர், அவன் வேலை பார்த்த இடம், அவள் இந்த ஊருக்கு வந்தது ஆகிய எல்லா விவரங்களும் அதிலே எழுதப்பட்டிருந்தன !

சாமா குனிந்ததலை நிமிரவில்லே. அவளுக்கு இந்த விவரம் தெரியவே தெரியாதோ !

''டேய், இதைப் பார்த்தாயாடா? கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டு விட்டதே !'' என்றேன் கவலையோடு.

அவன் சிரித்தான். அவனுக்குத் தெரியும் போலிருந்தது.

''சிரிக்காதே..... இப்போது என்ன செய்யப் போகிறாய்?''

அவன் பேனாவைக் கீழே வைத்தான். கையைச் சொடக்கினான். பிறகு என்னை உற்றுப் பார்த்தவாறும், ''நான் என்ன செய்யப் போகிறேன் என்பது இடக்கட்டும்டா..... இதை நீ நம்புகிறாயா ?'' என்று கேட்டான்.

''ஊஹூம்.....'' என்று தலையை ஆட்டினேன்.

''அது போதும்...... போ.....''

''அது போதாதுடா, சாமா....உன்னிடம் தப்பே இல்லாமல் இருக்கலாம்...ஆனா உலகம் இருக்கே, அது.....''

''எதுடா உலகம்?'' சாமாவின் விழிகள் சிவந்தன. ''எது உலகம் என்கிறேன்..... நாலு பேர்கள் கண்ணை உறுத்தறது எங்க விவகாரம்..... அதுதானே? அவள் சொர்ண விக்கிரகம்டா, சீனு....நானும் அவளும் ஒரே வீட்டில் இருக்கணும்னு கட்டாயமில்லே..... அவளை இப்பவே வெளியே அனுப்பறேன். அவளுக்கு ஒரு வழி செய்யச் சொல்லு, இந்த உலகத்தை.... அதை விட்டுட்டு இப்படிக் கலாட்டா பண்ணினால் நான் பயப்படமாட்டேன்..... ஆமாம்.''

''சாமா, அவளுக்கே இது சங்கடமாக முடியுமேடா? நன்மைக்குப் பதிலாக அவளுக்குத் தீமை செய்வதாக ஆகிவிட்டால் என்ன செய்வாய்?''

அவன் கண்ணைச் சிமிட்டினான். ''அதை அவள் அல்லவா சொல்லணும்?'' என்றான்.

''அவளுக்கு இது தெரியுமா?''

''உம்.... காலையில் அவளே பேப்பரை வாங்கிக் கொண்டு வந்து காண்பித்தாள்.''



''காண்பித்தாளா? பாவம், தவித்துப் போயிருப்பாள்!''

''ஊஹூம்.... அவள் இதைப் பற்றிக் கவலைப்படவே யில்லே.''

''சாமா !''

''அதுதான் மீனு! அவள் அபூர்வமான பெண்ணடா, சீனு.... விஷயம் என்னன்னு, நானே இதைப் பார்த்ததும் கொஞ்சம் கலங்கிப் போயிட்டேன்.... அவ பயப்படலே..... விட்டுத் தள்ளுங்கோ அப்படீன்னுட்டாள்.''

''அவளுடைய புருஷன் கண்ணிலே இது பட்டால்......?''

''படட்டுமே!''

''சாமா! இது விளையாட்டில்லே.''



நிஜமும் நிழலும் - 1
"அட, நான் இவ்வளவு அழகாவா இருக்கேன்!"

"வாழ்க்கையே விளையாட்டுத்தான்."
"எப்படியோ போ."
நான் திரும்பி வந்தேன். நெஞ்சு கனத்தது எனக்கு. அடைக்கலமும் வாசுதேவராவும் நமட்டுச் சிரிப்புடன், "என்ன சொல்றான் சாமா?" என்றார்கள். நான் பதில் சொல்லவில்லை.

அன்று மாலை விளக்கு வைக்கும் நேரத்தில் சாய்வுநாற்காலியில் உட்கார்ந்திருந்த என் கண்களில் சாமாவும் மீனுவும் தெருவில் நடந்து போவது தெரிந்தது.
"பார்த்தீர்களா?" என்றாள் அலமு. "பேப்பரிலே போட்டுட்டானேன்னு கொஞ்சமாவது ரோஷம், சொரணை இருக்காதோ!..... புருஷனும் பெண்டாட்டியும் மாதிரி நடந்து போறதைப் பாருங்கோ."
"அதுக்குத் தனித் துணிச்சல் வேணும்டி" என்றேன்.
அலமுவின் தோள்பட்டையில் 'ணங்' என்று முகவாய் இடித்தது. "அப்ப, இதுக்குத் துணிச்சல் எதுக்கு?.... எல்லாத்தையும் விட்டு விட்டால் எப்படி வேணும்னாலும் வாழலாம்" என்றாள்.
"அப்படியில்லே..... எதையும் விட முடியாமற் போனாலும், எப்படி வேணும்னாலும் வாழலாம்" என்றேன் பதிலுக்கு.
"இவ்வளவு வக்காலத்து வாங்கறீர்களே, அவள் என்ன இவர் பெண்டாட்டியா, கேட்கிறேன்" என்றாள் அலமு.
நான் நிமிர்ந்தேன். "பெண்டாட்டி வைத்தான் ஒருவன் தெருவிலே அழைச்சுண்டு போகணும்னு எங்கேடி எழுதியிருக்கு? அது அவனுடைய சகோதரியா இருக்கக் கூடாதோ?" என்று கேட்டேன்.
அலமு குபீரென்று சிரித்தாளே, பார்க்க வேண்டும்! விலா பெயர்ந்து விழுகிற மாதிரி சிரித்தாள். "ஏன், பாட்டியைக்கூட அழைத்துக்கொண்டு போகலாம்.... அவள் அவருக்குப் பாட்டியாக இருக்கலாம்னு சொல்லுங்கோ" என்று கூறினாள்.
"ஆமாம், பாட்டிதான்.... வயசுப் பாட்டியெல்லாம் குமரிகளாக இருக்கிற தெருவிலே, வயசுப் பெண் பாட்டியாக இருப்பது அதிசயமில்லே." — கோதண்டராம அய்யரின் மனைவியைத்தான் நான் குறிப்பிடுகிறேன் என்பது அலமுவுக்குத் தெரியும். "போறும்... போறும்.... யார் காதிலாவது விழப் போகிறது...?" என்றவாறே உள்ளே போய் விட்டாள்.

சாப்பாடெல்லாம் முடித்து வாசல் திண்ணையில் காற்றாடச் சற்றுப் படுக்கலாம் என்று நான் வந்த சமயம் வாசலிலே குலுங்கக் குலுங்கச் சிரித்துக் கொண்டு சாமாவும் மீனுவும் திரும்பி வருவது தெரிந்தது. அடப்பாவி! இந்த உலகத்தை ஒரு கை பார்த்தே விடுவது என்று கங்கணம் கட்டிக் கொண்டு விட்டானே சாமா! இது விபரீதமாக முடியாமல் இருக்க வேண்டுமே!
மறு நாள் அவனை அழைக்கப் போனபோது வழக்கத்துக்கு மாறாக வீட்டினுள் நுழைந்தேன். இருளில் தடுமாறி நடந்தேன். சாமா அடுப்படியில் எவர்சில்வர் தட்டைப் போட்டுக் கொண்டு சாப்பிட்டுக் கொண்டிருந்தான். மீனு இருந்த சுவடு தெரியவில்லையாதலால் தைரியமாக அறைக்குள் காலை வைத்தேன். வைத்தவன் திடுக்கிட்டேன். மீனு அப்போதுதான் குளித்துவிட்டு வந்திருந்தாள் போலிருந்தது. புடவை மாற்றிக் கொண்டிருந்தாள்.
"அட, வாயேன்.... காவேரிக் கரையிலே பொம்மனாட்டிகள் குளிக்கிறதில்லையோ?.... ஏன் மிரள்றே?" என்றான் சாமா.
வாதத்துக்கென்னவோ சரிதான். ஆனால் அபவாதத்துக்கு.....!
என்னால் அங்கு நிற்க முடியவில்லை. "வாசலிலே இருக்கேன்...... சீக்கிரம் வா" என்று சொல்லி விட்டுத் திரும்பி விட்டேன்.
கண்ணை மூடினாலும் திறந்தாலும் அதே காட்சி. அவள் குளித்துவிட்டு ஈரம் கசிய நிற்கும் உருவமும், புடவை மாற்றிக் கொள்வதுமே தெரிந்தன. என்ன இருந்தாலும் இது சரியென்று படவில்லை. அவள் இந்தத் தெருவில், புழுதியில், விளைந்த, அழுக்குப் படிந்த, பெண் இல்லை. அபூர்வ அழகி. வெறும் அசைவிலேயே பெரும் சலனம் விளைவிக்கக்கூடிய அத்தனை அழகு படைத்தவள்!
"ஏண்டா, அப்படிப் பார்க்கிறே?" என்றான் அவன்.
"சாமா, இது வேண்டாம். விஷப் பரீட்சை. விட்டுவிடு" என்றேன்.
"போடா, விஷத்தைத்தான் முழுங்கணும்..... சாக்ரடீஸ் முழுங்கல்லியா? பரமேசுவரன் கழுத்திலேயே நிறுத்திக் காட்டவில்லையா?"
"வாஸ்தவம்..... அது பார்வதிதேவி இருந்தாள் பக்கத்திலே..... இல்லாவிட்டால் விஷம் நிற்குமா கழுத்திலே?"
"மீனு இருக்காள், என் பக்கத்திலே. அவள் நிறுத்தி விடுவாள்."
நிலை மிஞ்சியது போலிருந்தது எனக்கு. சாமா என்ன சொல்கிறான்! தெரிந்துதான் சொல்கிறானா?
"நான் துணிந்து விட்டேன், சீனு... நீகூட இனிமேல் என்னைக் கூப்பிட இங்கே வர வேண்டாம்.... பாவம், உனக்கும் கெட்ட பெயர் வரும்!" என்றான் அவன்.
அது உண்மைதான். அலமுவுக்கு இது கட்டோடு பிடிக்கவில்லை. எனக்கும் அன்று கண்ட காட்சியிலிருந்து சாமாவின் மீது நம்பிக்கை குறைந்துவிட்டது. எனவே, அவனைக் கூப்பிடப் போவதை நிறுத்திக் கொண்டு விட்டேன்.

இரண்டு நாட்கள் ஓடின. சாமாவும் மீனுவும் தினசரி வெளியே போய் வருவதும், சிரிப்பதும் தெருவைக் கலக்கி, வேடிக்கை பார்ப்பதுமாக இருந்தார்கள்.
மூன்றாம் நாள் அதிகாலையில் என் வீட்டு வாசலில் ஒரு குரல் கேட்டது. "ஸார்..... ஸார்.... மிஸ்டர் சீனிவாசனின் வீடு இதுதானே?"
"ஆமாம். நீங்கள் யார்?" என்று கேட்டேன்.
அவர் உள்ளே வந்தார். அவரை இதற்குமுன் நான் பார்த்திருப்பதாகவே தெரியவில்லை. "ஒரு முக்கியமான காரியமாக வந்திருக்கிறேன்..... இரண்டு வீடு தள்ளி ஒருவர் இருக்கிறாரே, அவரும் நீங்களும் ஒரே ஆபீஸ்தானா?" என்று கேட்டார்.
"ஆமாம்...... சாமாவைத்தானே கேட்கிறீர்கள்?"
"உம்.... பேப்பரிலே ஏதோ வந்திருந்தது..... அந்த மீனு எனக்கு உறவுப் பெண்."
"அப்படியா? உட்காருங்கள்...... அதிலே என்ன விஷயம்னு, எனக்கென்னவோ பேப்பரிலே வந்திருப்பதை....."
"நீங்கள் எதுவும் சொல்ல வேண்டாம். நான் கண்டு பிடித்து விடுகிறேன். இதோ பார்த்தீர்களா? எதற்கும் கையோடு காவலாக இருக்கட்டும் என்று தான் எடுத்துக் கொண்டு வந்திருக்கிறேன்....."
அவர் காட்டிய அந்த உறைவாளைப் பார்க்கும்போதே என் இருதயம் அறுந்து விழுந்து விட்டது போலிருந்தது. பளபளவென்று அதன் கூர்மை கண்ணை உறுத்திற்று.
அலமு என்னை உள்ளே வந்து போகுமாறு ஜாடை காட்டினாள்.
"நமக்கு எதுக்கு இந்த வம்பெல்லாம்.....? அவனைப் பார்த்தால் எமகிங்கரனாட்டம் இருக்கு..... போகச் சொல்லுங்கோ வெளியே" என்றாள்.

இதை அந்த மனிதர் புரிந்து கொண்டாரோ என்னவோ! "என்ன ஸார், என்னைப் பார்த்துப் பயப்படுகிறீர்களா, உங்க வீட்டிலே?...... நான் இங்கே தங்கப் போவதில்லை...... விஷயம் விசாரித்துப் போகத்தான் வந்தேன்.... நான் ஹோட்டலிலே தங்கிக் கொள்கிறேன். வரட்டுமா?" என்றவர் வெளியேறி விட்டார்.

சாமாவிடம் சொன்னேன்.

"அது யாரடா அவன் சூரப்புலி!... கத்தியைக் காட்டினால் நான் பயப்படுவேனாக்கும்!" என்றான்.

"எதற்கும் எச்சரிக்கையாக இரு..... வாசல்லே வெளியிலே அந்தப் பெண்ணோடு போகாதே."

"போனால் என்னவாம்?"

"வதந்தி நிருபணமாகும்."

"போடா சரிதான்..... நான் எதற்கும் துணிந்து இறங்கிவிட்ட பிறகு இந்தப் பூச்சாண்டிக்கெல்லாம் தலை மறைய மாட்டேன்..... இதோ பாரு, நான் ஒன்றும் சளைத்தவனில்லை." சாமா சட்டையை விலக்கிக் காட்டினான். இடுப்பில் கத்தி மின்னியது!

எப்படி ஆகுமோ என்று உண்மையிலேயே கலங்கிப் போனேன். சாமா எளிதில் மசிகிறவனாக இல்லை. அவளிடம் இவனுக்கு ஏன் இத்தனை அக்கறை என்பதுதான் எனக்கு விளங்கவில்லை. ஒரு பெண்ணைக் காப்பாற்றுவதற்காக இவன் மேற்கொள்கிற கருணை அதே அவளுக்கு அவளுடைய உறவினர் மேற்கொள்கிற கடமை, மான உணர்ச்சியின் முன் போராட்டமிடக் கூடியதல்லவே !.....

சந்தேகத்துக்கிடமின்றி வதந்தியை உண்மையாக்க அவன் முனைந்துவிட்டான் என்பதைப் புரிந்து கொண்டேன். இனியும் அதில் தலையிட நான் என்ன பைத்தியமா?

மாலையில் வீடு திரும்பும் போது சாமாவின் வீட்டு வாசலில் கூட்டம் கூடியிருந்தது. தொலைவிலிருந்தே பார்த்த போது ஏதோ பயங்கரம் நடந்து விட்டது, அல்லது நடந்து கொண்டிருக்கிறது என்பது தெரிந்தது. ஓட்டமாய் ஓடிச் சென்று, "என்ன? என்ன நடந்தது?" என்று கேட்டேன்.

"உள்ளே ஏக ரகளை.... கலாட்டா.. அரை மணியாக அந்த மனிதர் அவளைப் புறப்பட்டு வரச் சொல்கிறார்..... அவள் முடியாது என்று அடம் பிடிக்கிறாள்.... உங்க சிநேகிதரும் அனுப்ப மாட்டேன் என்கிறார்" என்றார்கள்.

நான் உள்ளே போனேன்.

"சீனு, வா....சரியான நேரத்துக்குத் தான் வந்திருக்கிறாய்" என்றான் சாமா.

"பாருங்கள், சார்.... அவள் வர முடியாது என்கிறாள்" என்றார் அந்த உறவினர்.

மீனு என்னைப் பார்த்தாள். "நான் வரமாட்டேன் என்று சொல்லவில்லை, அண்ணா...... இவர் என்னை அழைக்கிற முறைதான் சரியாக இல்லை" என்றாள்.

"ஆமாம்... கத்தியைக் காட்டினால் பெண்டாட்டி வரமாட்டாள்..." என்றான் சாமா.

அட கடவுளே, வந்திருப்பவர் மீனுவின் கணவரா! இத்தனை வதந்திகளுக்குப் பிறகு அவர் வந்து அழைத்துப் போகச் சம்மதிப்பதே பெரிய புண்ணியம்! அப்படியிருக்க அவள் உடன் செல்ல மறுப்பதோ, சாமா அவளைப் பிடித்து நிறுத்துவதோ என்ன அநியாயம்!

"சாமா! அவளை அனுப்பு" என்றேன்.

"மாட்டேன்" என்றான் அவன்.

"இது தவறு சாமா. அவள் அவருடையவள்."

"இருக்கலாம்.... ஆனால் அவர் அவளுக்குப் புருஷனாக நடந்து கொள்ளவில்லையே இது வரை!"

"அது உன் அதிகாரத்தில் உள்ள கேள்வி இல்லை... இவ்வளவு தூரம் போகவிட்டதே தவறு... வேண்டாம். அவளை அனுப்பிவிடு."

"அவளுக்கு விருப்பமானால் போகட்டும்..... நான் தடுக்கவில்லை."

"என்னம்மா ?" என்று அவளைக் கேட்டேன்.

"அண்ணா, நான் வாழவே விரும்பவில்லை...... ஏதோ ஒரு மாசமாகத்தான் கொஞ்சம் நிம்மதியாக இருந்தேன்...... உங்க சிநேகிதர் மூலம் வாழ்க்கை என்பது ரொம்ப உன்னதமானது என்பதைப் புரிந்து கொள்ள முடிந்தது..... மறுபடியும் இவருடைய கத்திக்குப் பயந்து என் கழுத்தை நீட்ட நான் விரும்பவில்லை.... என்னைப் புரிந்து கொள்ள ஒருவர் இருக்கிறார்..... இருட்டிலும் புழுக்கத்திலும் இந்த அறைக்குள் நான் சுகமாக இருந்து விட்டேன்..... எனக்கு வெளிச்சம் வேண்டாம். காற்றோட்டம் வேண்டாம்..... பொய்யைச் சுமந்து கொண்டு வேஷம் போடவும், பயப்படவும் என்னாலே முடியவில்லை."

மீனுவின் குரல் தழுதழுத்து விட்டது. பட்டை பட்டையாக விபூதியைப் பூசிக் கொண்டு ஒரு முனிகுமாரனைப் போல் சாமா வீற்றிருந்தான். அவர்கள் இருவரையும் பார்க்கிற போது அந்த இருளுக்குள் புதைந்திருக்கும் அதிமானுஷ்யம் என்னைக் கலங்க வைத்தது.

அவர் — மீனுவின் கணவர் — எழுந்தார். அடுத்தகணம் மடியிலிருந்த உறைவாளை உருவினார். என்ன ஆகுமோ என்று பயம் உதற நான் அவரைப் பற்றினேன்.

"போதும், மீனு, நீ வரவேண்டாம்...... நான் போகிறேன். உனக்குத் துன்பம் தருவதற்காகவே மறுபடியும் நான் வந்து நிற்கிறேன். என்னை மன்னித்துவிடு...... இந்த மனிதர் — ஊரிலே யார் என்ன சொன்னாலும் சரி—ரொம்பப் பெரியவர்...... உன்னை நல்ல பாதுகாப்பிலேயே விட்டு விட்டுப் போகிறேன்.... அந்த நிம்மதி இருக்கிறது எனக்கு.... நான் ரொம்பப் பொல்லாதவன்தான்... ஆனால் உன்மீது எனக்கு இருக்கிற நம்பிக்கை இருக்கே, அது மிகவும் உன்னதமானது...... அது கேவலமான வதந்தியை நம்பாது.....ஆனால் நீயும்.... பொறுப்பா, ஜாக்கிரதையா இருக்கணும்.... அவ்வளவுதான் நான் சொல்வேன்..... நான் வரேன்" என்றவர், கத்தியைக் கழற்றித் தம்மைத் தாமே குத்திக் கொள்ளப் போனார்.



நிழலும் நிஜமும் - 2
தெளிந்த நீரிலே படிந்த அழகு!
போட்டோக்கள்: என். ராமகிருஷ்ணா

இமைக்கும் நேரம்தான். எப்படித் தான் பாய்ந்தாளோ, மீனு அவர் கையைப் பற்றி விட்டாள். கத்தி அவளுடைய கையில் உராய்ந்து காயம் உண்டாக்கிவிட்டுத் தொலைவில் போய் விழுந்தது. அந்த மஞ்சள், மஞ்சேர் என்றிருந்த தங்கத் திண்மையில் குங்குமம் பாய்ந்த காட்சி அப்பப்பா !

"நான் உங்களோடு வருகிறேன். என் புத்தி மழுங்கிவிட்டதே.....சர்வேசுவரா, அவரைக் காப்பாற்று !.....இங்கே பாருங்கோ, நான்..... நான்....உங்கள் மீனு !......"

அந்த இருளில் அன்புச் சுடரை, தியாகச் சுடரை, பாசச் சுடரைக் கண்ட எனக்கு வெளியுலகின் பகட்டையும், போலித் தன்மையையும் காணக் காண நெஞ்சு பொருமிற்று. பூமிக்கு அடியில், மண்ணோடு மண்ணாய்த்தானே தங்கத்தையும் வைரத்தையும் இறைவன் புதைத்து வைத்திருக்கிறான் !

கூட்டம் கண்ணைக் கசக்கிற்று. நெஞ்சை அது என்றைக்குக் கசக்கிக் கொள்ளுமோ !


நான் வெளியே வந்தேன்.

ஆயிற்று. மீனு போய் விடுவாள்.

அந்த வீட்டின் பின்பகுதியில் ஓர் அறையில் சாமா மட்டும் பட்டை பட்டையாய் விபூதி தரித்து இருளோடு இருளாய்த் தனி வாசம் செய்வான். ஆனால் அப்படி வாழ அவனால் முடிகிறதே!

This is the new FIAT 1100 DELIGHT

It's a dream...it's the car with elegance, comfort & economy



See all these special features:

New Streamlined Grille

✳

Modern Body Styling with all-round visibility, wrap-around rear window

✳

All doors hinge forward

✳

New piano-key switches on dash board.

✳

Push-button door handles

✳

and many more.

The car for people who appreciate good driving and fine cars. It is a delightful car with completely new and modern styling and many special features exclusive to this car. Combined with this is the Fiat's traditional outstanding performance, mechanical reliablity, smart acceleration and dependable economy. Fiat 1100 has attained and maintained a legendary prestige for the last several years in the Indian market. The new 1100 Delight is a step forward - a car to be proud of, a car that will give you faithful service and many years of driving delight.

Manufactured by

THE PREMIER AUTOMOBILES LIMITED

BOMBAY

CONTACT YOUR NEAREST DEALER

வெற்றியின் வேர்

தென்னந்தோப்புக்கு அப்பால் பாலாகப் பொழியும் நிலா. தூரத்துக் கடல் அலைகளின் ஓசை இத மாய்ச் செவியில் இழைந்தது. உள்ளே கடிகாரம் பத்து மணி அடித்தது. அதன் எதிரொலியே போலப் பக்கத்து, எதிர் வீடுகளிலிருந்து மணி ஓசை. நீரஜா ஒரு முறை கூந்தலை நீவி விட்டுக் கொண்டாள். பக்கத்தில் ராஜன் குரல் கேட்டது. அவன் தோள்மேல் அவள் முகமாய், பார்வையில் சுடர்கள் ஆட, ஆவல் ததும்பும் அந்தக்குரல்.

வலுவில் அவன் அழைக்கும்வரை விட்டுக் கொடுக்க கூடாதென்று அவள் வீம்பாக முகத்தைத் திருப்பிக் கொண்டிருந்து விடுவாள். இடையில் பதியும் விரல்களில், செவியில் கனியும் பேச்சின் மென்மையில் அவள் பிடிவாதம் தளர்ந்து போகும். இப்போது மறுபடியும் கேட்பது போலத் தொனிக்கும் அந்தக் குரல்.

மாலையில் தலை கவிழும் மொட்டைப் போல, குத்திட்ட முழந்தாட்களிடையே அழுந்திய முகத்தை நிமிர்த்திப் பார்த்தாள். தூரத்தில் கடைசி பஸ் ஓடி மறையும் சத்தம். மரங்களிடையே விட்டு விட்டுத் தெரியும் அதன் மினுக்கொளி. ராஜன் வரவில்லை. அந்தக் குரல் ஒரு பிரமை. அன்று அவன் வருவானென்று சொல்வதற்கில்லை. அதைப்போல் அவன் பேசி வெகு நாட்களாயிற்று.

அவள் எதிர்பார்க்க வேண்டியதில்லை. காலை வேளையில் அவன் கிளம்பிப் போய் விட்டான். காலை பகலாய் வளர்ந்து, வேளை முற்றிப் பகல் சாய்ந்து விட்டது. மாலை அந்தியில் மறைந்து அந்தி இரவில் கரைந்தாயிற்று. ஒலிகள் அடங்கி இரவின் தனிமை கரைந்து இறங்கி விட்டது. அவளுடைய எதிர்பார்ப்பும் படிப்படியாய் உயர்ந்து, அடங்கி விட்டது. இப்போது அவளுக்குத் துணையாய் இருப்பவை அவள் எண்ணங்களே. அவை நெஞ்சில் கனத்துத் தொங்கின.

முன் பக்கத்து விளக்கை அணைத்து விட்டாள். கீழே படி இறங்கித் தெருவில் நடக்கும் தெருவின் காவல் கூர்க்காவின் அழுத்தமான பூட்ஸ் ஒலி. வேலைக்காரி வேலையை முடித்துவிட்டுப் பாத்திரங்களைக் கழுவி அடுக்கி முன்றானையைத் தலைப்பில் துடைக்கும் அவகாசம் கூடப் பொறுக்காமல், படி இறங்கி வேகமாகப் போய் விட்டாள். அவளுக்கு வீட்டில் வேலை காத்துக் கொண்டிருந்தது; கூர்க்காவுக்குத் தெருவில் காத்துக் கொண்டிருந்ததைப் போல.


''அப்படி என்ன அவசரம்?'' என்று ஒரு நாள் அவளிடம் கேட்டாள் நீரஜா.

''கைக்குழந்தை அழும். ஏழு மாசத்துக் குழந்தை.''

வண்டியின் பின் தோகையாய் [எழும் புழுதியைப் போல் அந்தப் பேச்சு அவள் நெஞ்சில் என்னென்னவோ நினைவுகளைக் கிளப்பிவிடும். கரையில் சுருண்டு விழுந்து மீளும் அலையென, அடங்காத எண்ணங்களின் கொந்தளிப்பு.

ராஜன்—அவள் இரண்டு பேர்கள்தான் அந்தக் குடும்பத்தில். ஒருவர் தனியாக இருக்கலாம். இருவர் இருந்தும் தனிமையை உணர முடியுமோ? அவள் உணர்ந்து கொண்டுதான் இருந்தாள். ஒரு குழந்தை அவர்களிடையே பாலமாக இருந்திருக்கும். இருவருக்குமே துணையாக அமைந்திருக்கும். ஆனால் அப்படி நேரவில்லை.

மூன்று வருஷங்களாகவே ராஜன் அந்த ஆராய்ச்சியில் அழுந்திப் போயிருக்கிறான். வீட்டுக்கு வரும்போதே



எஸ். லட்சுமி சுப்பிரமணியம்



அந்த நினைவுகளின் சுமையோடுதான் வருவான். அப்புறம் பேச்சில், கைக்கவளம் வாயருகே செல்லும்போது கணப்பொழுதின் தயக்கத்தில் தூக்கமும் இன்றி விழிப்பும் இன்றிப் புரளும் வேளைகளில் அவனுடைய ஆர்வம் பொங்கும் ஸ்பரிசத்துக்குப் பதிலின்றி மௌனமாய் அடங்கிவிடும் இயல்பில், அவன் தன் சாதனைகளின் நினைவிலேயே தோய்ந்து நிற்பது தெரியும்.

குழந்தைகளின் வியாதியைப் பற்றிய ஆராய்ச்சி.

அந்தப் பொருத்தமும் ஒரு வேடிக்கை தான். வீட்டில் ஒரு குழந்தையின் குரலையே கேட்காத மனிதருக்குக் குழந்தைகளைப் பற்றியே சதா நினைவு தோன்றுவதைப் போல் ஓர் ஆராய்ச்சி. ஆனால் ஆராய்ச்சியில் குழந்தையை ஒரு கருவியாக நினைத்துவிடலாம். ஒவ்வோர் உறுப்பையும் பகுத்துத் தனித்தனியாய்ச் சோதிக்கலாம். ஆனால் இதழ்ச் சிரிப்பில் உருகி எழும் உவகையை, அரும்பும் அமுத நினைவின் இனிமையை, புதுமையாய்த் தோன்றும் நெஞ்சின் மென்மையைப் பகுத்துப் பிரிக்க முடியுமோ? ஆராயத்தான் முடியுமா?

சாப்பிட்டது நினைவில்லை. விளக்கை அணைத்துக் கட்டிலில் படுத்து விட்டான். ஜன்னல் சட்டத்தில் துண்டாக விழும் நிலா. அதன் அடியில் தேங்கும் இருண்ட கருநிழல். கண்ணை மூடிக் கொண்டான். தூங்க முயலும் நினைப்பில்லை. துணைக்கு நினைவுகளைத் தேடும் முயற்சிதான்.

வைத்தியக் கல்லூரியில் பேராசிரியர் அவன் தந்தை. அவருடைய அறையில் சுழல் அலமாரியில் கவரில் பதித்த கண்ணாடிச் சட்டமிட்ட அறைகளில் நிறைந்து நிற்கும் புத்தகங்களை அவன் எப்போதாவது ஆர்வம் தூண்டப் பிரித்துப் பார்ப்பதுண்டு. மேஜையருகே தனி ஸ்டூலில் செதுக்கி விழும் விளக்கு வெளிச்சமும் மைக்ராஸ்கோப்பும், இரும்பேதும் பார்வையில் எழுந்து நிற்கும். கண்ணாடிக் குண்டின் அடியில் பறக்க முயலும் கட்டுப் பறவையைப் போல் உதறும் காகிதங்களின் கற்றையில் கணக்கில்லாமல் எழுதிக் குவித்திருப்பார்.

அவன் தாயார் இளம் வயதிலேயே போய்விட்டாள். அதனால் அவர் அந்தக் கலையையே மறுமணம் செய்துகொண்டு விட்டாரோ!

அவரிடம் அடிக்கடி சந்தேகம் கேட்க, விரிவாய்ப் பேச அவர்கள் வீட்டுக்கு வருவான் ராஜன். சற்றுத் தள்ளிச் சாய்வு நாற்காலியில் சாய்ந்து முகம் மட்டும் தெரிவது போல உட்கார்ந்து கொண்டிருப்பாள் நீரஜா; அவர்கள் பேச்சு புரியாவிட்டாலும் அந்தக் குரலைக் கேட்பதற்கு. நடுவே அவன் குறிப்பு ஏதாவது புரிந்த அடையாளமாய், அவள் சிரிப்பு 'களுக்'கென்று கேட்கும்; தேங்கிய நீரில் கூழாங்கல் விழுந்ததைப் போல. அவன் பார்வை அவள் புறம் திரும்பும். மனத்தில் அந்தக் கணப்பொழுது எழுப்பும் உணர்ச்சி, நீரில் விரிந்து பெருகி, மெல்ல மெல்ல அடங்கும் வட்டங்களைப் போல, கொஞ்ச நேரம் அலை எழுப்பிக் கொண்டேயிருக்கும்.

''நீரு, இங்கே வா!'' என்று கூப்பிடுவார் அவள் தந்தை. முதல் நாள் வந்த மருத்துவப் பத்திரிகை, புதிதாக அவர் எழுதி வைத்த குறிப்பு, மறந்து எங்கேயோ விட்டுவிட்ட மூக்குக் கண்ணாடி, இப்படி எதையாவது கேட்பதற்கு. தோளில் வளைய வந்து விழும் பின்னலை விரலில் சுற்றியபடி வந்து நிற்பாள் நீரு. அவன் பார்வை நிமிராது. அவள் பார்வை தன்மீது குவிந்திருப்பது அவனுக்குத் தெரியும். அப்புறம் தட்டில் வைத்த கோப்பைகளில் பழரசம் தளும்பக் கொண்டுவந்து எதிரே நீட்டும்போது அவன் ஒரு கணம் அந்தப் பார்வையைச் சந்தித்து விடுவான்; தந்தைக்கும் தெரியாத ஒரு கள்ளச் சாகசத்தில், சமாளிக்கும் பாவனையில். பட்டு மெத்தையின் பிதுக்கத்தில் உருளும் வைர நகையின் தவிப்பைப் போல, அந்தக் குறு நேரம் அப்புறம் அவன் நினைவில் நின்று ஒளி சொரிந்து கொண்டிருக்கும்.

படிப்பு வளர்ந்து கொண்டே வந்த போது அவர்கள் பழக்கமும் முதிர்ந்து கொண்டே வந்தது. பார்வையிலிருந்து பேச்சுக்கு; அப்புறம் அவளே வலியப் பேசி வம்பு செய்யும் அளவுக்கு. முதன்முதலில் பேசியபோது மெல்லிழைகள் எழுப்பும் நாத ஒலியைப் போல், அவன் நெஞ்சை அந்த ஒலி மீட்டிய விதம்? என்றோ கிடைத்த தின்பண்டத்தை நினைத்துச் சப்பிடும் குழந்தையைப் போல அப்புறம் அந்த நிகழ்ச்சியை அவன் அடிக்கடி நினைத்துக் கொள்வான்.

இருவருமாய்ச் சில சமயம் உலாவப்போவார்கள். கனத்த கற்சுவரில் வந்து மோதும் கடல் அலைகள். கரையோரமாக அமைத்த தளம் பாவிய நடைபாதை. சென்னையைப் போல, பம்பாயில் அழகான கடற்கரை இல்லை. ஆனாலும் படர்ந்து விரியும் கடலைப் பார்த்தபடி அந்த நடைபாதையில் நடந்து செல்லும்போது மனத்தில் ஓர் இன்பம் இதமாய் மணக்கத்தான் செய்யும்.

ஆனால், அவையுங்கூட அவனுக்கு ஏதோ ஒரு விஞ்ஞானத் துணுக்காகத்தான் நினைவில் தேற வைக்கும். நிலவைப் பற்றிச் சொன்னதும், விண்வெளியில் சந்திரனுக்குச் செல்லவிருக்கும் மனிதனின் சாதனை; கடலின் நீலத்தை வியந்ததும் அதன் நீல நிறம் எப்படி அமைந்ததென்று கூறிய நிபுணரின் பேச்சு; இப்படித்தான் அவன் பேச்சு திரும்பும்.

அவன் தந்தையும் கூடச் சேர்த்துக் கொள்வார், எப்போதும் தீவிரமாக இருக்கும் அவன் சிந்தனையின் அழுத்தத்தை நினைத்துப் பார்த்து.

மகாலட்சுமி கோவிலுக்குப் போய் விட்டுப் படி இறங்கி வந்துகொண்டிருந்தார்கள். ''நீரு!'' என்று கூப்பிட்டான் அவன். அவன் அப்படி அவளை அழைத்ததேயில்லை. பெயரைச் சொல்வதே அருமை. அதுவும் அப்படிக் கூப்பிடுவதைக் கேட்டதில் பொங்கிய மன எழுச்சியை, இதழ்கள் பிரிந்து நெஞ்சு நிறைவில் உதிர்ந்து எழுப்பும் மணத்தை, அவளால் அடக்கிக் கொள்ளக் கூட முடியவில்லை.

''கோவிலில் என்ன பிரார்த்தனை செய்து கொண்டாய் நீ?''

''நீங்கள் என்ன பிரார்த்தனை செய்து கொண்டீர்கள், சொல்லுங்கள் முதலில்?'' மாலைமேல் சுற்றிய ஜரிகையாய் அவள் புன்னகை ஒளிவிட்டு மிளிர்ந்தது. எதற்காக அவன் பேச்சைத் தொடங்கினானோ அந்த விஷயத்துக்கே அவன் நேராக வந்து விட்டான்.

''இன்று அப்பா என்னிடம் கேட்டார். நான் உன்னைக் கேட்கிறேன்.''





சட்டென்று அவள் துணிச்சல் அனைத்தும் அடங்கிப் போயிற்று. நாணத்தில் வெட்பேறிய முகம் அவன் பார்வையில் படாமல் குனிந்து கொண்டது. அவள் சொல்ல வேண்டாம். கனிவாய் நிமிர்ந்த அந்தப் பார்வையில் ஒருமுறை மலர்ந்து அடங்கிய புன்னகையில் அவள் மனத்தை அவன் படித்திருக்க முடியாதா?

கையில் இருந்த பிரசாத புஷ்பங்களில் ஒன்றை எடுத்து அவள் கூந்தலில் செருகினான். ஒரு துள்ளலில் அவள் விலகி நாலெட்டாய் முன்னால் போய்க்கொண்டிருந்த அவள் தந்தையுடன் சேர்ந்து கொண்டாள்.

இயற்கையில் எத்தனை விதமான எழில் கோலங்கள்? அதைப் போலவே அவள் பெண்மையிலும் பருவங்கள். தாயை இழந்த குழந்தைப் பெண். தந்தைக்கு அருமையாக வளர்ந்த கன்னிப் பெண். கணவன் பாதங்களில் இடுவதற்குப் பத்திரமாகப் பாதுகாத்த நெஞ்சின் மலர்ச்சி, மெல்ல மெல்ல இதழ் விரித்த பருவம். ராஜனோடு அந்த வீட்டில் அடியெடுத்து வைத்த மனைவி.

அவர்கள் இருவரும் அவன் சென்னைக்கு வந்து தொழில் தொடங்கியதும், கட்டிய மனக் கோட்டைகள் எத்தனை? அவன் நினைப்பதெல்லாம் தொழிலைப் பற்றி, தன் படிப்பை, அறிவைப் பயன்படுத்தி வெற்றி காண்பதைப் பற்றி. அவள் நினைப்பதெல்லாம் அவன் குடும்பத்தைப் பற்றி. அவனே, அவள் கருத்தை முழுமையாகக் கவர்ந்து மண வாழ்வின் இரகசியங்களைப் பகிர்ந்து கொள்ளும் மன நிறைவைப் பற்றி.

மென் மழையும் இல்லை; பொன் வெய்யிலும் இல்லை. அவைகளின் இணைப்பில் தோன்றும் வண்ணம் ஒளிரும் வான வில். அவள் அதை அநுபவித்து ஏற்கப் பழகிக் கொண்டுவிட்டாள். விரலை உயர்த்திக் கொண்டு அவன் தன் விருப்பினை மட்டும் நினைத்தபடி நறுக்கமாய் ஏதாவது பேசுவான். அந்த நிமிர்ந்த முகத்தை விழிகளில் தெரிக்கும் ஆர்வத்தை, குறு நகையின் இதம் தரும் அநுபவத்தை, நெஞ்சப் பதிவில் உருவங்களாய், நிழல்களாய், வடிவமில்லாத உணர்ச்சிகளாய், அவள் இருத்திக் கொள்வாள். எப்போதாவது அவனுக்கு அவள் நெஞ்சத்தைத் தொடும் விதமாய்ப் பேசக் கொஞ்சம் அவகாசம் கிடைக்கும். ஆனால் வந்த சுருக்கில் அது போய்விடும்; கடும் கோடையில் ஒதுங்கும் சாம்பல் நிற மேகத் துணுக்கு நாலே தூறல்களில் பிசுபிசுத்து மறைந்து விடுவதைப் போல.

நாலைந்து நாட்களாய் உடல்நிலை சரி இல்லை. ஏதோ ஒரு மருட்சி. அவன் தான் மருந்து கொடுத்துக் கொண்டிருந்தான்.

பிற்பகல் நன்றாய்த் தூங்கிக் கண் விழித்தபோது விடிந்தாற்போல் இருந்தது. விழிப்பில் தெரிந்தது காலை நேரம் இல்லையென்று தெரியச் சற்று நேரம் ஆயிற்று. பார்வை உயர்த்தியபோது கட்டில் விளிம்பில் உட்கார்ந்திருந்த அவன் முகம் தெரிந்தது.

''உன் உடம்புக்குக் கொஞ்சம் கவனம் தேவை. நீ....''

சற்றுத் தயங்கினான். மௌனமான ஓர் அழைப்பு அவள் நெஞ்சில் கேட்டது. நயம் நிறைந்த இந்த நேரம் அவர்கள் அணைப்பில், நெஞ்சங்கள் நெருங்கிய வேளையில், கன்ன மிருதுவும், கைகளின் இணைப்பின் மெத்தும் உணரும்பொழுதில், புணர்ந்திருக்கலாம். அவனிடம் அவளே மூச்சிலும் தாழ்ந்த குரலில் கண்ணைச் சிமிட்டி, மறைமுகமாய் உணர்த்தியிருக்கலாம்.

அவன் சொல்வது ஒரு டாக்டரின் வாசகம். அதையாவது அவன் சொல்

வானு? எழுந்து முதுகு தெரிய, ஜன்னலை மறைத்தபடி நின்று கொண்டான்.

''உனக்கே தெரிந்திருக்கும்.''

அவள் அருகே உட்கார்ந்திருந்தால் மடியில் தலையை வைத்துக் கொண்டிருந்திருப்பாள். முகத்தருகே குனிந்திருந்தால் கைகளை மாலையாகப் போட்டு அருகே இழுத்துக் கொண்டிருந்திருப்பாள். ஆனால் அவன் எட்டித்தான் நின்று கொண்டிருந்தான்; எப்போதும் அவளால் எட்ட முடியாத அவன் மனத்தைப் போல.

குழந்தையின் வளர்ச்சியும்கூட அவனுக்கு ஒரு தொழில் அநுபவமாகத்தான் இருந்தது. அவள் செயல்களை, மாறுதல்களை, உடல் உணர்ச்சிகளை, அந்தக் கண்ணோடு பார்த்துக் கொண்டிருப்பான். ஒவ்வொரு மாதமும் வைத்திய சோதனை. அவன் ஆர்வமெல்லாம் அதன் பிறகு அந்தப் பெண் டாக்டர் சொல்லும் நுட்பமான தகவல்களில்தான் இருக்கும்.

ஏன் அவளால் அவன் மனத்தைத் தொட முடியவில்லை? வயிறின் ஆசைகள், ஆசையின் வாதனைகள், அவர்களுக்குள்ளே பகிர்ந்து கொள்ள வேண்டியவை. அவற்றை அவள் எப்படி அவனுக்கு எடுத்துக்காட்ட முடியும்?

இன்னும் சில நாட்களே மிகுந்திருந்த போது ஒரு நாள். அவர்கள் கடற்கரையில் தனியே உட்கார்ந்திருந்தார்கள். விம்மிய வயிற்றின் மடியாய் உயர்ந்து பூரிக்கும் கடற்பரப்பு. வளர்ச்சியின் அடக்கத்தைத் தேக்கும் நீலபோல் வானத்தை அடைந்த மேகப் பறவைகள் சிரமம் நிறைந்த அவள் மூச்சைப் போல் விட்டு விட்டு வந்த மெல்லிய காற்று.

''உனக்குத் தெரிந்திருக்கட்டுமென்று சொல்கிறேன். தைரியமாக இரு. உன் பிரசவம் சற்றுச் சிரமமாக இருக்கும்.''

அவள் உடல் சிலிர்த்து ஒடுங்கியது. துணைக்கு அவன் கையைப் பிடித்துக் கொள்ள வேணும் போல் இருந்தது. ஆனால் அவன் குனிந்து மணலில் படம் எழுதிக் கொண்டிருந்தான். அவன் சொன்ன பேச்சுக்கு மேல் விவரமா? அந்த விவரத்துக்கான குறிப்புகளா? ஏன், என்ன என்று பதிலுக்கு அவள் கேட்கக்கூடுமென்ற நினைப்புக் கூட இல்லாமல், அவளுக்கும் ஒரு துடிப்பு இருக்குமென்ற சிந்தனை இன்றி, அவன் பேசிக்கொண்டே போனான்.

''குழந்தைகள் பிறக்கும் போது சாதாரணமாய்த் தலை முதலில் வெளித் தோன்றும். உன் குழந்தை குறுக்காய் அமைந்திருக்கிறது. தலையைக் கடைசியில் வெளியேற்ற வேண்டி நேரலாம். அது சுலபம் இல்லை. கடைசிச் சுருக்கத்தில் குழந்தையின் மூச்சு இறுகி விடாமல்—''

அவனிடமிருந்து ஒரு கேவல் கிளம்பிற்று. அவன் நிமிர்ந்து அப்போதுதான் பார்த்தான்; அவள் உடைந்து உள்ளுக்குள் அழுங்கிப் போய்க் கொண்டிருப்பதை. சட்டென்று அருகே வந்து அவள் தோளை அணைத்துத் தாங்கிக் கொண்டான்.

''உனக்குத் தெரிந்து கொள்ள ஆர்வம் இருக்குமென்று நினைத்தேன். மன்னித்துக் கொள்.''

அவன் பேச்சுக்கள் அந்தரங்கமாய் இருக்கலாம். அது ஓர் இதம் தந்திருக்கும். பொதுவான ஒரு வைத்தியக் குறிப்பாக இருந்திருக்கலாம். அவள் அதில் ஆர்வம் காட்டி விருப்பாள். அவன் சொன்னது அவர்கள் இருவரின் இணைந்த வாழ்க்கைக்கு அடையாளமான அன்பின் உருவத்தைப் பற்றி. அந்த உணர்ச்சியின் சூடு அவனுக்கு இல்லை. அது அவர்களின் முழு வித்து. குடும்பத்தின் நாளைய செடி. அதில் இருக்க வேண்டிய கருத்தூன்றிய அக்கறை அவன் பேச்சிலில்லை. இரக்கமற்ற, ஆழம் சோதிக்கும் அறுவைச் சிகிச்சைக் கத்தியின் கூர்மைதான் இருந்தது.

அவளுடைய விம்மல், அடங்காத பெருமூச்சு, அந்தப் பயத்திலும், வெட்கத்தில் தன்னைத் தானே சிரமப்பட்டு அடக்கிக் கொள்ளும் வேதனை, அவனுக்குப் புரியாது.

மௌனமாய் எழுந்து நடந்து வந்தார்கள். மணற் புதையில் விழுந்த காலடிச் சுவடுகள். அவைகளைப் போல் அவர்கள் வாழ்க்கையில் கடந்து வந்து விட்ட நிகழ்ச்சியின் அடையாளங்கள்.

குழந்தை தங்கவில்லை.

அவன் எதிர்பார்த்தது சரி. நிகழும் போது, கூட இருந்து கவனித்தபோது, அப்புறம் அந்த மருத்துவத் தோல்வியின் காரணங்களை நினைத்தபோது, அதைப் பற்றிய குறிப்புக்களைப் புத்தகங்களில் தேடித் தேடிப் படித்த போது— அவனிடம் சலனமே இல்லை. அவள் கண்ணீரின் ஸ்படிகம் அவன் பார்வையை உறுத்தவில்லை. உருத் தேய்ந்த நட்சத்திரமாய் ஒளியிழந்து விட்ட முகம் அவனுக்குப் புலப்படவில்லை. தன்னைச் சுற்றி அப்படி அவன் கட்டிக் கொண்ட கூட்டுக்கு வெளியே அவள் மௌனமாய் நின்று கொண்டிருந்தாள். ஏதோ ஓர் உள்ளுணர்வில் உள்ளம் நடுங்கிற்று. மார்பில் குழந்தைக்கு அளிக்க முடியாத வளம் புண்ணாய் வலித்தது.

பள்ளத்தில் சிறகொடிந்து விழுந்த பறவை, தட்டுத் தடுமாறி ஏறி வெளியே வருவது போல், அவளும் அந்த இடியைத் தாங்கிக் கொண்டு வெளியே வந்து விட்டாள். முன்னைப் போலவே வாழ்க்கை. உடைகளின் அணி. வார்த்தைகளின் பூச்சு. உணர்ச்சிகள்தான் மரத்து விட்டன.

ராஜன் தொழிலை நிறுத்தி விட்டு ஆராய்ச்சியில் இறங்கி விட்டான். அதற்காக முதிர்ந்த அறிவும், அநுபவ ஞானமும் கூடிய பேராசிரியர்களும் டாக்டர்களும் இருக்கும் ஓர் ஆராய்ச்சி நிலையத்திலும் சேர்ந்து விட்டான். அதுதான் அவன் முதல் வீடு.

மனத்தில் விளைந்த வருத்தத்துக்கு மாறுதலாக அவன் அப்படி வேலையில் ஈடுபட்டிருந்தால், அந்த மும்முரம்கூட அவளுக்கு ஓர் ஆறுதலாக இருந்திருக்கும். தன்னிடம் ஆற்றிக் கொள்ளமுடியாத ஒரு வேதனைக்கு அந்தப் படிப்பே மாற்று மருந்தாகஇருந்தாலும்கூடஅவள் அதைச் சகித்திருப்பாள். ஆனால் அவன் முனைப்பில் அவன் தன்னை மறந்தது மட்டுமல்ல; குழந்தையையும் மறந்து விட்டான். அதைத்தான் அவளால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

வீட்டிலும் ஓர் அறையில் அவனுக்கு வேலை. அங்கே எப்போதும் விளக்கு எரியும். மேஜை மேல் பிரித்த புத்தகமும் காகிதக் குவியல்களுமாக இருக்கும். கண்ணாடித் தட்டுகளும், குழாய்களும், சோதனை விளக்கும், மைக்ராஸ்கோபும் நீண்ட மேஜையில் இடமின்றி நிறைந்திருக்கும். சில நாட்களில் நேரம் கழித்துத் திரும்பி நேரே அந்த அறைக்குப் போய் விடுவான். சாப்பிடக் கூப்பிடுவதும்கூடக் காதில் விழாது. அவளே தட்டில் கொண்டு போய்ப் பக்கத்தில் வைத்து விட்டு வருவாள். அதற்கும் இரண்டு தடவை அப்புறம் ஞாபகப் படுத்துவாள். அவன் வெளியே போனதும் அறையைச் சுத்தப்படுத்தி எல்லாவற்றையும் ஒழுங்காக அடுக்கி வைப்பாள். குறிப்புகளைக் கோர்த்துத் தொகுத்து வைப்பாள். ஒவ்வொன்றுக்கும் அடையாளச் சீட்டு ஒட்டிக் குப்பிகளையும் குழாய்களையும் சீர்ப்படுத்தி வைப்பாள்.

அவன் திரும்பி வரும்போது அவற்றைக் கவனித்தது போலக் கூடத் தெரியாது. அவளை நிமிர்ந்து பார்த்துப் பதில் சொல்லக்கூட நேரம் இராது. திரும்பி வரவும் பொழுது இல்லாமல் இதைப் போல் எத்தனையோ நாட்கள்.

விடிந்து விட்டது. எப்போது தூங்கினானோ, தெரியாது. காலையில் எழுந்து வேலைகளைத் தொடங்கினாள். காலை வெய்யில் ஓங்க ஆரம்பித்த சமயம், அவன் செருப்பொலி கேட்டது. வழக்கம் போலப் பையை ஓரமாக வைத்துவிட்டுப் பின்புறம் போய் விட்டான். முதல்நாள் வர முடியாததற்கு அவன் சமாதானம் கேட்க வில்லை. அவள் இப்போதெல்லாம் கேட்பதும் இல்லை.

குளித்துச் சாப்பிட்டானதும் அவன் படுத்துத் தூங்கி விட்டான். முதல் நாள் இரவு இமை கொட்டி விழிக்க மாட்டான். அவளுக்குத் தெரியும். பையில் இருந்த காகிதங்களை எடுத்து வரிசைப் படுத்த ஆரம்பித்தாள். அவன் பிறகு சொல்வான்; எவற்றை டைப் செய்ய வேண்டுமென்று.

குழந்தைகளைப் பற்றிய ஆராய்ச்சி அவனுடையது. வேடிக்கையான அநுபவம். அவள் கண்டிராத ஓர் அநுபவத்தைப் பற்றிய ஓர் ஆராய்ச்சி. அதற்காக ஏங்கும் அவள் மனத்தை ஆராயும் அக்கறையும் இருந்ததில்லை. அதுவும் ஒரு வேடிக்கைதான்.


குறிப்புக்களைப் புரட்டிக் கொண்டே வந்தாள். பிறவியில் குழந்தைகளுக்கு ஏற்படக்கூடிய ஊனங்கள். 'தலிடமைட்' குழந்தையின் அங்கஹீனமான படங்கள். பிறவியில் இறந்துவிடும் குழந்தைகள். அவற்றின் அமைப்பில் இடவாக்கில் கோளாறுகள். முறை மாறி, குறுக்காக அமைந்துவிட்ட விதம்; 'ப்ரீச்' குழந்தைகள்.

சட்டென்று அவள் கண்கள் நீரால் நிறைந்தன. அவள் குழந்தையும் அப்படி அமைந்ததுதான். அப்படித் தவறிப் போனதுதான். அவனுக்குத் தெரியாததா அது? அதைப்பற்றிய ஆராய்ச்சியின் போது, ஒருகணமேனும் அவன் படிப்பை நிறுத்தி, அவர்கள் குழந்தையைப் பற்றிச் சிந்தித்திருப்பானா? அவர்களுக்கு நேர்ந்த அந்தத் துயரத்தின் சிந்தனை, அந்த வேதனையின் நிழல், ஒரு நொடிப் பொழுதாவது அவன் மனத்தில் தேங்கியிருக்குமா ?

இல்லா விட்டால்தான் என்ன? இதைப் போன்ற ஆராய்ச்சிகளில் புது வழிகள் பிறக்கும். அவற்றில் வருங் காலத்தில் எத்தனையோ குழந்தைகள்



கெம்பின்
படை
மருந்து
சருமம் மற்றும் உச்சந்தலைத்தோல்
தொத்து நோய்களுக்கு.
RINGWORM OINTMENT
Kemp & Co. Ltd.
Pharmaceutical Chemists
TRADE MARK
KEMP & CO. LTD.
கெம்ப் & கம்., லிட்.
பம்பாய்-28



OVER THE SEAS
TO DISTANT LANDS SPEED
SCINDIA
CARGO
SERVICES
INDIA-PAKISTAN-U.K. CONTINENT
Calling at: Aden, Port Sudan, Port Said, London, Hull, Middlesbrough, Dundee, Avonmouth, Cardiff, Swansea, Liverpool, Manchester, Glasgow, Belfast, Dublin, Genoa, Marseilles, Le Havre, Boulogne, Dunkirk, Antwerp, Rotterdam, Bremen, Hamburg, Stettin, Gdynia/Gdansk, Helsinki, Kotka, Oslo, Gothenburg, Copenhagen, Stockholm and other ports according to inducement.
INDIA-U.S.A. (ATLANTIC & GULF PORTS)
Ports of Call: Calcutta, Trincomalee, Colombo, Alleppey, Cochin, Aden, Port Said, New York, Philadelphia, Baltimore, Norfolk, Savannah, New Orleans, Mobile, Galveston, Houston, Beirut, Alexandria, D'Jeddah and other Ports according to demands.
GREAT LAKES/EASTERN CANADA-INDIA SERVICE
Subject to inducement, the vessels load at Chicago, Milwaukee, Green Bay, Bay City, Sarnia, Detroit, Toledo, Cleveland, Erie, Buffalo, Toronto, Rochester, Montreal, Quebec for Bombay, Cochin, Madras & Calcutta.
INDIA-U.S.S.R.
Calling at: Black Sea Ports, Latakia, Beirut, Istanbul and other Eastern Mediterranean Ports.
INDIA-U.A.R.
Calling at: Port Suez, Port Said and Alexandria
COASTAL SERVICES
Cargo: India-Pakistan-Burma-Ceylon.
Cargo-cum-Passenger: Bombay-Kutch-Karachi Bombay-Saurashtra Bombay-Marmagoa-Mangalore ports-Cochin.
THE SCINDIA STEAM NAVIGATION COMPANY LIMITED
Scindia House, Ballard Estate, Bombay-1. Telephone 268161 (12 Lines)
Grams: JALANATH (Coastal) SAMUDRAPAR (Overseas)

பிழைக்கும். அவற்றின் தாய்மார்கள் அவனைப் போலக் கண்ணீர் விடாமல் இருப்பார்கள். அதற்கு அவன் அநுபவமும், அவன் முயற்சியும் உதவுமானால்— விழியோரங்களில் கண்ணீர் புறப்பட்டது. எழுத்துக்களின் பார்வை மறைந்து விட்டது. எழுந்திருக்க முடியாமல் உடலைக் கட்டிப் போட்டது போன்ற நேரர் அசதி.

அன்று ஏப்ரல் நான்காம் தேதி. மூன்று வருடங்களுக்கு முன்னால் அவர்கள் குழந்தை தவறிப் போன நாள். அதை அவன் நினைப்பதில்லை. அவளும் ஞாபகம் மூட்டுவதில்லை. ஆனால் அவளால் மறக்க முடிவதில்லை. அவனுள் வேலையில் ஆழ்ந்து விட முடிந்தது. ஆனால் அவள் துயரத்துக்கு அப்படி ஒரு வடிகால் இல்லை. மழைக் காலத்தில் உலராத ஈரத்தைப் போல, அந்த அமைதியும் உணர்ச்சிகளும் குவியரும் தேங்கிய சூழ்நிலையில் அவள் ஆறுதல் காண முடியவில்லை.

அன்று மாலை அவன் சந்தோஷத்தோடு வந்தான். அவள் எதிர்பார்க்கவில்லை; அவளையோ, அந்த மன நிலையையோ, கும்மட்டியின் எதிரே உற்றுப் பார்த்தபடி அசையாமல் உட்கார்ந்திருந்தாள். முகத்தில் ஒளியேற்றும் தணலின் கனப்பு. பாத்திரத்தை நக்குவது போல் வெளியே தனிர் நாக்குகள் எழுப்பும் ஜ்வாலை. படபடவென்று பொறி பறந்தது.

"நீரு! நீரு! உனக்கு ஒரு சந்தோஷமான சமாசாரம். இன்று ஒரு முக்கியமான முடிவைக் கண்டுபிடித்தேன். இன்னும் கொஞ்சம் முயற்சி செய்தால் என்னுடைய ஆராய்ச்சியில் வெற்றி கிடைத்து விடும்."

அருகே உட்கார்ந்து தோளைப் பற்றி அவன் ஏதேதோ பேசிக் கொண்டே போனான். அவள் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தாள். வாய் திறந்து பதில் சொல்லி யிருந்தால் குரல் நடுங்கி யிருக்கும்.

"என்ன கப்சிப்? இன்னைக்கு என்ன சமையல்? ஒரு குட்டி விருந்து. என்ன?"

அவளால் என்ன செய்திருக்க முடியும்? அவன் சந்தோஷத்தைக் கலைக்க அவள் விரும்பவில்லை. அதைப் போல் அவளே அவன் பார்த்து வெகுநாட்களாயிற்று. தன் வேதனை நெஞ்சடியில் நச்சரித்தாலும் அதைக் காட்டிக் கொள்ள இது சமயம் இல்லை.

நல்ல வேளையாக அவன் வெளியே அழைத்துக் கொண்டு போய் விட்டான். அப்படியே எங்கேயோ, அவனுக்குப் பிடித்தமானபடி சாப்பிட்டு வந்தாயிற்று. விளக்கு அணைந்து கும்மிருள் சூழ்ந்த பின்னும் அவன் தூங்கவில்லை. ஏதேதோ பேசிக் கொண்டே யிருந்தான். அந்த மகிழ்ச்சியில் அவனும் தூங்க முடியாது. அவன் அந்த ஆர்வத்தைக் கவனித்துக் கொண்டிருந்தாள். அவன் பேச்சைக் கேட்கும் ஆழ்ந்த கவனத்தை அவளால் அன்று தர முடியாது. அந்தத்துயரம் அவளுள் கனிந்து கொண்டிருந்த போது அவளால் தூங்கவும் முடியாது.

அவள் அவனுக்கு அந்த நாளை நினைவு படுத்தவில்லை.

கடலோரம் நடுநடுங்கும் அலைநுரையில் மிளிரும் சோகம். இரவின் அந்தரங்கத்தில் புல்லிதழ் மேல் வடியும் பனிக் கண்ணீர். மேகத்தை இழுத்து முகத்தை மூடிக் கொண்டு உள்ளே குமுறும் வானம். அவளுடைய ஏக்கமும் அப்படியே இருந்து விடட்டும். அதை அவன் இயற்கையாகவே கருதி விடட்டும்.

ஊரிலிருந்து அவன் தந்தை வந்திருந்தார். ஒரு மாறுதலுக்காக அவளைக் கொஞ்சம் நாள் அழைத்துப் போகலா மென்று உத்தேசம். ராஜன் தடுக்கவில்லை. அவள்தான் போக மறுத்து விட்டாள்.

மூன்று நாட்கள் அவன் அவரிடம் தன் ஆராய்ச்சியைப் பற்றி விவரமாகச் சொல்லிக் கொண்டிருந்தான். அதைத் தவிர வேறு பேச்சே இல்லை. அவன் அப்புறம் தந்தையிடம் அதைப் பற்றிக் கேட்டான்.

"நீங்கள் என்ன நினைக்கிறீர்கள், அப்பா?"

அவர் பதில் சொல்லவில்லை. தலையைக் குனிந்து கொண்டார். பாதத்தில் ஒரு சொட்டுக் கண்ணீர் விழுந்து தெறித்தது.

"அவன் கலியாணம் செய்து கொண்டிருக்க வேண்டாம்!"

அவனுக்குப் பொறுக்க வில்லை. அவர் சொன்ன விதம், அவர் வேதனை அடைந்தது இரண்டுமே. ஆனால் அதை மறுத்துப் பேசக்கூட எண்ணங்களில் வலிமையில்லை.

"அவர் ஆராய்ச்சியைப் பற்றிக் கேட்கிறேன்."

"எனக்குத் தெரிகிறது."

அவர் குரல்தான் கேட்டது. முகத்தைப் பார்க்க முடியவில்லை. அவர் வேதனையை உணர முடிந்தது. ஆனால் அவன் அதைப் பொருட்படுத்த விரும்பவில்லை. தன் முகத்தை ஒட்டிப் போன கன்னக் கதுப்பை, கரு வளையங்கள் விழுந்த கண்களை, நிமிர்ந்து தேர்ந்து விட்ட நெஞ்சக் குழியை, அவர் பாராமல் இருந்திருப்பாரா? அவர் சொல்வானேன்? அவன் தூண்டுவானேன்?

"நான் நன்றாகத்தான் இருக்கிறேன், அப்பா."

அவர் எழுந்து அவளைப் பாராமல் நின்று கொண்டார்; ஜன்னல் வழியே வெளியே பார்ப்பதைப்போல். நெகிழ்ந்து குறுங்கிய தோள்களில், பாராத முகத்தின் விசிப்புத் தெரிந்தது.

"அவர் அதில் தம் உயிரையே வைத்திருக்கிறார்."

"அதனாலேயே நீ உன் உயிரை இழந்து கொண்டிருக்கிறாய். உன் வாழ்வை நீ வாழவில்லை."

"நான் நன்றாகத்தான் இருக்கிறேன், அப்பா!"

ஒரே நேரில் ஓடும் இசைத் தட்டைப் போல, மறுபடியும் மறுபடியும் அந்தப் பதிலைத்தான் சொல்ல முடிந்தது. வேறு சமாதானம் புலப்படவில்லை.

அவன் தந்தையை அனுப்பி வைப்பதற்குக்கூட ராஜன் வரவில்லை. வெளி நாட்டிலிருந்து ஒரு புகழ்பெற்ற டாக்டர் வந்திருந்தார். அவர் ராஜனின் ஆராய்ச்சியை மதிப்பிட்டு மற்ற நாடுகளில் அவன் முடிவுகளைப் பயன்படுத்துவதைப் பற்றி ஆலோசிக்க வந்திருந்தார் என்று ராஜன் சொல்லிக் கொண்டான்.



மூன்று நாட்களாக அவன் வீட்டுக்கு வரவில்லை. எதிர் வீட்டுக்கு 'போன்' வரும். அதிலிருந்து அவன் வரவில்லை என்று ஒவ்வொரு நாளுமே தெரிந்து கொள்வாள். அவ்வளவுதான்.

அன்று இரவும் அவன் வரவில்லை. சேர்ந்தாற்போல அப்படி அவன் விலகியிருந்து அவள் பார்த்ததில்லை. என்ன ஆயிற்று? வெளிநாட்டிலிருந்து வந்தவர் ஏதாவது பாதகமாகச் சொல்லிவிட்டாரோ? அவனுடைய ஏமாற்றம்தான் அவனை அப்படித் தனியே இருத்தி விட்டதோ? அப்படி இருந்தால், அவளுக்கு அங்கே வந்துதான் என்ன பயன்? அவளால் அவனுக்கு என்ன ஆறுதல் தர முடியும்?

இரவு முழுவதும் காற்றும் மழையும் சீறிக் கொண்டிருந்தன. வானத்துக்கும் நிம்மதி இல்லை; அவள் மனத்தைப்போல.

விடியற்காலை நேரம். சவான்ஸ் தம் அறையில் உட்கார்ந்திருந்தார்; ஜன்னல்வழியே விடியற்காலையின் அழகை ரசித்துக் கொண்டு. ராஜன் விரல் நுனியால் கதவைத் தட்டிவிட்டு உள்ளே வந்தான்.

உட்கார்ந்து சிறிது நேரம் இருவரும் பேசவில்லை. வெளியே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தவர் சட்டென்று மேஜையின் குறுக்கே வேகமாக ராஜுவிடம் கையை நீட்டினார்.

'' கங்கிராஜுலேஷன்ஸ், ராஜன்! நீங்கள் செய்திருக்கும் ஆராய்ச்சி மிகவும் பாராட்டத் தக்கது.''

''எல்லாம் மற்றவர்கள் கொடுத்த உதவியினால்தான்.''

''நோ! நோ! உங்கள் சோதனைகளிலும் ஒரு தனித் தன்மை இருக்கிறது. இந்த முறையில் இந்த முக்கியமான ஆராய்ச்சியை யாரும் செய்ததில்லை... இந்த ஆண்டுக் கடைசியில் வரும் உலக மகாநாட்டுக்கு உங்கள் பேப்பரைச் சிபாரிசு செய்யப் போகிறேன்'' என்று ஒரு சிகரெட்டை எடுத்துப் புறங்கையில் தட்டிக் கொண்டார் சவான்ஸ்.

ராஜன் ஜன்னல் வழியே வெளியே பார்த்தான். வைகறையின் வெளுத்த வானம். எட்டிப் பறக்கும் புள்ளினங்கள் இதமாய் உடலைக் கழுவும் காலை இளங் காற்று. அவனுக்கும் அது ஒரு விடியற்காலை. புது வாழ்வுக்கு ஒரு சூரியன் அங்கே எழுந்து கொண்டிருந்தது.

சவான்ஸ் அவசரமாய்ப் புகையை இரண்டு இழுப்பு இழுத்து நிறுத்தினார். ''ராஜன்! இந்தக் குறிப்பிட்ட ஆராய்ச்சியில் உங்களுக்கு எப்படிப் பற்று விழுந்தது? நான் தெரிந்து கொள்ளலாமா?''

ராஜன் மேஜையின் மேல் கையை ஊன்றிக் குனிந்து கொண்டான். கண்ணாடித் தகட்டில் அவன் முகம் தெரிந்தது. தன்னுள் ஏதோ தேட முயலுவது போல ஒரு கணம் மௌனமாக இருந்தான். புற இதழுள் அக இதழ். அவர்களுடைய பிழைக்காத குழந்தை. அந்தத் துயரை அவன் நீருவிடம்கூடப் பகிர்ந்து கொண்டதில்லை. இப்போது இவர் கேட்கிறார். என்ன சொல்ல?

''டாக்டர். நான் என் குழந்தையை அப்படி இழந்தவன்.''

அவர் பார்வை அவன்மேல் திரும்பிற்று. முகம் இறுகிக் கண்கள் கூரி முனைகளாய்ச் சிறுத்தன.

''என்ன? உங்களுக்குக் கல்யாணமாகி விட்டதா?''

''ஏன் அப்படிக் கேட்கிறீர்கள்?''

''டாக்டர் ஜெஸ் சொன்னார், நீங்கள் இந்த மூன்று வருஷங்களாய் இந்த ஆராய்ச்சியைத் தவிர வேறு எதையுமே கவனித்ததில்லை என்று. வீட்டுக்குப் போவதே அபூர்வம் என்று. அங்கேயும் ஏதோ படிக்கிறீர்கள், டைப் செய்கிறீர்கள் என்று.''


''வீட்டில் எனக்கு உதவி செய்தவள் என் மனைவி, டாக்டர்!''

அவர் சிகரெட்டை நசுக்கிவிட்டு இன்னொன்றைப் பற்ற வைத்துக் கொண்டார். அவனோடு பேசவில்லை. உரத்த சிந்தனை முகத்தில், நெற்றிச் சுருக்கலில், நிழலிட்டது.

''ராஜன்! உங்கள் மன வேதனைக்கு மாற்றாய் ஓர் ஆராய்ச்சி கிடைத்தது. உங்கள் முயற்சி வீணாகவில்லை. இன்று அந்த வெற்றியில் உங்களுக்கு மகிழ்ச்சியும் தோன்றியிருக்கிறது. ஆனால் குழந்தையை இழந்த தாய்க்கு என்ன கிடைத்தது? மூன்று வருஷங்களுக்கு மேலாய் அவள் அநுபவித்தது என்ன? அந்தப் பெண்ணின் மனத் துடிப்பை நீங்கள் எப்போதாவது நின்று கவனித்திருக்கிறீர்களா? நீங்கள் இதைத் தவிர வேறு எதையுமே நினைக்கவில்லை. அவள் எதை நினைத்தாள் என்று உங்களுக்குத் தெரியாது. அவள் மௌனமாய்த் தன் உதவியை, தன் பணியை உங்களுக்கு அர்ப்பணித்திருக்கிறாள். இந்தியப் பெண்களின் பெருமையை என்றும் வியக்காமல் இருக்க முடியவில்லை.''

சிகரெட்டை எறிந்து விட்டுக் கையைக் கோத்துக் கொண்டு அவர் நாற்காலியில் சாய்ந்தார்.

அவனால் அவரை நிமிர்ந்து பார்க்க முடியவில்லை. அவன் கண் முன் அவர் உருவமும் அந்த அறையும் மறைந்து போயிற்று. கழுத்து வரை வெள்ளைத் துப்பட்டி மூடிய நீருவின் உருவம்; குழந்தையை இழந்த தாயின் மயக்க நிலை. அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் அவனுக்கு உதவி செய்ய முன் வந்த மனைவி; அவனுடைய அறையை ஒழுங்குபடுத்தும் அவள் முனைப்பு. இரவு கண் விழித்து விட்டு வீடு திரும்பி அவன் அயர்ந்து தூங்குகிறான்: அவளிடம் பேசக்கூட இல்லை: கண் விழித்தபோது அவன் எழுதி வைத்ததை சுத்தமாய் டைப் செய்யப்பட்டு அடுக்கியிருக்கிறது.



நீரு நன்றாகப் பாடுவாள். வீணையுடன் அவள் குரல் இழைந்து பாடுவது அழகாக இருக்கும். அவன் நெஞ்சைக்கூட அது தொட்டிருக்கிறது. இப்போது அவள் பாடி வெகு நாட்களாயிற்று. அவள் வாழ்க்கையிலேயே இசை இல்லையோ?

சவான்ஸ் எழுந்து வந்து அவன் தோள் மேல் கையை வைத்தார்.

''எழுந்திருங்கள் ராஜன்! வீட்டுக்குப் போய் முதலில் உங்கள் மனைவியிடம் இந்தச் சந்தோஷச் செய்தியைச் சொல்லுங்கள். பிறகுதான் மற்றவர்கள். பிறர் உங்களுக்குத் துணை நின்றதாகச் சொன்னீர்கள். அதை நான் ஒப்புக் கொள்ளவில்லை. ஆனால் இதைச் சொல்கிறேன். உங்கள் மனைவியின் துணைதான் உங்களைத் தாங்கி நிறுத்தியிருக்கிறது. அவள்தான் உங்கள் வெற்றியின் வேராக நின்றிருக்கிறாள். முதலில் உங்கள் மனைவியிடம் போய் உங்கள் பாராட்டுதலைச் சொல்லுங்கள்!''

வீடு திரும்பியபோது நன்றாக விடிந்து விட்டது. வாசலில் பளிச்சென்ற கோலம். முன்புறம் யாரும் இல்லை. பக்கத்தில் பூஜை அறை. கம்மென்று ஒரு மணம் புகையின்றிக் கமழ்ந்தது. உள்ளே அடியெடுத்து வைக்க நினைத்தவன் அப்படியே வெளியே நின்றான். மாடத்தின் முன், காற்றிலாத நிலையில் ஆடாது நிற்கும் கற்பூரக் கொழுந்தென, அவள் அசையாது உட்கார்ந்திருந்தாள்.

அவன் பேரிட்டு அழைக்கவில்லை. குரல்கூடக் கொடுக்கவில்லை. எழுச்சி என்னமாயினும் எண்ணங்கள் வார்த்தைகளாய்ப் பிறக்கவில்லை. அவன் உதடுகள் துடித்தன. உதடுகள் அல்ல. இதயம்தானே?

தலை முதல் கால் வரை அவள் உருவத்தைக் கவனித்தான். நெருப்பில் விழுந்த பொன்னும், தன் கடமையில் தன்னையே புடமிட்டுக் கொண்டு —

அவன் ஏன் அத்தனை நாட்களாய் அவள் சிதைவைக் கவனிக்கக்கூட இல்லை?— வெய்யிலில் போட்ட பூச்சரமாய் அவள் இப்படி —

சட்டென்று அவள் கண் விழித்தாள். அவன் முக மலர்ச்சியின் எதிரொலியாய் அவள் முகம் மலர்ந்தது. கையில் கற்பூரத் தட்டுடன் எழுந்து வந்தவள் காலடி அவனை நெருங்கிக் கொண்டிருக்கிறது......

அவன் சொல்ல வேண்டாம். அவள் புரிந்து கொள்வாள். அவள் கேட்க வேண்டாம். அவனாலும் இதயத்தைத் திறந்து காட்ட முடியும்.

அது போதும்!


இலேசான
மற்றும்
சிரமமின்றி
உபயோகிக்கத்தக்க
பிரைட்
பிளாஸ்டிக்
சாமான்கள்
பிரைட் பிளாஸ்டிக் சாமான்கள் நேர்த்தியான மற்றும் நவ
நாகரீக முறையில் வாழ்க்கையை அனுபவிப்பதற்கு என்றே
உருவாக்கப்பட்டிருக்கின்றன. அவை எவ்வளவு பயனுடைய
வையோ அவ்வளவு பிரகாசமானவை...எவ்வளவு உபயோக
மானவையோ அவ்வளவு கவர்ச்சிகரமானவை. உங்களுடைய
தினசரி வேலைகளை உல்லாசமான மற்றும் வண்ண சூழ்நிலையில்
முடிக்க அவை மிகவும் சாத்தியமாக்குகின்றன...இது மட்டு
மல்ல, உங்கள் வீட்டிற்குத் தேவையான உபகரணங்களைத்
தேர்ந்தெடுப்பதில் உங்களுக்குள்ள ருசிக்காக நீங்கள்
பாராட்டுதலையும் பெறுவீர்கள். நாள் முழுதும் மற்றும்
பிரதிதினமும் உங்களுடைய வாழ்க்கையை சிரமமின்றி
யதாக்கவும், மகிழ்ச்சிகரமாக்கவும் பிரைட் பிளாஸ்டிக்
சாமான்கள் உங்கள் நம்பிக்கைக்கு பாத்திரமானவை
யாக. பல ரகங்களில் உங்களுக்கென தேர்ந்தெடுத்த
விருப்பமான நிறங்களில் சேமிக்கும் தயாரிப்
புக்கள் கிடைக்கின்றன! எல்லா முதல்தரமான ஸ்டோர்
களிலும் கிடைக்கின்றன!
பிரைட் பிரதர்ஸ் பிரைவேட் லிட்.,
156-A, தார்தேவ் ரோடு, பம்பாய்-34
பிரைட்தான்
உங்கள் சரியான
தேர்ந்தெடுப்பு!
BB,G, 80, TAM

மாப்பிள்ளை விஜயம்!

எஸ்.பத்மாவதி

"வாங்கோ...! வாங்கோ... சம்பந்தி சார்! வாருங்கள் சம்பந்தியம்மா.......அடியே மங்களம்! சீக்கிரம் வா...எல்லோரும் வந்தாச்சு... ஆரத்தி கொண்டு வா....விஜயா எங்கே போயிட்டா...? ஆமாம்...மாப்பிள்ளை எங்கே...?"—பெண் விஜயாவின் அப்பா சாமிநாதன் சம்பந்தி கிருஷ்ணமூர்த்தி அய்யரிடம் விசாரித்தார்.

கிருஷ்ணமூர்த்தி அய்யரின் கடுகடுத்த முகம் இப்போழுது மலர்ந்தது. "என்ன! பாலகிருஷ்ணன் இங்கு வரவில்லையா? முந்தாநாளே இங்கே வந்திருக்க வேண்டுமே...?" என்றார்.

இதுவரை அவர் முகம் கடுகடுப்பாக இருந்ததற்குக் காரணம் தம் பிள்ளை தம் உத்தரவை மீறி இருதினங்கள் முன்பாகவே தம் மாமனார் வீட்டுக்குக் கிளம்பிவிட்டான் என்ற எண்ணம்தான். அவனுக்கும், விஜயாவுக்கும் கலியாணமாகி ஒரு மாதம்தான் இருக்கும். இது அவர்கள் தலை தீபாவளி.

சம்பந்தி உபசாரம் பலமாக நடந்தது. சிறிது நேரம் கழித்துச் சம்பந்தி அம்மாள் சாரதாம்பாள் தன் கண்களில் தன் மருமகள் விஜயா தென்படாததைப் பற்றி விசாரிக்க, விஜயாவின் அம்மாள் மங்களம் தாழ்ந்த குரலில் விஜயா உள்ளூரிலேயே இருக்கும் தன் அத்தை வீட்டுக்குச் சென்றிருப்பதாயும் இன்னும் சிறிது நேரத்தில் தன் அத்தையுடன் திரும்பிவருவாள் என்றும் தெரிவித்தாள்.

ஆனால் உண்மை என்னவென்றால் புது மணத் தம்பதிகளான விஜயாவும், பாலுவும் அந்தச் சமயத்தில் அந்த ஊரில் ஓடிக்கொண்டிருந்த ஒரு சினிமாக் கொட்டகையில் உட்கார்ந்து படத்தைப் பார்க்காமல் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டிருந்தனர்!

பாலு இரு தினங்கள் முன்பாகவே வந்துவிட்டான். தற்சமயம் தீபாவளிச் சீருடன் விஜயாவைப் புக்ககத்துக்கு அனுப்புவதாகக் கேட்டிருந்த தனிச் சீர் வகைகளை விஜயாவின் அப்பாவினால் செய்ய முடியாத காரணத்தால், விஜயாவின் புக்கக விஜயம் மூன்று மாதங்களுக்குக் கருணையற்ற கிருஷ்ணமூர்த்தி தம்பதிகளால் தள்ளி வைக்கப்பட்டு விட்டது.

இரவு பலமான விருந்து. "சாப்பாட்டுக்குப் பிறகு வழக்கம்போலச் சீக்கிரம் படுக்கச் சென்று விடுவார் அப்பா. நாங்கள் சினிமாவிலிருந்து வந்து சந்தடி செய்யாமல்உள்ளே நுழைந்துவிடுவோம். காலையில் அப்பா எழுந்திருக்கும்போது இரவு வந்த ரயிலில் நான் வந்ததாகத் தெரிவித்து விடுகிறேன்" என்று மாப்பிள்ளை பாலு வகுத்துத் தந்த திட்டத்துக்கு மாமனார் சாமிநாதனும் தலையாட்டி விட்டார்.

சாப்பாட்டுக்குப் பிறகு சீக்கிரம் படுக்கச் சென்ற கிருஷ்ணமூர்த்தி அய்யர் போன சுருக்கில் மாடியிலிருந்து இறங்கி வந்து வழக்கத்துக்கு விரோதமாக வீதி வராந்தாவில் சாய்வு நாற்காலியை இழுத்துப் போட்டுச் சாய்ந்ததும், சாமிநாதய்யர் பதை பதைத்து விட்டார்.

சிறிது நேரத்தில் குறட்டைச் சப்தம் பலமாகக் கேட்டது. அத்துடன் ஒரு நிம்மதிப் பெருமூச்சும் தொடர்ந்து கேட்டது. அப்போது வீதியில் ஓசைப்படாமல் ஒரு டாக்சி வந்து நின்றது. ஜோடிப் புறுக்கள் இறங்கிச் சத்தம் செய்யாமல் கதவினருகில் ஒட்டி நின்றனர்.

இருட்டில் இருவரும் ஒருவர் கையை ஒருவர் பற்றிக் கொண்டு உள்ளே நுழைந்தனர்.

"ரொம்ப தாங்க்ஸ் மாமா!" என்ற பாலுவின் குரலைத் தொடர்ந்து "உங்களுக்கு ரொம்பச் சிரமம் அப்பா...! அவாள்ளாம் வந்தாச்சா?" என்று தாழ்ந்த குரலில் விஜயா விசாரித்தாள்.

"உஷ்...! சப்தம் போடாதீர்கள். சம்பந்தி அதோ அங்கு தூங்குகிறார்" என்று அடித் தொண்டையில் பதில் வந்தது.

இருவரும் பதைபதைத்து ஒருவர் கையை மற்றொருவர் கெட்டியாகப் பற்றிக் கொண்டனர்.

காலையில் மங்கள ஸ்நானம் செய்யப் பாலு எழுந்து வந்தபோது தன் தகப்பனார் ஹாலில் புதுசு உடுத்தி அமர்ந்திருப்பதைப் பார்த்து "ராத்திரி ரயில் ரொம்பலேட்டா வந்ததுப்பா..." என்று அசட்டுச் சிரிப்புடன் சொன்னான்.

"சரி, சரி! ரயில் லேட்டாக வரும் என்று தெரிந்துதான் உன் பெட்டியை முன்னே பிளேனில் அனுப்பிவிட்டாயா?"

"என்னது... என் பெட்டியா...? பிளேனிலா...?" பாலு தடுமாறினான்.


"ஆமாண்டா. நான் ஊரிலிருந்து வந்ததுமே உன் பெட்டியைப் பார்த்தேன். ஆனால் உன்னை இப்போதான் நன்றாகப் பார்க்கிறேன். ராத்திரி இருட்டில் முகம் சரியாகத் தெரியவில்லே."

"அப்படியென்றும் இரவு கதவைத் திறந்தது யார்..?"

அப்பொழுது முன் இரவு கேட்ட குறட்டை ஒலி பாலுவின் காதில் விழவும், அவன் எட்டி வாசல் வராந்தாவைப் பார்க்க, அங்கு, இரவு இருட்டில் தான் பார்த்த அதே இடத்தில் தன் தகப்பனார் என்று எண்ணிக்கொண்டிருந்த உருவம் மாமனாராக மாறி இன்னும் சுகமாக நித்திரையில் ஆழ்ந்திருப்பது தெரிந்தது.

"சம்பந்தி சார் எழுந்திருங்கோ! மாப்பிள்ளை பெண்ணை மங்கள ஸ்நானம் செய்விக்க வேண்டாமா?" என்று தன் மாமனாரைத் தன் அப்பா எழுப்புவதைப் பார்த்துப் பாலு திகைத்து நின்றான்.

எழுந்து கண்களைக் கசக்கிக் கொண்ட சாமிநாதய்யரைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே பாலுவின் தகப்பனார், "என்ன சம்பந்தி சார்! நாளைக்குப் பெண்ணை மாப்பிள்ளையுடன் ஊருக்கு அனுப்பிவிட்டு நிம்மதியாத் தூங்கலாம்" என்றார். பிறகு பாலு பக்கம் திரும்பி, "ஏண்டா நிக்கறே? போய் விஜயா கிட்டே சொல்லு, நாளைக்கு நம்மோடு ஊருக்குக் கிளம்பத் தயாராக இருக்கணும்னு..." என்று கூறிக்கொண்டே நகர்ந்த தன் தகப்பனாரைப் பார்த்துப் பூச்சிரிப்புச் சிரித்தான் பிள்ளை பாலு!





அநாயாசமாய் சவாரி செய்ய உகந்தது பி.எஸ்.ஏ. BSA

பிரபலமிக்க பி.எஸ்.ஏ.—இலேசானது, உறுதியானது, துரிதமாகச் செல்லவல்லது—அது திரும்பவும் வந்துள்ளது. உற்சாகமான இளைஞர்கள் அநாயாசமாக சைக்கிள் ஓட்டும் மகிழ்ச்சியை மீண்டும் பெற, பி.எஸ்.ஏ. இப்போது இந்தியாவிலேயே தயாராகிறது. அமைப்பு அழகுக்கும் அயராத சேவைக்கும் உலகப் புகழ் பெற்றது பி. எஸ். ஏ. உலகில் இப்பகுதியில் சிறந்த சைக்கிள்களைத் தயாரித்து வருபவர்களால் இப்போது பி. எஸ். ஏ. சைக்கிள் அதன் உயர்ந்த தரத்திற்கேற்பத் தயாரிக்கப்படுகிறது.

தயாரிப்போர்: டி ஐ சைக்கிள்ஸ் ஆப் இந்தியா, அம்பத்தூர், மதராஸ் 53.
உரிமையாளர்கள்:
ட்யூப் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் ஆப் இந்தியா லிமிடெட், மதராஸ்.

சிறந்த சைக்கிள் வேண்டுமா?
பி.எஸ்.ஏ.வைத் தேர்ந்தெடுங்கள்



பி. எஸ். ஏ. உங்கள் மனைக்குரிய
உயர்ந்த சைக்கிள்



கனவுக்குப் பின்

கு. வேங்கடரமணி

பொழுது ஏறிக் கொண்டிருந்தது. வெயில் 'சுள்'ளென்று அடித்தது. 'நாழி யாச்சு' என்று சொல்லிக் கொண்டே இடுப்பளவு நீரில் நின்ற படியே தலையைத் துவட்டிக் கொண்டான் சுப்புணி.

குனியும்போது அவனுடைய உருவத்தின் பிரதிபலிப்பு நீர்ப்பரப்பில் அலைவதைக் கண்டான். சின்ன அலைகள் ஓய்ந்ததும் உருவம் நிலைத்து நின்றது. 'அடடா! கிராப்பை நாளைக்கே வெட்டிக் கொண்டு விடணும். தலை மயிர் ரொம்ப வளர்ந்து போச்சு.'

நிழலோடு பேசத் தொடங்கியவனுக்கு மீண்டும் நாழியாகிவிட்ட நினைவு வந்தது. துண்டைப் பிழிந்துகொண்டு கரையேறினான் சுப்புணி.

''யாருடா அது சுப்புணியா?''

பெரிய குரலும் மெலிந்த உடலுமாக ராமண்ணா வந்தார்.

''நான்தான் அண்ணா!''

சுப்புணி அவசரமாகக் கிளம்பினான். ராமண்ணாவிடம் சிக்கினால், பேச்சுக்குப் பிடித்துக்கொண்டுவிடுவாரே என்ற பயம் அவனுக்கு. படித்துறை மூலையில் தாமரை இலைகளால் கட்டி வைத்திருந்த பொட்டலத்தை எடுத்துக் கொண்டு கிளம்பினான்.

ஆனால் ராமண்ணாவிடமா அவன் தன்னுடைய வேலையைக் காட்ட முடியும்?

''அது என்னடா, சுப்புணி?''

கேள்வியைக் கொக்கியாகப் போட்டு வளைத்தார் அவர்.

''ஒன்னுமில்லே அண்ணா. வந்து.... தாமரைப் பூ.''

''அடி சக்கை! கோவில் கைங்கர்யமா? இல்லே சொந்தத்திலே பூஜை, பஜனை என்று ஏதாவது ஆரம்பிச்சுட்டியா?''

''அதெல்லாம் இல்லே, அண்ணா!''

''உனக்கு அதுக்கெல்லாம் வயசாகல்லியே. இன்னும் கலியாணமே நடக்கலியேடா'' என்றார் சிரித்தபடியே.

''எனக்கு இல்லே. உஷா வேணும்னு கேட்டாள். அதுதான் பறித்துக் கொண்டு போறேன்.''

''உஷாவா?''

''அவள்தான் அண்ணா. பட்டாபியோட அண்ணா பெண்!''

''ஓ! பம்பாயிலே இருந்து வந்திருக்காளே அந்தப் பெண்ணா? அவள் பேர் உஷாவா? பட்டாபி கூடச் சொன்னான். நல்ல வரனாகப் பார்த்துச் சொல்லுங்கோ, இந்த வருஷம் கல்யாணம் பண்ணணும்னு. இருபது வயசு இருக்குமோடா அவளுக்கு?''

''இருக்கும். நிச்சயமாத் தெரியல்லே.''

''அவளுக்கு எதுக்குடா இந்தப் பூ? சுப்புணி, சும்மா போய் சொல்லாதே! அந்தப் பெண் காலேஜிலே படிச்சிருக்காளாம். பார்க்கிறதுக்கு 'சினிமா ஸ்டார்' மாதிரி இருக்கா. தாமரைப் பூவை வச்சிண்டு அவள் என்னடா பண்ணுவாள்?''

''அதெல்லாம் எனக்குத் தெரியாது, அண்ணா! ஏதோ வேணும்னு கேட்டாள். கொண்டு போய்க் கொடுக்கிறேன். நாழியாச்சு. நான் வரட்டுமா...?''



குளத்தங்கரைச் சரிவிலே இறங்கிப் பிள்ளையார் கோவிலைச் சுற்றிக் கொண்டு நடந்தான் சப்புணி.

ராமண்ணனுக்கு இன்றைக்கு வேலை எதுவும் இல்லை போலிருக்கிறது. இருந்தால் பொழுது விடியும்போதே ஸ்நானத்தை முடித்துக் கொண்டு விபூதிப் பட்டையும், தர்ப்பைக் கட்டுமாகக் கிளம்பிவிடுவார். வைதீகக் காரியம் இல்லாமல் அவர் வீட்டோடு இருக்கிற நாளில் அவரிடம் வாயைக் கொடுக்கிறவன் மணிக் கணக்கில் மீண்டு வர முடியாது.

'நல்லவேளை! நான் இன்றைக்குத் தப்பிவிட்டேன்' என்று நடையை எட்டிப் போட்டான் சப்புணி. கூடவே அவனுக்குச் சிரிப்பும் வந்தது.

'உஷா சினிமாக்காரி மாதிரி அழகாய் இருக்காளாமே!'

அவர் நிறையச் சினிமாவெல்லாம் பார்த்திருப்பார். மாதத்தில் இருபது நாட்களுக்குமேல் ராமண்ணனுக்கு வீட்டுச் சாப்பாடு இல்லை. வெளியூர்ப் பிரயாணந்தான்.

சப்புணியும்தான் அடிக்கடி டவுனுக்குப் போகிறான். பட்டாமி வீட்டு வேலையாய் மாயூரம் போகிற சந்தர்ப்பம் அவனுக்கு நிறைய உண்டு. சைக்கிள், பஸ், வில் வண்டி எப்பொழுது எது கிடைக்குமோ அதில் பிரயாணம். எப்படிப் போனாலும் வேலை முடிந்ததும் உடனே அவன் திரும்பியாக வேண்டும். அதோடு அதற்கெல்லாம் காசு வேறே செலவாகுமே!

பள்ளிக்கூடத்தைத் தாண்டி முச்சந்திப் புளிய மரத்தை நெருங்கி விட்டான் சப்புணி.

'டேய் சப்புணி!' என்ற அழைப்புக் குரல் கேட்டது.

பட்டாமணியத்தின் கடைக்குட்டி சேது அலட்சிய நடை போட்டு வாய் கொள்ளாமல் வெற்றிலையைக் குதப்பிக் கொண்டு வந்தான். நெஞ்சில் புரளும் டாலர் சங்கிலி. சன்ன மீசை. மூன்று வருஷங்கள் வெளியூரில் படித்துவிட்டு வந்தவன். வந்தது முதல் உடம்பு இளைக்காமல் ஊரைச் சுற்றிக் கொண்டிருக்கிறதே வேலை.

''நாழியாச்சு உடனே போகணும்'' என்று சப்புணி மனசுக்குள் நினைத்துக் கொண்டதோடு சரி. ஆனால் வாயைத் திறக்கவில்லை.

சேதுவுக்கு இருபத்து நான்கு வயசு இருக்கும். சப்புணியைவிட ஒரு வயது சின்னவன்.

''என்ன சப்புணி உபாசனை பலமாய் நடக்கிறதோ?''


''உபாஸனையா?''

''அதுதான்டா. பத்து நாட்களாய் நிற்கநேரம் இல்லாமெ ஓடிண்டிருக்கியே! என்ன இருந்தாலும் 'தேவி' அற்புதமான அழகுதான்டா. ஊரே இப்போ பிரமாதமாகக் களை கட்டி இருக்குடா சப்புணி!''

''நீ என்ன சொல்றே எனக்குப் புரியலையே?''

நேரமாகிறதே என்ற தவிப்பில் தாமரைப் பூப் பொட்டலத்தை ஒரு கையிலிருந்து மற்றொன்றுக்கு மாற்றிக்கொண்டான் சப்புணி.

''என்னடா ஒன்னும் தெரியாதவன் மாதிரி எனக்கே வந்து காது குத்தறே?



அப்பா: **ஊரிலிருந்து உன் பெண்டாட்டி தலை தீபாவளிக்காக வந்து மாடியிலே இருக்கா! இந்தா, பட்சணத்தைக் கொண்டுபோய்க் கொடு!**

பிள்ளை: **போப்பா! எனக்கு வெட்கமா இருக்கு. நீயே கொண்டுபோய்க் கொடு!**

நிஜமாய்க் கேக்கறேன். அந்தப் பம்பாய்க் காரி அப்ஸரஸ் மாதிரின்னு இருக்கா? நீ கொடுத்து வச்சவன்தான்டா சப்புணி. உன்கிட்டே சாதாரணமாய்ப் பேசுவாடா? நேத்திக்குப் பார்த்தேன். சாஞ்சுண்டு தெருவைப் பார்த்தபடி நிற்கிறாள்...''

''அதெல்லாம் என்னைக் கேட்டால் எனக்கு என்ன தெரியும்?''

''உனக்கு ஒன்னுமே தெரியாதா? 'அசட்டுச் சப்புணி'ன்னு உனக்குப் பேர் வைச்சிருக்கிறது ரொம்பப் பொருத்தம் தான். அதுக்கெல்லாம் நல்ல ரஸனை வேணும்டா.''

சேது பெருமூச்சு விட்டான்.

'ரஸனை' என்றால் என்னவென்று கேட்டுத் தெரிந்து கொள்ள முயற்சி செய்யவில்லை சப்புணி. அதெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தால் இன்னும் நேரமாகி விடும் என்கிற பயம் அவனுக்கு!

''அப்புறம் பேசிக்கலாம் சேது! நான் வரேன்.''

''ஒரு விஷயம் மட்டும் சொல்லிட்டுப் போடா. அவள் பேரென்னடா?''

''உஷா!''

''பிரமாதம். இன்னும் எத்தனை நாளைக்கு இங்கே இருக்கப் போறாளாம்?''

''நிச்சயமாய்த் தெரியாது. ஒரு மாசம் இருக்கலாம். நான் வரேன். எனக்கு நாழியாச்சு.''

சப்புணி தெருவுக்குள் நுழைந்தான். நடையின் வேகத்தில் அவன் யாரையுமே கவனிக்கவில்லை.

''அத்தான்! ரொம்ப அவசரமோ? ஒரு நிமிஷம் நில்லுங்களேன்.''

குரல் கேட்டுத் திரும்பினான்.

தங்கம் இடுப்பில் குடத்துடன் தண்ணீர் எடுக்கப் புறப்பட்டவள் தெருப் படியில் நின்றபடி அழைத்தாள்.

''நீதான் பாக்கி. சீக்கிரமாச் சேதியைச் சொல்லு.''

''ரொம்ப அவசரமாப் போகணும்னு போயிட்டு வாங்களேன். ஈரத் துணியைக் கூட இன்னும் மாத்திக்கலியே?''

''அதுக்குத்தானு கூப்பிட்டே? அது எனக்குத் தெரியாதாக்கும்?''

''இல்லே அத்தான் வந்து...''

சட்டென்று வாடிப் போன தங்கத்தின் முகத்தில் தயக்கமும் சேர்ந்து கொண்டது.

''இன்னொரு தடவை வர எனக்கு ஒழியாது. என்ன விஷயம் இப்பவே சொல்லிப்பிடு.''

சப்புணி படியேறி, பூப் பொட்டலத்தை மெதுவாகத் திண்ணையில் வைத்தான்.

''அம்மாவுக்கு உடம்பு சரியில்லே.''

''மாமிக்கா? என்ன உடம்பு?''

''ராத்திரியிலேருந்து ஜுரம். ஆகாரமே எதுவும் சாப்பிடல்லே.''

மாமியின் உடம்பு என்றைக்குத்தான் சரியாக இருந்திருக்கிறது? ஒன்று மாற்றி ஒன்றும், ஏதாவது வியாதி; படுக்கை.

''வைத்தியரைக் கூப்பிட்டுக் காட்டினையா இல்லையா?''

''உம்..'' தங்கம் தலையசைத்தாள்.

''அப்புறம் என்ன? ரெண்டு நாளைக்கு மருந்து சாப்பிட்டால் சரியாப் போயிடறது!''

''சித்த உள்ளே வந்து எட்டிப் பார்த்துட்டுப் போங்களேன் அத்தான். அம்மா உங்களைப் பார்க்கணும்னு சொல்லிண்டே இருக்கா. பத்து நாளாய் நீங்களும் இந்தப் பக்கம் வரவேயில்லே.''

''வேலை இல்லாமெ ஒழிஞ்சிருந்தா தினம் வரலாம்.''

சப்புணி உள்ளே சென்றான். அவனுக்கு முன்னால் ஓடிப் போய் 'அம்மா! அத்தான் வந்திருக்கார்' என்று அறிவிப்புக் கொடுத்தாள் தங்கம்.

''சப்புணியா? வாப்பா!''

மாமி மெள்ளத் தலையைத் தூக்கி அவன் பக்கம் திரும்பினாள்.

வீட்டின் கூடத்தில் இரண்டு அங்கணங்கள்தான் பாக்கி. பின்புறமெல்லாம் ஒரு வருஷத்துக்குக் கொஞ்சமாக, ஒவ்வொரு மழைக் காலத்திலும் விழுந்து விட்டன. மாமா இருந்த போது பூரணமாய், சுவர் நிறையப் படங்களோடு இருந்த வீடுதான். ஊஞ்சல் இருந்த உத்தரம் இப்பொழுது திறந்தவெளியில் ஒருக்களித்து நின்றது.

அந்த ஊஞ்சலில் இந்தக் கோடிக்கும் அந்தக் கோடிக்குமாக ஆடியிருக்கிறான் சப்புணி. போட்டிக்கு வந்த தங்கத்தை எத்தனையோ தடவைகள் கீழே தள்ளி அழ வைத்திருக்கிறானே!


''என்ன மாமி ஜுரமா அடிக்கிறது?'' நின்றபடியே அவசரமாய் விசாரித்தான் சப்புணி.

''நிற்கிறியேடா குழந்தை. உட்காரேன்.''

''இருக்கட்டும். பரவாயில்லே.''

''ஏதோ ஜுரம்னு ஒரு காரணம். படுத்தாட்டேன். எனக்கு என்னமோ பயமா இருக்கு இந்தத் தடவை. இவள் ஒருத்தி மலையாய் வளர்ந்து நிற்கிறாளே, அந்தக் கவலைதான். இல்லாட்டா நிம்மதியாப் போயிடுவேன்.....''

தங்கம் தூண் மறைவில் பதுங்கினாள். தூணுக்குப் பின்னாலிருந்து விம்மல் ஒலி கேட்கிறது.


...whatever your needs—whether you're a beginner and all at sea, an advanced amateur aspiring toward even higher things, or the professional keeping up-to-date with the newest developments in the photographic field. APL offers you a wide choice of photographic materials and equipment
APL Equipment and Accessories
* Gevaert Films and Papers
* KB Equipment and Accessories
* Johnsons Chemicals
* Gevabox and Sureflex Cameras.
you can count on APL
APL
The widest range of indigenous photographic equipment and accessories
ALLIED PHOTOGRAPHICS LIMITED
Kasturi Building, Jamshedji Tata Road, Bombay 1
SHBI-APL 27

'அதெல்லாம் ஒன்னும் ஆயிடாது. நீ வீணாக் கவலைப்படாதே மாமி!''

''எப்படிக் கவலைப்படாமெ இருக்க முடியும்? உன் அப்பா, 'தாயில்லாப் பிள்ளே. நீ பார்த்துக்கோன்'னு சொல்லிப்பிட்டுப் போனுர். எனக்கு என்ன பட்டாவா, மிராசா? எப்படியோ காலம் ஓடித்து; நீயும் பெரியவனாப் போயிட்டே.''

''எதுக்கு மாமி இந்தப் பழங்கதையெல்லாம்? தைரியமா இரு. சாயங்காலம் நான் டவுனுக்குப் போவேன். டாக்டரைக் கேட்டு நல்ல மருந்தா வாங்கிண்டு வரேன். உனக்கு உடம்பு தேவலையாப் போகட்டும். பாக்கியெல்லாம் பிற்பாடு பேசிக்கலாம். ஏகப்பட்ட நாழியாச்சு. நான் வரேன்.''

சப்புணி பரபரப்போடு தெருவுக்கு வந்தான். பின்னாலேயே தங்கமும் வந்தாள். திண்ணையில் வைத்திருந்த பொட்டலத்தை எடுத்துக் கொண்டு அவன் புறப்பட்டான்.

''அது என்ன அத்தான்?''

''தெரியலையா? தாமரைப் பூ.''

''ஏது அத்தான்?''

''குளத்திலே பறிச்சேன்.''

''நீங்களா? அச்சச்சோ! குளம் ரொம்ப ஆழமாச்சே! நடுக் குளத்திலேதானே பூ இருக்கும்?''

''அது ஒன்னும் எனக்குப் பிரமாதமில்லே.''

''அத்தான்!''

''உம்..... ஏன்?''

''எனக்கு ஒரு தாமரைப் பூ கொடுங்களேன்.''

''எதுக்கு உனக்கு?''

''அம்பாள் படத்துக்குப் போடத்தான்.''

''வேறே வேலேயில்லே. கொல்லேயிலே கிடக்கிற துளசியிலே ரெண்டு கிள்ளிப் போடு. அம்பாள் கொடுக்கிற வரத்திலே எதையும் குறைச்சுட மாட்டாள்.''

சப்புணி தெருவில் இறங்கி வேகமாகப் போய் விட்டான். பின்னால், தான் போவதையே பார்த்துக் கொண்டு நிற்கும் தங்கத்தை அவன் திரும்பியே பார்க்கவில்லே.

மணி ஒன்பது இருக்குமா?

உஷா இத்தனே நேரம் அவனுக்காகக் காத்துக் கொண்டிருப்பாளோ? நேர மாகி விட்ட கவலேயைவிட அவள் தாமரைப் பூவை என்ன செய்வாள் என்பதைப் பற்றிய ஆவலே அதிகமாக இருந்தது இப்பொழுது.

* * *

சப்புணி மாயூரத்திலிருந்து திரும்பி விட்டான். வில் வண்டியைப் பூட்டவிழ்த்துவிட்டு மாடுகளேயும் பிடித்துக் கட்டினுன். அந்தக் கொம்புக் காளேத் தன் கைகளாலேயே பிடித்துக் கட்டுவதில் அவனுக்கு எப்போதும் அலாதிப் பெருமை.

''என்டா சப்புணி, மருந்து கிடைச்சுதா? வாங்கிண்டு வந்தியா?''

திண்ணையில் உட்கார்ந்திருந்த பட்டாமி கேட்டார். அவருக்கு எப்போதும் ஓயாத மருந்துப் பசி. மருந்தும் திண்ணே யுந்தான் அவருக்குத் துணே.

''ஓ!'' சப்புணிக்கு மனம் நிரம்பித் ததும்பும் உற்சாகம்.

''அந்தப் பெண் உஷா என்னவெல்லாமோ கேட்டாளே ?''


''எல்லாம் வாங்கிண்டு வந்திருக்கேன்...''

''சரி, நீயே கொண்டு போய்க் கொடுத்துடு.''

பையைத் தூக்கிக் கொண்டு வீட்டுக்குள் நுழைந்தான்.

முற்றத்து ஊஞ்சலில், மாலே வெய்யிலின் 'பளிச்'சென்ற மஞ்சள் வெளிச்சத்தில் உட்கார்ந்திருந்தாள் உஷா. அவளேயே இரண்டு விநாடிகள் பார்த்த சப்புணிக்கு ஒரு பெரிய சினிமாக் கலைஞரின் நினைப்பு வந்தது. அதிலும் ஒரு பெண் இப்படித்தான் உட்கார்ந்திருந்தாள்.

அவளேப் போலவா இவள் இருக்கிறுள்? அது வெறும் படம். வர்ணத்தைப் போட்டு எழுதிய படம். அதுவும் அழகாய்த்தான் இருந்தது. ஆனுல் உஷா நிச்சயமாய் அதைவிட அழகுதான். இவளேப் போய் 'ஸினிமா ஸ்டார்' மாதிரி இருக்கிறுள் என்கிறுரே ராமண்ணு? இவள் இன்னும் நூறு மடங்கு அழகு.





கப்புணி தன்னையே பார்ப்பதைக் கவனித்துவிட்டு அவன் சிரித்தான்.

"என்ன சிரிக்கிறே?"

அவள் தன்னிடம் கண்டிப்பாய் வயதில் சின்னவன் என்கிற உரிமையில் அவனை ஒருமையிலேயே அழைத்தாள்.

"நீ ஏன் அப்படிப் பார்க்கிறே?" என்று கேட்டாள் உஷா.

அவன் எந்த உரிமையில் தன்னை 'நீ' என்று குறிப்பிடுகிறான் என்பதைப்பற்றிக் கவலைப்படவில்லை அவள்.

"ஒன்றுமில்லே..... வந்து..... நீ கேட்டதெல்லாம்வாங்கிவந்திருக்கேன்."

"எங்கே கொண்டா!"

கப்புணி பையை ஊஞ்சலில் வைக்கப் போனான். அதற்குள் உஷா கையை நீட்டி அதை வாங்கிக் கொண்டாள்.

தைலம், சோப்பு, பவுடர்.....

ஒவ்வொன்றும் எடுத்து வெளியே வைத்தாள்.

"தேவலையே! ஒன்று விடாமல் எல்லாம் வாங்கியிருக்கியே?"

"விடுவேனா? கடைத் தெருவையே சலித்து எடுத்துவிட்டேனு, சும்மாவா?"

"எனக்காக நீ ரொம்பத்தான் சிரமப் பட்டிருக்கே. இந்தச் சோப்பு பம்பாயிலே தான் கிடைக்கும். அதைக்கூட விடலையே? நேத்திக்கு விளையாட்டுக் காகத் தாமரைப்பூ வேணும்னு சொன்னேன். இன்னிக்குக் கொண்டு வந்துட்டாயே!"

"நீ எதுக்கு உஷா தாமரைப்பூ கேட்டே?"


"சும்மாத்தான். இத்தனை நேரம் தண்ணீரிலே போட்டு வைச்சிருந்தேன். வாடிப் போச்சு. அதைத் தூக்கி எறிஞ்சுட்டேன்."

உஷா தன் கூந்தலை அவிழ்த்துப் புதிதாகப் பின்னத் தொடங்கினாள்.

＊ ＊ ＊

நாட்கள் அவசரமாக ஓடின.

ராமண்ணா அடிக்கடி ஜாதகங்களைக் கட்டி எடுத்துக் கொண்டு பட்டாபி வீட்


லிப்டன்
ஹிமாலயன்
கோல்டன்
டஸ்ட்
டீ
தூள்
தேயிலைகளில்
ஒப்பற்றது
HIMALAYAN
FINEST
GOLDEN DUST TEA
LIPTON'S
FINEST
GOLDEN DUST TEA

டுக்கு வந்தார். உஷா அதைப் பற்றிக் கவலைப்பட்டதாகவே தெரியவில்லை.

"உன் கல்யாணத்துக்காகத்தான் இந்த ராமண்ணா இப்படி ஜாதகமாய்க் கொண்டு வந்து கொட்டுகிறார்."

சப்புணி ஆவலோடு உஷாவின் முகத்தைப் பார்த்தான்.

"தாராளமாய்க் கொட்டட்டும். சித்தப்பாவுக்கும் வேலையில்லை. திண்ணையோடு வெற்றிலைப் பெட்டியும் கையுமாய் உட்கார்ந்திருக்கிறவர். பொழுது போகட்டுமே!"

"அப்படின்னா....."

"அப்பாவுக்கும் வேறே வேலையில்லை. என்னையும் இங்கே அனுப்பி வைச்சு, சித்தப்பாவை வரன் தேடச் சொல்லி விட்டார். எல்லாம் நிச்சயமாயிட்டா பம்பாயிலே இருந்து பறந்து வந்து கல்யாணத்தை முடிச்சுடுவாராம் அப்பா."

"ரொம்ப அலட்சியமாப் பேசறியே?"

"பின்னே எனக்கும் பிடிச்சாத்தான் நான் கல்யாணம் பண்ணிப்பேன். பெரிய இஞ்சினீயர்னு உடனே கழுத்தை நீட்டிப்பிடுவேனா?"

"உனக்கு அப்போ யாரைத்தான் பிடிக்கும்?"

"சொல்லட்டுமா?"

"உம்......"

"இப்போ வேண்டாம். அப்புறமாச் சொல்றேன்."

சப்புணி அவளையே பார்த்தான்.

அவளும் தலையைச் சாய்த்து விழிகளின் கோடியில் தேக்கி அவனைப் பார்த்தாள்.

"சப்புணி! அது போகட்டும்.... பொழுதே போகல்லே. இந்த ஊரிலே கதைப் புஸ்தகமெல்லாம் படிக்கிறவா யாராவது இருக்காளா?"

கண்களை மூடி நெற்றியைத் தேய்த்து விட்டுக் கொண்டான் சப்புணி. பிறகு விரலைச் சொடுக்கிவிட்டு, "சேது இருக்கானே! அவன்தான் நிறையப் புஸ்தகமெல்லாம் படிப்பான்" என்றான் உற்சாகத்தோடு.

"அவர்கிட்டே கேட்டு நல்ல நாவலா வாங்கிண்டு வாயேன்."

"கண்டிப்பாய்ச் சாயங்காலம் ஜோரான புஸ்தகம் கொண்டு வரேன்."

மாலையில் தன்னுடைய அத்தனை வேலைகளுக்கும் நடுவே சப்புணி சேதுவைத் தேடிப் பிடித்துப் புஸ்தகத்தையும் வாங்கிக் கொண்டுதான் பட்டாபியின் வீட்டுக்குப் போனான்.

கண்டு முதல் கணக்கெல்லாம் கேட்டுத் தொலைத்துவிட்டார் பட்டாபி. ஒரு வழியாய் அவரிடம் எல்லாவற்றையும் பேசி முடித்துவிட்டுத் திண்ணையைத் தாண்டினான் சப்புணி.

"ஏ, சப்புணி! உஷா கோவிலுக்குப் போகணும்னு சொன்னாள். நீயேகூடத் துணைக்குப் போயிட்டு வந்துடு."

போனவனைக் கூப்பிட்டு உத்தரவு போட்டார் பட்டாபி.

உஷா அலங்காரமெல்லாம் முடித்துக் கொண்டு தயாராய் இருந்தாள். இருவரும் கோவிலுக்குப் புறப்பட்டனர்.

பிராகாரத்தைப் பாதி சுற்றிக் கொண்டு வரும் போது அங்கே சேதுவைப் பார்த்து விட்டான் சப்புணி. கோவிலையே எட்டிப் பார்க்காதவன் எப்படி வந்தான் என்ற குழப்பத்தோடு, "அதோ, அவன்தான் சேது. அவன்கிட்டேயிருந்துதான் கதைப் புத்தகம் வாங்கிண்டு வந்தேன்" என்று, கூட வந்த உஷாவுக்குச் சொன்னான்.

"அவர்தானா? என்ன வேலை அவருக்கு?" என்று கேட்டாள் உஷா.

"ஒரு வேலையும் இல்லை. ஊரைச் சுத்தறது. ஒன்னு விடாமல் சினிமாப் பார்க்கிறது. இதுதான் வேலை. அப்பாவுக்குச் செல்லப் பிள்ளை. நிறையச் சொத்து இருக்கு. பெரிய சினிமாப் பைத்தியம்."

சேது திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே போனான்.

* * *

பத்து நாட்கள் சப்புணிக்கு ஒழிவே இல்லை. பட்டாபி திண்ணையில் உட்கார்ந்தபடியே அவனை ஏவிக் கொண்டிருந்தார். அறுவடை முடிந்து வியாபாரிக்கு நெல்லைப் போடுகிறவரையில் சப்புணிக்கு வேளைக்குச் சாப்பாடுகூடக் கிடைக்காது.

தெருவோடு போகிற போது, மாமியின் வீட்டைக் கடந்து செல்லும் நேரத்தில், ஒரு கணம் மருந்து வாங்கிக் கொண்டு வருவதாய்ச் சொன்ன நினைவு வரும். சப்புணி அதற்குப் பிறகு அங்கே போகவேயில்லை. அவனுக்கு அது ஒன்று தானா வேலை? அவரவர்கள் கஷ்டம் அவரவர்களுக்கு. அதற்கு யார் என்ன பண்ண முடியும்?

நடுவில் எப்போதாவது பட்டாபியின் வீட்டுக்குள் நுழையும் போது உஷா ஏதாவது புத்தகத்தைப் படித்துக்கொண்டிருப்பாள்.

'பொழுதே போகவில்லை' என்று அவள் சொன்னது ஞாபகம் வரும். தான் வாங்கிக் கொண்டு வந்த அதே புஸ்தகத்தையா அவள் இன்னமும் வைத்துக் கொண்டு படிக்கிறாள் என்று அவனுக்கு ஒரு சந்தேகம்.

"பொழுது எப்படிப் போகிறது?" என்று அவளையே விசாரித்தான்.

"தினம் ரெண்டு புஸ்தகம் படிக்கிறேன். நேரம் போகிறதே தெரியலே."

"அத்தனை புஸ்தகம் ஏது?"

"எல்லாம் அந்தச் சேதுவுடையது தான். அவர்கிட்டே இன்னும் ஏராளமாப் புஸ்தகம் இருக்காமே!"

அதற்குள் பட்டாபி அவசரமாக அழைத்தார். சேதுவிடம் நிறைய புஸ்தகங்கள் இருக்கின்றன சரிதான். ஆனால் சப்புணி இல்லாத சமயத்தில் அதையெல்லாம் அவளுக்கு யார் வாங்கிண்டு வந்து கொடுத்திருக்கலாம்? ஒருகால் சேதுவே நேரில் கொண்டு வந்து கொடுத்திருப்பானோ? இருக்காது. அவனுக்கு அதற்கு நேரம் ஏது?

உஷாதான் ஆள் அனுப்பி வாங்கி வரச் சொல்லியிருப்பாள்.

* * *

ஒரு வழியாய் அறுவடை முடிந்தது. இனிமேல் சப்புணிக்கு அத்தனை வேலை இருக்காது.

ஞாயிற்றுக்கிழமை பிற்பகல்.

வில்வண்டியில் கொம்பு மாடுகளைப் பூட்டி நிறுத்தினான் சப்புணி. மாயூரத்துக்குச் சவாரி போகிற பெருமை அவனுக்கு. வண்டியில் அவன் மாத்திரம் போகவில்லை. உஷாவும் வருகிறாள். அவனும் அவளும் மாத்திரம் போகப் போகிறார்கள்.

பகல் காட்சி சினிமாவுக்குப் போவதாகத் திட்டம் போட்டிருந்தாள் உஷா.

"ஜாக்கிரதையாகப் போய்க் கூடவே இருந்து அழைத்துக் கொண்டு வந்து விடு" என்று எச்சரிக்கையோடு வழியனுப்பினார் பட்டாபி.

"நீங்க கவலைப்படாதீங்கோ மாமா. நான் பார்த்துக்கறேன்" என்று சொல்லி விட்டுத் தன் கயிறுகளைத் தளரவிட்டுத் தார்க்குச்சியை எடுத்தான் சப்புணி.

வில்வண்டி பறந்தது. வழி நெடுகக் குழந்தை மாதிரி என்னென்னவோ கேட்டுக் கொண்டே வந்தாள் உஷா. ஒவ்வொரு தடவையும் திரும்பிப் பார்த்துப் பதில் சொல்லிக் கொண்டே வந்தான் சப்புணி.

இன்றைக்கு அவள் பிரமாதமாக அலங்காரம் பண்ணிக் கொண்டிருப்பதாகவே அவனுக்குத் தோன்றியது. நடுவில் தங்கத்தின் உருவமும் ஒருநிமிஷம் வந்து எட்டிப் பார்த்தது. அவளிடம் இந்த மாதிரிப் புடவையும் நகைகளும் ஏது? இருந்து விட்டால் மட்டும் இத்தனை நாகரிகமாய் அணிந்துகொள்ள அந்தப் பட்டிக்காட்டுப் பெண்ணுக்கு எங்கே தெரியப் போகிறது?

வண்டி ஓடிக் கொண்டேயிருந்தது. உஷாவின் பேச்சும் சிரிப்பும் அதில் உதிர்ந்து வழியெல்லாம் சிதறிக் கொண்டே வந்தன.

திரைகள் விழுந்து பகல் இரவாகிப் படம் தொடங்கும் நேரம். சப்புணிக்கு உட்கார்ந்திருக்கும் இடமும் பார்க்கப் போகிற காட்சியும் புதுமையான அநுபவம். மங்கின ஒளியில் தன் பக்கத்தில் அமர்ந்திருக்கும் உஷாவைத் திரும்பிப் பார்த்தவன் பார்வையை அதே வரிசையில் கொஞ்சம் தள்ளி ஓடவிட்டவன் ஒரு தெரிந்த முகத்தைக் கண்டான். அது யார்?

"சேதுகூட வந்திருக்கான் போலே இருக்கே!" என்று மெதுவாக உஷாவைக் கேட்டான்.

"வந்திருக்காரா? எனக்குத் தெரியாதே. படம் ஆரம்பிச்சாச்சு. நடுவிலே ஒண்ணும் பேசாதே."

படம் ஓடிற்று. இடைவேளை வந்தது.

"சப்புணி சீக்கிரமாப் போய் எனக்கு ஒரு தலைவலி மாத்திரை வாங்கி வாயேன்."

"ஏன், உனக்குத் தலையை வலிக்கிறதா உஷா?"

"ஆமாம், சீக்கிரம் போயேன். இது என்ன கேள்வி?"

"உடம்பு சரியில்லேன்னு வீட்டுக்கே போயிடலாமேன்னு கேட்டேன்."

"பிரமாதமான படம். இதையா பாதியிலே விட்டுப்பிட்டுப் போகிறது? நீ போ, சீக்கிரம்."

கொட்டகை வாசலில் இரண்டு வெற்றிலைப்பாக்குக் கடைகள். இரண்டிலும் மாத்திரை இல்லை. சப்புணி அவசரமாக மணிக்கூண்டு மருந்துக் கடைக்கு ஓடினான்.

திரும்பி வந்து உள்ளே நுழைந்தால் படம் மீண்டும் ஆரம்பமாகி விருந்தது. தடுமாறிக் கொண்டு இடத்தைத் தேடிப் பிடித்து உட்காரும் போது, சேதுகூட அப்பொழுதுதான் தன்னுடைய இடத்தை நோக்கி விரைவது போல் ஒரு நிழல் தோற்றம்.

படம் முடிந்தது. திரும்பும் போது வழியில் உஷா அதிகம் பேசவேயில்லை.

"இன்னமும் தலைவலிக்கிறதா உஷா?"

"உம்......."

"அஞ்சே நிமிஷம். ஊருக்குப் போய்க் காப்பி குடிச்சா ஓடிப் போயிடும்."

* * *

நாட்கள் அவசரமாக வந்து போய்க் கொண்டிருந்தன. ராமண்ணா தேதியும் நேரமும் குறிப்பிட்டுப் பேசிக் கொண்டிருந்தார். அவருக்கு ஏக உபசாரம். ஒரே உற்சாகம் அவருக்கு.

"கப்புணி!"

திண்ணைப் பேச்சை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தவனை இடைகழியில் நின்று உஷா மென் குரலில் அழைத்தாள். சத்தம் போடாமல் வரும்படி சைகை காட்டினாள்.

அவள் முன்னால் போனாள். கப்புணி பின் தொடர்ந்தான். தோட்டத்தில் மாமரத்தின் அடியில் வந்து நின்றாள் உஷா. சுற்றிலும் ஒரு முறை பார்த்துக் கொண்டாள்.

"கப்புணி!"

"உஷா!"

"சித்தப்பா கல்யாணத்துக்கு அவசரமாய் ஏற்பாடெல்லாம் பண்ணின்டிருக்கார்."

"உனக்காகத்தான்."

"எனக்குத்தான். ஆனால் இதிலே எனக்குக் கொஞ்சங்கூட இஷ்டமில்லே."

"அப்படின்னா?"

"கப்புணி! உனக்கெழுதத்தெரியுமா?"

"ஓ!"

"இதைப் படிச்சுப் பாரு. இதே மாதிரி உன் கையாலே எழுதிக் கொடுக்கணும். ஒருத்தர்கிட்டேயும் சொல்லப்படாது."

கப்புணி வார்த்தை வார்த்தையாக அதைப் படித்தான். "உஷா என்கிற பெண் உள்ளூரிலேயே ஒரு பையனைக் காதலிக்கிறாள். நீங்கள் வேறே இடத்திலே பெண் பார்ப்பதுதான் எல்லோருக்கும் நல்லது."

"இது என்ன உஷா?"

"இரண்டு நாட்களில் என்னை யாரோ ஒருத்தன் பெண் பார்க்க வருகிறானாம். அதுக்குள்ளே இந்தக் கடுதாசு அவனுக்குப் போயிடணும். கப்புணி உண்மையைச் சொல்லி விடுகிறேனே. எனக்கு உன்னைத்தான் கல்யாணம் செய்து கொள்ள ஆசை."

"என்னையா? நிஜமாக என்னையா?"

"ஏன் கூடாது? அப்பாவிடம் சொன்னால் இரண்டு வேலி நிலத்தை வாங்கிப் போடுவார். அப்புறம் நீயும் ஊரிலே ஒரு மிராசுதார்."

கப்புணி நான்கு புறமும் பார்வையைச் சுழலவிட்டான். மரக்கிளையைப் பிடித்துக் கொண்டான்.

"மற்றதெல்லாம் அப்புறம் பேசிக்கலாம். யாரிடமும் தவறிப் போய் உளறி வைக்காதே. கொஞ்ச நாள் விஷயம் நமக்குள்ளேயே இருக்கட்டும்."

"நீ கவலைப்படாதே, உஷா. எல்லாம் நான் பார்த்துக்கிறேன்."

குறிப்பிட்ட நாளும் நேரமும் வந்தன. எதிர்பார்த்தவர்கள் வரவில்லை. பட்டாபியும் ராமண்ணாவும் ஏமாந்து



"நம்ம தலைதீபாவளியின்போது நீங்க கேட்டீங்களே. அப்போ எங்கப்பா கம்பெனியிலே ஸ்டாக் இல்லையாம். இப்பத்தான் இரண்டாம் பதிப்பு அச்சிட்டிருக்கா. இந்தாங்க தீபாவளிப் பரிசு!"

போனதுதான் மிச்சம். கப்புணி மட்டும் தனக்குள் அலையடிக்கும் நெஞ்சோடு நடமாடிக் கொண்டிருந்தான்.

* * *

மறுபடியும் ஒரு மாசம் கழிந்தது.

உஷாவுக்கு ஒரு வரனும் நிச்சயமாகவில்லை. அவள் ஊருக்குப் புறப்பட்டு விட்டாள். கப்புணிதான் அவளை ரயிலடிக்கு வில்வண்டியில் அழைத்துக் கொண்டு போனான். "நான் நேராக அப்பாவிடம் பேசி அவரைச் சம்மதிக்க வைத்து விடுகிறேன். அது வரையில் பொறுமையாக இரு" என்று அவனிடம் ரகசியமாகச் சொன்னாள் உஷா. கப்புணி பலமாகத் தன் தலையை ஆட்டினான்.

ரயில் வந்தது. உஷா இரண்டாம் வகுப்புப் பெட்டியில் ஏறிக் கொண்டாள். கப்புணி சாமான்களையெல்லாம் எடுத்து ரயிலில் வைத்தான்.

'ஓ'வென்று இஞ்சின் அலறிற்று.

யாரோ அவசரமாக ஓடி வந்தார்கள்.

சேது!-கையில் சின்னத் தோல் பெட்டியுடன் ஓடி வந்து நகரும் ரயிலில், அதே பெட்டியில் தொற்றிக் கொண்டான், சேது.

மிரண்டு நின்று, போகும் ரயிலையே ஒரு விநாடி பார்த்தான் கப்புணி. அடுத்தகணம் அவனும் பாய்ந்து போய் அதே பெட்டியில் ஏறிக் கொண்டான்.

"டேய், அசட்டுக் கப்புணி! நீ எங்கேடா வரே?"

"நீ எங்கே கிளம்பினே, அதைச் சொல்லு முதல்லே?"

"நானா? சினிமாப் படம் எடுக்கப் போறேண்டா கப்புணி. எல்லா ஏற்பாடும் ஆயிடுத்து. உஷாதான் அதிலே நடிக்கப் போறாள்."

"நிஜம்மாவா உஷா?"

ஜன்னலில் சாய்ந்தபடி அவனைப் பார்த்து அழகாகச் சிரித்தாள் அவள். அவன் பார்த்த சினிமாவிலும் இதே போலத்தான் கதாநாயகி மரத்தில் சாய்ந்து கொண்டு பார்த்தாள்; சிரிப்பை உதிர்த்தாள்.

ரயில் கடகடவென்று ஓடியது. கப்புணி கண்களை மூடிக் கொண்டான். அடுத்த ஸ்டேஷனில் வண்டி நின்றதும் கீழே இறங்கித் திரும்பி நடந்தான் அவன்.

* * *

படித்துறையில் ராமண்ணா மூக்கைப் பிடித்துக் கொண்டு நின்றிருந்தார்.

"அண்ணா சினிமா ஸ்டார் ஊருக்குப் போயிட்டாள்."

"போகட்டுமேடா."

"உங்க உபாத்தியாயத்திலே பெரிய கல்யாணமா நடக்கும்னு எதிர்பார்த்தேன். நின்னு போச்சு. அது போகட்டும். ஒரு சின்னக் கல்யாணத்தையாவது நடத்தி வையுங்கோ."

"யாருக்குடா கப்புணி? உனக்கா?"

"நானிதோ வர்றேன், அண்ணா!"

கப்புணி நடையை எட்டிப் போட்டான். நேராக மாமியின் வீட்டுக்குப் போனான். "தங்கம், தங்கம்!"

"அத்தானா?"

"மாமி எங்கே?"

"குளத்தங்கரையிலே இருக்கா."

"என் மேலே கோபமா தங்கம்?"

"ஊஹூம்! அப்படி ஒன்னும் இல்லையே!"

கப்புணி அவளையே பார்த்தான். அவள் இடித்த சுவரையும் ஒருக்களித்த உத்தரத்தையும் பார்த்தாள்.

"வீடெல்லாம் நான் பிரமாதமாக் கட்டிப்பிடறேன் தங்கம். ராமண்ணா கிட்டே கல்யாணத்துக்கு நாள் பார்க்கச் சொல்லியாச்சு."

"கல்யாணமா? உங்களுக்கா அத்தான்?"

"எனக்கு மாத்திரமா? அசடு! உனக்கும் எனக்கும்தான்."

"நிஜம்மாவா அத்தான்?"

"உம்..... நீ எது கேட்டாலும் வாங்கித் தரேன் தங்கம். புடவை நகை..... ஆறு ஒண்ணு. சினிமாப் பார்க்கப் போகணும்னு மாத்திரம் கேட்கப்படாது!"

"ஏன் அத்தான்?"

தங்கம் அவனையே இமைக்காமல் பார்த்தாள் தூணில் சாய்ந்துகொண்டு. அவள் முகம் சிரிப்பால் மலர்ந்தது.

கப்புணிக்குத் தலையைச் சுற்றியது. கால்கள் 'வெட வெட'வென நடுங்கின.

"ஏன் அத்தான் என்னைப் போல் ஏழைப் பெண்ணைச் சினிமாவுக்கு அழைச்சிண்டு போக உங்களுக்குப் பிடிக்காதா? கவலைப்படாதிங்கோ அத்தான்...."

"அதுக்காக இல்லே, தங்கம்! வந்து......."

"என்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளுங்கோ அத்தான். நான் சினிமா பார்க்கலே. ஆறு சினிமாவிலே நடிக்கிறேன். லட்சம் லட்சமாப் பணம் வரும். அப்புறம் நமக்குக் கவலையோ கஷ்டமோ இருக்கவே இருக்காது."

கப்புணி திமிர்ந்து பார்த்தான். அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. அவளுடைய முகத்தையும் கண்களையும் பார்க்க அவனுக்குப் பயமாக இருந்தது.

"தங்கம் ஏன் இப்படி முழிச்சுப் பார்க்கிறேள்? என்னைத்தானே எல்லாரும் 'அசட்டுக் கப்புணி'ன்னு கூப்பிடறா. எனக்குத்தானே பைத்தியம் பிடிக்கணும்?"

பயந்துகொண்டே அவன் படியிறங்கித் தெருவோடு எங்கோ நடந்தான்.




An exciting NEW talc that fits into your budget

J. K. Helene Curtis' Premium Talc is what you have been waiting for... a distinctive talc in a black & gold tin at an economy price. This talc is ideal for every member of your family. Premium Talc keeps you spring-fresh all day long. Its clean aristocratic fragrance is very pleasing. Use it every morning, every evening...and keep cool always. Buy a tin today.


J.K. Helene Curtis *Sole distributors in India* **SPENCER & CO. LTD.**

Spencers Building, Forjett Street, Bombay 26
153 Mount Road, Madras 2
70 Diamond Harbour Road, Kidderpore, Calcutta 23
19A Alipore Road, Delhi 6






இவருக்கு, நீங்க பாட்டு சொல்லித்
தந்தது போதும் என்று, இவள்
அப்பா சொல்லச் சொன்னார்."
பரவாயில்லை! தினமும் இதே நேரத்
திற்கு வந்து விடுகிறேன். காப்பியை
மட்டும் தந்துடுங்கோ."



அத்தான்! நாம் இருவரும் காதலித்
தோம். விதியின் சதியால் நம்
இருவருக்குமே வெவ்வேறு இடங்களில்
திருமணம் நிச்சயமாகி விட்டது.
போகட்டும், உங்களுக்குப் பெண்குழந்தை
பிறந்தால் என்னுடைய பெயரையும்
எனக்கு, ஆண் குழந்தை பிறந்தால்
உங்கள் பெயரையுமாவது நாம்
சூட்டுவோமா?




ரெபரி:- அந்த ஆள் குத்துகிறானே?
திருப்பித் தாக்கு.
" நீ சும்மா கிட! முதுகு வலிக்கு
இதமாக இருக்கு."




குடும்பக்
கார்டு
அதிகாரி
" சார்! என் பெண்ணுக்குக்
கல்யாணமாகி விட்டது."
" சரிதான்! உங்கள் கார்டில் ஒரு
நபரைக் குறைக்கணுமோ?"
" இல்லை! மாப்பிள்ளையின்
பெயரைச் சேர்க்கணும்."


மனைவி:- கொஞ்சம் அப்படியே
இருங்கோ. குழந்தைக்கு
ரப்பர் வாங்கிக் கொண்டு
வந்துடறேன்.


டாடா பைஸன் ராலீஸ்
பயிர் அபிவிருத்திக்குப் பணி
புரிகின்றது
TATA FISON RALLIS
TREE BRAND
FERTILIZERS AND PESTICIDES

சிரிக்காதே சிற்றம்பலம்!

டி. என். சுப்பிரமணியன்

பாத்திரங்கள்

தங்கசாமி — தந்தை
மந்திரமூர்த்தி — மகன்
சிற்றம்பலம் — சிநேகிதர்
சௌதாமினி பிரேமா — டைப்பிஸ்ட்பெண்
அறம்வளர்த்த நாயகி — மந்திரமூர்த்தியின் அக்காள்

மற்றும், மானேஜர், சேவகர்

(தங்கசாமி ஐம்பத்தைந்து வயதானவர். நெற்றி சேரும் குடிகொண்டவர். மகன் முன்னுக்கு வரவேண்டும் என்னும் ஆவல் உடையவர். மகனைத் தேடி உள்பக்கம் வந்து கத்துகிறார்.)

தங்கசாமி: டேய் மந்திரம் (சுற்று முற்றும் பார்த்து) ஏண்டா டேய், எங்கேடா தொலைஞ்சே! (எதிரே வரும் அறம் வளர்த்த நாயகியிடம்) ஏம்மா அறம், இந்தப் பயல் எங்கே தொலைஞ்சான் உருப்படாத மூதி...

(உள்கட்டில் நின்றபடியே தன்னை முன் பக்கமாக வாரிவிட்டு, கண்ணாடியில் அழகு பார்க்கும் மந்திரம் பதினெட்டு வயதுள்ளவன்.)

மந்திரம்: தொலையற காலம் எனக்கு வரலே... வந்தால்லே நான் தொலைய முடியும். உங்க அர்ச்சனை யோட பொழுது விடிஞ்சுதே.

தங்கசாமி: ஏண்டா, பயலே (உள் பக்கம் எட்டிப் பார்த்து) நீ படிஞ்சு

மந்திரம்: நேத்து எழுதின விளம் பர மனுக்களுக்கு மூனு ரூபாய் கேட்டேன்.

தங்க: எதுக்குடா மூனு ரூபா? மூ-னு!

மந்திரம்: தபால் தலை ஒட்டினால் தான் போகும். எந்தலையிலே ஒட்ட றத்துக்கு என்ன இருக்குது?

தங்க: வயசு குட்டிச் சுவருக்கு ஆனது போல ஆகி என்ன பயன்? பெரிய துரைமவன்... பெட் காப்பி யிலே குடிக்கிறாரு!

(அறம் வளர்த்த நாயகி காப்பியும் கையு மாக வந்தபடியே......)



பேசினால்லே உன் தலை படியும்! இந்த வீட்டிலே நீ எஜமானு. இல்லே நான் எஜமானு? ஒரு வார்த்தைக்கு ஒம்பது வார்த்தையில்லே பேசுறான்...

மந்திரம்: எந்த மானுக இருந்தால் என்ன? நிஜ மான் நீங்களும் இல்லே நானும் இல்லே!

தங்கசாமி: ஏண்டாலே டபாய்க் பேசறயா?

மந்திரம் (முனு முணுத்தபடி): பாட்டாக் பேசறேன்! உங்களுக்கு என்ன செய்யணும்? தபால் போட ணுமா? ரேஷன் வாங்கக் கியூவில் நிக்கணுமா? இல்லே, எலெக்ட்ரிக் பில் கட்டணுமா?

தங்கசாமி: என்னே நீ ஒன்னும் காப்பாத்த வேணும்! விளம்பரத் துக்கு மனுப் போட்டியா?

அறம் வளர்த்த நாயகி: இந்தாங்க அப்பா காப்பி. அவன்தான் மூனு நாளா காப்பி குடிக்கிறதில்லே; சாப் பாடுகூட அரை வயிறுதான்!

(தங்கசாமி காப்பியைக் குடிக்கிறார்.)

தங்க: நானே முதல் அரை வயிறு தானே எல்லாத்துக்கும் கிடைக்கப் போவுது. ஏண்டா மந்திரம். இரா. பிச்சையைப் பார்த்தியா நீ?...

மந்திரம்: இரா... பிச்சையை நான் பார்த்தேன். ஆனால் பகல் நேரத்திலே போய்ப் பேசினேன்.

தங்க: ஆர். பிச்சையை இரா பிச்சை என்றால், நீ என்னடா இராப் பிச்சை என்று விண்டலா பேசறே! கைதிபிர்த்த பயலே அடிக்கக்கூடா துன்னு பார்க்கிறேன். இல்லே சனக் காடு போனக்காடு ஆக்கிப் போடு வேன் ஆமா!

மந்திரம்: எந்த அலுவலகத்துக்குப் போனாலும் இல்லே இல்லே என்று பேசுகிறாங்க. நீங்களாவது ஏதோ சனக்காடு ஆக்கிறேன், பொணக்காடு ஆக்குகிறேன் என்று கூறுகிறீங்களே...செய்யுங்கப்பா...

தங்க: எலே உனக்குச் சனீசுவரன் பிடிச்சிருக்குது.

தங்க: நாளையோட நான் ரிட்டயர் ஆகிறேன். குடும்பத்துக்கு வருமானம் போதாது... பாதிச் சம்பளத்திலே இந்தப் பய செலவழிக்கப் போறான். பாதிச் சம்பளம் வந்தா என்னாகும் குடும்பம்? சித்தம்பலம்... சொல்லுங்க...

சிற்றம்: ....உம்.... அது அது...

மந்திரம்: கடனாகும்...



மந்திரம் (மெதுவாக): எப்போது பெண் பார்த்தீங்களாம் எனக்கு?(சிரிப்பு)

அறம்வளர்த்த நாயகி: ரொம்ப அழகாத்தான் பேசறேடா. நாளை விடிஞ்சால் ரிட்டயர்டு ஆகிறாங்க அப்பா. அதனாலே அவுங்களுக்குக் கோபம் வருது...

தங்க: உருப்படற பிள்ளையா இருந்தா இத்தனே பெரிய ஊரிலே ஒரு வேலே கெடைக்காதா? சுத்த சோம்பேறி. தலையை மணிக்கொரு தடவை வாருகிறதும், சட்டையை ஜம்பமாகத் தூக்கி விடறதும், மூஞ்சியிலே ஒரு கிலோ பவுடர் அடிக்கிறதும்...

மந்திரம்: நிறுத்துங்க அப்பா! இவ்வளவு பேசப் போறீங்களே, உங்க வேலையை எனக்கு வாங்கிக் கொடுக்கலேன். பார்க்கிறேன். அதுக்குத் துப்பு இல்லே உங்களுக்கு...

(இவ்வேளையில் தங்கசாமியின் அருமை நண்பர் சிற்றம்பலம் உள்ளே வருகிறார்.)

சிற்றம்: யாருக்குத் துப்பில்லேடா மந்திரம்?

தங்க: எனக்குத்தான் சொல்றான். பெத்து வளர்த்துப் பேணி வைச்சதுக்குப் பையன் சர்டிபிகேட் கொடுக்கிறான். துப்பில்லேயாம்...

சிற்றம் (அமர்ந்தபடியே): ஏன்டா தம்பி! நீ உருப்படணும், உயரணும்... உனக்குப் புத்தி வரணுமுன்னு அப்பா கோபிக்கிறாங்க. எல்லாம் உனக்காக.

தங்க (கோபம் கொதிக்க): டேய், கடங்காரா... கடத்தான் ஆகும்! பாருங்களேன், சித்தம்பலம், பய திமிராகவே பேசுதான். உனக்கு அரை வயிறு தான்டா சோறு....

சிற்றம்: அண்ணாச்சி, தங்கசாமி! என்ன இருந்தாலும் அவன் உங்க வாரிசு. பார்த்தும் பாராமலும் சும்மா விட்டுவிட வேண்டியதுதான்.

தங்க: இவனுக்குப் போய் எம் பணத்தைக் கொட்டிப் படிப்புக்குப் பாழாக்கினேன் பாருங்க...

மந்திரம்: பிள்ளையைப் பெத்த எவன் கஷ்டப்பட்டான்? பணம் அழியத்தான்செய்யும். பின்னே பெறாதவங்களா இருந்திருக்கணும். காசு மிஞ்சும்.

சிற்றம் (மந்திரத்தைத் தட்டிக் கொடுத்து): எதிர்த்து எதிர்த்துப் பேசாதேடா! (தங்கசாமியிடம்) அவனும் சின்னவன் விடுங்க கோபத்தை.

(தபால் தபால் என்ற குரல் கேட்கிறது. அறம் வளர்த்த நாயகி போய் வாங்கி வருகிறாள்.)

அறம்: இந்தாங்கப்பா போஸ்டு!

தங்க: சித்தம்பலம், நாளைக்கே ரெண்டு மூணு டைப் மெஷின் வாங்கிப் போடலாமுன்னு பார்க்கிறேன், யாராவது புதுசுகள் வாத்தியார் வேணுமுன்னு என்னைச் சொல்லி செய்யுங்க...

சிற்றம்: உங்களுக்கு அவசியம் தகவல் சொல்றேன்.

மந்திரம்: உங்க கையிலே இருக்கிற கடிதத்திலே எம் பேரு இருக்குது.

தங்க: உனக்கு வந்த கடிதத்தை நீயே படி...

(கொடுக்கிறார். அவசரம் அவசரமாகப் படிக்கிறான்.)

அக்கா: என்ன தபாலடா மந்திரம்?


மந்திரம் (நிமிர்ந்து): அப்பா என்னோ எழுதிக் குறிச்சாங்களே. இன்டர்வியூவுக்குத் தபால் வந்திருக்குது.

சிற்றம்: எந்த ஊரிலே வேலே?

மந்திரம் (பெருமைக் குரலில்): பட்டணத்திலே வேலைக்கு மனுப் போட்டேன். வாடா பேட்டிக்காக என்று வருந்திக் கூப்பிட்டிருக்காங்க...

தங்க: அப்பாடா! நமக்கு ஆண்டவன் வழிவிட்டுவிட்டார். டேய், மந்திரம்... (குழைவாக) நீ ஊருக்குப் புதிசு. போகிற இடத்திலே மரியாதையாக, அன்பாக நடந்து வேலையைக் கெட்டியாப் புடிச்சுக்கோ.

மந்திரம்: யோசனை போதும். முதலில் ரயிலுக்குப் பணம், ஹோட்டலுக்குப் பணம்.... ஒருவேளை இன்டர்வியூவிலே வெற்றி கிடைச்சா, டெபாசிட் பணம் எல்லாம் தயார் செய்யுங்க... எனக்கு நிறைய வேலை இருக்குது.



சிற்றம்: என்ன வேலை? அர்ஜெண்டா?
மந்திரம்: அர்ஜெண்டா வாஷுக்குப் பத்து உருப்படி போடணும். முதல்லே அஞ்சு ரூபா பணம் எடுங்க.
(தங்கசாமி பணம் எடுத்துக் கொடுக்க மந்திரம் போகிறான்.)

சிற்றம்: எல்லாம் உங்க யோகம் தங்கசாமி. நீங்க தானே ரிட்டயர்டு ஆகிட்டீங்க. அவனுக்கு வேலைக்காக இன்டர்வ்யூ. என்ன இருந்தாலும் பிள்ளையைத் திட்டப்படாது, தங்கசாமி.

அறம் (நமட்டுச் சிரிப்புடன்): அப்பா திட்டினது அத்தனையும் பொய்த் திட்டு. ஏம்பா அப்படித்தானே?

தங்க: அவனுக்குப் புத்தி வருறதுக்காகத் திட்டினேன். அத்தனையும் பொய்த் திட்டு. நமக்கும் நல்ல காலம் வந்ததே.

சிற்றம்: நீங்களும் வேறே வேலை ஏதாவது செய்யப் போறீங்களா?

தங்க: சே, சே! மனுஷன் இருபது வயசிலே டைப் மெஷினைத் தொட்டேன். நானேயோட முப்பது வருஷங்கள் முடியுது. வேலே எதுவும் இல்லே. பென்ஷன் பணத்தோட பட்டணத்துக்குக் குடி போக வேண்டியதுதான்...

சிற்றம்: டியூஷன் ஏதாவது ஏற்பாடு செய்யட்டுமா?

தங்க: பேசப்படாது! நம்மாலே முடியாது சிற்றம்பலம்!

(எல்லோரும் சிரிக்கிறார்கள். மகன் மந்திர மூர்த்தி அழுக்கு மூட்டையுடன் வெளியேறுகிறான்.)

காட்சி 2

(பட்டணத்து ஆபீஸில் பெரிய கட்டடம். பல இளைஞர்கள் பேட்டிக்காகத் தள்ளு கதவில் கண் வைத்தபடியே வெளியே இருக்கிறார்கள். சிலர் பதற்றத்துடன் உலாத்தியபடி நிற்கிறார்கள். அந்தக் கூட்டத்தில் மந்திரமும் ஒருவன். 'உள்ளே வாங்க சார்' என்கிறான் சேவகன். தள்ளு கதவுடன் உள்ளே வருகிறான். பிரேமா என்னும் டைப்பிஸ்டு செயலாளர் அலுவலக மானேஜர் அருகில் நாற்காலியில் இருக்கிறாள். பூவாசமும், பவுடர் மணமும் மந்திரத்தைக் கிறங்க வைக்கின்றன. சிரிக்கிறான்.)

பிரேமா: உங்கள் பெயர்தானே...

மந்திரம்: மந்திரமூர்த்தி என் பெயர்.

பிரே: ஆங்கில டைப்பில்?

மந்திரம்: தேர்வு பெற்றுள்ளேன் தெரிவையே!

பிரே: தமிழ் டைப்பில்?

மந்திரம்: தேர்வு பெற்றுள்ளேன் தெரிவையே!

பிரே: தெரியும் என்பதை ஏன் தப்பிதமாகச் சொல்கிறீர்கள்?

மந்திரம்: தெரிவையே என்றால் பெண் என்று பொருள்!

பிரே: இந்த அலுவலகத்தில் படியேறி வந்தீர்களே, எத்தனை படிகள் இருந்தன?

மந்திரம்: ஐம்பத்தொரு படிகள் இருந்தன.

மானேஜர்: எந்த மாடியில் ஏறினாலும் நீங்கள் படிகளை எண்ணுவதுண்டா?

மந்திரம்: சில இடங்களில் இந்தக் கேள்வியைக் கேட்குமென்று எனக்குத் தெரியும். மனுச் செய்யும் அலுவலகப் படிகளைத் தாண்டும்போது மட்டும் எண்ணுவேன்.

மானே: பத்தாண்டுப் படிப்பாளியே, நீங்கள் படித்தது எப்படி?

மந்திரம்: நான் ஜனதா!

மானே: நீங்கள் ஜனதாவின் உறவினரா? ஜனதா என்றால் பெண்ணா?

மந்திரம்: பி. யு. சி.யில் நான் மூன்றாம் வகுப்புத் தரத்துடன் தேர்வு பெற்றேன். மூன்றாம் வகுப்பு ஜனதா என்னும் பெயர் மருவித் தேர்வு முறைக்கும் ஜனதா...

பிரேமா: நீங்கள் ஏன் இந்த அலுவலுக்கு வந்தீர்கள்?

மந்திரம்: வேறே அலுவல் கிடைக்கவில்லே வந்தேன் என்றால் அது பொய். இந்தக் கம்பெனியின் புகழ் எனக்குப் பிடித்திருந்தது.

(மந்திரம் வைத்துள்ள சான்றிதழ்களைப் புரட்டிப் பார்த்த பின்பு)

மானே: உங்களுக்குப் போதிய திறமை இல்லே. நீங்கள் போய் வரலாம்.

மந்திரம் (திடுமெனக் கண் கலங்கி): சார் சார், எங்க குடும்பத்திலே நான் சம்பாதிக்கா விட்டால் எல்லாரும் பட்டினி.

மானே: உங்களுக்கு அமெச்சூர் நாடகங்களில் நடித்துப் பழக்கம் உண்டா?

மந்திரம் (அழுதபடியே): உண்டு. சந்திரமதியாக ஒரு முறை...

மானே: உடனே இடத்தைக் காலி செய். நீ நடிக்கிறாய். இரக்கம் வரவழைக்க நடிக்கிறாய். உடனே எழுந்திரு. ப்யூன்...

மந்திரம்: சார்... சார்... கருணை காட்டுங்கள். நீங்கள் கருணை காட்டா விட்டால்...

மானே: சேவையில் சேர்ந்துவிடுவீரா?

மந்திரம்: நான் காவேரியில் ஐக்கியமாகிவிடுவேன்.

பிரேமா: பாவம்... இரக்கமாக இருக்கிறது சார்...

(சேவகன் உள்ளே வருகிறான்)

சேவகன்: எஸ் சார்.

மானே: இந்த மனுதாரரை வெளியே அனுப்பு. தாமாக எழுந்து போக மாட்டேன் என்கிறார். அழுகிறார், விழுகிறார், கதறுகிறார், கண்ணீர் வடிக்கிறார்.

(சேவகன் ஆளை வெளியே இழுக்க, நாற்காலியை விடாமல் பிடித்துக் கொள்கிறான் மந்திரம். நாற்காலியைத் திமிறிப்பிடுங்கிக் கீழே வைத்து அலாக்காக, சேவகன் தூக்கவே, பணிந்து போகிறான்.)

மந்திரம்: நானாகப் போயிருக்கிறேன்.

(போகிறான்)

பிரேமா: சார், ரொம்பப் பரிதாபமாக இருக்கிறது...

மானே: ஏன் பிரேமா? இந்தப் பையனுக்கு மட்டும் இரக்கம் காட்டுகிறாய்?

பிரேமா: பெரிய கதை சார்...போன ஆண்டு எங்கள் வீட்டுக்குப் பக்கத்து வீட்டில் இவர் வந்து தங்கினார். என் தங்கை எஸ். எஸ். எல். சி. பரீட்சை எழுதுவது உங்களுக்குத் தெரியுமே. இவர் ரயில் பிரயாணம் செய்து வரும்போது பரீட்சைக்கான கேள்வி பேப்பர்கள் ஒரு செட் எட்டணா விதம் விற்றதாம். அதில் ஒரு செட் வாங்கி வந்து கொடுத்தார். என் தங்கை பாஸ் செய்துவிட்டாள். இரண்டு நாளைக்கு முன் பக்கத்து வீட்டுக்கு வந்து தங்கியிருந்தார். நமது கம்பெனியின் முகவரியைப் பற்றிக் கேட்டார். சொன்னேன். நான் இங்கே டைப்பிஸ்டு என்று தெரியாது.

மானே: நன்றிக்குப் பதில் நன்றி செய்யப் பார்க்கிறாயா.... ஒருவேளை... காதல்....

பிரேமா: எனக்கு எப்படிக் காதல் பிறக்கும்? என் தங்கைதான் இவரைப் பூஜிக்கிறாள்!

மானே: எஸ். எஸ். எல். சி. பேப்பர் ஒரு செட் வாங்கித் தந்த நன்றிக்காக

நான் இவரை வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமா?

பிரேமா: முடிந்தால் நாம் எடுக்க விருக்கும் இரு குமாஸ்தாக்களில் ஒருவராக இவரை எடுக்கலாமே என்று கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். அதுவும் என் தங்கைக்காக சார்.

மானேஜர்: எஸ். எஸ். எல். ஸி. கேள்விப் பேப்பரை இவர் அம்பலப்படுத்தியது போல நமது அலுவலக ரகசியங்களையும் அம்பலம் செய்தால்...?

பிரேமா: சர்க்கார் அலுவலகங்களின் ரகசியம் வேறு. தனியார் ஸ்தாபனங்களில் ஊழலுக்கு இடம் இருக்காது. மேலும், ரயில் பிரயாணத்தில் கிடைத்த விற்பனைப் பொருள்தானே கேள்விப் பேப்பர்?

மானேஜர்: எவனோ நல்லவன் என்கிறாய். நல்ல குடும்பத்தைச் சார்ந்தவன் என்கிறாய் நீ...

பிரேமா: பக்கத்து வீட்டுக்காரருக்கு எட்டின உறவாம். அவர்கள் நல்லவர்கள் மிக மிக நல்லவர்கள் என்று அநுமானிக்கலாம். (மாற்றம்)

காட்சி 3

(தங்கசாமி கவலையாக இருக்கிறார். மகன் போனவனைக் காணவில்லையே, வேலை கிடைத்ததோ என்றும் கவலை. நாலைந்து நாட்களுக்கும் பின்னர் வீடு முன்கூடம்)

தங்க (எதையோ நினைவுபடுத்துகிற மாதிரி): ஏம்மா அறம், வந்த பையன் நடராசப் பயல் என்ன சொன்னான் என்று சொன்னே நீ?

அறம்: அதுக்காக வருத்தப்படாதீங்க. தம்பி வேலையோட வந்து நிற்பான்.

தங்க: வேலை கிடைக்காட்டா, நடராசப் பயலிடம் என்ன சொன்னானும்?

அறம்: காவிரிப் பாலத்திலே இருந்து விழுந்திடுவேன்...!

(இதைக் கேட்டபடியே வருகின்ற சிற்றம்பலம் இருக்கிறார்)

சிற்றம்பலம்: காவிரிப் பாலத்திலே இருந்து நீ ஏம்மா விழணும்? சே..சே! ரொம்பவும் தப்பு இந்த எண்ணம்.

அறம்: நான் விழலே. அப்பா கேட்டாங்க...

சிற்றம் (கோபத்துடன்): ஏனுங்க கிட்டயர்டு ஆனவங்க தற்கொலை செய்யவா நினைப்பாங்க? சே, சே..

தங்க: நான் விழணுமின்னு சொல்லலே. என்னோட பயல் மந்திரம் பட்டணம் போனவனைக் காணலே.

சிற்றம்: தபாலாவது வந்ததா?

தங்க: போய்ச் சேர்ந்தேன் என்று கார்டு எழுதினான். வேலை என்னாச்சு? இவன் என்ன ஆனான் என்கிற விவரம் தெரியலே!

சிற்றம்: வந்து சேருவான். அவன் திறமை உங்களுக்குத் தெரியாது. எமப்பய. கவலையை விடுங்க...

தங்க: ஏனுங்க... எனக்கு நாலு டியூஷன் ஏற்பாடு செய்யுங்களேன்.

சிற்றம்: உங்க புத்தி என்ன ஒனன் திறமா? கொண்டு வந்தா வேண்டாம், மகனைக் காணலையானு கொண்டு வா ரேஷன் என்கிறீங்களே.

தங்க: அவனாவது வேலை பார்க்கிறதாவது... சும்மா வீட்டோட இருந்திட்டுப் போறான்...

சிற்றம்: அவன் வேலை பார்க்கப் போறான். நீங்க ஜாம் ஜாம்னு கால் மேலே கால் போட்டுச் சாப்பிடப் போறீங்க. கவலையை விடுங்க.

அறம்: வேலை கிடைக்கலையானு, திரும்புகாலிலே காவிரிப் பாலத்திலிருந்து விழப்போறதாக நடராசன் கிட்டச் சொல்லிவிட்டுப் போனானும் மந்திரம்.

சிற்றம்: தங்கசாமி, நீங்க அவனைப் புண்படப் பேசறது தப்பு... இனிமே...

தங்க: பேசக்கூடாதுன்னு தீர்மானம் செய்திட்டேன்... பயலைக் காணலே!

(ஆட்டோ ரிக்‌ஷாவின் சப்தம் கேட்கிறது. அதிலிருந்து முகமலர்ச்சியுடன் மந்திரம் இறங்குகிறான்.)

சிற்றம்: பயலுக்கு நாறு வயசு. நீங்க என்னமோ காவேரி கொள்ளிடம் என்று கற்பனை செய்தீங்க... (உரத்து) வாடா டேய் மந்திரம், போன காரியம் என்ன ஆச்சு? முதல்லே சொல்லு!

மந்திரம்: என்ன ஆகும் நான் போனா?

தங்க (தவிப்புடன்): என்னடா ஆச்சு? சொல்லுடா! காயா, பழமா?

மந்திரம்: அப்பா, நான் போய்க் காயாகுமா? பழம்! வேலைக்கு ஆர்டர் வாங்கி வந்திட்டேன்.

அடம்: வாங்கி வந்திட்டயா? என்ன சம்பளம்?

மந்திரம்: கிட்டத்தட்ட இருநூறு!

தங்க: பலே! பலே! உன்னைப் போய் நான் திட்டினது தப்புடா கண்ணு.

சிற்றம்: என்னங்க ஜெனுக்கு நாலு பேரை....

தங்க: வேண்டாங்க. பட்டணத்திலே குடியேறி என் பென்ஷனோட இவன் சம்பளமும்... டேய் மந்திரம், வேலைக்குரிய கடிதம் எங்கே? எப்போ புறப்படணும்?

மந்திரம்: நாளைக்கே புறப்படணும்.

அறம்: ஏண்டா, பட்டணத்தில் இருந்தபடியே ஒரு கடுதாசி எழுதாமல் ஏன் வந்தே?

சிற்றம்: முதல் முதல்லே — அதுவும் பட்டணம் போகிறதாலே அப்பாவிடம் சொல்லி ஆசிகள் பெற்று...

(இதே சமயம் வேலையின் சேவுதற்குரிய கடிதத்தை எடுத்துத் தந்தையிடம் கொடுத்து விட்டு வீட்டுக்குள் போகிறான். அவர் பரபரப்பாகப் படிக்கிறார்.)

தங்க: அன்புடையீர், தங்கள் குமாரர் த. மந்திரம் மிகவும் புத்திசாலியான பையன். எங்கள் கம்பெனிக்கு அவனைப் போன்ற இளம் பிள்ளைகள் தேவையில்லை. அநுபவ மிக்கவர் தேவை. தாங்கள் டைப் செய்வதில் முப்பதாண்டு அநுபவம் உள்ளவர் என்று அறிய வந்ததால் தங்களை எங்கள் கம்பெனிக்கு டைப்பிஸ்டாக மாதச் சம்பளம் இருநூறில் நியமனம் செய்கிறோம். உடனடியாக ஒரு வார காலத்துக்குள் தாங்கள் வருவதைக் குறித்து விவரம் தெரிவிக்க வேணும்.

மானேஜர்.

அறம்: அப்பா... நீங்களா வேலைக்குப் போகணும்? உங்களுக்கா வேலை?

தங்க: ஏண்டா திலட்டுத் தடியா! வேலை எனக்கா?

(வீட்டுக்குள் வந்தபடியே)

மந்திரம்: எனக்குக் கிடைக்கலே. நான் அழுது விழுந்து மானேஜர் நாடியைப் பிடிச்சு வாங்கி வந்த வேலை. நீங்க அவசர புத்தியாலே உதறிப்போடாதீங்க. இந்த மந்திரம் சிரமப்பட்டு வாங்கிவந்த வேலை... இந்தாங்க.

(ஏதோ கொடுக்கிறான்)

தங்க: பிரயாணச் செலவு போகப் பாக்கிப் பணமா?

மந்திரம்: மாலை எக்ஸ்பிரசுக்கு ரயில் டிக்கட் ரிசர்வ் செய்து வந்திருக்கிறேன். பிடியுங்கள் டிக்கட்டை. உங்களோட பென்ஷன் — இந்தப் புது வேலை சம்பளம்- ரெண்டும் சேர்ந்து வந்தா... யோசிக்காதீங்க...


சிற்றம்: பிடியுங்க. பின்னே அரும்பாடு பட்டு வாங்கின வேலை. முன்யோசனையோட டிக்கட்டும் எடுத்து வந்திட்டான். பலே! பலே!.

தங்க (டிக்கெட்டை வாங்குகிறார்): சிரிக்காதீங்க சிற்றம்பலம். உழைக்கிற உடம்பு உழைச்சுக்கொண்டே இருக்க வேண்டும். அப்பா மந்திரமூர்த்தி உன்னைக் குற்றம் சொல்லிப் பயனில்லை. எருது நோவு காக்கைக்குத் தெரியாது...தெரியாது என்ன? தெரிய வேண்டாம்!





"என்ன சார் இது? நாளும் கிழமையுமா எதற்கு இவர்கள் உங்க வீட்டு வாசல்லே நிக்குறாங்க?"

"இரையாதீர்கள்! இவாள்ளாம் என்னுடைய மாப்பிள்ளைத் தோழர்கள். தலைதீபாவளிக்காக வந்திருக்கா."



CONSISTENT TOP QUALITY
BEHIND every genuine MICO PRODUCT
Every genuine MICO part is
Tried for Quality,
Tested for Reliability and
Trusted for Dependability
Spark Plugs • Fuel Injection Pumps & Nozzle Holders • Nozzles • Filters • Filter Inserts • Elements & Delivery Valves • Spare Parts.
MC-CD/10
MICO®
LICENCE BOSCH
MOTOR INDUSTRIES CO. LTD.,
BANGALORE.
Sales Houses at:
BOMBAY-2: 41, Queen's Road
CALCUTTA-16: 91-A, Park Street
MADRAS-2: 1/155, Mount Road
NEW DELHI-1: Ghaziabad Engg. Co., 29 A/1, Asaf Ali Road


KIRON
THE LAMP THAT LIGHTS & LASTS
KIRON
கிரான் லாம்ப்
தயாரிப்பாளர்கள் :
பாரத்
எலெக்ட்ரிகல்
இண்டஸ்ட்ரீஸ் லிட்.,
19, ராஜேந்திர நாத்
முகர்ஜி ரோடு
கல்கத்தா - 1
ஏஜெண்டுகள் :
தி ஓரியண்டல்
மெர்க்கண்டைல்
கம்பெனி லிட்.
கல்கத்தா
பம்பாய்
மதராஸ்
டில்லி
கான்பூர்
OF-2-65


பார்கோ
கேஸ் மாண்டில்கள்
சிறந்த ஒளிக்கும்,
நீடித்த சேவைக்கும்
தயாரிப்பவர்கள் :
பார்கோ மாண்டில் ப்ராடக்ட்ஸ்
பாந்த்ரா-பம்பாய்-50 AS.


புதுநாடு கண்ட தீரர்-1
விஜயா


புது நாடு கண்டதீரர் - 2


புது நாடு கண்ட தீரர்.3


புது நாடு கண்ட தீரர்.4


எமது தீபாவளி வாழ்த்துக்கள்
ஸ்தாபிதம்: 1925
திண்டுக்கல்
அங்கு விலாஸ்
M.V. முத்தையா பிள்ளை (FIRM)
வாசனைப் புகையிலை
தந்தி "அங்குவிலாஸ்"
ரிஜிஸ்டர் 12700 149348 நம்பர்கள்
போன் நிர். 71.
1925
1935
1945
1955
1965


WELCOME !
Britannia Biscuits are always welcome. Crisp—delicious—oven-fresh and in the widest range of varieties made in India. Plain, cream filled, sweet, spicy or salty. All delicious and all high quality biscuits. That's why Britannia Biscuits are better biscuits—always welcome.
BRITANNIA
BISCUITS

சக்கர வழிபாடு

வி. கோபாலன்

சக்கர வழிபாடு மிக இரகசியமான ஒரு சமய மரபாகும். இரகசியம் என்பதாலே பெருமை மிக்கது; புகழும் மிக்கது.

வார்த்தைகளால் கானம் செய்கிறோம். வார்த்தையே இல்லாமல் வெறும் ஒலி வடிவமாகவும் ஆலாபனை செய்து மகிழ்வூட்ட முடிகிறது. அதேபோல் உருவத்தில் வழிபடும் கடவுளை அவயவங்கள் இன்றி வெறும் வரி வடிவாலும் அடையவே சக்கர உபாஸனை ஏற்பட்டது. பச்சிலைகளில் சிலவற்றுக்கு மட்டும் மருத்துவ குணம் இருப்பதுபோல், சொற்களில் வேத மந்திரங்களுக்கு மட்டும் விசேஷ வீரியம் இருப்பது போல், வரி வடிவங்களில் தம் மகத்தே அபரிமித ஆன்ம சக்தியைக்கொண்டனவே சக்கரங்கள்.

சக்கர வழிபாடு முக்கியமாக தேவியைச் சார்ந்த தந்திர சாஸ்திரத்தில் இடம் பெறுகிறது.

உலகுக்கெல்லாம் தாயும் தந்தையுமான பார்வதி — பரமேசுவரர் சத்திய வடிவாய், தத்துவ முடிவாய், பேதமற்ற ஒரே பரம் பொருளாய் எழுந்தருளி மங்கள மாட்சிமை புரியும் அற்புத தெய்வ சான்னித்தியத்தைப் புலப்படுத்தும் இரகசியம் அது. சக்தியும் சிவமும் மாற்றமற்ற ஒருமையில் ஒன்றாய்க் கலந்து அருள் ஒளிரும் சத்தியக் கோலத்தின் ஞானபீடம் இரகசியமான தத்துவ அரங்கமல்லவோ?


பிரபஞ்சத்துக்கு மேலே 'சஹஸ்ர கமலம்' என்னும் ஆயிரம் இதழ்களால் மலர்ந்த மலர்ப் பீடம் இருக்கிறது. அங்கே வண்ண மயமான பூரண ஒளிக் கதிர்களுடன் மிளிரும் சந்திர மண்டலம் இருக்கிறது. அந்த ஒளி மண்டலமே சிவசக்தி உறையும் மங்கல கமலமான ஸ்ரீ சக்கரம் என்பது மிக இரகசியமான விஷயம். ஸ்ரீ சக்கரம் சக்தி தேவியின் மங்கலபுரியாகிய ஸ்ரீபுரத்தை வடிவாகக் கொண்டது. சிவ சக்தி தம் மெய் வடிவில் ஆறு சக்கர சக்திகளின் மூலம் பிரபஞ்சச் செயல்களைத் தோற்றுவிக்கும் இரகசிய அரங்கம் ஸ்ரீ சக்கரம். பிரபஞ்சத்தின் உருவகமே மானுட உடலம் எனக் கொண்டு இச் சக்கரங்களையும் முடிவான முக்தி நிலையையும் சரீரத்திலேயே யோக சாதனை மூலம் அனுபவித்த சாதகர்களும் உண்டு.

ஃ ஃ ஃ

தெய்வ அம்சத்தைச் சக்கர வடிவில் கொண்டு வழிபடும் மரபு இந்து சமயத்தின் சைவ, வைணவப் பிரிவுகளிலும் பிற மதங்களான பௌத்த, ஜைன நெறிகளிலும் இன்றளவும் தொடர்கிறது. சிவபெருமானைத் தெய்வமாகக் கொண்டு வழிபடப் பெறும் சிவ சக்கரம் 'ஆலவட்டம்' எனப்படுகிறது — சக்தியையே தனிப் பெரும் தெய்வமாகவும், இச்சை, கிரியை ஞானம் எனும் முச் சக்திக்கும் முதற் பொருளாயும் போற்றும் சக்தி உபாசகர்களான சாக்தர்கள் வழிபடும் சக்தி சக்கரம் ஸ்ரீ சக்கரம் எனப்படுகிறது. ஸ்ரீ சக்கரத்தில் தேவி தன் நாயகன் சிவ பெருமானோடு இணைந்து மாட்சிமை புரிவதாக வழிபடப் பெறுகிறாள். திருமால் தம் திருக்கரத்தில் சக்கர ஆயுதத்தையே சிறப்பாகக் கொண்டவர். திருமாலின் சக்கரத்தையே திருமாலாகக் கொண்டு சுதர்சனர் என்ற திருநாமத்தில் வைணவர்கள் போற்றுவர். ஞானம், தர்மம் ஆகியவற்றுக்கொரு விளக்காகப் பௌத்தர்கள் போற்றும் சக்கரம் தர்ம சக்கரம் எனப்படுகிறது. போற்றுதற்குரிய தீர்த்தங்கரர்களின் வடிவைப் பொறித்த மகா சக்கரத்தை ஜைனர்கள் வழிபடுவர். இன்னும் சக்கரத்தைத் தெய்வ அம்சமாக வணங்கி வழிபடும் மரபு கிரீஸ், எகிப்து ஆகிய பிற நாடுகளிலும் இன்றளவும் தொடர்கிறது என்று அறிந்தால் பலருக்கு வியப்பாக இருக்கும்.

இறைவனின் சக்கர அம்ச வழிபாடு பாரத தேசமெங்கும் பண்டை நாட்களிலிருந்து வெகுவாகச் செல்வாக்குப் பெற்றிருந்த தெனினும், குறிப்பாகத் தென்

ஷட்கோண சக்கரம்



சக்தி தேவி



ஜைனர்களின் மஹா சக்கரம்



னுட்டில் சக்திக்கு உரிய ஸ்ரீசக்கர வழிபாடும் திருமாலுக்குரிய சுதர்சன சக்கர வழிபாடும் இன்றளவும் தனிச் சிறப்பு உடையவை.

ஃ ஃ ஃ

'பிரம்மம்' என்று சொல்லும் பரம் பொருளுக்கு வடிவ மொன்று மில்லே; அது ஆண் பெண் எனும் பேதங்கள் இல்லா



ஸ்ரீசக்கரபீடமுள்ள குற்ருலம்பிகை ஆலயத்தில்

தது. அந்தப் பரம்பொருளுக்குத் 'தான்' என்ற எண்ணமு மிருப்பதில்லே. அப் பரம் பொருளான சிவபெருமான் விமர்சமாகிற கண்ணுடியில் தன்னேப் பார்த்துக் கொள்ளும்போது அவருக்கே 'அஹம்' என்ற பாவம் ஏற்படுகிறது என்பர். இப்படித் தன்னேப் பற்றித் தானே ஆராய்ந்து, தான் என்ற எண்ணம் கொண்ட பரம்பொருள் காமேச்வரர் எனப்படுகிறார். அவருக்குத் 'தான்' என்ற எண்ணம் தானுகத் தோன்றவில்லே. அவரது 'அஹம் பாவத்'துக்குக் காரணம் விமர்சமாகிற சக்தி. அவள் காமேச்வரி எனப்படுகிறள். அவள் பர அகந்தா ரூபமானவள். இப்படி இறைவனுள்ளே ஆசை அலேகளேத் தூண்டி விடும் சக்தியே உலகைப் படைக்க வேண்டும் என்ற இறைவனின் ஆசைக்கும் காரணமாகிறள். சக்தி அல்லால் சிவன் இல்லே என்ற தத்துவத்தைச் சக்தியின் பர அகந்தா ரூபத் திருவிளேயாடல் மெய்ப்பிக்கிறது.

தேவியின் சக்தியே பிரபஞ்சத்தின் எச் செயலுக்கும் அடிப்படையானது என்ற கொள்கை கொண்டவர்கள் சாக்தர்கள். சக்தி தேவியைப் போற்றி வழிபடும் சாஸ்திரம் ஸ்ரீ




புத்த தர்ம சக்கர வழிபாடு (பார்ஹுத்)

வித்தை எனப்படும். ஸ்ரீ வித்தை எல்லா மந்திரங்களுக்கும் தத்துவங்களுக்கும் அடிப்படையான 'மூல மந்திரம்' என்று கூறுவர்.

ஸ்ரீ வித்தை மிகத் தொன்மையான காலத்திலிருந்து பாரத பூமி யெங்கும் புகழ் பெற்ற மார்க்கமா யிருந்துள்ளது. வால்மீகி மாமுனிவரின் இராமாயண காவியத்தில் விசுவாமித்திர முனிவர் கானகத்தில் இராமபிரானுக்கும், இளையவர் லட்சுமணருக்கும் ''பலா — அதிபலா'' என்னும் இரு மந்திரங்களே உபதேசித்ததாகக் கூறப்படுகிறது. அம்மந்திரங்கள் ''சர்வ ஞானஸ்ய மாதரம்'' — எல்லா ஞானங்களுக்கும் தாயானது என்றும், பிரம்மத்திறைல் உபதேசிக்கப்பட்ட மிக ரகசியமான மந்திரம் என்றும் சொல்லப்படுகிறது. அம்மந்திரங்களே மகாஞான வித்தை என்று பெரியவர்கள் சொல்வார்கள். அவ்வித்தை மனித அறிவுக்கு அப்பாற்பட்டதாம். சக்தி தேவியின் தத்துவ உட்பொருளேக் கொண்டதே அம்மந்திரங்கள் என்பதில் ஐயமில்லே. ஸ்ரீ வித்தை அன்னையின் பெருமைகளே உள்ளடக்கிய மந்திர சாதனம்; சக்தியின் இணேயற்ற பொலிவையும், மங்கலமாட்சிமையையும், அருட் கனிவையும் பிரதிபலிக்கும் மற்ெருரு சாதனம் ஸ்ரீ சக்கரம்.

சக்தி தேவியின் பேராற்றலேயும், அவள் உறையும் ஸ்ரீபுரத்தையும் பற்றிக் குறிப்பிடும் நூல்களுள் ''பிரஹ்மாண்ட புராணம்'' முக்கியமானது. நாற்பத்து நான்கு அத்தியாயங்கள் கொண்ட பிரஹ்மாண்ட புராணத்தில் நாற்பது அத்தியாயங்கள் ''லலிதோபாக்யாயனம்'' என்ற தலேப்பில் தேவி லலிதையின் மாட்சிமையை விவரிக்கின்றன.

தாரகன் என்னும் கொடிய அரக்கர்கோன் தான் பெற்ற வரங்களால் பெரும் பலம் பெற்று தேவர்களுக்குச் சொல்லொணுத் துன்பம் விளேவித்தான். தேவர்கள் திருமாலிடம் சென்று முறையிட்டனர். திருமால் தம் மருமகன் முருகன் விரைவிலேயே தோன்றித் தாரகனே அழிக்க வேண்டுமெனக் கருதுகிறர். அவர் மன்மதனே நாடி, யோகத்தில் ஆழ்ந்திருந்த சிவபெருமான் மீது மலர்க் கணே தொடுக்கக் கூறினர். காமனின் கணே யோகேசுவரனுக்குச் சீற்றத்தை விளேவித்தது. சிவபெருமான் தம் நெற்றிக் கண்ணேச் சினம்




சக்கரத்தில் அக்னி

கொண்டு இறக்க எதிரே நின்ற மன்மதன் சாம்பலானான்.

பூதகணத்தைச் சேர்ந்த சித்ரகர்ணன் மனிதனின் சாம்பலைத் திரட்டி அதனால் ஓர் அழகிய சித்திரம் வரைந்தான். அவ்வழகு ஓவியத்தைச் சிவபெருமான் கண் மலர்ந்து கண்டதும் ஓவியம் உயிர் பெற்றது. உயிர் கொண்ட அந்தச் சித்திர உருவன் சிவனை நோக்கி ஆறாயிரம் ஆண்டுகள் தவம் பூண்டு மிக்க வரங்கள் பெற்றுப் பண்டாசுரன் என்னும் பெயரில் சக்தி மிக்க அசுரனானான்.

பண்டாசுரனால் தேவருக்கும், மூவருக்கும் இன்னல்கள் தோன்றலாயின. ஈரேழுலகுக்கும் தானே அதிபன் என்று எழுச்சி பெற்று நின்றான் பண்டாசுரன். அரக்கனை வெல்ல இந்திர தேவன் நாரத முனிவரின் சொற்படி பராசக்தியை வேண்டி நெடுந்தவம் புரிய, சிவன் — விஷ்ணு — பிரம்மா ஆகிய மூவரின் ஆற்றலும் இணைந்த லலிதா தேவியாகப் பராசக்தி தோன்றிப் பண்டாசுரனை வெல்கிறாள். வெற்றி பெற்ற ஈசுவரிக்கு ராஜ ராஜேசுவரியாகப் பட்டாபிஷேகம் செய்ய




யோக நரசிம்மர் (திருகோண சக்கரம்)

தேவர்கள் விரும்புகின்றனர். எனினும் கன்னி ஒருத்தி அரச பீடம் ஏறலாகாது என்பதால், காமேசுவரரான பரமசிவனுக்குத் திருமால் லலிதையை மணம் முடிக்கிறார். நாயகரோடு ஸ்ரீபுரத்திலிருந்து உலகுக்கெல்லாம் அருளொளி வீசித் திகழ்கிறாள் லலிதை.

தேவி லலிதையின் பெருமை ''பிரஹ்மாண்ட புராணம்'' கூறும் தேவியின் வெற்றித் திருவின் காரணத்தால் சக்தியின் பல வடிவங்களுள் பிரதானமாகவும், பிரபலமாகவும் ஆனது. காஞ்சிபுரத்தில் கோயில் கொண்டுள்ள சக்தியின் லலிதா காமாட்சி வடிவம் அரக்கனைத் தேவி வென்ற பிறகு காட்சி தரும் வெற்றித் தோற்றம் எனப்படுகிறது.

சக்தி தேவியிடம் பெரும் பக்தி கொண்டு ஸ்ரீ வித்யை ஸ்ரீ சக்கர வழிபாட்டில் முதன்மையுடன் குறிப்பிடப்படுபவர்கள் சாட்சாத் பரமசிவனும், முனிபுங்கவர்களான துர்வாசர், அகஸ்தியர், ஹயக்ரீவர் ஆகியோரும் ஆவர். காளிதாசர் சக்தியின் பெரும் பக்தர் என்பது பிரசித்தமானது.

ஆதி சங்கரர் சக்தியின் தனிப் பெரும் அடியார் என்றால் மிகையாகாது. உலகைத் துறந்து, பந்தங்களை விலக்கி, ஞானம் ஒன்றே மார்க்கமெனக் கொண்ட அத்தவமுனி பரம்பொருளை உலகெல்லாம் காக்கும் தாயாகக் கண்டபோது விசேஷமான பக்தி செலுத்தினார். சக்தி என்பது பிரஹ்ம வடிவின் மெய்ப்பாங்கே என்பதை ஸ்ரீ சங்கரர் உலகுக்கு உணர்த்தினார். சக்தியின் பெருமையையும், அழகையும், வீரத்தையும், ஞானத்தையும், அருளையும், கருணையையும், முதன்மையையும், தலைமையையும் ஆதி சங்கர பகவான் பாருக்கு உணர்த்தினார். 'ஷண்மதங்கள்' என்று அவர் வகுத்த ஆறு மெய்யான வழிபாட்டு நெறிகளில் சாக்தம் எனும் சக்தி வழிபாடு ஒன்று. சங்கராசாரியரின் இணையற்ற தேவி பக்தியின் பிரதிபலிப்பாக மலர்ந்த துதி மலர்களின் பக்திமணம் நாடெங்கும் பரிமளித்து சக்தி தேவி வழிபாடு புதியதொரு நிலையை அடைந்தது. கோர வடிவினளாய், உக்கிரத் தன்மையினளாய்க் கூறப்பட்ட சக்தியை அருட் கனிவின் பரிபூரண நிலையில் லலிதா காமாட்சியாக மக்களுக்குக் காட்டிய



ஷட்கோண சுதர்சன சக்கரம்



பதினாறு கரங்களுடன் சுதர்சனர்

வரில் முக்கியமானவர் சங்கரர். லலிதையின் பெருமைகளைப் போற்றும் ''லலிதா திரிசதி'' என்னும் முந்நூறு நாமாக்களுக்கு ஆதி சங்கரர் அளித்துள்ள பாஷ்யமும், அற்புதக் காவியத் துதியாகிய ஸௌந்தர்ய லஹரியும், லலிதா காமாட்சி வழிபாடு பிரசித்தி பெற வழிகோலியது எனலாம்.

தேவி எழுந்தருளியிருக்கும் ஸ்ரீபுரத்தையே வடிவமைப்பாகக் கொண்ட காஞ்சிபுர நகரிலே பண்டாசுரனை வென்று வெற்றித் திருக் கோலத்தில் அமர்ந்துள்ள லலிதா காமாட்சி தேவியின் திருவடிகளில் தனித்ததோர் ஈடுபாடு கொண்டிருந்தார் தவமுனி சங்கரர். அக்கிரமமே வடி

வான அரக்கர்கோனை வென்று சத்திய ஆவேசக் கோலத்திலிருந்த தேவியின் உக்கிர வடிவை நளினமாக்குவதற்காக தேவியின் சன்னிதானத்திலேயே அவளது மங்கல மாட்சிமையின் பிரதிபலிப்பான ஸ்ரீ சக்கரத்தை பிரதிஷ்டை செய்தார் அவர். அச்சக்கரத்தின் உக்கிர சக்தியை அடக்கினார். கனிந்த கோலத்தில் காமாட்சியை எழுந்தருளச் செய்தார் சங்கரர். இந்த ஸ்ரீ சக்கர பிரதிஷ்டையைப் பல நூல்கள் குறிப்பிடுகின்றன.

பரதேவதையை லலிதா மகா திரிபுர சுந்தரியாகத் துதித்து சங்கரர் பாடிய ''சௌந்தர்ய லஹரி'' எனும் பாசுர மாலை சக்தியின் இயல்பு, ஒப்புயர்வற்ற செயல்கள், ஆறு சக்கர சக்திகளின் மூலம் நாயகன் சிவபெருமானோடு சமயா சக்தியாக அபேத நிலையில் ஒருமித்துப் பிரபஞ்சச் செயல்களை நிறைவேற்றும் அற்புதம் ஆகியவற்றை உரைக்கிறது. சிகரிணி சந்தத்தில் அமைந்துள்ள அந்நூல் ஸ்ரீவித்யை, இந்து தந்திரிக இலக்கிய நூல்களுள் முக்கியமானது.

ஸ்ரீ சக்கரம் எனும் இரகசியமான மாளிகையில் சக்தி உறைகிறாள் என்று கூறுகிறது சௌந்தர்ய லஹரி. ஸ்ரீ சக்கரம் மேரு மலையை வடிவாகக் கொண்டது. அது ஒன்றோடொன்று சந்திக்கும் மேற்புற, கீழ்ப்புறக் கோணங்களால் ஆனது. கணித நுணுக்கப்படி வரையப்படும் ஸ்ரீசக்கரம் நாற்பத்து மூன்று முக்கோணங்களை உள்ளடக்கியது. அவற்றைச் சுற்றி எட்டு தளம். எட்டு தளத்துக்கு மேல் பதினாறு தளம். அதைச் சுற்றி மூன்று வட்டங்கள். கடைசியில் நாலு வாயில்களுடன் கூட மூன்று நேர் கோடுகளாலான சதுர வடிவம்.

முக்கோணங்களில் கீழ் நோக்கியுள்ள ஐந்து முக்கோணங்கள் சக்தி வடிவம், மேல் நோக்கியுள்ள நான்கு முக்கோணங்கள் சிவ வடிவம் என வாம கேசுவர தந்திரம் கூறுகிறது. ஆனால் லக்ஷ்மீதரர் சக்தி முக்கோணங்கள் ஐந்தும் மேல்



காஞ்சி ஆலயத்தில் ஆதிசங்கரர் திருமேனி

நோக்கி யிருக்க வேண்டுமென்றும், சிவ முக்கோணங்கள் நான்கும் கீழ் நோக்கி யிருக்கவேண்டுமென்றும் கூறுகிறார். வாமகேசுவர தந்திரப்படி வரைந்த ஸ்ரீ சக்கரத்தைத் தலைகீழாகத் திருப்பினால் லக்ஷ்மீதரர் கூறுவது போல் அமையும். ஸ்ரீ சக்கரம் வரைவதில் வெளியே இருந்து உள்ளே செல்லும் முறையாக ஸம்ஹாரக் கிரமம் என ஒன்றும், உள்ளே யிருந்து வெளியே வரும் முறையாக சிருஷ்டிக் கிரமம் என ஒன்றும் உண்டு என்று லக்ஷ்மீதரர் கூறுகிறார்.

ஸ்ரீ சக்கரத்தில் தேவியைச் சுற்றியுள்ள பல ஆவரண தேவதைகளும் எழுந்தருளி யிருக்கின்றனர். பிந்து எனும் மையத் தானத்தில் மங்கல மாட்சிமை புரிகிறாள் பராசக்தி. தேவி உறையும் இருவிடம் சிந்தாமணி கிருகத்தில் பிரும்மா — விஷ்ணு — ருத்ரன் — ஈசுவரன் — ஸதாசிவன் ஆகிய ஐந்தொழில் மூர்த்தியரைக் கொண்டமைந்த ஆசனம் எனப்படுகிறது.

தேவி தன் நாயகனுடன் இணைந்து மாற்ற மற்ற ஒரே நிலையில் ஆறு சக்கரங்களின் மூலம் புரியும் அற்புதச் செயல்களை 'சௌந்தரிய லஹரி' யில் ஆதிசங்கரர் அழகாகச் சொல்கிறார். ஆக்ஞா சக்கரத்தில் மனமாகவும், விசுத்தி சக்கரத்தில் ஆகாயமாகவும், அனாஹதத்தில் வாயுவாகவும், ஸ்வாதிஷ்டானத்தில் அக்கினியாகவும், மணிபூரகத்தில் நீராகவும், மூலாதாரத்தில் பிருத்வியாகவும் தேவி விளங்குவதைச் சொல்கிறார்.

பௌத்தர்கள் போற்றும் தர்ம சக்கரம்




ஆறு சக்கரங்களில் ஆக்ஞா சக்கரத்தில் பர சம்புவும், தேவி சித் சக்தியும் இணைந்து இருப்பதைத் தியானிப்பவர் சூரியன் சந்திரன் அக்கினி ஆகிய ஒளிக்கும் அப்பாற்பட்ட பரஞ்சோதி வடிவான தேவியுடன் ஸாயுஜ்ய பதவியில் வசிப்பார்.

ஈசுவரனின் ஆக்ஞை பிரகாசிக்கும் இடமாதலால் இது ஆக்ஞா சக்கரம் எனப்படும். அங்கே காமேசுவர மகாலிங்கத்தை இருபுறமும் ஸகுண—நிர்க்குண சக்திகள் தழுவுவதையே காசியில் விசுவநாதனுக்குத் துர்க்கையும், விசாலாட்சியும் சக்திகளாக இருப்பதில் காண்கிறோம்.

தூய பளிங்கு போன்று ஜ்வலிக்கும் தேவன் தம் தேவியுடன் இணைந்து விசுத்தி என்கிற சக்கரத்தில் ஆகாயத்தைத் தோற்றுவிக்கிறார். இச்சக்கர இறை இணையின் அருளொளி சந்திரனின் இனிய கிரணங்களைப் போன்றது; அதன் ஒளி அக இருளை வெல்கிறது. ''விசுத்தி'' என்றால் தூய்மை என்று பொருள். ஆகாயத்தின் நிர்மலத்தை இச்சக்கரத்தில் நிலைநிறுத்திய உள்ளம் எய்துகிறது. சிதம்பர க்ஷேத்திரம் ஆகாச தத்துவ உபாசனைக்குத் தலைசிறந்ததாம். இவ்வாறே ஒவ்வொரு சக்கரம் குறித்தும் 'சௌந்தரிய லஹரி' கூறுகிறது.

ஆதி சங்கர பகவான் காஞ்சிபுரத்தில் லலிதா காமாட்சி சந்நிதியில் ஸ்ரீ சக்கரப் பிரதிஷ்டை செய்த பிறகு அவ்வாலயம் தென்புலமெங்கும் பிரசித்தி பெற்றது. அதற்குப் பிறகே தென்னாட்டில் சிவாலயங்களில் சக்தி சந்நிதிகளும், சக்தி தேவிக்கென்று தனி ஆலயங்களும் ஏற்படலாயின என்று கூறப்படுகிறது. தேவிக்கென்று எழுப்பப் பெற்ற ஆலயங்கள் ''காமக் கோட்டம்'' எனப்பட்டதை ராஜேந்திர சோழனின் கல்வெட்டுக்களிலிருந்து அறியலாம். ''ஸ்ரீசக்கரத்'தைப் போன்று சக்தியின் உறைவிடமாக சக்தியின் பீடங்கள் தமிழகத்தின் பல தேவி சந்நிதிகளில் நிறுவப்பட்டன.



மூடியைச் சற்றே திருப்புங்கள் வலப்புறம்.
கிளிக்! எழுதும் முனை வெளியே வருகிறது.
மறுபடி திருப்புங்கள் வலப்புறம்.
கிளிக்! எழுதும் முனை உள்ளே போகிறது


பைலட் பால்பாயின்ட் பேனா இரண்டு மாடல்களில் கிடைக்கிறது.

ACBPG ரூபாய் 6; ACBPS ரூபாய் 5.50 (பிராந்திய வரிகள் பிரத்தியேகம்)

பைலட் வரிசையில் புதிய ரகங்கள். மிகவும் உயர்ந்த முறையில் தயாரானது ... அதிநூதன, ஸ்டிரீம்லைன்ட் வடிவம் ... பளப்பளப்பான கெமிகோல்ட் மூடி. அனுயாசமாக, ஒரே சீராக, சுகமாக எழுத ஏற்றது. கவர்ச்சியான பல வண்ணங்களில் உள்ளது. உங்களுக்குப் பிரியமானதைத் தேர்ந்தெடுங்கள்.

பரிசளிக்கவும் ஏற்றது. பைலட் பால் பாயின்ட் பேனாக்களை வாங்கிப் பரிசளிக்க மூன்று ரகப் பரிசுப்பெட்டிகள் தயாராகியுள்ளன:

ACSP-260 பேனா மற்றும் ACBPS பால்பாயின்ட் பேனா—ரூ. 17.00; ACSP-260K பேனா (14கே. தங்கநிப்) மற்றும் ACBPS பால் பாயின்ட் பேனா—ரூ. 21.50; GS 300 பேனா மற்றும் ACBPG பால்பாயின்ட் பேனா—ரூ. 24.50 பிராந்திய வரிகள் பிரத்தியேகம்.



TRADE MARK

பைலட் பென் கம்பெனி (இந்தியா) பிரைவேட் லிமிடெட்
நிர்வாக ஆபீஸ்: 'கதோலிக் செண்டர்', அரமனைக்காரத் தெரு, மதராஸ்-1

JWT/PP/3242A

ஸ்ரீவித்யை, ஸ்ரீ சக்கர வழிபாட்டில் பெரிதும் ஈடுபாடு கொண்டு, தேவி லலிதையைப் போற்றியோரில் லக்ஷ்மீதரருக்கும், பாஸ்கரராயருக்கும் முக்கியமான இடமுண்டு. மூககவி எனும் ஊமைக் கவிஞர் தேவியின் அருளால் வாக்கு வன்மை பெற்று சக்தியைப் போற்றிப் பாடிய ''மூகபஞ்சசதீ'' எனும் துதிநூல் இணையற்றதொரு படைப்பு.

ஃ ஃ ஃ ஃ

பரம்பொருளின் மகா சக்தியைப் போற்றும் மந்திர சாஸ்திரங்கள் ஒரு மனிதனின் மனத் தத்துவ சக்தியைக் கண்டுபிடித்து அதைப் பெருக்குவதை நோக்கமாகக் கொண்டவை. மனித உடலில் முதுகெலும்பின் அடி முனையிலுள்ள 'குண்டலினி' எனும் சக்தி மூலாதாரம் எனப்படுகிறது. சாதாரணமாக உறக்க நிலையில் உள்ள குண்டலினி சக்தியை மந்திர, யோக வழிகளில் எழுப்ப, அக்குண்டலினி சக்தி மேலே சென்று சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாஹதம், விசுத்தி, ஆக்ஞை எனும் சேத்திரங்களைக் கடந்து ஸஹஸ்ராரத்தை அடையும்போது ஜீவாத்மாவும் பரமாத்மாவும் இரண்டறக் கலக்கும் முக்தி நிலை விளையும் என்பர். யோக நிலையை மேற்கொண்டு முக்தி எய்த இயலாதவர்கள் அன்னையின் வடிவான ஸ்ரீ சக்கரத்தைப் போற்றி வழிபட்டுத் தேவியின் அருளைப் பெறலாம்.

ஸ்ரீ வித்யை வழிபாட்டைப் பற்றிச் சிறப்பாக பரசுராம கல்பசூத்ரம், யாமளதந்த்ரம், சுந்தரீதாபினி பஞ்சகம், பாவனோபநிஷதம், கௌலோபநிஷதம், திரிபுராமஹோபநிஷதம், பஹ்வ்ருசோபநிஷதம், தேவி பாகவதம், தேவி புராணம், காளிகாபுராணம், திரிபுரா ரகஸ்யம், சுபகோதயம், லலிதாஸ்தவரத்னம், லகுஸ்துதி, சாக்தப் பிரமோதகம், சாரதா திலகம், காமகலா விலாசம் ஆகிய நூல்கள் குறிப்பிட்டுப் போற்றுகின்றன. பைங்கள தந்த்ரம் எனும் பழமையான நூலொன்றில் ஸ்ரீ சக்கரவடிவ வழிபாடுகளைப் பற்றி விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. சக்தி தேவியே பிரபஞ்சத்துக்கெல்லாம் அடிப்படையானவள் என்று வேத காலத்திலேயே போற்றி வழிபடப் பெற்றதை பிருஹத் சம்ஹிதை ஊர்ஜிதம் செய்கிறது.

சக்திதேவி தென்னாட்டில் பல ஆலயங்களில் தனது மங்கலபுரியான ஸ்ரீபுரத்தை வடிவாகக் கொண்ட ஸ்ரீசக்கரத்தில் எழுந்தருளியிருக்கிறாள்.

சங்கரர் தமது அத்வைதக் கொள்கையின் நிலைக்களனாக நிறுவிய ஐந்து மடங்களில் காஞ்சி காமகோடியிலும் சிருங்கேரியிலும் தேவி ஸ்ரீசக்கரத்தில் எழுந்தருளி அருள் புரிவதை அனைவரும் அறிவர்.

திருச்சிராப்பள்ளியில் ஜம்புகேச்வரத்தில் அன்னை அகிலாண்டேச்வரியின் திருச்செவியில் மிளிரும் தாடங்கம் ஸ்ரீசக்கர வடிவில் இருப்பது விசேஷமானது. கலியுகத்தில் தேவியினுடைய சக்தியை மன்னுயிர்களால் தாங்க முடியவில்லையாதலால், ஆதிசங்கரர் ஸ்ரீ சக்கர வடிவில் தாடங்கம் செய்து அன்னைக்கு அணிவித்து அவளை சாந்தமூர்த்தமாக எழுந்தருளச் செய்தார் என்பார்கள். அம்பிகையை நோக்கி, 'உன்னுடைய தாடங்கத்தின் மகிமையால்தான் ஆலகால முண்டும் பரமேசுவரன் பிழைத்திருக்கிறான்' என்று சங்கரர் சௌந்தர்யலஹரியில் சொல்வதும் இங்கு நினைத்தற்பாலது.

திருச்சிராப்பள்ளி தாயுமானவர் ஆலயத்தில் எழுந்தருளியுள்ள சுகந்தகுந்தளாம்பாளின் சந்நிதியே ஸ்ரீ சக்கர வடிவத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. பெருமை மிக்க ஸ்ரீசக்கரத்தையும் அதன் மையத்தில் தேவி உறைவதையும் மெய்ப்படுத்திப் பிரதிபலிக்கும் அற்புதத்தை அங்கே காண்கிறோம். கைலாயத்திலிருந்து சங்கரர் கொணர்ந்ததாகக் கூறப்படும் ''சௌந்தர்யலஹரி''யின் முதல் நாற்பத்தொரு சுலோகங்கள் அவ்வாலயத்தில் கல்லில் பொறிக்கப்பட்டிருக்கின்றன.



ஒன்றாகியே வென்றோம்!

''மஹி''

பருவத் தொரு உருவம் — அந்த
உருவத் தொரு கருவம்.

பருவத் தையும் உருவத் தையும் கருவத் தையும் — ஏந்தும்
மருமத் தனம் தருமற் றொரு துருவத் தினை — சார்தும்

கனவில் ஒரு நினைவு — அந்த
நினைவில் ஒரு முனைவு

கனவைத் தரு நினைவுக் கொரு முனைவைப் பெற வண்ணம்
மனத்துக் கொரு இணைவைத் தர உனைவைத் தொரு எண்ணம்

கெஞ்சில் ஒரு கொஞ்சல் — அந்தக்
கொஞ்சல் தரும் அஞ்சல்

கெஞ்சைக் கிழி கொஞ்சல் விழி அஞ்சல் மொழி — கண்டு
விஞ்சை செயும் பஞ்சை மனம் புண்செய் திடல் — உண்டு

வந்தேன் உயிர் நொந்தேன் — உனைத்
தந்தேன் எனும் சொந்தேன்

தந்தே னெனும் சொந்தே னையும் தந்தா யிலை — என்றே
தந்தோ மென வந்தா டிட ஒன்றா கியே — வென்றோம்



மதுரையில் மீனாட்சிதேவி எழுந்தருளியுள்ள பீடம் ஸ்ரீ சக்கரத்தின் பிந்துஸ்தானம் எனப்படுவதுண்டு.

தஞ்சை பிரகதீசுவரர் பெரிய கோயிலில் உள்ள ஸ்ரீ சக்கரத்தில் தேவியின் பாதுகைகள் காண்கின்றன. நித்திய பூஜைகள் இப்பாதுகா சக்கரத்துக்கே.

சிதம்பரத்தில் பிரசித்தி பெற்ற 'சித்ஆகாச ரகசியத்'தில் சிவபெருமானின் சக்கரமும், சக்திதேவியின் சக்கரமும் இணைந்த சம்மேளன சக்கரம் எனும் அபூர்வ சக்கரம் வழிபடப் பெறுவதாகக் கூறுவர்.

திருவாரூரில் தேவி கமலாம்பிகை ஸ்ரீ சக்கரத்தில் எழுந்தருளியுள்ளாள்; குற்றாலத்திலும் ஸ்ரீ சக்கரத்தில் மங்கலமாட்சிமை புரிகிறாள் தேவி.

ஸ்ரீ வித்யை வழிபாட்டில் மிக ஈடுபாடு கொண்டு, தேவி வழிபாடு குறித்து நிரம்ப எழுதிய பாஸ்கர ராயரது குலதெய்வமெனப்படும் சந்திரலாம்பிகையின் ஆலயம் ஸம்நதி க்ஷேத்திரத்தில் உள்ளது. சந்திரலாம்பிகையின் அவ்வாலயம் ஸ்ரீ சக்கர வடிவில் அமைக்கப் பட்டிருக்கிறதென்று கூறுவர். இங்ஙனம் சக்தி தேவி பல இடங்களில் ஸ்ரீ சக்கரத்தில் எழுந்தருளி அருள் பாலிக்கிறாள்.

முதலாம் சந்திரகுப்தனின் நாணயமொன்றில், சக்கரத்தில் தேவி உள்ளது போன்ற சித்திரிப்புக் காணப்படுவதையும் இங்கு குறிப்பிடலாம்.

ஃ ஃ ஃ ஃ

சக்தியைப் போன்றே சிவபிரானும் சக்கரவடிவில் பல இடங்களில் வழிபடப்பெறுகிறார். மைசூர் மாநிலத்தில் காவிரிபுரத்தில் காவிகங்காதேசுவரர் ஆலயத்தில் பிரும்மாண்ட ஸ்தம்பத்தின் மீது காணும் சிவசக்கரம் ஆலவட்டம் என்ற பெயரில் வழிபடப்படுகிறது.

நவக்கிரக தேவதைகளை யந்திர, சக்கர வடிவங்களில் வழிபடும் மரபு பாரத தேசமெங்கும் உண்டு. கங்கை கொண்ட சோழபுரத்தில் சூரியதேவனின் கமல யந்திரத்தைக் காண்கிறோம். ஏழு குதிரைகள் பூட்டிய ரதத்தில் பரிவாரங்கள் சூழ உதய யாத்திரையைத் தொடங்கும் சித்திரிப்புடன் கூடிய ஒளிதேவனின் கமல யந்திரம் கருத்தைக் கவருகிறது.

ஃ ஃ ஃ ஃ

திருமாலின் அம்சமாக வைணவர்கள் சிறப்பாகப் போற்றும் சக்கரம் சுதர்சனம் எனப்படுகிறது. சக்கரத்துக்கு உரிய தெய்வம் சுதர்சனர். இவர் உக்கிர வடிவினர்; அக்கிரமத்தையும், அறியாமையையும் அழிக்கும் இயல்பினர். சுதர்சனரை ஆழ்வார்கள் சக்கரத்தாழ்வார் என்று குறிப்பிடுவார்கள். விஷ்ணுவின் சக்கர அம்சத்துக்குச் சக்கரராயர் என்றும் நாமமுண்டு.

காஞ்சீபுரமும், திருக்குடந்தையும் விஷ்ணுவின் சக்கர அம்சத்துக்குச் சிறப்பாக உரிய தலங்கள். காஞ்சியில் அஷ்டபுஜசுவாமி எனப்படும் எண்கரங்கள் கொண்ட பெருமான் திருமாலின் சக்கர சக்தி என்று போற்றப்படுகிறார். இவருக்குச் சக்கரராயர் என்றும் ஒரு பெயருண்டு. திருக்குடந்தையில் கோயில் கொண்டுள்ள சக்ரபாணி திருமாலின் சுதர்சனர் வடிவம் என்று கூறப்படுகிறார்.

ஆகம நூல்கள் பலவற்றில் சுதர்சன சக்கரவடிவைப் பற்றி நிரம்பச் சொல்லப்படுகிறது: ''விஷ்ணு தர்மோத்தரம்'' எனும் நூலில் சக்கரபுருஷர் வட்ட விழிகளும், எடுப்பான வயிறும் கொண்ட வடிவினர் என்று வருணிக்கப்படுகிறார். சுதர்சனர் பலவகை ஆபரண அணிகள் தரித்துக் கவர்ச்சி மிளிர, திருமாலின் எண்ணங்களை நிறைவேற்றும் ஆவல் ததும்பும் பாவனையில் சிற்பமாக அமைக்கப்பட வேண்டுமென்கிறது அந்நூல். விஷ்ணுவின் இடக்கரம் சக்கர புருஷரின் தலை மீது உள்ளதாகச் சித்திரிக்கலாம் என்கிறது.

சக்கரப்புருஷர் என்பது திருமாலின் சக்கர அம்சம்; சக்கரசுதர்சனர் என்பவர் திருமாலே வடிவானவர்.

சுதர்சனர் எட்டு அல்லது பதினாறு கரங்களுடன் பயங்கரத் தோற்றத்துடன் சக்கரத்தில் எழுந்தருளுகிறார். ''ஷட்கோண சக்கரம்'' எனும் ஆறு கோணத்தின் மையத்தில் சுதர்சனரும், அதற்குப் பின்புறத்தில், ''திரிகோண சக்கரம்'' எனும் முக்கோணத்தினுள் யோக நரசிம்மரும் அருள்பாலிக்கின்றனர்.

சுதர்சன சக்கரத்தைப் பற்றிய மற்றொரு விவரணை 'சில்பரத்தினத்'தில் காண்கிறது. ''சக்ரரூபி விஷ்ணு அவரது கரங்களில் ஆயுதங்கள் ஏந்தி, இருபது தீச்சுடர் போன்று ஒளிரும் ஜடைகளுடன் சிற்பங்களில் சித்திரிக்கப்பட வேண்டும். அவரது மேனி சூரியனைப் போன்று ஒளிமயமானது; உலகெலாம் இருளைவிரட்டி அருளைப் பொழியவல்லது.'' மற்றொரு நூல் சுதர்சனர் திருமாலின் உக்கிர வடிவைப் பிரதிபலிக்கும்வண்ணம் பதினாறு திருக்கரங்களுடன் சங்கு, தனுசு, பரசு, வஜ்ரம், பாணம், சூலம், பாசம், அங்குசம், அக்னி, கட்கம், கேடயம், ஹலம், முசலம், கதை, குந்தம் ஆகிய ஆயுதங்கள் தரித்துக் காணப்பட வேண்டும் என்கிறது அந்நூல். சுதர்சனரின் வண்ணம் பொன்னிறம் என்கிறது.

சுதர்சன சக்கரங்கள் பலவற்றுள் நின்ற திருக்கோலத்தில் எண் கரங்களுடன் உக்கிர வடிவ சுதர்சனரையும், சக்கரத்தின் பின்புறத்தில் யோக நரசிம்மரையும் காண்கிறோம். சில அபூர்வ வகைச் சக்கரங்களில் பதினாறு கரங்கள் கொண்ட சுதர்சனரையும், பின்புறத்தில் இரண்யனைத் தொடைமேல் தாங்கி அதர்மத்தைக் கிழித்தெறியும் உக்கிர நரசிம்மரின் சத்திய ஆவேசக் கோலத்தையும் காண்கிறோம். ஒரு வகைச் சக்கரத்தில் சுதர்சனர் இன்றி, இறைவன் அம்சமான, ''ஷட்கோணங்கள்'' மட்டும் காண்கின்றன. மற்றொரு வகைச் சக்கரம் கோணங்கள் இன்றி சிம்ம முகத்தை மட்டும் கொண்டுள்ளது.

சுதர்சனப் பெருமானின் மூல, உற்சவமூர்த்தங்கள் பலவற்றை வைணவ ஆலயங்களில் காணலாம். சுதர்சன சக்கர சக்தியின் தத்துவப் பெருமைகளைப் பலர் போற்றிப் பாடியிருக்கின்றனர் : வேதாந்த மகாதேசிகர் இயற்றிய, ''ஸ்ரீ சுதர்சனாஷ்டகம்'' சுதர்சனருக்கு இணையற்றதோர் அஞ்சலி மலர்.

ஃ ஃ ஃ ஃ

சக்கர சக்தியைப் பௌத்தர்களும், ஜைனர்களும் கூடப் போற்றி வழிபடுகின்றனர். புத்தர்பெருமான் ஞானமார்க்கத்துக்கும், தர்மநெறிக்கும் ஒரு விளக்காகத் ''தர்மசக்கர''த்தில் திகழ்கிறார் என்பது பௌத்தர்களின் நம்பிக்கை. பௌத்தர்கள் தர்ம சக்கரத்தை வழிபடும் காட்சியைப் பல பௌத்தக் கலைக்கூடங்களில் — சிறப்பாக அமராவதி, பார்ஹூத் ஆகிய இடங்களில் காண்கிறோம். 'பஞ்சபரமேஷ்டின்' எனும் ஐந்து மகாஞானம் பெற்ற தீர்த்தங்கரர்களைச் சக்கர வடிவில் கொண்டு, அதனை மஹாசக்கரம் என்று ஜைனர்கள் போற்றி வழிபடுவர்.

இங்ஙனம் சக்கரசக்தி காலத்தையும், சமயப்பிரிவுகளையும் கடந்து நிற்கிறது. சக்கர வழிபாடு நம் ஆன்மிகச் செல்வத்தையும், கலாசார மேன்மையையும், ஒரு மகாசக்தியிடம் கொண்ட மாற்ற முடியாத நம்பிக்கையையும் பிரதிபலிக்கிறது. அந்தப் பிரதிபலிப்பு பட்டொளி வீசிப் பறக்கும் நம் தேசியக் கொடியின் நடுவே மிளிரும் தர்மசக்கரத்தில் எதிரொலிக்கிறது எனலாம். அந்தச் சக்கர சக்தியானது காலச்சக்கரத்தின் சுழற்சியில் நம் ஆன்மிகப் பெருமைகள் அழிந்துவிடா வண்ணம் காக்கும் என்று நம்புவோம்.

மணி எட்டு அடித்து இருபது நிமிடங்களாகி விட்டன. பதினைந்து நிமிடங்களாக முக்கிக் கொண்டும் முனகிக் கொண்டும் இருந்த ஆஸ்த்மாக்காரன் சென்றுவிட்டது. அவன் சென்றபின் நிலவிய மௌனத்தை அநுபவித்துக் கொண்டே டாக்டர் பாமா உட்கார்ந்திருந்தாள். மேஜையிலிருந்த காலண்டரில் அவள் கண் விழுந்தது. பதினெட்டு.

பதினெட்டு !

ஏன், மிஸ்டர் ராகவனை இந்த ஒரு மாதமாகக் காணோம்? எது தவறினாலும் தவறும். ராகவன் மாதத்துக்கு இரு தடவைகள், மூன்றும் தேதியும் பதினெட்டாம் தேதியும் கையில் பையுடன் பது போல உட்கார்ந்து கேட்ட அவன் நாத் தடுமாறக் குற்றம் செய்தவனைப் போல் பதில்களை நிறுத்தி நிறுத்தி அளித்தான். பாமா அவனுடைய அப்போதைய நிலையை ரசித்தாலும் மனம் அவனையும் மீறி இரங்கி நெகிழ்ந்தது. ஒரு 'மெடிக்கல் ரெப்ரஸண்டேடிவ்' வேலைக்கே அவன் லாயக்கில்லை; ஏதாவது ஒரு சர்க்கார் ஆபீஸில் ஒரு மூலையில் சுவரைப் பார்த்துக் கொண்டு குமாஸ்தாவாக ஒண்டிக் கொள்ளுவதற்குத்தான் லாயக்கு என்று எண்ணினாள்.

அன்று அந்த ஆகஸ்டு மாதம் மூன்றும் தேதி காலை பதினொரு மணிக்கு, சொன்னபோது அவளுடைய கண்களைச் சந்தித்த ராகவன் அடுத்த அரைக் கணத்தில் தலை குனிந்தவனும், கண்களின் சந்திப்பே ஒரு பயத்தைக் கொப்பி விட்டது போல, நடுங்கும் கை விரல்களால் தோல் பையைத் திறக்கலானான்.

தன் மேஜையின் மேல் அவன் வைத்த ஒரு டானிக், ஒரு பாட்டில் மாத்திரை, ஒரு பெட்டி இன்ஜெக்ஷன் மருந்துகள், தாலுமினாட்டிங் அட்டைகள் இத்தியாதிகளின் மேல் ஓர் அவசரப் பார்வையைச் செலுத்தி விட்டு, பாமா, ''மிஸ்டர் ராகவன்...... லிட்ரேச்சரை நான் சாவகாசமா வீட்டிலேயே படிக்கறேன்..'' என்று கூறினாள்.

மலர்ச்சி



'குட்மார்னிங் டாக்டர்!' என்று நடுங்கும் குரலில் அழைத்தவனும், குனிந்த தலை நிமிராமல் அர்த்தம்புரியாமல் பாடத்தை ஒப்பிக்கும் சிறு பையனைப் போல் தன் கம்பெனியார் தயாரித்த மருந்துகளை ஒப்பிக்கத் தவறியதேயில்லை. போன மாதம் மூன்றும் தேதி காலை பதினொரு மணிக்கு அவன் கடைசியாக வந்திருந்தான். திடீரென்று பாமாவுக்கு ஒரு சந்தேகமும் அதைத் தொடர்ந்து ஒரு பயமும் பிறந்தன. அன்று வழக்கத்துக்கு மாறாக அவள் அவனிடம் சொந்தம் கொண்டாடிப் பேசுவதுபோலப் பேசி விட்டாள். கூச்சத்தில் உடம்பே குறுகி நெற்றிக்கே ஒரு தனி அழகாய் அமைந்த விபூதிக் கோடுகளும் கீழ்க் கோட்டுக்குச் சற்று மேலே ரத்தச் சிவப்பாக மின்னிய குங்குமப் பொட்டுடன், தோல் பையுடன் 'குட்மார்னிங் டாக்டர்!' என்று உள்ளே வந்த ராகவனைக் கண்டதும் பாமாவின் மனத்தில் வெடித்த சிரிப்பு, என்ன அடக்கியும் அடங்காமல் எம்பி உதடுகளில் புன்னகையாய்த் தவழ்ந்து நின்றது.

''குட்மார்னிங், மிஸ்டர் ராகவன்... ப்ளீஸ் டேக் யுவர் ஸீட்!'' என்று பாமா சொல்லி அவனையே பார்த்தாள். மின்னல் வேகத்தில் 'குட்மார்னிங்'

அவளுடைய வார்த்தைகளைக் கேட்டுத் திகைத்துப் போன ராகவனுக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. மருந்துகளை மேஜையின்மேல் வைத்ததும் மடை திறந்தது மாதிரி, ஒவ்வொரு மருந்தின் விசேஷங்களும் குணாதிசயங்களும், ஒப்பற்ற தன்மைகளும் அவன் வாய் வழியாகக் கொட்டும். இப்போது டாக்டர் அதற்கு அணை போடவே அவனுக்கு என்ன சொல்லுவது என்று தெரியவில்லை. வந்த வேலை முடிந்து விட்டது என்று மெதுவாக அசைந்தான்.

''மிஸ்டர் ராகவன்! உங்களுக்கு எந்த ஊர்?'' என்று கேட்டாள் பாமா.

அசைந்த உடல் நடுங்கினாலும் ஆசனத்தில் அழுந்தி உட்கார்ந்து விட்டது. டாக்டர் இது வரையில், பத்து மாதங்களாகக் கேட்காத கேள்வி! மருந்துகளைத் தவிர அவன் வேறு எதையுமே பேசியதில்லை. அவனிடம் மட்டுமல்ல; எந்த ரெப்ரஸன்டேடிவிடமும் சொந்த விஷயமாக எதையும் கேட்க மாட்டாள். சொல்லப் போனால் நோயாளிகளுடன்கூட அதிகம் பேச்சு வைத்துக் கொள்ளாதவள் அவள். இன்று ஏன் அவள் கேட்கிறாள்?

இத்தனை எண்ணங்களும் ராகவனுடைய மனத்தில் அந்த ஒரு விநாடியில் தோன்றி விட்டன.

"கோயமுத்தூர்........"

"கோயமுத்தூரா?" 'அது எப்படி ராகவனுக்குக் 'கோயமுத்தூர்' சொந்த ஊராக இருக்க முடியும்?' என்று ஆச்சரியப்பட்டவளைப் போல் பாமா ஒரு தடவை ஸீட்டிலேயே துள்ளி எழுந்து உட்கார்ந்தாள். பிறகு, "கோயமுத்தூர்ல, டவுனேதானே?" என்று கேட்டாள்.

"இல்லை........ உடுமலைப்பேட்டைக்குப் பக்கத்திலே ஒரு கிராமம்...."

"அப்படின்னா....கணியூர், கடத்தூர், காரத் தொழுவு.... இல்லே கொழுமம், குமரலிங்கமா?"

"கணியூர்....."

இப்போது பாமா மேஜையின்மேல் ஊன்றியிருந்த வலது கையை, கன்னத்தில் பதிந்திருந்த இடது கையுடன் இணைத்து இரு கைகளையும் மார்பின் மேல் கட்டிக் கொண்டாள்.

"மிஸ்டர் ராகவன்....! நீங்களும் நானும் ஒரே ஊர்க்காரர்...."

"அப்படியா?"

"ஆமாம்.... இப்போ சமீபத்திலே ஊருக்கு எப்போ போயிருந்தீர்கள்? அங்கே எது உங்க வீடு?"

"எனக்கும் நான் பிறந்த ஊருக்கும் எந்தவிதச் சம்பந்தமுமில்லே இப்போது... எனக்குப் பதிமூணு வயசு நடக்கிறப்போ என் அப்பா வெளியேறி விட்டார்......"

"என் அம்மா இன்னும் அங்கேதான் இருக்கிறாள்..... உங்க குடும்பத்தை அவளுக்குக் கண்டிப்பாத் தெரிஞ்சிருக்கும்.... உங்க அப்பா பேரு....?"

"அவர் காலமாகிப் பதினறு வருஷங்கள் ஆறது........"

"இருந்தாலும் பேரு தெரியலாமே?"

"நடேச சர்மா....."

அந்தப் பெயரை இரண்டு மூன்று தடவைகள் மனசுக்குள் உச்சரித்துப் பார்த்தாள் பாமா. எவ்விதமான உணர்ச்சிகளும் பிறக்கவில்லை.

"நீங்க பி. எஸ்ஸி. பார்மஸிதானே?"

"ஆமாம்......"

"உங்களுக்கு எத்தனை குழந்தைகள்?"

இப்போது ராகவனுக்கு உடம்பு நன்றாக வியர்த்தது.

"ஏன் வெட்கப்படுகிறீர்கள்? நிறைய இருந்தால் சிலர் சொல்லக் கூச்சப்படுவார்கள்!"

தடுமாறிக் கொண்டே ராகவன், "எனக்கு இன்னும் 'மாரேஜ்' ஆகவில்லே" என்றான்.

"ஓ.... ஐ ஆம் வெரி ஸாரி.... உங்களைப் பார்த்தால் ஒரு பழுத்த கிரகஸ்தர்னு தோணித்து.... நெற்றிக்கு இப்படி ஒரு அலங்காரமா விபூதியும் குங்குமமும் யார் இட்டுக் கொள்ளுகிறார்கள்....? தெய்வ பக்தி இருக்கிற இடங்களில்தான் இதைப் பார்க்க முடியும்...... எனக்கு என்னவோ

பி.வி.ஆர்

தோணித்து. கிரகஸ்தாசிரமத்திலே, கஷ்டப்படுகிறவர்களுக்குத்தான் தெய்வ பக்தி கொஞ்சம் அளவுக்கு மீறியே இருக்குமென்னு.... நான் எவ்வளவு தப்பா நினைச்சிண்டிருந்தேன்....!"

ராகவன் பதில் ஏதும் பேசாமல் உட்கார்ந்திருந்தான். ஏன் இவ்வளவு அக்கறையுடன் டாக்டர் பாமா எம். டி. இத்தனை கேள்விகள் கேட்கிறாள் என்ற கேள்வியே மனத்தை உலுக்க, அவள் இன்னும் ஏதாவது கேட்கப் போகிறாளோ என்ற பயத்துடன் காத்திருந்தான்.

அவனுடைய மௌனத்தைக் கலைக்க வேண்டும் என்ற எண்ணத்தினால்தானோ என்னவோ, திடீரென்று பாமா 'களுக்' கென்று ஒரு தடவை சிரித்தாள். அந்தச் சிரிப்பில் கேலி ஒலிக்கிறதோ என்று தன்னையே கேட்டுக் கொண்டான்.





மாலைப்போதும் மஞ்சள் வெயிலும்
போட்டோ : என். ராமகிருஷ்ணா

ராகவனுக்கு அந்த வேளையில் அவள் மீது கட்டுக்கடங்காமல் கோபம் வந்தது. பாமா சென்னை சர்வகலாசாலையிலேயே முதலாவதாகத் தேறியவள். இரண்டு வருடங்களுக்கு முன்பு, முதல் பிரவேசத்திலேயே 'எம். டி.' பட்டமும் பெற்றவள். இத்தனை சிறப்புக்கள் இருந்தால் அவை அவள் மட்டில். அவனைப் பார்த்து ஏன் அவள் சிரிக்க வேண்டும் ?

மனத்தில் என்னதான் கோபம் பொங்கி எழுந்தாலும், ஒரு பெண்ணிடம் அவன் எப்படிக் கோபித்துக் கொள்ள முடியும்? அது அநாகரிகம். பண்பு இல்லாத செயல்.

திடீரென்று அவன் எழுந்தான். அதைப் பார்த்த பாமாவும் எழுந்தாள்.

''நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்?''

''அபிராமபுரத்தில்......''

''நேரே வீட்டுக்குத்தானே போகிறீர்கள்?'' பாமாவின் குரல் நெகிழ்ந்தது.

''ஆமாம்......''

''காரிலே கொண்டு விடுகிறேன், வாருங்கள்......''

இவ்வளவு நெகிழ்ந்து பேசுகிறவள் ஏன் சிரித்தாள் ? காரில் போவதா வேண்டாமா என்று அவன் தன்னுள் போராடி அதற்குத் தீர்வு காண முடியாமல் தவித்துக் கொண்டிருக்கையிலேயே பாமா, ஸ்டெதாஸ்கோப்பைக் கையில் மடக்கி எடுத்துக் கொண்டு எழுந்தாள். அடுத்த கணம் பையன் 'க்ளினிக்'கை மூட ஆயத்தமானான்.

''கிளம்பலாமா?''

இப்போது அவனுடைய மனத்தில் நடந்த போரைப் பாமாவே நிறுத்தி விட்டாள். இயந்திரமாக அவன் அவளைப் பின்தொடர்ந்தான்.

''இங்கே யாராவது உறவினர்கள் இருக்கிறார்களா?'' என்று கேட்டபடியே அவள் காரை 'ஸ்டார்ட்' செய்தாள்.

''இல்லே......''

''சமையலுக்கு ஆள் வைத்துக்கொண்டிருக்கிறீர்களா ?''

''இல்லே......''

''அப்போ தினம் தினம் ஹோட்டல் சாப்பாடா ?''

'' இல்லே.... நானே சமைத்துக் கொள்ளுகிறேன்.....''

''குட்.... வெரி குட்....நல்ல ஐடியா. சமைக்கத் தெரியுமா ?''

பாமா உண்மையிலேயே யோசித்துப் பேசுகிறாளா; இல்லே, கேலி செய்கிறாளா என்று ராகவனுக்குப் புரியவில்லை.

''சமைக்கத் தெரியுமோ என்னவோ சமைக்கிறேன்.....ருசியான ஹோட்டல் சாப்பாட்டைவிட ருசியில்லாத வீட்டுச் சாப்பாடு ஒசத்தின்னு நினைக்கிறேன்...''

''ஐ ரியலி அப்ரிஷியேட் யூ!''

இதுவும் கேலியா?

அவனையும் அறியாமல் அவன் வாய், ''தாங்க்யூ!'' என்றது.

அவன் வீட்டின் முன் கார் நின்ற போது, 'உள்ளே வாருங்களேன்' என்று அவளை அழைப்பதா வேண்டாமா என்று தன்னிடம் ஆயிரம் தடவை கேட்டுக் கொண்ட ராகவன் கடைசியில் இறங்கி 'தாங்க்ஸ்' என்றான்.

''இன்னிக்கு என்ன சமையல்?''

''எனக்கே மறந்து விட்டது.''

பருப்புப் பொடியும் தயிரும் மோர் மிளகாயும் என்று அவன் எப்படிச் சொல்வான்?

சிரித்துக் கொண்டே பாமா காரைக் கிளப்பினாள். அது நகரும் முன், ''சீக்கிரத்தில் இந்த ஒண்டிக் கட்டை வாழ்க்கையைத் தூர எறியுங்கள்!'' என்றாள்.

பதில் பேசாமல் ராகவன் நகர்ந்தான்.

அந்த மெடிகல் ரெப்ரஸண்டேடிவ் ராகவனை ஏன் இத்தனை நாட்களாகக் காணோம் ?

பாமா தன்னைத் தானே கேட்டுக் கொண்டு, திருப்தியில்லாத பதில்களைத் தனக்குத் தானே அளித்துக் கொண்டு திண்டாட, கடிகாரத்தின் முட்கள் விரைந்து கொண்டே சென்றன.

மணி ஒன்பது.

பையன் வடிவேலு இதுவரையில் இரண்டு மூன்று தடவை எட்டி எட்டிப் பார்த்துப் பின்வாங்கியாகி விட்டது. 'ஏன் டாக்டர் அம்மா நோயாளியும் இல்லாம, கையில் புத்தகமும் இல்லாம உட்கார்ந்தது உட்கார்ந்தபடியா இருக்கிறாங்க?' என்று அவன் மனசில் கேள்வி ஒன்று எழுந்தது. ஆனால் அவனுடைய அறிவுக்கு எந்த விதமான பதிலும் தெரியவில்லை. அவனுடைய 'டூட்டி' இனிமேல் கதவைச் சாத்திப் பூட்டை இழுத்துப் பூட்ட வேண்டும், அவ்வளவுதான்.


திடீரென்று தூக்கத்திலிருந்து விழித்துக்கொண்டவளைப் போல் பாமா திடீரென்று எழுந்தாள். ''பையா... வடிவேலு'' என்று அழைத்தாள்.

இன்பரிந்த காலுக்குக் 'கிளினிக்'கை விட்டுக் கிளம்பிய பாமாவின் மனத்தில் களை பொருந்திய முகத்தின் பரந்த நெற்றியில் மின்னும் விபூதிக் கோடுகளும், துவளிக்கும் குங்குமப் பொட்டுக்களும் இன்னும் பதிந்திருந்தன. ஏன் அவளுக்குக் கடந்த சில நாட்களாக ராகவனுடைய ஞாபகமே வந்துகொண்டிருக்கிறது? அவளுக்குத் தெரிந்த எத்தனையோ டாக்டர்களும் பணக்கார நோயாளிகளும் இருக்க, இந்த ராகவன்- 'க்ளினிக்', 'க்ளினிக்'காய் ஏறி இறங்கி மருந்துகளின் பெயர்களை ஒப்பிக்கும் ஒரு மெடிகல் ரெப்ரஸெண்டேடிவ்- அவளுடைய மனத்தை ஈர்க்க வேண்டும்? அவளுடைய படிப்புக்கும் வரும்படிக்கும் இதனாலெல்லாம் ஒட்டிய அந்தஸ்துக்கும் அவனுக்கும் எவ்வளவு தூரம்? ஒருவேளை அவளுடைய மனசே புற உலகத்தில் அவளுக்கு இருக்கும் அந்தஸ்தை மறந்துவிட்டு, ஒரு தனி வாழ்க்கை வாழ்கிறதோ? அப்படியானும் அவள் இந்த விஷயத்தில் மனசை அடக்கி வாழவில்லை. அதைத் தன்போக்கில் செல்ல விட்டிருக்கிறாள். இது விபரீதமல்லவா? இவ்வளவெல்லாம் நினைத்தும் மனம் லயிக்கிறது என்றால் அதற்கு என்ன அர்த்தம்? இதன் பெயர்தான் காதலா?

வாரன் தெரு வழியாகப் போய்க் கொண்டிருந்த கார் வழக்கமாகச் செல்ல வேண்டிய நேர் வழியில் செல்லாமல் அபிராமபுரத்துக்குத் திரும்பியது. மனத்தின் உந்தலில் திரும்பிவிட்ட காரை அதே மனம் ராகவனின் வீட்டு முன்பு நிறுத்தியது. நின்ற காரில் இருந்தபடியே அவள் பார்த்தாள். வீட்டில் விளக்கு எரியவில்லை. ராகவன் அதற்குள் தூங்கி விட்டானா? மனத்தின் ஆசையில் மனமே வெட்கப்பட்டது போல் பாமா துவண்டு போனாள்.

இறங்கிப் போய் விசாரித்தால் என்ன என்று ஒரு கேள்வி பிறந்தபோது, அந்தக் கேள்வியே 'என்ன விசாரிப்பது?' என்று இன்னொரு கேள்வியை எழுப்பியது.

சுமார் ஐந்து நிமிட நேரம் தன்னுள் போராடிவிட்டுப் பாமா கடைசியாக இறங்கிக் காம்பவுண்ட் கேட்டைத் திறந்துகொண்டு முன்னேறினாள். அவளுக்கே அவளுடைய செய்கை ஒரு கணம் அவமானமாகப் பட்டாலும் அடுத்த கணம் அதை மறக்க முயன்றாள்.


பட்ட,
உடன்
வலிபறக்க...
I
O
D
E
X
சுளுக்குகள்
பிடிப்புகள்
வீக்கங்கள்
சிராய்ப்புகள்
தசை வலிகள்
அயோடெக்ஸ்®
இதமளிக்கிறது
IODEX
SKF

கதவண்டை வந்ததும்தான் தெரிந்தது, வீட்டில் யாரும் இல்லை யென்று. அநாதை போலத் தொங்கும் பூட்டைப் பார்த்துப் பெருமூச்செறிந்து விட்டுப் பாமா திரும்பிச் சென்றாள்.

வீட்டை அடைந்ததும் சாப்பாட்டு மேஜையின் மேல் சமையற்காரி செய்து வைத்திருந்த இரண்டு சப்பாத்திகளையும் தயிர் சாதத்தையும் பார்த்துக் கொண்டே சாப்பிட வாயோ வயிறோ இல்லாமல் தவித்தாள் பாமா. இப்படித் தனக்குள் எண்ணி யெண்ணி அசை போட்டுத் தவிப்பதால் யாருக்கும் எந்தப் பயனும் இல்லை என்ற உள்ளுணர்வு எழுந்தபோது, அவளுடைய கை தானாகவே தயிர் சாதத்தை எடுத்தது.

சாப்பாடு முடிந்தபின் தன் அறைக்குள் வந்தபோது டிப்பாயின் மேல் அன்று வந்து அவள் ஏற்கனவே படித்து விட்ட அம்மாவின் கடிதம் கண்ணில் பட்டது. அதை அசுவாரசியமாக இன்னொரு தடவை அவள் படித்தாள்.

''...நீ அனுப்பின இருநூறு ரூபாய் கிடைத்தது. புதிதாக ஒரு மாடு வாங்கியிருக்கிறேன்... கோடி வீட்டுச் சுப்புணியும் நானுமாகப் பொன்னாச்சி சந்தையில் வாங்கினோம். காலையில் பட்டணம் படிக்கு முக்கால் படியும் சாயங்காலம் அரைப் படியும் கறக்கிறது. இங்கே நான் இப்படி நல்ல பாலைக் குடிக்க உடம்பைப் பார்த்துக் கொள்கிறேன். நீ அங்கே உடம்பைக் கெடுத்துக்கொண்டு தன்னந் தனியாக, நான் என்ன சொல்லியும் கேளாமல் அவதிப்படுகிறாய்...

''போனது போகட்டும். போன வருஷம் என்னை ஏமாற்றின மாதிரி ஏமாற்றாமல், இந்த வருஷமாவது தீபாவளிக்கு இங்கே வா...

''கூடப் பிறந்த இருமல் அப்படியே தானிருக்கு... இப்படிக்கு

உன் பிரியமுள்ள அம்மா.''


கடிதத்தை மடிக்காமல் அப்படியே டிப்பாயின் மேல் எறிந்துவிட்டு அவள் நின்றாள். கண்ணாடியில் அவள் முகம் கோரமாகத் தெரிந்தது. வயது முப்பத்திரண்டுதான் ஆனாலும் முகத்துக்கு மட்டும் வயது என்னவோ நாற்பது போல் அவளுடைய கண்களுக்குத் தோன்றியது. குளித்தவுடன் முகத்தில் ஏறும் ஒரு மெருகைத் தினம் தினம் அதுவே இயற்கையான ஒரு மெருகு என்று அவளும் எத்தனையோ பேர்களைப் போலப் பிறரை ஏமாற்றிக் கடைசியில் தன்னைத் தானேயும் ஏமாற்றிக்கொண்டு வருகிறாள். இப்போது அந்த மெருகை ஏற்றி விட்ட ஒப்பனைச் சாதனங்கள் தங்கள் ஒளிகளையும் இழந்து, முகத்தின் இயற்கையான ஒளியையும் அழித்து, மறுநாள் ஒளிக்காகக் கண்ணாடி முன் காத்திருக்கின்றன.

கண்ணாடியில் முகம் என்னதான் கோரமாகத் தோன்றினாலும் அவளுக்கு நகர மனம் வரவில்லை. கலைந்த தலையில் நடுநடுவே தலை நீட்டும் நரை வெள்ளி இழையின் வெளிச்சத்தில் அருவருப்பைக் காட்டிலும் வருத்தத்தையேகொடுத்தது. பூக்காத செடியாகிவிட்ட அவளுக்கு இனி என்ன இருக்கிறது? புற உலகத்தில் நாலு பேர் நாலு விதமாக என்னதான் புகழ்ந்தாலும், அந்தப் புகழ்ச்சிகளெல்லாம் இந்த நரை ரோமங்களைப் போல் எதற்கும் பிரயோசனப்படாதவைதான். படிப்பும் பட்டமும் மட்டும் இருந்து விட்டால் அவள் இழுத்துச் செல்கிற நாட்கள் ஒரு வாழ்க்கையாகி விடுமா? இதுவேதான் வாழ்க்கை என்று அவளும்தான் எத்தனை காலம் தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்ள முடியும்?

அவள் டாக்டருக்குப் படிக்க வேண்டாம் என்று அம்மா எத்தனையோ அடித்துக்கொண்டாள். இண்டர்மீடியட்டில் கல்லூரியிலேயே முதலாவதாகத் தேறிய அவளுக்கு மேலே படிக்க ஆர்வமும் ஆவலும் எல்லைமீறிப் போக, வைத்தியக் கல்லூரியில் சேர்ந்தாள். உபகாரச் சம்பளம் வேறு கிடைக்கவே, அம்மாவால் ஏதும் பேச முடியவில்லை.

அந்த அம்மாவையும் ரயிலிலேயே சென்று கொண்டிருக்கிற அவளுடைய தகப்பனாரையும் எத்தனையோ முறைகள் சென்னையில் தன்னுடன் நிரந்தரமாக இருக்கச் சொன்னாள். ரயில்வே 'கார்டு' உத்தியோகம் பார்க்கும் தகப்பனார் அவளுக்கு ஒரு சிவப்புக் கொடியைக் காட்டிவிட்டுப் போய்விட்டார். அம்மா, ''நீ, நான் சொல்லிக் கேட்காத பெண். நான் எதுக்கு வரணும்? உனக்குப் பொங்கிப் போடத்தானே? அதுக்கு ஒரு சமையற்காரியை ஏற்பாடு செய்து கொள்!'' என்று பொருமினாள்.

இந்த ஏகாந்த வாழ்க்கை அவளே நிர்ணயித்த தலைவிதியாகிவிட்ட பிறகு இரண்டு வருஷங்கள் பல்லைக் கடித்துக் கொண்டு பாமா நாட்களைத் தள்ளினாள். அவளுக்கு அழகு இல்லை. ஆனால் யௌவனம் இருந்தது. பருவத்தில் அதன் பூரிப்பைக் கண்டு மயங்கிய சில டாக்டர்கள் பழக முன்வந்தார்கள். ஆனால் அவர்களைத் துண்டித்து அனுப்பிவிட்டாள். சிநேகமே ஒரு தர்மமாக இருக்க வேண்டும் என்ற கருத்து மேலோங்கி நின்றபோது அவளிடம் பழக வந்த



படுக்க ஜமக்காளம் கொடுத்தவரிடம்:— சார்! தலைக்கு வைச்சுக்க ஒன்னுமில்லையே!

மற்றவர்:— ஏன், ஒரு முழம் கதம்பம் வாங்கி வைச்சுக்குங்களேன்!



வர்களிடமெல்லாம் அதர்ம எண்ணங்கள் மண்டிக் கிடப்பதாகத் தோன்றியது அவளுக்கு. அம்மா அன்று அழுதும் மிரட்டியும் கெஞ்சியும் உபதேசித்த உபதேசங்களுக்கு அவள் தலை வணங்கியிருந்தால் இன்று பாமா ஒரு 'எம். டி. பட்டம் பெற்ற டாக்டராக இருந்திருக்க மாட்டாள். ஆனால் ஒரு நல்ல குடும்பத்தில் எல்லாப் பெண்களுமே அடையும் ஸ்தானத்தில் இருந்திருப்பாள். அந்த ஒரு ஸ்தானம்தான் பெண்மையின் அர்த்தம் என்று அம்மாவின் உபதேசங்கள் மூலம் அன்று புரியவில்லை. ஆனால் இன்று தெரிகிறது. இனி புரிந்து, தெரிந்து என்ன பயன்?

கடைசியில் பாமா உடலின் அசதி மேலிட்டுப் படுக்கையில் விழுந்தாள்.

அவளுடைய எண்ணக் குவியலுக்கு நடுவே ஒரே ஒரு முகம் மட்டும், நெற்றியில் திருநீறு துலங்க, பிரகாசத்துடன் தெரிந்தது.

மறுநாள் எழுந்திருந்தவுடன் பாமா அவசரம் அவசரமாய்க் காலைக் கடன்களை முடித்துவிட்டுக் காரை எடுத்துக்கொண்டு கிளம்பினாள்.

ஐந்தாவது நிமிஷம் அவள் அபிராமபுரத்தில் ராகவனுடைய வீட்டுக்கு முன் காரை நிறுத்தி, காம்பவுண்டுக் கதவைத் திறந்துகொண்டு சென்றாள்.

திறந்திருந்த வாசற் கதவுகளைத் தாண்டிக் கூடத்தில் அவள் நின்றபோது அவள் கண்ட காட்சியில் மனம் நெகிழ்ந்தது. வலது கையில் ஐந்து விரல்களும் தெரியாமல் கட்டுடன் ராகவன் உட்கார்ந்து, 'ஸ்டவ்'விலிருந்து இடது கையால் காய்ச்சிய பாலை இறக்கிக்கொண்டிருந்தான்.

டாக்டர் பாமாவைப் பார்த்ததும் தூக்கி வாரிப் போட்டது ராகவனுக்கு. என்ன செய்வது என்று புரியாமல் எழுந்த அவன், நாக் குழற, "வாருங்கள் டாக்டர்... அதோ அந்த நாற்காலியிலே உட்காருங்கள். உங்களுக்கும் காப்பி கலந்து தருகிறேன்.." என்றான்.

"காலை கார்த்தாலே வந்து உங்களுக்குத் தொந்தரவு கொடுக்கிறேன் மிஸ்டர் ராகவன்!" என்ற பாமா, உட்காராமல் "ஏன் உங்களைப் போன மாசம் மூன்றாம் தேதிக்கு அப்புறம் காணோம்?" என்று கேட்டாள். கேட்ட பிறகுதான் கேள்வியே எத்தனை அபத்தம் என்று தோன்றியது.

"கையிலே ஒரு சின்ன ஆக்ஸிடெண்டு!"

"எப்படி?"

"டிகாக்ஷன் போடலாம்னு தண்ணியை இறக்கப் போனேன். இடுக்கி நழுவிப் பாத்திரம் கையிலே விழுந்துடுத்து."

"என்னிக்கு?"

"போன மாதம் மூணாம் தேதி மத்தியானம். அன்னிக்குத்தான், நீங்கள் என்னை உங்கள் காரில் கொண்டு வந்து விட்டீர்கள்."

பாமா மௌனமானாள். அன்று அவள் கேட்ட கேள்விகள்தான் ஒருவேளை அவன் மனத்தை அரித்துக் கொண்டிருந்து, கடைசியில் இந்த விபத்துக்குக் காரணமாகிவிட்டதோ?

இப்போது அவனைப் பார்க்கவே பரிதாபமாக இருந்தது.

"லீவில் இருக்கிறீர்களா?"

"இல்லையே. முதல் பத்து நாட்கள் லீவு எடுத்தேன்; அவ்வளவுதான்."

"அப்போ ஏன்...?" ஆரம்பித்தவள் உதடுகளைக் கடித்துக் கொண்டாள்.

அவளுடைய அரைகுறைக் கேள்வியையே பூரணமாகப் புரிந்துகொண்டு ராகவன், "கை பூரணமாகக் குணமான பிறகு உங்களை வந்து பார்க்கலாம்னு இருந்தேன்" என்றான்.

திடீரென்று பாமா மனத்தின் ஆவேச ஆவலுடன் சொன்னாள்:

"பூர்ண குணமாகிக் கட்டை அவிழ்த்ததும் அந்தக் கையால் நீங்கள் ஒரு நல்ல காரியத்தை, ஒரு புனிதமான காரியத்தைச் செய்யப் போகிறீர்கள்!"

திகைப்பு மேலிட ராகவன் திருதிருவென்று விழித்தான். டாக்டர் பாமா என்ன சொல்கிறாள்?

அன்றைக்கே பாமா அம்மாவுக்குக் கடிதம் ஒன்று எழுதினாள்.

நான்காம் நாள் பதில் வந்தது. பெண்ணை வாயாரப் புகழ்ந்திருந்தாள் அவள் அம்மா.

அடுத்த நாள் காலையில் பாமா ராகவன் வீட்டை அடைந்தபோது, அவன் தோல் பையுடன் கிளம்பத் தயாராக இருந்தான். டாக்டரைப் பார்த்ததும் அவனுடைய வழக்கமான தவிப்பு தலை நீட்டியது.

"மிஸ்டர் ராகவன்! கட்டை என்னிக்கு அவிழ்க்கிறீர்கள்?"

"இன்னும் ஒரு வாரத்தில் டாக்டர்!"

"அப்புறம் என்னை டாக்டர்னு நீங்கள் கூப்பிடக் கூடாது தெரிந்ததா?"

"ஏன் டாக்டர்?"

"உங்கள் அம்மா உங்கள் தங்கையுடன் ஈரோட்டில்தானே இருக்கிறாள்? உங்கள் தங்கை புருஷன் ரயில்வே கார்டுதானே?"

"ஆமாம்..." டாக்டர் பாமா எதற்காக இதெல்லாம் சொல்லுகிறாள்? தனக்கு ஏற்பட்டிருந்த விபத்தை அவன் தன் தாயாருக்கு எழுதவில்லை. ஒருவேளை அவள் எப்படியோ விலாசம் தெரிந்து எழுதி விட்டாளோ?

"அவர்கள் இந்த வாரமே இங்கே வந்தாலும் வருவார்கள்...."

"கைதான் சரியாகி விட்டதே! அப்படி ஒன்றும் அவர்கள் வந்து பார்க்கும்படியா சீரியஸா இல்லையே?"

"இதைவிட சீரியஸான விஷயம் இருக்கு. அதற்காக வரலாம் இல்லையா?"

"எனக்கு ஒன்றும் புரியவில்லையே, டாக்டர்!"

"என் அப்பாவும் ரயில்வே கார்டு. ஈ ரோ டு தா ன் ஹெட்குவார்ட்டர். ...இப்போ புரிகிறதா?"

"புரிய ஆரம்பித்துவிட்டது டாக்டர் ஆறு...நான்..நான்... நான்...வந்து.."

"அதையெல்லாம் உங்கள் அம்மாவிடம் சொல்லுங்கள்."

இருவருமாக இறங்கி நடந்தார்கள். இரு மருங்கிலும் செடிகள் பூத்துக் குலுங்கிச் சிரித்தன. பாமாவும் தன்னுள் சிரித்துக் கொண்டாள். அந்தச் செடிகளைப் போல அவள் மனம் இன்னும் சில நாட்கள்தானே இருக்கின்றன?

அம்மா கூப்பிட்டாலும் கூப்பிடாவிட்டாலும் அவள் தீபாவளிக்குக் கட்டாயம் போவாள். ஆனால் தனியாக மட்டும் அல்ல!



தொடர்ந்து மணம்
வீசிக்கொண்டிருக்கும்
திவ்வியமான
நறுமணம்.
அது உங்களுடன் எப்பொழுதுமிருக்கும்.
பெண்ணும் நறுமணமும் பிரிக்கமுடியாத-மறக்கமுடியாத ஒன்று. உங்கள் அழகிற்கு மேலும் அழகூட்டப் பியர்லைன் மூன்று புதுவிதமான நறுமணத்தை வழங்குகிறது.
மீனா, உல்லாசத்திற்கும் பகட்டிற்கும்-பியர்லைன் 3, இதத்திற்கும் பிருதுத்தன்மைக்கும்-புளு பேஷன் ப்ளவர், உங்களுக்கு அதிக உற்சாகமூட்ட.
BLUE PASSION FLOWER
MEENA
PEARLINE 3.
அனைவரையும்
கவர்ந்திழுக்கும்
உங்கள்
கேசம்.
உங்கள் கேசம் சிறந்து விளங்கும்போது, அது அனைவருடைய கவனத்தையும் கவருவதை நீங்கள் அறிவீர்கள். இத்தரும் நறுமணமுள்ள பியர்லைன் லேவண்டர் பிரில்லியன்டைனை நீங்கள் உபயோகிக்கும்போது பிறர் உங்களைப் பலமுறை காண விரும்புவர். உங்கள் கேசத்தின் செழிப்பான வளர்ச்சிக்கும், அது நாள்முழுவதும் கண்ணாடிபோன்று பளபளப்புடன் இருக்கவும் உதவுவது பியர்லைன் லேவண்டர் பிரில்லியன்டைன்.
LAVENDER
BRILLIANTINE
PEARLINE
LAVENDER BRILLIANTINE
PEARLINE PARIS PVT., LTD.
P. O. Box No. 493, Bombay 1.



ஆன்மச் சுடர்!

என். எஸ். சிதம்பரம்

பாராளும் சிந்துநாட்டு அதிபன் ரஹூகணன் என்பான் பல்லக்கில் ஏறிக் கொண்டு செல்லுகிறான். அந்தப் பல்லக்கைத் தூக்க ஆள் ஒருவர் குறைந்ததை அறிந்த சேவகர் தலைவன் அவ்வழியில் நின்ற ஜடபரதரைக் கொண்டு குறைந்த ஆளுக்குப் பதிலாகப் பல்லக்கைத் தூக்க வைக்கிறான். ஜடபரதர் தூக்கத் தொடங்கியவுடன், அப் பல்லக்கு அசைந்தசைந்து ஆடியாடிச் சரியானபடி செல்லாமல் சென்று கொண்டிருக்கிறது. சேவகர் தலைவன் பல்லக்கின் கதி மாறிச் செல்லுவதற்குக் காரணம் புதிதாகச் சேர்க்கப்பட்ட ஜடபரதரே யாவார் என்று பல்லக்கிலிருந்த சிந்து வேந்தனிடம் கூறவே, அவ்வேந்தன் தான் நாட்டையாளும் மன்னன் என்ற செருக்குடனும் சினத்துடனும் ஜடபரதரை இகழ்கிறான். இருவருக்கும் உரை நிகழ்கிறது. அகந்தை படிந்த அரசனுக்கு இறுதியில் ஆன்மச்சுடர் கொளுத்துகிறார், ஆன்மப் பெருஞ் சொரூபத்தை அகத்தும் புறத்தும் அகிலமெங்கும் பார்த்து அதுவே தாமாகியிருந்த ஜடபரதர்.

ரஹூகணன் :

பல்லக்கைச் சுமந்துவரும் பாரத்தாலே
பருத்தவுடற் சோர்ந்திளைத்தாய்! பாவம், உன்றன்
அல்லலினைக் கண்டெவரும் அகமி ரங்கி
அருங்கரமுங் கொடுக்கவில்லை! அதற்கென் செய்வாய்!

(ஜடபரதர் பதில் பேசவில்லை. சுமந்த பல்லக்குடன் மௌனமாய்ப் போய்க் கொண்டிருந்தார்.)

ரஹூகணன் :

மன்னவன்யான் பரிந்துரைக்கும் வார்த்தைக் கொன்றும்
மறுமொழியே கூறாமல் மாறிச் செல்லும்
சின்னவனீ வெறுஞ்சடமே! சிறப்பில் லாத
சிறுபிணமே! உனையடக்குஞ் செயல்மேற் கொள்வேன்!

ஜடபரதர் :

எனையடக்கித் தண்டிக்க எண்ணும் வேந்தே!
எனக்கென்றுஞ் சோர்வில்லை! இளைப்பு மில்லை!
எனதெனவும் நானெனவும் எண்ணி டாத
எனக்கேதப் பாரமுமே இல்லை தானே!

ரஹூகணன் :

பாரமில்லை யெனவேநீ பகர்தல் விந்தை!
பல்லக்கைச் சுமந்துவரும் பாரமின்றேல்
சீரமைந்த பாதையில்நீ செல்லா யன்றோ?
செம்மையுடன் பல்லக்குஞ் செல்லு மன்றோ?



ஜடபரதர் :

காவிருப்போன் நானென்று சொன்னாலன்றோ
சுமைதெரியும்? துயர்தெரியும்? சொல்வேன் மெய்யாய்ச்
சுமக்கவில்லை நானென்று! சோதி யான்மச்
சுடர்படிந்து நடப்போர்க்குச் சுமைதான் ஏது?

(ஜடபரதரின் இந்தப் பதிலைக் கேட்டதும் ரஹூகணன் பல்லக்கிலிருந்தும் கீழே குதித்துப் பணிவுடன் கேட்கிறான் :)

ரஹூகணன் :

சுயமிழந்து பேரான்மச் சொரூபத் தோன்றிச்
சுமையின்றி நிறைஞானஞ் சொல்லும் நீர்யார்?
நயமிழந்து நானுற்று நவின்ற தெல்லாம்
நனிபொறுப்பீர்! மெய்யுரைப்பீர்! நன்றிந் நானே!

ஜடபரதர் :

பிணமெனவும் சடமெனவும் பெரிதும் நின்றுற்
பேச்சற்ற யான், பித்தன்! பிறந்து பின்னர்
பிணமெனவே இறந்துவிடும் பிழைசேர் வாழ்வின்
பெருண்மை தெளிந்தமையச் சீருண் டாமே!

ரஹூகணன் :

சீருடையீர்! அரசனெனுஞ் செருக்கால் நம்மைச்
சினந்ததட்டிச் சிறுமைமிகச் செய்து விட்டேன்!
பேருடையீர்! மன்னிப்பீர்! பிறப்பின் கண்ணே
பேதமிலை யெனவுணர்ந்தேன்! போதஞ் செய்வீர்!

ஜடபரதர் :

ஜனமிகும் பாசத்தை உதறித் தள்ளி
உத்தமன்றன் கதையமுத உணர்வி லொன்றி
சனமிகும் *அறுதிருடர் இடமா காமல்
இறைபதத்தைச் சரண்புகவே ஏற்ற முண்டே!

---

* ஐம்புலன்களும் மனமும் அறுதிருடராவர்.




“பாணி!......பாணி!”


“இது என்ன பாணி, பாணின்னு கூப்பிட்டுண்டு? முழுசா ‘கல்யாணி’ன்னு கூப்பிடுங்களேன்!”

“எப்படி முடியும்? உன் பெயரில் உள்ள ‘கல்’தான் சாதத்தில் வந்துவிட்டதே!”

★



“ஏன் சார், சும்மா விரட்டறே: உன் துணியைத்தானே தைக்கிறேன்!”





பாளையக்காரர்கள்

தென்னிந்தியாவிலுள்ள பல நகரங்களின் அருகிலும், கிராமங்களின் அருகிலும், மலையடிவாரங்களிலும் கும்பல் கும்பலாக வாழும் ஒரு கூட்டத்தாரகளை, ''வேட்டைக்காரர்'' என்றும், ''வேட்டைக்கார நாயக்கர்'' என்றும், ''பாளையக்காரர்கள்'' என்றும் பொதுமக்கள் அழைக்கிறார்கள்.

இவர்கள் சுமார் நூறு ஊர்களில் சிதறுண்டு, ஒவ்வோரிடத்திலும் பத்து, முப்பது, ஐம்பது குடிசைகளையும், ஓரிரு வீடுகளையும் கட்டிக் கொண்டு வாழ்கிறார்கள். இந்த ஊர்களில் சில கேரளத்திலும், சில ஆந்திர நாட்டிலும், சில குடகு, மைசூர் முதலிய பகுதிகளிலும் உள்ளன. ஆனால் இவர்களில் முக்கால் பகுதியினர் தமிழ்நாட்டிலேயே வாழ்கிறார்கள். அன்று சிறந்ததொரு மாமன்னரிடம் பணியாற்றிய இவர்கள் பிறகு வெற்றி கொண்ட பகையரசனுக்குப் பயந்துகொண்டு சிதறுண்டு இந்தியாவின் பல பகுதிகளிலும் ஓடி ஒளிந்து கொண்டார்கள். சிலர் அடர்ந்த காடுகளில் நுழைந்து மறைந்தார்கள். இன்று இவர்கள் வாழும் ஊர்களுக் கெல்லாம் இரயில் வசதியும், பஸ் வசதியும் இருக்கின்றன. ஆனால் சில இடங்களில் இவர்களுடைய குடிசைகளைக் காண வேண்டுமானால் குறைந்தது ஒன்று இரண்டு மைல்கள் நடந்தாக வேண்டி வரும்.

தமிழ்நாட்டில் ''வேட்டைக்காரர்'' என்று அழைக்கப்படும் இந்தப் பாளையக்காரர்களைத் தெலுங்கு நாட்டில் ''மூத்த ராஜன்'', ''மூத்த ராஜு‶லு'' என்று மக்கள் அழைக்கின்றனர். அவர்களும் 'நாங்கள் தெலுங்குப் பாளையக்காரர் வகுப்பைச் சேர்ந்தவர்கள்' என்று கூறிக் கொள்கிறார்கள்.

பண்டைத் தமிழரசர்களிடம் போர்த் தொழில் புரிந்தவர்களில் சேனைத் தலைவனுக்கு ''ஏனாதி'' என்று பட்டம் கொடுக்கப்பட்டது. அம் மரபினர் சிலர், 'தமிழ் ஏனாதியர்' என்று தமிழ் நாட்டிலும், 'தெலுங்கு ஏனாதியர்' என்று ஆந்திர நாட்டிலும், 'ஏனாதி மராட்டியர்' என்று பூனாப் பகுதியிலும் வாழ்கிறார்கள். அப்படியே அன்று அரசராகவும் பாளையத் தலைவராகவும் இருந்த இந்தப் பாளையக்காரர்கள் இன்று தாம் வாழும் ஊருக்குத் தகுந்தாற்போல், பேசும் மொழிக்குத் தகுந்தாற்போல் தங்கள் இனத்தையும், மொழியையும் மாற்றிக் கொண்டு காடுகளிலும், மலையடிவாரங்களிலும் வாழ்கிறார்கள்.

பாளையக்கார ஆண்களும், பெண்களும் வீரமும், ஒற்றுமை உணர்ச்சியும் கொண்டவர்கள். இவர்கள் ஆண்களாயினும், பெண்களாயினும் நல்ல உடரமுள்ளவர்கள். கறுத்த ரோமத்தை உடையவர்கள். பாளையக் காரப் பெண்கள் நம்மைப் போல் சாதாரண உடையை அணிந்தாலும் அவர்கள் புடவை உடுத்துவதில் ஒருவித வீரம் விளங்குகிறது. சாதாரணமாய், பெண்கள் பருவமடைந்த நாளிலிருந்து புடவை கட்டுகிறார்கள். பருவமடைந்த நாள் முதல் பெண்கள் சடை போட்டுக் கொள்வதில்லை. கோடரி முடிச்சுக் கொண்டைதான் போட்டுக்கொள்ள வேண்டுமாம். இந்தப் பாளையக்காரர்கள் பண்டைக் காலத்தில் அரசர்களிடம் பழகியவர்கள் அல்லவா? ஆகையால் தங்கள் மனைவியர்களையும், தங்கள் சகோதரிகளையும் மிகவும் மதித்து நடத்துகிறார்கள்.

குடும்ப விவகாரங்களிலும் வெளி விவகாரங்களிலும் பெண்களுக்கு முழு உரிமை உண்டு என்பதைக் காட்டுகிறார்கள். பெண்கள் விரதம், நோன்பு முதலியவைகளைக் கடைப்பிடிக்கின்றனர்.

பருவமடைந்த மங்கையர்கள் சாதாரணமாய், வெள்ளி நகைகளைத் தான் அதிகமாக அணிந்துகொண் டிருக்கின்றனர். பாளையக்காரர்கள் தங்கள் இனத்திலேயேதான் மிகவும் ஏழையான மக்களானாலும் திருமண சம்பந்தம் செய்துகொள்ளுகிறார்கள். ஒருசிலர் மட்டும் மற்ற இனத்து மக்களுடனும் கூடத் திருமணம் செய்து கொள்கின்றனர். அப்படித்








திருமணம் செய்யும்பொழுது தாம்பூலம் மாற்றிக் கொள்கின்றனர். இவர்களில் ஆண்களும் பெண்களும் கொண்டைதான் போட்டுக் கொள்ளுவார்கள்.

பாளையக்காரர்களில் குழந்தை பிறந்ததும் அதை முதலில் ஓலைப் பாயில்தான் படுக்க வைப்பார்கள். குழந்தை பிறந்ததும் முதலில் அவன் கையில் கொடுக்கப்படுவது ஒரு கத்தி. குழந்தை பிறந்த ஐந்தாவது நாள், தாயைக் கிழக்கு முகமாக உட்கார வைத்துத் தாயின் மடியில் குழந்தையைப் படுக்க வைத்துக் குடும்பத் தலைவன் அதற்குப் பெயர் வைப்பான். அன்று சைவச் சாப்பாடு விருந்து நடைபெறும். குழந்தையின் தாய்க்குப் பத்தாம் நாள் தீட்டுக் கழித்தல் என்னும் சடங்கு நடைபெறும். அதற்கு அடுத்து வரும் நாளில் ஆணாக இருந்தால் புதன், ஞாயிற்றுக் கிழமைகளிலும், பெண்ணாக இருந்தால் செவ்வாய், வெள்ளிக் கிழமைகளிலும் ஏணையோ, தொட்டிலோ கட்டுவதுண்டு. பண்டைக் காலம் முதல் ஒரு குடும்பத்தில் குழந்தை இல்லையென்றால் அத்தையின் குழந்தைகளையோ, மாமன் குழந்தைகளையோ சுவீகாரப் பிள்ளையாக எடுத்து வளர்ப்பதுண்டு. அப்படி எடுத்து வளர்க்கும் குழந்தைகளுக்கு எல்லா உரிமையும் உண்டு.

குழந்தை பெற்றவளை வந்து பார்க்கும் மங்கையர்கள் ஒவ்வொருவரும் அவள் குளிப்பதற்காக ஒரு பானையில் வெந்நீர் கொண்டு வந்து கொடுத்து விட்டுத்தான் பிறகு பார்க்க வேண்டும். இந்தச் சடங்கு சுமார் பதினைந்து நாட்கள் வரையில் நீடிக்கலாம். அன்று முதல் இன்றுவரையில் இவர்கள் குழந்தைகளுக்கு ஈச்ச மரத்தின் கசங்குக் குச்சியால் செய்த தொட்டிலைத்தான் உபயோகப்படுத்துகின்றனர். இது இவர்களுடைய பரம்பரைச் சம்பிரதாயம் என்கின்றனர்.

இவர்கள் குடும்பத்தில் ருதுவான பெண்ணுக்குத் தனிக் குடிசை கட்டி அதில் அவளைச் சுமார் பதினொரு நாட்கள் வரையில் இருக்கச் செய்வார்கள். அந்த நாட்களில் அவளைத் தினம் நல்லெண்ணெய் தேய்த்துக் குளிக்கச் செய்வார்கள். குளித்தபின், அவளுக்கு ஒரு கோழி முட்டையும் பசும் பாலும் கொடுப்பதுண்டு. இத்துடன் நல்ல ஆகாரமும் கொடுப்பார்கள். ருதுவான பெண் உட்கார்ந்திருக்கும் குடிசையில் வேப்பிலைக் கொத்துக்களும், துடைப்பமும், இரும்புத் துண்டும், செருப்புத் தோலும் கட்டி வைப்பார்கள். அப்படிச் செய்தால் பேய் பிசாசு வராமல் இருக்குமாம். அவள் அந்தக் குடிசையில் இருக்கும் வரையில் ஓலைப் பாயில்தான் படுத்துறங்க வேண்டும். மற்ற மலை மக்களைப் போல் ருதுவான பெண்ணுடன் யாரையும் இரவுக் காலங்களில் படுக்க வைப்பதில்லை. ஏனென்றால், அவளுக்கென்று கட்டும் குடிசையைத் தங்கள் குடிசையின் பக்கத்திலேயே கட்டுவார்கள். ருதுவான பெண்ணுக்குத் தீட்டுக் கழிக்கும் அன்று காலையில் சுமார் மூன்று மணிக்குச் சுமங்கலிகள் சேர்ந்து அந்தக் குடிசைக்குத் தீ வைப்பார்கள். அந்தத் தீ வைக்கும் சடங்கை அந்தச் சுமங்கலிகள் தவிர மற்றவர்கள் பார்க்கக் கூடாது. பிறகு ருதுவான பெண்ணைக் குளிக்கச் செய்து, சுமங்கலிகள் சேர்ந்து அவளுக்குக் கோடித் துணியை அணிவித்துத் தம் சக்திக்குத் தகுந்தாற்போல் புட்டுச் சுற்றித் தீட்டுக் கழிப்பார்கள். அன்று சைவச் சாப்பாட்டு விருந்து ஊர் முழுவதுக்கும் நடைபெறும். மற்ற மங்கையர்கள் வீட்டு விலக்கானால் தனிமையில் மூன்று நாட்கள் வெளியில் இருப்பார்கள். ருதுவான பெண்ணுக்குத் தீட்டுக் கழிக்கும் நாளில் ஆண்கள் கூடி வாத்தியங்களுடன் நடனமாடி, அன்றிரவு தெருக்கூத்தும் ஆடுவார்கள். இந்தப் பாளையக்காரர்களில் சிலர் இன்றும் காடுகளில் வாழ்கிறார்கள். அவர்கள் தேவிக்குப் பூஜை செய்ய வேண்டுமானால் சிக்கி முக்கிக் கல்லைக் கொண்டுதான் தீ மூட்டுகிறார்கள். விதவைகள் பின்னல் போட்டுக் கொள்ளுகிறார்கள். ஆனால் பூவும் பொட்டும் வைத்துக் கொள்ள மாட்டார்கள். மங்கையர்களின் உடலில் குறத்தியர்கள் பாட்டுப் பாடிப் பச்சை குத்துவார்கள். ருதுவான பிறகு மங்கையர் பச்சை குத்திக் கொள்ள வேண்டும் என்ற கட்டாயம் உண்டு. ஏழு மாதக்

மலை இருநாத்



பாளையக்காரர்களின் வீரோதும் பழக்க வழக்கங்களையும், தொழிலையும், விளையாட்டுக்களையும், எளியாட்டங்களையும், மத நம்பிக்கையையும் தெரிவிக்கின்றன இந்தப் படங்கள். ✿



கர்ப்பிணியை அலங்கரித்துச் சடையில் பூ முடித்துச் சீமந்தம் செய்து முதல் பிரசவத்துக்காகத் தாயகம் அனுப்புவார்கள்.

நல்ல வீரமுள்ள ஆண்கள் சுமார் இருபது வயதுக்கு மேலுள்ள பெண்களாகப் பார்த்துத் திருமணத்துக்குத் தேர்ந்தெடுக்கின்றனர். திருமணத்துக்கு முகூர்த்த நாள் பார்க்கப்படும். திருமணத்துக்கு மூன்று நாட்களுக்குமுன் பந்தற்கால் நடப்படும். ஒரே ஆண் இரண்டு பெண்களைத் திருமணம் செய்து கொள்ளலாம். அது இவர்களுடைய வழக்கமாம். இரண்டாவது திருமணத்துக்குத் தன் கணவனுக்கு முதல் மனைவிதான் பெண்ணைப் பார்த்து ஏற்பாடு செய்வாளாம். திருமணமின்றியும் சிலர் சில மங்கையர்களைத் தங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்வதும் உண்டு.

விவாகரத்து செய்யப்பட்டவர்களை ஊர்ப் பஞ்சாயத்தில் விவாகரத்துத் தீர்ப்புப் பணத்தைக் கட்டிய பிறகுதான் மற்றவர் திருமணம் செய்து கொள்ள வேண்டும். எவ்விதத் திருமணமும் கோவிலிலோ அல்லது வீட்டிலோதான் நடைபெறும். அன்றைய விருந்தில் சைவச் சாப்பாடுதான் நடைபெறும். பையனுக்கோ பெண்ணுக்கோ முதன்முறையாகச் செய்யும் திருமணம்தான் மிகவும் விசேஷமானது. அப்படி முதன்முறையாகத் திருமணம் செய்து கொள்பவருக்கு எல்லாச் சொத்து உரிமைகளும் உண்டு. மேலும் சிலர் சிறு வயது முதல் பையனைத் தாங்களே வளர்த்து, அவனுக்குப் போர் வித்தைகளைக் கற்றுக் கொடுத்து, கடைசியில் தங்கள் பெண்ணைத் திருமணம் செய்து கொடுப்பதும் உண்டு. இவர்களின் சம்பிரதாயப்படி திருமணத்தில் கணவன் வீட்டார் செய்த தாலியைக் கட்டும் பழக்கமுண்டு. பண்டைக் காலத்தில் இவர்களிடையே (ஐந்து வயதில்) பால்ய விவாகம் இருந்ததாம். அது இன்று அடியோடு மறைந்து விட்டது. இவர்கள் இனத்தாருக்குள் காதல் திருமணம் நடந்தால் அதை எல்லோரும் வரவேற்கின்றனர். பஞ்சாயத்தார்களுக்குத் தெரியப்படுத்திவிட்டு ஊருக்குள்ளேயே மிகவும் தடபுடலாக இந்தத் திருமணம் நடைபெறும். ஆனால் திருமணமானவளை வேறொருவன் காதலித்துத் திருமணம் செய்துகொள்ள வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டால் பஞ்சாயத்துத் தீர்ப்புக்குப் பிறகுதான் திருமணம் செய்து கொள்ள வேண்டும். அப்பொழுது அவளுடைய குழந்தைகள் தகப்பனாரிடமே யிருக்கும்.

திருமணத்தன்று பச்சைப் பந்தல் போடப்படும். மூன்று சுமங்கலிகள் போய், பெண்ணை முதல் நாள், பகல் நேரத்தில் மாப்பிள்ளை வீட்டுக்கு அழைத்து வர வேண்டும். அழைத்து வந்ததும், பெண்ணுக்கென்று குறிக்கப்பட்ட வீட்டின் வாசலில் பெண்ணை நிற்க வைத்து ஆரத்தி சுற்றியபின் சுமங்கலிகள் அவளை உள்ளே அழைத்துச் செல்வார்கள். திருமணத்தில் ''பால் தட்சிணையாக ஒரு வராகன் (மூன்றரை ரூபாய்) பெண் வீட்டார் கொடுக்கவேண்டும். இந்த வராகனைப் பெரியவர்களின் முன்னிலையில் தாம்பூலத்தில் வைத்துச் சொல்லிக் கொடுக்க வேண்டும். திருமண நாளுக்கு முன் தினம் மாரியம்மன் கோவிலில் பொங்கல் இடுகின்றனர். ஆனால் பண்டைக் காலத்தில் இந்தக் கோவிலுக்குக் கோழியோ, ஆடோ பலி கொடுப்பதுண்டு. திருமணப் பந்தலில் தம்பதிகள் கிழக்குத் திசையை நோக்கி உட்கார வேண்டும். திருமணச் சடங்குகள் பந்தலில் குருக்கள் மூலம் நடைபெறும். திருமணம் முடிந்ததும் தம்பதிகள் மஞ்சள் நீர் விளையாடுவார்கள். அன்றிரவு தம்பதிகளுக்குக் கொஞ்சம் தேன் கொடுப்பார்கள். சிலர் கொஞ்சம் சாராயமும் கொடுப்பதுண்டு.

அன்று மாலையே தம்பதிகளுக்குப் பூசணிக்காயால் ஆரத்தி சுற்றி முச்சந்தியில் அதனை உடைப்பார்கள்.

பண்டைக் காலத்தில் விதவா விவாகமில்லை. ஆனால் இன்று சிலர் செய்து கொள்கிறார்கள். இவர்களிடையே சாதாரணமாகக் காய்ச்சல் வந்தால் அவரவர்களுக்குத் தெரிந்த கஷாயம் போட்டுச் சாப்பிடுவதுதான் வழக்கம். இவர்களுக்குள் நாட்டு வைத்தியர்கள் இருக்கிறார்கள்.

மங்கையர்கள் பிரசவத்துக்கு அநேகமாக ஆஸ்பத்திரிக்குப் போவதில்லை. வீட்டிலேயே ஊர் மருத்துவச்சியின் மூலம் பார்த்துக் கொள்கிறார்கள். பிரசவமானதும் அவளுக்கு உடனே கஷாயம் போட்டுக் கொடுக்கின்றனர். வேலை செய்யும் மங்கையர்கள் பிரசவத்துக்குப் பின் பன்னிரண்டாவது நாள் வயல் வேலைக்குப் போவார்கள். குழந்தை இறந்து மார்பில் பால் கட்டிக் கஷ்டப்படும் மங்கையர்கள் வயலிலிருக்கும் நண்டு வளையின் ஓரத்திலுள்ள மண்ணை எடுத்து இலேசாகக் கொதிக்க வைத்துக் கொங்கையின்மேல் பற்றுப் போட்டுத் தடவிக் கொள்வார்கள். இரண்டு மூன்று நாட்களுக்குள் குணம் தெரியும்; பாலும் வற்றிவிடும்.

பாளையக்காரர்களில் யாரேனும் மரணமடையும் தறுவாயிலிருக்கும் பொழுது அந்தந்தக் குடும்பத்திலிருக்கும் பெரியவர்களின் பெயரைச் சொல்லி வியாதியஸ்தர்களின் வாயில் பாலை ஊற்றுவார்கள். உயிர் போனபின் வீட்டுக்கு வெளியில் கொண்டு வந்து திறந்த வெளியில் பிணத்தின் தலையை மேற்கே வைத்துப் படுக்க வைப்பார்கள். மரணமடைந்தவர்களைச் சில ஊர்களில் சுடுவர்; சில ஊர்களில் புதைக்கவும் செய்கின்றனர். வீட்டிலிருந்து மயானத்துக்குக் கொண்டு போகும் வரையில் பாடையில் படுக்க வைத்து அவர்கள் வாழும் பாடியைப் பவனி வந்து செல்லுவார்கள். பாடையில் பிணத்தின் முகத்தைத் திறந்துதான் கொண்டு போவார்கள். வீட்டிலிருந்து மயானம் போகும் வரையில் வழியில் அரிசியும் சிலர் காசும் வீசிக் கொண்டே போவார்கள். இறந்த கணவனது பாடையுடன் மயானத்துக்கு மனைவி போகக் கூடாது. வீட்டிலிருந்து பிணம் போனதும், மனைவி கழுத்தில் துணியைப் போட்டுக் கொண்டு குளிக்க வேண்டும். ஆனால் மனைவி இறந்தால் கணவன் மயானத்துக்குப் போகலாம். மரணமடைந்தபின் பதினாறாவது நாளில் ஓடும் நீரில் (ஆற்றில்) மரித்தவர்களுக்கென்று கருமாதி செய்வார்கள். அன்று தங்கள் வீட்டில் சைவச் சாப்பாடுதான் சமைப்பார்கள். அந்தச் சமையலையும் வெளியில்தான் சமைப்பார்கள். மரணமடைந்தவர்கள் உபயோகப்படுத்திய பொருள்களை ஓராண்டு முடிந்ததும் மற்றவர் உபயோகப்படுத்துவார்கள். குடும்பத்தில் பிறந்த முதல் ஆண் குழந்தை இறந்தால் அவற்றைச் சுடுவார்கள். பெண் குழந்தைகளும் மற்ற ஆண் குழந்தைகளும் இறந்தால் அவற்றைப் புதைப்பார்கள்.

''ஏன் குடும்பத்தில் தலைச்சன் ஆண் குழந்தைகளை மட்டும் சுடுகிறீர்கள்?'' என்று கேட்டேன்.

''மூத்த ஆண் குழந்தைகளைப் புதைப்பதால் சூனியம் முதலியவை செய்பவர் அந்தப் பிள்ளைகளின் மண்டை ஓட்டை எடுப்பார்கள்'' என்று கூறினார் ஒரு பெரியவர். குழந்தைகளுக்கு வீட்டிலும், மயானத்திலும் சடங்குகளே செய்வதில்லை. தகப்பனார் இறந்தால் எல்லாச் சடங்குகளையும் மூத்த பையன்தான் செய்ய வேண்டும். மயானத்தில் பிணத்தைப் புதைக்கும்பொழுது முகம் மேல் நோக்கியும் தலை தெற்காகவும் இருக்க வேண்டும்.

இவர்கள் வாழும் இடங்களில் இவர்களுக்குள் ஒரு தலைவன் உண்டு. குற்றவாளியைப் பஞ்சாயத்தின் மூலம் விசாரித்து அவன் குற்றவாளி என்று கண்டு பிடிக்கப்பட்டால், சிலருக்கு விருந்து வைக்கும்படி கூறுவர். அதுதான் குற்றவாளிக்குக் கொடுக்கும் தண்டனையாகும்.


உயர் பண்புடன் சுமுகமாக
அளிக்கப்படும் விருந்தோம்பல்
ரிட்ஸ் ஹோட்டல்
மற்றும் அதோடு இணைந்த ஹோட்டல்களில்
உங்களுக்காகக் காத்திருக்கிறது
கண்யமாக வசிப்பதற்கென்றே அமைக்கப்பட்ட எங்கள்
ஹோட்டல்களில், ஏர்-கண்டிஷன் செய்யப்பட்டு நேர்த்தியான
அலங்காரங்களுடன் கூடிய விசாலமான பல அறைகள்
உள்ளன. ஒவ்வொன்றிலும் டெலிபோன், ரேடியோ, இணைந்த
குளியலறை வசதிகள் இருக்கின்றன. மிக உயர்ந்த தரமும்
பணிவும் கலந்த சேவையும், எங்களுடைய ஹோட்டலில்
எப்போதும் பூரணமாகக் கிடைக்கும். ருசி மிகுந்த இந்திய
உணவும், ஐரோப்பிய உணவும் உயர்ந்த தரத்தில் கிடைக்கும்
Firpo's
CREDIT CARD HONOURED
RITZ HOTEL BOMBAY
RITZ HOTEL HYDERABAD
HOTEL METROPOLE MYSORE
RITZ CONTINENTAL HOTEL (Under Construction) CALCUTTA
AIRLINES HOTEL BOMBAY
RITZ HOTEL COONOOR
HOTEL KRISHNARAJASAGAR MYSORE
FIRPO'S RESTAURANT (Established Since 1917) CALCUTTA

இவ்வினத்தவர் பண்டைக் காலத்தில் 'மூத்த ராஜன் மக்கள்' என்ற பெயரில் விஜயநகர அரசனிடம் போர்வீரர்களாக இருந்தார்கள். இவர்களின் போர்த் திறமையைக் கண்ட விஜயநகர அரசன் இவர்களுக்குப் ''போலிகர்'' என்ற பட்டப் பெயரைக் கொடுத்தான். ஆனால் விஜயநகரம் விரோதி அரசன் கையில் சிக்கியதும், இந்தப் பட்டப் பெயரையே இனப் பெயராக இவர்கள் வைத்துக்கொண்டு விஜயநகரப் பகுதிகளிலிருந்த காடுகளிலும், மலைப் பகுதிகளிலும் வாழ்கின்றனர். இந்தப் பாளையக்காரர்களுக்கே சில ஊர்களில் ''தொரை'' என்றும், ''நாயடு'' என்றும் பட்டப் பெயர்கள் உண்டு. தமிழ் நாட்டில் வட ஆர்க்காடு பகுதியில் சந்திரகிரி தாலுக்காவில் வாழும் இவ்வினத்தவர் தலையாரியாக வேலை செய்வதால் அப்பகுதியில், ''தலையாரி'' என்ற பெயராலேயே இவர்கள் அழைக்கப்படுகின்றனர். இப்பகுதியிலும் அவர்கள் தங்களை, 'போலிகர்' என்று பெருமையுடன் சொல்லிக் கொள்வார்கள்.



''மாப்பிள்ளைக்குக் குடிக்கிறதுக்காகத் தண்ணீரை இப்படிக் குடத்திலே கொண்டு போறது நாகரிகமா?''
''தண்ணீர் இல்லேப்பா, பால்!''

பண்டையக் காலத்தில் ஆரணியைப் பாளையக்காரத் தலைவன் ஆண்டு வந்தான் என்று சரித்திரம் பேசுகிறது. தோன்ற மல்லண்ணு ஆரணியில் 'நகார்' அடித்ததை 'வெங்கடராயர்' என்ற பாளையக்கார அரசன் தடுத்தான் என்று தேசிங்கு சரித்திரம் கூறுகிறது. இன்றும் சேனைத் தலைவராக இருந்த பாளையக்காரர் சிலர் தங்களுடைய அரசர்களின் பலவீனத்தைக் கண்டு சில ஊர்களைத் தாமே அரசாண்டனர் என்றும் சரித்திரம் கூறுகிறது.

இவர்கள் தங்கள் குலதெய்வம் என்று முனிசாமி, (முனி) மாரியம்மன் முதலியவைகளை வழிபடுகின்றனர். ஆடி மாதம் மாரியம்மனுக்கு முதல் வெள்ளிக்கிழமைகளில் கோழி வெட்டிப் பூஜை செய்வார்கள். வித்தியாசமின்றிப் பெண்களும் ஆண்களும் மாரியம்மன் கோவிலுக்குள் போகலாம். தீபாவளி, பொங்கல் முதலிய பண்டிகைகளையும் இவர்கள் கொண்டாடுகிறார்கள். 'ஆடி அம்மன்' என்ற தெய்வத்துக்கு 'நோன்பு'' இருப்பார்கள்.

விஜயநகர அரசன் காலத்தில் இவர்கள் 'காவல்காரர்' வேலைக்கு அமர்த்தப்பட்டார்கள். ஆகையால் சில பகுதிகளில் வாழும் இவர்களை, 'காவல்கார ஜாதி' என்றும் கூறுகின்றனர். ஆனால் இவர்கள் எந்தத் தொழில் செய்தாலும் போர் முரசு கேட்டதும் எல்லோரும் போர்க்கோலத்துடன் போருக்குப் போவார்கள். போர் இல்லாத காலங்களில் இவர்களுக்கென்றுகொடுக்கப்பட்டுள்ள வயல்களில் வேளாண்மைத் தொழில் செய்வார்கள்.

பண்டையக் காலத்தில் இந்தப் பாளையக்காரர்களுக்கு அரசனும் சில வேலைகள் கொடுக்கப்பட்டன. 'பாளைய வகுப்புத் திட்டம்' என்று தளவாய் அரியநாதர் பிரித்துக் கொடுத்து வரி வசூல், நீதி நிர்வாகம், படையுதவி, பாதுகாவல் முதலிய கடமைகளும் கொடுத்தார். இவர்களுடைய வீடுகளுக்கு அன்று, ''மாளிகை; அரண்மனை'' என்ற பெயர்கள் வழங்கலாயின. சாலை அமைத்தல், நீர்ப்பாசனம், படையைப் பலப்படுத்தல் முதலிய பணியில் அரசனுக்கு உதவியாக இவர்கள் இருந்தார்கள். ஆனால் அப்படி உயர்ந்த பணியில் அன்று இருந்த இவர்களை இன்று போய்ப் பார்த்தால் சிலர் வாத்துகளை வளர்த்தும், சிலர் ஈச்ச மரத்தின் கசங்குகளை வெட்டிப் பதம் செய்து கூடைகள் செய்தும் வாழ்கின்றனர். சிலர் கல்வி கற்று உத்தியோகம் பார்க்கின்றனர்.

இன்று எப்படிப் போலீஸ் ''லைன்'' என்று இருக்கிறதோ, அதைப் போலவே நாட்டின் காவலுக்கு உறுதுணையாக இருந்த இவர்கள் வாழ்ந்த ஊர்களுக்கு அன்று, ''பாளையம்'' என்று பெயர் இருந்தது. பாளையத்தின் தலைவன் 'பாளையக்காரன்' அல்லது 'போலிகர்' எனப்பட்டான்.

மேலும், சாதுல்லாகான் 1714-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 10-ம் தேதி பாளையக்கார அரசப் படைகள் எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்துக் கொண்டு செஞ்சி நாட்டரசன் தேசிங்கின் மேல் சண்டைக்குச் சென்றான். தமிழ் நாட்டில் மட்டுமின்றி, இன்று ஆந்திர நாடு முழுவதும் அதற்கு அப்பாலும் கூடப் பாளையக்காரர்கள் வாழ்கிறார்கள்.

திருவிழாக்களில் ஆண்கள் கையில் கன்னையிச் சிலம்பு ஏந்தி, உடுக்கை அடித்து நடனமாடுவதைக் கண்டால் மிகவும் விசித்திரமாயிருக்கும். சில ஆண்கள் போர்க்களத்தில் வாள் ஏந்திப் போர் செய்வதைப் போல், வாள் ஏந்தி விளையாடுவார்கள். சில ஊர்களிலிருக்கும் காளிகோவிலின் வெளியில் பண்டைக் காலத்தில் நரபலி கொடுத்த காட்சியைப் பாறையில் சிற்பமாகச் செய்து வைத்திருப்பதை இன்றும் காணலாம். இந்தக் காளி கோயிலிலிருக்கும் வாள் அவர் தம் மூதாதையர்களுடையது என்று கூறுகின்றனர். போரில் தோற்றுப் போவோம் என்று தோன்றினால் உடனே காளிக்கு ஒரு பலி கொடுத்துவிட்டு, அதே வாளைப் பாளையக்காரத் தலைவன் கையில் ஏந்திக் கொண்டு வீர முழக்கத்துடன் போர்க்களத்துக்குச் சென்று எதிரியை ஆயிரக்கணக்கில் வெட்டித் தள்ளுவானாம். இந்தக் காரணத்தால் இன்று காளி கோயிலிலிருக்கும் வாளை இவர்கள் மிகவும் பயபக்தியுடனும், விரதத்துடனும் கையில் ஏந்தி ஆடோ, கோழியோ பலி கொடுக்கின்றனர். கன்னியம்மன் திருவிழாவன்று கோவிலிலிருக்கும் வாளால், உபவாசமிருந்து பிரார்த்தனைக்காரர்கள் தங்களுடைய தேகத்தில் இலேசாக வெட்டிக் கொள்வது ஒரு சடங்கு.


இந்தப் பிரார்த்தனைக்காரர்கள் அப்பொழுது ஒரு வாரம் அல்லது இரண்டு வாரம் என்று ஊர் காப்புக் கட்டுவது உண்டு. ஊரில் காப்புக் கட்டிய பிறகு தம் பதிகள் ஒழுங்குடன் நடந்துகொள்ள வேண்டும்.


சித்திரை மாதம் வளர்பிறையில் இத்திருவிழாவை மிகவும் பயபக்தியுடன் கொண்டாடுவார்கள்.

பேய், பிசாசு, மந்திரம் முதலியவைகளில் இவர்களுக்கு நம்பிக்கை அதிகம் உண்டு. இவர்கள் ஏகாதசி தினத்தை விசேஷமாகக் கருதுகிறார்கள். பிள்ளையாரை விசேஷமாக வணங்குவார்கள், அன்று எவ்விதமான புலாலும் தொடமாட்டார்கள். இவர்கள் தங்களுடைய தாய்மொழி தமிழ் என்று கூறிக் கொண்டாலும் பல ஊர்களில் சிதறுண்டு வாழ்வதினால் அந்தந்த ஊர்களில் பேசப்படும் மொழியையே தங்கள் பேசும் மொழியாகக் கொண்டுள்ளனர்.

எமது ஆதரவாளர்கள், விநியோகஸ்தர்கள் வாடிக்கையாளர்கள் மற்றும் எல்லோருக்கும்

எமது மனமார்ந்த தீபாவளி வாழ்த்துக்கள்!







1840-ம் ஆண்டு முதலாகவே ஸிம்ஸன் & கம்பெனி லிமிடெட் நாட்டின் ரஸ்தா நிலைமைகளை அனுசரித்து பிரயாணிகளுக்குப் போதுமான சுக சௌகரியங்கள் கிடைக்கும்படி பிரயாண வண்டிகளுக்கான கூண்டுகளை (BODY) மிகச் சிறப்பாக உருவாக்கி வந்திருக்கின்றனர். கூண்டு (BODY) அமைப்பில் அவ்வப்போது புதுப்புது மோஸ்தர்களைப் புகுத்துவதே லட்சியமாகக் கொண்ட ஸிம்ஸன்ஸ் இன்றும் இத்துறையில் முதல்வர்களாகவே விளங்குகின்றனர். வண்டியின் கூண்டமைப்பு (BODY) சிறப்பாகவும், புது வழியிலும் இருந்தால் அது முதல் முதலாக ஸிம்ஸன் கம்பெனியால்தான் தயாரிக்கப்பட்டிருக்கும். எந்த வகை சாஸியின் பேரில் எந்த வகை கூண்டு (BODY) தேவையானாலும் தயாரித்துக் கொடுக்கப்படும்.

Simpson & Co. Ltd
ESTABLISHED 1840

தலைமைக் காரியாலயம்: 202, மவுண்ட் ரோடு, சென்னை - 2
தொழிற்சாலை: செம்பியம், சென்னை -11

கிளைகள்: பெங்களூர், உதகமண்டலம், திருச்சிராப்பள்ளி & செகந்திராபாத் (ஆந்திரப் பிரதேசம்)







கோட்டான்கள் சேட்டைகள்

சின்னப் பயலுங்க சேட்டைகள் செஞ்சிட்டுச்
சிண்டெப் புடிச்சி கிண்ணு
கன்னத்திலே ரெண்டு போட்டு வெலக்கிட்டுக்
காதெ முறுக்குறுங்க

பெத்தப் பெரிசான பேச்சுக்கள் பேசுற
பெரிய மனுஷருங்க
வெந்து வெஷயத்தெ யுத்தமா மூட்டிட்டு
வேடிக்கெ பாக்குறுங்க

சீனவெடி ரெண்டு சேர்த்து வெடிச்சாக்கா
சிங்கமா மாறுறுங்க
ஆனெ வெடிகுண்டு ஆயிரம் போட்டுட்டு
ஆர்ப்பாட்டம் பண்ணுறுங்க

காலணு காத்தாடி டீலுபோட்டா மனிக்
கட்டெ முறிக்கிறுங்க
காலஞ்சு கோடியெ நாசப் பிளேனுக்கி
காட்டெப் பொளக்குறுங்க

துண்டு பலப்பத்தெ ரெண்டா ஒடிச்சிட்டா
துடிதுடிக்கிறுங்க
தண்டெடுத்துத் தொழில் சாலெயெ நொறுக்கிச்
சமத்து பேசுறுங்க

நீதியிலே ஒரு பாதி வரிவிட்டா
நெஞ்செப் புடிக்கிறுங்க
ஓதின பாட்டெல்லாம் ஒட்டா மறந்திட்டு
ஒலகெ மிதிக்கிறுங்க

பம்பரம் கோலிக்குப் பச்சைப்பசும் பாலர்
பந்தயங் கட்டிடுறேம்
வம்புக்கும் தும்புக்கும் மண்ணுக்கும் வயசான
மனுஷன்க மோதுறுங்க

குஞ்சு கொழந்தைக்குச் செய்த உபதேசம்
நெஞ்சி லிருக்காதோடா!
அஞ்சவய சொரு அம்பதா ஆனுக்கா
அறிவு சொரக்காதோடா!

சுரபி

யானையின் மந்திர விளக்கு



காட்டில் நல்ல குணம் படைத்த யானை ஒன்று இருந்தது. அது மிகவும் பணக்கார யானை. ஒரு பெரிய வீட்டில் தன் மனைவி மக்களுடன் வசித்து வந்தது. அது நல்ல யானையாதலால் அதன் வீட்டுக்கு, ஈ எறும்பு முதல் சிங்கம் வரையிலும் பிரியமாக வந்து நேசமாகப் பழகும்.

ஒரு நாள் அந்த யானை சாவகாசமாக உட்கார்ந்து எதையோ யோசித்துக் கொண்டிருந்தது. அப்போது அந்த யானைக்குப் பல வருஷங்களுக்கு முன்பு இறந்து போன அதன் தகப்பனாரின் நினைவு வந்தது. தகப்பனார் யானை சாகும் தருவாயில் சொன்னதும் நினைவுக்கு வந்தது.



''...நம் வீட்டுக் கூடத்து அறையில் உள்ள மரத்தினாலான பரணைக் கவனித்திருப்பாயே. அதில் ஓர் இரும்புப் பெட்டி இருக்கிறது. அதை நீ இப்பொழுது திறக்கக் கூடாது. நான் இறந்து எட்டு வருஷங்களுக்குப் பிறகு அதைத் திறந்து பார். அதில் ஒரு.....'' என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே தகப்பனார் யானை இறந்துவிட்டது.

யானை சற்று நேரம் சிந்தனையில் ஆழ்ந்திருந்தது. எட்டு வருஷங்கள் முடிந்து இன்று ஒன்பதாம் வருஷம் ஆரம்பமாகியிருந்தது. அது யானைக்கு ஞாபகம் வந்தது. அப்பொழுது அங்கு வந்த கரடியை அழைத்துப் பரண் மீது ஏறச் செய்தது. கரடி பரண் மீது ஏறிப் பெட்டியைத் திறந்து பார்த்து விட்டுக் கையில் ஒரு பித்தளை விளக்குடன் கீழே இறங்கி வந்தது. ''பெட்டிக்குள் இந்த விளக்கு மட்டும்தான் இருந்தது'' என்று சொல்லிக் கரடி அந்த விளக்கை யானையிடம் கொடுத்தது.

அவசரம் அவசரமாக ஆவலோடு யானை விளக்கை வாங்கிப் பார்த்தது. ''இது கதையில் வரும் மந்திர விளக்கைப் போல அல்லவா இருக்கிறது! இந்த விளக்கில் ஏதோ சக்தி இருக்கும். இல்லாவிட்டால் என் தகப்பனார் இதைப்பற்றி இவ்வளவு அக்கறையாகக் குறிப்பிட்டிருக்க மாட்டார்'' என்றது யானை. அங்கு இருந்த கரடி, மான், புலி, யானைக் குட்டிகள் யாவும் ''அந்த விளக்கை உங்களது துதிக்கையினால் தேய்த்து ஒரு பறக்கும் ஜமக்காளத்தைக் கேட்டுப் பாருங்களேன்'' என்று யோசனை கூறின. யானையும் அப்படியே செய்தது. சற்றுப் பொறுத்துப் பார்த்தும் ஒன்றும் வரவில்லை. எல்லா மிருகங்களுக்கும் ஒரே ஏமாற்றம். ''இது ஒரு சாதாரணப் பித்தளை விளக்குத்தான்'' என்று ஏளனமாகச் சொல்லிக் கொண்டே அங்கு வந்திருந்த மிருகங்கள் வெளியே சென்றன.

''யானையாரே, ஓடி வாருங்கள்'' என்று வெளியே சென்ற மிருகங்கள் யானையைக் கூப்பிடவே யானை ஓடி வந்து பார்த்தது. என்ன ஆச்சரியம்! ஒரு புதிய பெரிய ஜமக்காளம் கட்டப்பட்டு யானையின் வீட்டுக்கு எதிரில் கிடந்தது. 'இது மந்திர விளக்கு செய்த அற்புதந்தான்!' என்று சொல்லிக் கொண்டே அவசரம் அவசரமாக ஜமக்காளத்தைப் பிரித்தது யானை. பிரித்த ஜமக்காளத்தில் யானையும் அதன் மனைவியும் யானைக் குட்டிகளும் உட்கார்ந்தன. அவைகளுக்குப் பிறகு புலி, கரடி, மான், நாய், பூனை, ஒட்டைச் சிவிங்கி எல்லாம் உட்கார்ந்தன. ஆனால் அவைகள் யாவும் ஜமக்காளம் பறக்குமா என்ற சந்தேகத்துடன் உட்கார்ந்தன. யானை துதிக்கையால் விளக்கைத் தேய்த்தபடியே ''ஜமக்காளம் பறக்கட்டும்'' என்று சொன்னவுடன் ஜமக்காளம் 'ஜம்'மென்று மேலே பறந்தது. ஆனால் ஜமக்காளம் எப்படிப் பறக்க வேண்டும் என்று யானை சொல்லவில்லை; சொல்லவும் தெரியவில்லை. அதனால் ஜமக்காளம் பூமிக்கு வெகு சமீபத்திலேயே பறந்து கொண்டிருந்தது. யானையும் மற்றவைகளும் ஜமக்காளத்தில் பறந்து செல்வதைப் பார்த்த காட்டில் உள்ள மிருகங்கள் யாவும் சந்தோஷத்தினால் ஆரவாரம் செய்தன. யானைக்குக் கிடைத்த மந்திர விளக்கு பற்றிய செய்தி காட்டுத் தீப் போல் எங்கும் பரவியது.

எல்லா மிருகங்களும் சந்தோஷம் அடைந்திருக்கும் சமயத்தில் ஒரு கொடிய ஓநாய் மாத்திரம் யானையின் மீது பொறாமை



கொண்டது. யானையிடமிருந்து அந்த மந்திர விளக்கைஎப்படியாவது கவர்ந்துவிட வேண்டும் என்று நிச்சயித்தது.


பூமிக்குச் சமீபத்தில் பறந்து சென்ற ஜமக்காளத்தைப் போலீஸ் உடுப்புக்கள் அணிந்து கொண்டிருந்த காண்டாமிருகம் பார்த்து விட்டது. யானையைப் பார்த்து ''நிறுத்து, நிறுத்து'' என்று கத்திற்று. ஆனால் வேகமாகப் பறந்து வந்த ஜமக்காளம் போலீஸ்கார காண்டாமிருகம் அணிந்திருந்த தொப்பியைத் தள்ளிவிட்டுச் சென்றது. கோபமடைந்த காண்டாமிருகம், ''உங்கள் அனைவரையும் என்ன பண்ணுகிறேன், பாருங்கள்'' என்று துரத்திக் கொண்டே வந்தது. அந்தச் சமயத்தில் ஜமக்காளம் நேராக ஒரு மரத்தின் மீது மோதியது. பயந்துபோன யானையும் மற்றவைகளும் தொப்பென்று கீழே குதித்தன. காண்டாமிருகம் அவைகளை நோக்கி வருவதைப் பார்த்த யானை மந்திர விளக்கின் உதவியால் ஜமக்காளத்தை மறையச் செய்தது. அவற்றை நெருங்கிய காண்டாமிருகம் ஜமக்காளத்தைக் காணாமல் திகைத்தது.

வீட்டை அடைந்த யானையிடம் ஓநாயின் சூழ்ச்சியைப் பற்றிக் காட்டில் உள்ள மிருகங்கள் தெரிவித்தன. அதனால் மந்திர விளக்கை யானை மிகவும் விழிப்புடன் பத்திரமாகக் காத்து வந்தது. இரவில் படுக்கும் போது தலையணைக்கு அடியில் வைத்துக்கொண்டு தூங்கியது.

ஒரு நாள் இரவு ஓநாய் ஒரு முள்ளம்பன்றியை அழைத்துக் கொண்டு மெதுவாக யானையின் வீட்டுக்குள் நுழைந்தது. அப்பொழுது யானையும் அதன் குடும்பமும் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தன. மெதுவாக முள்ளம்பன்றி யானையின் பக்கத்தில் படுத்துக்கொண்டு தன் உடம்பை ஒரு பந்து போல் உருண்டையாக ஆக்கிக் கொண்டது. தனது முட்களினால் யானையை மெதுவாகக் குத்திற்று. உடனே யானை திரும்பிப் படுத்துக் கொண்டது. அதுதான் சமயமென்று ஓநாய் தலையணைக்கு அடியில் இருந்த விளக்கை அவசரம் அவசரமாக எடுத்துக் கொண்டது.

உடனே யானை விழித்துக் கொண்டது. துதிக்கையால் தலையணைக்கு அடியில் தடவிப் பார்த்தது. ''திருடன், திருடன்! என் மந்திர விளக்கு பறி போய் விட்டது'' என்று கத்திற்று. உடனே 'இதோ திருடன், இதோ





திருடன்' என்று முள்ளம்பன்றியைச் சுட்டிக் காட்டியது யானையின் மனைவி. பயத்துடன் ஒடுங்கி நின்ற முள்ளம்பன்றியை நெருங்கியது யானை. ''விளக்கைத் திருடியது நான் இல்லை. அதோ அந்த ஓநாய்தான்'' என்று ஒரு மூலையில் அசையாமல் நாற்காலி ஒன்றின் மீது உட்கார்ந்திருந்த ஓநாயைச் சுட்டிக் காட்டியது. ஓநாயிடம் யானைகள் நெருங்கியவுடன் ஓநாய் உட்கார்ந்திருந்த நாற்காலி திடீரென்று பறந்து வெளியே சென்று ஓநாயின் வீட்டை அடைந்தது.

மந்திர விளக்கு நல்ல குணம் படைத்த யானையிடமிருந்து தீய குணம் படைத்த ஓநாயிடம் சென்றது. காட்டில் உள்ள மிருகங்களுக்குப் பிடிக்கவில்லை. ஓநாய் தனக்குக் கிடைத்த விளக்கின் உதவியால் நிரம்பத் தின்பண்டங்களை வரவழைத்தது. தின்பண்டங்களுடன் தட்டுகள் ஆகாயத்தில் ஓநாயின் வீட்டை நோக்கிப் பறந்து செல்வதைக் கண்ட மிருகங்களுக்குக் கோபம் கோபமாக வந்தது. யானையின்மீது அன்பு கொண்ட காட்டிலுள்ள கட்டெறும்புகள் கூட்டம் போட்டு ஓநாயிடமிருந்து விளக்கைக் கொண்டு வருவது என்று நிச்சயித்தன.

''சிங்கம், புலி முதலியவைகளே என்னிடம் நெருங்குவதற்குப் பயப்படும்போது இந்தக் கட்டெறும்புகள் என்ன என்ன பண்ணும்?'' என்று சொல்லிக்கொண்டே விளக்கை ஓர் இரும்புப் பெட்டியில் வைத்துப் பூட்டிவிட்டுத் தெருக் கதவையும் நன்றாகப் பூட்டிவிட்டு ஓநாய் வெளியே ஜம்பமாகச் சென்றது.

அந்தச் சமயத்தில் பெரிய பெரிய கட்டெறும்புகள் சாரி சாரியாக ஓநாயின் வீட்டுக்குள் நுழைந்தன. நுழைந்த எறும்புகள் இரும்புப் பெட்டியின் சாவித் துவாரத்தின் வழியாக இரும்புப் பெட்டிக்குள் நுழைந்தன.

அந்தச் சமயத்தில் அவசரம் அவசரமாக வீடு திரும்பிய ஓநாய் கட்டெறும்புகள் இரும்புப் பெட்டிக்குள் நுழைவதைப் பார்த்துப் பெட்டியைத் திறந்தது. விளக்கு முழுதும் எறும்புகள் மொய்த்திருப்பதைப் பார்த்தது. அந்தச் சமயத்தில் விளக்கில் இருந்த எறும்புகள் என்ன செய்தன, தெரியுமா? ஒரே சமயத்தில் எல்லா எறும்புகளும் ''இந்த விளக்கு மறுபடியும் யானையிடம் சேர வேண்டும்'' என்று சொல்லித் தேய்த்தன. ஓநாய் விளக்கை எடுப்பதற்குள் விளக்கு எறும்புகளுடன் ஆகாயத்தில் விர்ரென்று பறந்து யானையிடம் போய்ச் சேர்ந்தது. எறும்புகள் செய்த தீரச் செயலால் ஏமாற்றம் அடைந்த ஓநாய் அவமானத்தினால் தலை குனிந்தது.

யானைக்குச் சந்தோஷம். நல்ல வேளையாகத் தீபாவளியன்று அதற்கு விளக்கு திரும்பக் கிடைத்தது அல்லவா? அந்த அதிசய விளக்கின் உதவியால் காட்டில் உள்ள எல்லா மிருகங்கள் வீட்டுக்கும் புதிய துணிகள், தின்பண்டங்கள், பட்டாசுகள், மத்தாப்புகள் முதலிய யாவும் வரவழைத்துக் கொடுத்தது. பொறுமைக் குணம் படைத்த ஓநாய்க்கும் தின்பண்டம் கிடைத்தது. காட்டில் தீபாவளி பிரமாதமாகக் கொண்டாடப்பட்டது.

''எங்க ரெண்டு பேரும் எத்தனை ஒத்துமையா இருக்கோம், பாத்தீங்களா!''

போட்டோ: என். ராமகிருஷ்ணு





புது டயரா? அல்லது புதுப்பித்த டயரா?

வேற்றுமை காண்பது கடினம்

உங்களுடைய கார் டயர்களை ரீடிரெட் செய்து, எவ்வளவு காலம் உபயோகிக்கலாமோ, அவ்வளவு காலம் உபயோகிக்கவே விரும்புவீர்கள். செலவு மிச்சம் ஒரு புறம்; தோற்றத்திலும் கவர்ச்சியாக இருக்கும் டிவிஎஸ் ரீடிரெட். ஏனென்றால், பயிற்சிபெற்ற நபர்கள் டிவிஎஸ் ஸ்தாபனத்தில் பணியாற்றுகிறார்கள். அவர்கள் உழைப்பு, உங்கள் சேவைக்கு.

டிவிஎஸ் — *ரீடிரெடிங் செய்வதில் இந்தியாவிலேயே மிகப்பெரிய ஸ்தாபனம்*


சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட் (டிவிஎஸ் ஸ்தாபனம்)

TVS


பங்களூர் . கோயமுத்தூர் . சென்னை . புதுக்கோட்டை . செகந்திராபாத் . திருநெல்வேலி

JWT/TVS/51/2065

சிரித்து விளையாடு, பாப்பா!




248-D



ஆற்றின் கரையோரமாகவே நீண்டிருக்கும் சாலையின் நடைபாதை விளிம்பின் கைப்பிடிச் சுவர் மீது சுருண்டு மடிந்து எழும்பி மோதும் அலைகளினின்றும் நீர் முத்துக்கள் வாரிச் சிதறுகின்றன. கோபம் கொண்ட குழந்தை தன் எதிர்ப்புச் சக்தியைக் காட்ட அம்மையை ஓங்கி ஓங்கி அடிப்பது போலிருக்கிறது சர்மாவுக்கு.

யார்மீது கோபப்படுவார் அவர்?

''கோவா கிளை அலுவலகத்துக்குப் போகிறீர்களாமே? அழகான ஊராம் ஸார், கொடுத்து வைத்தால்தான் பார்க்கலாம்'' என்று ஒரு வாய் கொண்டாற்போல் எல்லாரும்தான் சொன்னார்கள். விலைவாசி கொஞ்சம் அதிகம் என்று கேள்வி. அதெல்லாம் சாரமில்லே. எங்கு வாழ்கிறது? என் அம்மாஞ்சிக்கு ஷட்டகன் புனேவிலிருந்து ஏதோ 'டெபுடேஷ'னில் போயிருந்தான். அங்கிருந்து வரும்போது ஆளையே அடையாளம் தெரியவில்லே போங்கள்! வற்றக் காய்ச்சியா இருப்பான். சிவப்பொன்று சிவந்து, பளபளப்பேறி எப்படி ஆகிவிட்டான்





உறவு

ராஜம் கிருஷ்ணன்

என்கிறீர்கள்? வீடு தேடி வந்து ஏஜண்டு ராமதுரை ஆசைக்கு உரமிட்டு விட்டுப் போனான். ''ஏதோ ஐம்பது ரூபாய் கூடக் கொடுக்கிறேன். வீட்டு வாடகையும்தான் கிடைக்கப் போகிறது. பெரியவாள்ளாம் காலேஜிலேதானே படிக்கிறது? சச்சு ஒருத்திதான். ஆணி அடிச்சாப்போல் இந்தப் பட்டணத்திலே உட்கார்ந்துதான் என்ன சுகம் கண்டோம்? புதிசா நாலு இடம் பார்த்தாப் போலாவும் இருக்கும். போய் வீடு பார்த்துக் காகிதம் எழுதினால் நான் வருகிறேன், சச்சுவோடு'' என்று ருக்குவும்தான் அவரை உலுக்கி விட்டாள். எல்லாருமாகக் கழுத்தைப் பிடித்துத் தள்ளுவது போல் தள்ளி விட்டார்கள்!

அந்த ராமதுரை, படுபாவி, தன்னை எங்கே அந்தப் புதிய கிளைக்குப் போ என்று சொல்லி விடப் போகிறார்களோ என்று இப்படிப் பொய்யும் புனைசுருட்டும் கலந்து குழையடித்திருப்பானாக இருக்கும்.

அம்மாஞ்சியின் ஷட்டகன், மரப் புகை நாற்ற மடிக்கும் மாண்டவித் தண்ணீர்க் காப்பியைக் குடித்துவிட்டு, மரக்கறிச் சாப்பாடென்று போடும் கன்னாமுளியைக் கொறித்துவிட்டா தேஜஸ் பளபளக்கத் திரும்பி வந்தான்? வயிற்றெரிச்சல்!

கண்ணுக்கு எட்டிய இடமெல்லாம் பச்சை — பச்சை — பச்சைதான். தளதளவென்று புல்லால் மெழுக்கு மண்டிக் கிடக்கிறது. வீடுகளைச் சுற்றிச் சுற்றிக் காட்டுக் கொடியும் செடியும் புதருமாக ராட்சத வேகத்தோடு வளர்ந்து படர்ந்து கிடக்கின்றன. பால் வேண்டுமானால் காருக்குத் தவம் கிடந்து. டென்மார்க்கும், ஹாலந்தும்

அனுப்பி வைக்கும் டப்பாக்களை வாங்க வேண்டுமாம். நல்ல காப்பிக்கு நெஞ்சு நந்து நாட்களாய்க் கெஞ்சுகிறது.

சொந்த மண்ணுக்குள்ளேயே அந்நியமாக இருந்து விட்ட இடத்தின் தன்மை புரியாமல் வந்து அகப்பட்டுக் கொண்டுவிட்டாரே? எப்படித் திரும்பிப் போவது? 'சர்மா ஸாரே வந்து விடுகிறாரா?' என்று அவனவன் பேசாமல் இருக்கத் தற்காப்பு செய்து கொள்வாளே?

மேகங்கள் கூடிக் கூடி அப்போதைக்கப்போது கோஷ்டி கானம் இசைப்பது போல் பொழிந்து விட்டு, வசந்தத்துக்கும் இடம் அளிப்பது போல், சூரியனுக்கும் வான அரங்கை விட்டிருக்கின்றன. ஞாயிற்றுக்கிழமை மாலையும் கூடி விருப்பதால், ஆற்றின் கரையோரச் சாலை, நடை பாதை யெல்லாம் விழாக்கோலம் கொண்டிருக்கின்றன. ஜோடி ஜோடியாகப் புறப்பட்டவர்கள் குடும்பம் குடும்பமாகப் புறப்பட்டவர்கள், நண்பர் குழாமாகக் கிளம்பியவர்கள் என்று ஊரே ஆற்றின் கரைக்குப் படை கிளம்பினாற் போலிருக்கிறது. அரை மைலுக்குள் மாண்டவி ஆறும் மேல் கடலும் இணையும் கடற்கரையை நோக்கிச் சாலையில் செல்லும் விதேசச் சிறப்புப் பெற்ற கார்களெல்லாம் என்னைப் பார் என்னைப் பாரென்று கண்களைக் கவருகின்றன. ஆண்களெல்லாம் கண்ணாடித் துணிச் சட்டையும், உரித்தெடுக்க வேண்டிய தோலைப் போல் ஒட்டிக் கொள்ளும் கால் சராயும் குத்து வாளின் நுனி போன்ற கூர்த்த முனை ஜோடுகளுமாக ஒருமைப்பாட்டைக் கையாண்டாலும் பெண்ணினம் பரம்பரைக் கலாசாரங்களை அவ்வளவு இலகுவில் விட்டு விடவில்லை. பல்வகைச் சேலைப் பாணிகள், கொண்டை, பின்னல் கூந்தல் அலங்காரங்களிலிருந்து பஞ்ஜிம் நகரிலே கூடியிருக்கும் பல்வேறு பிரதேச மக்களைக் கண்டுகொள்ள முடிகிறது. கொங்கண, மகாராஷ்டிர, ஆந்திர, கன்னட, மத்திய, உத்தரப் பிரதேசங்களின் நாகரிகங்களுக்கப்பால் மேற்கத்திய நாடுகளின் நாகரிகமும் இந்த ஆற்றின் கரைக்குச் சொந்தம் என்று மின்னுகின்றனர், நடை பயிலும் சில மெல்லியலார். வேர்க்கடலே விற்பவனுக்குக் கடகட வியாபாரமாகிறது. படகுத் துறையில் வழக்கமான பிரயாணிகளைக் காட்டிலும் உல்லாசப் பிரயாணிகளே அதிகம் இருப்பார்கள் என்று தோன்றுகிறது. படகேறி ஆற்றைக் கடந்து கார்களும் டிரக்குகளும் சென்றவண்ணம் இருக்கின்றன.

எல்லாம் மனம் கவரும் காட்சிகள்தாம். யாரைப் பார்த்தாலும் அவரைப் போல் நல்ல காப்பியும் சாப்பாடும், ரசமும் சோறுமாகிய உணவை மட்டும் பற்றிக்கொண்டு வாழ்ந்து விட்டு, கவலைப் பற்றிக் கொண்டே நடமாடிய ஒருடன் சட்டென்று அந்தக் கவலையா உலகுக்கு வந்து தவிப்பதைப் போல் தவிப்பவர்களாகத் தெரியவில்லையே?

யாரோ ஒரு பையன் இள வயசாக இருக்கிறான். பார்த்தால் தமிழன்போல் இருக்கிறது. இருண்ட மூர்த்தி, ராமமூர்த்தியாக இருப்பானோ? அருகில் வந்துவிட்டுப் பார்க்காமலே போகிறான். சர்மாவுக்குச் சுச்சமாக இருக்கிறது, கூப்பிட்டுக் கேட்க. அவர் அவனையே பார்த்துக் கொண்டு நிற்கையில் மறு புறம் தமிழின் இனிய ஒலி, கின்னே கொஞ்சும் குரலாய், செவிகளைக் குளிரச் செய்து அவரைத் திரும்பிப் பார்க்கச் செய்கிறது.

''மாண்டவிக்கு இன்னிக்கு என்ன கோபம்?''

தந்தச் சிலை போல் ஒரு பெண். நீலச் சேலை உடுத்தியிருக்கிறாள். வழுவழு வென்று நீண்ட இரட்டைப் பின்னல்கள் பின்னே இரு நாகங்களாய்த் தொங்குகின்றன. அந்தக் கழுத்தின் பின்னே கருகமணி தெரிகிறது. அருகில் நிற்கும் இளைஞன் அவளுக்கேற்றவன். இருவரின் முகங்களும் தெரியாமற் போனாலும் சர்மா அந்த ஜோடியை ஆவலுடன் பார்த்துக்கொண்டு நிற்கிறார். அவள் பேச்சுக்கு அவன் மறுமொழி மராட்டியில்தான் கொடுக்கிறான். ''அமாவாசை வருகிறதல்லவா? அதனால் அலைகள் அதிகம்'' என்று சொல்வதாகத் தோன்றுகிறது.

''ஊஹூம்!'' என்று கொஞ்சுகிறாள் அவள்.

''எங்கிருந்தோ ஓடி ஓடி வருகிறாளே, இந்தச் சமுத்திரராஜனை எண்ணி, அவன் கண்ணெதிரே இன்னொருத்தியுடன் மகிழ்ந்து கொண்டிருப்பதைப் பார்க்கக் கோபம் பொங்கி வருகிறது. அதனால் அவனுடன் கோபித்து இங்கே வந்து மிகுந்த ஆத்திரத்தோடு கரையை மோதுகிறாள்.''





"ஆஹாஹாஹா..." என்று மனைவியின் ரஸிக உணர்ச்சியை சபாஷ் போட்டுப் பாராட்டும்போது, சர்மா தம்மையும் மீறி, "அங்கே இன்னொரு நதியும் வருகிறதா என்ன?" என்று கேட்டு விடுகிறார்.

அந்த நங்கை திடுக்கிட்டாற்போல் திரும்பிப் பார்க்கிறாள்.

சர்மாவும் குதூகலக்குரிய அந்தக் குழந்தை முகத்தைப் பார்த்து வியந்து நிற்கிறார். கபடமே அறியாததொரு பால் வடியும் முகம். நெற்றியிலும் முன் உச்சியிலும் குங்குமம் அந்த முகத்துக்கு முதிர்ச்சி ஏற்ற முயன்று தோற்றுப் போகிறது. கழுத்திலே வெறும் கருகமணி. கைகளில் இரண்டு கண்ணாடி வளையல்கள். இவள் தமிழ் பேசியதும், கேட்டதும் கனவோ, பிரமையோ என்று மலைக்கிறார் சர்மா. அவர் மலைப்பு தீருமுன் அவள் கணவன் ஆங்கிலத்தில், "ஆமாம், அதோ கடல் தெரிகிறதல்லவா? இந்த ஊரின் குன்றில் ஏறிப் பார்த்தால் தெரியும். ஸாவாரி என்ற ஒரு பெரிய ஆறும், அருகிலேயே கடலில் சங்கமமாகிறது. இரண்டு நதிகள் அவற்றை இணைக்கும் கால்வாய், கடல் இவற்றின் நடுவேதான் இந்தக் கோவாவே இருக்கிறது. நீங்கள் இங்கே புதியவர் போலிருக்கிறது" என்று கேட்கிறான்.

"ஆமாம். ......பாங்க் புதிய கிளை திறந்திருக்கிறார்களே, அங்கு வந்திருக்கிறேன். ஒரு வாரமாகவில்லை. எனக்கு மதராஸ்."

"எங்கே தங்கியிருக்கிறீர்கள்?"

"அந்த வயிற்றெரிச்சலைக் கேட்காதீர்கள். வேறு ஏதாவது பேசுங்கள்."

அவன் சிரிக்கிறான்.

"ராதா நிவாஸா? இல்லை முகுந்த விலாஸ், சிவஸரா, இவைகளில் ஏதேனும் ஒன்றில் தங்கி யிருக்கிறீர்களோ?"

"என்ன நிவாஸோ, ஒரு கட்டிலுக்கு நாள் ஒன்றுக்கு ஏழு ரூபாய். என்ன அக்கிரமம்? சாப்பாடோ.... காகித தோட்டைச் சாப்பிடுவது போல் இருக்கிறது. டெபுடேஷன்காரர்கள்தானு, இங்கு இவ்வளவு பேரும்? நீங்கள்...?"

"நானும் அப்படித்தான். இந்தக் கோவாவின் மறுமலர்ச்சிக்காக வந்த கும்பலில் ஒருவன் என்றுதான் சொல்ல வேண்டும். ஆற்றுப் பால அமைப்பில் வேலை பார்க்கிறேன். என் பெயர் ஸ்ரீபாதன். இவளைக் கல்யாணம் செய்து கொண்டதும் இங்கேதான் வந்தேன். இரண்டு வருஷங்களாகின்றன."... ஒரு குமிண் சிரிப்புடன் நிறுத்துகிறான்.


'புதிய மனைவி, புதிய ஊர், ஒன்றுமே பிடிபடவில்லை — சமாளித்தேன்' என்று மின்னும் அடக்கமானதொரு பெருமிதம் அந்தச் சிரிப்பில் புலனாகிறது.

"இரண்டு வருஷங்களாயிற்று? நீங்கள் தப்பாக நினைத்துக் கொள்ளக் கூடாது. நீங்கள்... சைவமோ அல்லது..."

"ஓ, நாங்கள் அசல் சைவப் பிராமணர்கள். இந்த ஊர்க்காரர்களல்ல. தார்வாரைச் சேர்ந்தவர்கள். முட்டை கூட விலக்கு. இப்போது என்ன கஷ்டம் இந்த ஊரில்? நாங்கள் வந்தபோது.... கரு, நீதான் சொல்லேன்?"

'உங்களைக் காட்டிலும் நாங்கள் கஷ்டப்பட்டோம்' என்று சொல்வதைக் கேட்பதற்கு அவருக்கு ஆறுதலாக இருக்கும் என்று மட்டுமல்லாமல், அதை

மா(ட்டு)ப்பிள்ளை !



"மாப்பிள்ளே! மாடுகள் களைச்சுப் போய்ப் படுத்துடுச்சி. நீங்க ஒரு கை கொடுத்து ஒரு ரவுண்டு அடிச்சாப் போதும்; காம தலை முழுவ எண்ணெயைத் தயார் பண்ணிடலாம்!"

யும் அவருடைய மொழியில் சொல்லச் சொல்கிறானே, இங்கிதம் உணர்ந்த பையன்!

கரு புன்னகை பூக்கிறாள். மராட்டியப் பெண் மாதிரியே கோலம் இருக்கிறது. ஆனால் அவள் தமிழல்லவா பேசினாள்? தமிழைக் கற்றுக் கொண்டிருந்தாலும் தனிமையில் புருஷனோடு பேசும்போது மராட்டி வரவில்லையே?

"அதெல்லாம் இப்ப என்னத்துக்கு? நாங்க வரப்ப இந்த ஊரில் ஒரு வெஜிடேரியன் ஹோட்டல் கிடையாது. இட்டிலியெல்லாம் நினைக்கவே முடியாது. அதுவும் நாங்க வந்தன்னிக்கு, ஞாயிற்றுக் கிழமை. இந்த ஊரில் அன்னைக்கு ஒரு ஹோட்டல், கடை கிடையாது. எனக்கு ஒரே பசி. தலை நோவு வேறே. அப்பல்லாம் தங்க இடம் இப்போதைய விடக் கஷ்டம். லட்சுமி விலாஸ் இருக்கே, அதுக்கு அப்ப பேர் வேறே. நாளொன்னுக்கு இருபத்தைஞ்சு ரூபா. ஒரு ரொட்டி, உருளைக் கிழங்கு, ஜாம் தான் சாப்பிடுவோம். பில் மட்டும் முழுச் சாப்பாட்டுக்கும் போடுவாளே அந்த கணக்கில் ஏறிப் போகும்."

கவனித்தால் தமிழை இப்போதுதான் கற்றுக் கொள்வது போல் மழலையாகப் பேசுகிறாள் என்பது புரிகிறது. ஒருவேளை புதிய மொழியைக் கற்கும் ஆவலில் தான் அவனிடம் பேசுகிறாளோ?

"அப்புறம்தான் இந்த வஞ்ரேகவரர் நிவாஸுக்கு வந்தோம். இப்ப நிறையப் பேர் குடும்பமெல்லாம் அழைத்து வந்திருக்காங்களே, அப்ப இப்படியே இல்லே. அந்த ஹோட்டல்லே என் ஒருத்தியைத் தவிர எல்லோரும் ஆண்கள்தான்..."

தொடர்ந்து ஸ்ரீபாதன் குறுநகையுடன், "அப்புறம் இவள் சமையல் செய்யக் கற்றுக் கொண்டது, நான் இவள் சமையலில் மட்டும் வாழக் கற்றது எல்லாம் வேறு கதை..." என்று நிறுத்துகிறான். சர்மாவுக்குக்கூடச் சிரிப்பு வருகிறது.

"நீங்க...வீட்டிலே கூட்டி வரலியா?"

"நானு? இப்படி யெல்லாம் ஓர் அறைக்குள், பவுடர் பாலையும் கோதுமை மாவையும், வனஸ்பதி டின்னையும் வைத்துக்கொண்டு எங்க வீட்டிலே குடித்தனம் செய்யத் தெரியாதே? நான் தெரியாமல் வந்துவிட்டுத் திரும்பிப் போக யோசனை பண்ணுகிறேன். இந்த ஊரில் இவ்வளவு பேரும் எப்படி சந்தோஷமாக இருக்கிறார்கள் என்று நான் அப்போது மலைத்துப்போயிருந்தேன். பார்க்க லட்சுமி கடாட்சம் இருந்தும், சோபிக்கவில்லையே! ஓர் அறைக்கு ஏழு ரூபாய் வாங் கட்டும். ஒரு மூட்டைப் பூச்சிக் கட்டிலுக்கு ஏழு ரூபாயா?"

சர்மா இதை முடிக்கு முன் நூக்கத்தின் நடுவே அமைதி கெட்ட சிம்மம் பிடரியைச் சிலுப்பிக் கொண்டு வருவது போல் நடை பாதை விளக்குக் கம்பத்தின்புறமிருந்து ஒருவன் பாய்ந்து வருகிறான். கண்ணங்கள் இரண்டும் பழுக்கும் போது தெரியும் சிவப்பு நாளங்களோடு கூடிய தக்காளிப் பழங்களைப் போல் குலுங்குகின்றன. இருபுறமும் கத்தி போல் நீண்டிருக்கும் மீசை. கண்களில் உறக்க மயக்கம் கலப்பட்டாற் போன்ற வெறி. தலையில் சாய்ந்தாற்போல் நிற்கும் தொப்பி. சட்டை முடியத் தொத்தி சரிந்து தெரியும்படியாக இறுக்கிப் பிடிக்கும் நிஜார். வயிற மாட்டாமல் நழுவினாற்போன்ற பெல்ட் வேறே. "என்ன...?" என்று அவன் நாவினின்றும் தெறித்த அதட்டலில் சர்மா தூக்கி வாரிப் போட்டவராய்ப் பின்னுக்கு நகருகிறார். கரு ஸ்ரீபாதனின் பின்னே அஞ்சி நடுங்கினாற்போல் ஒளிந்து நிற்கிறாள்.

கம்மிய தொண்டை திறந்து, கக்கலும் கரைசலுமான குரலாய் ஆங்கிலச் சொற்கள் வெளிப்படுகின்றன.

"எங்கேதான் விஸ்வாசி இல்லே? நான் இந்த உலகம் முழுதும், இந்தியா முழுவதும் சுற்றியிருக்கிறேன். எங்கே விஸ்வாசி சரிந்து தரையைத் தொடுகிறது? மதராஸ், பம்பாய், கல்கத்தா, டில்லி, பங்களூர், எங்கே, விரலை விடுங்கள்? விஸ்வாசி சரிந்து பள்ளத்தில் எங்கே கிடக்கிறது, வாரி வாரி எடுத்துக் கொள்ள?"

ஏதோ சொல்லக் கூடாத சொல்லைக் கூறிவிட்டாற் போல் இனிமேல் சொல்வாயா சொல்வாயா என்று அடிப்பது போல் சொல்லாலேயே வினாவுகிறான்.

"விஸ்வாசி, விஸ்வாசி, விஸ்வாசி! இன்னொரு முறை இப்படிச் சொல்லாதீர்கள்! ஆமாம். இந்த உலகத்திலேயே இப்படி ஓர் அழகான நகரம், பரவசமூட்டக் கூடிய இடம், இவ்வளவு மலிவாக இருக்கிறதா? நேற்று இன்று முளைத்த ஊரா இது? இந்த மாண்டவி ஆறும் கடலும் சேரும் நாட்களாகப் பெருமை பெற்ற ஊர். பொன்னுலை நகரம். இந்த மக்களைப் போல் மனிதாபத்தை தெரிந்து பழகுபவர்கள், அதை விரும்புபவர்கள் எங்கு தேடினாலும் கிடையாது. எல்லோரும் தோளோடு தோளாக இருந்து வந்திருக்கிறோம். இங்கே ஜீவேபி இருக்கிறதுனார், ஜீவேபி! இதை நழுவவிட்டு, தெருக்கடையில் ச

மொய்க்கும் பண்டத்தை வேண்டுவார்களா? நான் எப்போதோ சிங்கப்பூர், பினாங்கு, சைகோன் என்று வேண்டுமானாலும் போயிருப்பேன். பிறந்த மண்ணையா, மாதா — இதன் பெருமை குலையப் பேசாதீர்கள். ஆமாம். பேசாதீர்கள்...''

சாட்டையால் விளாசுவதுபோல் பேசி விட்டு அதே விறைப்போடு நடந்து செல்கிறான். கடைசியாக அவன் செல்லும் போது, அழுவது போலவே இருக்கிறது அவன் குரல்.

படகுத் துறைக் கட்டத்தில் அவன் தலை மறையும் வரையில் சர்மாவுக்கு நா எழவில்லை.

'' குடிச்சிட்டிருக்கிறான் '' என்று மெள்ளச் சுரு குரல் கொடுத்தபிறகுதான் அவருக்கே உணர்வு மீண்டு வருகிறது.

''ஆமாம். ஆனால் அதனால் மட்டும் அவன் பேசவில்லை. தினமும் நான் பார்ப்பேன். அதிர்ந்து பேசியதில்லை. 'சௌக்கியமா மிஸ்டர் ஸ்ரீபாத்?' என்று கேட்காமல் போக மாட்டான்.''

''என்னைப் பார்த்தால்கூடத் தொப்பியைத் தூக்கிவிட்டுச் சிரிப்பான். வீட்டிலிருக்கும் ஜிலேபியை விட்டுக் காகக் கடைப் பண்டத்துக்குப் போவீர்களா என்றானே, பிறந்த மண்ணின்மீது ஏற்பட்ட தனியான பாசத்தின் வெறி இது. உணர்ச்சியைக் கொட்டிவிட்டுப் போகிறான். ஆத்மார்த்தமானதோர் உறவினர் இழப்பை எண்ணி வருந்தும் தாபம்....''

சுரு தன்னை மறந்து பேசுகிறாள். ஸ்ரீபாதனே சட்டென்று அவளுடைய பேச்சின் போக்கை வளர்த்து விடுகிறான்.

''இந்த நகரத்தில் லட்சுமி கடாட்சம் இருந்தும் சோபிக்கவில்லை என்று சொன்னீர்களே, ஏன் அப்படி?''

''எனக்கு விளக்கப் புரியவில்லை. ஒரு வேளை எப்போதும் ஞாயிற்றுக்கிழமையும் மூடாமல் திறந்திருக்கும் மதுக்கடைகளின் காரணமாக இருக்கலாம். சென்னையில் இப்படி யெல்லாம் பார்த்ததில்லை அல்லவா? அங்கெல்லாம் மதுவிலக்கென்று ஒன்றை ஏதோ நிர்ப்பந்தத்துக்காக அமுல் நடத்துவது போலும். 'போனால் போகிறது. இங்கு வாருங்கள், வாருங்கள், மயங்கி உறங்குங்கள்' என்று சொல்வது போலும் எங்கு நோக்கினும் மதுப்புட்டி விளம்பரங்களே கண்களில் படுகின்றன. மாலை ஏழரைக்குள் ஊரின் கலகலப்புக்குத் திரை தொங்கி விடுகிறது. விடிந்து மனமில்லாமலும் நகரம் விழிக்க எட்டு மணியாகிறது....''


''ஆமாம். எனக்குக்கூட, இன்னும், இருட்டியபின் இவர் கூடவே தெருவில் நடந்தால்கூட, உயரம் உயரமான வாயில்களை அடைத்திருக்கும் கதவுகளும், வெளிச்சமில்லாத வாயில்களும் பயமாக இருப்பது போல் இருக்கும். இவர் கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்வேன். தெருவுக்கு இரண்டேனும் 'டாவர்ஸு' இருப்பதால்தான் அப்படிக் கதவைச் சாயங்காலமே அடைக்கும் பழக்கம் ஏற்பட்டிருக்குமோ என்று தோன்றுகிறது. பழைய வீடுகளில், ஜன்னல்களில் கண்ணாடிக்குப் பதில் கிளிஞ்சல் பதித்திருக்கிறார்களே, அதில், பர்தாவில் வைக்கும் ஓட்டைகள் போல் இரண்டு துவாரங்கள் சதுரமாக வைத்திருக்கிறார்களே, அதைப் பார்த்தால் ரொம்பவும் பயம் எனக்கு.....''

சர்மாவுக்கு அவள் பேசுவதைக் கேட்டுக் கொண்டே யிருக்கலாம்போல் இருக்கிறது. ஆனால் ஸ்ரீபாதன் செல்லமாகக் கடிந்து கொள்வதைப் போல் மறுபடியும் குறுக்கிடுகிறான்.

''சுரு பேச ஆரம்பித்தால் விடமாட்டாள். இதற்காகவே தமிழ், கன்னடம் மராத்தி, ஹிந்தி எல்லாம் பேசக் கற்றிருக்கிறாள்.......'' என்று அழகாக அவள் பேச்சை நிறுத்த, ஒரு புகழ் மாலையைப் போடுகிறான்.

ஒற்றுமை என்றால் இதுவல்லவோ ஒற்றுமை? ஒரு குறிப்பில் புரிந்துகொள்கிறான் அவன். ''நம் அறைக்கு ஒருநாள் வாங்க. காப்பி போடுவேன் நான். காப்பி குடிக்க வாருங்கள்.....'' என்று அவளோடு சேர்ந்து சிரிக்கிறான்.

பார்க்கப் பார்க்க அசப்பில் எங்கோ பார்த்தாற்போல் இருக்கிறது. எங்கே பார்த்திருப்பார்? பகல் பார்க் மார்க்கெட்டுக்குப் போகும் போது பஸ்ஸிலிருந்து இறங்கிப் போயிருப்பாளோ?



காரணம்? — திருலோகசீதாராம்

வானின் மழை வீழும் — தரை
வாடும் பயிர் வாழும்
வானின் மழை வாராவிடில்
வாழும் பயிர் வாடும்.

வாடும் பயிர் வாழ்வும் — உயிர்
வாழும் பயிர் தாழ்வும்
தேடிப் பெயல் எனும் கொள்கையத்
தேறார் மழைக் கில்லை. (எனினும்)

வானின் அருள் பொழியும் — தரை
வாடும் உயிர் வாழும்

கதிரால் திசை ஒளிரும் — புவி
கண்டே முகம் மலரும்
கதிரே புவி காணா தெனில்
கரையா திருட் கறையே.

இருள் ஏகிட வென்றே — ஒளி
இனிதாகிட வென்றே
வருகின்ற தோர்கொள்கை ஒளி
வளரும் கதிர்க்கில்லை. (எனினும்)

கதிரால் திசை ஒளிரும் — புவி
கண்டே உயிர் குளிரும்.

உயிர் என்பதும் துயரோ — அருள்
உளதென்பதோர் உளவோ
பெயுமாமழை வெயில் தாரகை
பிறிதுள்ளவை யெல்லாம்

ஏனென்றதை யார் கண்டவர்
ஏதே பொருள் தெரிவார்,
வானுண்டதன் கீழே — உருள்
வையம் எனல் அல்லால்?



ரயிலை விட்டு வரும்போது, வளையல் கடைக் கும்பலிலிருந்து விடுபட்டு வரும் முகங்களில் ஒன்றோ?

"நீங்கள் குடும்பத்தை அழைத்து வந்தால் சௌகரியமாகவே இருக்கும். நமக்கு வேண்டிய சாப்பாடு தயார் செய்துகொண்டால் செலவு அதிகமில்லை. 'வாரேர்கர்' கத்திவிட்டுப் போன மாதிரி எந்த ஊரில்தான் விலைவாசி பள்ளத்தில் இருக்கிறது?.... நீங்கள் அறைக்கு வாருங்கள், சார். சூடான காப்பியைக் குடித்தால் உங்கள் எண்ணத்தை மாற்றிக் கொள்வீர்கள்......"

சர்மா அவர்கள் விடைபெற்றுச் செல்வதைப் பார்த்துக் கொண்டே நிற்கிறார். மணி ஏழடிக்கும் தறுவாயாக இருந்தும் வெளிச்சம் இருக்கிறது. வெளிச்சம் ஏழேகால் ஏழரை வரையிலும்கூட இருப்பது போலிருந்து விட்டுத் திடீரென்று சினிமாக் கொட்டகையில் விளக்கணைவது போல் இருள் திரையை இழுத்து விடுவதைக் காண்கிறார். வியாபார ஸ்தலங்கள், பெரிய கடைகள் எல்லாம் அடைபட்டுக் கிடப்பதால் சாலைகளெல்லாம் வெறிச்சிட்டிருக்கின்றன. ஆற்றின் கரைச்சாலையிலிருந்து பிரிந்து ஊரின் குறுக்காகவும் நெடுக்காகவும் செல்லும் தெருக்களில் ஒரு நோக்கின்றிச் சதுக்கங்களைச் சுற்றிச் சுற்றி வருவது போல் நடக்கிறார். திடீரென்று பெருந் தூற்றலாக விழுகின்றன. குடை கொண்டு வரவில்லை. இருப்பிடத்துக்கு வெகு தொலைவு செல்ல வேண்டுமே என்று நினைப்பதற்குள் அவ்வளவு நேரம் வெளியாக இருந்ததற்காக ஆத்திரத்துடன் பொழிவதுபோல் பெரிய பெரிய தாரையாய் விழக் கொட்டுகிறது. மழை என்றாலும் இப்படிப் பேயாகவா பெய்யும்? இரண்டு நிமிஷங்களுக்குள் தெப்பமாக நனைந்து விடுகிறார். சாலைப் போக்குவரத்தே எங்கோ ஓடி ஒளிந்துவிட்டாற் போல் தெருக்கள் மங்கிய விளக்கொளியில் சூனியப் பிரதேசம் போல் காட்சி தருகின்றன. மழைப் புகையில் ஆங்காங்கு தெரியும் தென்னை மரங்கள்கூடத் தலை விரித்த பேய்கள் போல் தெரிகின்றன. திரும்பிய தெருவில் சற்று முன் சுரு கூறிஞற்போல் உயர்ந்த, உயர்ந்த வாயிற் கதவுகள் அடைக்கப் பெற்று, கருணையற்றதொரு சூழ்நிலையை அறிவுறுத்துகின்றன. மங்கலாக ஓர் இடத்தில் வெளிச்சம் தெரிகிறது. சர்மா அதன் வாயிலில் ஒதுங்கலாம் என்று வந்து நிற்கிறார். அங்கே வந்த பிறகுதான், 'உள்நாட்டுச் சரக்கு விற்கப்படும்' என்று அறிவிக்கும் 'டாவர்ன்' என்று புலனாகிறது. ஏழெட்டுப் பேர்கள் சுவர் இருளோடு குடித்து விட்டு ஒண்டியிருக்கின்றனர். தண்ணீர்ப் பீப்பாய் மாதிரி ஒரு பீப்பாய் — நடு வயிற்றில் ஒரு புனல். மதுக்கடைக்காரப் பெண்மணி அவரை எட்டிப் பார்க்கிறாள். இரண்டு குழந்தைகள் ஏழைமையே உருவாக ஒண்டிக் கொண்டு பார்க்கின்றன. ஆண்டாண்டுகளாக மதுவருந்துவது பாவம் என்றதொரு கடுமையான சித்தாந்தத்தில் ஊறிப் போன பரம்பரையில் பிறந்து சட்டதிட்டங்களை மீறவே நினைக்கத் துணியாமல் பழகிவிட்ட அவருக்கு, அங்கே வந்து மழைக்கு ஒதுங்குவதற்குக்கூட மனம் இடம் கொடுக்கவில்லை.

விசிறி அடிக்கும் மழையைப் பொருட்படுத்தாமல் தெருவில் இறங்குகிறார்.

"மாமா!..... மாமா!.... உங்களைத்தான் மாமா?"

மழை ஓசையோடு வரும் பிரமையா என்ன? மாமா என்று இங்கே கூப்பிடுபவர் யார்?

"இங்கேதான் மாமா, சுரு! நான் கூப்பிடுகிறேன்....."

சக்தியனைத்தையும் திரட்டிக் கொண்டு கூப்பிடும் குரல் அவரைத் தடுத்துப் பின்னால் நோக்கப் பணிக்கிறது. மின்னோட்டம் தடைப்பட்டு விளக்கணைந்த அந்த அகன்ற தெருவிலே அகன்ற மாடிப்படி புலனாகும் வாயில் ஒன்றில் சுரு நிற்கிறாள்.

"நீங்கள் எதிரே அந்த 'டாவர்ன்'வில் ஒதுங்கியிருந்ததை நான் பால்கனியிலிருந்து பார்த்தேன். இதுதான் எங்கள் அறை உள்ள ஹோட்டல் மாமா! வாருங்கள். அடடா! தெப்பமாக நனைந்து விட்டீர்களே?"

சர்மாவினால் தம் செவிகளை நம்ப முடியவில்லை. தமிழ் புதிதாய்க் கற்ற பாவையாய்க் கொஞ்சிய அவளா இப்படிப் பிரவாகம் போல் பேசுகிறாள்? எத்தனை எத்தனை நாட்களுக்கு முன்போ பரிச்சயமாகி விட்ட மொழியாய் அல்லவோ வருகிறது? "அவர்தான் ஜெனிக்கு ஏதோ உடம்பு சரியில்லை என்று என்னைக் கொண்டு விட்டுப் பார்க்கப் போனார். இதோ, இப்படி வாருங்கள், மாமா, சூடாகக் காப்பி போட்டுத் தருகிறேன்......"

அவருக்கு எத்தனையோ கேள்விகள் நாநுனியில் வந்து, வெளிவராமல் நின்று விடுகின்றன. மாடிப் படி முடிந்து, ஒருபுறம் சாப்பாட்டுக் கூடம் சமையலறை முதலிய பகுதிகளும், இன்னொரு புறம் வரிசையாக அறைகளுமாகப் பிரிகின்றன. 'இவ்விடத்தில் மதுவருந்தக் கூடாது' என்ற அறிவிப்புப் பலகையைக் கடந்து, அறைகளின் வரிசையில் ஒன்றைத் திறந்து, "வாருங்கள், உள்ளே வாருங்கள் மாமா!" என்று முறையிட்டுப் பரிவோடு அழைக்கிறாள்.

பத்தடிக்குப் பத்தடி அறை. இரண்டு கட்டில்கள் பாதிக்கு மேல் இடத்தை அடைத்துக் கொண்டிருக்கின்றன. ஒரு மேசையில் கால் ஸ்டவ், சமையல் சாமான்கள். சுவரில் ஒரு கோட் ஸ்டாண்டு. மூலையில் இருந்த நாற்காலியைக் காட்டி, "உட்காருங்கள் மாமா! ஷர்ட்டைக் கழற்றி இப்படிப் பிழிந்து போடுங்கள். இதோ விசிறிக் காற்றில் டெரிலின் தானே உலர்ந்துவிடும். தெப்பமாக நனைந்து விட்டீர்களே?" என்று சரமாரியாக அவரைத் திணற அடித்துக் கொண்டு ஸ்டவ்வையும் பற்ற வைக்கிறாள். காப்பிக்கு நீர் வைத்து, காப்பிப் பொடியை எடுக்கையில் அந்த மணமே தாபமுற்ற நெஞ்சில் அகண்டாகாரியாகப் பாய்கிறது.

இது என்ன கனவா? யார் வீட்டிலோ சொந்தம்போல் வந்து சட்டையை உலர்த்திக் கொண்டு காப்பி மணம் பிடிப்பவர் சர்மாதானா?

அப்போதுதான் சுவரோரம் ஜன்னலின் கீழ் அவர் பார்வை பதிகிறது. வள்ளி தெய்வயானையுடன் தோன்றும் முருகன் படம்.

"என்ன மாமா, பேசாமலே இருக்கிறீர்களே?"

இத்தகையதொரு சந்தர்ப்பத்துக்கு அவர் தம்மைத் தயாராக்கிக் கொண்டிருக்கவில்லையே? திடுக்கிடும் தொடர்கதைகள்கூடப் படித்தறியாத அப்பாவி அவர். அலுவலகம், பஸ் சவாரி, வீடு, வரவு செலவு, மார்க்கெட், க்யூவரிசை போன்ற அன்றாடப் பிரச்னைகளிலேயே வாழ்வின் பெரும் பகுதியையும் கழித்துப் பழகியிருந்த சம்சாரி. அவள் சரளம் வியப்பிலும் மகிழ்ச்சியிலும் அவரை ஆழ்த்தினாலும், சட்டென்று பேசத் தோன்றவில்லை.

"நீ.... இவ்வளவு நன்றாகத் தமிழ் பேசுகிறாயே என்று...." முருகன் படத்தில் கண்களைப் பதிக்கிறார் அவர்.

"திருத்தணியில் வாங்கிய படம் மாமா அது. என் அண்ணாவுடன் இவரும் வேங்கடேசுவரா சர்வகலாசாலையில் படித்தார். நீங்கள்.... எப்படியோ நினைத்துக் கொள்ளாதீர்கள். எனக்கு உங்களை..... அப்பாவைப் பார்க்கிற மாதிரி இருக்கு..." குபீரென்று முத்துக்களைச் சிந்திய மைவிழிகளை அவள் கையில் பதித்துக் கொள்கிறாள்.

சர்மாவுக்கு ஒருகணம் எதுவும் புரியவில்லை.

"எனக்கும் அப்படித்தானம்மா, உன்னைப் பார்க்கையிலே..... ஒரு பாசம் தோன்றுகிறது. நீ........"

அவர் சொல்லாமல் விட்டதை அவள் கண்களைத் துடைத்துக் கொண்டு தலையை ஆட்டுவதுபோல் பூர்த்தியாக்குகிறாள்.

"இவர் மகாராஷ்டிரம். எங்கண்ணாவும் இவரும் ஒரே அறையில் இருந்து படித்தவர்கள். அப்பாவும் திருப்பதி கல்லூரியில் ரொம்பநாள் பேராசிரியராக இருந்தார். மூணு நாலு வருஷங்களுக்கு முன்னே கல்லூரிப் பிரயாணம் போன கோஷ்டியிலே கங்கையிலே முழுகிப் போன பையனைப் பற்றிக் கேட்டிருப்பீர்களோ என்னவோ, எங்க அண்ணா தான். இவரும் அண்ணாவுமாகத்தான் தண்ணீரில் குதித்தார்களாம். அண்ணாவுக்கு நீந்தத் தெரியாது. வீம்புக்காகக் குதித்திருக்கிறான். இவருக்கு அவனுக்கு நீச்சல் தெரியாது என்ற சங்கதி தெரியாதாம். அவன் கையை ஆட்டிய போது, தமாஷ் செய்கிறான் என்று முதலில் நினைத்து விட்டாராம். தெரிந்து உதவிக்குப் போகுமுன் எல்லாம் மிஞ்சி விட்டது. அண்ணா போனது ஓர் இடி என்பது மட்டுமில்லை. இவர் எவ்வளவு சமாதானம் சொல்லியும், அப்பாவுக்கு இவர் மேல் தாங்கல் குறையவில்லை. அப்போ நான் சென்னையில்தான் படிக்கிறேன். அப்பாவிடம் போய்க் கல்யாணம் என்ற எண்ணத்தோடு பேசிய போது, பிடித்துத் தள்ளியே அவமானப் படுத்திவிட்டார். நாங்கள் கல்யாணம் பண்ணிக் கொண்டோம். ஆனால், அவர் வீட்டிலும் உறவில்லை — இங்கேயுமில்லை. எத்தனையோ பாஷை எனக்குத் தெரியுமென்றாரே, இந்த ஊரிலே பெரிய பெரிய கோயில் வாசல் கதவு மாதிரி நிலை வைத்துக் கட்டியிருக்கும் வாசல் கதவுகளை யெல்லாம் அடைத்துவிட்டு, கம்பியில்லாத ஜன்னல் கதவை மட்டும் திறந்து வைத்துக்கொண்டோ, கிளிஞ்சல் ஜன்னலின் 'பர்தாத் துவாரம்' வழியாகப் பார்த்துக் கொண்டோ வெளியே

புழுங்குகிறீர்களே. அப்படித்தான் நெடுங் கதவு அடைத்திருக்க, என்னென்னவோ நினைத்து, பல பாஷைகள் பேசி, திட்டி வாசல் உறவாய் வெளியே புழுங்குகிறேன். எனக்கு இன்னிக்கு மனசே தாளவில்லை மாமா! உங்களைத் தூரத்திலிருந்து பார்த்து, சந்தேகம் தோன்றியதாலேயே தமிழரா என்று கண்டுபிடிக்க அவரோடு தமிழில் பேசினேன். தெரிந்த போதோ மனசு வெடிச்சு வந்தது. எல்லாரும் தள்ளி வைச்சதை நினைக்க நினைக்கப் பார்க்கும்போது, நானே செய்யத்தகாத குற்றத்தைச் செய்து விட்டமாதிரி தோன்றுகிறது. என்னையும் அவரையும் பற்றியே எல்லாரும் நினைப்பது போல் ஒரு பிரமை. இவள் தமிழ்ப் பெண், அப்பா அம்மாவை மீறி ஓடி வந்து விட்டாள் என்று சொல்லி விடுவார்களோ என்ற குறுகுறுப்பு. அதுவும் தமிழர்கள் என்று தெரிந்தால், நான் அப்போதுதான் தமிழ் கற்றுப் பேசுவது போல, எனக்கு நானே பொய்யாகிக் கொள்கிறேன். என் தாபத்தையெல்லாம் மறந்துவிடப் பார்த்தாலும் முடியவில்லை...''

கைகாலை உதைத்துக் கொஞ்சித் தவழ்ந்து விளையாடி மகிழ்ந்த மனையும், கோபித்து அடம் பிடித்து, சிரித்துப் பேசி உரிமை கொண்டாடிய உறவின் பாசமும் ஊறிய நீரும், இனிய இனிய துளிகளாய்ச் சேரக்கூடிய பதினெட்டு இருபது ஆண்டின் கவடற்ற இன்பத் தோழமைகளுமாகிய அவளுடைய கடந்த கால நினைவுகளின் உலகமே அவர் உருவில் வந்து விட்டாற்போல் அவள் பொழிந்து தீர்க்கிறாள்.

அவருக்கு உள்ளமெல்லாம் பரிவின் இருகரங்களாக, ''அழாதே, குழந்தை!'' என்று சொல்ல நீள்கிறது.

''எங்கப்பாவுக்கு இவ்வளவு கல் மனசு எப்படி வந்தது என்று தெரியவில்லை. எனக்கு உடம்பு சரியில்லாமலிருந்து ஒரு பண்டிகை வந்தால் வீட்டில் பாயசம் வைக்கச் சம்மதிக்க மாட்டார். போன மாசம்... என் தங்கை கல்யாணம் நடந்ததாம்....மதியாத வீட்டுக்கு இவர்தான் எப்படி அனுப்புவார், நான்தான் எப்படிப் போவேன்? ஆசைப்பட்ட உமாதேவியே அவமானப்பட்டு விட்டாளே?''

''எல்லாரும் பட்டணத்திலேதான் இருக்கிறார்களா அம்மா?''

''இருக்கா, இருப்பா — பாலாஜி நகரில் ஹைஸ்கூல் இருக்கிறதே, அங்கே பக்கத்தில்தான் வீடு. அப்பா இருக்கட்டும்; அம்மா என்ற ஒருத்தியால் இப்படி இருக்க முடியுமா? இருப்பாளா? இருக்கவே இருக்காது. இப்படிக் கேட்டால், பார்த்தால் கதறி விடுவாள். இவராலும் தானாக ஒரு காகிதம்கூடப்



''மாப்பிள்ளே! உங்க வீட்டிலே இருக்கிறமாதிரி நினைச்சுக்குங்க.''

''சனி! இந்தக் கிழடுக்குத் தத்துப் பித்துன்னு ஏதாவது உளறிண்டு இருக்கிறதுதான் வேலே!''

''ஆகட்டும்மா குழந்தை. நிச்சயமாக ஆகட்டும். இந்த ஐந்தாறு நாட்களாக இந்த இடத்துக்கு ஏன் வந்தேன் ஏன் வந்தேன் என்று வருந்திக் கொண்டிருந்தேன். ஈசுவரனின் எண்ணம் எப்படி எப்படியெல்லாமோ இருக்கிறது. இப்படித் தாபப்படும் ஒரு குழந்தை மனசுக்கு ஒரு துளி ஆறுதல் கொடுக்க முடியும் என்றால், அதைவிட எனக்கும் என்ன சந்தோஷம் இருக்கிறது? கண்ணைத் துடைத்துக் கொள்.''

வெளியே தடதடவென்று ஜோட்டுச் சத்தங்கள் கேட்கின்றன. ஹோட்டலில் சாப்பாட்டு நேரத்தின் அரவங்கள். சர்மா திரும்பு முன், ''சரு, இன்று மார்க்கெட் முழுவதும் உனக்காகத் தேடிவிட்டேன், 'அம்படா'வே இல்லே. அதனால்...'' என்று சொல்ல வந்த ஸ்ரீபாதன் அவரைக் கண்டு திகைத்தாற் போல் நிற்கிறான். அவன் கையில் ஓர் எலுமிச்சம் பழம் இருக்கிறது. சமாளித்துக் கொண்டு புன்னகை செய்கிறான். சரு டிகாக்ஷனை எடுத்துக் கொண்டே, ''மழையில் நனைந்து கொண்டு எதிரே 'டாவரு'வில் வந்து ஒதுங்கியதை பால்கனி வழி பார்த்துக் கூப்பிட்டேன்'' என்று மராட்டியில் மொழிந்தாலும் அவருக்குப் புரிகிறது.

''அட, நனைந்திருக்கிறீர்களே, உட்காருங்கள் சர்மாஜி, வாரேர்கள் இப்

பையில் வைத்து அவரிடம் தருகிறாள். பிறகு குளியலறைக்குப் போய் முகத்தைக் கழுவிக் கொள்கிறாள்.

ஒருநாள், தன்னால் தீர்க்க முடியாததொரு குறையை அவள் அவரிடம் வெளியிட்டு ஆறுதல் கொள்வாள் என்றுதான் அவன் மிகவும் பெருந்தன்மையாக மிகவும் பண்புள்ளவனாக, ஒரு நிமிஷம் என்று திரும்பிப் போய்விட்டானோ?

ஈசுவரா! உலகில் நீ என்னென்ன அற்புதங்களைச் செய்கிறாய்? அந்தத் தாய் தந்தை மனசில் புகுந்து கல்லையும், இரும்பையும் நிரப்பிவிட்டு, இவ்விதம் இரண்டு உள்ளங்களின் பரிவையும், துடிப்பையும் ஒன்றுக்கொன்றின் ஆதரவையும் காட்டுகிறாயோ?

தேவாமிருதம் என்று ஒன்றிருந்தால் அது அந்தக் காப்பியாகத்தான் இருக்கும் என்று அவர் எண்ணுகிறார். காப்பியைப் பருகிவிட்டு அறைக்கு வெளியே நோக்குகையில், ஸ்ரீபாதனும், ஆற்றின் கரையில் கடுமையாகப் பேசியவனுமாக வருகின்றனர்.

''ஓ...இப்போதுதான் உங்கள் விலாசம் கேட்டேன், ஸ்ரீபாதிடம். நான் கோபமாகப் பேசி விட்டேன். உங்கள் மனசை நோகச் செய்துவிட்டேனு? மிகவும் மன்னித்துக் கொள்ளுங்கள். ஏதாக இருந்தாலும் மனத்தில் வைத்துக் கொள்ளாமல் மன்னித்துவிடுங்க ஐயா!''

''மன்னிப்புக் கேட்க எதுவும் பேசி விடவில்லையே!''

''நீங்கள் மனசில் வைத்துக்கொள்ளக் கூடாது. நான் கடுமையாகப் பேசியிருக்கிறேன். என் உணர்ச்சிகள் உங்களுக்குப் புரியுமோ என்னவோ?''

''ஓ....ஒன்றுமில்லே. அதெல்லாம் ஒன்றுமில்லை...''

தடதடவென்று அவன் வந்தாற்போலவே படியிறங்கிச் செல்கையில் ஸ்ரீபாதன் ''சரு,காப்பிபோட்டாயா?... சாப்பிட்டு விட்டுப் போகலாமே சர்மாஜி?'' என்று அவர் கவனத்தை மெதுவாகத் திருப்புகிறான்.

''மழை நின்றிருக்கிறது. சாப்பாடு இன்னொரு நாளாகட்டும், ஸ்ரீபாதன். காப்பியே எனக்கு அமுதம் கிடைத்தாற்போலிருக்கிறது.''

''நீங்கள் இங்கே அடிக்கடி வர வேண்டும். வேறாக நினைக்கக் கூடாது. சரு, வழியெல்லாம் இருட்டாக இருக்கிறது. டார்ச் கொண்டு வந்து கொடு.''

''ஒரு விஷயம் கேட்கட்டுமா?'' என்று கேட்கிறார் அவர்.

''தாராளமாக. என்ன?''

''என்னமோ அம்படா கிடைக்கவில்லே என்கிறீர்களே? அப்படியென்றால் என்ன? மராட்டியில் அப்படித்தானே சொன்னீர்கள்?''

''ஓ, அதுவா?'' கையிலிருக்கும் எலு



பண்டிட் டி.கோபாலாச்சார்லுவின்
ஜீவாம்ருதம்
ஆரோக்யத்திற்கு பலத்திற்கு
அருணா
ஸ்திரீகள் ஆரோக்யத்திற்கு
பாலப்ராஸா
குழந்தைகள் டானிக்
சசி விலாஸ்
ஜ்வரத்திற்கு
ரக்தசோதகா
ரக்த சுத்திக்கு
ச்யவனப்ராஷ்
இருமலுக்கு
ஆயுர்வேதாஸ்ரமம் (பிரைவேட்) லிட். மதராஸ்-17



இலக்கியத்தில் ஹாஸ்யம்

ஏசுவார்களே !

இலக்கியத்தில் ஹாஸ்ய ரஸத்துக்கு இறைவனையுமே இழுத்து அவரைப் பரிகசிப்புக்கு உள்ளாக்குகிறார்கள். சமயக் குரவர்கள் நால்வரில் ஒருவரான சுந்தரர் தம்மைத் தடுத்தாட்கொண்ட சிவபெருமானையே பரிகாசப்படுத்திப் பாடுகிறார். திருவிளையாடல் புராணம் இயற்றிய பரஞ்சோதி முனிவர் மதுரை மீனாட்சியம்மையையும், சுந்தரேசுவரரையும் சும்மா விடவில்லை. அவருடைய அழகான பரிகசிப்புப் பாடல் நம்மை மகிழ்விக்கிறது. ''மதுரையாளும் மீனாட்சியே! நீ உன்னைப் பூசிப்பவர்களுக்குப் பல செல்வங்களை யெல்லாம் வாரி வழங்குவாய். ஆனால் இத்தகைய வாரி வழங்கும் செல்வியின் கணவரோ கையில் ஓடேந்திப் பிச்சை ஏற்பவராயிற்றே! இந்த ஏச்சுக்குப் பதில் சொல்ல முடியுமா? ஐயா! சுந்தரேசுவரரே! நீவிர் பெண்களின் விழி வசப்படாதவருக்கே மோட்சமுண்டு என்று வேதப் பொருளை விண்டுரைத்தீர். ஆனால் ஊருக்கு உபதேசம் செய்த நீரோ உம் உடலில் பாதியைப் பெண்ணுக்கே அல்லவா தந்து விட்டீர். இது தகுமா?'' இந்த ஏசல் பாட்டில் உள்ள நயம் நம்மை மெய்சிலிர்க்க வைக்கிறது. ஓவியர் சாமியின் சித்திரம் அந்த நயத்துக்கு மெருகூட்டுகிறது.

குடங்கை நீரும் பச்சிலையும்
    இடுவார்க்கு இமையாக் குஞ்சரமும்
படங்கொள் பாயும் பூவணையும்
    தருவாய் மதுரைப் பரமேட்டி
படங்கொள் பாயும் பூவணையும்
    தருவாய் கையில் பற்றுவே கொண்டு
இடங்கள் தோறும் இரப்பாய் என்று
    ஏசுவார்க்கு என் பேசுவனே!

தேனேர் மொழியார் விழிவழியே
    செல்லாதவர்க்கே வீடு என்று
நான்கு வேதப் பொருள் உரைத்தாய்,
    நீயே மதுரை நம்பரனே!
நான்கு வேதப் பொருள் உரைத்தாய்
    நீயே பாதி நாரி உரு
ஆனாய் என்று பிறர் பழித்தால்
    அடியேன் விடை ஏது அறைவேனே!

— பரஞ்சோதி முனிவர்

அல்லிக்கு அஞ்சினான் !

அல்லி இந்த மேலே அருமையாய்ப் பிறந்து, ஏழு பிராயத்தில் நீண்முகனை எதிர்த்துப் போரிட்டுக் கொன்று நீலிப் பட்டம் கட்டிக் கொண்டவள் அல்லி ராணி. அவளது கோட்டையிலே ஆண் வாடையே வீசாது. அவளது அழகைக் கேள்வியுற்ற வில்லில் விஜயன் பெண் வேடம் தரித்து அவள் வேட்டையாட வந்த தருணத்தில் அவள் அன்பைக் கவர நினைத்தான். வேட்டையில் களைப்புற்ற அல்லி ராணிக்குப் பாதங்களைப் பிடித்து அர்ச்சுனனின் பெருமையை யெல்லாம் எடுத்துரைக்கத் தொடங்கினான் வேடதாரியான விஜயன். கதை சொல்லும் வேடதாரியை அல்லி ராணி ஏறிட்டுப் பார்த்ததும் அவனது வேடம் வெளிப்படவே அல்லி வீராதி வீரரான விஜயனையும் ஆயுதம் எடுத்து விரட்டி விடுகிறாள்; அந்தச் சூராதி சூரன் அர்ச்சுனனும் பயந்து ஓடிப் போய்க் கண்ணபிரானிடம் சென்று தனக்கு அல்லியை மணம் முடித்து வைக்க வேண்டும் என்று இறைஞ்சுகிறான். வீராதி வீரனும் பெண்ணுக்கு அடங்கிப் போய் ஓடி வந்ததைப் புலவர் சித்திரிக்கும் அழகே அழகு. இந்த ஹாஸ்ய ரச நிகழ்ச்சியை ஓவியர் நடராஜன் கலைபடத் தந்திருக்கிறார்.

''...அருச்சுனனைப் போலே அழகுடையா ராருமில்லை
இந்நாலு பாவகரை ஜெயம் பண்ணுஞ் சேவகனாம்
இவ்வார்த்தை தான் கேட்ட விளக்கொடி யல்லியம்மாள்
என்னகதை சொன்னாயென்று ஏறுமுகம் பார்த்தாள் காண்
மீசைகட்டும் பாவனையும் விழியழகும் கண்டுவிட்டாள்
ஆடா ஆண்பிள்ளையென்று ஆயுதத்தைத் தானெடுத்தாள்
காற்றும் பறந்தானே கட்டழகன் அருச்சுனனும்
சுற்றி வெடுக்கையிலே காதவழி போயிவிட்டான்
நிற்கத் தெரியாமல் நீலவண்ணன் பக்கம் வந்தான்
அங்கே நடந்த சேதி மாயவர்க்குத் தானுரைத்தான்
கதைகளுஞ் சொன்னேன் யான் காலும் பிடித்தேனே
கணையாழி மோதிரத்தைக் கழற்றி வந்தேன் மாயவனே
காலும் பிடித்தேனே களைப்புந் தெளியவில்லை,
மாலைப் பசுங்கிளியை மாலையிட்டு வையுமையா...''

வேலையில்லை !

இலக்கியத்தில், 'இடுக்கண் வந்தாலும் நகுக' என்பது வள்ளுவர் தந்த அருள் வாக்கு. துன்பத்தைத் துடைத்தெறியச் சரியான ஆயுதம் சிரிப்புத்தான். ஆனால் இன்பத்தின் எல்லையில் நிற்கும்போதும் அதே ஹாஸ்யமல்லவா கொப்புளிக்கிறது? இதோ ஒரு காதலி தன் அருமைக் காதலன் தன் அருகில் வந்து விட்டான் என்றதும் காதல் தெய்வமான காமனையே எள்ளி நகையாடத் தொடங்கி விடுகிறாள். அவள் உள்ளத்தில் உள்ள ஆனந்தம், மகிழ்ச்சி, எக்காளப் பாடலாக உருவெடுக்கிறது! ''காமனே! உனக்கு இங்கே வேலை இடையாது. உன் வேலையெல்லாம் தேவையில்லை. என் காதலன் அன்பு எனக்கு முன்பே கிடைத்துவிட்டது. நீ உனது வேலையை விட்டு, உனது கரும்பு வில்லிலுள்ள கரும்பைத் தின்றுவிட்டு, எங்களோடு தொடுக்க வந்த போரை மறந்து விட்டுச் செல்!'' என்றே பெருமிதத்துடன் சொல்கிறாள். தன் காதலில் ஏற்பட்ட வெற்றிக் களிப்பு பாடலில் குதிபோடுகிறது.

எங்கு வந்த காமா! இனியுனக்கு வேலையிங்கேன்?
உங்க வந்தான் தன்னோடு நேரானேன் — பையவே
தேரைவிட்டு, மென்கரும்பைத் தின்றுவிட்டுச் செய்ய வந்த
போரை விட்டுப் புறமுதுகுப் போ!

— தனிப் பாடல்

இலக்கியத்தில் மிளிரும் இந்த அருமையான ஹாஸ்யத்தைத் தம் வண்ண ஓவியத்தில் கொண்டுவந்து விட்டார் சித்திரக்காரர் நடராஜன்.

குறத்தியின் குறி !

வசந்தவல்லி தனக்கு ஏதோ இனம் தெரியாத காய்ச்சல் வந்து விட்டதாகவும், அது என்ன காய்ச்சல் என்று சொல்லும் படியாகவும் குறத்தியைக் கேட்கிறாள்.

குறத்தி மெள்ள மெள்ள உண்மையை விண்டு வைக்கும் அழகு சிறந்த நகைச்சுவையும் உண்மையும் பொதிந்த பகுதியாகும், திரிகூட ராசப்பக் கவிராயர் இயற்றியுள்ள குற்றாலக் குறவஞ்சியில்.

இடபாரூடராய்ப் பவனி வந்தார் சிவபெருமான் என்று ஆரம்பிக்கிறாள்.

'இந்தக் குற்றால மலைக்குக் காகம்கூட வராதே! அந்த வைய இடத்தில் வசிக்கும் உனக்குக் காய்ச்சல் வருவதாவது! அப்படியானால் வந்த காய்ச்சல் என்ன தெரியுமா?'

குறத்தி சொல்வதையே கேளுங்கள்:


வாகனத்தில் ஏறிவரும் மோகபுருடன் — அவன்
வங்காரப் பவனிகாணப் பெண்களுக்குள்ளே
தோகை நீ அவனைக் கண்டு மோகித்தாயம்மே — அது
சொல்லப் பயந்திருந்தேன் சொல்லுவேன் முன்னே


காகமணு காதநிரி கூடமலைக்கேன் — இது
காய்ச்சலல்ல காய்ச்சலல்ல காமக்காய்ச்சல் காண்
மோகினியே! உன்னுடைய சிறுசிறுப்பெல்லாம் — அவன்
மோகச் சிறுசிறுப்பே மோசக் கள்ளி!

— குற்றாலக் குறவஞ்சி


இலக்கியத்தில்
ஹாஸ்யம்-1


இலக்கியத்தில்
ஹாஸ்யம் - 2


இலக்கியத்தில்
ஹாஸ்யம்.3.
R. நடராஜன்


இலக்கியத்தில்
ஹாஸ்யம்—4


N.P.B.
Coffee
Ours for Quality
RAW
ROAST
OR
GROUND
GANESH & Co
(MADRAS) PRIVATE LTD.
T.NAGAR
Retail Branches:
285, China Bazaar Road, MADRAS
71, Pondy Bazaar, T. NAGAR


இன்பக் கனவே
எழிலுருவே...
ஏற்றம்
மிகுந்த
ஓவியமே
Shakti Silks போதார் தயாரிப்புகள்
உங்கள் இன்பக்
கனவுகள் நனவாக
கவர்ச்சியான சக்தி
சில்க் ஆடைகளை
அணிந்து எழிலோவி
யமாகத் திகழுங்கள்.
நயமான துல்லிய
நெசவு, வண்ண
வண்ண மாதிரிகள்,
சக்தி சில்க்குகள்.
உங்கள் மனம்
கவரும் மாதிரிகளில்
தயாரிக்கப்
படுகின்றன. உங்கள்
வனப்பின் பூரணப்
பொலிவை எடுத்துக்
காட்ட சக்தி சில்க்
ஆடைகளை
அணியுங்கள்.
க்ரேப்ஸ்.
டஃபெட்டாஸ்,
சாட்டின்ஸ்.
புரோக்கேட்ஸ்
நைலான் மற்றும்
ரேயான்ஸ்
'டெரிக்' ஷர்ட்டிங்
மற்றும் ஷர்ட்டிங்ஸ்
ரேயான்
ஷர்ட்டிங்ஸ்.

தொண்டைமண்டலமும் யாழ்ப்பாணமும்

பண்டித ஜவாஹர்லால் நேரு சில காலத்துக்குமுன் இலங்கை — இந்தியர் பிரச்னையைப் பற்றிக் குறிப்பிட்டபோது, இலங்கைத் தமிழர் தென்னிந்தியாவிலிருந்து போய்க் குடியேறியது சுமார் அறுநூறு ஆண்டுகளுக்கு முன்புதான் என்று சொன்னது பலருக்கு ஞாபகம் இருக்கலாம். டில்லி பாராளுமன்றத்தில் ஓர் அங்கத்தினர் கேட்ட கேள்விக்கு விடையளிக்கையில் நேரு இவ்வாறு சொன்னதைக் கேள்வியுற்ற இலங்கைத் தமிழர்கள் ஆச்சரியப்பட்டனர். பலர் பேசியும் எழுதியும் ஆட்சேபணையைத் தெரிவித்தார்கள்.

பல ஆயிரம் ஆண்டுகளாகவே இலங்கைத் தீவாகிய ஈழ நாட்டில் தமிழ்க் குடிகள் வாழ்ந்து வருகின்றனர் என்பது யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயம். சங்க காலத் தமிழ் இலக்கியங்களில் ஈழத்தைப் பற்றியும், தமிழ் மக்களைப் பற்றியும், ஈழநாட்டுப் புலவர்கள் பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது. எல்லாளன் என்ற தமிழ் மன்னன் கி. மு. இரண்டாம் நூற்றாண்டில் இலங்கைத் தீவு முழுவதையும் ஒரு குடைக் கீழ் 44 ஆண்டுகள் அரசாண்டான் என்று சிங்கள சரித்திரமாகிய ''மகாவம்சம்'' கூறுகிறது. சோழர்களும் பாண்டியர்களும் படையெடுத்துப் போய் ஈழத்தைத் தமது ஆணைக்குட்படுத்திய போதெல்லாம் தமிழ்க் குடிகள் போய்ச் சேர்ந்திருக்கிறார்கள். திருக்கேதீச்வரம், திருக்கோணமலை ஆகிய சிவஸ்தலங்கள் தேவாரங்களில் பாடப்பெற்றுள்ள க்ஷேத்திரங்கள்.

இங்ஙனம் சரித்திரமிருக்க, ''அறுநூறு ஆண்டுகளுக்கு முன்புதான் இலங்கையில் தமிழர்கள் குடியேறினார்கள்'' என்று நேரு குறிப்பிட்டது எந்த ஆதாரத்தைக் கொண்டு என்பதைச் சிந்தித்துப் பார்ப்போம். அதிலும் ஓரளவு உண்மையிருக்கிறது.

யாழ்ப்பாணக் குடியேற்றம்

கி. பி. பதின்மூன்றும் நூற்றாண்டின் இறுதியிலும் பதினான்காம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் தொண்டை மண்டலத்திலிருந்து பல தமிழ்க் குடிகள் காரைக்கால், நாகப்பட்டினம், அதிராம்பட்டினம், காயல்பட்டினம் முதலிய துறைமுகங்கள் வழியாகச் சென்று இலங்கையின் வட பகுதியாகிய யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல கிராமங்களில் குடியேறினார்கள். தொண்டை மண்டலத்திலிருந்து சென்ற இத் தமிழர் யாவரும் சைவ வேளாள முதலிகள். இவர்கள் தமது சுற்றத்தவர் பலரோடும், அடிமை குடிமைகளோடும் இடம் பெயர்ந்து யாழ்ப்பாணத்தில் குடியேறினார்கள். இங்ஙனம் பெருமளவில் பலர் இடம் பெயர்ந்ததற்கு இரண்டு காரணங்கள் கூறப்படுகின்றன. பதினான்காம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் மாலிக் கபூர் என்ற முகம்மதியத் தலைவனும் அவன் குழுவினரும் சோழ பாண்டிய ராஜ்யங்களில் பெரும் பாகங்களைப் பிடித்துக் கொள்ள, இதில் முக்கியமாக அவதிப்பட்ட தொண்டை மண்டல மக்கள் பலர் தெற்கு நோக்கிச் சென்றார்கள். ஒருசிலர் திருநெல்வேலி மாவட்டத்தில் தங்கினர். வேறு சிலர் கடல் கடந்து யாழ்ப்பாணத்தில் போய்க் குடியேறினார்கள். இது ஒரு சாரார் கருத்து.

யாழ்ப்பாணத்துச் சரித்திரத்தைக் கூறும் இரு நூல்கள், ''கயிலாய மாலை'', ''யாழ்ப்பாண வைபவ மாலை'' என்பன. இவ்விரண்டும் கி. பி. பதினெட்டாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் யாழ்ப்பாணப் புலவர்களால் எழுதப்பட்டன. இந்த நூல்களில் கர்ண பரம்பரையாக வந்த வரலாற்றுச் செய்திகள் காணப்படுகின்றன. இலங்கையின் பழைய வரலாறும் முக்கியமாகத் தமிழ் மக்கள் வரலாறும், சோழ பாண்டியருக்கும் யாழ்ப்பாணத்துக்கும் உள்ள தொடர்பும், யாழ்ப்பாண அரசர்கள் வரலாறும், தமிழர் குடியேற்றமும், அவர்கள் வரலாறும், ஒல்லாந்தர் என்ற பரங்கியர் ஆட்சிக் காலம்வரையில் விவரமாக இந்த நூல்களிலே சொல்லப்பட்டுள்ளன.

ஆரியச் சக்கரவர்த்திகள்

சோழ சாம்ராஜ்யம் பரத கண்டத்திலும் இலங்கையிலும், கீழ்த்திசைத் தீவுகளிலும் பரவி கி.பி. பத்தாம் நூற்றாண்டு முதல் பதின்மூன்றும் நூற்றாண்டு வரை ஏகாதிபத்தியம் செலுத்திய காலத்தில் யாழ்ப்பாண நாடு சோழ ராஜப் பிரதிநிதியின் கீழிருந்தது. பின்னர், சோழ சாம்ராஜ்யம் நிலைகுலையத் தொடங்கிப் பாண்டியர் ஆணைக்கு வந்த சமயம் சோழர் கையிலிருந்த பல பிரதேசங்களில் புது ராச்சியங்கள் ஏற்பட்டன. அவற்றிலொன்று யாழ்ப்பாணம். சோழராஜ்யத்தை நிலைகுலையச் செய்தவர்களில் ஒரு பகுதியினராகிய ''தெலுங்குச் சோழர்'' யாழ்ப்பாணத்தில் ''ஆரியச் சக்கரவர்த்திகள்'' என்ற பெயரில் ஆதிக்கம் செலுத்தினர். கி. பி. பதின்மூன்றும் நூற்றாண்டு மத்தியில் இந்தச் சம்பவம் நிகழ்ந்தது.

யாழ்ப்பாணத்தில் ஆரியச் சக்கரவர்த்திகள் அரசியல் ஆரம்பித்த நாள் முதல் அவர்கள் தொண்டை மண்டலத்தையே படையெடுக்கத் தொடங்கினார்கள் என்று சொல்லப்படுகிறது. யாழ்ப்பாணம் நாட்டைக் கோட்டங்களாக்கி, ஒவ்வொரு கோட்டத்துக்கும் தொண்டை மண்டலத்தில் அக்காலத்தில் பிரபலமுற்று விளங்கிய வேளாள் பிரபுக்களை



எஸ். சிவபாதசுந்தரம்

அழைத்துப் பிரதானிகளாக அமரச் செய்து, அவர்களால்தான் முடி சூட்டப் பெறவும், அவர்கள் சிற்றரசர்களைப் போல் கோட்டங்களில் அரசு புரியவும் ஆரிய மன்னர் சக்கரவர்த்திகளாக இருக்கவும் ஏற்பாடாயிருந்தது.

அந்தக் காலத்தில் தொண்டை மண்டலத்திலிருந்து போய் யாழ்ப்பாணத்தில் குடியேறியவர்கள் ''முடிதொட்ட வேளாளர்'' என்று அழைக்கப்பட்டனர். ''வெண்ணெயூர்ச் சடையன் தங்கள் மரபுளோர் கொடுக்க வாங்கி வசிட்டனே புனைந்தான் மௌலி'' என்று கம்பர் சொன்ன மரபினர் இவர்கள்.

தொண்டை மண்டல வேளாளர்

''கைலாய மாலை'' என்ற நூல் கவிதை வடிவத்திலுள்ளது. ''யாழ்ப்பாண வைபவ மாலை'' உரை நடையிலுள்ளது. இவ்விரு நூல்களும் கி. பி. பதின் மூன்றும் நூற்றாண்டில், ஆரியச் சக்கரவர்த்தியின் அழைப்புக்கிணங்கி, தொண்டை மண்டலத்திலிருந்து யாழ்ப்பாணத்தில் போய்க் குடியேறிப் பதினொரு வேளாளப் பிரபுக்களைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளன. அந்தப் பிரபுக்களும் அவர்களுடன் வந்த சுற்றத்தவரும் அடிமை குடிமைகளும் தொண்டை மண்டலத்தில் எந்த ஊரிலிருந்து வந்தார்கள் என்பதும், யாழ்ப்பாண நாட்டில் எந்த ஊர்களில் குடியேறினார்கள் என்பதும் குறிக்கப்பட்டிருக்கிறது.

தொண்டைமண்டலத்திலிருந்து வேளாள் முதலிகளும் அவர்கள் சுற்றத்தவர்களும் யாழ்ப்பாணத்தில் பல கிராமங்களில் குடியேறினார்கள் திருநெல்வேலி, மயிலிட்டி, தெல்லிப்பழை, இனுவில், பச்சிலைப்பள்ளி, புலோலி, தொல்புரம், கோயிலாக்கண்டி, இருபாலை என்பன யாழ்ப்பாணக் குடா நாட்டில் தலைநகருக்குச் சில மைல் தூரத்தில் உள்ள கிராமங்கள். நெடுந்தீவு, யாழ்ப்பாணத்துக்கு மேற்கில் உள்ள ஏழு தீவுகளில் ஒன்று. இராமேசுவரத்துக்குச் சமீபத்திலுள்ளது. பல்லவராயன்கட்டு என்பது யாழ்ப்பாணக் குடா நாட்டுக்கு அயலில் தெற்கேயுள்ளது. மேலே குறிப்பிட்ட ஊர்களைச் சேர்ந்த பழங்குடி மரபினர் இன்றும் சரமகவி பாடி வைக்கும் வழக்கத்தைக் கொண்டுள்ளனர். அதாவது வயதில் முதிர்ந்த பெரியவர்கள் இறந்த பின், அபரக் கிரியை முடிந்து பதினாறும் நாள் அல்லது முப்பத்தோராம் நாள் கிரியையின் போது சரமகவி பாடுவார்கள். பழைய தொண்டை மண்டல மரபுத் தொடர்ச்சி தெரிந்தவர்கள் இறந்தவரின் பரம்பரையை வரிசைப்படுத்திப் புகழ் பாடுவார்கள். ''கல்வெட்டு'' என்று சொல்லப்படும் இந்தச் சரம கவிதைகள் இன்னும் சில முக்கியமான குடும்பத்தினரிடம் பேணி வைக்கப்பட்டிருக்கின்றன.

கார்காத்த வேளாளர்

தொண்டை மண்டலத்திலிருந்து வந்த வேளாளர் இன்னின்ன ஊர்களிலிருந்து வந்ததாகச் சொல்லப்படும் ஊர்ப் பெயர்களில் காஞ்சி, கோவூர், காவிரிப் பூம்பட்டினம் என்பது தெளிவு. பொன்பற்றியூர், வாவி நகர், கச்சூர், கூபகம், புல்லூர், பாலையூர், செய்யூர் என்பன எந்த இடங்கள் என்று ஆராயப்பட வேண்டும்.

தொண்டைமண்டலத்திலிருந்து சென்ற வேளாளர் அத்தனை பேரும் ''கார் காத்த வேளாளர்'' என்று அழைக்கப்பட்டனர். கார் காத்த வேளாளரா அல்லது காரைக்காட்டு வேளாளரா என்பது தெளிவாயில்லை. ஆனால் வழக்கிலே கார்காத்த வேளாளர் என்றே சொல்லப்படுகிறது. ''தண்டிகைக் கனக ராயன் பள்ளு'' என்ற ஒரு பழைய தமிழ் நூலிலே யாழ்ப்பாணத்துக் கார் காத்த வேளாளர் ''வட காரையார்'', ''தென் காரையார்'' என்று பாகுபடுத்திச் சொல்லப்பட்டிருக்கின்றனர். முகம்மதியப் படையெடுப்பின்போது தொண்டை மண்டல வேளாளர் தெற்கே மதுரை திருநெல்வேலிப் பக்கம் சென்றிருக்கிறார்கள். தொண்டை மண்டலத்திலிருந்து கிழக்குத் துறைமுகங்கள் வழியே யாழ்ப்பாணத்தில் குடியேறியவர்கள் ''வட காரை'' வேளாளர் என்றும் திருநெல்வேலி முதலிய தெற்குப் பிரதேசங்களிலிருந்து காயல்பட்டணம் வழியே யாழ்ப்பாணத்துக்குச் சென்றவர்கள் ''தென் காரை'' வேளாளர் என்றும் அழைக்கப்பட்டனர்.

முதலியார் பட்டம்


ஒல்லாந்தர் என்ற டச்சுக்காரர் யாழ்ப்பாணத்தை ஆண்ட காலத்தில் (1658–1795) யாழ்ப்பாணக் கோட்டங்களுக்கெல்லாம் தலைவர்களாயிருந்த முதலிமார்களையே பதவியில் வைத்திருந்தார்கள். பின்னும் மீன்பிடித் துறையிலும், மற்றும் சில துறைகளிலும் சில முக்கியமானவர்களை அந்தஸ்துக் கொடுத்தும் பதவியில் இருக்க விரும்பிய பரங்கி அரசாங்கத்தார் 'முதலியார்' என்ற பட்டத்தை ஏற்படுத்தி (திவான்பகதூர் போல்) ஜாதியில் வேளாள ரல்லாதவர்களுக்கும், சிங்கள மக்களில் சிலருக்கும் வழங்க ஆரம்பித்தனர். இந்த வழக்கம் பின்னால் வந்த பிரிட்டிஷ் அரசாங்கத்தினராலும் கைக்கொள்ளப்பட்டு வந்தது. பரம்பரை முதலிகள் பிற்காலத்தில் முதலியார் என்ற தமது குடிப் பெயரைக் கைவிட்டு, திருநெல்வேலியிலிருந்து வந்த செட்டி வேளாளர் கைக்கொண்ட ''பிள்ளை''ப் பட்டத்தை ஏற்றனர். இதுவும் கட்டுப்பாடில்லாத முறையில் சென்றதால், இப்போது யாழ்ப்பாணத் தமிழர்கள் முதலிகளுமல்லாது, பிள்ளைகளுமல்லாது சாதாரணத் தமிழர்களாகவே வாழ்கின்றனர்.

தொண்டை மண்டலத்தில் சேக்கிழார் மரபிலுள்ளவர்களும், காஞ்சிபுரவாசிகளும் பலர் யாழ்ப்பாணத்தில் குடியேறிய காரணத்தால் பெரிய புராணமும் கந்தபுராணமும் யாழ்ப்பாணச் சைவர்களின் உடன் பிறந்த சொத்துக்களாகப் பாவிக்கப்படுகின்றன. இதே போல், சடையப்ப வள்ளல் மரபினர் காரணமாகவோ என்னவோ கம்பராமாயணத்துக்கு வியாக்கியானம் சொல்வதில் மகா பாண்டித்திய முள்ள புலவர்கள் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்தார்கள். கார்காத்த வேளாளருக்குத் தீக்ஷை முதலிய வைதிகக் கிரியைகள் செய்யும் சைவக் குருமார் முன்பெல்லாம் சீர்காழியிலிருந்து யாழ்ப்பாணத்தில் போய்க் குடியேறியிருந்தனர். பின்பு வேதாரண்யக் குருக்கள் மாரே அதிகமானோர் சென்று, தொல்புரம், காரைவாய், வேலணை மட்டுவில் முதலிய இடங்களில் வாழ்ந்தனர். அந்த மரபு யாழ்ப்பாணத்தில் பெருகிய காரணத்தால், வேதாரண்யத்துச் சிவாலயம் யாழ்ப்பாணத்தவர்களுடைய பரிபாலனத்தில் சேர்ந்தது.

ஆதியில் தொண்டை மண்டலத்தின் வடக்கிலும் தெற்கிலுமிருந்து தமிழர் போய் யாழ்ப்பாணத்தில் குடியேறின போதிலும், பிற்காலத்தில் போர்த்துக்கேயர் காலத்தில் திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து பல தமிழர்கள் போய்க் குடியேறினார்கள். இவர்களில் பெரும்பாலானவர்கள் செட்டி வேளாள மரபினர். அதன் பின்னர், ஒல்லாந்தர் என்ற டச்சுக்காரர் ஆட்சியின்போது, நாஞ்சில் நாட்டிலிருந்து பல குடிகள் போய்ச் சேர்ந்தார்கள். யாழ்ப்பாணத்தவரின் பேச்சுத் தமிழிலே சில மலையாளச் சொற்கள் கலந்திருப்பதற்குக் காரணம் நாஞ்சில் நாட்டவர் தொடர்பே. அவர்கள் நிரந்தர ஞாபகச் சின்னமாக யாழ்ப்பாணத்திலிருப்பது நாகர்கோவில் என்ற கடற்கரைப் பட்டினம்.


EYE APPEAL STIMULATES CUSTOMER PREFERENCE
Planning to sell your goods quickly? Just add that extra eye appeal to your products—wrap them in ROHTAS Packaging Paper and make your goods more attractive, acceptable and superbly distinguished.
For better cartons, paper cones & containers etc., ROHTAS Packaging Papers & Boards are always preferred by manufacturers because of their superior quality. Bright colours, brand names and sales motifs printed on them stand out boldly.
ROHTAS Packaging Papers are long-lasting, sleek in finish and offer your products protection against dirt, dust and moisture. This helps them to retain their freshness and polished look
ROHTAS
ROHTAS INDUSTRIES LIMITED
DALMIANAGAR, (BIHAR)
Managing Agents: SAHU JAIN LTD. 11, Clive Row, Calcutta-1.





கச்சேரி



தி. ஜானகிராமன்

சிஷ்யர்கள் பாடத்தை முடித்துக் கொண்டு போய் விட்டார்கள். பெரிய பிள்ளை காமிராவை எடுத்துக் கொண்டு, எங்கோ பார்ட்டியாம், சம்பாதிக்கப் போய் விட்டான். வாசலில் பெண் வயிற்றுப் பேரன் அடுத்த வீட்டுக் குழந்தைகளோடு கிரிக்கெட் ஆடுகிற மெல்லிய கூச்சல். உள்ளே சமையலறையில் சீனச் சட்டியில் ஏதோ பொரிகிற ஓசை. இத்தனைக்கும் நடுவில் ஒரு மௌனம். அதிலே வெகுநேரம் தோய்ந்து கிடந்தார் ராமு.

சாய்வு நாற்காலியில் சாய்ந்துகொள்ளாமல் சற்றுத் துவண்டு உட்கார்ந்திருந்தார் அவர். வழக்கம்போல் மனசில் ஒரு நிறைவு — இனி மேல் உலகத்தில் ஒன்றும் ஆக வேண்டியதில்லை போன்ற ஒரு நிறைவு. சிஷ்யர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்து முடித்தவுடன் அவருக்கு இந்த நிறைவு நெஞ்சு, இதயம், கால், கை, கண் எங்கும் வந்து அடைந்து கொள்வது வழக்கம். கச்சேரிகளில் அது வருவதில்லை. அங்கே ஆத்மானந்தத்துக்கு அளவு உண்டு. மூன்று மணிக்கு ஆறு ராகம், பத்து பாட்டு, ஒரு பல்லவி, ராகமாலிகை, ஸ்வர வால்கள் — இவ்வளவும் பாடி, ஒவ்வொன்றிலும் குதிகாலளவாவது ஆத்மானந்தத்திலும் 'மூழ்கி', ஆடுகளையும் ரசிகர்களையும் விமரிசகர்களையும் மகிழ வைத்து, காசையும் வாங்கிக் கொண்டு வர வேண்டும். சிஷ்யர்களிடம் அந்தக் கவலை இல்லை. இன்று பகல் பதினொரு மணிக்கு அடாணா கல்யாணி வர்ணத்தைச் சாக்காக வைத்துக் கொண்டு, அந்த ராகத்தின் ஆயிரத்தெட்டு கைகளையும் விரல்களையும் அணிகளையும் பார்வைகளையும் சிஷ்யர்களுக்குக் காண்பித்துத் தாமும் காண ஆரம்பித்தவர் நாலரை மணி வரையில் அந்தத் திவ்விய தரிசனத்தைக் கண்டு கொண்டிருந்தார். சிஷ்யர்கள் போய் விட்டார்கள். ஆனால் அவர் உள்ளே இன்னும் அந்த வடிவம் நின்று கொண்டிருந்தது. மனசுக்குள்ளேயே திருப்பித் திருப்பிப் பாடி 'ஆஹா ஆஹா' என்று தாமே சபாஷ் போட்டுக் கொண்டிருந்தார். அந்த அழகுக்கு. அடுத்த நிமிஷம், அடுத்த நாள் — இந்தக் கவலைகள் அழிந்து போன நிறைவு அவரை மூழ்கி விட்டிருந்தது.

பட்டுப் புடவை சொர சொரக்கிற ஓசையோடு அவர் சம்சாரத்தின் உருவம் அப்போது ஒரு தட்டில் ரவாகேசரியும் வெந்நீருமாக ஹாலுக்குள் வந்தது... தொண்டை உலர்ந்து கிடந்த ஞாபகம் இப்போதுதான் வந்தது அவருக்கு. வெந்நீரை ஒரு வாய் விட்டு, கேசரியையும் ஒரு வாய் போட்டுக் கொண்டார்.

"எங்கே இந்தப் பயலைக் காணும், இன்னிக்கி?" என்றார்.

"அதுதான் வாசல்லே அமர்க்களப் பட்றதே கூச்சல்."

"அது நம்ம வாஞ்சின்னா!"

"பின்னே யாரைக் கேட்டேள் நீங்க?"

"இந்தப் பயல — ரங்கு? காலமே புடிச்சுக் காணுமே அந்தப் பயலே!"

"ஏன் சொத்திக்கு ஆளில்லேன்னு கவலைப்படறதாக்கும்."

"இல்லேடி, விடிஞ்சா பத்து நடை வந்துட்டுப் போயிடுவன். ஆளையே காணுமேன்னு கேட்டேன். உன் பேரனைத்தான் கூப்பிடேன்..... யார் சாப்பிட்டா என்ன இப்ப? எலே, வாஞ்சி... ஏய்.... எலே வாஞ்சி!"

வாஞ்சி அரை நிஜாரும் சட்டையும் வேர்வையுமாக ஓடி வந்தான்.

"ஏன், தாத்தா!"

"இந்தாடா!" என்று ஒரு கோலி கேசரியை நீட்டினார்.

"நான் அப்புறம் சாப்பிடறேன்.... க்ம்...... ரன் எடுத்துண்டே இருக்கிற போதுதான் கூப்பிடறதாக்கும்" என்று கடைசி வார்த்தையை வாசலில் முடித்துக் கொண்டே ஓடி விட்டான் அவன்.

"ரங்குன்னா இப்ப பாதித் தட்டைக் காலி பண்ணியிருப்பன்" என்றாள் அவர் சம்சாரம்.

ராமு பதில் சொல்லவில்லை. இந்த இரண்டும் கெட்டான் பேச்சை மேலும் வளர்க்கப் போகிறாளே என்று பயந்து, வந்த புன்சிரிப்பைக்கூட உதட்டை இழுத்துப் பிடித்து அடக்கிக் கொண்டார். சம்சாரம் வேறு ஏதோ கொண்டு வருவதற்காக உள்ளே போனாள்.

'ஏன் இந்தப் பயலைக் காணவேயில்லே இன்றைக்கு?'

நாற்காலியின் சட்டத்தைப் பிடித்துக் கொண்டு, உருண்டைத் தலையும் சற்று மேல் தூக்கின வெள்ளரி மூக்கும், அரிசிப் பல்லும், ஓயாத பேச்சும், தேடும் கண்ணும், அரை நிஜாரும் சட்டையுமாக அந்தப் பயல் நிற்பது போல் இருந்தது அவருக்கு.

"மாமா, வனஜாட்சிதானே பாடினேள்? எங்கக்காகூட ரொம்ப நன்னாப் பாடுவா. போன வருஷம் அதைத்தான் பாடினா. அவ ஸ்கூல்லே, பாட்டுப் போட்டியிலே. அவளுக்குப் பஸ்ட் ப்ரைஸ் குடுத்தா. ஒரு எவர்ஸில்வர் தட்டு ஒண்ணு" என்று ஏதாவது சொல்லிக்கொண்டிருப்பான். சொல்கிறாற் போலவே காதில் ஒலித்தது ராமுவுக்கு.

"மாமா! நீங்க ஏன் பாடறபோது கையை இப்படி இப்படி ஆட்றேள்? எங்கக்கா பாடறா அசங்கவே மாட்டா; அப்படியே நேரே பார்த்துண்டு பாடுவா" என்று வந்த முதல் நாளே விசுக்கென்று சொல்லி வைத்தான் அவன். அது நடந்து கிட்டத்தட்ட ஒரு வருஷம் ஆகப் போகிறது. வழக்கம் போல் சிஷ்யர்களுக்கு ஏதோ பாடிக் காட்டிக் கொண்டிருந்தார் அவர். பாடும் போது ஒரு பயல் வந்து எட்டி எட்டிப் பார்த்தான். யாரோ தெருவோடு போகிற குழந்தை என்று எண்ணிக் கொண்டே பாடினார். சிறிது கழித்து, நிலைப்படியண்டை நின்றவன் பொட்டென்று உட்கார்ந்து கொண்டான். ராமு கண்ணை மூடிக் கொண்டே பாடுவார். ஒரு தடவை கண்ணைத் திறந்த பொழுது குழந்தை சற்று முன்னால் நகர்ந்து உட்கார்ந்திருந்தான். நாலாவது தடவை கண்ணைத் திறந்த பொழுது, அவர் பக்கத்தில் உட்கார்ந்திருப்பதையும், சிஷ்யப் பையன் அவனை அப்பால் வந்து உட்காருமாறு ஜாடை காட்டுவதையும் பார்த்தார்.

"என்டா சோம்பேறி! நான் பாடறதைக் கவனிப்பியா? குழந்தை எங்கே நகர்றான், எங்கே உட்கார்றான்னு பாத்துண்டிருக்கியே என்ன? இதுக்குத்

தான் இத்தனை நாழியாக் கதறிண்டிருந்தேனே?'' என்று சிஷ்யனைச் சூடாகக் கடிந்து கொண்டார். அந்தப் பையனை அணைத்துக் கொள்ள வேண்டும் போல் இருந்தது அவருக்கு. சிஷ்யன் அவனை விரட்டுகிறான். அவ்வளவுதான், அவருக்குப் பாடுகிற உற்சாகம்கூடக் கலைந்துவிட்டது. ''மோகனைக் கட்டை..... இந்தக் குழந்தைக்கு இருக்கிற லயிப்பு உனக்கு இல்லே. நான் என்னதுக்காக உசிரை விடணும்? சரி, சரி, போ. போயி மாமி ஏதாவது ஸ்டோருக்கு போக்குப் போய் மோளகா பருப்பு வாங்கிண்டு வரச் சொல்லுவ. போ, போடா!'' என்று லயம் கலைந்து பொருமினார். வெற்றிலைப் பெட்டி நெற்றியைப் பார்க்கப் பாய்ந்து விடப் போகிறதே என்று மருண்டு எழுந்து போனான் சிஷ்யன்.

''மாமா – நீங்க ரொம்ப நன்னாப் பாடறேள்'' என்றான் பையன்.

''அப்படியா!''

''ஆமா மாமா. நீங்க இப்ப பாடினது நன்னுபாலிம்ப ராகம்தானே!''

''ஆமாண்டா! அதேதான். உனக்கு எப்படித் தெரிஞ்சுது!''

''எங்கக்காகூடப் பாடுவா. அவ ஸ்கூல்லே படிச்சிண்டிருக்கா. பத்தாவது. அவளுக்கு ஒரு மாமா வந்து பாட்டு சொல்லிக் கொடுக்கிறார். இதே மாதிரி எங்காத்துலேகூட ஒரு தம்புரா இருக்கு. பெரிசு...க. அதோ அத்தனை ஒசரம் இருக்கும்'' என்று உயரமாகக் கையைத் தூக்கினான்.

''அவ்வளவு உசரமா! ஏ அப்பா!''

''ஆமா. எங்கக்கா வந்து மடியிலே படுக்க வைச்சிண்டு அதைச் சுதி சேப்பா. டொய்ங், டொய்ங், டொய்ங்னு!''


''அப்படியா! அது சரி, நீ யாரு. உன் பேரென்ன.... ஒண்ணுமே சொல்லலியேடா நீ!''

''நான்தான் மாமா ரங்கு. முப்பத்தி மூணு நம்பர்லே குடி வந்திருக்கோமே. தெரியாது? எங்க வீட்டைக் காமிக்கட்டுமா ? வரேளா ?''

''நீ சொல்லேன்.''

''உங்க வீடு என்ன நம்பர் ?''

''இருபத்தெட்டு.''



''இருபத்தெட்டு–'' பையன் விரல் விட்டு எண்ணினான். இருபத்தெட்டும் அஞ்சும் முப்பத்து மூணு. வாசல்லே கூட முல்லைக் கொடி இருக்குமே. அதுதான் எங்க வீடு.''

''நான்பார்த்ததேஇல்லியே உன்னே.''

''மூந்தாநாத்தான் குடி வந்தோம்.''

''அதுக்கு முன்னாலே நீங்க எங்கே இருந்தேள் ?''

''மதுரையிலே. எங்க அப்பாவுக்கு மாத்தலாயிடுத்து. எங்கப்பாவுக்கு ரயில்லெ வேலே. முந்நூறு ரூபா சம்பளம்.''

'' என்ன வேலே ?''

''என்னமோ கணக்கு கிணக்கு ஏதாவது இருக்கும்.''

''கொடி காட்டமாட்டாரா? என்ஜின் ஓட்ட மாட்டாரா?''

''ஐய்யோ, அதெல்லாம் இல்லே மாமா. ஆபீஸ் வேலே.... நீங்க ஆபீசுக்குப் போக மாட்டேள்?''

''இதுதான் ஆபீசு எனக்கு!''

''பொய்யி! பாட்டுப் பாடறேள் இங்கே. இங்கேஎப்படி ஆபீஸ்இருக்கும்?''

''பாட்டுப் பாடறதுதாண்டா ஆபீஸ் எனக்கு!''

ரங்கு சிறிது யோசித்தான்: ''சம்பளம் யாரு கொடுப்பா?''

''பாட்டுக் கச்சேரி பண்ணுவேன். அவாள்ளாம் கொடுப்பா!''

''யாரெல்லாம்?''

''கச்சேரி வைக்கிறவாள்ளாம்?''

''நாங்கூட மதுரையிலே சபா கச்சேரிக்கெல்லாம் போவோம். நீங்க மதுரைக்கு வந்திருக்கேளா கச்சேரி பண்ண?''

''ஓ! வந்திருக்கேனே....!''

''பொய்யி.... ம்... நான் பார்க்கலே இல்லே..... எங்கப்பா எங்கக்காவையும் என்னையும் எல்லாக் கச்சேரிக்கும் அழைச்சிண்டு போயிருக்கா. நான் பார்க்கலே இல்லே உங்களே.''

''அது சரி, நீ என்ன படிக்கிறே?''

ரெண்டு விரலை நீட்டி உயர்த்தினான் பையன்.

''ஸ்கூல் கிட்டக்க இருக்கா?''

''இதோ தெரு முனை திரும்பினவுடனே இருக்கு. கணபதி மாண்டிசாரி– எங்கப்பா என்ன செஞ்சா தெரியுமா? உனக்கு வயசாகலே. ஒண்ணுக்கிளாஸிலே

சேக்க மாட்டேன்னு. நான் ஐப்பசி மாசம் பொறந்தேன். எங்கப்பா வைகாசின்னு போட்டு, அஞ்சு வயசு ரொம்பிடுத்துன்னு எழுதிச்சேர்த்துட்டா நேத்திக்கு. புஸ்தகம்கூட வாங்ியாச்சு."

" பள்ளிக்கூடம் போகலியா, இன்னிக்கி?"

"போயிட்டு வந்தேனே. இன்னிக்கு அரைப் பள்ளிக்கூடம். பள்ளிக்கூடம் போய்ட்டுச் சாப்பிட்டுட்டுத் தான் வந்தேன்...."

"ஏண்டா, பன்னெண்டு மணிக்கு வந்தவன் மணி நாலாகப் போறது. இங்கேயே இருந்தா? உங்கம்மா உன்னைத் தேட மாட்டாளா?"

"தேடுவா. மத்தியானம் சாப்பிட்டவுடனே தூங்கு தூங்குன்னு படுக்கப் போட்டு அமுத்திநூடுவா. அதுதான் இன்னிக்குச் சாப்பிட்டுக் கையலம்பினவுடனே ஓடி வந்துட்டேன். நீங்க பாடறது கேட்டுது. ஓடியே வந்துட்டேன். நீங்க நித்தியம் பாடுவேளா மாமா!"

"ம்."

"அப்படின்னு, நான் நாளைக்கு வரேன். திங்கள், செவ்வாயெல்லாம் வர மாட்டேன். பள்ளிக்கூடம் உண்டோல்லியோ! சனி ஞாயிறிலே வரேன். என்ன?" என்று சொல்லிக் கொண்டே எழுந்து நீல வரையில் போய் விட்டான் பையன்.

"என்னடா, நேர்று ஜெம்பிட்டே? இத்தே இரேன் போகலாம்..... யாரு அங்கே!" "என்ன?" என்று சம்சாரம் வந்து நின்றாள்.

" டிபன் ஆயிடுத்தோ?" ஏதாவது கொடுக்கும்படி ஜாடை செய்தார் ராமு.

ஒரு தோசை வந்தது. தட்டிலிருந்து அதை எடுத்துக் கொண்டு, "தொட்டுக்க?" என்றான் பையன்.

"தொட்டுக்க இல்லாட்டா இறங்காதோ?" என்றாள் சம்சாரம். சிரித்துக் கொண்டே, ஒரு முட்டை சர்க்கரையைக் கொண்டு தூவினாள். முட்டையைத் திருப்பி எடுத்துப் போனவளைப் பின்தொடர்ந்து சமையலறைக்கேபோய் விட்டான். சற்றுக் கழித்து, "போயிட்டேன். நாளைக்கு வரேன்" என்று ராமுவிடம் சொல்லியவாறு வேகமாக ஹாலைக் கடந்து வெளியே போனான்.

"யாராத்துப் புள்ளே இது? சர்க்கரை போறுதுன்னு உள்ளே வந்து எழுமிச்சங்கா ஊறுகாய்தான் நான் தோசைக்குப் போட்டுக்குவேன்னு சொல்லி அதையும் வாங்கித் தின்னுட்டுப் போறதே! உங்க பேரன்கூட இப்படி ஸ்வாதீனமாக் கேக்காதே!" என்று ஓர் இலேசான சூடு கலந்த வியப்புடனும் சந்தோஷத்துடனும் கேட்டுக் கொண்டே வந்தாள் சம்சாரம்.

"நம்மைப் பார்த்துப் பயப்படாமெ, ஸ்வாதீனமா ஒரு ஆத்மா வந்து கேட்டுதுன்னு, நாம் நல்லவான்னு அர்த்தம். கொடுத்து வைக்கணுமே இதுக்கு"— என்றார் ராமு. அப்புறம் பையனைப் பற்றிவிவரங்களையெல்லாம் சொன்னார்.



அன்று ஆரம்பித்தது சிநேகம். நான் தவறினாலும் ஆள் தவற மாட்டான். பள்ளிக்கூடத்திலிருந்து வந்ததும் சாய்வு நாற்காலியின் சட்டத்தைத் தொட்டுக் கொண்டே வந்து நிற்பான். ஏதாவது கேட்பான். "இன்னிக்கு என்ன பாட்டு மாமா சொல்லிக் கொடுத்தேள்?"

"எங்கே நேத்திக்கு முந்தா நாளெல்லாம் காணும்? கச்சேரியா எந்த ஊர்லெ? சம்பளம் கொடுத்தாளோ? எவ்வளவு? ஏ அப்பா, ஆயிர ரூபாயா... தம்புராவுக்குப் புதுசா கம்பி போட்டிருக்கேளா? பளபளங்கறதே! இது எது செருப்பு மாமா? வாங்கினேளா! ஏன் வெட்டுக் கலர்லெ வாங்கியிருக்கேள்? எங்க அப்பாவுக்குக் கறுப்புத்தான் பிடிக்கும். நீங்க கூடக் கறுப்பே வாங்கிக்கோ மாமா! உங்க காலுக்கு நன்னா யிருக்கும். சிவப்புக் காலோல்லியோ!...... மாமா, சீதாபதே பாட்டு உங்களுக்குத் தெரியுமோ? வெலோகநாதனே? எங்கக்கா அந்தப் பாட்டு நன்னாப் பாடுவா..... மாமா, நான் இன்னிக்குத் தம்புரா வாசிக்கட்டுமா, நீங்க பாடறபோது? நான் வாசிக்கப்படாதா .... மாமா! மாமா! இன்னிக்கு உங்காத்திலே என்ன டிபன்? நீங்க சாப்பிட்டாச்சா? எங்காத்திலெ இன்னிக்கி பச்சமாப்டி உப்புமா நன்னா யிருந்தது......"

மொது மொது வென்று பேசிக் கொண்டேயிருப்பான் அவன். பேசாத நேரம், கை பேசும். தம்புராவைச் சுண்டுவான். அலமாரியைக் குடைவான். புத்தகத்தைத் திறப்பான். பாட்டிலைத் திறப்பான். டப்பாவைத் திறப்பான். பாக்கு இருந்தால் கொஞ்சம் வாயில் போட்டுக் கொள்வான். பேனாவைத் திறப்பான். வேட்டி மடித்திருந்தால் எடுத்து முகர்ந்து, "அப்பாடா! வெயில் வாசனை அடிக்கிறது" என்பான். "என்ன மாமா, மூஞ்சியெல்லாம் சர்க்கரை வந்துடுத்தே. சவரம் பண்ணிக்கப் படாதா? எங்கப்பா பிளேடை வெச்சிண்டு, தானே பண்ணிப்பா இப்படி மூஞ்சி யெல்லாம் அழகு காட்டிண்டு" என்று முகத்தைக் கோணுவான். சனி, ஞாயிறு வந்தால்தான் இந்தத் துருதுருப்பு அடங்கியிருக்கும். சீடர்களுக்குப் பாடம் சொல்லி முடிகிற வரை உட்கார்ந்த இடத்தை விட்டு அசையமாட்டான். திடீர் என்று நடுவில் சிரிப்பான்.

" என்னத்துக்குடா, சிரிக்கிறே?" என்பாள் குறுக்கும் நெடுக்கும் போகிற சம்சாரம்.

"வயித்திலே பொறந்த பேரன்லாம் தம்புராவை எடுத்ததுமே வாசலைப் பார்க்க ஓடறதுகள் மட்டையைத் தூக்கிண்டு. இந்தப் பாட்டு காதிலே தான் விழாதோன்னு சிரிக்கிறதோ என்னவோ?" என்பார் ராமு.

" க்கும் " என்று கூறிக் கொண்டே போவாள் சம்சாரம்.

காப்பி வந்தது.

"ரங்கு வரலியேன்னு ஏங்கிப் போயிடுவேள் போலிருக்கே. அவன் இன்னும் ரெண்டு நாளைக்கு வரமாட்டான். பின்னே யார் சதுர்த்தியன்னிக்கு சதாபிஷேகம் அவனோட தாத்தாவுக்கு" என்று காப்பியை ஆற்றிக் கொண்டே சொன்னாள் சம்சாரம்.

"ஆமாண்டி. அந்தப் பய சொல்லிண்டே யிருந்தானே. பதினஞ்சு நாளைக்கு முன்னாடியே சொல்ல ஆரம்பிச்சான் போலிருக்கே."

"மாமி! நீங்க கட்டாயம் வரணும், எங்க தாத்தா சதாபிஷேகத்துக்கு, மாமாவை அழைச்சிண்டு. தாத்தாவுக்கு அபிஷேகம் பண்ணிப்ட்டு நமஸ்காரம் பண்ணுவோம் நாங்களாம். நீங்க கட்டாயம் வாங்கோ மாமி'ன்னு தொண தொண தொணன்னு ஓயலெ. ஒழியலெ. பதினஞ்சு நாளா இதே பாட்டுத்தான். நான்கூடச் சொன்னேன், 'ஏண்டா பயலே, நீ கூப்பிட்டாப் போதுமாடா? உங்கப்பாம்மான்னு கூப்பிடணும். பெரியவாளைப் பெரியவான்னு கூப்பிடணும்'னேன்.... நான் எங்கம்மாவை வந்து நாளைக்கிக் கூப்பிடச் சொல்றேன். நீங்கட்டாயம் வரணும்னு சொல்லிண்டேயிருந்தது" என்று சம்சாரம் காப்பியைக் கொடுத்தாள்.

பத்துப் பதினைந்து நாட்கள் முன்பு தான். சனிக்கிழமை. பாடம் சொல்லிக் கொடுக்கும்போது சிவசாமி வந்திருந்தான். "நான் வாசிக்கிறேன். நீங்க நாலு பாட்டுப் பாடுங்கோன்னு" என்று மிருதங்கத்தை எடுத்து உட்கார்ந்தான். ரங்குப் பயலுக்கு ஆனந்தம் தாங்கவில்லை. இரண்டு மணி நேரமும் கண்ணபிரான் மாதிரி முகத்தில் ஒரு தனி ஒளி கமழ உட்கார்ந்து கேட்டான். பாடி முடிந்ததும், கிட்ட வந்தான். "மாமா! நீங்க எங்காத்துக்கு வந்து பாடணும், மதுரையிலே. எங்க தாத்தாவுக்கு சதாபிஷேகம் புள்ளையார் சதுர்த்தி அன்னிக்கி. வரேளா?" என்றான்.

"ம்."

"தம்புரா, மிருதங்கம் எல்லாம் கொண்டு வரணும்."

"ம்."

"நிச்சயமா!"

"வரேண்டா."

"நான் பாத்துண்டேயிருப்பேன். மதுரை ஸ்டேஷன்லே எறங்கி, இப்படி நேரே வந்து, இப்படித் திரும்பி அப்படிப் போனா மாசி வீதி வரும். அங்கே அண்ணாவையர் வீடுன்னு சொன்னா வந்துடலாம். வரணும், என்ன?"

"ம்."

தினமும் இதே புலம்பல்தான். ஒரு நாள் "நீங்க வந்து பாடுங்கோ. எங்கப்பாவைச் சம்பளம் குடுக்கச் சொல்றேன்" என்றுகூடச் சொல்லி விட்டான்.

"அப்ப உங்கப்பா வந்து கூப்பிட வாண்டாமோடா என்னே?" என்றார் ராமு.

"கூப்பிடுவா! நான் கூப்பிடச் சொல்றேன்" என்று சிரித்தான்.

ஒரு வாரம் புலம்பியவன், மெதுவாக அந்தப் பேச்சை நிறுத்தி விட்டான். பிறகு அவரே ஞாபகப்படுத்த வேண்டியிருந்தது.

"ஏண்டா, உங்க தாத்தா சதாபிஷேகம் என்னிக்கி?"

"புள்ளையார் சதுர்த்தி அன்னிக்கி."

"நீ போகலியா?"

"போப் போறோம். ஞாயிற்றுக் கிழமை. எங்கப்பா தூங்கற டிக்கட் வாங்கியிருக்கா எல்லாருக்கும்!"

"என்னைக் கூப்பிடலியேடா அவா."

"கூப்பிடுவா மாமா. சொல்லியிருக்கேன். நீங்களும் டிக்கெட் வாங்கிடுங்கோ. என்ன?"

இன்று ராமுவுக்கு வெறிச்சென்றிருந்தது. நாற்காலிச் சட்டத்தை வளைய வளைய வந்து கொண்டிருக்கும் அவனைப் பார்க்க வேண்டும்போலிருந்தது. அவர் மனமும் எதையோ வளைய வளைய வந்து கொண்டிருந்தது.

ட்ரிங் ட்ரிங் ட்ரிங் ட்ரிங்.

சனியன். போன் வந்தால் ராஜாங்க உத்தரவு மாதிரியல்லவா வருகிறது! எடுக்காமலிருக்கவும் மனசு வரவில்லை.

எழுந்து போய் எடுத்தார். "யாரு?"

"நான்தாம்பா, ஜெனி பேசறேன்."

"ஜெனியா? என்னடா கண்ணு!"

"ஒண்ணுமில்லேப்பா. அத்தை சின்னதா வெள்ளிப் புள்ளையார் ஒன்று பண்ணி அனுப்பச் சொன்னா. வாங்கி வைச்சிருக்கேன். நீங்க ஊருக்குப் போற போது அதைக் கொண்டு கொடுத்திடணும். நான் கொண்டு வந்து கொடுக்கட்டுமா? இல்லே, யாராவது இந்தப் பக்கம் வந்தா இங்கே வரட்டும். கொடுத்தனுப்பறேன்" என்றாள் அவர் பெண்.

"சரி, குழந்தே...... அது நான் புள்ளையார் சதுர்த்திக்கு ஊருக்குப் போகலியே. வேற இடத்திலே கச்சேரிக்கு ஒத்திண்டிருக்கேனே."

"என்னது?"

"ஆமாம், குழந்தே!"

"என்னப்பா இது!"

"ஆமாம் குழந்தே.... நீ கொண்டு கொடு. அப்படி அவசியமா கொடுத்தனுப்பணும்னு, யாரையாவது போய்க் கொடுக்கச் சொல்லி விடறேன்."

"ஆமாப்பா. இத்தனூண்டு பிள்ளையாரைக் கொடுக்கிறதுக்காக மெட்ராஸ் லேர்ந்து ரயில்லே ஏறி பஸ் ஏறி, இருநூறு மைல் போவா?"

"அவசியமா இருந்தால் செஞ்சு தானே ஆகணும்."

"நான் காலமே வரேம்பா. எனக்கு ஒண்ணும் புரியலியே. நானே வரேன்."

"வா."

சம்சாரத்தின் குரல் வந்தது.

"என்ன, புதுசா என்னமோ சொல்லித்து இப்ப?"

விவரத்தைச் சொன்னார் ராமு.

"பிள்ளையார் சதுர்த்தியன்னிக்கு வருஷா வருஷம் நம்ம ஊர் கோயில் பிள்ளையாருக்கு முன்னாலே முப்பது வருஷமாப் பாடியாறது. அன்னிக்கி வேற எங்கேயும் கச்சேரியே பண்றதில்லேன்னு முப்பது வருஷமா வச்சிண்டிருக்கு!"

"ஆமாம். சபதம் மாதிரிதான் வச்சிண்டிருந்தேன். என்ன செய்யறது?"

"வேற எங்கே கச்சேரி?"

"மதுரையிலே. அண்ணாவையர் சதாபிஷேகம் ஆச்சே அன்னிக்கி. ஆயிரம் பிறை கண்டவர் ஆச்சே....அவருக்கு."

"இந்த ரங்குவோட தாத்தாவுக்கா?"

"ஆமாம். அவருக்கேதான்."

"அவா அட்வான்ஸ் கொடுத்திருக்காளா?"

"அவா எதுக்குக் கொடுக்கணும்? அந்தப் பயதான் பத்து நாளா புலம்பிண்டேயிருந்தானே, அது போதாதா? அட்வான்ஸ் எதுக்கு? நான் என்ன தச்சனு? கொத்தனாரா?"

"அவ அப்பா வந்துகூப்பிட்டாரோ?"

"அவர் எதுக்குக் கூப்பிடணும்?..."

"நாலு வீடு தள்ளியிருக்கா அவா. அவாளுக்கும் ஒரு வார்த்தை வந்து சொல்லணும்னு தோணலே."

"எதுக்காகச் சொல்றது? அவா என்ன நமக்குப் பழக்கமா, சிநேகமா, உறவா — ஒண்ணுமில்லியே. அவா குடி வந்ததிலேர்ந்து ஒரு வருஷமா நான் ஒரே ஒரு நாளைக்குத்தான் பார்த்திருக்கேன். ஒரு தடவை சைக்கிளிலே ஏறி ஆபீசுக்குப் புறப்பட்டுண்டிருந்தார். அப்ப பார்த்ததுதான். அவா எதுக்காக நமக்குச் சொல்றது?"

"ஒருத்தருக்கும் பழக்கமில்லே. கூப்பிடலே. நீங்க மாத்திரம் கச்சேரி பண்ணப் போறேளா, ஜன்மாவுக்கு முடிச்சுப் போட்டிருக்கிற ஊர்ப் பிள்ளையாரை விட்டுட்டு."

"பிள்ளையார் பிரணவ ஸ்வரூபம்னு! அது இல்லாத இடமே கிடையாதுடீ."

"இத்தனை வருஷமாச்சாக்கும் இது தெரிய?"

"அதது அந்தந்தக் காலத்திலேதான் வந்து சேரும்."

"என்ன இது? ஸ்வாதீனத்தோடே தான் பேசியாறதா? ஊர்ப் பிள்ளையாரை விடறதில்லேன்னு வச்சிண்டு? பொண்ணு வேற அத்தைக்கு வெள்ளிப் பிள்ளையார் அனுப்பறேன், விரதத்துக்குத் தூக்கிண்டு போகறது.... இத்தனையும் விட்டுட்டு, இத்தனூண்டு வாண்டு சொல்றதாம். மதுரைக்குப் போறதாம்."

"வாண்டுதானே எனக்குச் சிநேகம். அதுதான் கூப்பிட்டிருக்கு."

மாலை வீதியில் பந்தல் நிழலில் குழந்தைகளுடன் நாலு மூலைத் தாச்சி விளையாட்டு விளையாடிக் கொண்டிருந்தான் ரங்கு.

வண்டி நின்றதைப் பார்த்து வந்து எட்டிப் பார்த்தான்.

"மாமா, வந்துட்டேளா. போங்கடா, நகருங்கடா. தம்புராவை நான் எடுத்துக்கிறேன் மாமா. நகருங்கடா." வித்துவான்களை அழைத்துக் கொண்டு உள்ளே போனான் அவன். அங்கே ஏகக் கூட்டம். ஹோமப் புகை வேறு.

"யப்பா — நான் சொல்லலேனுன்னியோ? இன்னிக்கிக் கச்சேரின்னு. பாரு. எல்லாரும் வந்திருக்கா, பாரு. போடா, அசடுன்னியே. இதோ பாரு, யார் ஜெயிச்சா. வாங்க மாமா... எல்லாரும் கொஞ்சம் இடம் விடுங்களேன்...ம்..."

"நமஸ்காரம், நமஸ்காரம்..... வரணும்" என்று அப்பா பரபரப்போடு வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்து குரல் கொடுத்தார்.

அக்னியின் முன் அமர்ந்திருந்த தாத்தா கூடத்தில் எழுந்த பரபரப்பையும் கலகலப்பையும் கண்டு நிமிர்ந்தார். பேரன் அவர் காதண்டை போய்க் கழுத்து நாளம் புடைக்கக் கத்தினான்.

"தாத்தா! இன்னிக்குச் சாயங்காலம் கச்சேரி, நம்மாத்திலே! இந்த மாமா தான் ராமு மாமா — நீங்க போட்டோவிலே பார்த்ததில்லே! ரொம்ப நன்னாப் பாடுவார்..... ராமு தாத்தா... ராமு."

"என்னது! சம்மாருடாலே. அது சமுத்திரம்னு. வரணும்...வரணும்....."

"மாமா, பந்தல்லே பண்றேளா? இங்கே கூடத்திலே பண்றேளா, கச்சேரி?"


"நீ எங்கே சொல்றியோ, அங்கேயே பண்ணிடப் போறது."


"ம்......ம்....வந்து....நீங்க என்னது வந்து......." என்று வார்த்தைகளை நாக்குக்கு இழுக்கத் தடுமாறிக் கொண்டிருந்தார் அப்பா.

"அம்மா.... காப்பி கொண்டு கொடும்மா எல்லாருக்கும்.... சுருக்க வாம்மா...... மாமா.... நீங்க கச்சேரி பண்ண வருவேன்னு தெரியும். அப்பாவும் அம்மாவும் போடா அசடு, போடா அசடு. வேலையைப் பார்னு சொல்லிண்டேயிருந்தா.... நீங்க இன்னிக்கு ஜோராப் பாடணும், என்ன?"

"நீ இப்படி வாடா பயலே" என்று அவனை மடி மீது இழுத்துப் போட்டுக் கொண்டார் ராமு.

அப்பா கூனிக் குறுகி உள்ளே ஓடினார்.


தீபாவளி
நல் வாழ்த்துக்கள்
தரத்தில் சிறந்த
ஸ்பார்ட்டன் பெயிண்டுகள்
தயாரிப்பாளர்கள்
SPARTAN SUPERFINE PRODUCTS
அடிஸன்ஸ் பெயிண்ட்ஸ் & கெமிகல்ஸ்
லிமிடெட்
செம்பியம்
மதராஸ்-11
(இந்தியன் பெயின்ட் அஸோஸியேஷனில் அங்கத்தினர்)
APC-69



ஆத்ம நிவேதனம்

வானத்தில் பவனிவரும் முழுமதி தன் மோகன நிலவைப் பாலெனப் பொழிந்து அந்தப் புல்வெளிப் பிரதேசத்தையே குளிர்வித்துக் கொண்டிருந்தது. அமைதி தவழும் அந்தப் பிரதேசத்தில் நிலவின் அழகு கிரணங்களுக்குத் துணையாகப் பனிப் படலம் இலேசாகப் படிந்த வண்ணமாயிருந்தது. அங்கு நடுநாயகமாக அழகானதொரு தடாகம். தடாகத்தின் நீரே தெரியாதபடி தாமரை இலைகள் மூடிக் கொண்டிருந்தன. தாமரை இலைகளுக்கு இடையே இறைவன் சந்நிதியில், கைகூப்பி நிற்கும் அடியார்களைப் போல் தாமரை மொட்டுக்கள் குவிந்தவண்ணம் நின்றன.

தாமரை இலைகளில் படிந்திருக்கும் பனித் துளிகள் வைரத் துகள்கள் போல் பளபளவென்று மின்னின. அவற்றுள் சற்றுப் பெரிதாயிருந்த பனித்துளியின் மகிழ்ச்சி கட்டுக்கு அடங்காததாயிருந்தது.

"ஹஹஹ்ஹ்ஹா!"

அமைதியான அந்தப் பிரதேசத்தின் அமைதியைக் கெடுத்துக் கொண்டு எதிரொலியுடன் ஏளனமாக எழுந்த அக்குரலுக்கு உரியவர் யார்?

ஒரு தாமரை மொட்டு!

"யார் சிரிப்பது?" என்றது பனித்துளி.

"ஹஹ்ஹஹ்ஹா!"

மீண்டும் சிரித்தது தாமரை மொட்டு.

"என்னது, மீண்டும் சிரிக்கிறாயா?" என்று அதட்டியது பனித் துளி.

"பனித் துளி, உன் குறுகிய வாழ்நாளைப் போலவே உன் கோபமும் சட்டென்று தோன்றி விடுகிறது." தாமரை மொட்டின் குரலில் ஏளனம் வெளிப்பட்டது.

"ஏளனமாய்ச் சிரித்தால் யாருக்குத்தான் கோபம் வராது?" என்றது பனித் துளி.

"உன்னைப்பற்றி நினைத்துக் கொண்டே இருந்தேன். குப்பென்று சிரிப்பு வந்துவிட்டது."

"என்னைப் பற்றி நினைத்துச் சிரிப்பதற்கு என்ன இருக்கிறது? நான் என்ன உன்னைப் போல் சேற்றில் பிறந்தேனா? இல்லை, சதா சேற்றில் நின்று கொண்டு தவிக்கிறேனா? பரிசுத்தத்தின் வடிவமாக விண் தலத்திலிருந்து இறங்கி, தாமரை இலையின்மேல் அமர்ந்து வைரமாய் ஜொலிக்கும் என்னைக் கண்டு சிரிப்பானேன்!"

"உன் பரிசுத்தத்தையும் ஜொலிப்பையும் கண்டு நான் சிரிக்கவில்லை. அற்பாயுக படைத்த உனக்கு ஜொலிப்பு வேறு கேடா?"

"நிறைய நேரம் வாழ்ந்தால்தான் வாழ்வா? உள்ளத்தில் நிறைவோடு ஒருசில நிமிஷங்கள் வாழ்ந்தாலும் போதுமே! உன் மாதிரி சேற்றில் அமிழ்ந்து இரவெல்லாம் காதலனுடைய கதிரவனுக்காகக் குனிந்த முகத்தோடு காத்திருப்பதும், கதிரவன் வந்ததும் முகம் மலர்ந்து நின்று பூரிப்பதும், பிறகு கதிரவன் அஸ்தமிக்கத் தொடங்கியதும் மீண்டும் முகம் கூம்பி, வாடித் தலையைத் தொங்கப் போட்டுக் கொள்வதும் உனக்கு எப்படித்தான் பிடிக்கிறதோ!"


"பனித் துளி, நான் வெறுமனே வாடி நிற்கவில்லை. காதலனைக் கண்டு அவன் ஸ்பரிசுகம் பெற்று மகிழ்ந்த நினைவில் அப்படியே லயித்துப் போய் நின்று விடுகிறேன். ஆனால் நீயோ அதே கதிரவனின் வரவுக்காக ஏங்கி நின்று விட்டு, அவன் வந்ததும் அவனைக் கண்ட மகிழ்ச்சியில் மறைந்து ஒழிந்து போய் விடுகிறாயே! அது நகைப்புக்கு இடம் தரவில்லையா?"


"உன்னைக் கண்டு என்னால் நகைக்க முடியவில்லை. ஆனால் மிகவும் அநுதாபப்படுகிறேன். காதலன் தரும் இன்ப சுகத்தின் எல்லையில் நின்று தன்னை இழப்பதில்தான் பரமானந்த முண்டாகிறது. நான் என் காதலனுடைய கதிரவனுக்கு என்னையே காணிக்கையாக்கி, ஆத்மநிவேதனம் செய்து விடுகிறேன். ஒன்பது வித பக்தியில் ஆத்ம நிவேதனம்தானே உயர்ந்தது? இரவெல்லாம் அவன் பிரிவுத் துயரில் வாடிப் பொழுது விடிந்து கதிரவன் உதயமானதும் அவனோடு இரண்டறக் கலந்து விடுவதில் உள்ள இன்பம் அவன் பிரிவை நினைத்து வாடுவதில் ஏற்பட்டு விடுமா? எங்கள் உலகம் அவன்தான்; எங்கள் வாழ்வு அவன் தான்.......!"


பனித் துளி இதைக் கூறிக் கொண்டிருக்கும் போதே கதிரவன் கீழ்த் திசையில் உதயமாகி விட்டான். உதயபானுவின் பொற்கிரணங்களாகிய கரங்களின் ஸ்பரிச சுகத்தில் பனித் துளி தன்னை இழந்து விட்டது!

அதைக் கண்ட தாமரை மொட்டு மேனியெல்லாம் புளகாங்கிதமடைந்து குப்பென்று மலர்ந்தது.

'ஸோமாஸ்'








கார்டினால் கட்டிய கோபுரமும்......... ....கல்லால் எழுந்த கலைக் கோயிலும்.

பளிங்கு நீர்ப்பரப்பிலே பளீன்சடுகுடு!




மேல் புகைப் படங்கள் : என். ராமகிருஷ்ணா


புதிய ஏற்பாடுகள்! (பைபிள் அல்ல)



விடாக் கண்டர்!




PLATO
இதோ
ஒரு சிறந்த
பரிசு
அழகிய பெட்டியில் அடங்கியுள்ள ப்ளேட்டோ பேனாவும், ப்ளேட்டோ பால்-பாயிண்ட் பேனாவும் எல்லா விசேஷ காலங்களிலும் நீங்கள் அளிக்க விரும்பும் பரிசு! உங்கள் அன்பு மனைவிக்கோ, கணவனுக்கோ, ஏன் உங்களுக்கே கூட ஏற்ற அன்பளிப்பு!
plato
ப்ளேட்டோ ப்ரஸெண்டேஷன் ஸெட்
PLATO
Shilpi MP, 130 Tam



P.V.C
INSULATED
GLOSTER
CABLE
FGI



POISON
ACRIMENT
30 G.
தீப்-புண்கள்
வெந்த புண்கள்
காயங்கள்
சிராய்ப்புகள்
சருமத்தில் கிருமிகளால் சீழ்பிடிக்கக்கூடிய நிலைமைகளில்



கலையின் அடிப்படைத் தத்துவ விசாரம் இந்த நாட்டில்தான் பரிமளிக்கும் வகையில் உருவாகியிருக்கிறது. நம் நாட்டுக் கலை பெரும் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது. அதற்கு இணை வேறெங்குமே கிடையாது என்பதை ருசுப்படுத்தலாம்.

'கலை சாதனையை ஒரு யோகமாகவேதான் ஹிந்துக்கள் கருதி வந்துள்ளார்கள்; தன்னைத்தானே அறிவதற்கு ஒப்பாகவே கலையனுபவத்தை அவர்கள் கருதி வந்திருக்கிறார்கள்' என்று டாக்டர் ஆனந்த குமாரஸ்வாமி சொல்லுவார். ஆம்! யோக மென்பது மனத்தை ஒருமுகமாக்கி, விரும்பப்படுவதையும் தன்னையும் ஒருமைப்படுத்தி நிற்கும் நிலை எனத் தெளிவு காண்பதே. சுக்கிராச்சாரியார் போன்ற பண்டை நூலாசிரியர்கள் குறித்திருப்பது பின்வருமாறு:—ஸ்தபதி (பிரதிமாகாரகன்) எந்த மூர்த்தங்களை உருவாக்க முயலுகிறானோ அவைகளை முதலில் மனத்தினால் தியானம் செய்தாக வேண்டும்... வேறு எவ்வித வழியிலும் செய்ய முடியாததை — நேரில் கண்முன் பொருளைக் காண்பதாலும் இயலாததை — அவன் தியானம் ஒன்றினால் மட்டும் மூர்த்தங்களாகச் சிருஷ்டிக்க இயலும்.''

தியானத்தின் பயனையும், மனம் ஓரிடத்தில் ஊன்றினால் அதன் சக்தி பன்மடங்கு ஆவதையும், உதாரணமொன்றினால் எடுத்துக் காட்டுவோம். மகாபாரதக் கதையில் எழும் ஒரு சம்பவத்தை ஞாபகப்படுத்துவோம். துரோணர் வில் வித்தை பயிலக் கௌரவ பாண்டவர் இரு மக்களையும் தமது சீடர்களாய் ஏற்றுக் கொண்டார். ஒரு சமயம் குறி வைப்பதில் தேர்ச்சி எம்மட்டிலுள்ளது என்பதைச் சோதனை செய்ய, தமது மாணவர்களிடம் மரம் ஒன்றில் கிளையின் மேல் உட்கார்ந்திருந்த பருந்தைக் காட்டி, அதன் தலையை மட்டும் அம்பினால் எய்யும்படி கேட்டார். 'என்ன தெரிகிறது?' என்றே ஒவ்வொருவராய்க் கேட்டார். அர்ஜுனனைத் தவிர மற்றவர்கள் எல்லோரும் மரக் கிளையையும், அதில் உள்ள பட்சியையும் காண்பதாகத் தெரிவித்தனர். துரோணருக்கு அந்தப் பதிலில் திருப்தி உண்டாகவில்லை. அர்ஜுனன் மட்டும் ''முதலில் பருந்தைத்தான் காண்கிறேன்'' என்றான். மறுபடியும் கேட்டதும் ''பருந்தின் தலையை மட்டும் பார்க்கிறேன்'' என்றான். அர்ஜுனனுடைய குறி வைக்கும் தனிச் சிறப்பை மெச்சினார். உண்மையில் யோக சாதனையேதான் அது என்பதையும் துரோணர் எடுத்துரைத்தார்.

கலை சாதனையை ஒரு யோகமாகவே நினைத்து வந்திருப்பதை நிரூபிக்க இன்னும் பல இடங்களிலிருந்து உதாரணங்கள் காட்டலாம். ஸ்ரீமத் ராமாயண உபோத்காதத்தில் வால்மீகி மகரிஷி தமது காவிய சிருஷ்டியைத் தொடங்குமுன் தியானத்தில் அமர்ந்ததாகக் குறித்திருக்கிறது. தமக்குள் புலன்களை யடக்கி நீண்ட யோக நிஷ்டையில் அவர் இருந்ததாகவும் தெரிகிறது. தியான யோகத்தினால் அவர் கண் முன் இராமாயண இதிகாசம் முழுதும் எதிரில் மேடையின் மேல் தோன்றி அடுத்தடுத்து வரும் காட்சிகளாகவே தெரிந்ததாம். தசரதருடைய உருவமும், அவர் மனைவிமார்களின் அழகிய உருவங்களும், மற்றும் அவர்களுடைய நடை உடை பாவனைகள் அவ்வளவும் எதிரில் நடப்பதாகவே தெரிந்தனவாம். இவ்விதமாகவே கதை முழுவதும் சம்பவங்கள் ஒன்று விடாமல் தெரிந்ததை வைத்தே பிற்பாடு முனிவர் காவியம் இயற்றினார். வெறும் கற்பனையாகவே தோன்றுது. அவ்வளவும் அவருடைய எழுத்தில் நடப்பவைகளாக இடம் பெற்ற வரலாறு அதிசயமாகவே இன்றும் நமக்குப் படுகிறது. கவனித்தால் உலகமெங்கும் மகாகவிகளும் எழுத்தாள மேதைகளும் சாதித்திருப்பது இவ்வித அதிசயமே எனத் தெரியும். டால்ஸ்டாயினுடைய 'அன்னா கரினினா' என்ற புத்தகத்தின் ஆங்கில மொழிபெயர்ப்புக்கு முகவுரை எழுதிய கால்ஸ்வர்த்தி (Galsworthy) என்ற நாவலாசிரியர் தாமும் இதையே மெய்ப்பித்துள்ளார். கலைஞன் எந்தக் கணம் உயர்ந்த கருத்தொன்றினால் உந்தப்பட்டுத் தன்மயம் அதில் அடைகிறானோ, உடனேயே அவனுடைய அனுபவம் பெருகி, அவன் மனம் தெளிந்து, எழுதுகோலைக் காகிதங்களின் மேல் ஓட்டுவதை மட்டும் செய்கிறான். மற்றப்படி பிரயாசை எதுவும் அவனுக்கு ஏற்படுவதில்லை. ஏனெனில் அவன் உள்ளம் முழுவதிலுமே அவன் சிருஷ்டிக்கும் விஷயம் பரவி நிற்பதால், தனியான முயற்சி பிற்பாடு அவனுக்கு ஏற்படுவதில்லை. எழுத்துக்களாய், காகிதத்தின் மேல் அவை படிவதற்கு முன்பே காவியம் மனத்தில் உருவாகிவிடும்.

கி.சந்திரசேகரன்

இதிலிருந்து விளங்குவது, எந்தக் கலை சிருஷ்டியும் முதலில் உள்ளத்தில் உருவாகிய பின்னே, வெளித் தோற்றத்தில் எழுகிறது. சிற்பி ஒருவன் வல்லவனாயின் தான் சிலை உருவத்தை வடிக்குமுன்னே, பளிங்குக் கல்லில் அதனைக் காண்கிறான். பிற்பாடுதான் அவனது சிற்பமும் வடிவெடுக்கிறது. கவனித்தால் அவன் கண்ட கலை உருவத்தைத் தவிர இதர அவசியமில்லாத பாகங்களைக் கல்லிலிருந்து செதுக்கி எடுத்து ஒதுக்கி விடுகிறான். பிற்பாடு அவன் மனத்தில் உதித்த சிற்ப வடிவம்தானாகவே வெளிப்படுகிறது.

இன்னும் யோகத்தை நாம் அன்றாடம் செய்யும் காரியங்களில் கூடப் புகுத்த இயலுமென்று நிரூபிக்கலாம்.' சுந்தரகாண்டத்தில் அனுமன் அசோகவனத்தில் சீதையைத் தேடுமுன், எல்லாத் தெய்வங்களையும் பிரார்த்தித்துவிட்டு, ஒரு தடவை தான் தேட வேண்டிய வனம் முழுவதையும் மனக் கண்ணால் சஞ்சரித்தான் என முனிவர் கூறுகிறார். பிற்பாடு சீக்கிரத்தில் குறி தப்பாத அம்பைப் போல் அவன் இருந்த இடத்திலிருந்து குதித்துத் தாவிக் கணப்பொழுதில் தனது காரியத்தில் இறங்கி விடுகிறான். ஒருமுகப் படுத்திய தியானமே எல்லாக் காரியங்களிலும் தேர்ச்சியடைய ஒருவனுக்கு உதவுகிறது. பகவான் கீதையில் இதையே ''காரியங்களின் தேர்ச்சி என்பது யோகமே'' என்று கூறியுள்ளார்.

ஆனால் யோகம் காரிய சித்திக்கு ஓர் உபாயமே அல்லாது லட்சிய

ஆனந்த குமாரஸ்வாமி



மாகி விடாது. பிரதிமாக்காரர்களுக்கு (ஸ்தபதிகளுக்கு) தியானமென்பதை ஒரு முக்கிய அனுஷ்டானமாகவே தொன்று தொட்டு இந்த நாட்டில் ஏற்படுத்திக் கொண்டுள்ளார்கள். சிற்பிக்குத் தான் செய்யும் மூர்த்தம் ஒன்றே குறி. அதில் அழகு வெளிப்படுவதாயினும் அவனுடைய முயற்சி அவ்விஷயத்தில் பொருந்துவது கிடையாது. ஏனெனில் எந்த வடிவத்தை அவன் உண்டாக்க முயலுகிறானோ முதலில் அந்தத் தெய்வத்தை அவன் வழிபடுவதால் அதன் திருத்தமான அமைப்பு மட்டுமே அவனது முழுச் செயலாகிறது. அந்த வடிவத்தின் அழகு அவனுடைய செயலுக்குச் சற்று அதிகப் படியாகவும் ஆகிவிடுகிறது. அழகின் அம்சம் தெய்வ மூர்த்தங்களில் காணப்படுவது, வடிவத்திலடங்கிய முக்கிய கருத்துக்குத் தூண்டுதவாய்க்கூட இல்லாமல் இருக்கலாம்.

அடுத்தது சௌந்தரியத்தைப் பற்றிய தத்துவத்தைப் பல நூற்றாண்டுகளாய் இந்நாட்டின் கலைவிற்பன்னர்கள் அறிவுரைகளில் வாரி வழங்கியுள்ளார்கள். கலையில் எதை முக்கியமான அம்சமாகக் கொள்வது என்பதே கேள்வி. அவர்கள் சித்தாந்தப்படுத்தியதொன்று ரஸம் கலையிலும், கவிதையிலும் இன்றியமையாதது என்பதாம். ரஸத்தையே வேறு விதமாகக் கூறுவதாயின் அழகுணர்ச்சி எனலாம். ரஸத்தை ஆராய்ந்து எவ்வளவோ வகையில் பலர் விவாதித்திருக்கிறார்கள். ரஸம் விளங்குவதும் முக்கியமாய் ரசிகனையே அண்டியிருக்கிறது. ரஸம் எழுவதற்குத் துணையாயிருக்கும் பாவங்கள் சில முக்கியமாய் உண்டாக்கப்படவேண்டும். கவிதை சிருஷ்டிக்கு எவ்வளவு திறமை அவசியமாகுமோ அவ்வளவு கவிதையை ரசிப்பதற்கும் இருக்க வேண்டும். ஸஹிருதயன் (ரஸிகன்) ஒருவனே ரஸானுபவத்தை நன்கு அடைகிறான். அழகைப் பருகி ரஸானுபாவம் பெறுபவனே கூடக் கவிதையின் முழுமைக்குக் காரணமாகிறான். கலை சிருஷ்டிக்கு நிறைவு ஏற்பட வேண்டுமானால் கவிஞன் எவ்வளவு துணை செய்வானோ அதற்குத் துளியும் குறைவின்றி ஸஹிருதயனும் உதவியாகிறான். அபிநவகுப்தர் என்ற 'தவனியாலோக'த்தின் உரையாசிரியர் இதையே அழகாய்க் கூறுவார்: ''கலைமகளின் உருவத்தின் முழுமை (தத்துவம்) கவிஞனும் ஸஹிருதயனும் ஒன்றிய நிலையில்தான் ஏற்படுகிறது.''

சௌந்தரியத்தை நுகருவதற்கே ஸஹிருதயனுக்குத்தான் இயலுமென்பதை ஒப்புவோமாயின் பிற்பாடு



ரவீந்திரநாத் டாகூர்

நாம் தெளிவு படுத்துவது, கலை சிருஷ்டியும், அதனை ரஸாஸ்வாதம் செய்து ஒன்றி நிற்கும் நிலையும் நிச்சயம் ஏற்படும் எனலாம். அதன் அநுபவமே கூட அதனை நன்கு உணர்த்துவதாகு மல்லவா? ரஸத்தை அநுபவத்தின் வாயிலாக மட்டுமே உணர்கிறோம் என்பதை ஆனந்த குமாரசுவாமி விவரிக்கையில்: ''சமயமும், கலையும் ஒரே அநுபவத்தை விவரிக்கும் இரு பெயர்களே. மெய்ம்மையையும், அதனை அறிவதையுமே இவை ஞாபகப்படுத்துகின்றன.'' இன்னும் இவைகள் புலப்படுத்துவதாவது, காதல் அநுபவம் காதலனுக்கு எப்படியோ, உண்மையின் அநுபவம் தத்துவ ஞானிக்கு எவ்விதமோ, அவ்விதமே ரஸிகனுக்கும் அழகின் அநுபவம் என்பதாம்.

கடைசியில் இவைகள் நிலைப்பதும் பேரறிவில்தான். இருப்பினும் தூலமாய்க் கலை வடிவத்தினால் மட்டுமே கலைஞன் தனது சொந்த அநுபவத்தை விளக்க வல்லமை அடைகிறான். இதற்காகவே அவன் தனது கற்பனைக்குச் சரியென்று பட்டதை தனது கலை சிருஷ்டிக்கு விஷயமாக்குகிறான். எதுவாயினும், அவன் அறிவுக் கண்ணில் அது நிலைக்கும் பொருளாகிவிடும். பெரியது, சிறியது, உணர்வுள்ளது, உணர்வற்றது, நல்லது, பொல்லாதது என்ற வேற்றுமைகள் அவன் அறிவுக்கு எல்லையை எழுப்பா. காரணம், பேருண்மை என்பதும், எங்கும் அது இல்லாத இடமே இல்லையென்பதால் வியாபித்திருப்பதன் சூட்சுமமேயாகும்.

ஆயினும் கவனித்தால் அழகின் உணர்ச்சி ஒவ்வொருவருக்கும் தனித் தனியே வித்தியாசமாகத்தான் உண்டாகிறது. ஒருவனுக்கு அழகாய்த்

தோன்றுவது மற்றொருவனுக்கு விகாரமாய்ப் படலாம். ஜூலியட்டின் அழகைச் சதா போற்றுவதற்கு ரோமியோவின் கண்கள் அவசியமல்லவா? ஆகையால் அவனவனுக்கு அழகுணர்ச்சியைத் தேட அவனவன் தனிப் பொருளையே நாடுகிறான். எதையாவது ஒன்றை நாம் கவர்ச்சியுள்ள பொருளாய் மதிப்பது அதன்பால் நமக்கு ஈடுபாடு இருப்பதால் தான். மேலும் அழகு என்பதைச் சுட்டிக் காட்ட நாமும் அதன் தூல வடிவத்தையே அதனுடன் சேர்த்துக்கொண்டு திண்டாடத்தான் செய்கிறோம்.

நாட்டியமொன்று நன்றாய் இருப்பதாய் நினைக்கையில் நிச்சயம் நாட்டியக்காரியை நினையாமல், கலையை மட்டும் அநுபவிக்கத் தெரிந்து கொள்வது அவசியம். உண்மையில் கலைப் பொருளை மதிப்பிடத் தொடங்குகையில், அதனுள் அடங்கிய அழகையே நினைக்க வேண்டும். இல்லையேல் கலையைச் சிருஷ்டிக்கும் ஆற்றலை வேறு பெயரைக் கொண்டுதான் குறிக்க இயலும். உதாரணம் கொண்டு விளக்குவோம்.

நாடகமொன்றில் ஒரு சூழ்ச்சிக்காரனின் (பிரதிநாயகனின்) நடிப்பு நாடகத்தில் வரும் முக்கிய பாத்திரத்தை விடச் சிறப்பாக இருக்கலாம். நாம் நடிப்புத் திறனை மட்டும் அந்தக் கெட்ட பாத்திரத்தில் போற்ற முற்படலாமே அல்லாது, கெட்ட பாத்திரத்தையே உயர்வெனக் கருத முற்பட மாட்டோம். ரஸமோ, அழகுணர்ச்சியோ கலைக்கு விஷயமாயுள்ளதில் இல்லை. அதனை வெளிப்படுத்த எழும் திறனில் மட்டும்தான் ஏற்படும். ஆகையால் ரஸிக்க இயன்றதாகவே ஒரு நடிப்புத் திறனை அநுபவித்து விட்டு, அது உயர்ந்தது அல்லது தாழ்ந்தது என்று விமரிசிக்க முற்படுகிறோம்.

அழகென்பதை ஒரு நிலையில் எப்பொழுதும் இருப்பதாக நினைக்க முடிவதில்லை. சிற்சில பொருள்களில் அதனைக் காண்கிறோம். மற்றவைகளில் காண்பதில்லை. ஆனாலும் கடவுள் படைப்பில் எதையும் அநுபவிக்கக் கற்பதுதான் முறையாகும். கவனித்து அழகை உணரத் தெரிந்து கொள்வதும் அவசியம். அழகுக்கே, கலைஞனையும் ஸஹிருதயனையும் ஒதுக்கி விட்டுத் தனித்து விளங்க வகையில்லைதான்.

எதையாவது கவர்ச்சியுடன் இருப்பதாயோ அல்லது வெறுப்பூட்டுவதாயோ நாம் குறிக்கையில் நாமும் அதன் வெளித் தோற்றம் உணர்த்துவதையே மெய்ப்பிக்கிறோம். படைப்பு சிறப்பு பெற்றிருப்பின் ஒன்றைப் பாராட்டுகிறோம். கலை சிருஷ்டியின் ஆற்றல் குன்றியுள்ளதாயின் அதனைத் தள்ளி விடுகிறோம். கலைஞனிடம் அவன் தேர்ந்தெடுத்திருக்கும் விஷயம் அவசியமா இல்லையா என்பதை நாம் விசாரிப்பதைக் காட்டிலும் தத்துவம் ஆராயும் அறிவாளிகளிடமே அந்தப் பகுத்தறிவை உபயோகிக்க எதிர் பார்க்கலாம். முக்கியமாய் ரஸிகத் தன்மையற்ற ஒருவன் தனக்கொரு கலை சிருஷ்டி பிடிக்கவில்லை என்று மட்டும் கூறித் தகுந்த காரணங்களொன்றையும் காட்டாவிடில், அவனுடன் வாதம் செய்யப் பொழுதை வீணாக்காது தத்துவ விசாரம் செய்யும் அறிவாளி ஒருவரைச் சுட்டிக் காட்டி அவரிடம் தெரிந்துகொள்ள அனுப்பி விடலாம். கலைஞனை, ரஸிகத் தன்மை அற்றவனிடம் எக்காரணம் கொண்டும் கலைசிருஷ்டியின் அருமைப் பாட்டை விளக்க அனுப்பக் கூடாது.

ஸஹிருதயன் ஒருவனே கலைஞனின் உள்ளத்தோடு ஒன்றி அவனுடன் சேர்ந்து கலைச் சிருஷ்டியை அநுபவிக்கிறான். ரஸிகன் கலைஞனின் உள்ளம் அதனால் தூண்டப்பட்டுச் சாதனையை வெளியிட்டதென்பதை விசாரிக்கப் புகவே மாட்டான். ஒவ்வொரு கலைச் சிருஷ்டியும் ஒன்று இரண்டு கருத்துக்களை மட்டுந்தானா விளக்க உருவாகின்றது? பலப் பல கருத்துக்கள் தோன்றலாம், ஒரே சிருஷ்டியைப் பார்த்த ரஸிகனின் மனத்தில். 'கவிஞன் பாட்டினூடே பாயும் துவனிகளை அறிந்து பலர் பலவித அநுபவங்களைப் பெறுவார்கள்' என்பார் மகா கவி டாகூர். ஸஹிருதயன் கலை சிருஷ்டியின் வாயிலாய் ரஸாநுபவத்தை அடைவானே அல்லாது அதன் காரண காரியங்களை நினைத்துக் கொண்டிருக்க மாட்டான். இன்னும் சற்று ஊன்றிப் பார்த்தால் பிறவியில் கவிஞனாய்ப் பிறக்கிறான் என்பதை ஒத்தது ஸஹிருதயனுடைய பிறப்பும். படைப்புணர்ச்சியின் அளவில் மட்டுமே அவ்விருவருக்குமிடையே வித்தியாசம் இருக்கலாம். ஸஹிருதயனுக்குத் தான் எதனால் கலையை அநுபவிக்கிறான் என்பதைப் பிறருக்கு எடுத்துக் காட்டி நிரூபித்தாக வேண்டிய அவசியமில்லை. அவன் அதை விளக்கத் தனது விமரிசனத்தினாலேயே மற்றோர் அரிய சிருஷ்டியை உண்டாக்கி விடக் கூடும். அவன் பாராட்டுக்குப் பிறகே இன்னும் அதிகமாக மற்றவர்களுக்குக் கலை சிருஷ்டியின் அருமை புலனாகும்.

கலைத் தத்துவத்தை இவ்விதமாகச் சித்தாந்தப்படுத்திக் கொண்டு இந்திய நாட்டு அலங்கார சாஸ்திர விற்பன்னர்கள் தங்கள் முடிவுகளுக்குக் கவிஞர்களிடமிருந்து மேற்கோள்களை யெல்லாம் காட்டி நிரூபிக்கின்றனர்.





ஸ்ரீ அரவிந்த கோஷ்

மேலை நாட்டின் சம்பிரதாயம் என்னவெனில், ஒரு கவிஞனையோ, கலைஞனையோ தங்கள் லட்சியத்துக்குப் பொருளாக்கிக் கொண்டு அவனுடைய கலைச் சிருஷ்டிகளின் உயர்வு தாழ்வுகளைப் பல காரணங்களைக் கொண்டு நிரூபிப்பது. மேலை நாட்டில்தான் விமரிசன சக்தியும் திறனாய்வும் செழித்திருப்பதாக எண்ணுகிறோம். இங்கு சம்ஸ்கிருத இலக்கியங்களிலும் இதர தேச பாஷை இலக்கியங்களிலுமுள்ள பொக்கிஷங்கள் இவ்விதத் திறனாய்வுக்கு இலக்காகாது செய்துவிட்டோம் என்பது இங்குள்ள குறை. உண்மைதான். ஓரளவு தனிக் கலைஞர்களின் சக்தியை ஆராய்ந்து வெளிப்படுத்தும் முயற்சி இல்லாமலில்லைதான். ஆயினும் மகா ரஸிகர்களான ஆனந்த வர்த்தனர், அபிநவ குப்தர் போன்ற திறனாய்வு செய்யும் பண்டிதர்கள் திறனாய்வின் அடிப்படைத் தருமத்தையும், திறனாயும் சக்தி எதைக் கொண்டு அளவுகளை ஏற்படுத்திக் கொள்கிறது — இவைபோன்ற நுட்பமான கருத்துக்களை ஆராய்ந்து மிகவும் வளப்படுத்தி விசாரித்திருக்கிறார்கள். துவனியையும், அதிலும் ரஸத்துவனியையும் பற்றி மிக மிக அழகாயும் புத்திக்கு அரிய உணவாயும் அற்புதச் செய்திகளை வழங்கியுள்ளார்கள்.


கலையின் அடிப்படைத் தத்துவ விசாரம் இந்த நாட்டில்தான் பரிமளிக்கும் வகையில் உருவாகியிருக்கிறது. டாக்டர் ஆனந்த குமாரஸ்வாமியும், ஸ்ரீ அரவிந்தரும் நம்மைப் பெரும் இருட்டறையிலிருந்து வெளிச்சம் காட்டி விழிப்புறச் செய்திராவிடில், பிறநாட்டு அறிவாளிகளின் தூற்றுதலுக்கு இரையாகி விருந்திருப்போம். ஆம், நம் நாட்டுக் கலை பெரும் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது. அதற்கு இணை வேறெங்குமே கிடையாது என்பதை ருசுப்படுத்தலாம்.


நர்ஸ்
அற்புத முகமூடி அறு
வைச் சிகிச்சையில் அற்
புத சாகஸம். நவீன சாத
னங்கள் கொண்ட நவநாரி
மணிகள் நர்சுகளாகத்
திகழும் தியேட்டர்.
வக்கீல்
'மைலார்ட்' என்று ஆரம்
பித்தாலே நிஜ. லார்டே
அலறுவார். பேச்சுக்கு
எதிர்ப் பேச்சு, எட்டிக்குப்
போட்டி! சட்டம் அவர்
கைப் பொம்மை. கேஸ்
கட்டுகள் குவிகின்றன.
விளம்பர யுகம்....
வீட்டுக் கண்ட்ராக்டர்
திடீர் வீடுகள் தயார்!
இன்று கல் நாளை கட்டிட
இன்று நிலம், நாளை மனை-
ஆழ்ந்த அஸ்திவாரத்தில்
ஆறடுக்கு மாளிகை.
மயிர் திருத்துவோர்
முடி மன்னன் முத்தை
யன் கையில் தலை முடி
யென்ன, முகமுடி யென்ன..
கத்தியின்றி ரத்தமின்றி..
முடி சுதந்திரமே எங்
கள் மூச்சு.


சங்கீத வித்வான்
காத்திரத்வனியில்
ஹம்ஸத்வனியும் கடுத்வ
னியும் கீழ் ஸ்தாயி மோட்டார்
பம்ப் பாணி. மேல் ஸ்தாயியி
லிருந்து ஒரு 'ஓவர் ஷூட்'
டாங்கி. காதுக்கு ஒரு முன்னர்
யோகாசிரமம்
ஆனந்தயோகி சிம்மாசனச் சக்கரவர்த்தி
சிரமம் நீங்க யோகாசிர
மம். தலைகீழாக நின்று
லும் கிடைக்காத சந்தர்ப்
பம். எங்கள் சிம்மாசனம்
ஒரு நவீனம். உடனே சேர்ந்து
சிம்மாசனத்தில் அமருங்கள்.
... சினிமா பாணி
சாமா
தையற்காரர்
முரட்டுத் துணியா? அதற்கு
அவருக்கு முண்டா இருக்கி
றது. சல்லாத்துணி அவரிடம்
செல்லாப் போகும். நைலான்
துணியை நைஸாக வெட்டுவார்.
பல நாள் முந்திக் கொடுத்து
ஒரு நாள் தள்ளிப் பெற்றுக்
கொள்ளுங்கள்.
ஜோஸ்யர்
கைமேல் பலன். உங்க
ளைப் பற்றிய திடுக்கிடும்
தகவல்கள்! நீங்கள் எங்
கள் கைகாட்டி! நான் உங்
கள் வழிகாட்டி! உங்கள்
ரேகை எங்கள் எதிர்காலம்.





உருண்டு திரண்டு வரும் கடலே! — உடைந்து ஓடிப் போவதேன் கடலே? — கவிமணி



புகைப்படம் : எஸ். கோவிந்தராஜ

கவிஞர் தரும் காட்சி











தமிழ் வளருகிறது. தேமதுரத் தமிழோசை உலக மெலாம் பரவுதல் வேண்டும் என்று கனவு கண்ட பாரதியாரின் கனவு நனவாகி வருகிறது. பாரதிக்குப் பின் தோன்றி இறவாப் புகழ் பெறும் இலக்கியங்களைப் படைத்த கவிஞர்களுள் இருவரை இம் மலரில் கௌரவித்துப் போற்றும்முகமாக அவர்கள் சொல்லால் தீட்டிய காட்சிகளுக்கு நமது ஓவியர்கள் திரு கல்பனாவும் திரு விஜயாவும் தூரிகையால் வண்ணங் குழைத்து வடிவம் தருகிறார்கள்.

அழகு செய்வோம்!

கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை நாஞ்சில் நாட்டில் பிறந்து வளர்ந்து தமிழின் ஏற்றத்தைக் கவிதையாக வடித்துத் தந்தவர். ரசிகமணி டி. கே. சி. அவர்கள் கவிமணியின் கவிதைகளிலே ஊறித் திளைத்துத் தமிழ்நாட்டுக்கு அவரை அறிமுகப்படுத்தி வைத்தார். 'தேசிக விநாயகத்தின் கவிப் பெருமை தினமும் கேட்பது என் செவிப் பெருமை' என்று நாமக்கல் வெ. ராமலிங்கம் பிள்ளை அவர்களால் போற்றப் பட்ட கவிமணியின் 'மலரும் மாலையும்' கவிதைத் தொகுப்பு தமிழர்கள் போற்றிப் பயின்று வரும் நூல். அவரது மற்றக் கவிதை நூல்களான 'உமர்கையாம் பாடல்கள்', 'ஆசிய ஜோதி' ஆகியவை கவிதைச் சிறப்புக்கு எடுத்துக்காட்டுக் களாகும்.

உள்ளத்துள்ளது கவிதை — இன்பம்
    உருவெடுப்பது கவிதை
தெள்ளத் தெளிந்த தமிழில் — உண்மை
    தெரிந்துரைப்பது கவிதை

என்று கவிதைக்கு இலக்கணம் கூறினார் கவிமணி. அவரது எளிய, இனிய சுவைப் பாடல்களுக்கு ஓவியர் விஜயா அழகிய வண்ணச் சித்திரம் வழங்கியுள்ளார்.

தீபாவளிப் பண்டிகை தினமென்றால் பெண்களுக்கு ஒரே கொண்டாட்டந்தான். தம் செல்வச் சிறுமியருக்குச் சீவி முடித்துச் சிங்காரித்துப் பார்ப்பதில் அன்னைக்கு எத்தனை ஆனந்தம்!

உற்றார் உறவினர் யாவருமே — கூடி
    ஒன்றாக உண்டிடும் நாள் இதடா!
வற்றாத செல்வம் படைத்தவர்போல — நாம்
    வாழ்வின் நலம்பெறும் நாள் இதடா!

★ ★ ★

காலத்துக் கேற்ற உடை பணிவோம் — வாசம்
    கட்டிய சந்தனம் பூசிடுவோம்
கோலமாய்ச் சீவிச் சிணுக்கெடுத்து — மலர்
    கூந்தலிற் சூட்டி அழகுசெய்வோம்.

— கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை

காதல் வெள்ளம்

சேலம் சங்ககிரியில் பிறந்தவர் ச. து. சுப்பிரமணிய யோகியார். தமிழ்க் குமரி நூலில் வந்துள்ள அவரது 'அகல்யா' 'மேரி மகதலேனா' ஆகிய கவிதைகள் இலக்கிய நயம் படைத்தவை. இதே நூலில் கிராமக் காதலர்களின் களிப்பை யோகியார் வர்ணிக்கும் அழகை இன்றைக்கெல்லாம் ரசித்து மகிழ்ந்து கொண்டேயிருக்கலாம். அவரது வர்ண ஜாலம் மிகுந்த எளிய நடை நம்மை மெய்சிலிர்க்க வைக்கிறது.

'காற்றிலேறி அவ்விண்ணையும் சாடுவர்
காதற் பெண்கள் கடைக்கண் பணியிலே'

என்றார் பாரதியார். கருத்தொருமித்த கிராமக் காதலர் இருவரது நிலையைக் 'காதல் வெள்ளம்' என்ற இந்தப் பாடலில் தருகிறார் யோகியார், தமக்கே உரிய பாணியிலே! இந்தப் பாடலில் வரும் காதலரையும் சூழ்நிலையையும் அழகுறச் சித்திரிப்பவர் ஓவியர் கல்பனா.

குப்பன் :

கூதல் அடிக்குது : தூறல் நெருங்குது
குச்சு நடுங்குது, குப்பச்சி!
ஆதர வற்றிந்தக் காரிருள் மூட்டத்தில்
அம்பிட்டுக் கொண்டோமே, குப்பச்சி!

குப்பச்சி :

கூதல் அடிக்கிலென், தூறல் நெருங்கிலென்,
குச்சு நடுங்கிலென், குப்பண்ணு?
காதல் வெள்ளத்திலும் கார்மழை வெள்ளத்தைக்
கடக்கல் ஆகாதோ, குப்பண்ணு?

குப்பன் :

மின்னல் விளக்கு வெடிக்க இருளதை
மீண்டும் விழுங்கி உருளுது பார்!
சென்னஞ் சிறியதோர் லாந்தரும் இல்லையே,
சேர்வழி எப்படி காமறிவோம்?

குப்பச்சி :

மின்னல் விளக்கு வெடிக்க இருளதை
மீண்டும் விழுங்கி உருண்டிடில் என்?
அன்னை பராசக்தி நம் அகத்து ஊட்டிய
ஆசை விளக்கும் அவிந்திடுமோ?

குப்பன் :

எட்டுத் திசையும் இடிக்கிடப் பேரிடி
எக்காளம் இட்டுக் குதிக்குது பார்!
கொட்டும் இசைக் குயில் கோமளமே, புயல்
கோபத்தை எப்படி மாற்றிடுவோம்?

குப்பச்சி :

எட்டுத் திசையும் இடிக்கிடப் பேரிடி
எக்காளம் இட்டுக் குதித்திடில் என்?
கட்டும் பழுத்த நம் காளித் தெய்வம் தந்த
காதலின் மந்திரம் சண்டிலேயோ?

குப்பன் :

இந்திரன் வைரப் படைகொண்டு மேகங்கள்
எங்கணும் ஓட்டி மகிழ்ந்திடுவான்,
அந்தர மீனினம் யாவும் ஒளிந்தது,
யாமும் ஒளிக்க வழியிலையே!

குப்பச்சி :

இந்திரன் வைரப் படைகொண்டு மேகங்கள்
எங்கணும் ஓட்டி மகிழ்ந்திடில் என்?
மந்திரத் தெய்வதம் காளியம்மன் தந்த
மையலின் மந்திரம் உண்டு கண்டாய்!

குப்பன் :

சந்திரன் ரோகிணித் தையலுடன் கூடோர்
சந்துக் குகையினைச் சார்ந்து விட்டான்.

குப்பச்சி :

இந்து இளம்பிறை பூண்ட சடையினன்
இன்பப் பதங்களைச் சார்ந்திடுவோம்.

குப்பன் :

கார் மழை வீச்சினில், வெள்ளத்துப் பாய்ச்சலில்,
காசினி மேனி கரையுதடீ!

குப்பச்சி :

கார் மழை மேனியன் காளியம்மன் தந்த
காதலில் மேனி கரைந்திடுவோம்.

பொது

என்றுரைத்து இன்பம் குலாவிடும் வேளையில்
எங்கிருந்தோ பெரு வெள்ளம் ஒன்று
குன்றின் முகட்டில் குதிக்கும் அருவியில்
கொந்தளித்துப் பாய்ந்து வந்ததுவே.

காதல் கலவியில் கண்இரண்டும் மூடிக்
காசினி யாவும் மறந்திருந்தார்;
மோதிய வெள்ளத்தின் மூர்க்கம் அறிந்திலர்
மோகனக் காதலில் ஆழ்ந்துவிட்டார்.

காதல் கண்டோம் இனிச் சாதல் இலை எனக்
காட்டிய பல்லவி கேட்டதுவே!
மோதிய வெள்ளத்து மூழ்கினர்; யாவுமே
மோதிய வெள்ளத்து மூழ்கினவே!

—ச. து. சு. யோகியார்

மேக் - அப் அறையில்!



"என்ன யோசனை பண்ணறீங்க? ஸ்திரீபார்ட் ரங்கப்பாதான்! இன்னைக்கு க்ஷவரம் பண்ணிக்க மறந்துபோய் வந்துட்டாராம்!"

நகை வேண்டாம்!



"நீ ஏன் நகையே வாங்கிக் கொள்ளாமல் புதுப் புதுப் புடவையா வாங்கிக் கட்டிக் கொள்ளறே?"

"நகைன்னு ஏதோ கழுத்திலே காதிலே கையிலேன்னு மட்டும்தான் தெரியறது; புடவைன்னு உடம்பு முழுவதும் அலங்காரமாத் தெரியறதே!"





கா சாங்குடி கோபாலகிருஷ்ணன் என்கிற கோபுவுக்கும் பட்டணத்திலே ஒரு சின்ன வீடு உண்டு; பழைய மாடல் கார் உண்டு; போனும் உண்டு. ஆனால் இன்னும் கல்யாணம்தான் ஆகவில்லை. அன்றுமுதல் இன்றுவரையில் பிரம்மச்சாரியாகவே இருந்து வந்து விட்டார். அப்படி என்ன வைராக்கியமோ, இல்லை வியாதியோ அல்லது வேறு ஏதாவது காரணமோ யாருக்கும் தெரியாது. அவர் என்னமோ கவலை இல்லாமல்தான் இருந்தார். வயது கிட்டத்தட்ட ஐம்பது ஆகியும் மனிதன் கல்யாணம் பண்ணிக் கொள்ளவில்லை என்றால் ஜாதக பாவத்திலே ஏதாவது கோளாறு என்றுதான் காரணம் சொல்லலாம்.

அவரைப் பார்த்தால் என்னவோ வான்கோழி நினைப்புத்தான் வரும். இருபத்தைந்து வயதில் பார்த்ததைப் போலத்தான் இன்றைக்கும் இருந்தார். வயதானதே தெரியாத ஆறு மாதத்துப் பறங்கிக்காய் கணக்கில் இருந்தார்.

இந்த உண்மை தெரியாதபடி ஒரு சமயம், "நம்ம ஐயாவுக்குக் குழந்தைங்க எத்தினியோ?" என்று கேட்டு விட்டார் மருதங்கொல்லை திருவாதிரைப் பிள்ளை.

பெரிய பிளாஸ்டிக் கிலுகிலுப்பையை முரட்டுத்தனமாகக் குலுக்கினால் 'கல் கல்' என்று ஓசை வருமே அதைப் போலச் சிரித்தார் கோபு.

"இன்னும் அந்தப் பாக்கியம் ஐயாவுக்கு ஏற்படலியே!" என்று இரண்டு கைகளையும் விரித்தபடி சதிர் ஆடிக் கொண்டே சொன்னார் அவர்.

திருவாதிரைப் பிள்ளை வெறும் அப்பாவிப் பார்வை பார்த்தார்.

"எந்தப் பாக்கியம்?"

"எந்தப் பாக்கியம்? புத்திரபாக்கியம் பாக்கலை, அதானே?"

"ஹெஹ்ஹே! அதான் இல்லேன்னேன். அதுக்கும் ஆதாரமா யிருக்கிற பாக்கியம். எது? புரியுதா?"

"ஆம் ஆம்.... இப்பப் புரியுது, புரியுது. என்னமோ எல்லாம் 'அவன்' விளையாட்டு. ஒன்னேக் குடுக்கறான்; ஒன்னேக் கெடயாது போன்னிடறான். 'அவன்' சங்கதி ஆருக்குப் புரியுது?" என்று இரண்டு கைகளையும் உயரே தூக்கிக் காட்டிப் பேசினார் திருவாதிரைப் பிள்ளை.

"ஓய், பிள்ளைவாள்!"

"ஐயா!"

"எனக்கு ரொம்ப வருத்தமா இருக்கு!"

"இருக்காதா பின்னே?"

"அதுக்கு வருத்தமில்லேபிள்ளைவாள்! உம்மைப் பார்த்துத்தான்."

"ஏன், என்ன சங்கதி?"

"ஆண்டவன் உமக்கு அளவு இல்லாமலே குடுத்திருக்கான். எது? சொத்துச் சுதந்திரத்தைச் சொல்றேன். ஆனால் இவ்வளவு அப்பாவியா இருக்கிறேன்னுதான் வருத்தப்படறேன்!" என்று ஓலைக் கிலுகிலுப்பையைக் குலுக்குவது போலச் சிரித்துவிட்டு, சுற்றி நின்ற நண்பர்களை மேதாவித்தனமாகப் பார்த்தார்.

அவர்கள் கோபுவை வெறுமே பார்த்துக் கொண்டு நின்றார்கள். திருவாதிரைப்பிள்ளை சரியான அப்பாவியாக இருக்கலாம். ஆனால் அவர் முகத்துக்கு எதிரே இப்படி யாரும் பேசத் துணிய மாட்டார்கள். மருதங்கொல்லையில் மட்டுமல்ல; அந்த வட்டாரத்துக்கே அவர் ஒரு முடிசூடாத மன்னர். பிள்ளைவாள் திண்ணையில் இருக்கிறார் என்றால் தெரு முனையிலேயே கால் செருப்பைக் கழற்றிக் கையில் எடுத்துக் கொண்டு ஒடுக்கமாகப் போகிற காலம் ஒன்று இருந்தது. அப்படி எட்டுக் கண் விட்டெறிகிற குடும்பத்தில் வந்தவர். அப்புறம் 'எலெக்ஷன்' என்று ஒன்று வந்தது. எல்லா மரியாதையும் காற்றுப் பறந்து போய் விட்டது. கும்பிடத் தகாத பயல்களுக்கெல்லாம் இவரே கையெடுத்துக் கும்பிடும் அலங்கோலம் வந்து விட்டது. ஊரிலே ஒரு வம்பு வழக்கு என்றால் அவர் பஞ்சாயம் செய்து வைக்கிறதெல்லாம் போய் அவரே இப்போது எடுத்ததற்கெல்லாம் பட்டணத்துக்கு வந்து மேலிடத்துத் தயவுகளை எதிர்பார்க்கிற காலம் ஆகி விட்டது. அதற்கு இந்தக் கோபு போன்றவர்கள் மனம் கோணாதபடி நடந்து கொள்ள வேண்டிய கட்டாயம் வந்து விட்டது.

"நம்ம கோபுதானே, பேசிறும் பேசிட்டுப் போவுது. அதாலே எத்தினி காரியம் ஆக வேண்டியிருக்கு!" என்று அவர் தம்மோடு வந்தவர்களுக்குச் சமாதானம் சொல்லிக் கொள்ளலாம். பதிலுக்கு காரியமெல்லாம் தீரப் போகுமே! இப்படியே நாளாவட்டத்தில் உணர்ச்சி மரத்துப் போன பிள்ளைவாள் இப்போது கோபு வருத்தப்பட நேர்ந்ததற்காகக் கவலைப்பட்டார்.

"வருத்தமனதும் அசந்து போயிட்டார், பிள்ளைவாள்! இப்படியிருந்தா இந்தக் காலத்துக்குக் கட்டி வருமா? சும்மா வெட்டு ஒன்னு, துண்டு ரெண்டுன்னு இருந்தால்ல பிள்ளைவாள்கிட்டே ஓர் அத்து இருக்கும்!" என்று மறுபடியும் பொறுக்காமல் சிரிப்புச் சிரித்து விட்டு, பிள்ளைவாள் தோளிலே தோழமையோடு கையைப் போட்டார் கோபு.

அந்தக் கையைத் தள்ள முடியாமல் பிள்ளைவாள் நெளிந்து கொண்டார்.

"புரியல்லியா உங்களுக்கு? 'அடி' என்கிறதுக்கு அவரே காணும்; புள்ளே எத்தனெங்கற கதைதான் நீங்க பேசற கதை."

"அப்படியா?"

"க்கும். இப்பத்தான் பிள்ளைவாளுக்குப் புரிஞ்சுது."

"பண்ணிக்கல்லேன்னு — கல்யாணம் ஆகல்லேன்னு அர்த்தமா, ஆனது தவறிப் போச்சுன்னு அர்த்தமா? விளங்கலியே!"

"அதைப் பத்தியெல்லாம் நினைக்கிறதுக்கே நேரமில்லேன்னு அர்த்தம். விளங்கித்தா இப்ப?" என்று பிள்ளைவாளைச் செல்லமாகத் தள்ளி விட்டுப் பக பகவென்று சிரித்தார் கோபு.

அப்பாவி




பிள்ளைவாள் அந்தத் தள்ளலுக்கு இலேசாக அசைந்து கொடுத்து விட்டு, ''அது தெரியாதே. நம்பளுக்கு இது வரையிலே. அப்படியா சங்கதி? அதானே பார்த்தேன்!'' என்று நிமிர்ந்து கொண்டார்.

திருவாதிரைப் பிள்ளைக்கு இரண்டு சம்சாரம். தடைச் சட்டம் வருவதற்கு முந்தி ஒன்று; சட்டம் வந்ததற்கு அப்புறம் ஒன்று. அப்பாவித்தனத்துக்குச் சில அநுகூலங்கள் உண்டு. அதற்குச் சட்டமே சம்மதித்து வந்துவிடும். அப்புறம் யார் சம்மதித்தால் என்ன, சம்மதிக்காமல் போனால் என்ன?

ஆற்றுப் பாசனமாகவும் புன்செய்யாகவும் அறுநூறு வேலி நிலம் என்றால் லேசுக்கிரையா? அதை ஆண்டு அநுபவிக்க, அப்பன் பெயர் சொல்லி அரசாள ஆண் வாரிசு ஒன்று வேண்டாமா? இருதாரத் தடைச் சட்டம் வருவதற்கு இரண்டு மாதங்களுக்கு முந்தியே இளைய தாரத்தைக் கட்டிக் கொண்டு விட்ட தாகத் திட்டம் செய்து விட்டார்கள். முதல் சம்சாரத்துக்கு மூன்று பெண்கள். இரண்டாம் சம்சாரத்துக்கு இரண்டும் பெண்கள்தான். இப்போது பதினொரு வருஷங்கள் கழித்துப் பிறக்கப் போகிற குழந்தை ஆண் மகவாகப் பிறக்கவேண்டும் என்று அவர் பணத்தைத் தண்ணீராக வாரி இறைத்துக் கொண்டிருந்தார். இதைப் பார்த்து இரண்டாவது சம்சாரத்துக்கு ஒரே எரிச்சல்; கோபம். காரணம், மூத்தவளுக்குத்தான் இத்தனை நாட்கள் இடை வெளிவிட்டு மசக்கை கண்டிருந்தது. லேடி டாக்டர் மிஸஸ் வில்லியம்ஸ் நாலு மாதமாகி விட்டது என்று உறுதி சொல்லி விட்டாள்.

திருப்பதிப் பெருமாளுக்குக் கல்யாண உற்சவம் பண்ணி வைக்கவும், போக்குவரத்துக்கும் பஸ்கள் ஏற்பாடுகள் செய்யவும் கோபுவின் உதவியை நாடித்தான் அவர் பட்டணத்துக்கு வந்திருந்தார்.

மருதங்கொல்லைப் பிள்ளைவாள் என்றால் மற்றவர்களுக்கு ஒரு மலைப்பு உண்டு. பட்டணத்தில் அவ்வளவு தூரம் அவர் பெயர் பத்திரிகைகள் வாயிலாகப் பிரபலமாகி யிருந்தது. உப்புச் சத்தியாக்கிரக நாட்களில் தடை உத்தரவை மீறி, தொண்டர்களுக்குச் சாப்பாடு போட்ட பெரிய தியாகி அவர். தடையுத்தரவு என்றால் என்ன என்றும் அவருக்குத் தெரியாது; சாப்பாடு போடுவது குற்றம் என்பதும் அதற்காகக் கைது செய்து விடுவார்கள் என்பதும் அவருக்கு அப்போது தெரியாது. சிறைச்சாலைக்குள் கொண்டு போய் அவரைத் தனியே விட்டதும் அவர் தேம்பித் தேம்பி அழுதார். அத்தனை அப்பாவி, பாவம். இப்பொழுது கேட்டால் அழுததாக ஒப்புக் கொள்வார். அப்புறம் கொஞ்ச நாளிலேயே அவருக்கு இதன் மகிமை புரிந்து விட்டது. மாபெரும் தேசபக்தர் என்றும், மகத்தான தியாகி என்றும் தேசியப் பத்திரிகைகள் அவருடைய படத்தை வெளியிட்டுக் கொண்டாடின. மாநிலத்துப் பெருமக்களும் கொண்டாடினார்கள். இதற்கு இத்தனை பெருமை என்ன என்று அவருக்கு விடுதலையாகி வந்த



ஆர்வி



பிறகுகூட வெகுநாட்கள் வரையில் விளங்கவில்லை. அவருடைய எஸ்டேட் மானேஜர் ஒருவர் இருந்தார். அவர் செய்த வேலை இத்தனையும்.

"சிறைவாசம் எப்படி அண்ணாச்சி இருந்திச்சி?" என்று அந்தோணிபுரம் சந்தனத்தேவர் வந்து விசாரித்தார்.

"அதை ஏன் கேக்கறீங்க போங்க! ரொம்பக் கஷ்டமுங்க, விடுங்க!" என்றார் திருவாதிரைப் பிள்ளை.

"சிறைக்கு அஞ்சாத சிங்கம். சிறையிலே தோய்ந்த தங்கம்" என்றெல்லாம் ஊருக்கு ஊர் புகழ்ந்தார்கள். அந்தப் புகழ் பெருங்காயம் வைத்த செப்புப் போல் இன்றுவரையில் சிறிதும் மங்கவில்லை. மங்குகிற அறிகுறி தெரிந்தால் கோபு அவரைக் கிட்ட நெருங்க விடுவாரா? அவர் பேரைத்தான் நாலு பேருக்கு நடுவில் எடுப்பாரா?

மருதங்கொல்லைப் பிள்ளைவாளைப் பற்றிக் கோபுவுக்குத்தான் அதிகம் தெரியுமே தவிர, கோபுவைப் பற்றி அவருக்கு ஒன்றுமே தெரியாது. அது வரையில் புண்ணியம்தான். அவர் கிடக்கட்டும். மற்றவர்களுக்காவது ஏதாவது தெரியவேண்டுமே! யாருக்கும் எதுவுமே சரியாகத் தெரியாது என்பது தான் அதில் உள்ள சுவாரசியம்.

அவர் எங்கும் இருப்பார். எங்கும் எந்த நேரத்துக்கும் போவார். மிக மிகப் பிரபலமான கல்யாணமா? அவர் இல்லாவிட்டால் அது பருப்பு இல்லாத கல்யாணம் மாதிரிதான். பிரபலமான சாவு வீடா? வான்கோழி மாதிரி அவர் தலையும் வழுக்கை முகமும்தான் நடு வாசலிலே தெரியும். மகாநாடா? மேடைப் பிரமுகர்களுக்கான பெரிய பாட்ஜ் ஒன்று அவருடைய கதர்ச் சட்டையிலே தொங்கும். கிரிக்கெட் ஸ்டேடியமா? பெவிலியன் பிரமுகர்களோடு அளவளாவிவிட்டு, 'ஒன்' ஸ்டாண்டுக்கும் வந்து உரையாடிக் கொண்டிருக்கிற அழகே தனியழகு. சங்கீத விழாவா? வித்வான்களிடமே டிக்கட் கேட்கிற சங்கீத டிரஸ்டிகள் அவரை அன்போடு அணைத்து உட்கார வைக்கிற கௌரவம் இருக்கிறதே — 'ரொம்ப உசத்தி'. எக்ஸிபிஷன் கிரௌண்டா? மந்திரிகளின் புது வண்டியைக்கூட 'கேட்'டில் நிற்பவர்களுக்கு அடையாளம் தெரியாது. கோபுவின் பழைய வண்டிக்குத் தாராள அனுமதி கிடைத்துவிடும். அப்புறம் அவர் போய் 'இன்னார் வண்டி' என்று சொல்லி உள்ளே விடும்படி ஆகிவிடும். இப்படி எந்த எந்த இடத்துக்கு யார் யார் முக்கியமோ, எது எது அவசியமோ அதெல்லாம் அவருக்குத் தெரியும். அவர்களுக்கு நடுவிலே அவரைப் பார்த்துக்கொள்ளலாம். மற்றவர்கள் பார்க்க வேண்டும் என்பதில்லை. அவரே அவசியமானவர்களைப் பார்த்துக் கூப்பிட்டு, 'சுகமா, சௌக்கியமா?' என்ற தோரணையில் கையைத் தூக்கி 'விஷ்' பண்ணுவார்.

யாகப் கேட்டார்: "யாரு சாரு அவுரு?"

மாருதி ராவ் சொன்னார்: "அவுரு தாம்பா நாரத மகரிஷி! இந்திரன் சபைக்கும் போவாரு; இரணியன் சபைக்கும் வருவாரு. யாரும் அவரைத் தடுக்க மாட்டாங்க. ஏன்னு ரொம்ப நாளா அவுரு வந்து போயிண்டுதான் இருந்திண்டிருக்கிறாரு!"

"ரொம்போப் பெரிய மனுசனு?"

"அதுக்கும் மேலே."

"ஹாங்!"

இப்படித்தான் எல்லோருக்கும் ஒரு மயக்கம். திருவாதிரைப் பிள்ளைக்கும் இந்தப் பிரமிப்புத்தான். திருப்பதி உற்சவத்தைத் திருப்தியாக நிறைவேற்றி வைக்கக் கோபுவைத் தவிர வேறு யாராலே முடியும்? விடியற்காலையில் ஐந்து மணிக்கு அவர் கோபு வீட்டு வாசலில் வந்து இறங்கினார். கோபு அந்த நேரத்திலேதான் தம் பழைய வண்டியை எடுத்துக் கொண்டு புறப்படுவதற்கு இருந்தார்.

"யாரு பிள்ளைவாளா?"

"ஆமாங்க."

"ஊரிலிருந்தா நேரே?"

"ஆமாங்க."

"இப்பத்தான் வண்டி வந்தது போலிருக்கு. வெளியிலே புறப்பட்டுக் கிட்டிருக்கேன். நீங்களும் வர்றீங்களா? இல்லே, குளிச்சு முழுகிப்புட்டு, காப்பி சாப்பிட்டுட்டு வந்துடறீங்களா?"

"எப்படிச் சொன்னாலும் செய்யறேன்...!"

"அப்ப ஏறுங்க வண்டியிலே. போற வழியிலே உங்களை ஹோமரைலன் கார்டனிலே விட்டுப்புட்டுப் போறேன். நல்ல காட்டேஜா நாராயண ராவைக் கொடுக்கச் சொல்றேன். ஏறுங்க சட்டுனு..."

"நாலு மணி கழிச்சு வந்திருந்தா ஆளைப் பார்த்திருக்க முடியாது இல்லீங்களா?"

"நாலு மணியா? ரெண்டு செகண்டு ஆயிருந்தா ஐயாவைப் பார்த்திருக்க முடியாது. அந்த நிமிஷங்கள் ஆயிருந்தா மினிஸ்டர் வீட்டிலே இருந்திருப்பேன். ஆளைப் பார்த்ததே நல்ல சகுனம்னு வெச்சுக்குங்களேன். வந்த காரியம் பாதி ஆயிட்டாப்பலேதான்!"

'ஹோமரைலன் கார்டன்' நாராயண ராவ் அந்த நேரத்தில் அங்கே இருப்பாரா? வீட்டிலே பூஜையில் இருப்பதாக அங்கிருந்த இளைஞன் அலட்சியமாகப் பதில் சொன்னான். காட்டேஜ் ஒன்றும் காலியாக இல்லை என்றும் கண்டித்துச் சொல்லிவிட்டான்.

"ஹி ஹி..... நீ யாரோ புதிசு போலிருக்கு. அது சரி, கொஞ்சம் டெலிபோன் செய்யலாமா?"

"அதோ இருக்கு, போய்ப் பண்ணிக் கோங்க!"

கோபு, 'டர் டர்' என்று தட்டைச் சுற்றினார்.

"ஹலோ! யாரு சந்தானமா? மாணிக்கமா? இது மினிஸ்டர் வீடுதானே? பின்னே யாரு பேசறது? நான்தான் பேசறேன். ஹஹ...ஹ... நாதமுனியா? இப்பத்தான் புரிஞ்சுதா? — வேறு யாரு இந்த நேரத்திலே கூப்பிடப் போறாங்க? என்ன? ஐயா இன்னும் எழுந்திருக்கலியா? நம்ம சிநேகிதரு ஒருத்தரு வந்திருக்காரு. ஹோமரைலன்லேயிருந்து பேசறேன். நாராயண ராவ் இல்லியாம். அதனாலே 'டிலே' ஆவுது. இன்னும் ஒரு அஞ்சு நிமிஷத்திலே வர்றேன். ஆமாம், அதைச் சொல்லத்தான்..... அப்புறம் என்ன ஆச்சு? உன் விஷயம்தான் கேட்கிறேன். சாங்ஷன் ஆயிப்போச்சா? அது தான் சொன்னேனே... அவசரப்படாதேடான்னு..." குலுகுலுப்பைச் சிரிப்போடு கோபு டெலிபோன் ரிஸீவரைக் கீழே வைத்தார்.

இளைஞனுக்கு இப்போது யோசனையாகப் போய்விட்டது அவன் முகத்திலே தெரிந்தது.

"நாராயண ராவுக்கு டெலிபோன் போடட்டுமா?" என்று சிரித்த முகத்தைச் சட்டென்று 'சீரியஸ்'ஸாக மாற்றிக் கொண்டு கேட்டார் கோபு.

"ஒரு காட்டேஜ் இருக்குது சார்! ஆறு கிடோரியா இருக்குது சார்! தேவலாமா?"

"ஏதோ ஒன்னு இப்பக் கொடு. அப்புறம் நல்லதா காலியானதும் மாத்திப்புட்டாப் போச்சு!"

காலை ஐந்தே கால் மணிக்கெல்லாம் சுப்ரபாதம் சொல்லப் போகிறவர் மாதிரி கோபு குறிப்பிட்ட மந்திரியின் வீட்டுக்குப் போய்விட்டார்.

"யாருப்பா, டிராயிங் ரூமிலே பேச்சுக்குரல்?" என்று பியூன் நாதமுனியிடம் விசாரித்தார் மந்திரி.

நாதமுனி வாயைத் திறப்பதற்குள், வான்கோழி வந்தது போல், "ஹிஹி... ஹி...வேறே யார் இந்த நேரத்துக்கு அதுவும் இவ்விடத்துக்குத் துணிந்து வரப்போறான்? எல்லாம் இந்தக் கோபு தான்!" என்று குலுகுலுப்பைச் சிரிப்போடு எதிரே போய் நின்றார் கோபு.

"நீயா? உன் முகத்திலேயா முழிச்சேன் இன்னிக்கு? என்ன ஆகப் போகுதோ, பார்க்கலாம்!"

"அதெல்லாம் ஒன்றும் ஆகாது. கண்ணாடியைப் பார்க்கிறாப் போல இந்தக் கோபுவைப் பாக்கறது! வேறு மாறும் பாருங்களேன்."

"அது சரி, என்னது கையிலே?"

"புரியல்லியா? நினைச்சேன். உங்களுக்கு எங்கே நினைப்பு இருக்கப்போறது? எங்கே, சொல்லுங்க பார்ப்போம்!" என்று வான்கோழி ஆடுவது போலக் கையைப் பின்னால் மறைத்துக் கொண்டார் கோபு.

"என்னப்பா வெளயாட்டு, காலை நேரத்திலே?"

"உங்களுக்குச் சொல்லத் தெரியலே; வெளயாட்டுங்கிறீங்க. இதே விஷயத்துக்கு ஐயாகிட்டே போங்க; சட்டுனு சொல்லிப்புடுவார். நீங்க சிலதிலே அலர்ட். அவர் சிலதிலே என்ன பலதிலேயும் அலர்ட்..."

"இதை ஏன் இப்ப..."

"இதான் உங்களுக்கு வேண்டியது இப்ப... உங்க பிரான்டு டூத்-பேஸ்ட்! பாத்-ரூமுக்குள்ளே போய்ப் பாத்தீங்களானாத் தெரியும். உங்க டூத் பேஸ்ட்டை நேத்துத்தானே காலியாச்சுன்னு தூக்கிப் போட்டீங்க. உங்களுக்கு நினைப்பு இருக்காது. எனக்கா தெரியாது? டூர் லேருந்து வந்ததுமே ஓஷியானிக் பார்மஸியில் ஒரு பேஸ்ட் வாங்கி எடுத்திண்டுதானே வீட்டுக்குப் போனேன்! இதனாலே ராத்திரி சாப்பாடு ஹோகயா. லேக் பார்மஸிக்கும் போனால் உங்க பேஸ்ட் ஸ்டாக் இல்லே. அப்புறம் ஸ்பென்ஸருக்குப் போன் பண்ணி ஒரு ஸ்பெஷல் பாய் அனுப்பி வாங்கின்னு வரச்சொல்லி எடுத்திண்டு போனது ஒரு பெரிய கதையாப் போச்சு. வீட்டுக்குப் போனதும் நடேஷ் போன் அடிச்சான். நேத்திக்கு நீங்க கொடுத்த ஸ்டேட்

மெண்ட் ஒரு பரபரப்பை உண்டாக்கிப்பிட்டது போலிருக்கு."

"அப்படியா?"

"உம். பின்னே? ஐயா கூப்பிட்டுக் கேட்டாராம் அவனே. கோபுவை விசாரிச்சாத் தெரியும்னு அவன் எனக்கு போன் அடிச்சிருக்கான். ஆக ஒரே டென்ஷன்!"

மந்திரி, "ம்....ம்..." என்று மந்தகாசம் புரிந்தபடி, "காப்பி சாப்பிட்டுட்டுப் போயேன்!" என்கிறார்.

"இல்லை.. ஸிக்ஸ் தர்ட்டிக்கெல்லாம் டில்லி பிளேன். அதுக்குள்ளே சாச்சாவைப் பார்க்கப் போகணும். காப்பி யெல்லாம் அங்கேதான்!"

"பெரிய ஆளப்பா நீ! ஏதேதோ வேலே வெச்சிண்டே இருக்கே... சரி,நடத்து."

"பின்னே என்ன பண்ணச் சொல்றீங்க? நடேஷ் போன் பண்ணினதை உங்ககிட்டே வந்து சொன்னாத்தானே தெரியும்? இதையெல்லாம் போனிலே சொல்லலாமா? அதுக்குத்தான் போது விடிஞ்சதும் ஓடி வந்தேன்! எனக்கு என்ன பெண்டாட்டியா, புள்ளையா? ஏதோ நம்மைச் சேர்ந்தவங்களுக்கு நம்மாலான ஒத்தாசை முடிஞ்சாச் செய்ய வேண்டியது. இல்லியா முடியாதுன்னு போக வேண்டியது. ஆரு எங்கே விடறாங்க! திருவாதிரைப் பின்னே வந்து திருப்பதிக்கு ஸ்பெஷல் பஸ், ஸ்பெஷல் ஏற்பாடெல்லாம் பண்ணணும்னு காலமேயே வந்து நிக்கிறார். இதுக்கெல்லாம் மினிஸ்டர் லெவல்லே காரியம் ஆகணும்னு நெனைச்சா முடியுமா? சொன்னாலும் புரியுமா அவருக்கு? தப்பா நினைக்கக்கு வார். டி.டி.டி. போய், டிரான்ஸ் போர்ட் டிபார்ட்மெண்ட் போய் இதையெல்லாம் கவனிக்கணும். அப்புறம் திருச்சி ஷஷ்டியப்த சாந்தி வேறே ஏகமா ரகளைப்படறாப்பலே இருக்கு."

"ஆமாமாம்..."

"டூவெண்டி லாக்ஸ் எஸ்டிமேட்டாம். ஸ்பெஷல் டிரெயின்ஸ், பஸ்கள், பிளேன் எல்லாம் சார்ட்டர் பண்ணியிருக்காங்க போலிருக்கு. நீங்க எப்ப, எதிலே போறாப்பலே?"

"நீயும் வர்றியா?"

"வந்தா உங்களோட வரணும். நான் தனியா வந்தா நம்மை யார் கவனிப்பாங்க?"

இதற்குப் பதில் ஒன்றும் வராததைக் கவனித்த கோபு, "சரி, நான் வரேன்!" என்று சொல்லிவிட்டு வெளியில் வருவதற்கும், ஷஷ்டியப்தபூர்த்தி கமிட்டி செகரடரி வண்டியை விட்டு இறங்கி வருவதற்கும் சரியாக இருந்தது. கோபுவைப் பார்த்திருக்கிறாரே தவிர, அவருக்குச் சரியாகக் கோபுவைத் தெரியாது. அதனால் என்ன?

"நமஸ்காரம் ஸார்! ஏற்பாடெல்லாம் பிரமாதமா நடக்கிறாப்பலே இருக்கு. நீங்களே எல்லாம் பர்சனலாக் கவனிக்கறாப்பலே இருக்கு. இப்பத்தான் உன்னே பேசிண்டிருந்தோம். ஆனா எங்களுக்கெல்லாம் இன்னும் இன்விடேஷனே காணுமே, எங்கே மறந்துடுவீங்களோன்னு பார்த்தேன். நாங்கள்ளாம் வரவேண்டாம்னு பரிமளிக்குமா? என்னப்பா அருணாசலம்! நீ வந்து பிரைவேட் செகரடரியா இருந்து என்ன பிரயோசனம்! எங்களுக்கெல்லாம் ஸீட் ரிசர்வ் பண்ணணும்னு சொல்லி வைக்க வேண்டாமா?"

"அதுக்கென்ன, இப்பத்தானே ஒவ்வொருத்தராப் பார்த்திட்டு வந்துக்கிட்டே இருக்கோம். எப்பா அருணாசலம்! ஐயா பேரைக் குறிச்சுக்கப்பா. நீபாட்டுலே மறதியா வுட்டுடப் போறே! இப்பவே இன்விடேஷனுக்கும் ஸீட்டுக்கும் எழுதி வெச்சுக்க. அப்ப ஸாரியா? வந்து சேர்ந்துடுங்க... பெரிய காரியத்தை எடுத்துப்போட்டுக்கிட்டோம். சரியா நடத்தாகணுமேன்னு உறக்கம் வரமாட்டேங்குது..."

சுறுசுறுப்பைச் சிரிப்பு பெரிதாக விடைபெற்றுக் கொண்டது. செகரடரி வண்டியை ஓட்டி வந்த டிரைவர் கீழே இறங்கி நின்று கோபுவுக்கு ஒரு கும்பிடு போட்டான். வேலை இல்லாதபோது எங்கேயாவது சிபாரிசு செய்யும்படி ஏழெட்டுத் தடவை கோபுவைத் தேடி நடந்திருக்கிறான் அவன். இதற்குப் பதில் வண்டி வைத்திருப்பவர்களைப் பார்த்து இவ்வளவு நடை நடந்திருந்தால்கூட ஏதாவது ஓர் இடம் அவனுக்கு அகப்பட்டிருக்கும்.

"நாளைக்கு மத்தியானம் வா. ரூமுக்கெல்லாம் வந்துடு. காலையிலே எழுந்துண்டே வந்துடேன். ஒண்ணும் வேண்டாம். மவுண்ட் ரோடு பிரண்ட்ஸ் ஷாப் தெரியுமோல்லியோ? அங்கே ஆறு ஆறரைக்கெல்லாம் வந்துடு. நான் இருப்பேன். அந்தப் பார்ட்டியும் இருப்பான். நேரேயே சொல்லி ஏற்பாடு பண்ணிப் புடறேன்!" இப்படி எத்தனையோ நடை நடந்து அலுத்துப் போன கூலி தான் அவன்.

"கடைசியிலே இங்கேயே வந்திட்டியா? நமக்கு வேண்டிய இடம். ஒழுங்கா இரு... அருணாசலத்துக்கிட்டே ஸீட் ரிசர்வேஷனுக்கு ஞாபகப்படுத்து. நான் சொன்னேன்னு சொல்லி!"

கோபு புறப்பட்டுப் போய் விட்டார்.

ஹோனரைஸ் கார்டனிலே மருதக்கொல்லைப் பிள்ளைவாள் ஒவ்வொரு கணமும் கோபுவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். ஊரிலிருந்து மறுநாள் போக மறுநாள் எல்லாரும் வந்துவிடுவார்கள். அதற்குள் ஸ்பெஷல் பஸ் ஏற்பாடாக வேண்டும். தேவஸ்தான பேஷ்காரிடம் சொல்லி, வேண்டிய சௌகரியங்களுக்குச் சொல்லி வைக்க வேண்டும். எல்லாவற்றுக்கும் மருதக்கொல்லைப் பிள்ளைவாள் கோபுவைத் தான் மலையாக நம்பியிருந்தார். ஆனால் இந்த மனிதனைக் காணுமே! டெலிபோனிலும் அகப்படவில்லையே!



"உங்க படத்திலே நடிக்க எனக்கு ஒரு 'சான்ஸ்' கொடுங்க!"

"நல்ல வயதான பாத்திரம் எங்களுக்குத் தேவைப் படும்போது உங்களைக் கூப்பிடுறேன்!"

"எனக்கு அப்படி வயசா ஆயிடுத்து?"

"அதில்லே. எங்களுக்குத் தேவைப்படும் நேரம் வரும்போது உங்களுக்கு வயதாகிவிடும்!"

கடைசியில் ஒரு மணிக்குத்தான் கோபுவின் சுறுசுறுப்பைக் குரல் டெலிபோனில் ஒலித்தது.

"என்ன ஐயா, சிக்கிறீங்க? எத்தினி வாட்டி ஐயா போன் பண்றது? என்னைத் தனியாவுட்டுப்புட்டுப் போயிட்டீங்களே. இன்னும் எத்தினி வேலே கெடக்குது!"

"அவசரப்படாதீங்க, பிள்ளைவாள்! வேலே நிறைய இருக்குன்னு நான் உங்களே வந்து பார்த்திண்டிருந்தா நடந்திடுமா? இப்பத்தான் உங்க வேலேயாகப் போயிட்டு வந்து ஒரு நிமிஷம்கூட ஆகல்லே. இன்னும் சாப்பிடக்கூட இல்லே. பஸ்ஸுக்குச் சொல்லியாச்சு. தேவஸ்தான ஆபீஸ் மானேஜருக்கு இன்பர்மேஷன் கொடுத்திட்டேன். என்னே எதிர்பார்க்காதீங்க. காரவேல் கான்சல் ஆயிட்டுதாம். ஈவினிங் பிளேனில் ஒருத்தரை டில்லிக்கு அனுப்பியாகணும். ஏர் போர்ட்டுக்குப் போறேன்.தேடாதீங்க."

"அப்புறம்....?"

"போறுங்க; அவசரப் படேல்னு வல்லபாய் படேலே சொல்லியிருக்காரே...கெக்கெக் கேகே கலகல...நேரே ஒரு பி. டி. புடிச்சிக்குங்க. டிரான்ஸ் போர்ட் ஹவுஸுக்குப் போங்க. பஸ்ட் ப்ளோர்லே டைரக்டர் இருப்

பார். வேறே யாரையும் பார்க்க வேண்டாம். அவர் இல்லேன்னு பி. ஆர். ஓ. இருப்பார். நான் சொன்னேன்னு சொல்லி, ஒரு பாரம் வாங்கி, கையெழுத்துப் போட்டுக் கொடுத்திட்டு வந்திடுங்க. மற்றதை நான் பார்த்துக்கறேன். பணம் அட்வான்ஸாகக் கட்டணும்னு அங்கேயே கட்டிப்புடுங்க. பணம் இருக்குல்லே? அப்ப சரி. இல்லேன்னு சொல்லுங்க. கூச்சப்படாதீங்க! இருந்தாக் கட்டிப்பிட்டு, நேரே ராயப்பேட்டை வந்து தேவஸ்தானம் ஆபீஸ் தெரியுமா? சரி; அங்கே போங்க. மானேஜர் இருப்பார். நான் சொல்லி வச்சிருக்கேன். அங்கேயும் ஒரு பாரம் வாங்கி, என்ன தேதி, என்ன விஷயம்னு எழுதிக் கொடுத்து ஒரு கையெழுத்தையும் போட்டுக் கொடுத்துப்புட்டு வந்துடுங்க. மத்ததை நான் பாத்துக்கிறேன். எங்கே போனாலும் சாயங்காலம் டாண்ணு மணி ஆறுக்கெல்லாம் நான் பிரண்ட்ஸ் ஸைப் புக்கு வந்துடுவேன். உங்களுக்குத்தான் தெரியுமே எடம்! ரெண்டு மூணு தடவை வந்திருக்கீங்களே... அங்கே வந்துடுங்க. என்ன செய்திருக்கீங்கன்னு எனக்குத் தெரிய வேண்டாமா? அதுக்குத்தான். அப்படியே செஞ்சுப்புடுறீங்களா? எல்லாம் ஞாபகம் இருக்கா? போனே வெச்சிடட்டுமா?''

திருவாதிரைப் பிள்ளைக்கு இப்பொழுதுதான் நல்ல மூச்சு வந்தது. கபாலி காலனியில் தங்கியிருக்கும் நண்பர் ஒருவருக்கு போன் பண்ணி அவருடைய கார் வேண்டுமென்று கேட்டார். அடுத்த கால் மணி நேரத்துக்குள் புது அம்பாஸடர் வண்டி ஒன்று வந்து விட்டது.

''மருதங்கொல்லே துரை வண்டிக்கு போன் பண்ணியிருந்தாங்களாம். கொண்டாந்திருக்கேன்!''

''சரி, சரி; இரு. வண்டி திரும்ப எப்ப வரணுமாம்?''

''வேலையெல்லாம் முடிஞ்சிட்டு எப்ப அனுப்பறீங்களோ அப்ப வந்தால் போதும்னிட்டாங்க மொதலியாரு.''

''சாப்புட்டியா?''

''ஆச்சுங்க.''

''இல்லேன்னு இங்கேயே சாப்பிடு!''

''இல்லே; வாண்டாங்க!''

திருவாதிரைப் பிள்ளை டிரான்ஸ் போர்ட் ஆபீஸுக்குப் போனார். டைரக்டரைப் பார்க்கப் போனபோது பொதுஜனத் தொடர்பு அதிகாரியைப் பார்க்கும்படி அவர் உள்ளிருந்தபடியே சொல்லியனுப்பி விட்டார்.

''கோபுவா? எந்தக் கோபு? ஆறு உங்க பேரைக் கேள்விப்பட்டிருக்கோம். எதுக்கும் பார்க்கிறேன்!'' என்று பாரத்தில் கையெழுத்து வாங்கிக் கொண்டார் பி. ஆர். ஓ.

திருப்பதி தேவஸ்தானம் ஆபீஸிலும் இதே கதைதான். யாராக இருந்தால் என்ன? அங்கேயும் கையெழுத்து வாங்கிக் கொண்டு ஒரு நம்பர் கொடுத்தார்கள்.

ஆறு மணிக்கெல்லாம் திருவாதிரைப் பிள்ளை லைப்ரரியில் உட்கார்ந்து கொண்டிருந்த கோபுவைப் பார்க்க வந்தார். இவ்வளவு பிரபலமான மனிதர் இங்கே வந்திருக்கிறாரே என்று மற்றக் கைகள் பிரமிக்க, கோபு அலட்சியமாகத் தலையை ஆட்டினார்; சிரித்தார்.



''அத்திம்பேரை இனிமே குறும்புக் காரர்னு சொன்னே, உனக்குப் பட்டாசே வாங்கித் தரமாட்டேன்!''

''வாங்க... நான் சொன்னபடி செஞ்சுப்புட்டீங்களா? போன் பண்ணினேன். என்னைத் தெரியாதுன்னு சொல்லிப்புட்டானும். அப்புறம் ஒரு போன் விட்டேன் போனிலேயே!'' என்றார் கோபு.

''கிடைக்கப்புடுமா இல்லியா?''

''ஏழாம் தேதி வரையிலே புக் ஆயிடுத்தாம். டைரக்டரைப் பார்த்தால்தான் தெரியுமாம். கொடுக்கல் வேணும்னு யார் விடறு?''

மறுநாள் முழுதும் திருவாதிரைப் பிள்ளையினால் கோபுவைக் கண்டுபிடிக்கவே முடியவில்லை. போனை எடுத்துக் கொண்டு மாற்றி மாற்றி போன் செய்து கொண்டிருந்தார். ஒரு தகவலும் சரியாகக் கிடைக்கவில்லை.

ஹோட்டல் ஹொரைஸன் வாசலில் இரவு மூன்று மணிக்கெல்லாம் ஸ்பெஷல் பஸ் வந்து நின்றது.

கோபுவிடமிருந்து ஒரு தகவலும் வரவில்லையே என்று கவலையாக இருந்த பிள்ளைவாளுக்கு நன்றியுணர்ச்சி பொங்கியது. பஸ் வந்துவிட்ட செய்தியை உடனே தெரிவிக்காவிட்டால் நன்றாக இருக்குமா என்று கோபுவுக்கு போன் பண்ணினார்.

''யாரு பிள்ளைவாளா? மன்னிக்கணும். நேத்துப் பூரா டிரான்ஸ்போர்ட் டைரக்டரைப் பார்க்க முடியவில்லே. எப்படியும் இருந்தாக் கொடுத்து அனுப்பிச்சுடுவாங்க...''

''அனுப்பிச்சுட்டாங்க துரை, பஸ் வந்து வாசல்லே காத்துக்கிட்டு நிக்குது. காலே வண்டியிலே ஊரிலேருந்து வர்ற வங்களை அழைக்கப் போகணும்!'' என்றார் பிள்ளைவாள்.

மறுமுனையில் சிரிப்பு பெரிதாக ஒலித்தது.

''நம்ம பேரைச் சொன்னு அவரு வேண்டாம்? எனக்குத் தெரியும். டைரக்டர் நமக்கு ரொம்ப வேண்டியவன். பி. ஆர். ஓ.வைப் புடிச்சி அன்னிக்கே ஓர் உலுக்கு உலுக்கிப்புட்டானு? பஸ் வந்திட்டுதே இல்லே?அப்ப நம்ம டேட்டி முடிஞ்சது. தேவஸ்தானம் பேஷ்கார் கிட்டே எல்லாம் சொல்லியிருக்கேன். நீங்க அங்கே போக வேண்டியதுதான். கல்யாண உற்சவம் அமர்க்களமா நடக்கப்போறது, பாருங்களேன்!''

''அது சரி, நீங்க போக வேண்டியது தான்னு என்னைச் சொன்னு உங்க கதை என்னு?''

''ஸாரி! திருச்சியிலே பார்த் டே ஸெலிபரேஷன்ஸ் இருக்கே. நம்பளை அவங்க விட்டாத்தானே? 'ஸீட்' ரிஸர்வ் பண்ணி வச்சிருக்கேன். வராமே இருந்துடப்படாதுன்னு போன் காலுக்கு மேலே போன் கால்.''

திருவாதிரைப் பிள்ளைக்கு வருத்தம் தான். ஆனால் திருப்பதியில் எல்லாம் சௌகரியமாக அமைந்து, மனத்துக்குத் திருப்தியாக முடிந்ததில் அவருக்குப் பரமானந்தம்.

''பேஷ்காரைப் பார்த்து அவருக்கு என்னோட நன்றியையும் கோபுவோட நன்றியையும் சொல்லிட்டுப் போகணுமே!'' என்று தனியாகத் தவித்தார் பிள்ளைவாள்.

பேஷ்கார் டில்லி போய் ஒரு வாரம் ஆகி விட்டதாம். வருவதற்கு இன்னும் ஒரு வாரமாவது ஆகுமாம். அப்படியானால் இந்த ஏற்பாடுகளையெல்லாம் கவனிக்கும்படி அவர் யாரிடமாவது உத்தரவிட்டுவிட்டுப் போயிருக்க வேண்டும். அவர் யாரிடம் சொன்னாரோ? கோபு பேஷ்காருக்குச் சொல்லியிருக்கிறாரே! நடக்காமலா இருந்து விடும்?

திருவாதிரைப் பிள்ளைக்கு நாலாயிரத்துக்கு மேல் செலவு. செலவைப் பற்றி அவர் கவலைப்படவில்லை. பிறக்கிற குழந்தை ஆணாகப் பிறக்க வேண்டுமே என்பது ஒன்றுதான் கவலை.

மருதங்கொல்லைக் கிட்டங்கித் தோட்டத்தில் உட்கார்ந்து அவர் மரக்கிளையிலிருந்த குரங்குகளைப் பார்த்துக்கொண்டிருந்தார். ஆண் குரங்குக்கும் பெண் குரங்கு பேன் பார்த்துக் கொண்டிருந்தது. மற்றொரு குரங்கு எதையோ கடித்துப் பார்த்துப் பல்லை இளித்துக்கொண்டிருந்தது. நடுவில் தலையைச் சொறிந்து விட்டுக் கொண்டது.

''எசமான்!'' என்று பின்னால் குரல் கேட்டது.

''யாருடா, முத்துவேலுவா?''

''ஆமாங்க எசமான்!''

''என்னடா சங்கதி?''

''நல்லபடியா முடிஞ்சு போச்சுங்க. கப் பிரசவமுங்க!''

பிள்ளைவாளுக்குத் திகைப்பு மூட்டியது. அடுத்த கேள்வியைக் கேட்கத் துணிவு பிறக்கவில்லை.


முத்துவேலு ரொம்பத் துணிச்சல்காரன்.

''மறுபடியும் பொம்பளைப் புள்ளே தான்னு சொல்லிட்டு ஒடியாரச் சொன்னாங்க சின்ன எசமானியம்மா!'' என்று ஓட்டம் பிடித்தான்.

திருவாதிரைப் பிள்ளை சிலையாக உட்கார்ந்திருந்தார். கண் கலங்கிப் போய் விட்டது. சின்னக் குரங்கு அவரைப் பார்த்துப் பல்லை இளித்தது.

மற்றதெல்லாம் சொன்னது மாதிரி கோபுவிடம் இதைப் பற்றி முன்னாலேயே சொல்லியிருந்தால் திருப்பதிப் பெருமாளைச் சும்மாவா விட்டு விடுவார்?


அய்யனர் சலவை சோப்பின்
அபரிமிதமான நுரைகள்
துணிகளை
வெண்மையாகவும்
தூய்மையாகவும்
அய்யனர்
IYANAR SOAP
அய்யனர்
சலவை செய்யும்
அய்யனர் சோப் ஒர்க்ஸ்
தூத்துக்குடி


GOPAL TOOTHPOWDER
கோபால் பல்பொடி
அஞ்சால்
ANJAL
Manufactured By:- S.P.S. JAYAM & Co.
VEL CHEMICAL WORKS......MADURAI
பல் வலி, பல் அரணை
வாய் நாற்றம், பல்லில் இரத்
தம் வடிதல் முதலிய பல்
வியாதிகளைக் குணப்படுத்தி
பல்களுக்கு வெண்மையும்
பலத்தையும் தருகிறது.
அலுப்பினால் உண்டாகும்
தலைவலி, ஜலதோஷம், தடுமல்,
காய்ச்சல், இருமல், கிரேகவலி,
நெஞ்சுவலி முதலியவைகளுக்கு
சிறந்த அலுப்பு மருந்து
தயாரிப்பவர்கள்:- எஸ்.பி.எஸ்.ஜெயம் & கோ 25, கீழநாப்பாளையத்தெரு, மதுரை.
MINERVA

வடலூர்ப் பெருவெளியிலே

பெ.ஸ்ரீ



பிரமசமாஜத்தை நிறுவிய ராஜாராம் மோகன்ராய் இந்து சமயப் பணிகளில் ஈடுபட்டதுடன், கிழக்கு மேற்குகளுக்கிடையே — முக்கியமாக இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்குமிடையே — நட்புறவை வளர்ப்பதற்காகவும் பாடுபட்டு வந்தார். அக்காலத்திலே, 1823ம் ஆண்டில், பிறந்தார் இராமலிங்க அடிகள், தமிழ் நாட்டில் சிதம்பரத்துக்கு அருகிலுள்ள ஒரு குக்கிராமத்திலே. இவரது பத்தாவது வயதில் ராஜாராம மோகனர் காலமாகி விட்டார்.

இராமலிங்க அடிகளின் இருபதாவது வயதில் (1843-ல்) வடக்கே கவி ரவீந்திரநாதரின் தந்தையான தேவேந்திரநாத தாகுர் பிரமசமாஜத் தலைவராகி, கடவுள்மீது அன்பு கொள்வதும் அவர் உவக்கும் பணிகளில் ஈடுபடுவதுமே கடவுள் வழிபாட்டின் சாரம் என்பதை வற்புறுத்தி வந்தார். அந்தக் காலத்துக்குள், இராமலிங்கருக்குச் சென்னை நகரின் தொடர்பு ஏற்பட்டிருந்தது. இவர் பிறந்த அடுத்த ஆண்டிலேயே இவரது குடும்பம் சென்னையை அடுத்த பொன்னேரியில் குடியேறி விட்டது. சென்னைக் கந்தகோட்டம் என்ற கந்தசாமி கோவில், பிஞ்சிலே பழுத்த இவர் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்து விட்டது; இவரால் பாடல் பெற்றும் இருக்கிறது.

குமாரப் பருவத்தில்தானே...தெய்வம் பரவல், பிற உயிர்க்கு இரங்கல், பெருங்குணம் பற்றல், பாடிப் பணிதல், பத்தி செய்திருத்தல் முதலிய நற்செய்கைகளில், ஆண்டவன் தம்மைச் செலுத்தியதாகத் தமது **சத்திய விண்ணப்பத்தில்** கூறியுள்ளார் இராமலிங்கர். ஐந்து வயது முதல் ஒன்பதாவது வயது வரை இவர் பள்ளிப் படிப்பில் கவனம் செலுத்தாமல் கந்தசாமி கோவிலில் பொழுதுபோக்கியவண்ணம் இருந்தார். திருவொற்றியூரில் உள்ள தியாகராயர் கோவிலிலும் பக்தி பண்ணிக் கொண்டிருந்தார். வைணவக் கொள்கைகள் கதைகளிலும் இவருக்கு இளமையிலேயே பழக்கம் உண்டு. சமய உணர்ச்சி போல் சமரச உணர்ச்சியும் இவர் வாழ்க்கையின் அடிப்படையை உறுதி பெறச் செய்துவிட்டது சென்னை நகரிலே.

வள்ளலாரும் கேசவசந்திரசேனரும்

பிரம சமாஜத் தலைவராகிவிட்ட கேசவ சந்திரசேனரின் புகழ் சென்னை மாகாணத்திலும் பரவியிருந்தது. அவர் பம்பாயிலும் சென்னையிலும் சொற்பொழிவுப் பயணங்கள் செய்து, பிரம சமாஜக் கிளைகளை அங்கங்கே நிறுவினார். சென்னைக் கிளை, வேத சமாஜம் என்ற பெயருடன் பிரம சமயப் பிரசாரம் செய்து வந்தது; சாதி ஒழிப்பு முதலான சீர்திருத்தக் கொள்கைகளையும் பரப்பி வந்தது. அப்போது இராமலிங்கர் வடலூரை அடுத்த கருங்குழியில் தங்கி யிருந்தார். கேசவ சந்திரசேனரின் கொள்கைகளையெல்லாம் இவர் தெற்கே தூரத்திலிருந்தே அறிந்திருந்தார் எனக் கருதலாம்.

தேவேந்திரநாத தாகுருக்கும் கேசவ சந்திரசேனருக்கும் கருத்து வேற்றுமைகள் ஏற்படவே, கேசவ சந்திரர் இந்திய பிரமசமாஜம் என்ற ஒரு புதிய சங்கத்தை 1866ல் தோற்றுவித்தார். அச்சங்கத்துக்குச் சென்னை உள்ளிட்ட இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும் ஆதரவு கிடைத்தது என்று தெரிய வருகிறது. அதற்குள் இராமலிங்க அடிகள் தமிழகத்தின் பல பகுதிகளுக்கும் யாத்திரை செய்து விட்டுப் பார்வதிபுரம் என்ற வடலூரில் நிலையாகக் குடியேறிவிட்டார்.

அந்த நாளில் பிரம சமாஜக் கிளை ஒன்று திருப்பாதிரிப்புலியூரில் ஸ்ரீதர நாயக்கர் என்பவரின் தலைமையில் தொண்டாற்றி வந்தது. அக்கிளைச் சங்கத்தின் உறுப்பினர்கள் கேசவ சந்திரரின் பிரம சமயக் கொள்கைகளைத் தீவிரமாகப் பரப்பி வந்தனர். அவர்கள் கேசவ சந்திரரின் பிரார்த்தனை முறை, தியான வழி, பக்தி கீர்த்தனங்களின் பாணி ஆகியவற்றைப் பின்பற்றியதுடன், சாதி ஒழிப்பு, விக்கிரக வழிபாட்டின் கண்டனம் முதலான கொள்கைகளையும் பரப்பி வந்தார்கள். அதேதிருப்பாதிரிப்புலியூரில் இராமலிங்கஅடிகளும் பேருரைகள் நிகழ்த்தித் தம் கொள்கைகளையும் நிலைநிறுத்த முயன்றார்.

விக்கிரக வழிபாடு குறித்து இராமலிங்கரின் தேர்ந்த கருத்துகளைப் பொதுமக்கள் தெளிவாக அறிந்து கொள்ள விரும்பினர். அதற்கு இணங்கிய அடிகள் பிரம சமயப் பிரசாரத்தில் முனைந்து நின்ற ஸ்ரீதரநாயக்கரின் முன்னிலையில் சமாஜத்தினருக்கும் பிறருக்கும் தமது மனப்பான்மையை இனிது புலப்படுத்தினார். அந்த நாளில் விக்கிரக வழிபாட்டைப் பிரம்மஞானத்தின் ஆரம்ப நிலையாக அடிகள் ஆதரித்துப் பேசினார் என்பதற்கு ஆதாரங்கள் உண்டு.

கேசவ சந்திரசேனரின் கொள்கைகளை இராமலிங்கர் அறிந்து கொண்டிருந்தார் என்ற கருத்துக்கு இவரது பாசுரங்களின் தொகுப்பான திருவருட்பாவிலும் ஆதாரம் காண்கிறேன். ஆனால் இவர் கொள்கைகளை அவர் அறிந்து கொண்டிருந்தாரா? இருவர் வரலாற்றுக் காலக் குறிப்புகளையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இக்கேள்விக்கு வகையாக விடை காணமுடியும் என்று நம்புகிறேன்.

1866ம் ஆண்டில் கேசவ சந்திரர் தம் புதிய பிரமசமாஜத்தை ஆழ்ந்த அகன்றதோர் அடிப்படையில் அமைக்க முயன்ற போது, அவர் வகுத்துக் கொண்ட அடிப்படைக் கொள்கைதான் என்ன? இதைச் சற்று நுணுகி நோக்குவோம் முதன் முதலாக.

இந்தப் பரந்த உலகம் கடவுளின் புனித ஆலயம். கோயில்களிலெல்லாம் தூய்மையான கோயில் தூய இதயம் தான். சத்தியம் இக்கோயிலின் நிலைத்த சிறப்புச் செல்வம். நம்பிக்கை, சமயம் முழுமைக்கும் ஆணி வேர். அன்பே உண்மையான ஆன்மநேயக் கல்வி. தன்னலத் துறப்பே உண்மையான துறவு நிலை. இது கேசவசந்திர சேனர் கண்ட புதிய சமாஜத்தின் புனிதப் பெரு நோக்கு.

சமரச சன்மார்க்க சங்கம்

1866ம் ஆண்டுக்கு முன்பே (அதாவது 1865ல்) இராமலிங்க அடிகள் **சமரச சுத்த சன்மார்க்க சத்தியசங்கம்** என்ற ஒரு சங்கத்தை ஆன்மநேய ஒருமைப்பாட்டுக் கழகமாக நிறுவத் துணிந்தார். 'எவ்வுயிரும் பராபரன் சந்நிதியதாகும், இலங்கும் உயிர் உடல் அனைத்தும் ஈசன் கோயில்' என்ற சைவப் பெருங் கொள்கையில் ஊறித் திளைத்திருந்தது அடிகளின் உள்ளம்; எனவே இச்சங்

நடராஜர் திருநடம் புரியும் இடம், சிதம்பரம் என்று மக்கள் சாதாரணமாய்க் கருதும் அந்த ஒரிடம் மட்டும் அன்று. 'எங்கும் சிதம்பரம்!' என்று திருமூலர் கூறுவதை அடிப்படையாகக் கொண்டு இராமலிங்க அடிகள்,

எல்லாரும் இன்புற நிருத்தநடம் ஆடுகின்றாய்;
வல்லாளன் வல்லாய்! மலர்ப்பாதம் நோவாதா?

என்று பாடியிருக்கிறார். இதன் உட்பொருள், இத்தகைய நடராஜ தத்துவம் சுத்த சன்மார்க்க சங்கத்தினரின் வாழ்க்கைத் தத்துவமாக அமைய வேண்டும் என்பதுதான்.

கேசவ சந்திரசேனர் தமது புதிய சமாஜத்தின் உயிர் நிலைக் கொள்கையாக வெளியிட்டிருக்கும் கருத்துக்களில் ஒன்று, தூய நல் உள்ளங்களே கோயில்களிலெல்லாம் தூய்மை வாய்ந்த கோயில் என்பதல்லவா? அதே கருத்தை இராமலிங்கர் வெளியிட்டிருப்பதில் எத்தகைய சமதர்ம உணர்ச்சி தமிழ்க்கவிதையாகப் பொங்கி வழிகிறது பாருங்கள்:

எத்துணையும் பேதமுறாது
எவ்வுயிரும் தம்முயிர்போல்
எண்ணி, உள்ளே

ஒத்து, உரிமை உடையவராய்
உவக்கின்றார் யாவர்? அவர்
உளம்தான், சுத்த

சித்துருவாய் எம்பெருமான்
நடம்புரியும் இடமெனநான்
தேர்ந்தேன்....

'எங்கும் சிதம்பரம்' என்பது உண்மையாயினும், உண்மைச் சமதர்மிகளின் உள்ளத்தில் நடராஜனின் கூத்து நன்றாக நடைபெறுகின்றதாம். இப்படியெல்லாம் சங்கத்தின் குறிக்கோளும், சங்கத்தினர் மேற்கொள்ள வேண்டிய முறைகளும், அம்முறைகள் உலக மக்களுக்கு எப்படித் துணையாக இருக்க வேண்டும் என்பது போன்ற விளக்கங்களும், இவரது அருட்பாடல்களின் சிறந்த

என்று கூறி, மானிடப் பண்புள்ளவர்களைச் சுத்த சன்மார்க்கத்தில் நிற்பவர்களே அந்தப் புதிய ஒருலகத்தில் 'பலம் பெறு மனிதர்கள்' (பலசாலிகள்) என்கிறார்.

உலகைத் திருத்தவே தம்மை ஆண்டவன் அனுப்பி வைத்தான் என்பது இவர் நம்பிக்கை. 'அனைவரையும் சகத்தே திருத்திச் சன்மார்க்க சங்கத்து அடைவித்திட...... எனை இந்த யுகத்தே இறைவன் வருவிக்க, உற்றேன்!' என்று தோள் கொட்டுகிறார்.

அகத்தே கறுத்தும் புறத்தே வெளுத்திருந்த
உலகர் அனைவரையும்

திருத்த ஆசைப்படுகிறது இவருள்ளம்! தம் இனத்தவர்களான கறுப்பர்களை மட்டுமா? தாம் கண்ட 'அகத்தே கறுத்துப்புறத்தே வெளுத்திருந்த' வெள்ளையரையும்தான்!

அதற்காகவே தாம் ஆண்டவனது அதிகார முத்திரை தரித்து அவன் அருள் சுமந்து வந்திருக்கும் தூதன் என்று கூறவும் இவர் கூசவில்லை. எனினும், தாம் கண்ட சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கத்துக்குத் தம்மை இவர் தலைவராகக் கூறியதில்லை. 'சன்மார்க்க சங்கத்தீர்! .... எனை நுமக்குள் ஒருவன் எனக் கொள்வீர்' என்றுதான் வேண்டிக் கொள்கிறார். இச்சங்கத்துக்குத் தலைவர் சபாநாயகரான நடராஜனே; வேறொரு தலைவனும் இல்லையாம்.

நான்கு ஆசைகள்

ஆண்டவனை நோக்கித் தம்முடைய சங்கம் பற்றித் தமக்குள்ள ஆசைகள் நான்கு என்று இவர் விண்ணப்பம்செய்து கொள்வதும் நம் உட்செவியில் தெளிவாய் விழுகிறது. இச்சங்கத்தில் தங்க
மா ஆழ்ந்த அகன்ற வாழ்க்கைத் தத்

இத்தகைய 'ஞானத் தங்கம்' தம்மை உலகெலாம் பெரியவர் பெரியவர் என்று சொல்வதையும் விரும்பவில்லை.

இராமலிங்கசுவாமி என்றும், இராமலிங்க அடிகள் என்றும் மற்றவர்கள் போற்றுவதையும் இவர் விரும்பவில்லை. 'ஆரவாரத்துக்கு அடுத்த (இசைந்த) பெயராகத் தோன்றுதலின், இனி அங்ஙனம் வழங்காமை வேண்டும்' என்றே வேண்டிக் கொண்டார். 'இராமலிங்கம்பிள்ளை' என்றும், இராமலிங்கம்' என்றும் கையெழுத்திட்டே கடிதங்கள் எழுதினர்.

அருட்பாவில் இராமலிங்கர்

இராமலிங்க அடிகள், 1858ம் ஆண்டில் — சிப்பாய்களின் விடுதலை இயக்கம் ஒடுக்கப்பட்ட ஆண்டிலே—தமது நாற்பத்தைந்தாம் வயதில் வடலூருக்கு வந்து சேர்ந்தார். வடக்கே இருப்பதால் 'வடலூர்'; இதை 'உத்தர ஞான சிதம்பரம்' (சிதம்பரத்துக்கு வடக்கே உள்ள சிதம்பரம்) என்று வடமொழியில் கூறுவர். அக்காலத்துப் பெயர் பார்வதிபுரம். அங்கே நின்று பார்த்தால் சிதம்பரத்தின் நாலு கோபுரங்களும் தெரியும்.

இங்கே அடிகளின் பாடல்கள்—அதுவரை பாடப் பெற்றிருந்தவை—திருஅருட்பா என்ற பெயரில் வெளிவரத் தொடங்கின. இவரது மாணவரான தொழுவூர் வேலாயுத முதலியார் இவர் பாடல்களை நான்கு திருமுறைகளாக வகுத்து வெளியிட்டார். திருஅருட்பாவின் ஐந்தாவது திருமுறையும் ஆறாவது திருமுறையும் பின்னர் வெளியிடப் பெற்றன.

'மக்கள் இலக்கியம்' என்று சொல்லும்படி எளிமையும் இனிமையும் வாய்ந்த பாடல்கள் இவை. 'ஆண்டவனே! நீ ஒரு பாட்டைப் போல் அவ்வளவு அபூர்வ எளிமையுள்ளவன்!' என்று கவி ரவீந்திரர் பாடியிருக்கிறார் அல்லவா? 'எல்லாரும் இன்புற்றிருக்க' நடனமாடும் நடராஜனைப் போல் எல்லாரும் இன்புற்றுக் கேட்க வேண்டும் என்று இவர் பொதுஜன இதயம் தொட்டுப் பாடி வைத்த பாடல்கள் இவை.

எளிமையாகப் பாடல்கள் இருக்கலாம்; ஆனால் பொருள் பொதிந்தும் புதைந்தும் இருக்க வேண்டுமல்லவா? இத்தகைய கவிதை அழகுகளைக் காண்பதுடன் இராமலிங்கரின் வாக்கிலே வளமான சிந்தனைகளையும் முற்போக்கான கொள்கைகளையும் காண்கிறோம்.

முதல் ஐந்து திருமுறைகளைக் காட்டிலும் ஆறாம் திருமுறை அரும் பெரும் பொருள்களை வெளியிடுகிறது. இது, சமய அறிவுச் செல்வத்தையும் புதுபொருள்களையும் வாரி வழங்குகிறது உரியவர்க்கெல்லாம். இத் திருமுறைகளினூடே இராமலிங்கரின் குரலைக் கேட்கிறோம்.

வயதிலும் அறிவிலும் அனுபவத்திலும் அநுபூதிக் கல்வியிலும் படிப்படியாக வளர்ந்து மலர்ந்து கொம்பிலே கனிந்த கனியாக முடிவில் பக்குவமாகி விருக்கும் ஒரு மகத்தான உள்ளத்தைப் பார்க்கிறோம் திருவருட்பாவிலே. தம்மைத் திருத்திக் கொண்டு உலகையும் திருத்தச் செய்யவேண்டும் என்று துடிக்கும் மகாத்மாவின் ஜீவநாடியைக் காண்கிறோம்.

'சிறிய பருவத்தே அணிந்து அணிந்து பாடும் வகை புரிந்து' தம்மைப் பாதுகாத்த இறைவனைக் கொண்டாடுகிறார் ஒரு சமயம். வேறொரு சமயம், தாம் கற்றது ஏட்டுக் கல்வி அல்ல, கல்லாக் கல்வியாக முருகனிடம் கற்றதும் கேட்டதுமே என்கிறார். பல பாடல்களிலும் இவரது வாக்குவன்மை புலனாகிறது: சில பாடல்களில் கவிதைச் சுவை சொட்டச் சொட்டத் தத்துவப் பெருங்கனிகள் உதிர்கின்றன.

இப்பாடல்களை 'அருட்பா' என்று கூறுவது தகாது என்று அந்த நாளில் வாதுரைத்து வழக்கிட்டவர்களும் உண்டு. இதற்கு விடையாக,

> அகத்திருந்த என்னுறுத்தே
> இருந்து விடுத்ததுதான்
> ஆண்டவநின் அருட்செயலோ,
> மருட்செயலோ? அறியேன்

என்ற இவர் வாக்கையே எடுத்துக் காட்டலாம். இப்படித் தற்போதம் இழக்கவல்ல அநுபூதிக் கவிஞரின் வாக்கு எப்படி மருட்பா ஆகும்?

திருவொற்றியூரில் ஒரு சமயம் ஒரு திண்ணையில் சாமியார் ஒருவர் அமர்ந்து வருகிறவர் போகிறவர்களை யெல்லாம் முகம் நோக்கியபின், 'அதோ ஒரு மாடு போகிறது! அதோ ஒரு பன்றி போகிறது! இதோ ஒரு நரி வருகிறது!' என்று இயல்பாகச் சொல்லிக் கொண்டிருந்தாராம். இராமலிங்கரின் சுடர் முகம் கண்டதும், 'இதோ ஒரு மனிதன்' என்று வியந்தாராம். இத்தகைய மனிதப் பண்புள்ள பக்த மணியின் முழு வளர்ச்சியையும் திருஅருட்பாவில் கண்டு கொள்ளலாம்.

ஆறும் திருமுறையில் இவரது ஞானப் பெருவாழ்வு, மனம் கலந்தும் கரைந்தும் நோக்கும் தொண்டர்களின் அறிவுக் கண்ணுக்கு, அப்படியே இலக்காகிறது. தெள்ளத் தெளிந்த அநுபவ நிலையிலே பொதுஜன ரஞ்சகமான அற்புதப் பாசுரங்கள் உதிக்கின்றன. சொந்தமாகிய திரை எவ்வளவு மென்மையாகக் காண்கிறது! திடமென்று திரை விலகி உண்மையை நேரடியாகப் பார்ப்பது போன்ற உணர்வும் ஏற்படுகிறது. இந்த நிலையில் வடலூர்ப் பெருவெளியிலே மிதந்து வந்தது ஒருலகம், வள்ளலார் கண்ணுக்கு இனிதாகவும் எளிதாகவும், பலருக்கு வியப்பாகவும்!

வாழ்க்கையின் சிகரம்

1823ல் தோன்றி 1874ல் மறைந்த வள்ளலாரின் வாழ்க்கையில் 1865ம் ஆண்டு மிகவும் முக்கியமானது. அந்த ஆண்டில் உதயமான சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கத்தின் நூற்றாண்டு விழா அண்மையில் வடலூர் உள்ளிட்ட தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும், தலைநகரமாகிய சென்னையிலும் கொண்டாடப்பட்டது. சத்திய தருமசாலையின் 98-வது ஆண்டு விழாவையும் பல இடங்களிலும், முக்கியமாக வடலூரிலும் கொண்டாடினார்கள். வடலூரில் இந்தத் தருமசாலை தொடங்கியது 1867ம் ஆண்டிலே. இந்த அறச்சாலையில் வள்ளலார் நாள்தோறும் ஆயிரக்கணக்கான மக்களுக்கு உணவளித்து வந்தார்.

வயிற்றுக்கு உணவு அளித்தவுடன் உள்ளத்துக்கு உணவாகத் தமது சமரசப்



"தல பத்திரம் தல பத்திரம்னு அவர் ஏன் இப்படி அலறுகிறார்?"
"தல தீபாவளி மாப்பிள்ளையாச்சே!"

பெருங் கொள்கைகளைப் போதிக்கவும், திருவருட்பாவைக் கற்பிக்கவும் சமரச வேத பாடசாலை ஒன்றை நிறுவினர். 1871ல் வடலூரில் சத்திய ஞானசபை ஒன்று அமைக்கப் பெற்றது. இச்சபை எட்டுக் கோணமாகத் தாமரை வடிவில் அழகாய் உருவாக்கப் பெற்றது. ஏழு நிறம் கொண்ட ஏழு திரைகள் ஒன்றன் பின் ஒன்றாகத் தூங்கா மணி விளக்குகளுடன் அமைந்து, சாதிமத பேதமின்றி அனைவரும் கலந்து அருட்கடரை வழிபட வசதியளித்தன.

1873ல் அடிகள் வடலூருக்கருகில் உள்ள மேட்டுக் குப்பத்தில் சித்தி வளாக மாளிகையைக் கட்டுவித்தார். இம்மாளிகையில் சில தினங்கள் கதவைத் தாளிட்டுக் கொண்டு வெளியே வராமல் இருந்து விடுவார். வெளிவந்த தினங்களில் சமரச சன்மார்க்க உபதேசப் பொழிவுகளை அன்பர்கள் அமுதமாய்ப் பருகுவார்கள்.

இறுதியாக வள்ளலார் அன்பர்களை நோக்கி, 'கடையை விரித்தோம், கொள்வாரில்லை! நீங்கள் இந்தத் தீபத்தை ஜீவகாருண்ய நெறியில் வழிபட்டு உய்யுங்கள்' என்று கடையைக் கட்டினர். சித்திவளாகக் கட்டடத்துள் புகுந்து கதவைத் திருக்காப்பிட்டுக் கொண்டு மறைந்தருளினர் என்பர்.

தென்னார்க்காடு மாவட்டத்தின் அக்காலத்துக் கலெக்டரான 'மிஸ்டர் ஜே. எச். கார்ஸ்டின் ஐ. சி. எஸ். சித்தி வளாகத்தை வந்து பார்வையிட்டு, வள்ளலாரின் மறைவில் தவறான காரியம் ஒன்றும் நடந்திருக்க முடியாது என்று முடிவு கட்டியதாக 1878ல் வெளிவந்த தென்னார்க்காடு ஜில்லா மானுவல் என்றதொகுப்பிலிருந்துதெரியவருகிறது.

5–10–1823ல் — அதாவது சுபானு வருஷம் புரட்டாசித் திங்களில் 21ம் தேதி — பிறந்தவர், 30–1–1874ல் அதாவது ஸ்ரீமுக வருஷம் தைத் திங்கள் 19ம் தேதி மறைந்து விட்டார், தாம் வந்த காரியத்தை அவசரமாகவே முடித்துக் கொண்டு. சிதம்பரத்துக்கு அருகில் தோன்றியவர் உத்தர சிதம்பரம் என்ற


வடலூரில் திருவருட்பிரகாச வள்ளலாராகத் திகழ்ந்து மகான், யோகி, சாது, சித்தர், பக்தர், ஜீவன்முக்தர், பரமஞானி என்றெல்லாம் புகழும் பெற்று, மறைந்தார் என்பதே ஓர் அற்புத வரலாறுதான். தெய்வம் என்ற ஜோதியைக் கண்டவர்களில் ஒருவர் இவர் என்பதற்கு அனுபூதிக் கவிச் சுவை பொங்கித் ததும்பி வழிந்தோடும் பல பாடல்கள் சான்று தருகின்றன.

இவர் சாகாக் கல்வி கற்றுச் சாகா வரமும் பெற்றவர். மறைந்த ஞான சூரியன் மறுபடியும் உதயமாவது திண்ணம் என்பது இராமலிங்க பக்தர்களின் நம்பிக்கை. குருமூர்த்தியின் நம்பிக்கை இது என்பதையும் சுட்டிக் காட்டுகிறார்கள். இது எப்படியிருந்தாலும், பரமஞான பக்தர்களுக்குரிய மரணமிலாப் பெருவாழ்வு இவர் வாழ்கின்றார் என்பதற்கு இவரது சிறந்த பாடல்கள் சான்றாகும்.

இராமலிங்கரைப் போன்ற மகா புருஷர்களின் வாழ்க்கையைச் சூழ்ந்து அற்புதமாகக் கதைகள் வளர்ந்திருக்கின்றன. இக்கதைகளில் சில வாழ்க்கை வரலாற்றிலிருந்து பிரிக்க முடியாதபடி பின்னிப் பிணைந்திருக்கின்றன. பேய்களை ஓட்டினார், நோய்களைக் குணப்படுத்தினார் என்பவை போன்ற நிகழ்ச்சிகள் பக்தருலகில் பரம விசுவாசம் விளைத்திருக்கக் கூடிய இயற்கை மற்புதங்களே. இவை தவிர, கதை வளர்ப்பவர்களின் கட்டல் பெருக்கல்களால் விளைந்திருக்கும் மனோபாவ அற்புதங்கள் பக்த சரித்திரங்கள் பலவற்றிலும் காணப்படுவதை அறியாதார் யார்?

எல்லா அற்புதங்களுக்கும் சிகரமாக எனக்குத் தோன்றுவது வடலூர்ப் பெருவெளியிலே வள்ளலார் கண்ட ஒருலகம் என்ற கருணைப் பெருங்கனவு தான். அன்பு நெறிக்கும், கொல்லாமை விரதத்துக்கும் உரிமையாக்கப் பெற்ற வாழ்க்கையின் கனி சமரச சன்மார்க்க சத்திய ஞானசபையின் பிரதிஷ்டைதான் என்று கருதுவதில் தவறொன்றுமில்லை. உலகமெங்கும் இவரது சமரச சுத்த சன்மார்க்கக் கொள்கைகளைப் பரப்ப முயல்வோர், ஞான உருவில் இவர் மீண்டும் வந்து தமிழகத்தோடு உலகம் அனைத்தையும் வாழ்விக்கத் துணை புரிவோர் ஆவர்.

1. பாப்பா மலர் விடை



2. எஞ்சின் பின்பக்கமாகப் போகக்கூடும் புகுந்தது!

தீர்க்கதரிசி இராமலிங்கர்

'நான் கொடுத்த போதனைகளை, இந்துக்கள் செவியுற்றுக் கேளாத போதிலும், வேதாகமங்களில் அமிழ்ந்து கிடக்கும் அந்தரக் கருத்துகளைப் பத்திரமாய் வைத்திருக்கும் மகாத்மாக்கள் அந்நிய நாட்டாருக்கு வெளிப்படுத்துவார்கள்... நான் இப்போது உங்களுக்கு வீணில் சொல்லும் சிறந்த உண்மைகளை அப்போது நீங்கள் தெரிந்துகொண்டு மதித்து நடப்பீர்கள்' என்று வள்ளலார் கூறியதாக ஒரு செய்தி இவரது சீடர்களால் வெளியிடப் பெற்றிருக்கிறது. இது மகாத்மா காந்தி முதலானவர்களைப் பற்றிய ஒரு தீர்க்கதரிசனம் என்று கருதுவோரும் உண்டு.

எப்படியும் இராமலிங்கரின் சத்திய ஞானசபையில் புலனாகும் ஒருலகப் பொற்கனவு எதிர்கால நல்லுலகம் குறித்த ஒரு தீர்க்கதரிசனம்தான். தம் கனவை நனவாக்கிக் கொள்வதற்கு இவர் தம் திருப்பாடல்கள் வாயிலாக நெறியும் வகுத்திருக்கிறார் எனலாம். சத்தியம், சமரசம், சன்மார்க்கம், கருணை, ஒருமையுணர்வு ஆகிய ஐந்து சீலங்களோடு கூடிய ஓர் அன்புப் பெருநெறியைத் திருவருட்பாவினூடே தெளிவாகக் காண்கிறோம்.

வரலாற்றில் வள்ளலைக் கண்டோமா?

உலகம் ஒன்றே என்பதை நன்குணர்ந்து ஆன்மநேய ஒருமைப்பாட்டை வற்புறுத்தி அமுதப் பாடல்கள் பாடியிருக்கும் இராமலிங்கரின் திருப்பெயர் இனி மேல் எழுதப்படும் உலக வரலாற்றுப் பெருநூலில் இடம் பெற வேண்டும். ஆனால் இன்று இந்திய வரலாற்றிலும் இவர் பெயர் காணப்படவில்லை. பத்தொன்பதாம் நூற்றாண்டுச் சமய சமுதாய இயக்கங்களைப் பற்றிய ஓர் அருமையான ஆராய்ச்சி ஒரு சிறு புத்தக வடிவில் வெளிவந்து நாடெங்கும் — வடக்கிலும் தெற்கிலும் — பரவியிருக்கிறது. தமிழரான வரலாற்றுப் பேராசிரியர் ஒருவரால் எழுதப்பட்டிருக்கும் இதில் இராமலிங்கரைப் பற்றிய ஒரு குறிப்பும் காணப்படவில்லை.

1866ம் ஆண்டில் கேசவசந்திரசேனரின் புதிய சங்கமான இந்திய பிரம சமாஜம் பற்றிய ஒரு நீண்ட குறிப்பை இதில் காண்கிறோம். ஆனால் 1865ல் ஏறக்குறைய இதே பெருநோக்குடன் இராமலிங்கர் தோற்றுவித்த சமரசசுத்த சத்திய ஞானசபையைக் குறித்து ஒரு வரியும் காணப்படவில்லை. இராம மோகனர் தோற்றுவித்த பிரம சமாஜம் அவருக்குப் பின்பும் தொடர்ந்து தொண்டாற்றி வருவதற்குக் கேசவசந்திரசேனர் முதலானவர்கள் காரணமாக இருந்தனர் என்பதை இந்திய சரித்திர மாணாக்கர்கள் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியந்தான். ஆனால் 'வரலாற்றில் வள்ளலாரைக் கண்டாயோ?' என்று ஒருவர் என்னைக் கேட்டால், நாணித் தலைகுனிந்து நிற்க வேண்டிய நிலைமையில்தான் இருக்கிறேன்.

ராஜா ராம மோகனரின் வாழ்க்கையின் இறுதிப் பகுதியில் தோன்றிய இராமலிங்கர் மறைந்த அடுத்த ஆண்டில், தயானந்த சரஸ்வதி தமது ஆரிய சமாஜ இயக்கத்தைத் தோற்றுவித்தார். அவர் இராமலிங்கர் பிறந்த மறு வருடத்தில் பிறந்து 1883ல் காலமானார். கேசவ சந்திர சேனர் தமது புதிய பிரம சமாஜ இயக்கத்தைத் தோற்றுவித்த அதே 1866ல் தயானந்தரும் விக்கிரக வழிபாடு முதலியவற்றைக் கண்டித்து மும்முரமாகத் தம் வேத நெறிக் கொள்கைகளைப் பிரசாரம் செய்யத் தொடங்கினார். இந்தச் செய்திக்கு வரலாற்றுப் புத்தகங்களில் இடம் கிடைத்திருப்பது போல், இராமலிங்கர் சமரச வேதக் கொள்கைகளைப் பிரசாரம் செய்து வந்தார் என்ற செய்திக்கும் இடம் தர வேண்டும் என்பது வரலாற்றுப் பேராசிரியர்களுக்கு நான் செய்து கொள்ளும் விண்ணப்பம்.

வள்ளலார் மறைந்து ஐந்தாண்டுகள் சென்றபின் தியாஸபி என்ற தெய்விய ஞானசங்கத்தின் தலைவர்கள் இந்தியாவுக்கு வந்தார்கள். ஆனால் தியாஸபி 1875ம் ஆண்டிலேயே அமெரிக்காவில் நியூயார்க் நகரிலே நிறுவப்பட்டது. தியாஸபி இந்தியாவில் நமது சமயத்துக்கு ஒரு புதுமை அரணைத் திகழ்ந்தது என்பதை நம்மில் பலரும் அறிந்திருக்கிறார்கள். ஆனால் இந்தத் தெய்விய ஞான சங்கத்துக்கு ஒரு முன்னோடி இராமலிங்கரின் சத்தியஞான சங்கம் என்பதைப் பலரும் அறியார். அனிபெஸண்ட் அம்மையாரின் தலைமையில் ஏற்பட்ட தியாஸபியின் விளைவுகளுக்கு வித்திட்டவர் இராமலிங்கர் என்பது தமிழ் மக்களின் வரலாற்றிலாவது பொறித்துக் கொள்ள வேண்டிய புனித நற்செய்தியாகும்.

அநுபூதி நிலையில் இராமலிங்கர் ஏறக்குறைய அதே காலத்தில் வாழ்ந்த இராமகிருஷ்ண பரமஹம்ஸரைப் பெரிதும் நினைவூட்டுகிறார். இராமகிருஷ்ணரின் அருள்மொழிகளை இராமகிருஷ்ண உபநிடதம் என்று போற்றுவது போல், இந்தியா முழுவதும் மக்கள் இராமலிங்கரின் அருளுரைகளையும் இராமலிங்க உபநிடதம் என்று போற்ற வேண்டும். இதற்கு இன்றியமையாத மொழிபெயர்ப்புப் பணிகளைத் தமிழன்பர்கள் மேற்கொள்வது அவசியமாகும்.

'எல்லாருடைய அருட்பெருஞ்சோதி அற்புதக் கடவுளே......சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய லட்சியமாகிய ஆன்ம ஒருமைப்பாட்டுரிமை எங்களுக்குள் எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்வளவும் விலகாமல் நிறைந்து விளங்கச் செய்வித்தருள வேண்டும். எல்லாமாகிய தனிப் பெருந் தலைமை அருட்பெருஞ்சோதி ஆண்டவரே! தேவரீர், திருவருட் பெருங்கருணைக்கு வந்தனம், வந்தனம்!' இது இராமலிங்க அடிகளின் ஒரு விண்ணப்பம்.

இந்த விண்ணப்பத்திலேயே இராமலிங்க அடிகளின் குணசித்திரத்தை, மிகையுமில்லாமல் குறையுமில்லாமல், ஒரு சின்னஞ் சிறு முழுச் சித்திரமாகக் கண்டு கொள்ளலாம். பத்தொன்பதாம் நூற்றாண்டிலே நமது சமய—சமுதாய வளர்ச்சிக்கு வித்திட்டவர்களில் இவரையும் ஒருவராக வரலாறு மதிக்க வேண்டும், தமிழக வரலாறு இவர் பெயரைப் பொன்னெழுத்துக்களில் பொறித்துப் போற்ற வேண்டும்.



மோக வதை

அவன் சொன்ன கதைகளையெல்லாம் பொறுமையோடு கேட்டுக் கொண்டிருந்த கவிஞர் திலீபன் மெல்லச் சிரித்தார்.

''ஏன் சிரிக்கிறீர்கள்? நான் சொன்னதை உங்களால் நம்பமுடியவில்லையா?'' என்று உடம்பை ஒயிலாக நெளித்துக் கொண்டு வெட்கப்படுவது போன்ற ஒரு போலிப் புன்முறுவலுடன் அவரைக் கடைக்கண்ணால் கவனித்தவாறு இனிய குரலில் கேட்டாள் அந்த அழகிய இளம் பெண்.

''நம்பாமல் என்ன? நான் சிரித்தது அதற்காக அல்ல!'' என்று கூறி மீண்டும் குறும்பாகச் சிரித்தார் திலீபன். ''உன்னைப் போன்ற பெண்கள் பலரிடமும் நான் இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறேன். அவர்கள் எல்லாரும் அதற்கு என்ன பதிலைச் சொன்னார்களோ, அதே பதிலைத்தான் நீயும் சொன்னாய். உங்களிடையே உள்ள அந்த ஓர் ஒற்றுமையை நினைத்துக் கொண்டதும் எனக்குச் சிரிப்பு வந்து விட்டது.''

அவள் மௌனமாகத் தலை குனிந்து கொண்டு கால் கட்டை விரலால் மணலில் குழி பறித்தாள்.

'' 'தந்தை இல்லை, தாய்க்கு உடல் நலமில்லை, பிழைப்புக்காகப் பட்டணம் வந்தேன். ஒரு காவாலியிடம் சிக்கினேன். அவன் சினிமா, நாடகம் என்று ஏதேதோ சொல்லி ஏமாற்றினான். ஏமாந்தேன். கடைசியில் இந்தத் தொழிலில் இறக்கி விட்டு விட்டுப் போய் விட்டான். எனக்கென்னவோ இது கட்டோடு பிடிக்கவில்லை. ஆனாலும் வயிற்றுப் பிழைப்புக்கு வேறு வழி இல்லாததால் இதை விடவும் முடியவில்லை' — என்ற இதே பதில்! இதே வாக்குமூலம்! நல்ல வேடிக்கையான கதை!'' — திலீபனுக்கு மறுபடியும் சிரிப்பு வந்து விட்டது. அவர் கலகலவெனச் சிரித்தார்.

''என்ன செய்வது? பாகு கெடாமல் இருப்பதற்குப் பல காரணங்கள் இருக்கலாம்; ஆனால் கெட்டுப் போன பாகுக்குச் சொல்லப்படும் காரணங்கள் எல்லாம் ஏறத்தாழ ஒரே மாதிரியாகத் தானே இருக்க முடியும்?'' என்று கரகரத்த குரலில் தலை நிமிராமலே சொன்னாள் அவள்.

திலீபனின் சிரிப்பு மறைந்தது. உன்னார்ந்த வியப்புடன் அவளைக் குனிந்து நோக்கினார் அவர்.

அந்தப் பெண் எதையோ நினைத்துக் கொண்டவள் போல் 'களுக்'கென்று சிரித்து விட்டுக் கூச்சத்துடன் சற்றே நகர்ந்து உட்கார்ந்து கொண்டாள்.

''ஏன் சிரிக்கிறாய்? இன்னும் ஏதாவது சொல்லப் போகிறாயா?''

''ஒன்றுமில்லை!....வந்து....''

''சும்மா சொல். உன்னுடைய பேச்சு எதுவாயிருந்தாலும் இப்போது எனக்கு ரொம்பப் பிடிக்கும்.''

ஒய்யாரமாகத் தலையைச் சாய்த்து அவரை ஓரக் கண்ணால் பார்த்த அவள் தயக்கத்துடன் கூறினாள்: ''என்னிடம் கேட்ட அந்தக் கேள்வியையே இன்னும் பல பெண்களிடமும் கேட்டதாகச் சொன்னீர்களே, அதை நினைத்துக் கொண்டேன். சிரிப்பு வந்துவிட்டது.''

''இதற்கு ஏன் சிரிக்க வேண்டும்? நான் அப்படிக் கேட்டிருப்பேனா என்று சந்தேகப்படுகிறாயா?''

''கேட்டிருப்பீர்கள்! ஆனால் அப்படிக் கேட்பதற்காகவே அத்தனை பெண்களையும் சந்திக்கப் போயிருக்க மாட்டீர்கள் இல்லையா?''—அவளால் சிரிப்பை அடக்க முடியவில்லை.

அவளுடைய குறும்பும் குத்தலுமான பேச்சைக் கேட்டுக் குபீரெனச் சிரித்து விட்டார் திலீபன். ''உண்மைதான். ஆனால் நான் மட்டுமே அப்படி அல்ல; நீயும்தான். இல்லையென்றால், இங்கே இந்தக் கடற்கரையில் — இத்தனை ஆயிரம் பேர்கள் கூடியிருக்க, என்னைமட்டும் எப்படியோ 'இனம்' கண்டுகொண்டு வந்து என் அருகில் வந்து உட்கார்ந்ததுமல்லாமல், பளிச்சென்று வாய் திறந்தும் கேட்டு விட்டாயே?''

இளநகை பூத்த அவள் சற்றே அலட்சியம் கலந்த குரலில் கூறினாள்: ''ப்பூ! இது ஒரு சாமர்த்தியமா? மனித மனத்திலுள்ள வேறு எந்த விருப்பங்களையும் அறிவது கடினமாக இருக்கலாம்; ஆனால் இந்த விருப்பமுடையவர்களை மட்டும் வெகு துல்லியமாகக் கண்டு பிடித்துவிடுவது எளிது. ஏனென்றால் இவ்விருப்பத்துக்கு அத்தனை விகவ ரூபம் உண்டு.''

இரவு மணி எட்டரை. கடற் கரையில் நிறைந்திருந்த ஜனக் கூட்டம் கொஞ்சம் கொஞ்சமாகக் கலைந்து செல்ல ஆரம்பித்தது.

''சரி; நாம் போகலாமா?'' என்றார் திலீபன்.

அவரோடு அவளும் ஒட்டிப் படர்ந்து எழுந்து நின்றாள். சாலைக்கு வந்த அவர் ஒரு டாக்சியைக் கைதட்டி அழைத்தார்.

''டாக்சி எதற்கு?......வேண்டாமே...'' என்று சிணுங்கினாள் அவள்.

''ஏன்?''

''நான் குடியிருக்கும் தெருவில் டாக்சி போகாது; டாங்காதான் போகும்! மேலும்...''

''என்ன?''

''என் வீட்டில் அம்மா ரொம்பவும் உடம்பு முடியாமல் படுத்துக் கிடக்கிறாள்!'' என்று தொண்டை அடைக்க முணுமுணுத்த அவள் சட்டென்று நிமிர்ந்து, ''இது கதையல்ல; மெய்தான்'' என்றாள்.

திலீபன் மெல்லச் சிரித்துக் கொண்டார். ''பரவாயில்லை. என்னுடைய இருப்பிடத்துக்கே உன்னை அழைத்துக் கொண்டு போகப் போகிறேன்.''

அவள் கொஞ்சமும் வெட்கப் படாமல் கேட்டாள்: ''எனக்குப் பசிக்கிறது. முதலில் ஹோட்டலுக்குப் போவோம்.''

டாக்சி வந்து நின்றது.

''சாப்பிடத்தானே? என் வீட்டில் இரண்டு பேருக்குத் தேவையானதை வாங்கி வைத்துவிட்டுத் தான் இந்தப் பக்கமாக உலாவ வந்தேன்'' என்று புன்னகையுடன் கூறியவாறு டாக்சியில் ஏறி அமர்ந்தார் திலீபன்.

அவள் அவரை வியப்புடன் பார்த்தாள். பிறகு, ''ஓ.........

'ஜெகசிற்பியன்'



நீங்கள் ரொம்பப் பெரிய ஆள்தான்!'' என்று அவருக்கு மட்டுமே கேட்கும்படியாகக் கெக்கெலித்து விட்டு அவர் அருகில் நெருங்கி அமர்ந்து கொண்டாள்.

டாக்ஸி கிளம்பிப் பறந்தது.

❦ ❦ ❦ ❦

திலீபனுக்கு வயது முப்பத்தைந்து தான் இருக்கும். வர்ணனைக்கு உதவாத முகத் தோற்றம். தட்டிவிட்டால் எட்டு இடத்தில் குட்டிக்கரணம் போடத்தக்க நோஞ்சலான உடம்பு. கொஞ்சம் வெளுத்த மேனி. நடை உடை பாவனைகளெல்லாம் சாதாரணமானவை. 'அன்' விகுதி பெறக்கூட லாயக்கில்லாத நடத்தை, பேச்சு. ஆயினும் 'அர்' விகுதிக்கு உரியவராயிருப்பவர். காரணம் அவர் ஒரு கவிஞர்!

சந்தேகத்துக்கு இடமில்லாத கவிஞர் தான் அவர். ஆனால் இன்றல்ல; நேற்று.

இறந்த காலத்தில் கவிஞராயிருந்த அவர் நிகழ் காலத்தில் பாடலாசிரியராகி விட்டார்! இப்போது சினிமாப் படங்களுக்குப் பாட்டுப் போட்டுத் தருவது அவருடைய தொழில். அவருக்கு ஞாபக சக்தி அதிகம். ஆகவே, 'இயற்றும்' காரியத்தை விட்டுப் 'போடும்' தொழிலுக்கு வந்து சேர்ந்தார். வரவேற்றுக் கொண்டது சினிமா உலகம்.

ரொம்பச் சீக்கிரமாகவே திலீபன் சினிமா மார்க்கெட்டைப் பிடித்துவிட்டார் — இல்லை; அந்த மார்க்கெட் அவரைப் பிடித்துக் கொண்டு விட்டது. படாதிபதிகளின் கார்கள் அவர் வீட்டெதிரே 'க்யூ' வரிசையில் நிற்கலாயின. அவருடைய பாடல்களுக்காகவே படம் ஓடி விடுவதாக அவர்களிடையே அப்போது ஒரு சலசலப்பு!

❦ ❦ ❦ ❦

கண்ணியமும் சீலமும் வாய்ந்த நல்ல குடும்பம் ஒன்றில் பிறந்தவர் திலீபன். அதனால் இயற்கையாகவே அவரிடம் ஒழுக்கமும் நற்குணங்களும் ஊறி வளர்ந்திருந்தன. பிழைப்புத் தேடித் தனியாகப் பட்டணத்துக்கு வந்து பல கஷ்ட நஷ்டங்களுக்கு உள்ளானபோதுகூட அவர் தம் ஒழுக்க நடத்தைகளிலிருந்து ஒரு சிறிதும் வழுவாமலேதான் இருந்தார்.

இப்படி இருந்தவர் முதலில் ரேடியோ மெல்லிசை நிகழ்ச்சிகளுக்குப் பாடல் இயற்றித் தர ஆரம்பித்தார். அதனால் அங்கு போக்குவரத்துத் தொடர்பு ஏற்பட்டது. இந்தியாவில் உள்ள வானொலி நிலையங்களை வேறு விஷயங்களில் குறை கூறினாலும், சினிமாக் கலைக்கு ஆள் தேடித் தரும் பணியில் மட்டும் குறை கூற முடியாது. இந்தப் பணியைச் செய்வதற்காகவே அவை தோன்றினவோ என்று எண்ணும் அளவுக்கு இதிலே பங்கும் பெருமையும் அவற்றுக்கு உண்டு. நடிக நடிகைகள், பாடக பாடகிகள், கதை வசனகர்த்தாக்கள், மற்றும் வாத்திய விற்பன்னர்கள், இசை அமைப்பாளர்கள் ஆகியோர் சினிமா என்னும் சர்வதேச நாற்றப் புகழ்ச் சேற்றுக் குட்டையில் குதித்து நீந்துவதற்கான சகல பயிற்சிகளையும் அங்கு பெறலாம். அப்படிப் பயின்று தேறிச் சினிமா உலகுக்குத் தாவிய ஐந்தாறு மாதங்களுக்குள்ளாகவே திலீபனின் குணசித்திர வடிவம் அடியோடு மாறிப் போயிற்று. அவ்வடிவத்தின் ஒரு பாதியைச் 'சூழ்நிலை' மாற்றிற்று; மறு பாதியை அவரே மாற்றிக்கொண்டு விட்டார். இப்போது அவர் ஓர் அசல் சினிமாக் கவிஞர். மாதவிப் பூங்கொடி நிழலையும் மணிக் கவிதை நூலையும் அவர் தேடுவதில்லை யாருளும் தீநறு செந்தேன் மதுவையும் கோதையர் இன்ப சுகத்தையும் தேடியலைந்து பெறுவதே அவரது வாழ்க்கையின் இலட்சியங்களாயின. பாட்டுப் போட்டு வாங்குவதற்காகச் சில படாதிபதிகள் பணத்தை மட்டுமல்லாது, அவருக்கு 'மூட்' ஏற்றி விட இந்தப் 'பண்டங்களை'யும் 'ஃப்ரீ'யாக அளிக்க முன்வரவே, கவிஞர் தலைகால் தெரியாமல் ஆட்டம் போட ஆரம்பித்தார். இதனால் அவரிடமிருந்த கொஞ்ச நஞ்சம் கவிதா சக்தியும் கரைந்து போயிற்று. ஆனாலும் என்ன? சினிமாவுக்கேற்ற பாட்டுக்களை அவர் நன்றாகவே 'போட்டு'க் கொடுத்துப் பணமும் புகழும் சம்பாதித்தார்.

நாளாக ஆகக் கவிஞரின் ஆதிக்கம் மேலோங்கியது. அதாவது, அவரிடம் பாட்டுப் போட்டு வாங்குவது பிரம்மப் பிரயத்தனமாகி விட்டது. இருபத்து நான்கு மணி நேரமும் 'கதி'யிலேயே இருக்கும் அவரால் எப்படிப் பாட்டுப் போட்டுக் கொடுக்க முடியும்? ஆயினும் சில சமயம் அவர் தம் 'அபாரமான' கவித் திறமையைக் காட்டிச் சினிமா உலகப் பிரமுகர்களை 'இர்'ரடிக்கச் செய்து விடுவதும் உண்டு.

'என்ன இருந்தாலும் நம்ம கவிஞர், கவிஞர்தான் சார்! பாருங்களேன், கடந்த மூணு மாசமாக ஒரு பாட்டுப் போட்டு வாங்க அவரிடம் நடையாக நடந்தோம். கவிஞருக்கு 'மூடே' வரவில்லை. கடைசியில் நேற்றிரவு மூன்று மணிக்கு அவராகவே வந்து நம் மியூஸிக் டைரக்டரின் வீட்டுக் கதவைத் தட்டியிருக்கிறார். அப்போதும் அவர் நல்ல 'கதி'தான். என்னமோ ஏதோ என்று பயந்த மியூஸிக் டைரக்டரைப் பார்த்து ஆர்மோனியப் பெட்டியும் தபலாவுமாக உட்கார்ந்து ஒரு டியூனை வாசித்துக் காட்டச் சொல்லியிருக்கிறார். டியூனைக் கோடி காட்டியதுமே கவிஞர் பாட ஆரம்பித்து விட்டிருக்கிறார். அவர் பாடப் பாட ஒரு பையன் எழுதிக் கொண்டானாம். பாட்டு அற்புதமாக அமைந்து விட்டதாம். அதன் பின் கவிஞரும் பிரக்ஞை இழந்துவிட்டாராம். அவருக்கு இன்னும் கொஞ்சம் 'கதி' ஏற்றி விட்டுக் காரில் தூக்கிப் போட்டுக் கொண்டு போய் அவரது வீட்டில் படுக்க வைத்துவிட்டு வந்தாராம் மியூஸிக் டைரக்டர்.' — இப்படிச் சொல்லிப் பெருமைப்பட்டுக் கொள்வார் ஒரு படமுதலாளி.

ஆனால் உண்மையில் நடந்ததோ வேறு. அதாவது, அந்தப் படத்துக்கு எந்த டியூனில் என்ன மாதிரிப் பாட்டுத் தேவை என்பதை முன்கூட்டியே தெரிந்து கொண்டு அதற்கேற்றவாறு ஒரு பாட்டை 'அமைத்து' அதை நன்றாக மனப்பாடம் போட்டுக் கொண்டு, சில நாட்களுக்கு 'மூட் இல்லை, மூட் இல்லை' என்ற பாவனைப் பண்ணித் தட்டிக் கழித்துவிட்டுப் பிறகு திடீரென்று ஒரு நாள் ஏதோ கவிதாவேசம் ஏறிய வரதவி போல் நேரம் கெட்ட நேரத்தில் போய், தாம் முன்னதாகவே உருப் போட்டு வைத்திருந்த பாடலை நாலு பேருக்கு முன்னால் 'கவனம்' செய்து கொடுத்துவிட்டு வந்து விடுகிறார் என்ற இரகசியம் யாருக்கும் தெரியாது! இந்த மாதிரி 'கவி நடிப்பு' நடிப்பதில் திலீபன் வெகு சமர்த்தர். எது உண்மை, எது போலி என்ற வித்தியாசமே அறிய முடியாமல் எல்லாம் ஒரே நடிப்பாக இயங்கி வரும் சினிமா உலகத்துக்கு அவருடைய இந்த 'பந்தாரு பாவலா'க்களும் தேவையாகவே இருந்தன. இவற்றை அவர் நன்கு புரிந்து கொண்டு செயல்பட்டதனால் அவரது 'மார்க்கெட்' படத்துக்குப் படம் விரிவடைந்து கொண்டே போயிற்று.

ஆனால் இத்தனை சாமர்த்தியசாலியாக இருந்த திலீபன் ஒரே ஓர் உண்மையை மட்டும் புரிந்து கொள்ளாமல் போனது அவருடைய துரதிர்ஷ்டம் என்றுதான் சொல்ல வேண்டும். 'சினிமா உலகப் புகழ் என்பது இரவு நேரத்தில் புகைப் படம் எடுப்பதற்காகப் பயன்படுத்தும் ஃப்ளாஷ் பல்ப் போன்றது' என்ற உண்மையே அது!

❦ ❦ ❦ ❦

இப்படி இரண்டாண்டுகாலம் நிறைப் படக் கவிச் சக்கரவர்த்தியாகக் கோலோச்சி வந்த திலீபனின் 'மார்க்கெட்' திடீரென்று சரிய ஆரம்பித்தது. அதற்கு இரு காரணங்களைச் சொல்லலாம். ஒன்று, அவர் ஏதாவதோர் அரசியல் கட்சியைச் சார்ந்து அதை மேடைகளிலும் பத்திரிகைகளிலும் வர்ணஜாலங்களோடு பளிச்சென்று காட்டிக் கொள்ளாமல் போனது; இன்னொன்று அவரை விட நன்றாக — மிக மிகச் சாமர்த்தியமாக—பாட்டுப் 'போட்டு'க் கொடுக்க சிலர் அவருக்குப் போட்டியாகக் கிளம்பியது! 'வாழ்க்கைப் போராட்டத்தில் வலிமையானவை மட்டுமே நிலைத்து நிற்கும்' என்ற டார்வினின் சித்தாந்தம், ஜீவராசிகளின் தோற்றம்—வளர்ச்சிக்கு மட்டுமே பொருந்தியதா என்ன? மேலே சொன்ன இரண்டு காரணங்களும் சேர்ந்து திலீபனின் மார்க்கெட்டைக் கவிழ்த்துச் சூறையாடிவிட்டன.

முன்னெல்லாம் கவிஞரின் வீட்டெதிரே படாதிபதிகளின் கார்கள் 'க்யூ' வரிசையில் நின்றன. இப்போதோ அவர் ஒவ்வொரு கம்பெனிப் படியாக ஏறி இறங்கிக் கொண்டிருந்தார்.

''என்ன பாட்டு வாத்தியாரே! எங்கே இப்படி, காலங் கார்த்தாலே?''

''ஒன்றுமில்லை... சும்மா உங்களைப் பார்த்துப் போகலாம் என்று வந்தேன்.''

''டே, பையா! வாத்தியாருக்குக் காப்பி கொண்டாந்து கொடுடா!''

''காப்பி இருக்கட்டும், ஐயா! நான் வந்தது....''

''ஓ....அதுவா?... இங்கே பாருங்க திலீபன்! இப்படிச் சொல்றேனேன்னு என்மேலே வருத்தப்பட்டுக்கிடாதீங்க. இப்போதெல்லாம் உங்க பாட்டு எங்க மார்க்கெட்டிலே எடுபடுறதில்லே. காலம் மாறிப் போச்சு. நம்ம புதுக் கவி வேங்காயவண்ணன் இருக்கிறாரே, அவருக்குத்தான் இப்ப மார்க்கெட். அவருடைய பாட்டு இருந்தால்தான் டிஸ்ட்ரிப்யூட்டருங்க 'ஃபைனான்ஸ்' பண்றாங்க. நான் என்ன பண்ணட்டும், சொல்லுங்க?''





ஒரு காலத்தில் திலீபனிடம் ஒரே ஒரு பாட்டுப் போட்டு வாங்குவதற்காக ஒன்பது நடைகள் நடந்த படக் கம்பெனி யொன்றின் முதலாளி சொன்ன பதில் தான் இது.

இன்னொரு கம்பெனியின் முதலாளி: "யாருங்க நீங்க? எங்கோ பார்த்த ஞாபகம்?..."

"நான்தான் ஐயா, திலீபன்."

"திலீபன்?... ஓ.... முன்னெல்லாம் பாட்டுப் போட்டுக்கிட்டு இருந்தீங்க, இல்லே?"

"இப்பவும் அதற்காகத்தான் வந்திருக்கிறேன்...."

"பாட்டுப் போடவா? உங்களுக்கு என்ன தெரியும்? தெரிந்தால், இதோ பாருங்க; எங்கள் படத்துக்கு நானே ஒரு பாட்டு 'கவனம்' செய்திருக்கிறேன். இதைப் படிச்சுப் பார்த்துவிட்டுச் சொல்லுங்க, பார்க்கலாம்?"

கவிஞர் திலீபன் எழுந்து வெளியே ஓடிவந்து விட்டார். இதே கம்பெனியின் மூன்று படங்களுக்குத் தாம் பாட்டுப் போட்டுக் கொடுத்தது நிஜம்தானா என்று அவருக்கே சந்தேகமாகி விட்டது. பட முதலாளியே பாட்டைக் 'கவனம்' செய்து கொண்டாராமே!

அவருக்குப் பழக்கமான இன்னும் சில படக் கம்பெனிகள் இப்போது இருக்குமிடமே தெரியாமல் மறைந்துவிட்டிருந்தன. அவ்விடங்களில் புதுப் புதுப் பெயர்கள் தாங்கிய போர்டுகள் தொங்கின. அவற்றில் பழைய முதலாளிகள் சிலரும் இருந்தனர். ஆனால் கடன்காரர்களுக்கு 'டிமிக்கி' கொடுப்பதற்காகத் தங்கள் 'கம்பெனி'ப் பெயரையே மாற்றிக்கொண்டிருந்தார்கள்.

கவிஞருக்கு இப்போதுதான் சினிமா உலகத்தின் உண்மை சொரூபம் புலப்பட்டது. படக் கம்பெனிகளின் படி ஏறி இறங்குவதை நிறுத்திக்கொண்டார். டாக்சிச் செலவுக்குப் பணம் இல்லாததே அதற்குக் காரணம். அவர் 'ஓகோ' என்று இருந்த காலத்தில் அவருடைய எல்லாவிதமான 'தேவை'களையும் செய்து தருவதற்கென்றே பல 'எடுபிடி'கள் அவரைச் சுற்றிக் கொண்டிருந்தார்கள். இப்போது அவர்களில் ஒரே ஒரு பையன்தான் எஞ்சி நின்றான். தினமும் யாராவது ஒரு பட முதலாளியிடம் ஐந்தோ பத்தோ கடன் கேட்டுக் கடிதம் எழுதி அந்தப் பையனிடம் கொடுத்து அனுப்புவார் கவிஞர். அப்படிக் கிடைக்கும் பணத்தில் பாதியை நடு வழியிலேயே 'ஸ்வாகா' பண்ணி விட்டு மீதத்தைக் கொண்டு வந்து கொடுப்பான், அந்தக் குருவுக்கு மிஞ்சிய சீடன். இந்த விதமாகச் சில காலம் அவருடைய 'வண்டி' ஓடியது. அப்புறம் அதுவும் படுத்து விட்டது. பையனைப் பார்த்ததுமே, 'என்னடா, கவிஞர் நிதியா? இப்போது எங்களுக்கே யாராவது நிதி திரட்டிக் கைங்கரியம் பண்ண வேண்டிய நிலைமை. போயிட்டு வா!' என்ற பதில்களைக் கேட்டுக் கேட்டு அலுத்துப் போன பையன் ஒரு நாள் கவிஞரிடம் சொல்லிக் கொள்ளாமலே கம்பி நீட்டி விட்டான். இப்போது அவன் புதுக் கவிஞர் வெங்காயவண்ணனின் தொண்டரடிப் பொடியாழ்வார்களில் ஒருவன்!



" இருக்கிற எண்ணெயை எல்லாரும் தேய்ச்சிண்டாச்சு, நம் மாப்பிள்ளைக்குத் தான் இல்லே!"

"கொஞ்சம் இரு. கார் ஷெட்டிலிருந்து டீசல் எண்ணெய் கொண்டு வந்துடறேன். இந்தக் கலப்பட யுகத்திலே எங்கே வித்தியாசம் தெரியப்போகிறது!"

வாழ்க்கையில் எந்தச் சுகங்களையும் காணாமலே இருப்பது அவ்வளவு வருத்தம் தரக்கூடியது அல்ல; ஆனால் அவற்றை ஓரளவாவது அநுபவித்து ருசித்த பின் அவை கிடைக்காமற் போவதுதான் மிக மிகத் துன்பம் தரத்தக்கது. கவிஞர் திலீபன் எல்லா விதச் சுகங்களையும் அநுபவித்தவர். சுகங்கள் என நினைத்துச் சூழ்நிலையால் சில பழக்கங்களையும் தாமாகவே சில பழக்கங்களையும் கைக்கொண்டு அவற்றுக்கு அடிமையாகிக் கிடந்தவர். இப்போது அவை ஒவ்வொன்றும் அவருக்கு எட்டாக் கனியாக நின்று அவரைப் பாடாய்ப் படுத்தின.

திலீபனின் குடும்பம் எங்கோ ஒரு கிராமத்தில் இருந்தது. அது சீலத்தை ஓம்பிச் சிறப்படைந்த குடும்பமே தவிர செல்வச் செழிப்பானதல்ல. அவர் பேரும் புகழும், பணமுமாகப் புரண்டுகொண்டிருந்த காலத்தில் அவருடைய குடும்பத்தார் யாரும் அவரை அண்டியதில்லை. காரணம் அவரது வரைமுறையற்ற திருவிளையாடல்களை நிறையக் கேள்விப்பட்டு விட்டார்கள். எனவே, அவர் சிரமதசையில் இப்போது உழன்று கொண்டிருந்தது பற்றியும் அவர்கள் கவலைப்படவில்லை, இரக்கமும் காட்டவில்லை. தனி மரமாக நின்று தத்தளிக்க ஆரம்பித்தார் கவிஞர்.

அப்படியும் சினிமா உலகம் அவரை ஒரேயடியாகப் புறக்கணித்துக் கண்ணை மூடிக்கொண்டு விட்டது என்றும் சொல்ல முடியாது. உளுந்துப் பயறுக்கு எண்ணெய் பூசிப் பூசி வெய்யிலில் காய வைத்துத் தோலை உரிப்பார்களே, அது போல அவருக்கு அவ்வப்போது ஒன்றிரண்டு 'சான்ஸ்'கள் கொடுத்து அவரை வாழவும் விடாமல், சாகவும் விடாமல் கண்ணாமூச்சி காட்டிக் கொண்டிருந்தது. கவிஞரின் 'ஆட்சிக் காலத்தில்' பாட்டொன்றுக்கு இரண்டாயிரம் ரூபாய் வாங்கிக் கொண்டிருந்தார்; இப்போதோ அவருடைய பாட்டுக்கு 'ரேட்டு' இருநூறு. பாடல் பதிவாகு முன் அவர் பணத்துக்குப் போய் நின்றதால், சில சமயம் அந்த இருநூறும், நூறு – எழுபத்தைந்துக்குக் குறைந்துவிடும். தேவை என்று தெரிந்த இடத்தில், ஒன்றைப் பாதியாக வெட்டித் தருவது முதலாளி வர்க்கத்தின் பரம்பரைக் குணம் அல்லவா? வெற்றிலை பாக்குக் கடைகளில் கூடக் கடன் வைக்கும் சில 'குல்மால் குபேர'ப் படக் கம்பெனிகள் அவருக்கு ஐம்பதோ அறுபதோ கொடுத்துக் கணக்கைத் தீர்த்துவிடுவதும் உண்டு.

பணம் கைக்கு வருவதற்கு முன்பே பழைய ஆசைகள் பலவற்றை மனத்தில் பலமாக வளர்த்துக் கொள்வார் திலீபன். பணம் வந்ததும் காய்ந்த மாடு கம்பங் கொல்லையில் புகுந்த மாதிரி கண்மண் தெரியாமல் 'விளையாட' ஆரம்பித்து விடுவார். இரண்டே நாட்களில் எல்லாம் காலியாகி மீண்டும் 'நில் பாலன்ஸ்' நிலைமை ஏற்பட்டுவிடும்.

இன்றும் அப்படித்தான். மார்க்கெட் நிலவரம் தெரியாத புதுப் படக் கம்பெனி ஒன்றுக்குப் போட்டுத் தந்த ஒரு பாடல் மூலம் கிடைக்க வேண்டிய தொகையில் பாதி கிடைத்தது. அந்த 'மிதப்பில்'தான் கவிஞர் கடற்கரையை நாடி வந்து கன்னி யொருத்தியைப் பிடித்துக் கொண்டு கந்தர்வரசம் பருகுவதற்காக இதோ டாக்ஸியில் போய்க் கொண்டிருக்கிறார்!

க க க க

"போய் வரட்டுமா? பொழுது புலரப் போகிறது."

மயங்கிச் சுருண்டு கிடந்த கவிஞர் மறு பக்கம் புரண்டு படுத்தார். அந்தப் பெண் அவரை அன்போடு தூக்கிச் சுவரில் சாய்த்து உட்கார வைத்தாள். அவர் தலை தொங்கித் துவண்டது.

"நல்ல மனிதர்தான் நீங்கள்! விந்தையான மனிதர்!"

செருகிச் சுழன்ற கண்களை நிமிர்த்தி ஒரு கோணச் சிரிப்புச் சிரித்தார் திலீபன். "போகிறாயா? என்னைத் தனியே விட்டுப்போக உன்னால் எப்படி முடியும்?"

அவளுக்குச் சிரிப்பு வந்துவிட்டது. அநுதாபத்தோடு அவரை ஏறிட்டுப் பார்த்தாள்.

"அதோ, அந்தச் சட்டைப் பையில் பணம் இருக்கிறது; எடுத்துக்கொள்!"

அவள் உரிமையோடு அவருடைய சட்டைப் பையிலிருந்து சில ரூபாய் நோட்டுக்களையும், சில்லறைக் காசுகளையும் எடுத்தாள்.

"எவ்வளவு இருக்கிறது?"

"இருபத்தைந்து ரூபாயும் சில்லறையும்....."

"சில்லறைக் காசுகளை மட்டும் பையில் போட்டுவிடு; விடிந்ததும் காப்பி குடிக்க வேண்டும்."

அவள் அவ்வாறே செய்தாள். —

"போய் வரட்டுமா? என் அம்மா அங்கே எப்படி இருக்கிறாளோ?..."

"சரி; மீண்டும் எப்போது வருவாய்?"

"வர வேண்டுமா?"

"ஆமாம்; உன்னை நான் மிகவும் நேசிக்கிறேன்."

இதைக் கேட்டு அவள் கலகலவென்று நகைத்தாள்.

"நாளை விட்டு மறுநாள் வருகிறாயா?"

"அவசியம் வருவேன்."

"ஒன்று கேட்க மறந்துவிட்டேனே? உன் பெயர் என்ன?"

அவளுக்கு மீண்டும் சிரிப்பு வந்து விட்டது. "எத்தனை முறை சொல்வதாம்? என் பெயர் மோகனா!"

"மோகனா?... மோஹினி!... காவிய மோஹினி!... கடற்கரை மோஹினி!... கரும்பு மோஹினி....ஹி, ஹி, ஹி!..."

அவள் நாணிக் கோணி முறுவலித்துக் கொண்டே அங்கிருந்து வெளியேறினாள்.

பொழுது இன்னும் சரியாகப் புலரவில்லை. மீண்டும் சுருண்டு படுத்துக் கொண்டார் திலீபன்.

* * *

மூன்றும் நாள். அந்த மூன்று நாட்களும் திலீபன் 'வெளியே' எங்கும் செல்லவில்லை. இது அவருடைய வாழ்க்கையில் நேர்ந்த ஓர் 'அதிசய விபத்து' என்று தான் சொல்ல வேண்டும்.

இம்மூன்று தினங்களும் அவர் என்ன செய்து கொண்டிருந்தார்? ஏதாவது புதுப் படத்துக்குப் பாட்டுப் போட்டுக் கொண்டிருந்தாரா? அல்லது அந்தக் காரியத்துக்காகப் பழம் பாடல் நூல்களை மேய்ந்து கொண்டிருந்தாரா? இல்லை; சிந்தித்துக் கொண்டிருந்தார்! எதைப் பற்றி? யாரைப் பற்றி? தம்மைப் பற்றியே அவர் சிந்தித்துக் கொண்டிருந்தார்! இதுவும் அவரது வாழ்க்கையில் நேர்ந்த 'விந்தையான விபத்து' என்றே சொல்ல வேண்டும்!

'இனி முன்போல் நிலைத்த படி முயன்று என் தேவைகளை நிறைவாக்கிக் கொள்ள இயலாது. வருமானம் வறண்டு விட்டது. வயதும் வளர்ந்து போகிறது. ஆனாலும் நானே ஏற்படுத்திக் கொண்ட பழக்கங்களைக் கைவிட என்னால் முடியவில்லை. இதற்கு என்ன செய்வது? திருமணம் செய்து கொள்ளலாம். ஆனால் வரைந்த 'ரன்புட'ஞுமிவிட்ட எனக்குப் பெண் கொடுக்க யார் முன் வருவார்கள்? அப்படியே கொடுத்தாலும் அவளை வைத்துக் கொண்டு குடும்பம் நடத்த வேண்டும். அரிசி, பருப்பு, உப்பு, புளி, மிளகாய் தேட வேண்டும். அப்புறம் குழந்தை குட்டிகள் என்று பிறந்தால் அவற்றையும் வைத்துக் கொண்டு மாரடிக்க வேண்டும். இதெல்லாம் பெரிய தொல்லை. இந்தத் தொல்லைகள் இல்லாமலே அந்தத் 'தொல்லை'யைத் தீர்ப்பது எப்படி ?' —

நீண்ட நெடுஞ் சிந்தனை யாத்திரைக்குப் பின் அன்று மாலை ஆறு மணிவாக்கில் ஓர் அருமையான முடிவைக் கண்டார் அவர். உற்சாகமாக எழுந்து குளித்து விட்டுப் புத்தாடையும் புதுப் பொலிவுமாக ஹோட்டலுக்குப் போய்ச் சாப்பிட்டு விட்டுக் கையோடு சில பட்சணங்களையும் 'பார்சல்' கட்டி வாங்கிக் கொண்டு தம் வீட்டுக்குத் திரும்பி வந்து எவருடைய வரவையோ ஆவலுடன் எதிர்பார்ப்பவர் போல் வராந்தா கட்டைச் சுவர் மேலேயே உட்கார்ந்து இடக்கலானார். அந்த 'எவரோ' வேறு யாருமல்ல; மோகனாதான்!

அவள் இன்று வருவதாகச் சொல்லிப் போனாள் அல்லவா? ஏனோ வரவில்லை.

திலீபனுக்கு ஒரே ஏமாற்றம்! மறு நாளும் அதற்கு அடுத்த நாளும் கூட அந்த மோகனா வரவில்லை. திலீபனின் மனத்தில் கனல் புரண்டது. அவரால் வீட்டில் தங்கி இருக்கவே முடியவில்லை. அவளுடைய இருப்பிடம் அவருக்குத் தெரியாது. அதைக் கேட்டுத் தெரிந்து கொள்ளாமல் போய் விட்டோமே என்று தம்மையே கடிந்து கொண்டு தவிக்கலானார்.

இந்தச் சமயம், மோகனாவே அங்கு வந்து விட்டாள்! திலீபன் மகிழ்ச்சியில் திக்குமுக்காடினார். அவளுடன் எதிர் சென்று வரவேற்றார்.

ஆனால், மோகனாவோ? அவள் முகம் வெளுத்துச் சாம்பியிருந்தது. கண்கள் சிவந்து நீரை வழிய விட்டன. சோகப் பதுமையாகச் சோர்ந்து துவண்டு காணப்பட்டாள் அவள்.

"என்ன மோகனா! சொன்ன சொல்லை மறந்து விட்டாயே! என் சொர்க்கக் கதவை மூடிவிட்டாயே!" என்று சினிமா பாணியில் கேட்டார் திலீபன்.

அவள் வாய் திறவாது மௌனமாக நின்றிருந்தாள். இப்போதுதான் அவளுடைய நிலைமை அவருக்குப் புரிந்தது. திடுக்குற்றார். "மோகனா ! ஏன் அழுகிறாய்? என்ன நடந்தது?"

"என் அம்மா இறந்து விட்டாள் ! அதனால்தான் நான் சொன்ன நாளில் இங்கு வரமுடியவில்லை."—அவள் விசும்பி அழுதாள்.

கவிஞருக்குத் தர்மசங்கடமாகி விட்டது. அவரும் அவளுடைய துக்கத்தில் கரைந்தவர் மாதிரி கொஞ்ச நேரம் பாவலாப் பண்ணிப் பிறகு பலபடியாக ஆறுதல் கூறிச் 'சரமகவி' பாடிவிட்டு, "என்ன செய்வது? எல்லாம் ஈசன் செயல்! நம்மால் யாது செய்ய இயலும், சொல்!" என்று வேதாந்தமாக இரண்டு வார்த்தைகள் சொல்லி வைத்தார். "இந்தத் துயரத்திலும் என்னை மறவாமல் வந்தாயே! நான் பாக்கியசாலி."

அவருடைய பேச்சு அவளுக்கு இதமாக இருந்தது.

"மோகனா ! உனக்கு ஓர் அதிர்ச்சி தரப் போகிறேன்; அதை உன்னால் தாங்கிக் கொள்ள முடியுமா?" — இள நகையுடன் கேட்டார் திலீபன்.

அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. தலையைச் சாய்த்து அவரை ஓரக் கண்ணால் கவனித்தாள்.

"ஆமாம், மோகனா! மூன்று நாள் சிந்தனைக்குப்பின் எடுத்த முடிவொன்றை உன்னிடம் இன்று கூறப்போகிறேன்."

அவளுக்கு உள்ளூறச் சிறிது அச்சம் ஏற்பட்டது. பரபரப்புடன் நிமிர்ந்தாள்.

"உன் தாயார் இறந்து விட்டதாகச் சொல்கிறாயே, இனி யாருடைய துணையில் எப்படி வாழ உத்தேசம் ?"

மோகனாவுக்கு அழுகை வந்துவிட்டது. அவள் பதிலேதும் சொல்லாமல் விம்மிப் பொருமினாள்.

"அழாதே, மோகனா! நான் சொல்வதைக் கேள்: இன்றிலிருந்து என்னுடைய துணையிலேயே நீ இருக்கலாம். உன்னை என் வீட்டில் வைத்துக் கொள்வது என்று முடிவு செய்துவிட்டேன்."

அவள் இதைக் கேட்டு நிஜமாகவே அதிர்ச்சியடைந்து விட்டாள். அது ஆனந்த அதிர்ச்சி. அவளுக்குத் தொண்டை அடைத்தது. அப்படியே தரையில் உட்கார்ந்து கவிஞரின் கால்களைக் கட்டிக் கொண்டாள்.

"சேச்சே! இதெல்லாம் சினிமா பாணி! எனக்கு இந்த மாதிரிக் காட்சிகளைத் திரையில் பார்த்துப் பார்த்துப் புளிப்புத் தட்டி விட்டிருக்கிறது. எழுந்திரு, எழுந்திரு!" என்று சிரித்துக் கொண்டே கூறி அவளைத் தூக்கி நிறுத்தினார் திலீபன். அவள் வெட்கத்துடன் தலை கவிழ்ந்து நின்றாள்.

"சரி; உள்ளே போ! நான் ஹோட்டலுக்குச் சென்று ஏதாவது வாங்கிக் கொண்டு வருகிறேன்" என்று வெளியே செல்லத் திரும்பினார் கவிஞர்.

"ஒரு விஷயம்....."

அவர் சட்டென்று நின்று அவளைப் பார்த்தார்.

"நான் இனி உங்களுடனேயே இருக்கலாம் என்கிறீர்களே, அது எந்த வகையில் ?"

"அப்படியென்றால்?"

"எந்த ஸ்தானத்தில் என்று கேட்கிறேன்."

"நீ எதை விரும்புகிறாய் ?"

"மனைவியாக இருக்க!"

"இவ்வளவுதானே? இருந்து விட்டால் போகிறது."

"அதற்கு ஓர் அத்தாட்சியாக....."

"கல்யாணமா ?"

"அதுதான் நல்லது."

"நாளைக்கு யோசித்துச் சொல்கிறேனே !"

"மூன்று நாட்கள் யோசனைக்குப் பிறகுதானே இந்த முடிவுக்கு நீங்கள் வந்திருக்கிறீர்கள் ?"


"ஆ....மாம்;.... ஆனால், என்னிடம் இப்போது...."

"மாலை வாங்கப் பணம் இல்லையா ? பரவாயில்லை. என்னிடம் தாலிக் கயிறு இருக்கிறது!" என்று நாணப் புன்சிரிப்புடன் கூறிக் கொண்டே தன் பிளாஸ்டிக் சஞ்சியிலிருந்து பித்தளைத் தாலி கோர்த்த ஒரு மஞ்சள் கயிற்றை எடுத்து அவரிடம் நீட்டினாள் மோகனா.

கவிஞருக்கு ஒரே அதிர்ச்சி ! அவளுக்கு அதிர்ச்சி தரப் போவதாகச் சொன்ன அவரே இதைக் கண்டு அதிர்ந்து விட்டார். "தாலிக் கயிறு ? இது ஏது உனக்கு? இதை ஏன் எடுத்து வந்தாய்? என்னுடைய அந்த முடிவு உனக்கு எப்படித் தெரிந்தது? யார் உன்னிடம் சொன்னது ?"

அவள் மெல்லச் சிரித்துக் கொண்டே, "எனக்கு உங்களின் புரட்சிகரமான இனிய முடிவு சற்று முன்வரை தெரியவே தெரியாது. ஆனாலும் இந்தத் தாலிக் கயிறு என்னிடம் இருக்கிறது. இன்றல்ல, நேற்றல்ல; ரொம்ப நாட்களாகவே இதை என் பையில் வைத்திருக்கிறேன். ஏனென்றால், இது என் தொழிலுக்கு மிகவும் தேவைப்பட்டது. அதாவது, உங்களைப் போன்றவர் யாராவது என்னை எங்காவது ஹோட்டலில் அறை எடுத்துக் கொண்டு அழைத்துப் போனால், அங்கே எங்களைப் பற்றிப் பிறர் சந்தேகப்படாமலிருக்க — அந்த நபரும் நானும் கணவன் மனைவி போல் காட்டிக் கொள்ள — இந்தத் தாலிக் கயிற்றைக் கழுத்தில் மாட்டிக் கொள்வேன். அதற்காகவே இது எப்போதும் என்னிடம் தயாராக இருக்கும்" என்றாள்.

மோகனா இப்படிச் சொன்னபின், கவிஞர் திலீபனின் முடிவு என்ன ஆயிற்றோ, தெரியவில்லை!



மங்கள ஸ்நானம் செய்து, புத்தாடை அணிந்து வீடு நிறைய விளக்குகள் ஒளி வீச செல்வத் திருமகளை வரவேற்கும் தீபாவளித் திருநாள்...நிறைவும் மகிழ்ச்சியும் களிநடம் புரியும் மங்கல நன்னாள்!

எதிர்காலத்தைப் பற்றிய கவலை சிறிதும் இல்லாமல், நிம்மதியாக, உங்கள் குடும்பத்தினருடன் இந்தப் பண்டிகையைக் கொண்டாடி மகிழ்கிறீர்கள்—உங்கள் எதிர்காலத் தேவைகளைத் திட்டமிட்டுப் பாதுகாப்பளிக்கும் பொறுப்பைத்தான் பாங்க் ஆஃப் பரோடா ஏற்றுக்கொண்டுவிட்டதே! சேமிப்பே மகிழ்ச்சிக்கு அடிப்படை.

தி பாங்க் ஆஃப் பரோடா லிமிடெட் (ஸ்தாபிதம்: 1908) தலைமைக் காரியாலயம்: பரோடா

JWT-BB-4005


KCP
தீபாவளி
வாழ்த்துக்கள்!
கிருஷ்ணா
மிட்டாய்கள்
மங்களகரமான நாளில்
மகிழ்ச்சியூட்டும் ஒரு
மகத்தான பரிசு
தயாரிப்பவர்கள் :
தி கே. ஸி. பி. லிமிடெட்
38, மவுண்ட் ரோடு, சென்னை-6.



ஏ. ஹெச் 108



'பரதன்'

மாணிக்கத்துக்கும், மரகதாம்பாளுக்கும் வெகு காலம் பிள்ளைப் பேறு இல்லாமல், அவர்கள் போகாத க்ஷேத்திரங்கள் இல்லே, தொழாத தெய்வங்களில்லே, நாடாத சாதுக்கள் இல்லே, கேட்காத ஜோசியம் இல்லே; இப்படி ஆண்டுகள் பல கழிந்து அயர்ந்து போன மாணிக்கம் தம்பதிகளுக்கு, அவர்கள் நம்பிக்கை, ஆசை எல்லாம் போனபின் திடீரென்று புத்திர பாக்கியம் பெறுவதென்றால் எப்படியிருக்கும்?

''தெய்வம் கைவிடாது!'' என்றாள் மரகதாம்பாள்.

''ஆமாம், கிழக்காலத்திலே வந்து கழுத்தறுக்க இப்ப ஒரு பிள்ளை இல்லாமல் தான் அழுதது!'' என்றார் மாணிக்கம்.

உண்மையிலேயே பிறந்த ஆண் மகவு, பிறக்கும் மற்ற எல்லாக் குழந்தைகளை யும்விட அதிகமாகவும், பலமாகவும் அழுது கொண்டே பிறந்தது. அதனால் தான் அத்தைபம்மா அந்தக் குழந்தைக்கு ''நித்தியானந்தம்'' என்ற அர்த்த புஷ்டியுள்ள பெயரை இட்டாள்.

நித்தியானந்தத்தின் பெற்றோர்கள் அவனை மிகப் பெருமையுடனும் செல்லமாகவுமே வளர்த்தார்கள். அவனைப் பள்ளிக்கூடத்தில் சேர்த்துப் படிக்க வைக்க முயன்றார்கள். நித்தியானந்தம் படிப்புக்கும் தனக்கும் எவ்வளவு தூரம் என்பதை நிரூபித்து வந்தான். ஆனால் அத்தை வைத்த பெயரை மட்டும் காப்பாற்றி வந்தான். விளையாட்டுக்களிலும், கேளிக்கைகளிலும், சில்விஷமங்களிலும் படிப்பில் இல்லாத ஆர்வத்தைக் காட்டி வந்தான். படிப்பில் இல்லாத சோபையை மற்ற அம்சங்களில் கண்ட ஆசிரியர்கள் எப்படியோ அவனை உயர் வகுப்புக்கு அனுப்பி வந்தார்கள். அதற்கும் அதிர்ஷ்டம், முகராசி வேண்டுமல்லவா? மேலும், மாணிக்கம் அந்த ஊர்ப் பள்ளியின் நிர்வாகக் குழுத் தலைவர் என்ற முக்கிய விஷயத்தை ஆசிரியர்கள் மறக்க முடியுமா ? கடைசியில் எஸ்.எஸ். எல். ஸி.யையும் தாண்டிக் கலாசாலை வாயிலை எட்டி விட்டான் நித்தியானந்தம். கலாசாலையிலும் படிப்பைத் தவிர மற்ற விஷயங்களில் பலே கைகாரன் என்ற பெயரை எடுத்தான். கால்பந்து, ஹாக்கி முதலிய விளையாட்டுக்களிலும், நாடகத்தில் நடிப்பது, மேடைப் பேச்சு முதலிய கலைகளிலும் முன்னணியில் விளங்கினான். அவனுடைய சாமர்த்தியம், விளையாட்டு, கலையரங்கு, பேச்சரங்குகளில் மட்டுமில்லே; பரீட்சை அரங்கிலும் ஒளி வீசிற்று. பரீட்சைக்கு முந்தியே கேள்வித் தாள்கள் அவன் கைக்கு வந்து விடும். அப்படியும் அவற்றுக்குச் சரியான பதில் பரீட்சையில் எழுதுவதற்குப் பாடப் புத்தகங்களுடன் தொடர்பு இருந்தால்தானே முடியும்? ஆகவே, பக்கத்து மாணவன், முன் உட்கார்ந்திருக்கும் மாணவன் இவர்கள் விடைத் தாள்களைப் பார்த்துக் 'காப்பி' அடிப்பதில் நிபுணனானான். இப்படித் தன் தனிப் புத்தி சாமர்த்தியத்தால் பட்டமும் பெற்று விட்டான்.

இதற்குள் பெற்றோர்களும், தாங்கள் பெற்ற நித்தியானந்தத்தை விட்டு, தங்களைச் சிருஷ்டித்த பரம்பொருளின் பொற்றாமரைத் திருவடிகளை அடையும் நித்தியானந்தத்தைப் பெறவே, நமது கதாநாயகன் நித்தியானந்தத்துக்கு உலகில் இருந்த கடைசித் தளைகள் தளர்ந்தன. இனி மேல்தான் வாழ்க்கைப் போர் ஆரம்பமாயிற்று. நித்தியானந்தமா அதற்கு அஞ்சுபவன்? தன் சாமர்த்தியத்தினால் தனக்கு இயற்கையாக இருந்த கற்பனா சக்தி, நடிப்புத் திறமை, ஒரு தனி குயுக்திப் புத்தி யாவற்றையும் நன்கு பயன்படுத்திக் கொண்டான்.

தகப்பனார் வைத்து விட்டுப் போன சொற்பச் சொத்து கரைவதற்கு எத்தனை நாட்கள் பிடிக்கும்? அதையறிந்த நித்தியானந்தம் வாழ்க்கையில் முன்னேறக் குறுக்கும் பாதைகளைக் கண்டுபிடிப்பதில் முயன்றான்.

அதிர்ஷ்டம் அவனைத் தேடிக் கொண்டு வந்தது — ஓடும் ரயிலில்!

இணை பிரியாத நட்புக்கள் சில சமயம் ரயில் வண்டித் தொடரில் உதயமாகும்.

அது போல் ஒரு சமயம் நித்தியானந்தம் தன் எதிர்கால வாழ்வுக்கு வழி தேடி ரயிலேறிப் போகும் போது, அப்பாவி அப்பண்ணுவை விதி அவன் பக்கத்தில் உட்கார வைத்தது. ரயில் ஸ்நேகிதம் முதலில் மௌனத்தில் ஆரம்பிக்கும்; பிறகு தாகத்துக்குப் பக்கத்தவர் வைத்திருக்கும் கூஜாவில் உள்ள தண்ணீரை நாடும். தாக சாந்தியானதும் பேச்சு வார்த்தை மெல்லத் தொடங்கும்; எந்த ஊர், என்ன பெயர், பூர்வோத்திரம், செய்யும் தொழில், குடும்பக் கணக்கெடுப்பு முதலிய விஷயங்களில் பரஸ்பர ஆராய்ச்சியில் கொண்டு விடும். கடைசியில், இறங்கும் ஸ்டேஷன் வருவதற்குள் பிரிய வேண்டிய பிரயாணிகள், பிரிவாற்றாமையுடன் அவரவர்கள் போக வேண்டிய இடத்துக்குச் செல்வார்கள்.

நித்தியானந்தம் — அப்பண்ணு நட்பு இந்த ரயில் முறைக்கு விலக்கல்ல. அப்பண்ணு ஒரு மிளகாய் வியாபாரி என்று நித்தியானந்தம் அறிந்து கொள்ள ரயில் ஒரு ஸ்டேஷனிலிருந்து அடுத்த ஸ்டேஷனுக்குப் போய் நிற்கும் நேரம்கூட ஆகவில்லை. அவர் ஸீட் அடியில் வைத்திருந்த சாக்கு மூட்டையிலிருந்து கிளம்பிய நெடி மூக்கைத் துளைத்தது; தும்மல் வந்தது. நித்தியானந்தத்தின் தும்மல் அதிர்ச்சி தாளாத அப்பண்ணு மிளகாய் மூட்டையை 'ஸீட்' அடியிலிருந்து அகற்றி, நடைபாதையில் மூக்குக்கு எட்டாத தூரத்தில் வைத்தார். நித்தியானந்தத்தின் மூக்குக்குத் தொந்தரவு கொடுத்ததற்கு மனமார்ந்த மன்னிப்புக் கோரினர். நித்தியானந்தமும் அதைத் தாராளமாக அளிக்கும்வகையில், "பரவாயில்லை, இதென்ன பிரமாதம்! இதென்ன ஆந்திரா மிளகாயா? அதுதான் நெடி அடிக்கிறது! இதைவிட 'ஜ. ஹெச். 108' மிளகாய் மூட்டை மேலேயே படுத்துத் தூங்கிக்கொண்டு வந்திருக்கிறேனே! என்ன செய்து விட்டது!" என்று அலட்சியமாகச் சொல்லவே, அப்பாவி அப்பண்ணுவுக்கு ஆச்சரியக் கொட்டாவி வந்தது.

"நிஜமாகவா? 'ஜ.எச்.' என்றீர்களே, என்ன அர்த்தம்?" என்று தெரியாத்தனமாகக் கேட்டு விட்டார்.

"ஜ. ஹெச். என்றால் எக்ஸ்ட்ரா ஹாட்! அது ஒரு ஸ்பெஷல் ரக மிளகாய்...... அந்த மிளகாய் ஒன்றுக்கு ஒரு மிலியன் மெகவாட் ரேடியம் சக்தி உண்டு...." என்றதும் அப்படியே பிரமித்துப்போன அப்பண்ணு, "வாட்....வாட்? மிலியன் மூகவாட்டமா?..... அம்மாடி......." என்று திகைத்தார்.

"முகம் வாட்டத்தான் காணும், அந்த மிளகாயைக் காயவைத்துச் சாப்பிட்டால்! அப்படியே பச்சையாகத் தின்ன வேண்டும்" என்றான் நித்தியானந்தம்.

"பச்சை பச்சையாகவா? தின்னவா? மிளகாயா? முடியுமா? எப்படி?...." என்று ஒற்றைப் பதக் கேள்விக்குறிகளை அடுக்கிக் கொண்டு போனார் அப்பண்ணு.

"ஆமாம், மிஸ்டர்.... உங்க பேர் என்ன....(அதைச் சொன்னதும்)..... மிஸ்டர் அப்பண்ணு.... நீங்கள் சுத்த அப்பாவியாக இருக்கீங்களே?" என்றான் நித்தியானந்தம்.

"அதெப்படி அந்தப் பட்டப் பெயர் உங்களுக்குத் தெரிஞ்சுது? எங்க பாட்டி செல்லமா கூப்பிட்ட பெயரில்லையா அது?" என்றார் அப்பண்ணு.

"உங்கள் பாட்டி ரொம்பத் தீர்க்கதரிசியா இருந்திருக்கணும்..." என்றான் நித்தியானந்தம்.

"இந்த ஜ. எச். ரகம் சொன்னீங்களே, அது எங்கே கிடைக்கும்?... எங்கே பயிரிடறாங்க.....? நீங்க எதுக்கு ஜ. எச்.சில் எல்லாம் போய்ப் படுத்தீங்க...? அந்த மிளகாய் மூட்டையைத் தூக்கிகிட்டு வர்ற லாரிங்களிலே நீங்களும் வர்றதுண்டா?" என்று அப்பண்ணு வினவ, நித்தியானந்தம் சற்றுக் கனைத்துக் கொண்டு நிமிர்ந்து உட்கார்ந்து விளக்கம் செய்யத் தொடங்கினான்.

"லாரிக்கும் எனக்கும் இது வரை சம்பந்தம் கிடையாது..... கடவுள் புண்ணியத்திலே...... இனிமே ஏதாவது அப்படி விபத்து ஏற்பட்டாத்தான்..."

"ஹரா ஹரா...... சிவ சிவ....அப்படி எல்லாம் லாரி விபத்து ஏற்பட வேண்டாம் — அதுவும் உங்களைப் போலொத்த வயசுப் பிள்ளைகளுக்கு......"





"..... ஜ. ஹெச் என்கிற ரகம்.... மிளகாயே இல்லே......"

"பின்னே.....!"

"அது மிளகாயைப் போலே—ஆனால் மிளகாயை விட ரொம்பக் 'காட்ட'மான சரக்கு......."

"அப்படியா? எங்கே விளையுது, சொல்லுங்க...... ஒரு போகமா, இருபோகமா? ஆறு மாசப் பயிரா, இல்லே, ஒரு மாசப் பயிரா..... வயல் பயிரா? தோட்டத்துப் பயிரா? விவரமாச் சொல்லுங்க....." என்று அப்பண்ணு வியாபார ஆவலுடன் கேட்டார்.

"அது பயிருமில்லே....காயுமில்லே ஐயா! அது மிளகாய் மாதிரியே ஒரு பொருள்..... செயற்கைப் பொருள்.... ரசாயனங்களைக் கொண்டு செய்யறது. விளையறதில்லே. மிளகாய் மாதிரி காரசாரமா இருக்கும்படி ரொம்ப ஆராய்ச்சிக்கப்புறம் கண்டு பிடிக்கப்பட்ட செயற்கை மிளகாய்..... இதைப் பெரிய மிஷின் எல்லாம் வச்சு ஃபாக்டரியிலே செய்யறது..." என்றான் நித்தியானந்தம்.

"ஃபாக்டரி மிஷின் மிளகாயா? எங்கே இருக்கு, ஃபாக்டரி...அட்ரஸைக் குடுங்க......." என்றார் அப்பண்ணு.

இந்த ஈ. ஜெறச். மிளகாய் ரகமும் அது செய்யும் முறையும், அதற்கான இயந்திர சாதனங்களும், தொழிற்சாலையும் படிப்படியாக அப்போதுதான் முதன் முதலாக நித்தியானந்தத்தின் மனக் களத்தில் உதித்துத் துளிர்விட்டுக் கொண்டு வந்தன.... அட்ரஸ் எங்கிருந்து கொடுப்பது? ''அதெல்லாம் ஒரு பெரிய ரகசியம்..... வெளியில் சொல்லக்கூடாது..... வெளியில் யாருக்கும், முக்கியமாக, சர்க்காருக்கும் உணவு அதிகாரிகளுக்கும் தெரியக்கூடாது....'' என்றான். பிறகு நித்தியானந்தம் தாழ்ந்த குரலில் அதை ரகசியமாக ஓதினான்.

வியாபார ரகசியங்களிலும், ரகசிய வியாபாரங்களிலும் அநுபவம் பெற்றிருந்த அப்பண்ணாவுக்கு, இரகசிய மிளகாய் உற்பத்தியில் பேரார்வம் உண்டாயிற்று. மிளகாய் நெடியை அதிகம் பெருக்குவானேன்......அதுவும் ரகசிய விஷயத்தை—மூடினாற்போல் விடுவதே நல்லது......

இடையில் நடந்த தென்ன வென்றால் மலிவாகச் செயற்கை மிளகாயை உற்பத்தி செய்து வியாபாரம் செய்ய அப்பண்ணாவுக்கு நித்தியானந்தத்தின் நிபுணத்துவம் அத்தியாவசியமாயிற்று. வெறும் கையால் முழம் போட்டுக் கொண்டிருந்த நித்தியானந்தத்துக்குத் தன் புத்தி சாதுரியத்தின் பலனை உலகம் அநுபவித்து உய்வதற்கான சாதனத்துக்கு



சாக்ஷாத் மகாலக்ஷ்மி கடாக்ஷம் தேவையாயிற்று. அப்பாவிப் பட்டம் பெற்றிருந்தாலும் தன் பத்திர அறையில் பல ரகசியப் பூட்டுகளின் பந்தோபஸ்தில் தாண்டவமாடிக் கொண்டிருந்த மகாலட்சுமியின் பரிபூரண அநுக்கிரகம் பெற்ற அப்பண்ணாவுக்கு ஏக புத்திரியாக, மகாலட்சுமியே அவதாரம் எடுத்ததுபோல் ஒரு பெண் பாக்கியம் இருந்தது; உண்மையில் மிஸ் அப்பண்ணாவின் கன்னிப் பெயர் பாக்கியம்தான்!

செயற்கை மிளகாய் ரகசியத்தை அடைய நித்தியானந்தத்தை நாடிய அப்பண்ணா பண்டமாற்று முறையில் பாக்கியத்தை நித்தியானந்தத்தின் கையில் பாணிக்கிரகணம் செய்து ஒப்படைத்து நித்தியானந்தத்தின் மிளகாய் ரகசிய நெடியை நுகர எண்ணினார். அதன் பலனை, 'ஈ ஜெறச்.' உற்பத்தி கம்பெனி உருவாயிற்று. நித்தியானந்தத்தின் சாமர்த்தியத்தால் அப்பண்ணாவின் பொக்கிஷ அஸ்திவாரத்தின் மேல், சர்க்கார் நிதி சகாயத்தைக் கொண்டு, கருங் கற்களால் நிர்மாணிக்கப் பட்ட ஃபாக்டரியும் உருவாயிற்று.

நித்தியானந்தமும், 'ஈ. ஜெறச் 108' உற்பத்தி செய்வதற்கான இயந்திர சாதனங்களை ஜெர்மனியிலிருந்தும், அமெரிக்காவிலிருந்தும் கொண்டு வர வேண்டும் என்று சொல்லி, அப்பண்ணாவின் செலவில் உலகத்தைச் சுற்றிக் கொண்டு வந்தான். வெளிநாட்டுப் பிரயாணத்தைக் கடுமையாகக் கட்டுப்படுத்தி யிருக்கும்போது நித்தியானந்தம் எப்படி பிராங்பர்ட்டுக்கும், பெர்லினுக்கும், லண்டனுக்கும், பர்மிங்காமுக்கும், நியூயார்க்குக்கும், ஹாலிவுட்டுக்கும், டோக்கியோவுக்கும், ஹாங்காங்குக்கும், மாஸ்கோவுக்கும் இப்படி அடிக்கடி போய் வர முடிந்தது என்பது உங்களைப் போல் பலருக்கும் அதிசயமாக இருந்தது. 'ஈ. ஜெறச்.'சைப் போல் அதுவும் ஒரு ரகசியம். அது நித்தியானந்தத்துக்கும் அவனைப் படைத்த ஆண்டவனுக்கும்தான் தெரியும். ஆனால், அவன் துணைவி பாக்கியத்துடன், அதிர்ஷ்ட தேவதையும் அவனிடம் வந்து சேர்ந்தாள் என்பது மட்டும் தெரிகிறது.

''ஈ. ஜெறச்'' உற்பத்திச் சாலையை எப்பொழுது திறக்கலாம், எப்பொழுது 'ஈ ஜெறச்.' மிளகாய் நெடியை நாடெங்கும் மட்டுமல்ல, வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்து கோடீசுவரனாகலாம் என்று அப்பண்ணா துடித்துக் கொண்டே இருந்தார். மாப்பிள்ளை நித்தியானந்தத்துக்கோ அவருடன் நின்று பேசுவதற்குக்கூட அவகாசமில்லை. காலை 'காரவெல்' விமானத்தில் வந்து இறங்குவான்; ராத்திரி 'போயிங்'கில் போய்க்கொண்டே இருப்பான். கடைசியில், ஒரு நாள் அப்பண்ணா, தைரியத்தை ஒரு கையிலும் பாக்கியத்தை ஒரு கையிலும் பிடித்துக் கொண்டு, நித்தியானந்தம் விமான நிலயத்துக்குப் போகும்போது கார்கூட ஏறி உட்கார்ந்து துணிச்சலுடன் கேட்டு விட்டார்:

''மாப்பிள்ளை! ஃபாக்டரியை எப்போது திறக்கலாம்? தொழில் மந்திரியை அழைத்துத் தொடக்க விழாவை வைத்துக் கொள்ளலாமா? அவருக்கு அடுத்த ஆறு மாதத்துக்குத் தேதியே காலியில்லை. தீபாவளியைத் தவிர.... தீபாவளியன்று விழாவை வெச்சுடலாமா?'' என்று கேட்டார்.

நித்தியானந்தம் சற்று யோசித்து, ''ஓ! பேஷா! தீபாவளிக்கு இன்னும் இரண்டு மாதம் இருக்கிறதே! அதுக்குள்ளேயும் அமெரிக்காவிலிருந்து வரவேண்டிய பாக்கிச் சரக்குகளை இந்தவாட்டி பிளேன்லே ஏத்திக் கொண்டு வந்துடறேன்....'' என்றான்.

நித்தியானந்தம் அமெரிக்கா போய் ஒரு மாதமாகியும் ஒரு தகவலும் இல்லை. தீபாவளி நெருங்க நெருங்க அப்பண்ணா இதயம் 'பக் பக்'கென்று அடிக்கத் தொடங்கியது. தொழில் மந்திரியிடம் அவர் போய் முன்னரே தீபாவளியன்று 'ஈ. ஜெறச். 108' தொழிற்சாலையை அவரது திருக் கையால்



பொற் காசி போட்டுத் திறக்க வேண்டும் என்று கேட்க மந்திரியும் ஒப்புக்கொண்டு சொந்தக் காரியதரிசியிடம் டயரியில் குறித்துக் கொள்ளச் சொல்லிவிட்டார். நித்தியானந்தம் வராவிட்டால் என்ன செய்வதென்று திகைத்துப் போயிருந்த மீனவல் அப்பண்ணுவோ, "முருகன் கை விடமாட்டான்" என்று கோயில்கள் ஒன்று விடாமல் தினம் அர்ச்சனை செய்து வந்தான். பாக்கியத்தின் கண்ணீர் மடைவாய் திறந்தபடியே இருந்தது.

தீபாவளிக்கு ஒரு வாரம் முந்தி அப்பண்ணுவுக்கு ஒரு டிரங்கால் வந்தது. அமெரிக்காவிலிருந்து... நித்தியானந்தம் குரல் போல்தான் இருந்தது. அவன் பதினாயிரம் மைலுக்கப்பாலிருந்து பேசுவது சரியாகக் கேட்கா விட்டாலும் சில பதங்கள் மெதுவாகக் காதில் விழுந்தன.

"யெஸ்....... யெஸ்.... ஓகே.... ஹோப்... வெல்.... பைன்... கோ அஹெட்.... யெஸ்.... யெஸ்.... .... அனௌன்ஸ் ஏ. எச். புரடக்ஷன்ஸ் ஷூட் பெஸ் யெஸ்! கம்மிங் வித் ஏ.எச். பார்ட்டி அண்ட் லக்கேஜ்.... புக் ட்வென்டி ரூம்ஸ் இன் இண்டர் நேஷனல் ஹோட்டல்.... ஓ. கே.... டாக்.. கட்....."

அப்பண்ணுவுக்குத் தலைகால் புரியவில்லை; மயக்கம் வரும் போல் இருந்தது. ஒரு மாதிரி சமாளித்துக் கொண்டு, தம் காதில் விழுந்தது புரிந்ததும் புரியாததுமாக இருந்த பதங்களை ஒருவாறு ஒட்ட வைத்து, தெளிவாக்கிக் கொண்டார்....

"ஏ. ஹெச். புரடக்ஷன்ஸ் ஆரம்பிக்கலாம். யாரோ அமெரிக்க நிபுணர்கள் கோஷ்டி இருபது பேர்களுடன் வராப் போகிறது...இண்டர்நாஷனல் ஹோட்டலில் அவர்களுக்குத் தங்க இடம்பிடித்து வைக்க வேண்டும்...." என்று தீர்மானித்து அவ்வாறே செய்தார்.

நித்தியானந்தம் வந்திறங்கும் விமானத்தையும் அவனுடன் வரப் போகும் கோஷ்டியையும் சரக்குகளையும் எதிர் பார்த்துக் கொண்டு மாலையும் கையுமாக ஆகாயத்தையே அண்ணாந்து பார்த்துக் கொண்டு நின்றார் அப்பண்ணு. இருபக்கத்திலும், ஸ்ரீமதி அப்பண்ணுவும் மகள் பாக்கியமும் ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

விமானம் வந்து இறங்கிற்று. கதவு திறக்கப்பட்டது. அப்பண்ணு கண்களைக் கசக்கிக் கொண்டு பார்த்தார். யாரோ பத்துப் பதினைந்து அப்ஸரக் கன்னிகைகள் ஆகாயத்திலிருந்து இறங்குவது போலிருந்தது. அவர்களுக்குப் பின்னும் சிரித்துக் கொண்டு நித்தியானந்தம் கையை உயரத் தூக்கி அசைத்துக் கொண்டே படிகளில் இறங்கி வந்தான்.

கதையை வளர்க்காமல், "மற்றவை திரையில் காண்க" என்ற பல்லவியில் முடிக்க வேண்டியிருக்கிறது.


ஆமாம்.... நித்தியானந்தம் அமெரிக்காவிலிருந்து கொண்டு வந்த சரக்குகள், ஹாலிவுட் 'மின் மினிகள்'. அமெரிக்காவுக்குப் போயிருந்த போது ஹாலிவுட்டில் சினிமாப் படத் துறையில் ஒரு பெரிய புரட்சி ஏற்பட்டிருந்தது. "ஓ. கே. 1008" என்ற புதிய படப் பிடிப்பு நுட்பம்தான் இந்தப் புரட்சி. இந்த முறையில் பிடிக்கும் படங்கள் உண்மையாகவே நம்மைச் சுற்றி நடப்பது போல் பிரமிப்பு உண்டாக்குவதுடன், தாரகைகள் பூசிக் கொள்ளும் வர்ணம், பவுடர், சாயம், வாசனை எல்லாம் நம் மூக்கில் ஏறி ஒரு தனி அநுபவ உணர்ச்சியை ஏற்படுத்தும். இந்தத் தொழில் நுட்ப ரகசியத்தின் முழு உரிமையையும் நித்தியானந்தம் வாங்கிக் கொண்டு நம் நாட்டில் அந்த முறையில் படம் பிடிக்கும் ஏகபோக உரிமையையும் பெற்று வந்திருந்தான். தான் பிடிக்கப் போகும் முதல் படத்துக்கு ஹாலிவுட் நடிக நடிகைகள் சிலரை ஒப்பந்தம் செய்து அழைத்து வரத்தான் (அந்நியச் செலாவணி நெருக்கடியில் இது எப்படி முடியும் என்று கேட்காதீர்கள். படத்தைத் திரையிட உலக உரிமையை டாலர் மதிப்பில் அமெரிக்காவில் முன் கூட்டியே விற்றுவிட்டு வந்திருந்தான். நடிகைகளுக்குச் சன்மானம் ரூபாய் மதிப்பில் கொடுப்பதாகப் பேச்சு..... மேலும் இது கலாசாரப் பரிமாற்றத்தில் சேர்ந்தது.)


ஏ. எச். புரடக்ஷன்ஸ் ஓ.... கே 1008ல் எடுக்கும் முதல் படத்துக்கு, "ஏ. ஹெச் 108" ஸ்டூடியோவில் (மிளகாய் உற்பத்திச் சாலை ஸ்டூடியோ மணம் பெற்றது என்பதைச் சொல்லத் தேவையில்லை) தொடக்க விழா வெகு விமரிசையாக நடைபெற்றது. மந்திரி அவர்கள் திருக்கையால் "ஓ. கே.1008" காமிரா விசையை முதலில் தீபாவளியன்று முடுக்கினர். ஹாலிவுட் நடிகைகள் ஜாலியாக ஆடிய அப்ஸர நடனக்காட்சி சுடப்பட்டது......

படம் விரைவில் வெளிவரும் எதிர் பாருங்கள்.... அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்துக்குள் திரையிடப்படலாம்.... நித்தியானந்தம் மூளையில் வேறு மின்னல் யோசனைகள் தோன்றுமலிருந்தால்.....!




ஓவியத்தைப் பூர்த்தி செய்யுங்கள்
உயர் ஓவியத்தை மகோன்னதமாகச் செய்ய
அதற்கு மெருகு கூட்ட வேண்டும்;
நுண்ணிய நகாச வேலைகள் செய்ய வேண்டும்
அழகும் அப்படித்தான். இயற்கை அழகுக்கும்
தகுந்த முறையில் அழகூட்டினால்தான்
பூரணப் பொலிவுடன் அது ஜ்வலிக்கும்.
AFGHAN SNOW
ESP
ஆப்கன் ஸ்னோ அழகு சாத
னங்கள் உங்கள் அழகு ஓவியத்
தைப் பூரணமாக்கி மறைந்துள்ள
பொலிவுகளை யெல்லாம்
வெளியே கொண்டுவர உதவுகின்றன.
ஆப்கன் ஸ்னோ
அழகு சாதனங்கள்
ஈ. எஸ். பட்டன்வாலா
பம்பாய்-77




WHEN YOU DRESS you look for
perfect fit in your shirt, jacket,
suit .... but
WHEN YOU WEAR A
DHOTY you do not look for
the correct width....
waste your money and in
the bargain torture yourself.
WHY ?
ISSUED BY
THE LAKSHMI MILLS CO. LTD.
COIMBATORE


பெங்கால்
ஜனரஞ்சகம் பெற்ற
முதல் மின் விளக்கு
1932
பெங்கால் எலக்ட்ரிகல்ஸ் கம்பெனி
பெங்களூர் - 3 - சென்னை - 17


பூப்போன்ற
மென்மைக்கு
பிபின்
சேலைகள்
பிபின் சில்க் மில்ஸ் கோ. பிரைவேட் லிட்.
பம்பாய்-28
★ நைலான் ஜார்ஜெட் சேலைகள்
★ "டெரீன்" ஷர்ட்டிங்குகள் & சூட்டிங் துணிகள்
ரோஜா இலைச் சின்னத்தைப் பார்த்து வாங்குங்கள்


இந்த
விழாக்காலம்
அவளுக்கு
ஒரு
உஷா
பரிசளியுங்கள்
பரிசு வழங்குவதற்கு ஏற்ற தருணம் இதுவே.
உங்கள் பரிசு விசேஷமானதாக இருக்கட்டும்.
அது ஒரு உஷா தையல் மிஷின். ஐந்து வகை
மாடல்களில் உங்களுக்கு பிடித்ததை
தெரிந் தெடுங்கள். ஒவ்வொன்றும்
வேலைப்பாடு மற்றும் தரத்தில்
மகோன்னதமாகவும், அநேக நவீன வசதிகள்
பொருந்தியதாகவும் உள்ளது.
உஷா மிஷினில் தைப்பது
அவளுக்கு ஓய்வு நேரத்தில்
மகிழ்ச்சி தருகிறது.
தையலுக்குகந்தது:
சிறந்த யந்திரம்
தையலுக்குக்கந்தது
ஒரு JAY தயாரிப்பு
உஷா
ஜே என்ஜினியரிங் ஒர்க்ஸ் லிமிடெட்,
கல்கத்தா-31.



இந்த திருவிழா காலத்தில்...
நீங்கள் தேர்ந்தெடுக்க கரோனா பாத அணிகள்
கவர்ச்சியான பல மாதிரிகளில் உள்ளன.
சௌகரியமாக அணிவதற்கென்றே தயாரிக்கப்
பட்ட கரோனா பாத அணிகள் நீடித்து
உழைப்பவை—விலைகளும் வெகு நியாயமானவை!
கரோனா பாத அணிகள்
குடும்பத்தினர்
அனைவருக்கும் ஏற்றவை
ஸீதா
வாக்வெல்
ஈஸிவாக்
மன்பஸந்த்
Corona
கரோனா ஸாகு கம். லிமிடெட்
ரெஜிஸ்டர்டு ஆபீஸ்: 221, தாதாபாய் நௌரோஜி ரோடு, பம்பாய்-1


வெள்ளை
டெட்
சலவையின் மேன்மை
வெண்மையுடன் தூய்மை
det
வெள்ளை டெட் பவுடரினால் மட்டும்தான் உங்கள் வெள்ளைத் துணிகளை பளிச்சிடும் வெண்மையுடனும் வண்ண நிறத் துணிகளை துப்புரவாகவும் வெளுக்க முடியும். வெள்ளை டெட் ஒன்றுதான் துணிகள் பாழாகாமல் சலவை செய்ய உதவுகிறது.
ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ் லிட். பம்பாய்


நாள் முழுவதும்
நீடித்த
பொலிவுடன் திகழ
ரேணுகா
டால்கம் பவுடர்
REFRESHING AND DEODORANT
நறுமணம் கமழும்
ரேணுகா டால்கம் பவுடரில்
சேர்க்கப்பட்டுள்ள ஆக்டமர்
வியர்வையினால் உண்டாகும்
துர்நாற்றத்தை அறவே
போக்குகிறது. ரேணுகா டால்கம்
பவுடரில் மட்டுமே ஆக்டமர்
சேர்க்கப்பட்டுள்ளது.
கல்கத்தா கெமிகல் கம்பெனி லிமிடெட்
கல்கத்தா-29 (இந்தியா)
தென்னிந்திய ஆபீஸ்: 5/149, பிராட்வே, சென்னை-1


தீபாவளி வாழ்த்துக்கள்!
டெக்ஸ்டூல்
தயாரிப்புகள்:
நவீன நூற்பாலை இயந்திரங்கள், டீசல் இஞ்ஜின்கள், மெஷின் டூல்கள், ரெயில்வே சிக்னல் இயந்திரங்கள், ஸ்பெஷல் ஸ்டீல்கள்
டெக்ஸ்டூல் கம்பெனி லிமிடெட், கோயமுத்தூர்-6

வாழ்க்கையின் எல்லா நடைகளுக்கும்



சிறந்தது



Malu

மாலு

பாத அணி

அது
மேன்மையானது
இயற்கை பாத அமைப்புள்ளது
நவீனமானது
நீடித்து உழைப்பது

அரசினர் பாத அணி தயாரிப்பு மற்றும் சேவை நிலையம்
பெரம்பூர், சென்னை-12

(சென்னை அரசின் தொழில் வாணிப இலாகாவின் ஒரு பிரிவு)


ICM-17A

Printed & published by T. Sadasivam on behalf of Messrs. Bharathan Publications Private Ltd., at the Kalki Press, Kilpauk, Madras-10.



மங்களகரமான தீபாவளியைத் தோற்றுவித்த கண்ணபிரான் கீதாசாரியனாக இருந்து கொண்டு ஞானத்தை உபதேசித்தபோது தர்மத்திற்காகவும் நியாயத்திற்காகவும், உரிமைக்காகவும் 'நீ யுத்தம் செய்' என்று அர்ஜுனனை நோக்கி உபதேசித்தார். நாம் ஒவ்வொருவரும் நம்மையும் நம் தர்மத்தையும் கோழைத்தனமில்லாத மனோதைரியத்துடன் ரக்ஷித்துக் கொள்ள அருள்புரியுமாறு கீதாசாரியனான கண்ணபிரானை, மங்களஸ்நானம் செய்து பிரார்த்திப்போமாக.

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி
ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள்



नमो॒ वन्या॑य च॒ कक्ष्या॑य च॒

வனத்தில் விருட்சங்கள் முதலிய
வடிவங்களிலும், புதர்களில் செடி
கொடி வடிவங்களிலும் உள்ள
பரமேசுவரா, உனக்கு அஞ்சலி!

—ஸ்ரீருத்ரம்







திவ்யத்தலம் திரு ஆனைக்கா

அங்கு இங்கு எனாதபடி எங்கும் நிறைந்துள்ள இறைவன் பஞ்சபூதங்களாகவும் விளங்குவதைக் குறிக்கும் ஐம்பெரும் தலங்களில் திரு ஆனைக்கா ஒன்று. யாவுமாகிய ஆண்டவனை நீராகப் பாவித்துப் பணியும் பதி இது. 'செழுநீர்த் திரள்' என்று தேவாரம் ஆனைக்கா ஆண்டவனைக் கூறுகிறது. சம்பு முனிவர் வெண் நாவல் விருட்சத்தையே தமது உடலாகக் கொள்ள அதன் அடியில் ஈசுவரன் குடிகொண்டதால் ஜம்பு கேசுவரர் எனப் பெயர் பெற்ற க்ஷேத்திரம் இது. ஜம்பு கேசுவரரின் மீது நாவல் மரச் சருகுகள் விழாதவாறு சிலந்தி யொன்று வலை பின்னிப் பக்தி புரிய, இதனை அறியாத ஒரு யானை சுவாமிக்குக் காவிரி நீரைத் தன் துதிக்கையால் அபி ஷேகம் செய்யும்போது வலை அறுந்து விழ, சினமுற்ற சிலந்தி யானையின் நாசித் துவாரம் வழியாக அதன் மண்டைக்குட் புகுந்து குடைந்து, அதனைக் கொன்று தானும் அழிய, இறைவன் இரண்டினுக்கும் சிவபதம் அளித்த ஸ்தலம் இது. ஆனை வழிபட்ட காரணமானதாலேயே இந்த க்ஷேத்திரம் திரு ஆனைக்கா எனப் பெயர் பெற்றது.

இந்த ஆலயத்தின் கீர்த்தி அளவிட முடியாதது. அந்தக் கீர்த்திக்கு ஒரு மூர்த்தியே இங்கு எழுந்தருளியுள்ள தேவி அகிலாண்டேசுவரி. ஈசுவரன் பஞ்சபூதங்களில் ஒன்றினுக்கே இங்கு உருவம் தாங்கியிருக்க, அம்பிகையோ சர்வ பிரபஞ்சங்களையும் இயக்கி வைக்கும் பராசக்தியாம் அகிலாண்டேசுவரியாக இந்த ஸ்தலத்தில் கோயில் கொண்டிருக்கிறாள். சாமானிய மக்களால் தாங்க முடியாத அவளது அபரிமிதமான சக்தியை இரு தாடங்கங்களில் ஆகர்ஷித்து அவளுடைய திருச் செவிகளிலேயே அணிவித்தார் அம்பிகையே உருவான ஆதி சங்கரர்; ஆற்றல் ஜொலித்த அவளது நயனங்கள் அன்பில் நிலைய வேண்டுமெனக் கருதி, அவளது திரு முன்பு ஆசை மகனாகிய ஆனைமுகனைப் பிரதிஷ்டை செய்தார்.

இவ்வாறு பலப் பல பெருமை பொருந்திய திரு ஆனைக்கா ஆலயத்தைப் புதுப்பித்துக் கும்பாபிஷேகம் செய்ய ஆஸ்திகப் பெருமக்கள் நன்முயற்சி எடுத்து வரும் இச் சமயத்தில் இத் திவ்யத் தலம் குறித்த ஏராளமான ஐதிகங்களிலும், புராணங்களிலும், வரலாறுகளிலும் சிலவற்றை அடுத்து வரும் சித்திர மடலில் ஓவியர் 'வினு' நமக்கு நினைப்பூட்டுகிறார்.

முதல் சித்திரம்: முன்னொருகால் திரு ஆனைக்கா ஆலயத்துக்குச் சோழப் பேரரசன் திருப்பணி செய்தான். தற்போது 'திருநீற்று மதில்' என்று அழைக்கப்படும் இக் கோயிலின் நீண்டுயர்ந்த திருமதிலை அமைக்கும்போது அதற்குக் கூலி கொடுக்க மன்னனின் நிதியமே போதவில்லை. அப்போது அகிலாண்ட ஜனனியின் திருப்பணியில் தாமே பங்கு பெற விரும்பிய பரமேசுவரன் திரு ஆனைக்காவுக்கு ஒரு சித்தராக வந்தார். சிற்பிகளுக்கும், கொத்தருக்கும், கல் தச்சருக்கும் விபூதியைக் கூலியாகக் கொடுத்தார். பக்தியில் பெரிய அக் கூலியாட்கள் விபூதியை நிறைவுடன் பெற்றனர். ஆயினும் வீடு திரும்புகையில் அதுவே பொற்காசான விந்தையைக் கண்டனர். 'சித்தாய வேடத்தாய் நீடு பொன்னித் திரு ஆனைக்கா உடைய செல்வா' என்று இதனையே நாவரசர் பாடுகிறார். ஆலயத்தின் சுற்றுச் சுவர் இது காரணமாகவே திருநீற்று மதில் என்று பெயர் பெற்றது.

சித்திரங்கள் 2—3: ஞானமே உருவான அம்பிகை உலகுக்குப் பணிவுப் பண்பை அறிவிக்க விரும்பி, தனக்கு ஞானோபதேசம் புரியுமாறு ஐயனிடம் வேண்டினாள். காவிரிப் படுகையில்தான் ஞானமும் பயிராகும் என்று சுவாமி கருதினாரோ என்னவோ, தேவியைத் திரு ஆனைக்காவுக்கு அனுப்பி வைத்தார். பரிவாரங்கள் சூழ, ஆனந்த ஆரவாரங்கள் மேவ, கோலாகலமாகக் கைலையிலிருந்து திரு ஆனைக்காவுக்குப் பவனி வந்து எழுந்தருளினாள் தேவி பவானி. சிவ பூஜை புரியு முன்பு காவிரியில் நீராடிய தேவி, நதியின் மதுரத்தையும் நாதனின் மதுரத்தையும் மாறி மாறி நினைத்தாள். அவளது மதுர விரல்கள் நீரைக் குழைக்க, அவளது அன்பே இறுகினாற் போல், நீரும் லிங்க வடிவமாக உருவாகியது. ஆனைக்காவில் அப்புலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து இதனை அப்பு ஸ்தலமாக்கிய அகிலாண்ட நாயகி இறைவனை ஆராதித்தாள். ஐயன் பிரசன்னமாயினான். பிரம்ம வித்தியா ரூபிணியான தேவிக்குப் பரமேசுவரன் ஞான உபதேசம் அளித்தான்.

உபதேசத்தின்போது குருவும் சிஷ்யரும் இருக்க வேண்டிய பாங்கிலேயே இந்த ஸ்தலத்தில் அகிலாண்டேசுவரி கிழக்கு முகமாகவும், ஜம்புநாதர் மேற்கு முகமாகவும் காட்சியளிக்கின்றனர்.

நான்காவது சித்திரம்: ஆனைக்கா ஆண்டவன் தனது திருப்பணியை நிச்சயமாகத் தானே நல்ல முறையில் நிறைவேற்றிக் கொண்டு விடுவான்; தனக்குச் சேரவேண்டியதைத் திண்ணமாகச் சேர்த்துக் கொண்டு விடுவான் என்ற நம்பிக்கையை ஊட்டுகிறது இச் சித்திர மடலின் கடைசி ஓவியம்.

சிவபக்திச் செல்வனாகிய சோழ மன்னன் ஒருவன் தனது ராணியின் முத்துமாலையை ஜம்புகேசுவரருக்கு அர்ப்பணிக்க ஆசைப்பட்டான். ஆயினும் அவளிடம் வாய்விட்டுக் கேட்க மனம் கொள்ளவில்லை. ஒரு தினம் அரசனும் அரசியும் காவிரியில் நீராடுகையில் அவளது முத்து மாலை ஆற்று வெள்ளத்தில் காணாமற் போயிற்று.

மன்னனும் தேவியும் ஆலயத்துக்கு வந்தனர். சுவாமிக்குக் காவிரித் தீர்த்தம் அபிஷேகமாகிக் கொண்டிருந்தது. நீரோடு நீராக ராணியின் முத்தாரமும் முக்தி தரும் மூர்த்தியின் மீது பாங்குற விழுந்து படிந்தது. அப்போது அரசன் மகிழ்ந்தது மட்டுமல்ல. அவன் யாரிடம் மாலையைக் கேட்கத் தயங்கினானோ அந்த அரசியுமே அரன் சிரத்தில் ஆபரணம் அமைந்த அழகைக் கண்டு ஆனந்தம் எய்தினாள். எனவே அகிலாண்டேசுவரி— அப்புலிங்கர் ஆலயப் பணிக்குப் பொன்னும் பொருளும் தருவது இறைவனே உகந்த சிவதருமமாகும்.





மாலை நேரமும் சோலைவனமும்

மறைகளை மறைந்துபோய்
வனத்துள் வைகுவான்

— கம்பர்

மாலை நேரம்; மஞ்சள் வெய்யில் எங்கும் படர்கிறது.

நகர்ப்புறத்தே வேலைக்கு வந்தவர்களெல்லாம் வேலை முடிந்து, பகலும் முடிந்து வருவதை உணர்ந்து வீட்டுக்குத் திரும்புகிறார்கள்.

திரும்பும் வேளையிலே அவர்கள், அந்தச் சோலையைக் கடந்து போக வேண்டியிருக்கிறது.

அந்தச் சோலைக்கு வந்தவுடனேயே, அவர்கள் நெஞ்சில் ஒரு சிலிர்ப்பு ஏற்படுகிறது: மனத்துக்கு ஓர் ஆறுதல் ஏற்படுகிறது. நிழல் இன்பத்தைப் பெருக்குகிறது.

கதிரவனின் மஞ்சள் வெய்யில், பொன்னையுருக்கி வார்த்தாற் போன்ற பிரமையூட்டுகிறது.

இத்தகைய சூழ்நிலையில் சிந்தனாசக்தியுள்ளவர்களுக்கு ஓர் எண்ணம் உள்ளத்தில் படரவே செய்யும்:

"நாள் எல்லாம் வேலை செய்தோம்; அதனால் 'நான் செய்தேன்; நான் முடித்தேன்' என்ற ஆணவ உணர்ச்சியும், அதனையொட்டிக் காம, குரோதங்களுக்குந்தான் மனத்தில் இடம் ஏற்படுகிறது.

"ஆனால் இயற்கை வனைந்த, இறைவன் படைத்த இச்சோலையில் அத்தகைய எண்ணங்களுக்குச் சற்றும் இடமில்லாமல் அவன் சிருஷ்டியைக் கண்டு வியக்கவும் வணங்கவும் தோன்றுகிறதல்லவா?"

இம்மரங்களையும், கதிரவனையும், கதிரவன் உலாவரும் வான வீதியையும், இவற்றையெல்லாம் கண்டு ரஸிக்கும் தன்னையும், தன் மனத்தையும் படைத்தது அந்த ஆதிப் பரம்பொருள் அல்லவா? அந்த ஆதிப் பரம்பொருளின் கோடானு கோடி சிருஷ்டிகளையும், அவை முதலில் ஜனித்த அப்பரம்பொருளின் சித்தத்தையும் நினைத்தால் 'ஆகா! அது எவ்வளவு பரந்தும் ஆழ்ந்தும் இருக்க வேண்டும்!' என்ற பிரமிப்பல்லவா ஏற்படுகிறது!


இப்படியெல்லாம் இறைவனோடு ஒன்றச் செய்யும் சாதனம் சோலையும் காடும் என்பதனால்தான் நம் முன்னோர்கள் வனவாசம் மேற்கொண்டார்கள். அதனால்தான் சிற்றன்னை 'வனத்துக்குப் போ!' என்றபோது ராமனும் மகிழ்வுடன் அதை ஏற்றான் என்கிறார் கம்பர்.


மறைந்த நாகரிகங்கள் – எகிப்து


மறைந்த நாகரிகங்கள்-பெரு
கல்கி தீபாவளி மலர்-1965


மறைந்த நாகரிகங்கள் - ரோம்
கல்கி தீபாவளி மலர் - 1965


மறைந்த நாகரிகங்கள் - கிரீஸ்
கல்கி தீபாவளி மலர் - 1965



குளிர்ச்சிக்கும்
நறுமணத்திற்கும்
சந்தனாதி,
அரைக்கீரை,
பிருங்காமல
தைலங்கள்.
T.S.R.&Co.
டி.எஸ்.ஆர் & கோ
கும்பகோணம்



மைக்கரும் கண்ணன் ரதிக்கு
மால்கொண்ட மன்மதா!

—நதிமலக் குறவஞ்சி

முறுக்கும் முழமும்!




"மாப்பிள்ளே! எத்தனே முறுக்கு சாப்பிட்டேன் ?"
"எத்தனேயா ? ஒரு முழம் சாப்பிட்டேன் !"

கர்ண . மகராசன்...!



ஜோசியர் : அட. அட....அடா! கேக்கறவங்களுக்குக் கேக்கறதைக் குறைக் காமே குடுக்கற கர்ண மகராசன் கைரேகை மாதிரியே இருக்கய்யா!




கவிஞர் தரும் காட்சி


கவிஞர் தரும் காட்சி
கல்கி தீபாவளி மலர் 1965

விளக்கேற்றி வைத்தவள்!

விளக்கு வைக்கும் நேரம். வீட்டு வாசலைச் சுழித்துப் பெருக்கி, நீர் தெளித்துக் கோலமிட்டுப் பொலிவுறச் செய்த பின், கைவிளக்கை ஏற்றி வந்து வாசல் மாடத்தில் வைப்பது நம் தமிழ் நாட்டுப் பெண்களிடையே தொன்றுதொட்ட நாளாக ஏற்பட்ட வழக்கம். அப்படி விளக்கைக் கையிலேந்தி வரும் பெண்கள் காற்று அடித்து விளக்கு அணைந்துவிடக் கூடாதே என்று முந்தானையில் மூடி மறைத்துப் பொத்திப் பொத்தி எடுத்து வருவார்கள். அந்தக் காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும் நால்வகைக் குணங்களும் அங்கே பெண்மைக்கு ஓர் அணிகலனாகத் திகழும்.

அப்படிப் பழகிவிட்ட காரியத்தைத்தான் இதோ இந்த சந்தியாவும் செய்கிறாள்! ஆனால் அவளுக்கு இந்த உலக நினைவு இருந்தால்தானே? அவள் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு இதயத்தில் விளக்கேற்றி ஒளி வீசச் செய்தவன், அவளை விட்டுப் பிரிந்து போய்ப் பல நாட்களாகி விட்டன. இப்படியொரு மாலை நேரத்தில்தான் அவன் புறப்பட்டான், உத்தியோக நிமித்தம்!

உத்தியோகம் கிடைத்தாலும் அவ்வூரில் இருக்க அவனுக்கு இடம் கிடைக்க வேண்டாமா? அவன் வந்து அழைத்துப் போவதாகக் கூறிய நாட்கள் நகர்ந்துகொண்டே போய் விட்டன. ஏன், தீபாவளிப் பண்டிகையே கூட நெருங்கி விட்டது!

அவளுக்கு அவன் நினைவைத் தவிர வேறு நினைவே இல்லை. என்றைக்குத் தன் கணவன் வருவான், வந்து தன்னை அழைத்துப் போவான், தானும் மற்றப் பெண்களைப் போல் இன்பமாக வாழலாம் என்றெல்லாம் எண்ணிப் பெருமூச்சு விடுவாள்!

அந்த நினைவிலே அவள் தன்னை மறந்திருந்தாலும், தினப்படி செய்யும் அலுவல்களை விடாமல் செய்து வந்தாள். விளக்கேற்றும் நேரம் வந்ததும், அவள் விளக்கேற்றி எடுத்துச் செல்கிறாள். விளக்கு அணையாமல் இருக்கக் கையொன்று மறைத்து நிற்கிறது! அதன் ஒளி அவள் இதயத்தினுள் ஊடுருவிச் சென்று, அவள் உள்ளத்தை நிறைத்திருப்பவனைக் குறித்து நம்மையும் சிந்திக்க வைக்கிறது. அவள் கையில் உள்ள தீப நாச்சியார் தீபாவளிக்குள் அவளை அவள் கணவனோடு சேர்த்து மகிழ வைக்க வேண்டும் என்று வேண்டிக் கொள்ளவும் செய்கிறது.

கல்கி தீபாவளி மலர் 1968


AZIZ AZAMI
KURNOOL
S. INDIA

வெட்டு ஒண்ணு..!




"என் மாப்பிள்ளையைத் தெரியுமோ இல்லியோ! அவருக்கு எல்லாம் வெட்டு ஒண்ணு துண்டு இரண்டுதான்; எந்த விஷயத்தையும் துருவி ஆராய்ஞ்சுடுவார்; எந்தப் பிரச்னையையும் கசக்கிப் பிழிஞ்சு சாறெடுத்துடுவார்!"

குதிரைக் கொம்பு...!



"இந்தக் கலியுகத்திலே குழந்தைகளுக்கான பால் பவுடருக்குக் கடக் கேறு வந்துபித்து பார்த்தியோ? கிடைக்கிறது குதிரைக் கொம்பா இருக்கு!"



PERKINS
HIGH QUALITY DIESELS


கல்கி தீபாவளி மலர். 1965



கனாக் கண்டேன் தோழி நான்!

பெரியாழ்வாரின் பக்திப் பண்ணையில் செழித்த பசும் கொடி சூடிக்கொடுத்த நாச்சியார்.

ஆம், ஆண்டாளின் பாடல்களைப் படிக்கும் போதும், பாடும்போதும், பெரியாழ்வாரின் பக்தியையே மிஞ்சிய பக்தியாக அல்லவா இருக்கின்றன என்ற வியப்புத்தான் ஒவ்வொருவருக்கும் ஏற்படுகிறது.

ஆண்டாளின் பாடல்கள் என்னும்போது பொதுவாகத் ''திருப்பாவை''தான் யாருக்கும் நினைவுக்கு வரும். திருப்பாவைப் பாடல்களின் சுவைக்குச் சற்றும் குறையாத பத்தரை மாற்றுத் தங்கமான பாடல்கள் அவர் அருளிச் செய்த ''நாச்சியார் திருமொழி'' தலைப்பில் காணப்படும் பாடல்கள்.

ஆண்டாள், இளமை முதலே ஆண்டவனை நினைந்து நினைந்து, பக்தி செய்து திருமணப் பருவம் எய்திய காலத்தும் அப் பக்தி விம்மிப் பெருகி, ''கல்யாணம் செய்துகொள்வதென்றால், ஆண்டவனைத்தான் செய்து கொள்வது'' என்று மனத்தில் உறுதி செய்து கொள்ளுகிறாள். கல்லும், விக்கிரகமுமாக இருக்கும் ஆண்டவனை எப்படியம்மா கல்யாணம் செய்து கொள்ள முடியும்? யாரையாவது மனிதனைத்தான் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்று அண்டை அயலார் சொல்லும்போது, ஆண்டாள் சொல்லுகிறாள்:

''மானிடவர்க் கென்று பேச்சுப்படில்
வாழகில்லேன் கண்டாய்''

எத்தகைய பக்தி! ஆண்டாளுக்கு இறைவன்

சகோதரனுக்கு அழகும் குணமும் பக்தியும் கொண்ட பெண் நிச்சயிக்கப்பட்டு விட்டாள் என்றவுடன், நாரணன் சகோதரியான (அந்தரி) பார்வதிக்குச் சந்தோஷம் தாங்கக் கூடியதாக இல்லை. தன் உள்ளக் களிப்பை யெல்லாம் கொட்டி, ஆண்டாளைச் சிங்காரித்து மணமாலை சூட்டும் பணிகளையெல்லாம் அவளே செய்கிறாள்.

இந்திர னுள்ளிட்ட
தேவர் குழாமெல்லாம்
வந்திருந் தென்னை
மகட்பேசி மந்திரித்து
மந்திரக் கோடியு
டுத்தி மணமாலை
அந்தரி சூட்டக்
கனாக்கண்டேன் தோழிநான்.

இப்படி மாப்பிள்ளை அழைப்பும், ஜானுவாசமும் முடிந்தன. மறுநாள் என்னவாயிற்று?

மங்கள மத்தள ஓசை கேட்கிறது. சங்கநாதம் முழங்குகிறது. முத்துப் பந்தல் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்திராதி தேவர்கள், அமர்ந்திருக்கிறார்கள். அப்போது மதுசூதனன் வந்தான்! வந்து தன் அருட்கையினால் என்னுடைய கரங்களைப் பற்றினான்:

மத்தளம் கொட்ட
வரிசங்கம் நின்றூத
முத்துடைத் தாமநி

லிவிங்ஸ்டன்



டேவிட் லிவிங்ஸ்டன் பாதிரியார். ஆனாலும் புது நாடு கண்டு உலகுக்கு அறிமுகப் படுத்தும் ஆசை அவர் உள்ளத்தில் மிகுந்திருந்தது. ஸ்காட்லாந்தில் பிளான்டையர் என்னுமிடத்தில் பிறந்த லிவிங்ஸ்டன் பத்தாவது வயதில் ஒரு நூற்பு ஆலையில் பணி புரிந்தார். ஆலையில் பணிபுரியும் தருணத்திலேயே லத்தீன் மொழியும், கல்வியும் கற்றார். அவர் கிளாஸ்கோ சர்வ கலாசாலையில் 1840ம் வருஷம் பட்டதாரியானார். அதே வருஷத்தில் அவருக்கு லண்டன் கிறிஸ்தவ மத சங்கத்தில் பணிபுரிய அழைப்புக் கிட்டியது. இதுவரையில் இருண்ட கண்டமாகவும், அடர்ந்த காடாகவும், பிரபல்யமடையாமலுமிருந்த ஆப்பிரிக்காவுக்கு அவரை அனுப்பினர் லண்டன் கிறிஸ்தவ மத சங்கத்தினர். அவருக்கு அந்த விநோத நாட்டினைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆசை மிகுந்திருந்ததால் அந்தக் கடும் பிரயாணத்தை மேற்கொண்டார். லிவிங்ஸ்டன் ஒன்பது வருஷங்கள் ஆப்பிரிக்காவில் உள்ள பேச்சுவானு பிரதேசத்தில் கழித்தார். அங்குள்ள கிறிஸ்தவ மத போதகராயிருந்தவரின் மகளை விரும்பி மணந்துகொண்டார். ஆப்பிரிக்கச் சுதேசிகளிடம் இவருக்குப் பழக்கம் ஏற்பட்டு அவர்கள் உள்ளத்தில் இவர் நிரந்தர இடம் பெற்றார். 'டாக்டர் லிவிங்ஸ்டன், ஆப்பிரிக்கா' என்று குறிப்பிட்டாலே அவர் எந்த அடர்ந்த காட்டிலிருந்தாலும் அவரைத் தேடி நீக்ரோக்கள் கடிதத்தைச் சேர்ப்பித்துவிடுவார்களென்றால் அவர் எவ்வளவு தூரம் பிரபல்யமடைந்திருந்தார் என்பதை அறிந்துகொள்ளலாம். லிவிங்ஸ்டன் பிரயாணத்தில் பல அபாயங்கள் எதிர்ப்பட்டன. ஒரு தடவை அவர் சிங்கத்தினால் தாக்கப்பட்டுப் படுகாயமுற்றார். அவர் உயிர் தப்பியது பெரும் பாடாகப் போய்விட்டது. நீக்ரோக்கள் அவரை அந்தப் பயங்கர மிருகத்திடமிருந்து மீட்டனர். ஆப்பிரிக்காவில் நீண்ட தொலைவில் ஒரு பிரம்மாண்டமான ஏரி இருப்பதாக நீக்ரோக்களிடமிருந்து தெரியவந்தது. தம் உயிரையும் பொருட்படுத்தாமல் அந்தக் கடுமையான பிரயாணத்தை மேற்கொண்டார் லிவிங்ஸ்டன். அவரது பயணத்தின்போது, நாகமி ஏரி, செனகா பிரதேசம், ஜாம்பசி நதி ஆகியவை பற்றிய விவரங்கள் தெரிய வந்தன. 1855ம் வருஷம் அவர் தொடர்ந்து சுதேசிகளுடன் சென்று கஷ்டப்பட்டு விக்டோரியா நீர்வீழ்ச்சியைக் கண்டுபிடித்தது அன்றுவரை சரித்திரம் காணாப் புதுமையாகும். அடர்ந்த காடுகளுக்குள் இருண்ட பிரதேசத்தில் இத்தகைய பெரிய நீர்வீழ்ச்சி இருப்பதை உலகுக்கு வெளிப்படுத்திய அவரைப் புகழாதவர் இல்லை. தமது முயற்சி கைகூடியதைக் கண்டு அவர் ஆனந்தப்பட்டு, மகிழ்ச்சியை ஆப்பிரிக்கச் சுதேசிகளுடன் பகிர்ந்து கொண்டார். இதன் பிறகு இவர் பதினாறு வருஷங்கள் தெற்கத்திய மத்திய ஆப்பிரிக்காவில் இருந்தார். இப்பொழுது இவரை ஆங்கில அரசாங்கம் 'கான்சலாக' நியமித்தது. இந்தப் பதவியில் ஐந்து வருஷங்கள் செவ்வனே பணி புரிந்தார். இவர் மத்திய, கிழக்கத்திய ஆப்பிரிக்கா பிரயாணத்தின்போது ஆப்பிரிக்கா நாட்டைப் பற்றித் தெரிந்துகொள்ளப் பல வரை படங்களும், அவை பற்றிய குறிப்புகளும் தயாரித்தார். இத்தகைய முயற்சிகளுக்குத் தனியார் பலர் நன்கொடைகள் வழங்கி ஊக்கப்படுத்தினார்கள். லிவிங்ஸ்டன் நைல் நதியின் உற்பத்தி ஸ்தானத்தைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் இறங்கினார். அவர் தமக்கு அறுபது வயதாகியும் புது நாடு அறியும் முயற்சியைக் கைவிடவில்லை. இந்தக் கடும் பிரயாணத்தினால் அவர் உடல் பாதிக்கப்பட்டு, நோய்களால், பாங்வேலு ஏரிக்கரையில் காலமானார். அவரது உயிருக்கு உயிரான நீக்ரோ அன்பர்கள் அவரது இதயத்தை அவர் எங்கு மரணமடைந்தாரோ அந்த மரத்தினடியில் புதைத்தார்கள். அவரது சடலத்தை உப்பில் பத்திரமாகப் பாதுகாத்து வைத்து ஜான்சிபாருக்கு எடுத்துச் சென்றார்கள். அவர்களுக்குத்தான் தங்கள் தலைவனிடம் என்ன பக்தி, அன்பு! பிறகு அங்கிருந்து புது நாடு கண்ட தீரர் லிவிங்ஸ்டனுடைய சடலம் லண்டனுக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கே வெஸ்ட்மினிஸ்டர் அபேயில் உரிய மரியாதைகளுடன் அடக்கம் செய்யப்பட்டது. அவரது பூத உடல் அடக்கம் செய்யப்பட்டாலும், ஆப்பிரிக்காவில் உள்ள விக்டோரியா நீர்வீழ்ச்சியும், ஜாம்பசி நதியும், நாகமி ஏரியும், அவரது புகழை என்றென்றும் பாடிக் கொண்டிருக்கும். ஆப்பிரிக்காவைப் பற்றிய அவரது வரலாற்று நூல்கள் அவரது புது நாடு கண்ட தீரத்தைப் பறைசாற்றிக் கொண்டிருக்கும்.

வாஸ்கோடகாமா



இந்திய நாட்டின் விலையுயர்ந்த பொக்கிஷங்களைப் பெறுவதற்காக மேற்கத்திய நாடுகளில் கடும் போட்டி நிலவியதைச் சரித்திரத்தில் காண்கிறோம். இந்திய வாணிபத்தைக் கைப்பற்றுவதற்காகப் போர்ச்சுகல் நாடு தம் கடல் ஆதிக்கத்தால் பெருமுயற்சி செய்தது. போர்ச்சுகலில் ஒரு சிறு துறைமுகப் பட்டினமான சைன்ஸில் பிறந்த வாஸ்கோடகாமா இந்திய நாட்டுக்குக் கடல் வழி கண்டுபிடிக்க முயன்றார். அப்பொழுது போர்ச்சுகல் மன்னரான எமானுவேல்-I அவரது பிரயாணத்துக்குப் பேருதவி செய்தார். வாஸ்கோடகாமாவும் அவரது சகாக்களும் தங்கள் பிரயாணத்தைத் தொடங்குவதற்கு முன் ஒரு சின்னஞ் சிறு மாதா கோயிலில் பிரார்த்தனை செலுத்தினர். 1497ம் வருஷம் ஜூலை 9-ந் தேதி பெலம் துறைமுகத்திலிருந்து நான்கு கப்பல்கள் வாஸ்கோடகாமாவின் தலைமையில் புறப்பட்டன. வாஸ்கோடகாமா நான்கு மாதங்கள் நீலக் கடலில் பிரயாணம் செய்து தென் ஆப்பிரிக்காவிலுள்ள ஹெலினா வளைகுடா வந்தடைந்தார். பிறகு நன்னம்பிக்கை முனையைச் சுற்றிக்கொண்டு ஆப்பிரிக்கா கிழக்குக் கடற்கரையிலிருந்து கிழக்கு முகமாகச் சென்று இந்தியாவின் மேற்குக் கடற்கரையில் உள்ள கள்ளிக்கோட்டைக்கு வந்து சேர்ந்தார். தாம் வந்திறங்கியதின் ஞாபகார்த்தமாகச் சலவைக்கல் தூணை நிறுவினார். அப்பொழுது கள்ளிக்கோட்டையில் ஜாமரின் மன்னர் ஆண்டு வந்தார். அவர் அதிகாரமும், கடற்படை பலமும் பெற்றவர். வாஸ்கோடகாமாவின் முதல் பயணம் நாட்டைக் கண்டுபிடித்து அதில் வாணிபம் செய்யக் கோரிக்கை சமர்ப்பிப்பதுதான். வாஸ்கோடகாமா ஜாமரின் மன்னரின் அரண்மனை சென்று தம் கோரிக்கையைச் சமர்ப்பித்தார். மன்னர் போர்ச்சுகீசியர் வாணிபத்துக்கு இசைந்தார். ஆனால் வாஸ்கோடகாமா வாணிபத்துக்குச் சுங்கவரி செலுத்த மறுத்த போது பல இடையூறுகள் அவருக்கு விளைந்தன. ஜாமரின் மன்னரிடம் 'மூர்'கள் வாணிபத் துறையில் பெற்றிருந்த செல்வாக்கும், அதிகாரமும் வாஸ்கோடகாமாவுக்குப் பொறாமையைக் கிளறிவிட்டன. இந்து மகா சமுத்திரத்தில் கப்பலோட்டும் மூர்கள் தமக்கு எதிரிகள் என்றே கருதிவிட்டார் வாஸ்கோடகாமா. அவர் கொண்டு வந்த பொருள்களைக் கொடுத்துவிட்டு, மிளகுத் திரவியங்களைப் பெற்றுக் கொண்டு தம் நாட்டுக்குப் புறப்பட்டார். வழியில் சந்தித்த மூர்களின் கப்பல்களைப் பழி வாங்குவதற்காக அவற்றைக் கொள்ளையடித்து, அந்தக் கப்பல்களை வெல்லாம் தீக்கிரையாக்கினார்.

கேப்டன் குக், கொலம்பஸ், லிவிங்ஸ்டன், வாஸ்கோடகாமா ஆகியோரது தீரமிக்க பிரயாணங்கள் அவர்களுக்கும் அவர்கள் நாட்டுக்கும் பெருமையையும் புகழையும் செல்வத்தையும் தேடித் தந்தன. அவர்கள் சரித்திரத்தில் என்றும் நிலைத்திருக்கும் அழியாப் புகழைப் பெற்றனர். அவர்களது சரித்திரத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை வெல்லாம் வண்ண ஓவியங்களாக ஓவியர் விஜயா வழங்கியுள்ளார்.

புது நாடு கண்ட தீரர்

காப்டன் குக்



பிரிட்டிஷ் மாலுமிகளில் எத்தனையோ பேர் கப்பல்களைச் செலுத்தியிருக்கிறார்கள். ஆனால் இந்த மாலுமிகளில் காப்டன் குக் புது நாடு கண்டு பிடிக்கும் தீரச் செயல் புரிந்ததால் சரித்திரப் பிரசித்தி பெற்றுவிட்டார். இன்றும் தெற்கு பனிபிக் பிரதேசங்களைப் பற்றி விரிவாகத் தெரிந்துகொள்ளக் காப்டன் குக் தயாரித்த வரைபடங்கள் ஆதாரமாக இருக்கின்றன. அவர் செயின்ட் லாரென்ஸ் நதியைப் பற்றியும், நியூபவுண்ட்லாந்தைப் பற்றியும் விரிவான குறிப்புக்களை வழங்கினார். அவரது இந்தச் சேவைகளைப் பிரிட்டிஷ் அரசாங்கம் மெச்சி, தெற்கு பனிபிக் கடற்கரைப் பிரதேசங்களைக் கண்டு பிடிக்கும் முயற்சியில் ஈடுபடும்படி பணித்தது.

காப்டன் குக் இங்கிலாந்திலிருந்து கப்பலில் புறப்பட்ட போது தெற்கு பனிபிக்கைப் பற்றிய விவரமான வரைபடம் கிடையாது. அவர் தம் இரண்டாவது பிரயாணத்தில் தெற்கு பனிபிக்கில் ஏதாவது புதிய தீவுகள் இருக்கின்றனவா என்று தேடிப் போனார். தெற்கு பனிபிக்கைச் சுற்றி வந்ததும், அண்டார்டிக் பிரதேசத்துக்கு அப்புறம் ஓரே பனி மூடிய பிரதேசம்தான் இருக்கிறது என்ற முடிவுக்கு வந்தார். 1776ம் வருஷத்தில் அவர் மேற்கொண்ட மூன்றாவது கப்பல் பிரயாணத்தில் பனிபிக்கிலிருந்து ஹட்ஸன் வளைகுடாவுக்கு நீரிலேயே சென்று கடந்துவிட முடியாது என்பதைக் கண்டுணர்ந்தார்.

அவர் தம் பிரயாணத்தை முடித்துக் கொண்டு திரும்பி வரும்பொழுதுதான் அவர் ஹவாய் தீவைக் கண்டு கொண்டார். அவர் ஹவாய் தீவுகளின் சிறப்பைக் காணக் கரையேறியிருக்கும் தருணத்தில் ஒரு சுதேசி குக்குக்குச் சொந்தமான படகொன்றைத் திருடிச் சென்று விட்டான். அந்தப் படகை அவனிடமிருந்து கைப்பற்றி வந்துவிடத் தீரத்துடன் சென்றார் காப்டன் குக். அந்தச் சுதேசி இலேசில் அதற்கு இணங்கவில்லை. கடைசியில் குக்குக்கும் அந்தச் சுதேசிக்கும் கடுமையான சண்டை வந்து விட்டது. அவ்விருவருக்கும் நடந்த சண்டையில் அந்தச் சுதேசி காப்டன் குக்கைக் கொன்று விட்டான். புதுநாடு காணும் பணியில் முனைந்த காப்டன் குக் ஹவாய் தீவைக் கண்ட இடத்திலேயே தம் உயிரை இழந்தார். ஹவாயில் கேலாகேகுவா வளைகுடாவில் காப்டன் குக் இறந்து விழுந்த இடத்தில் அவர் நினைவுச் சின்னமாக வெண்கலத்தில் பொறிக்கப்பெற்ற வாசகங்கள் நீரினுக்கடியில் கிடக்கின்றன. இந்த நினைவுச் சின்னம் கடற்கரையில் இலேசாக அலை வீசும் போதுதான் கண்ணில் தென்படும். இந்தமாதிரி கடலுக்கடியில் அமைந்துள்ள நினைவுச் சின்னம் காப்டன் குக் ஒருவருக்கே உரிய ஞாபகச் சின்னமாகும். "இந்த இடத்தில்தான் 1779 பிப்ரவரி 14ந் தேதி கேப்டன் குக் கொல்லப்பட்டார்!" என்று பொறித்து வைக்கப்பட்டுள்ளது. புதுநாடு கண்ட தீரர் காப்டன் குக்கின் சோகக் கதையை ஹவாய் தீவுக் கடற்கரையும், இந்த நினைவுச் சின்னமும் கலங்கரை விளக்கமாக நின்று காட்டுகின்றன.

கொலம்பஸ்



கம்பள நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருந்த தன் தந்தைக்கு ஒத்தாசை புரிந்து கொண்டிருந்த சிறுவன் கொலம்பஸ், "அப்பா! உலகம் உருண்டைதானே?" என்று கேட்டான்.

"ஆமாம்!" என்றார் தந்தை.

"மேற்குப் பக்கமிருந்து சென்றாலும் கிழக்குப் பக்கம் வந்து விடலாம்தானே?"

"அதெல்லாம் பூகோளப் பாடத்தில் படித்துத் தெரிந்துகொள்ள வேணும். லத்தீன் மொழியிலல்லவா அது இருக்கிறது!" என்றார்.

சிறுவன் கொலம்பஸ் கடலையும், பூகோளத்தையும் பற்றித் தெரிந்து கொள்ள லத்தீன் மொழியைக் கற்றான். அது மட்டுமல்ல; மத்தியதரைக் கடலில் ஓடும் பெரும் கப்பல்களுக்குச் செல்லும் சிறு மரக்கலங்களில் ஏறி அவற்றை ஓட்டிப் பழகவும் செய்தான். ஆம்! பிற்காலத்தில் கடுமையான கப்பல் பிரயாணத்தை அவன் மேற்கொண்டு இருண்ட கண்டத்தை வெளிச்சத்துக்குக் கொண்டுவர விதையும் பயிற்சியிலேயே முளைவிடப்பட்டதை அறியலாம்.

1451ம் ஆண்டில் இத்தாலியில் உள்ள ஜெனோவா நகரில் பிறந்தார் கொலம்பஸ். அவரது பெற்றோர் கம்பள நெசவுத் தொழில் செய்பவர்கள். மாலுமிகளுக்கும், பயணக்காரர்களுக்கும் கண்கண்ட தெய்வமாக விளங்கிய மதகுரு கிறிஸ்தோபரின் நாமகரணம் அவருக்கு இடப்பட்டது.

போர்ச்சுக்கீசியர்கள் ஆப்பிரிக்கா கண்டத்தைச் சுற்றி இந்தியா, சீனா முதலிய நாடுகளைக் கண்டுபிடிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர். கொலம்பஸ் தாம் மேற்குப் பக்கமாகச் சென்று அந்நாடுகளை எளிதில் அடைந்து விடலாம் என்று திட்டமிட்டார். அவர் போர்ச்சுகல் அரசனிடம் சென்று திட்டத்தை விளக்கி, மூன்று கப்பல்களும், வர்த்தகத்தில் ஒரு பங்கும், தாம் கண்டு பிடிக்கும் பிரதேசத்தின் கவர்னர் பதவியும், அட்மிரல் பட்டமும் கோரினார். போர்ச்சுகல் மன்னர் இரண்டாம் ஜான் இந்தக் கோரிக்கைகளுக்கு இணங்கவில்லை. 1485ல் கொலம்பஸ் ஸ்பெயினுக்குச் சென்று பெர்டினாண்ட் அரசனிடமும் ராணி இஸபெல்லாவிடமும் தம் திட்டத்தை விளக்கினார். பெர்டினாண்ட் அந்தத் தருணத்தில் மூர்களை அடக்கும் பணியில் ஈடுபட்டிருந்ததால் கொலம்பஸின் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளவில்லை. கடைசியில் ராணி இஸபெல்லா தம் விலையுயர்ந்த நகைகளையெல்லாம் விற்று, கொலம்பஸுக்கு உதவி புரிய முன்வந்தாளாம்.

கொலம்பஸ், சாந்தாமரியா, பிண்டா, நினா என்னும் கப்பல்களில் கடும் பிரயாணத்தை மேற்கொண்டார். நடுவில் எத்தனை எத்தனையோ சோதனைகள்! கொலம்பஸோடு சென்றவர்கள், "நாம் மூன்று நாட்கள் தொடர்ந்து பிரயாணம் செய்வோம். கரை தென்பட்டால் பார்ப்போம். இல்லாவிடில் திரும்பிவிடுவோம்" என்றார்கள். கொலம்பஸ் பின்வாங்கவில்லை. கடைசியில் 1492 அக்டோபர் 12ந் தேதி முப்பத்திரண்டு வாரக் கஷ்டமான பிரயாணத்துக்குப் பிறகு பஹாமாவில் வாட்லிங் தீவின் கரை தென்பட்டதும் கொலம்பஸுக்கும் அவரது சகாக்களுக்கும் ஏற்பட்ட ஆனந்தத்துக்கு அளவில்லை. தாம் கண்டுபிடித்தது இந்தியாதான் என்று கொலம்பஸுக்கு எண்ணம். அங்குள்ள சுதேசிகள் இந்தியர்கள் என்றே அவர் கருதினார். கரையில் இறங்கியதும் ஸ்பெயினுக்கு அந்நாட்டை உரிமையாக்கி, அந்த இடத்துக்கு ஸான் ஸால்விடார் என்ற பெயரையும் இட்டார். புது நாடு கண்ட மகிழ்ச்சியோடும் தாம் அடிமையாக்கிய சுதேசிகளோடும் கொலம்பஸ் ஸ்பெயின் நாட்டுக்குத் திரும்பினார். பெர்டினாண்ட் அரசனும் ராணி இஸபெல்லாவும் அவருக்குக் குதூகல வரவேற்பு நல்கினர்.

கடைசிக் காலத்தில் கொலம்பஸ் தமது தீரத்துக்கெல்லாம் பரிசாக அமெரிக்க வர்த்தகத்தில் பங்கும், கவர்னர் பதவியும் கோரினார். ராணி இஸபெல்லா மறைந்து அப்பொழுது அரசன் பெர்டினாண்ட் மட்டும் இருந்தான். அவன் கொலம்பஸின் வார்த்தைகளுக்குச் செவிசாய்க்கவில்லை. தமது பிடிவாதத்தினால் கொலம்பஸ் கைதாகிப் பல கஷ்டங்களுக்கு உள்ளாகி, ஆர்த்ரைடிஸ் வியாதியால் பிடிக்கப்பட்டார். அசகாய சூரத்தனங்கள் செய்து அமெரிக்காவைக் கண்டு பிடித்த கொலம்பஸ் 1506ம் வருஷம் மே 20ந் தேதி இவ்வுலகை விட்டு நீங்கினார். அவர் மறைந்து விட்டார்; ஆனால் அமெரிக்கா கொலம்பஸின் நினைவைப் போற்றி வணங்குகிறது.



REGISTERED NO. M. 4392
Supplement to the Kalki Issue dated 24-10-65
Registered as a Newspaper in Ceyl

